உ
கணபதி துணை.
திருச்சிற்றம்பலம்.

புவனேந்திரகாவியம்.

இஃது
இராமநாதபுரம் ஸம்ஸ்தானவித்துவானும்,
முதுகுளத்தூர் கர்ணம் தெய்வப்புலமை மகா-ள-ள-ஸ்ரீ
நல்லவீரப்பபிள்ளையவர்கள்
பௌத்திரரும், மகா-ள-ள-ஸ்ரீ
இராமசாமிபிள்ளையவர்கள்
புத்திரருமான மதுரகவி மகா-ள-ள-ஸ்ரீ
சுப்பையாபிள்ளையவர்கள்
இயற்றி,

இராமநாதபுரம் ஸம்ஸ்தான மஹாவித்வான் அவாத்திரீம்
சதவதானி ஸ்ரீமத்-
சரவணப்பெருமாள்க்கவிராயர் அவர்களாற்
பரிசோதித்து,

ஹிரண்ய கெர்ப்பயாஜி ரவிகுல மகா-ள-ள-ஸ்ரீ ஸ்ரீமான்
M. B. முத்துராமலிங்க சேதுபதி
மஹா ராஜா அவர்கள் பொருளுதவியின் பேரில்

மதுரைத் தமிழ்ச்சங்க அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பெற்றது.

கீலக-ஹு ஆவணி-மீ

இதன் விலை] 1908. [ரூபா 2.

திருச்சிற்றம்பலம்.

சாற்றுக்கவிகள்.

இராமநாதபுரம் சமஸ்தானம் மகாவித்துவான் அவாத்திரிம்
தசாவதானி முதுகுளத்தூர் மகா-ள-ள-ஸ்ரீ:
சரவணப்பெருமாட் கவிராயரவர்கள் இயற்றியது.

கலைமகளுக்கொருமகனிங்கிவனெனச்சொலெனதுமருமகளுங்கன்னற்
சிலைமகனுக்கழகுதவும்முதுகுளத்தூர்சுப்பயவேள்தெளிந்துகற்ற
நிலைவிளங்கப்பலகலையினெறியாய்வுற்றொருங்குபடங்கைத்தேமுன்னீ
ருலகமெலாம்புதுமைதரப்புவனேந்திரகாவியமின்றுரைசெய்தானே.

ஷை சமஸ்தான வித்துவான், ஷை மைத்துனர்
சோடசாவதானி, ஷை யூர், மஹா-ள-ள-ஸ்ரீ.
வேலாயுதக்கவிராயரவர்கள் இயற்றியது.

கல்லார்களொளிதினிற்கற்றிடக்கற்றுரிதுபோலுங்கற்கநாமே
வல்லாரொன்றதிசயிப்பமனுநீதிநெறிக்கிதுவோர்வரம்பாமென்னத்
தொல்லாரும்புவனேந்திரகாவியமென்றொருபுதுநூற்சொற்றன்மற்றை
யெல்லாநூலும்பழநூலெனப்புகலச்சுப்பயவேளிசைவலோனே.

ஷை யூர், அட்டாவதானி மஹா-ள-ள-ஸ்ரீ:
கல்யாணசுந்தரம்பிள்ளையவர்கள் இயற்றியது.

நோக்கியகண்களிப்பேறநுவன்றிடுசெவிகளிப்பேறநுவன்மற்றோர்க
ளாக்கியநூல்கசப்பேறப்புவனேந்திரகாவியமின்றறைந்தானெங்கள்
பாக்கியவான்முதுகுளத்தூர்ப்பதிநிலைமைக்குயர்கன்னன்பால்போற்செஞ்
சொல், வாக்கியுயர்சுப்பயவேள்மலர்வேதனுவிலுறைவாணிமாதோ.

———:O:———

ஷை. யூர், வித்தியாசங்கமெம்பர்களிலொருவரும், கொடைக்கானல்
இங்கிலீஷ்கிளாப் ஹெட்மாட்டருமான, சித்திரகவி மகா-ள-ள-ஸ்ரீ:
எம். தெய்வநாயகம்பிள்ளையவர்களியற்றிய
வசன வெண்பாக்கள்.

சேதுசமஸ்தானத்தைச் சேர்ந்த முதுகுளத்தூ
ராதுக்கிராமாந்தரங்களின்வி வாதங்
களைத்தீர்க்காநின்றதர்ம காத்தாவிருத்தங்
கள்பபாடிவதிற்கவி. (௧)

சக்ரவர்த்தியானகம்பனுக்குச்சமானங்கொத்
தார்கணைக்குப்பாத்யசுபயோகி — மூர்க்கனே
யேசிவன்பிரம விஷ்ணுயேசுமகமூதெனும
தாசம்ப்ரதாயச்சமா. (௨)

தானநிர்மாணந்தெரிந்த தத்துவவிசாரியெனம்
மானருமையாய்ப்பெற்றமைத்துனர்ந—வீனகற்பி
தாலங்காரப்ரசங்கி சற்சனர்சினேகரிந்த்ர
சாலவல்லவர் மஹாராஜ. (௩)

ராஜஸ்ரீ சுப்பையாபிள்ளையவர்கள் ராஜ
ராஜன் புவனேந்த்ரராஜனது—வீசுபுகழ்
பெற்றகதையைப்ரபந்தமாயியற்றினார்களதைக்
கற்றவர்கண்ணென்றுசொன்னார்கள். (௪)

மதுரைத்தமிழ்ச்சங்க வித்துவான்களிலொருவராகிய வெண்பாச்சிலேடைப் புலி, வேம்பத்தூர், மகா-௱-௱-ஸ்ரீ பிச்சுபாரதியவர்களியற்றிய வெண்பா.

சீரார்முதுகுளத்தூர்ச்செல்வனுயர் மால்மருகன்
பேரார்தருசுப்பிரமணிய-னேராரும்
சீலப்புவனேந்திரன்கதையைச்செப்பினன்கூர்
தாலத்தர் கொண்டாடத்தான்.

இராமநாதபுரம் ஸம்ஸ்தானவித்துவான், சர்க்கரைப்புலவரவர்கள் மரபி
லுதித்தவரும், கோடகுடிச்சேதுப்புலவரவர்கள் குமாரரும், மன்னார்குடி
காலேஜ் தலைமைத்தமிழாசிரியருமாகிய மகா-௱-௱-ஸ்ரீ:
சர்க்கரை – இராமசாமிப்புலவரவர்கள் இயற்றியது.

முக்கனிதேன்வானமுதெனப்புலவர் முடிதுளக்கிச்செவியேற்கத்
தக்கவர்புகழுமுதுகுளத்தூர்வாழ்தருதமிழுணர்ந்தசற்குணனித்
திக்கெலாம்வியந்துசெப்பிடப்புவனேந்திரன்கதைபாடினன்குகனன்
பர்க்கெலாமினியசுப்பையவேளென்பாலுமிக்குறவுடையோனே.

நாகைநீல்லோஜனிப்பத்திராதிபரும், தமிழ்ச்சங்கவித்துவானுமாகிய
மகா-௱-௱-ஸ்ரீ: சதாசிவம்பிள்ளையவர்களியற்றியது.

பூமணக்கும்புவனேந்திரன்புகழ்மணக்குங்காவியத்தைப்புலவோர்தங்கள்
நாமணக்கச்செவிமணக்கநல்லறிவெலாமணக்கநல்கினன்செந்
தேமணக்குமுதுகுளத்தூர்த்திசைமணக்கும்புகழாளன்செல்வமிக்கு
மாமணக்குஞ்சுப்பையாவாய்மணக்குந்திருப்பெயர்கொண்மகிமையோனே.

உ

கடவுள் துணை.

சிறப்புப்பாயிரம்.

சிவகங்கைத்தாலூகா போர்ட்டுமெம்பரும், இராமநாதபுரம் விவ
சாயசங்க நிர்வாகசபை மெம்பர்களிலொருவரும், இளையான்
குடி மாஜிஸ்பெஷல் மாஜிஸ்திரேட்டும், மதுரை நான்காம்
தமிழ்ச்சங்க வித்வான்களில் ஒருவருமாகிய சோதுகுடி

ஸ்ரீமாந். எம். கே. எம். அப்துல்காதிறு ராவுத்தர்

அவர்கள் இயற்றியவை.

காமருவுந் தண்டலைவாழ் கவியினங்க ளருந்தி யெஞ்சுங் கனிகைக் கொண்டு
பூமருவுங் கற்பகக்கான் புகுந்தமரர் விருந்தருந்தப் போகட் டன்னா
ரேமருவும் படிபுரிந்து தருமலரைப் பறித்துமண மிலதென் றோச்சி
நாமருவுஞ் சுவைவேட்டு மீட்டுவரும் வளப்பாண்டி நாட்டி னோர்பால். (க)

எந்நாட்டு வேந்தர்களும் போந்துகண்டு பணிந்தேகு மிறைமை மேவிச்
சொன்னாட்டுந் தமிழ்வளர்க்குந் துங்கமணி முடிபுனைந்த தொல்சீ ராளர்
மின்னாட்டுசெங்காவிப்பதாகையொடுகவிகைசெங்கைவிளங்கக்கொண்டோர்
தென்னாட்டுக் கணியாகுஞ் சேதுபதி மன்னரவை சிறப்ப மேவும். (உ)

வண்டமிழ்நா வலர்பலருட் சிறந்தசா வணப்பெருமாள் வலவன் முன்னே
விண்டபுவ னேந்திரனம் மாலையெனு முன்னூலை விரும்பி யாய்ந்துட்
கொண்டினைய பெருங்கதையை விருத்தப்பா வாலெடுத்துக் கூற லுற்றாற்
றெண்டிரைசூ ழிப்புவிவாழ் புலவருளங் களிப்பவெனச் சிந்தை செய்து. (ங)

கடலமுதுஞ் சங்கடமே லுறச்செவிக்குஞ் சுவையளித்துக் காமன் கையின்
மடலவிழுங் கன்னலுநாண் பொருந்தமொழி தொறுமினிமைவாய்ந்துதென்
குடமுனியும் பாரதியு முடல்குறுகி நாவடங்கக் குலவி யிந்தப் [பாற்
புடவிமிசை யெல்லவருஞ் சொல்லவரும் படிதமிழாற் பொற்பக் கூறி. (ச)

மற்றதனுக் குற்றபெயர் புவனேந்த்ர காவியமா வழுத்தி முன்னுஞ்
சொற்றபுகழ்ச் சேதுபதி மன்னர்குலப் பாற்கடலிற் றோன்று தோன்ற
லுற்றதரு நிதிமணியா னொருருக்கொண் டெனக்கொடையாலோங்குசீர்த்தி
பெற்றிருந்த பாற்கரரா ஜன்புரிந்த பெருந்தவத்தாற் பிறந்த செல்வன். (ரு)

தேசமுழு வதும்புகழுந் தன்மரபு மன்னர்குல தெய்வ மென்றே
நேசமுடன் பணிபுரியும் ராஜரா ஜேசுவரி நெடுந்தாட் கஞ்சம்
வாசமுறு மணமேவி யருள்வாரி யிடைமூழ்கி வளர்தற் கேற்ப
ராஜரா ஜேசுவர துரையென்னப் புகலருமை நாம பூமன். (சு)

மாற்றலராஞ் சிந்துரங்கண் மத்தகத்தைக் கிழித்தெழுந்து வல்லே கூவிக்
கூற்றுவர்க்கு விருந்துசெயுந் திறற்சிங்கக் குருளைநிகர் கோமான் மன்னர்
போற்றிசெயும் பொலங்கழலான் புந்தியினாற் கருணையினாற் புகழா லன்பா
லேற்றமிகு மகிபன்முத்து ராமலிங்க சேதுபதி யினிது கேட்ப. (எ)

தண்டமிழ்நா வலர்வியப்ப வரங்கேற்றி யச்சேற்றித் தரணி வாணர்
கொண்டுவப்பத் தந்துபுகழ் கொண்டனன்யா னிலனைய கோமா னாட்சி
மண்டலத்தின் மதிதொறும் மழைபொழியப் புனல்வளத்தின் மல்கு மர்
ண்பா, லெண்டிசையு முதுகுளத்து ரெனப்பகருந் தென்குளந்தை யிலங்க
வாழ்வோன். (அ)

கங்கைகுல மணியனையான் கமழ்குவளை மாலிகையான் கடனீர் வைப்பின்
மங்குலைமுன் புரந்திடுவே ளாளமணை வைக்கூற்ற வகுப்பி லுற்றுன்
றுங்கமிக மலிசேது பதிகள்சமத் தானவித்து வானென் றெங்கும்
பொங்குபெரும் பேர்படைத்தான் பன்னூலுங் கற்றறிந்த புலமை யாளன்

திருந்துதெய்வப் புலமைநல்ல வீரப்பக் குரிசில்பவுத் திரனுஞ் செம்மல்
முருந்தனைய நகைமடவார் மடலெழுது வடிவழகன் முதியோர் நெஞ்சு
ளிருந்துவளர் சருராம சாமிமகி பதிதவத்தா லெய்து மெய்யன் [கான்.
பொருந்துபெரு மழைவானஞ் சொரிந்ததெனக் கவிமாரி பொழியும் வாக்

குப்பையாம் பிறநூலென் றறிந்தறநூன் முழுதறியுங் குணவான் யாண்டுந்
தப்பையாய் தருபுலவர் தலைவணங்க நவைசிறிதுஞ் சாரா மேலோன்
சுப்பையா பிள்ளையெனுங் கவிச்சிங்க மிவன்பாடற் சுவையை நோக்கி
னுப்பையாங்கண்டதிலையெனப்புவன முழுவதுமின் றுவந்தமாதோ. (கக)

திருச்சிற்றம்பலம்.

இந்நூலாசிரியரவர்கள்

இயற்றிய

முகவுரைச் செய்யுட்கள்.

பூநாறும்புனத்தெயினர்குலமகளிர்தனித்தனியேபுகுந்நாளும்
வானூறுஞ்சிறுபிறையைவாணுதலுக்கிணைபொருத்திமகிழநீண்ட
தேனூறுந்தமிழ்ப்பொதியவரையுடைத்தவ்வரையினின்றுந்திரைத்தூய்நீத்தம்
மீனூறும்பொருநைநதிபெருக்கியிருகரைமருங்கும்விளைவமல்க. (௧)

செய்கையினிற்செயிரகற்றித்தவமேற்றிகிலவுலகுசெல்வந்துய்த்திங்
குய்கையினுக்கிதுநெறியென்றுயர்சைவநெறிக்கணுலாய்ந்தொழுகும்வாசப்
பொய்கையினும்பணைகளினும்புனனிரப்பியமிழ்தினுஞ்சீர்பொலியவாற்றும்
வைகையினும்பெருஞ்செல்வமெமக்கெவனென்றழகேந்துமருதம்வாய்த்த.

இந்நாடுதனக்கொருநாடுபடாதெனவுலகமெல்லாமேத்தப்
பொன்னாடும்பொன்னாடுமந்தரமென்றவாவிகந்துபுலவோர்பண்ணை
பின்னாடும்பொருள்வேண்டிமுன்னாடும்பொருள்கொண்டுபிறங்கவாழும்
நன்னாடுதென்னாடுநறுஞ்சைவத்தமிழ்ப்பாண்டிநாடுதன்னில். (௩)

பூமருவுங்கற்பகக்காபொலிந்துளபொனனகரினுக்கும்பொலிவுநீட்டுங்
காமருவுதண்டலையின்கனித்தேனுமாலைநெறிகரும்பின்றேனுந்
தேமருவுமலர்த்தேனும்பன்முகத்துமொருமுகமாய்த்திரண்டுமீறி
மாமருவும்வயற்சாலிமணிவிளைவித்தரும்போகம்வழங்குமாலோ. (௪)

பொருமுகவைசிறிதுமின்றிப்பொருந்தலர்களுடற்குருதிப்புலவுநாறு
மொருமுகவைநாந்தகங்கொண்டொல்காநல்லறம்பெருக்கியுறுகணீக்கிக்
கருமுகவையன்பவநீக்கியசேதுக்குரியமலர்க்கண்போற்காட்டுந்
திருமுகவைப்பதியிருந்திவ்வுலகமெலாமரசுபுரிதிகிரிவேந்தன். (௫)

தொண்டிமுதற்றுறைகளெலாந்துறைதந்தநிதிவாரிச்சுமந்துவங்கங்
கொண்டுவந்துகுவித்துமுதுகாற்றிடும்பொன்மனைமுன்றின்குவியலோடும்
மண்டுதெவ்வர்புறங்கொடுத்துத்தருதிறைப்பொற்குவியலொடுமாறொன்
றின்றி, யெண்டிசையோர்தருங்கனகக்குவியலுங்கொண்டண்டர்பிரானென
னவாழ்வோன். (௬)

தங்களினின்றிடம்பெறாதரசர்குழாமெதிர்புகுந்துதாழுந்தோறுந்
துங்கமணிமுடியுறிஞ்சியவிர்பசும்பொற்கமலநிகர்துலங்குந்தாளான்
பொங்குகலியிருளகற்றிப்புகழ்க்கதிராயிரங்கோடிபொலிவித்தெய்துஞ்
செங்கதிரின்வருங்கதிரின்குலம்விளங்கவந்தருளுந்தெய்வமன்னன். (௭)

வலியாளர்கண்சிவப்புமெலியவர்கணேறுமன்மாற்றிவையம்
நலிபாமணுவசையாமணிதூங்கும்வாசலிலென்னுனூர்தூங்கா
வொலியாழியொலியினும்வானுருமினும்மும்முரசதிரவொல்காவீரப்
புலியாணின்றொருதுறைச்செம்புனல்ருந்தமனுநீதிபுரியுங்கோமான். (௮)

கொங்கேந்துமலர்க்குழற்செவ்வரிக்கருங்கண்மலைமகட்கோர்கூறீந்தெஞ்சும்
பங்கேந்துபரஞ்சுடர்பொற்பதமேந்துஞ்சென்னியினன்பதுமக்கையிற்
சங்கேந்துமாலனையான்றவமேந்தியுலகமெலாந்தன்னையேந்த
கங்கேந்துங்களப்பகைக்குமுளப்பகையொன்றில்லாதகருணையேந்தல். (௯)

சங்கநிதிபதுமநிதிதருமணியான்வறுமையுறத்தமர்போல்யார்க்குஞ்
செங்கனகமழைபொழியும்வள்ளல்கண்மூவெழுவர்களுந்திரண்டுபோர்மேற்
புங்கமிருமோருருக்கொண்டுதித்தெனவழங்குகொடைப்புகழ்கொண்டேற
வெங்கணும்வெண்குடைபரப்பியெவ்வுயிர்க்கும்பொதுவாநின்றினிமைசெய்
[வோன். (௧௦)

நாகைமுடியுடல்பொடிப்பநள்ளாரட்டுள்ளார்கணலங்கடுய்ப்ப
வாகைபுனைதடக்குவடுகிடக்குமணிவடப்புயத்தான்மதுகசால
மோகைதருந்தாரலங்கல்வேலொளிருங்கரதலத்தானொழுக்கம்வாய்ந்த
பாகையரசன்வளவன்பரசுமொருவழுதிநிகர்பண்பான்மிக்கோன். (௧௧)

வருமனுமக்கொடிகருடக்கொடிகாவிக்கொடிகோடிமருங்குசூழ
வொருமனுக்கணீதியினனுயர்சேதுதனக்கோடியுவந்தாடுற்றே
பெருமனுக்கண்டடியேத்தமுடியேற்றுவாமேற்றுபெருமையேற்றுத்
தருமனுக்கிங்கிவனெனச்சொற்றரமேற்றுப்புவிபரிக்குந்தருமசீலன். (௧௨)

முருந்தரும்புதாளநகைமுகிண்முலைச்சிற்றிடைக்கயற்கண்முளரிச்செவ்வாய்
பொருந்தரும்புபவளவிதழ்மடந்தையர்கள்குனிசிலைக்கைப்போர்வேட்கஞ்சி
யிருந்தரும்பிச்சரிற்புலம்புற்றெறழின்மடலூர்ந்தவாக்கடக்கவெண்ணிநெஞ்சம்
மருந்தரும்பாகெனவிரப்பவாய்ந்தகதிர்வேலனைநேர்வனப்புவாய்ந்தோன். ()

தங்கள்குலதெய்வமெனும்ராஜராஜேசுவரிதாட்பொற்கஞ்சஞ்
செங்கைகுவித்தயர்பணிக்கணீங்காதுபெரும்போகஞ்சேர்ந்துவாழ்வோன்
நங்கள்குடிகொத்தடிமையாகவிலைமுறியெழுதிநவைசோராம [ன்.
லிங்கிருகண்ணிமைபோலும்வேண்டுபொருளுதவியென்றுமினிதுகாப்போ

இத்தகையமகிபன்முத்துராமலிங்கசேதுபதிதன்னையீன்ற
சித்திரபாஸ்கரசேதுபதிராஜன்றனக்குரியசெல்வத்தாதை
முத்தமிழின்கொடிநாட்டிமுதுபுலவோர்குடிபோற்றிமுன்னீர்வைப்பி
லெத்திசையுந்தனதுபுகழ்கொண்டெழுதிவாகைபுனைந்திருந்தவேந்தன். (௧௫)

அண்ணன்முத்துராமலிங்கசேதுபதிபேரவைக்கணமர்ந்துவாழு
மெண்ணுபலநாவலருளியலிசைநாடகத்தமிழ்தேர்ந்தியாண்டெண்ணுங்கும்
பண்ணுமவதானிசரவணப்பெருமாள்புவியினிற்பாரதியேயன்னான்
நண்ணுதமிழ்ப்படைகொடுவந்தெதிர்ப்பவர்கட்கொருசரபநாவலோனே. ()

அன்னவனும்முன்னெவனேசொன்னதொருபூலோகவரம்பைகாதை
யென்னவெழுதித்தருக்கொண்டிருந்தனவோரேடதனையிறைமைவாய்ந்த
மன்னுசந்திர கிரிச்சொக்கலிங்கப்பெத்தண்ணல்தரவாங்கிக்கற்ற
தன்னறிவாலவைகளிலுள்ளனவழுக்களத்தனையுந்தள்ளிமாதோ. (௧௭)

எத்தாலோசிற்சிலநீத்தெஞ்சியதோர்காதையைச்சேர்த்தெடுத்துத்துய்ய
முத்தாலோவலதுபவளத்தாலோவமைத்துளவிம்முதுசொல்லென்ன
சித்தாரமாகியவர்மானைப்பாவாகமுனஞ்செப்பினன்சம்
பத்தாமென்றரும்புலவோர்பெரும்புவியோர்தினம்விரும்பிப்படிப்பமாதோ.

அங்கதிலுள்ள துந்தவறிக்கிடந்ததுஞ்சேர்த்தொருங்குபடவமைத்துப்பாரிற்
செங்கரும்பின்சாறுகனிப்பிரசமலர்த்தேனமுதுதீம்பால்போலும் [கெல்லாந்
பொங்குதமிழ்ச்சுவைபெருக்கிபொருள்பெருக்கிநயம்பெருக்கிப்புலவோர்க்
தங்களுளங்களிபெருக்கத்தமிழ்ப்பனுவல்சமைக்குகவென்றன்னோர்சாற்ற.

காம்போசநாட்டரசன்புவனேந்த்ரநகருறைவோன்கவினோர்க்கெல்லா
மாம்போகமுதவுவதிலைந்தருபின்னிந்திரனேவனையானென்ன
நாம்போல்வார்சொலுந்தாலபுரந்தரனங்கவர்க்குரியநன்மையாவுந்
தேம்பாவென்றயரமைச்சன்சுமந்திராகரனொடுநற்சிறுவரின்றி. (௨௰)

நற்றவஞ்செய்திருவர்களும்பெற்றெடுத்தபிள்ளைகளினுமவேந்தன்
பெற்றபிள்ளைபுவனேந்த்ரன்புத்திசிகாமணியமைச்சன்பெற்றபிள்ளை
சற்றுமிவர்பகைமையின்றிச்சாத்திரங்கண்முழுதுணர்ந்துதகுந்தகால
முற்றபொழுதிவர்தேசமூடுசென்றுவளம்பார்க்கவுன்னிமாதோ. (௨௧)

இருவருமுற்றரசன்விடையேந்தியிருவாம்பரிமேலேறியந்தத்
திருநகரைப்புறநீத்துத்திசாதிசைசென்றுசாவியொருதிசைக்கணுற்று
வருநெறியிற்சோலையொன்றுவாவியொன்றுகண்டதிலேவதிந்துமற்றுங்
கொருபரிமேலமைச்சனைப்போந்தொல்லையிற்போனகங்கொணரவுரைத்தா
[னன்றே. (௨௨)

அவனேகவிவன்மீதோராழிகிர்வாவியுளோராவமூழிச்
சிவனுமென்றெதிர்வரக்கைநாந்தகங்கொண்டவைசடிந்தித்தேயந்தன்னி
லெவனுலுங்கடக்கரியவாவியிற்புக்கருஞ்சுரங்கவெளிதினெய்தி
நவனுறும்பூலோகவரம்பைநலநனிதடைந்தானமைச்சன்னாடி. (௨௩)

காணுமல்மிக்குநெடுங்காடுதொலைநாடடைந்துகலங்கித்தேடி
நாளுளுந்திரிபொழுதிம்மாளுளுந்தானுமொருநாள்போல்வாழ
வீணனவிசையதரன்கைம்மையாலிவனுயிரைவீட்டிமற்றைப்
பூணுளைத்தன்வயத்திற்புகுத்தினன்கண்டமைச்சனங்குபுக்குமாதோ. (௨௪)

தந்திரமாவெளியேற்றிவாவியிற்போயுயிர்மாண்டோன்றன்னைக்கற்ற
மந்திரங்கொண்டெழுப்பியிவர்மூவருமொத்துடன்கூடிவாவிநீத்து
வெந்திறல்சேர்விசையதரன்றனைமாமனொடுபுகுந்தாங்குயிரைவீட்டித்
தந்தையொடுவிரிஞ்சர்பதிதனின்மாதைவாசமலர்த்தாமஞ்சூட்டி. (௨௫)

வருநெறியிற்றுயில்பொழுதின்மாதமைச்சன்புள்ளுரைசொன்மாற்றந்தேறி
யொருபெருங்கான்மண்டபநீத்தூர்புகுந்துபினுநாகத்துயிரையோட்டி
வருக்கருமம்புகன்றுருக்கல்வடிவாகிமறுபடியும்வாழ்ந்ததீரு
யுரைசெய்கதையத்தனையுமுள்ளபடியாவருக்குமுணர்விலேற. (௨௬)

சொன்னயமும்பொருணயமுமாங்காங்குமினிமைதரத்துலக்கிப்பார்மேன்
மன்னும்றம்பொருளின்பம்வீடுமுதற்றருநீதிவகுத்துச்செய்யு [டும்
ளுன்னுதொண்ணூற்றென்பதுமூவாயிரமும்படலமைந்தாங்கொருபத்தோ
பின்னுமொருமூன்றுதொகைபெறவமைத்தேனுலகிலென்றும்பேசமாதோ.

——:0:——

புவனேந்திரகாவியப் படல அட்டவணை.

படலப்பெயர்.	பக்கம்.
பாயிரம்.	௧
நாட்டுப்படலம். ...	௫
நகரப்படலம்.	௮
அரசியற்படலம். ...	௧௫
தாலபுரந்தன்றசுப்படலம்	௧௯
மகாருற்பத்திப்படலம். .	௨௨
மந்திராலோசனைப்படலம்.	௩௧
நகர்நீங்குபடலம். ...	௪௧
வளங்காண்படலம். ...	௪௫
சோலையைக்கண்ணுற்றபடலம்.	௪௯
அசனங்குணர்தற்கேகு படலம்.	௫௩
நாகம்வெட்டியபடலம். ...	௫௬
பூலோகரம்பையைக் கண்ணுற்ற படலம்.	௫௮
வரலாறுகூறியபடலம் ...	௭௨
மந்திரிசோகப்படலம். ...	௭௪
அரசன்சோகப்படலம். ..	௭௯
விஜயதரன்வேட்டைப் படலம்.	௮௪
பூலோகரம்பையின் வடிவுரைத்தபடலம்.	௮௯
விசையதரன்மோகமுற்ற படலம்.	௯௩
புவனேந்திரன் முனிவுற்ற படலம்.	௯௫
புனல்குளியோடுபடலம். ...	௯௮
விசையதரன்கைக்கிளைப் படலம்.	௧0௫
வந்தனைப்படலம். ...	௧௧0
பூலோகரம்பைசோகப் படலம்.	௧௨௬
பெண்ணழைத்தபடலம். ...	௧௩௩
பூலோகரம்பைபூசாவிதிப்படலம்.	௧௪௧
பூலோகரம்பைபூசனைப் படலம்.	௧௫0
மந்திரியாத்திரைப்படலம்.	௧௫௩
மந்திரிதந்திரப்படலம். ..	௧௫௮
பூலோகரம்பைமீண்டுற்றபடலம்.	௧௬௮
புவனேந்திரனுயிர்பெற்ற படலம்.	௧௭௯
பூலோகரம்பையைத் தேடவிட்ட படலம்.	௧௮௬
எழுச்சிப்படலம் . .	௧௯௩
வெங்கட்டம்மாள்சாவற் படலம்.	௧௯௬
சமர்த்தன்றூதுப்படலம். ...	௨0௩
புவனேந்திரன்கேள்விப் படலம்	௨௧௪
புவனேந்திரன்படையெழுச்சிப்படலம்.	௨௧௭
தருமநீதியுரைத்தபடலம் ...	௨௨0
தருமன் தசமுகன்கதையுரைத்த படலம்.	௨௨௫
படைத்தலைவர்வதைப்படலம்.	௨௪௪
சித்திரகேசரிசிங்கன் வதைப் படலம்.	௨௪௬
விஜயதரன்சோகப்படலம்.	௨௭0
வீரசிங்கன்விசையதரன் வதைப்படலம்.	௨௭௫
ஈமவிதிப்படலம். ..	௩0௮
தருமன்பட்டாபிஷேகப் படலம்.	௩௧௧
விரிஞ்சநகரடைந்தபடலம் ...	௩௧௬
தாலபுரந்தரன்விரிஞ்சநகரடைந்த படலம்.	௩௧௯
திருக்கலியாணப்படலம். ...	௩௨௧
தன்னகர்சென்றபடலம். ...	௩௩௨
மீட்சிப்படலம். ...	௩௩௬
கார்க்கோடகன்வதைப்படலம்.	௩௩௮
புத்திசிகாமணி இடையூறுற்ற படலம்.	௩௪௪
புத்திசிகாமணிகல்லுருவான படலம்.	௩௫௧
புத்திசிகாமணிக்கல்லுருக் கழிந்தபடலம்.	௩௫௭
புவனேந்திரன் முடிசூடுபடலம்.	௩௫௮

உ

சிவமயம்.

புவனேந்திரகாவியம்.

பாயிரம்.

கடவுள் வாழ்த்து.

நேரிசை வெண்பா.

பூமேவுஞ் சீர்சால் புவனேந் திரன்கதையைப்
பாமேவு செந்தமிழாற் பாடவே—நாமேவு
நிந்திப் பிராதகல நீக்கியரு ளாக்குமொரு
தந்திப் பிரான்கமலத் தாள். (க)

பரமசிவன்.

வேறு.

வண்டலை கொன்றை வேய்ந்து மதியணிந் தாவுஞ் சூடிப்
பண்டலை புனைந்து மெய்யின் பாதியோர் பாவைக் கீந்து
விண்டலை யமர ருய்ய விடங்களங் கொண்டு வேதன்
வெண்டலை கரத்தி லேந்தும் விமலனை வணக்கஞ் செய்வாம். (உ)

உமாதேவியார்.

வேறு.

ஆதிபரம்பரையாகிச்சத்துச்சித்தோ டானந்தமயமாகி யகண்டமாகிச் சோதிநிறைவடிவாகி மூலோங்காரச் சுழிமுனையின் கொழுந்தாகித்தோற்றமான, வோதியபூதாதிநிறைபுவனமாகி யுற்றசராச ப்பொருளினுண்மையாகிச், சாதிகுலம் பிறப்பிறப்பு மூப்பொன்றில்லாச் சத்திதுணைத் தாட்கமலந்தலைமேற்கொள்வாம். (ங)

விநாயகர்.

வேறு.

குருமதங் கிக்கோர் குமரனாய்த் தனது குளிர்மலர்ச் சேவடி நினைவோர்
கருமதங் கரைக்குங் கருணைவான் முகிலாய்க் காண்டகு மறைநெறிகலந்து
வருமதங்களுக்குத் தலைவனாய்மனமெய் வாக்குமூன் றினுக்கு மெட்டாத
பெருமதங் கவிழ்க்குங் குஞ்சரவதனப் பிள்ளைதாடலைக்கணிபெறுவாம். (ச)

சுப்பிரமணியர்.

வேறு.

பெருமையிலுஞ்சிறுமையிலுஞ்சமனிலையாயுலகநிலைபெயர்ந்தபோதுங்
கருமையிலாவெண்மைதிகழ்கருத்துடையாருத்தியுறுகனிவுக்கேற்ப
வொருமயின்மேலிருமயில்கொண் டொருமுகமாயாறுமுகத்தொளிகுலாவ
வருமயிலானிருமையிலான்வனசமலர்ச்சேவடிகள்வணக்கஞ்செய்வாம். (௫)

சரசுவதி.

வேறு.

கொம்பவளங்குமிழிசிமிழ்சூதொவ்வாத குடமுலைமேல்வடமணிந்துகூர்
மைகாட்டு, மம்பவளவுந்தருங்கண்மானைத்தேனை யாரணங்கைக்காரணங்கண்
டறிதற்கெட்டாச், செம்பவளந்தருந்துவர்வாய்மயிலினைத் திகழ்படிகநிறத்
தாளைச் சிந்தைசெய்வோர், நம்பவளங்கல்விசெல்வந்தந்தாட்கொள்ளு நாமக
ளை நாம்பணிந்தெந்நாளும்வாழ்வாம். (௬)

அவையடக்கம்.

வேறு.

முள்ளிக்குந்தாமரைக்குமுண்டகமென்றுங்கருதிமொழியாவான்சூழ்
வெள்ளிக்குங்கயலுக்குமீனமென்றுமிரும்புதங்கமிளிர்பொன்னென்று
முள்ளிக்காசினிபுகன்றவாபோலென்புன்றமிழ்க்குமுணர்வான்மிக்கோர்
தெள்ளிக்கார்நறுந்தமிழ்க்குங்கவியென்பதுளநினைந்துசெப்பினேனால். (௭)

வேறு.

நூலுணர்பவனுமல்லேனூல்வழிநுனித்தகேள்விப்
பால்வருபயனையோரும்பக்குவனல்லேன்கற்றோர்
சீலமுந்தெரிந்தேனல்லேன்றிருப்புவனேந்த்ரன்காதை
மூலமிங்குரைத்தேனெஞ்சென்மொழிவழிப்படாமைகொண்டே. (௮)

நூலுரைத்தற்குக்காரணம்.

பூமலிபுனலிற்பூத்தபூமிசைப்பொருந்திவாழு
மாமகள்வதனம்போல மன்னியபாண்டிநாட்டுக்
கோமகன்குணக்குன்றன்னகுரிசில்பல்லரசகோடி
தாமரைச்சரணம்போற்றத்தனியரசியற்றுந்தோன்றல். (௯)

நிதியினைவேட்டோர்க்கெல்லாநிதியெனவுதவுஞ்சேது
பதிமகராசன்வாசற்பாவலர்சிங்கம்வேண்டுந்
ததிதமிழுதவும்வாணிசரவணப்பெருமாள்சொற்ற
மதிதருவலியகாதைமுறையெலாமரபாற்றேறி. (௧௦)

காவலர்முதலாமாந்தர்யாவருங்கனிந்தநீஞ்சொற்
பாவலங்காரமாகப்பாடிநீதருகவென்றிங்
கோவலில்லாதுசொற்றவாய்மையையுளத்திருடிக்
கேவலப்பிறப்பினேனுக்கிதுவுமோர்கீர்த்தியென்றே. (௧௧)

திருப்புவனேந்திரன்றன்சீர்திகழ்சரிதமுற்றும்
விருப்பினிற்பனுவலாகவிரித்தனன்விரிமுந்நீர்சூழ்ந்
திருப்புறமுலகந்தன்னிலினிதுகேட்பவர்கட்கெல்லாங்
கருப்பினர்வாராதென்றுள்ளக்கனிவிறைக்களிப்புக்கொள்ள. (௧௨)

பாயிரம் முற்றிற்று.

நாட்டுப்படலம்

கலைமதியுறுகுகூவிளங்கடுக்கை கட்செவிகங்கைவெள்ளெருக்கு
தலைமிசையணிந்தவொருமுதலான தனிப்பரம் பொருளினைத்தமர்க்கு
நிலைவிளங்கியசீர்நிமலசற்குருவை நினைப்பருங்கூடலிலுறையு
மலைமகளிருகண்மணியையென்னுள்ளமணிதரவணங்கிவாழ்குதுமே. (௧)

வேறு.

மறைநிரப்பியமன்னவர்மரபுழியுதித்தே
யுறைநிரப்பியசுரிகையாலுறுபகையொதுக்கித்
துறைநிரப்புமிக்கதைக்கிறைவாழ்வுறுதூய
முறைநிரப்புகாம்போசநாட்டணிசிலமொழிவாம். (௨)

வேறு.

விண்ணவர்க்கிறைவன்களிறெனவானின்மிடைந்தெழுவெண்முகிலினங்க
ணண்ணுதெண்டிரைநீர்க்கருங்கடன்மடுத்தந்நாயகன்வடிவெனநாறி
யெண்ணுமாதிரஞ்சூழ்ந்திடித்துவாய்முழங்கியிரவிவெஞ்சுடர்கெடுத்திருண்டு
தண்ணெடுந்தாரைபொழிந்தனநிமிர்ந்ததடவரைக்குலமுடிதயங்க. (௩)

மைமுகிலினங்கண்மறிகடற்றிரைநீர்வாரிநீண்மலைமுடிதோறும்
பெய்மழைத்தாரையகங்கரித்தெதிர்த்தபெருவலித்தசமுகன்றன்மேற்
பொய்சிறிதறியாப்புரந்தரன்சேனைபொங்கிவஞ்சினம்பலபுகன்று
செய்சமருடற்றிக்கைமிகுத்தடங்காச்சிலைவிடுசிலீமுகங்கடுக்கும். (௪)

பொழிந்தவெம்பகழியுடல்பிளந்திடும்வாய்ப்பொங்கிமேல்விரிந்துநாற்புறனு
வழிந்தசெங்குருதிபோலநீண்டுயர்ந்தமலைமுடித்தலைத்தலைகிடந்து [ம்
செழுஞ்சுடர்பரப்புஞ்செம்மணிவான்றித்திசைதொறும்பரந்துமேலோங்கி
யெழுந்தவெள்ளருவித்திரள்கள்செந்நிறமுற்றிழிந்துபாரடைந்தனமாதோ.

கடமலியானைக்கோடுமொவருக்கைகாரகிற்றருமரவங்கோங்
கிடமலிசந்துதாதகிகதலியெடுத்துவான்புடைதொறும்வீசி
கடகடவெனநன்றொலித்துவான்கங்கைகாசினியிடையிழிவதுபோற்
றடமலைமுடிநின்றிழிந்தவெள்ளருவித்தாரைகள்சரிந்தனவெங்கும். (சு)

இருகரையிடந்துபெருகுவானதிநீரொற்றுவெண்டிரைகளாலெதுக்கும்
பொருமணிக்குவியலிடந்தொறும்வேறுபுதுக்கையாமெனப்பொலியக்
குருகனநாரைவளைகளிருதிசொண்டணின்றதிர்ந்தெனக்குமுறத்
தருவரையுருட்டிவேடுவர்குடிநைதனிற்புகுந்தடங்கலுந்தடவி. (எ)

முல்லையிற்புகுந்தாங்காய்ச்சியர்காய்ச்சுமுதிர்சுவைப்பாற்குடஞ்சாடிக்
கொல்லையான்றருவைசாய்த்துமேய்ப்பவர்கைக்கோறுணிகம்பளம்பலவு
மொல்லையிற்கவர்ந்துபெருநிலமன்னர்க்குடன்படாச்சிற்றரசரின்மேற்
செல்லுசேனையினின்றூர்த்துவெஞ்சுரமேற்சென்றதுசெழுநதிவெள்ளம் (அ)

பகவன்வார்சடைநின்றிழிந்துபாரொழுகும்பகீரதிதனதுமாற்றவளாந்
தகவுறுகாளிபகைத்திவணிருந்ததலமெனநினைத்தவளுழைப்போய்
முகமனன்மொழிந்தளவளாவுதல்போன்முதிர்தழற்பாலையைச்சுலவிச்
சுகமலர்ச்சோலைவேல்சூழ்மருதந்துருவியோடினநதிவெள்ளம். (கூ)

பூகநீண்மருதநிலத்திறைத்தலைவன்போர்க்கெழுநாற்பெரும்படைகள்
சேகரித்தீர்த்துவந்ததும்பால்த்தேர்சியயாசுகமதமா
வேகவெம்பரிகாலாளிவைகொண்டுவெண்ணுரைபரப்பியார்த்தப்பாற்
போகுநீர்வெள்ளம்பானலங்கைதைபொலிதருநெய்தலிற்புகுந்தே. (க0)

மணவணிபரதாசிறூர்கரங்கோலிவகுத்தவான்சிற்றிலையெற்றி
யினமணிப்படவுபுரட்டிவார்வலைகளெடுத்துநெய்மீன்பருவாளை
சினவுறுசுறவுதிமிங்கிலங்கலங்கத்தூயவைம்பொறிநிலைகெடுத்தோர்
மனமெனத்தெளிவுற்றாழ்திரைக்கடன்மேன்மண்டினமாரிநீர்மாறி. (கக)

பல்லுயிர்தமக்கோர்தாய்பலமுலையாற்பால்சுரந்தளிப்பதுபோல
வெல்லையில்லாதமடுத்தடங்குளங்காலேரிபூவோடைதண்பழன
நல்குரவொழியநிரப்பியிப்புவிக்குநளிர்பயோததியமுதிதுவென்
றல்லல்வீந்துவகைமீறவெந்நாளுமணிவளம்பரப்பினமாதோ. (கஉ)

கரைதகர்த்தோடும்வெள்ளநீர்தேங்கக்கைவகுத்திருஞ்சிறைகோலி
வரைமுகிற்குலநேர்பகடலம்பூட்டிவள்ளைசெங்கிடைகருங்குவளை
விரைநளினஞ்சேதாம்பல்காண்மடங்கவெள்வளையுமைமீன்றுடிப்ப
நிரையுழுதுழுசால்பரம்படித்துழவர்நெண்முளைநேர்நதுவீசுவரால். (கங)

மள்ளரேறுழுதவயலெருறுஞ்சிதைந்துவனப்பு டைநோக்கி
இயள்ளிநேர்கின்றுபுகலுதல்போலவெழின்மணிக்காம்வளைகலிப்ப
வள்ளிலைவேற்கட்கடைசியர்தமதுவழிவருதெய்வதம்பேணி
யுள்ளிநாற்றெறிந்துநடவுசெய்துவகையாற்பெருநகுரவையாட்டியர்வார்.

உழுதசாலிடையிற்பூமகளுடல்கீண்டொழுகியகுருதியாமென்னச்
செழுமணிச்சுடரோடளைந்துவான்புனன்மேற்றேங்குறுபணைதொறுமன்று
பழுதினுக்கிரங்கியரற்றுதல்போலப்பணிலம்வாய்முழங்குறுங்கஞ்ச ள்
முழுவதுந்தேறல்சொரிவதவ்வருத்தமுன்னிக்கண்பனிப்பதைமானும். (கரு)

கரும்புடைக்கோடுதேன்பலாக்கனிமாங்கனிகதலிக்கனியுகுதேன்
சுரும்புசூழ்மலர்த்தேன்பருவரான்மைசுரிவளைகூரண்டங்களுகளும் [வி
பெரும்பணைத்தலைப்பாய்ந்துவழியொழித்துறுநெற்பெரும்பயிர்வான்முடிதட
வருங்கதிர்தடைபட்டிடநிமிர்ந்தோங்கிவளர்ந்திடவளர்ப்பனமாதோ. (கசு)

உளந்தடுமாறிப்பகைவராற்றலைசாய்த்தொதுங்குவார்தம்முளமகிழ [டு
விளம்புமப்பகைவர்தமைத்துரத்துவர்போன்மென்னடைக்கடைசியர்திரண்
தளந்திகழ்களினவயன்றுறுமுனைமேதங்களானடவுசெய்திட்ட
விளம்பயிர்வளரவிடர்செயுங்களைகளியாவையும்வேரறவெடுத்தார். (கஎ)

ஆணவங்கெடுத்துநல்லருள்பொருந்தியானந்தநிரம்பிமேலெழுந்த ந்து
மாணும்யோகியர்போற்செழிப்புறுபைங்கூழ்வான்பொதிகிரண்டுநீண்டுயர்
சேண்முடிதடவிக்கற்புறுமகளிர்சிரங்கவிழ்ந்தச் முள்ளுறுத்த
நாணிநிற்பதுபோற்கதிர்க்குலைசாய்த்துவிளைந்தனநறும்பணையெல்லாம். (கஅ)

அன்புறுமதனகலைபயின்மைந்தர்க்கணியிழைமகளிர்பாற்கலவி
யின்புறுபோகம்பலத்ததுபோலுமிரு லைத்தியல் பரியுழவர்
நன்பயிர்முயற்சிக்கொத்தவருள் ளாறொறுங்களிசிறந்துவப்ப
மின்பொருசெம்பொன்மணியெனப்பழுத்துவிளைந்தனபசுந்தடங்கதிர்கள்.

பிறைமுகவிரும்பாலரிந்தரிதூக்கிப்பிறங்கலிற்போர்பலவேய்ந்து
முறைபகடோட்டித்தெழித்துவைநீத்துமுறைகொடுதூற்றிநெற்குவித்தாங்
கிறையவர்க்காறிலொருகடனீந்தவ்வாறுமற்றேனையர்க்குதவிக்
குறைதராவதனைப்பண்டியிற்கொடுபோய்க்கு வியமனைதொறுங்குவிப்பார்

வேறு.

வண்டுடாமலர்தோறுமதுத்துளி
கொண்டிருவிடைகூட்டுவதாமெனப்
பண்டுபுன்னிலமல்குபலனெலாங்
கண்டுகொய்துகடிமனையய்ப்பரால். (உக)

கொட்டுவார்முரசால்வரக்கூவியே
கட்டுபாகுபொற்காதணிகண்டிகை
யிட்டுவேண்டும்பொருள்கொடுத்துதற்பவர்க்
கட்டபாலமுதம்படைப்பாரரோ. (உஉ)

வந்தும்தன்றருவேடுவமாதருக்
குந்துபொன்மணிபள்ளியருய்ப்பாரற்
றந்தபால்னுக்காய்சசியர்தாம்பெற
நந்துமுத்தளப்பாரகடனோர்யர். (உ௩)

வால்வளைப்புளினத்தடமாப்பணைச்
சேல்பிடிக்குஞ்சிறுரொலிமுல்லையிற்
கால்களிற்குழக்கன்றணைத்தானிரை
பால்கறப்பவரோதைபடுக்குமால். (உச)

வள்ளைமென்குழைமங்கையர்தங்கடைக்
குள்ளம்வெள்கியொதுங்குசெங்காலனங்
கள்ளிதழ்க்கமலங்களைக்கண்டவர்
தெள்ளுசீரடியென்றுதியங்குமே. (உரு)

ஏவிருந்தகண்ணேழையரெங்கணு
நாவிருந்தெழுநன்மொழிசந்தெதிர்
மாவிருந்துவரவழைத்தாரொணுக்
காவிருந்துகருங்குயில்கூவுமால். (உசா)

வான்செறிந்தமராஞ்செறிகாவெலாந்
தேன்செறிந்த செழுமலரோடைகண்
மீன்செறிந்தவிரிநிலமெங்கணு
மான்செறிந்தெழுபால்செறிந்தாருமே. (உஎ)

தூவிமாமயிலார்குடையுந்தொறூஉ
மாவியன்னபெடையென்றணிதிகழ்
வாவியிற்செழுங்கான்மடமாவனம்
பூவினின்று புலம்பிவருந்துமால். (உஅ)

காரளாவியகான்வரையெங்கணும்
வாரிவெண்டிரைதூற்றும்வளைமணி
நீரளாவியநெய்தலிற்செம்மணி
சாரவெற்பருவித்திரள்சாய்க்குமால். (உகூ)

கீதவண்டுகளார்த்திசைப்பாண்செயப்
போதுசிந்தியபொங்கர்களெங்கணுஞ்
சோதிமென்சிறைதூக்கிவிரித்திள
மாதரொன்னயினடஞ்செய்யுமால். (ஙo)

வானின்மீனினம்வந்துவந்தேபுவி
தான்விழுந்துபின்மீதெழுந்தன்மைபோற்
கானமங்கையூரோச்சுங்கவண்மணி
மானமால்வரைவீழ்ந்துவயங்குமால். (ஙக)

காடெலாஞ்செழுங்கற்பகங்கான்மலர்த்
தோடெலாம்பசுந்தேன்றளிதூநதி
மாடெலாமணிவால்வளைவான்பணை
நாடெலாம்பொன்விளையுமெந்நாளுமே. (ஙஉ).

ஈகையில்லையிரவலரின்மையா
லோகையில்லையுறுகண்ணொழிதலால்
வாகையில்லைமருவலரின்மையா
லாகையாலொப்பிதற்கினியாவதே. (௩௩)

வேறு.

மின்னைவாங்கியோவலதுமாற்றுயர்ந்துமீதவிரும்
பொன்னைவாங்கியோவிதிமனம்புண்படநோற்றிங்
கின்னுநாஞ்சொலப்படைத்தனனெனவருமெழிலார்
மன்னுமாமயில்போலுமிந்நாட்டுளமடவார். (௩௪)

திருவுங்கல்வியுஞானமுந்திகழநல்லொழுக்க
மருவும்வாணுதன்மடந்தையர்யாவருமனைக்கண்
வருவிருந்தினிதோம்பலுமகிழ்நர்மேலன்பு
பெருகவாழ்தலுமாவனவவர்கொளும் பெருமை. (௩௫)

வாசநாறுமென்குழலியர்நென்னலின்வனைந்த
காசுபொன்மணிக்கலன்களுங்கல்வையுமலரு
மாசெனக்கழித்தெறிதலிற்றெருக்கடைமலிந்து
வீசுவல்லிருளினும்பெறுவெயிற்கதிர்விரிக்கும். (௩௬)

கற்றமாந்தருக்கனந்தனுங் கவின்செய்மாநிதியம்
பெற்றமாந்தர்க்குத்தனதனும்பெரும்புயவலிமை
யுற்றமாந்தர்க்குவீமனுஞ்சிறியரென்றுரைக்கின்
மற்றிவர்க்கிணையாவரைத்தேடிநாம்வகுப்பாம். (௩௭)

காவிற்றீங்கனிகழனியினெற்பசுங்கரும்பு
பூவிற்றேன்விரைபுனலினிற்புரிவளைசினைமீ
னாவிற்றண்பயமகந்தெளிந்தறிஞராலமைத்த
பாவிற்றீஞ்சொலிந்நாட்டினில்லவிடப்படுமோ. (௩௮)

மண்டுசூல்வளைமுழங்கொலிமலர்தொறுநறுந்தே
னுண்டுவண்டினம்பாடொலியொழுகுதீம்புனலிற்
கெண்டைபாயொலிகிரிசரமாவொலிகெழுமி
யெண்டிசாமுகந்தொறுமழைக்கொண்டலோடிகலும். (௩௯)

ஆய்ந்ததீங்கரும்பதுக்கிநற்சாலிமேய்ந்தவாவுற்
றேய்ந்ததண்டுறைவாவியினீர்புகுந்தினிது
தோய்ந்தமேதிகன்றுள்ளிவான்மடித்தலஞ்சொரிய
வாய்ந்தபாலொடுகழனியிலுகள்வனவாளை. (௪௰)

கிளையினோடரசோதிமந்துயிலெழக்கிளர்தே
னளையும்வண்டினமுழங்குநீள்பகலினுமல்லி
முளரியாமெனமுகைவிரித்தலர்தாமரை
வளைமணிக்குலமதிநிலவெறிப்பனவாவி (௪௧)

கருமபுநீடிபதலைதொறநதேனிருல்கசியச
சுருமபாசூழ்கிடநதிாஙகுவபிரிநதவாததுயாகூ
ாருமபுவாள்கொணடருஞசமாபுரிவதறகணஙகன
விருமபுவிற்பலகுழைபபனவாமெனவிளஙகும. (சஉ)

தேவாபூசனைககாயநறபொருளபலசோததுப்
போவதுறறநனம ணபுடையவாகளைபபோலப்
பூவிளநதளிாகாயகனிதேனசுமைபொறுததுத
தூாவிரிநதவானகததினிறசெலவனசோலை. (சங)

வரைவளஙகளுஙகானுளவளஙகளுமவாவித
தரைவளஙகளுமவெணமணிசஙகினநதவழுந
திரைவளஙகளுஞசெநதமிழ்ககவிஞாாறசெபபு
முரைவளஙகளைககடநதுமறபெருவளமோஙகும. (சச)

கமலயோனிமாலபுரநதாணகடவுளாமுனிவ
ாமலயோகியாறவதறகரியதாயமைநத
விமலஞாருடஙகியனபுடைமைமேலவிளைந்த
நிமலநாடிதறகெநதநாடினைசொலநேரும. (சரு)

நாட்டுப்படலம முற்றிறறு.

ஆகததிருவிருததம (ருஎ)

நகரப்படலம்.

வளையெடுததுவிறகெடுததுவசியாகுலமகனறனககோமாமனுகிக
கிளையெடுததவழககுவெனறுகிழவனைவெணணிவலூாககிளைததிஙகண்
முளையெடுததுமுடிததமுடிப்பெருமானைககதலிபலாமுதிாநதசெந்தேன
விளையெடுத்தமொழியுமையோடணிமதுரைபுரநதானைமேவிவாழ்வாம. (க)

வேறு.

நாடெலாமுடலதறகுயிாநகரெனனனூ
லேடெல ஞசொலுமபானமையாஞுடுமுனனிசைததோந
தேடவாமபொருளவைகளுமொருஙகுறததிரணடு
மாடெலாமலவெயதியநசாவளமவகுபபாம. (உ)

குலஞசிறநததுகுடிகளாலறைவாசெஙகோலால்
வலஞசிறநததுமுனிவாால்வணஙகுதறகுரிய
தலஞசிறநததுபுலவா றசமைவுறுஙகழக
நலஞசிறநதததிருபபுவனேநதிாநகாம. (ங)

சிவனினைககபுநானமுகனமறககவுநதிருமா
லுவமைகூறவுமிமையவாகவல முபகா
தவமிழைககவுநதனதனவலியமை தாவும
புவனமேததவுமபுகழமிகுமணிநலமபொலியும. (ச)

வேதியர்க்கருநான் மறைப்பொருளெலாம்விளக்கு
மாதருக்குள நிறையெழில்வளனெலாம்வழங்கு
மோதுமைந்தருக்கெவ்வகைக்கழகமுமுதவு
மாதுலர்க்கொருதாயெனக்கருணைவைத்தளிக்கும் (௫)

முக்கணனயன் மால்புரந்தரனுயர்முனிவர்
தொக்கமாநகர்க்குயர்ந்ததென்றுலகெலாந்துதிக்கத்
தக்கபேறுவாய்ந்தறமெனுந்தருவின்மேற்றழைத்துப்
பக்கமெங்கணும்புகழ்க்கொடிபடர்ந்ததிப்பதியே. (௬)

கண்ணகன்றகீழுலகினையுட்படக்கவர்ந்து
விண்ணகன்றபொன்னகர்க்குமோர்காவலாய்மேவி
மண்ணகன்றநற்சுவணவெற்பாமெனவளனுற்
றெண்ணகன்றபொன்னெயினகர்ப்புறத்திலங்கியதே. (௭)

தங்கண்மாட்சியுநூல்சொலுமாட்சியுந்தக்கோ
ரிங்குகாண்மினென்றருந்தவந்தச்சர்களியற்றிச்
செங்கைவல்லமைகாட்டியசெயலெலாந்தெரிக்கும்
பொங்குசித்திரம்பொறித்தபொன்மணிதிகழ்புரிசை. (௮)

அங்கிதாரகைமதிகதிர்முதலியயாவு
மிங்குறுஞ்சுடரொளியினுற்றம்மொளியிழப்பப்
பங்கமில்லதோர்பழமறைநான்குமிப்பார்மேற்
றங்கினவெனநாற்பெரும்வாயில்கள்சமைந்த. (௯)

மேலமைத்தநற்பொறிக்குலமேவலாடுக்கிற்
பாலம்வேன்மழுசக்கரம்பகழிவிற்கவண்கல்
சூலமங்குசந்தோமரமுலக்கைவாள்சொரிந்து
காலனும்பயந்தோட வெஞ்சமர்முனைகடக்கும். (௧௦)

ஊழிநாளொருநாட்கொடுபுவனமோரேழு
மேழுந்தன்சிறுகருவெனக்காட்டியிங்கீந்த
வாழியான்றிருவுந்திபோலணிநலம்பரப்பி
யாழங்காண்பதற்கரியவாயகன்றபேரகழி. (௧௧)

கூறுமாலையுங்கலவையுங்குழைகளுங்கலனு
மேறுதீபமுந்தூபமுங்கலசமுமேந்தி
வீறுதோன்றுகற்புடை யவர்நலமெனவிரிந்து
வேறுவேறுநின்றொளிர்வனவணிவிழாவீதி. (௧௨)

பரவுதண்கதிர்ச்சந்திரகாந்தமீப்படிந்த
வரமியத்தலத்தோறுநின்றொழுகுவெள்ளருவி
விரவுகற்பகவிருக்கநீணிழலிடைமேவுஞ்
சுரபிவான்மடியிலிற்றுவதாமெனத்தோன்றும். (௧௩)

வள்ளவார்முலைமகளிர்செந்தாமரைவதனங்
கொள்ளையாடமெய்குறைந்தனையோவெனக்குழையாப்
பிள்ளைவெண்பிறைகாண்டலும்பிறங்குபொற்காந்த
முள்ளநீர்விழியுகுதல்போன்மாடங்களுருகும். (௧௪)

குறுகுநுண்டுளைத்தாம்புகணிரைநிரைகொளுவி
மறுகமைத்தபொன்மாடமேனமழைப்புனல்வார்த
லிறுகுமெய்யுரற்புடைத்தகாற்பிறைமருப்பிலங்கு
மறுகுழக்கடம்பொழிந்துவீறியற்றுதலடுக்கும். (௧௫)

யாணரிந்நகர்க்கிணையெனவமரர்கோனகரை
மாணமெய்த்தவர்வழுத்தினாரதனொளியடக்கி
யேனுறக்கருப்பாக்குதற்ககங்கரித்தெழுந்து
சேண்வளைத்தமருட்டற்றல்போலகிற்புகைசெல்லும். (௧௬)

காமர்மாடமேற்கவின்மணிச்சுடர்செய்பொற்கலசம்
பூமலர்க்குழல்புலர்த்தகிற்புகையொடும்பொலிதல்
வாமமேகலைமடந்தையர்வனமுலைசிவண
வோமகுண்டநாப்பண்டவமுஞற்றுவதொக்கும். (௧௭)

முத்தழுத்துபொற்சுவர்வகுத்தணிவளைமுடுக்கி
யுத்திரத்தணிமரகதக்கொழுஞ்சுடரோட்டிப்
பத்தியெங்கணும்பவளமும்வயிரமும்பரப்பி
வைத்தமாளிகையோளிவிண்ணுலகினைமயக்கும். (௧௮)

நாட்டின்மிக்கவிந்நகர்மடவார்நடநயந்து
கோட்டின்மிக்கவைந்தருநிழற்கொலுவிருப்பவன்முன்
னாட்டின்மிக்கபொன்னரம்பையராடுதற்கிதனைக்
காட்டிநிற்பவர்க்கடுப்பனமாடகேதனங்கள். (௧௯)

அடிதுவக்கியாடகத்தகடடுக்குயர்மாட
முடிதுவக்குவிற்கேதனமுழுமதியுடனா
டிடிதுவக்கியபுழைபடுதழும்பினையேனா
படிதுவக்கியமாந்தர்கள்களமெனப்பகர்வார். (௨௦)

கலங்கிடப்புயத்தணிபதஞ்சிவப்புறக்காலால்
வலங்கதித்துநின்றுதைசிலம்பொலிமாற்றி
யலங்கலில்வருந்தளிதுயர்மறந்தவர்த்தேற்றி
நலங்கண்மாதருக்குரைப்பனபோலொலிநாட்டும். (௨௧)

கிரியடர்ந்துபாகெறிந்துகாற்றுணைச்செவிகிளப்புங்
கரியினீண்மணிக்கரங்களுங்கலைபயில்புலவோர்க்
கரியபுண்ணியத்தாறறிந்தநுதினமளித்தற்
குரியர்கைகளுநீளுவதானநீருற்றே. (௨௨)

வேறு.

கொடியிடைநெடுந்தேரல்குல்குவிமுலைகலசம்வேல்கண்
சுடர்மணிமுறுவல்பைம்பொற்றோரணஞ்சூழ்மென்காஞ்சி
தொடிநிலைகாநற்றாணிவ்வவயவஞ்சுமந்தசெம்பொன்
வடிவமைநகராங்கன்னிக்கென்றுமங்கலமாமன்றே. (உங)

கணிகையர்வீதி.

மைநிறைத்தலவும்வேற்கண்வலைவிரித்ததற்குள்ளானோர்
கைநிறைத்துதவுசெம்பொன்முழுவதுங்கவர்ந்துதத்தம்
பைநிறைத்தவர்களுள்ளம்பரவசங்கொள்ளவின்ப
மெய்நிறைத்தேகச்செய்யுங்கணிகையர்வீதிசொல்வாம். (உச)

அறவழிப்பொருள்கொண்டெய்யாதவரெலாமந்தோவிந்த
மறவழிக்கோதைமின்னார்மனவழிவதியவென்றே
புறவழியெல்லாங்காமப்புலவழியேற்றுமாபோ
லுறவழியாதகோலங்காட்டியங்கொளிருமாடம். (உரு)

பொன்னணியல்குற்றேர்மேற்புருவவிற்கடைக்கால்கோட்டி
மன்னுபூவரிக்கணம்புவயக்கிமுன்னைதிர்த்தமைந்தர்
துன்னியமருமம்போழத்தொடுத்துத்தம்வயத்தாக்கி
மின்னிடைக்கொடிகொண்டாருக்கியாவரேவணக்கமேவார். (உசு)

தசும்புறுதுணைமென்கொங்கைச்சாந்தமுஞ்செறிந்தமென்பூம்
பசும்பனிநீருஞ்சூதம்படிந்தவாயெச்சிலென்ன
விசும்பினுங்கமழக்கையாலடிக்கடிவிலக்கிவேறு
வசம்பெறப்புனையுமன்னார்வடிவமுமனமுமொன்றே. (உஎ)

கைமுதலென்றுமுள்ளதைப்பணங்கைக்கொண்டந்தோ
செய்தொழில்பெருக்கியென்மேற்றிரவியம்வலிந்துசேர
வையகந்தனிலெஞ்ஞான்றும்மாதனம்பெற்றுவாழுந்
தையலாரிவர்களாற்றும்விரகையார்சாற்றலாவார். (உஅ)

வேளாளர்வீதி.

முடிபுனைந்தறஞ்சொனீதிமுறையரசியற்றுமீனக்
கொடியவன்றவிப்புரமற்குறைவிலைப்பஞ்சநீங்கப்
படியுமொன்பதுபத்தாறுகீர்த்தியும்படைத்துநல்லு
குடியொழுக்கியல்வேளாளர்குலமனைகூறுகிற்பாம். (உகூ)

வறுமையேபெரிதாயுற்றமாந்தர்களெவரென்றாலுஞ்
சிறுமைதீர்த்துளக்கணின்பஞ்சேரவானுக்கநல்கி
வெறுமைகொள்ளாதுநாளுமளிப்பர்கள்வினைதீர்ந்தப்பான்
மறுமையிற்பெறும்பேறெல்லாமிம்மையேமருவவல்லார். (௩0)

காலத்தைநோக்கிச்செய்யுமிடங்கண்டுகருமந்தேர்ந்து
மேல்வருவிநயந்தூக்கிச்சமனுரைவிளம்பியார்க்கும்
பாலுறுபிரைபோற்கொள்ளப்பரிவுகூர்ந்தன்புகாட்டி
ஞாலமன்னவர்க்குக்கண்போலமைச்சியனடாத்தவல்லார். (௩௧)

மானமுங்குலமுங்கல்விவண்மையுமறிவுமிக்க
தானமுந்தவமுநட்புந்தகையுமாண்பொழுக்குநீங்கா
ஞானமுங்கொடையும்பெற்றநல்லவரிவர்க்கேநாளும்
வானமும்புவியுமேனையுலகமுமகிழ்வுகூறும். (௩௨)

வணிகர்வீதி.

பாற்கரன்குலத்திலாத்திப்பணிமலர்த்தொடையல்வேய்ந்த
வேற்காத்தரவிநாடன்விரும்பியவொருபெண்கேட்க
நாற்கழன்முடுவறன்னைநடுவகம்பிணித்துப்போந்த
மேற்குலவணிகர்தங்கண்மிளிர்மனைவீதிவிள்வாம். (௩௩)

நினைவதுங்கனகங்கையானிறுப்பதுங்கனகமெய்யிற்
புனைவதுங்கனகம்வார்த்தைபுகல்வதுங்கனகமென்றாற்
பினையிவர்க்குரிமையாயபரிகலம்பிடகமஞ்சம்
மனைமுதற்பிறவும்வேறாய்ப்புகல்வரோமதியான்மிக்கோர். (௩௪)

நிறைபுரிதவத்தான்மிக்கநீணகர்வணிகமாக்கள்
குறைபுரியாதுமென்மேலூதியமிதப்பக்கொண்டாங்
கிறைபுரியளவும்வாளாவிரையமேயில்லாதீட்டு
முறைபுரிகுணத்தாலன்றேமுருகனுஞ்செட்டியானான். (௩௫)

பச்சிளங்கமுகேயன்னமரகதப்பைங்காலூட்டி
வச்சிரப்பலகைபூட்டிமணிவளைப்பொற்றாம்பிட்டுக்
கைச்சிறாரோடேந்தத்தங்கணவருந்தாமுமாக
மெச்சிதம்பெறவெஞ்ஞான்றுமாடுவார்மிளிர்பொன்னூசல். (௩௬)

மணிதுகிர்கனகமுத்துமரகதம்வயிரமேனைக்
கணிபடாக்குவைசெங்காந்தட்கரம்பொருமுற்றில்வாரித்
திணிபடவிகலிக்கூத்திட்டார்த்துவாய்சிரித்தங்கன்று
ரணிமனைமுன்றிறோறுஞ்சிறுமியர்கொழிப்பாம்மா. (௩௭)

இறையுவர்வீதி.

வேறு.

பயிர்தழைக்கவிட்டாற்றியவேல்போர்படர்ந்த
செயிர்விலக்கியிவ்வுலகெலாமநுமுறைதிகழ
வுயிரனைத்துந்தம்முயிரெனப்பாதுகாத்தோம்பும்
வயிரவாட்படைமன்னவரிருக்கையைவகுப்பாம். (௩௮)

கூனரும்பியபுரிமணியிப்பியிற்கோத்த
கானரும்பியமணிமுதற்குவியலாற்கலைதேர்
ஞானமாதவனருந்துநீர்க்கடலையுளிர்தண்
மீனரும்பியவானையும்போன்றனவீதி. (௩௯)

மூரிவான்றிரைக்கடலினையொருங்குறமுடுக்கு
மாருதத்தினுஞ்சுழற்சிகொள்வாசிமந்துரைவில்
லாரமிட்டபொற்றேர்நிரையருவிதாழ்வரைபோல்
வீரமிட்டுயர்மதம்பொழிவாரணம்விளங்கும். (௪0)

கைக்கவண்சிலைநாஞ்சின்முத்தலையயில்கழுமுட்
சக்கரம்பிடிதோமரம்வேன்மழுத்தண்டு
மிக்கநாந்தகம்பலகையோடாரமர்வீறு
தொக்கவிந்தைவாழ்சாலையும்பற்பலதுலங்கும். (௪௧)

கச்சிறுக்கிவிற்கழல்பிணித்தொருகையிற்கதிர்வாண்
மெச்சிதம்பெறப்பலகைகொண்டமரும்வியப்பப்
பச்சிரத்தம்வந்தொழுகிடவருஞ்சமர்பயில்வா
ளிச்சைமீக்கொடுதிருத்தியசாலையெண்ணில்வால். (௪௨)

வேறு.

கனத்தெழுமுலைமின்னார்தங்கலவியிற்கயற்கண்வேலான்
மனத்திடைச்செலுத்தத்தைத்தபுண்ணலான்மறுபுண்ணில்லா
ரினத்தொடுபோர்த்தங்கார்ப்பவாளொடுபலகையேந்திச்
சினத்துறுமிடியிற்றாக்கிச்செருப்பயில்காட்சித்தெங்கும். (௪௩)

காலறுப்புண்டுகண்போய்க்கதிர்மணிச்சிறையோடுற்ற
மேலறுப்புண்டபோதும்வீரத்தின்விழுமந்தோன்ற
வோலமிட்டொளிர்செஞ்சூட்டுவாரணமொன்றோடொன்று
பாலர்விட்டதட்டுமோதைபடுப்பனபரவையோதை. (௪௪)

கயிரவமுறழ்பொன்வாயார்கண்வலைவீச்சுக்குள்ளாய்ச்
செயிருற்றெழுந்தசீற்றச்சிறுவர்கடிருகிமென்மே
லுயிரளவினும்பின்வாங்காக்காடைகளொன்றோடொன்றூங்
கயிருற்றுருத்துமோதியாடமராடல்காண்பார். (௪௫)

மின்னெனுமருங்குற்செவ்வாய்ச்சிறுமியர்விரிநீர்க்கங்கைக
வின்மணியிழைத்தசிற்றிலழித்திடவெகுண்டுகண்ணீர்
நன்னிலஞ்சேறுசெய்யநடத்துதேரதனின்மாழ்கிப்
பொன்னுருள்புதையச்செல்வச்சிறார்நகைபுரிந்துபோவார். (௪௬)

வேறு.

பவளஞ்செம்மணிமரகதங்கொழுஞ்சுடர்படிகந்
தவளநித்திலச்சுமையொடுதமனியத்தாம
மிவளவென்றளவிடற்கரிதாண்மனையெங்குந்
துவளிடைத்தனிச்சிலதியர்துடைத்திடுங்குப்பை. (௪௭)

வார்திரைக்கடலெனமலிந்ததானையான்
காரெனமுரசொலிகறங்குமுன்றிலான்
மாருதம்பின்னிடவாவும்வாசியான்
பார்மதயானையான்பசும்பொற்றேரினான். (௯)

கங்கையந்துறையினான்கனகக்குன்றினான்
மங்குலார்தருவெனவயங்குவில்லினான்
சிங்ககேதனத்தினான்றிகிரியொன்றினா
னங்கசன்போலழகமைந்தபொற்பினான். (௧௦)

இமைத்தலுமுகிழ்த்தலுமிழந்தவானவர்
தமைத்துணையுறுபுரந்தரனுந்தாழவே
யமைத்தநல்லவைச்சரைம்பதின்மராய்ந்துமேற்
சமைத்தநற்கருமமேசமையுந்தன்மையான். (௧௧)

வேறு.

நிலஞ்செய்நீதிநிரம்பியமன்னர்கள்
வலஞ்செய்தேத்தியமாமுடிசூடினோன்
குலஞ்செய்நன்மையெலாமுருக்கொண்டென
நலஞ்செய்தாலபுரந்தரநாயகன். (௧௨)

வேறு.

ஆயவனரசியற்கமைச்சராகிய
தூயவைம்பதின்மரிற்சுமந்திராகரன்
சேயபல்கேள்வியிற்றேருந்தேர்ச்சியின்
மேயவிந்திரற்கொருவியாழன்மானுமே. (௧௩)

நீதியில்வருபொருணினையும்வன்மையி
லோதுநற்கலையினிலுயருமாண்பினின்
மேதகுசிறப்பினில்வினவுகேள்வியிற்
றீதிலாவிவற்குநேரெவரைச்செப்புகேன். (௧௪)

அன்னவனோடிருந்தவனியெங்கணு
மன்னுசெங்கோன்முறைவழுவொன்றின்றியே
யுன்னுசக்கரஞ்செலவுருட்டிவாழுநாட்
டன்னிலைபுரக்கவோர்தநயனின்மையால். (௧௫)

வருத்தமுமானமும்மலிந்துநெஞ்சினி
லுருத்தலிலறமெலிந்துயிருந்தேய்ந்துதன்
கருத்தயர்ந்தரசனுங்கலந்துபேரவை
யிருத்தியவமைச்சரோடியம்பன்மேயினான். (௧௬)

உங்களைப்புகல்புகுந் துறுகணின் றியே
யெங்கணும் புகழ்க்கொடியேற்றினோடொரு
பங்கண்மாநிலமுழுதளிக்குமாற்றலோ
டிங்கிருந்தேற்கொருகுறைவுமில்லையால். (கஎ)

புண்ணியமம்மையிற்புரிந்திலாதவென்
னெண்ணருந்தீமையாலிப்பிறப்பினி
னண்ணியபயக்குறைநலியநைந்துறு
புண்ணினல்வருந்தினேன்புகறற்கொல்குவேன். (கஅ)

தவ்வுவெண்டிரைக்கடற்றரணிதாங்கினா
னிவ்வரசியற்றினேனெனக்குப்பின்னுறுஞ்
செவ்வியநலந்தருசிறுவனில்லதோர்
வெவ்வழல்சுடவுளமெலிந்துசாம்பினேன். (க௯)

வேறு.

கொம்மைமாமுலையவரினும்மெய்யுளங்குளிர
வெம்மைநீக்குநின்சொற்சிறார்விளைவுறுகேண்மை
இம்மையிற்றரும்பயனளித்தீன்றவர்தங்கட்
கம்மையிற்றருமபயனுக்குமொருமுதலாவார். (உ0)

துறந்தவர்க்குந் துறவாதவர்தமக்குந்தொல்புவிமே
லிறந்தவர்க்குநற்றுணையெனவில்லறத்திருப்பா
ரறந்தனக்குறுகளைகணாயவனியிலொருசேய்
பிறந்திடாவெனின்மேலதுகொண்டுயர்நலம்பெறுவார். (உக)

மனையறம்புரிந்தாக்கமுங்கல்வியும்வலியு
மனையசெய்கையுமோங்குமேல்விழுமமெய்திடினு
நினையுங்காலவர்க்கார்கலிநெடுநிலவரைப்பிற்
றநயரில்லையேலில்லையாம்வீடுமெய்த்தவமும். (உஉ)

பகைகடிந்துநல்லறம்புரிந்தாக்கமும்பயனு
மிகவிளைவுறுமிந்திரனெனவுவகைவிம்முவராற்
றகவிழந்துதாழ்குலத்துளாரெனினுந்தமக்கோர்
மகவுவந்துறிலதனறமெவ்வழிவாய்க்கும். (உங)

ஏதமென்பனவிலங்கியேதற்பயந்தெடுத்தார்க்
காதரம்புரிதநயருக்காசையில்லாதோர்
பூதலந்தனிலெனையொழித்தெவர்களைப்புகல்வேன்
பாதகத்துளநானினிப்படைப்பதெப்பயனே. (உச)

தினைக்கணைப்பொழுதாயினுஞ்சிறுவர்களின்றி
மனைக்கட்பேயெனவாழ்தலினன்னன்சுகமலியு
நினைக்குங்காலதுநெய்விடுநெருப்பெனநெஞ்சின்
முனைக்கொழுந்துபட்டாவியையறுத்தினைமுருக்கும். (உரு)

தாலபுரந்தரனமைச்சனோடுமைந்தர் தமைக்குறித்தூண்டுயில்விலங்கித் தயாங்கமான, கோலமணிந்தருந்தவமேற்கொண்டுநின்றவ்வாள்வைசநினைப்பரியபெருங்கொடுமையன்னோர், பாலனாகியுவந்தவரங்கொடுத்துநாமிப்பால்வருவோமெனப்பரமன்பகரக்கேட்ட, சீலமரகதமயிலினழகுவாய்ந்த தேவியிறைபதம்பரவிச்செப்புவாளால். (௯)

பேரரசுவாய்ந்தறங்கண்மலிந்தெஞ்ஞான்றும் பெருந்தகைசாலிவர்தமக்கோர்பிள்ளையில்லாக், காரணமென்னுசவலர்பின்றவங்களேற்கிற்கான்முளைவந்துற்பவிக்குங்கருமமென்கொ, வீரவலம்புனைசடையாய்புகலுகென்றத்திமலைத்திருமுகநோக்கிமலைமாபாய்ச், சீரணிபுன்முறுவலிளநிலவுதோன்றச்செழுங்கனிவாய்மலர்ந்திதனைச்செப்புவானால். (௧௦)

புண்ணியங்க ளொன்றொன்றினளவதாகப் போசங்களொன்றொன்றுபொருந்தாநிற்கு, நண்ணியபுண்ணியங்களில்லாதவர்கட்கெந்த நாளினுந்தீவினைநரகநல்காநிற்கு; மெண்ணரியவவ்விரண்டுஞ்செய்தபேர்கட் கின்பதுன்பஞ்சமனடையாயியைவதாகும், பண்ணுமிவர்புண்ணியத்தாலாக்கம்பெற்றும் பாவமதாற்சோகநிலைபற்றினரால். (௧௧)

கன்மத்தைநீக்குதற்குநினைத்தவின்பங்கைக்கொண்டுவாழ்வதற்குங்கடந்துநின்ற, சென்மத்தின்புண்ணியமீதன்றியிப்பாற்செய்ததவமிரண்டொழிக்கிற்றிருவொன்றில்லை, வன்மத்தையிழந்திவர்கடவமேற்கொண்டார்மாதேநாமிவர்க்கருடன்மார்க்கமென்றே, நன்மத்தயானையுரிபோர்த்தமுக்கணுதனுமங்கெழுந்துதவநயந்தானம்மா. (௧௨)

திருப்பவளச்சடைவிரிந்தங்கையைச்சூடுஞ்சிறுமதியும்பெருநதியுந்தெளிந்துதுள்ள, நெருப்பிரவிசசியுறவுமலியுமுக்கண் ணிறைவிளக்கமாகசம்போனிறைந்தபச்சைப்பொருப்புமுலைக்குமரியொருபாகந்தோன்றப்பொலிநகைவெண்ணிலவெறிப்பப்பூதியோங்கி, யுருப்பவளவும்படிந்துவெண்மைகாட்டவுடைபுனைந்தகரியுரியுமொளிகுலாவ. (௧௩)

செங்கைமழுமானிலங்கப்புலியும்பாம்புந்திகழ்ந்திருபாதங்குலவச்செப்பவொண்ணாச், சங்குகண்ணன்மாகாளனாதிபூதத்தலைவரெலாம்புடைதழுவத்தநயரான, வைங்கரனேராறுமுகனிருபக்கத்திலமர்ந்திடவெள்ளேறுகைத்திவ்வண்டமெல்லாந், தங்கவிளையாடுபரஞ்சோதியன்னார்தவம்பயிலும்வடவரையின்சாரல்சார. (௧௪)

அங்குவருமளவிலிறையமைச்சன்றங்களாற்கருதித்தவம்பயின்றவழகன்றன்னைப், பங்கமுறாதெதிர்நோக்கியுள்ளத்தேதாயாப்பரவசமுற்றுருகுந்தபார்ப்பவெள்ள, மெங்கணுநின்றலையெறியவுடல்பூரிப்பவெழுந்தெதிர்சென்றனமேனபின்னுங்காணாச், செங்கமலத்திருவடிதஞ்சிரமேற்சூடித்தீவினைதீர்ந்தஞ்சலித்தாரியக்கந்த்ர. (௧௫)

பாடினாரழுதழுதுபின்னுங்கண்ணீர் பசுங்கொண்டலெனப்பொழியப்பார்மேற்றுள்ளி, யாடினார்பாற்கடற்றெள்ளமுதுண்டார்போலகத்தடங்காக்களிமயக்கமாகிச்சோகங், கூடினார்தமைமறந்தார்வெயிர்த்தார்பேசக்கூசினார்பலபிணியாற்குறைந்துளாவி, வீடினார்மீண்டுயிர்பெற்றெழுந்தவாபோல்விளம்பரியபேருவகைவிம்மினரால். (௧௬)

வேறு.

நாலுமாமறையாலுநான்முகனாலுமாலவனாலுமே
காலகாலகபாலமேந்தியசோதிநின்கழல்காணவே
ஞாலமேலயர்வாகினார்சிறுநாயினுங்கடையானதோர்
சீலநீங்கியசிந்தையேமறிதற்கென்மாதவஞ்செய்துமோ. (கஎ)

அப்புமாமதிசூடுசெஞ்சடையாடவேவிடைமீதினிற்
செப்புமாமலைமாதினோடிருபாலநம்புடைசூழவே
வொப்பிலாதுவந்தெங்கடீவினையோடநல்லருளுந்தினாய்
தப்பிலாதநலப்பனேயுனையென்புகழ்ந்துரைசாற்றுவோம். (கஅ)

பூவும்வெறியுமென்னுமெண்ணெயும்போலவேபுவனங்களின்
மேவுபல்லுயிர்யாவுமேயெனவேதவாய்திறந்தோதிய
தேவதேவநின்பாதமாமலர்கண்டுகண்டெரிசிக்கவே
யேவரேதவமாகினாரெளியோங்களைத்தவிர்த்திங்ஙனே. (ககூ)

பாலனாருயிர்பற்றவேபகடேறியேசினம்பற்றிய
காலனாருயிர்காலவேயுதைகாலினாயுனைக்கைதொழுஞ்
சீலமேயுணராதபாதகத்தீயரேம்வினைசிந்தவே
சூலபாணியுன்கோலமிங்ஙனம்நாங்கள்காண்குறுந்தோற்றமோ. (உ0)

வாதியாதுயர்வாகியேமறைவாடிநின்றினந்தேடியே
சோதியாதுளநீதியேபராஞ்சோதியேதுணர்ந்தவெண்
பூதியேயணிந்தோதொணாதெழிற்பூவையாளுமைமாதொரு
பாதியாகியநாதனேயுனையேதுகொண்டிசைபாடுவோம். (உக)

வேறு.

இன்னவாபுகன்றேத்தியவிவர்கண்மேற்கருணை
மன்னிநீண்டகட்கடையருள்வழங்கிவெண்மதியம்
பின்னுசெஞ்சடைக்கடவுணுங்கள்போற்பெரிதா
யின்னிலத்தின்மாதவஞ்செய்தாரொருவருமிலையால். (உஉ)

பொறிபுலன்கெடுத்தாணவமலவலிபோக்கி
நெறியின்மேவிநின்றருந்தவம்புரிந்தநீர்நெஞ்சிற்
குறிபுகுத்தியகருமமென்கூறுமென்றுரைக்க
வறிவினோர்மனத்தாகுலம்விடுத்திஃதறைவார். (உங)

கங்கைசூடியகடவுளேகௌவையார்கலிசூ
ழிங்கண்மாநிலமளிப்பதற்காகியமதலை
யெங்களுக்கிதுவரையிலையத்துயரிரிப்ப
விங்குமாதவம்புரிந்தனமென்பணிந்திரந்தார். (உச)

நாட்டமூன்றுடைநாயகனீவிருணயந்து
கோட்டநல்வரமுதவினேமுங்கள்பாற்கிடைக்குங்
கோட்டமின்றியகுறவிகள்குவலையந்தன்னில்
வீட்டினன்னென்றிக்கேதுவாம்புகழறம்விளக்கும். (௨௫)

போமினென்றருள்புனைந்தான்கைலைபுக்கினபின்
நேமிமன்னனுமமைச்சனுநெடுந்தவம்விடுத்துப்
பூமியெங்கணுமிவர்களையன்றியிப்பூமேற்
சாமியில்லையென்றுரைத்திடத்தம்பதிசார்ந்தார். (௨௬)

தாலபுரந்தான் தவசுப்படலம்

முற்றிற்று.

ஆகப்படலம் ௪க்கு திருவிருத்தம்-௪௭௨.

மகாருற்பத்திப்படலம்.

வாதவூரடிகளடிகளாலுள்ளம்வருந்துறுபொழுதுவெம்பரிக்கு
நாதனுய்மதுரைச்செழியனுக்குதவிநலந்தருஞ்சொக்கநாயகனை
மூதனையனையபொன்னனையாட்குமுழுவதும்பொன்றருமிரச
வாதமுன்புரிந்தகைலைவாழ்பவனைவணங்குவையெனதுபுன்மனனே. ()

வேறு.

மனைபுகுந்துதம்மனைவியற்குவகைவாய்ந்தோங்கப்
புனையுமாதவம்புரிந்ததும்புராந்தகனுற்று
நனைவினைத்தெரிந்துதவியதன்மையுநிகழ்த்தி
யெனையவேந்தருமடிதொழுவாசவீற்றிருந்தார். (௨.)

இறைவன்மீறவியிந்திரையாமந்திரிமனையென்னும்
பிறைமுகத்திருமங்கையும்பிரியமுற்றவர்தங்
குறைகடத்தியகொழுநர்மாதவ குறித்து
நிறையுமன்பினிருந்தனர்நாட்செலநீங்க. (௩)

வேறு.

அன்னபோதயனுரருளாற்றிருக்
கன்னியும்மன்களிக்கப்பின்மந்திரி
பன்னியும்மொருநாட்கொடுபோர்புகழ்
துன்னியோங்கக்கருப்பந்துலங்கினார். (௪)

இல்லையுண்டென்றிசைத்தவைத்திறச்
சொல்லையுண்டுதுவண்டமென்சிற்றிடை
யல்லனீங்கிவிரிந்தசழகார்ந்திட
வல்லியர்க்குக்கருப்பம்வளர்ந்தவால். (௫)

மகாருற்பத்திப்படலம்

செய்யவாய்வெளுப்பேறத்திருமுகந்
துய்யவெண்மதிபோன்றுதுலங்கப்பொன்
மெய்பசந்துமுலைநுனிமென்கறுப்
பெய்தநீண்மயக்கான்மனமெய்த்தனர். (௬)

சாம்பலும்புளியுந்தின்னத்தம்மனத்
தேம்பலுற்றதோராசையெழுந்திட
வீம்புசெய்தனர்தின்னவிருப்பிலாச்
சோம்பறின்னத்துவண்டுவருந்துவார். (௭)

திங்கடிங்களிற்செய்யுஞ்சடங்கெலாந்
தங்கியின்பந்தழைத்தமனத்தினார்
பொங்குதிங்களோர்பத்தும்பொருந்திமே
லங்கஞ்சூலுளைவாற்றளர்வாகினார். (௮)

நல்லநாளினினற்கிரகங்களு
மொல்லைசேர்ந்துவந்துச்சமபெற்றோங்கிட
வல்லதீர்ந்துலகெங்குமறந்தரச்
செல்வமாமகருங்களுதித்தவே. (௯)

பானுந்திங்களும்பாய்திரைவாருதி
தான்மிதந்துதிகழ்ந்தொளிர்தன்மைபோன்
மீனுமானும்வெருண்டவிழிக்கடை
மானுமங்கையர்மைந்தரைவாய்த்தனர். (௧௦)

சூலயேந்தியசோதிதிருவருட்
பாலர்வந்துபிறத்தலும்பாரெலாஞ்
சீலமோங்கத்திருவுந்திருவுறக்
கோலமன்னமைச்சுங்குளிர்ப்பெய்தினார். (௧௧)

வயங்கலிக்கச்சொல்வண்மைகலிக்கப்பொற்
பயங்கலிக்கப்பயோதரம்போர்த்தபல்
வியங்கலிக்கத்துன்பின்றியெழுந்தசீர்
நயங்கலிக்கக்கலித்தநந்நாடெலாம். (௧௨)

சங்குகைத்துடிதாரைதவின்முரா
செங்குமஞ்சுமெல்லணைவதிர்ந்தேங்கிடத்
துங்கவேதியராசிகள்சொற்றிடக்
கங்குவெண்கவரித்தொகைகாறர. (௧௩)

சீதவாண்மதிபோன்மதிசூழ்ந்தொளிர்
சோதிவெண்குடைபொன்முடிசூழ்வர
மாத பாட்டொலியாழொலியாதிர
மீதுமண்டப்பலாண்டிசைவிம்மவே. (௧௪)

வனைவேந்தருமாந்தரு நின்சொல்பொன்
மானைவென்றவரிவிழியாதருங்
கோனையங்கைகுவித்தனெருங்கிடத்
தானையாக்கடற்றூரணிபோற்பமே.

(கரு)

நூலுணர்ந்துநவன்றுதஞ்செய்வினைக்
காலமோர்ந்துகருமங்கள்கைசெய்தொளும்
பாலின்வாலியவுள்ளப் படைத்ததோர்
சீலமாந்தபழையவர்நேரவே. (கசு)

வேந்தருக்குறுதன்மையுமேதினி
மாந்தருக்குறுவண்மையுந்தயமதிச்
சாந்தமுடைமையத்திட்டுச்சமனிலை
யேந்துகோலினமைச்சருமெய்தவே. (கஎ)

கொங்குதாரணிகோக்களிறேறென
வங்கைவெண்ணியன்னனவாவெய்து
சங்குபொன்மணிநூற்றுசடந்திரைக்
சங்கைமாதிலூழ்கிக்களிப்புற. (கஅ)

தோடுமென்குழைத்தூயிளமாதருஞ்
சோடுவாய்ந்ததுணைநலமைந்தருங்
கோடுமால்கரகூடுபிடியொடு
மாடுகின்றதுபோற்புனலாடினர். (ககூ)

வெள்ளநீர்நிருத்தேமறுவெள்ளநீர்ப்
பள்ளமீதுபுகுந்துபடிதல்போல்
கொள்ளைமாப்படையாவுங்குழுமியே
புள்ளலம்புபுனல்குடைந்தேறின. (உ0)

வேதமோதுசங்கற்பவிதிப்படி
நீதமென்புலவாடியதேர்வலான்
பூதிபள்ளிப்புனைந்தைந்தெழுத்தினை
யோதியீசனகழலுவந்தேத்தியே. (உக)

பேனவேலைப்பெரும்பொருள்வாங்கிமெய்த்
தானமென்பனயாவுந்தனித்தனி
மானநான்மறைமாக்கடமர்க்கெலா
யானவாசைபின்னுகமுன்னுக்கினன். (உஉ)

இந்துலாவுமெழின்பணிமாளிகை
வந்துபொன்னரியாதனமம்மைவகியே
தந்திரித்தலைவோர்க்குந்தனதுழை
மந்திரித்தலைவோர்க்குமவழுத்துவான். (உங)

அந்தணாளர்க்குமாதரமீக்கொடு
வந்தவந்தவறிஞர்க்கும்வாணர்க்கு
மிந்தநாட்டொடுத்தேழ்தினம்பொன்னறை
சொந்தமென்றுமுரசந்துவைமினே. (உச)

சாருமெழுவருடந்தனிலுள
வாரமில்லைவரியில்லையென்றுசொ
லூருநாடுமுலகுமுணர்ந்திடப்
பாரமாமுரசெற்றப்பணிமினே. (உரு)

இட்டகாற்றளைவெட்டியிருஞ்சிறை
கட்டவேந்தரைநாட்டுக்கனுப்புமி
னெட்டிரண்டெனவாண்டுக்கிறைவர்கள்
கட்டுபொற்றிறைநீக்குதல்காணுமின். (உசா)

ஆலையம்புதிதாக்கியதற்குள
வேலைபூசைவிதிமுறையாற்றுமின்
சாலையந்தப்படிசமைத்தின்புறுஞ்
சோலைகோடிதுலங்கிடச்செய்யுமின். (உஎ)

தீபமென்னத்திகழுநந்தாவன
நீபநீடுகாவூடுநிரப்புமின்
ரூபமாகியமாந்தர்தளிர்ப்புறக்
கூபம்வாவிகுளம்பலகூட்டுமின். (உஅ)

இன்னமாநகரத்துமிதன்புறந்
துன்னுமூரும்விழவுதுலங்கிடப்
பன்னுமென்னப்பணித்ததற்கெண்மடங்
கன்னகாலையிற்செய்தமைத்தாரரோ. (உகூ)

சீரிணங்குசிகழிகைசேர்த்துமேற்
றோரணங்கடொருத்தலைதூக்குவார்
பாரிணங்குபொன்மாடப்பரப்பெலாங்
காரிணங்கெழிற்கேதனங்கட்டுவார். (௩0)

தூயவெண்முளைப்பாலிகைதாமதி
யெய்திறலெனவெங்குநிரப்புவார்
செய்யபூரணகும்பங்கள்சேர்த்துமேல்
வெய்யவன்கதிர்போல்விளக்கேற்றுவார் (௩க)

சாந்தமென்பனிதந்தனங்குங்குமஞ்
சேந்தபொன்னகரத்தெருவெங்கணு
மாந்தருக்குமடந்தையர்மாந்தராப்
பூந்தண்வார்குழலார்க்கெதிர்பூசுவார். (௩உ)

நஞ்சினஞ்சுநனிகலந்தாலெனச்
செஞ்செவேல்விழிக்கஞ்சனந்தீட்டியே
மிஞ்சுபொன்னணிமெய்புனைந்தெங்கணு
மஞ்சுநோக்குமயிலெனச்செல்லுவார். (௩௩)

முத்தும்பொன்னுமுழுநிதிக்குப்பையுங்
கைத்தலங்களிலள்ளிக்கணக்கிலாச்
சுத்தவீரருந்தூயநன்மாதரு
மத்தன்பூசையோடாதுலர்ச்சிவரால். (௩௪)

பாலுநெய்யும்பருப்புங்கலந்தமென்
சீலம்வாய்ந்திடுஞ்சோறதிரட்டியே
கோலமாநகர்க்கோக்களுமாக்களும்
நாலுபாலினுநல்விருந்தூட்டுவார். (௩௫)

கொந்துமென்குழற்கோதையர்கைகளாற்
பந்தும்பொற்கழங்காடல்பயின்றிடச்
சந்தனும்மலர்க்காமனுநாணுரு
மைந்தரெங்கணும்வாளமராடுவார். (௩௬)

உரிமையுன்னியுவந்துவந்தின்புறு
மரசர்கோடியநீகமதம்பொழி
கரியுகைத்துக்கதிர்மணித்தேர்நிரை
பரிசெலுத்திப்பவனியுலாவுவார். (௩௭)

இன்னணங்களித்தீரெட்டுநாள்வரைச்
சொன்னதானஞ்சுரபியின்றனமோ
டன்னதானங்களாற்றிநகரெலா.
முன்னியுன்னிக்குதுகலமோங்கவே. (௩௮)

கற்றறிந்தகணிதர்கணூன்முறை
யுற்றநாடிதியோகங்கரணங்கள்
சொற்றசாதகசன்மந்துலக்கியே
கொற்றவற்களித்தாரக்குரிசிலும். (௩௯)

வாங்கிநோக்கிமலைநிகர்பொற்புயம்
வீங்கத்தூங்குமகிழ்ச்சிமிகுத்திட
வாங்குநின்றகணிதர்க்கருங்கலி
நீங்கப்பொன்மணிதூசுநிரப்பியே. (௪௦)

மந்தமாவயமாப்பரிபொற்குடை
சுந்தரப்பொற்கவரிசுருட்டிபொன்
றந்ததந்தச்சிவிகைதனிப்புவி
நந்திடாதவர்க்கின்புறநல்கினன். (௪௧)

ஈரவெண்கதிரிந்துவைக்கண்டுகண்
டாரவாரஞ்செய்யாழியின்வேந்தனுஞ்
சீரமைச்சனுஞ்சிந்தையினுகுலந்
தீரவேகளிதேங்கச்சிறந்தனர். (௪௨)

வேறு.

சூதமுனிக்குந்தமிழ்முனிக்குந்துகடீரேனை முனிவரர்க்கும்
போதமிகுத்தபெருந்தகைமைப்புணரிபோலும்புகல்பலநூ
லோதியிதயாம்பரந்தெளிவுற்றுயர்மாதவஞ்செய்பிருகுமுனி
பாதம்பரவித்திருநாமம்பகரப்பணித்தான்பார்வேந்தன். (௪௩)

தங்கள்குருவாம்பிருகுமுனிதனயற்குரியகுறியிடங்க
ளங்குநோக்கியானருளாலுதித்தவரசன்றிருமதலைக்
கிங்குபுவனேந்திரனெனப்பேரியம்பியமைச்சனிளஞ்சேய்க்குச்
சங்கையணுகாப்புத்திசிகாமணியென்றுரைக்கப்பெயர்சமைத்தான்.

மறைதேர்முனிவன்றிருத்தாளின்மகவைக்கிடத்தித்தான்பணிந்து
குறைபோயகலவரன்முறையாற்குருவுக்குரியகடனியற்றிச்
சிறைவண்டினங்கள்கிடந்தொலிசெய்தெரியன்மவுலித்தேர்வேந்த
னிறையுமறவாதன்பியற்றிவளர்க்குந்தாயரிடத்தீந்தான். (௪௫)

பாலர்க்குரியசெவிலியர்கள்பகர்தற்கரியதங்கள்கனைக்
காலிற்கிடத்திநீராட்டித்துவட்டிநிலக்காப்பெடுத்தணிந்து
கோலவயினிநீர்சுழற்றித்தெய்வங்குறித்துக்கும்பிட்டுச்
சீலங்குலவக்குழமைபலசேர்த்துப்புகட்டிப்பாலூட்டி. (௪௬)

முத்துமணியும்புடைகுயின்றுமுழுவெண்வயிரந்துவர்ப்பவளம்
பத்திநிறைத்துமரகதக்கால்பாய்ச்சிப்பசும்பொற்றும்பிசைத்து
மெத்தைவிரித்தோதிமத்தூவிவிரவிநறுமென்மலர்பொதுளி
வைத்தபசும்பொனணியூசல்மைந்தர்துயிலக்கண்வளர்த்தி. (௪௭)

பொன்னேமணியேமரகதமேபூவினரும்பேபசுங்கரும்பே
மன்னேயிறைவர்கண்மணியேவானிற்குலவுமதிக்கொழுந்தே
பின்னேகடையாப்பாற்கடலில்விளைந்தவமுதேசுடர்விளக்கே
யென்னேயெனச்சீராட்டியபண்ணிசையோடிறங்கத்தாலாட்டி. (௪௮)

ஏற்றம்பிறிதொன்றறநின்றுதவத்தோர்தவத்தையேற்றுநூல்போன்
மாற்றமறியாநன்மகளிர்கற்பைமலியவளர்ப்பதுபோற்
போற்றிவளர்க்கக்கலைபெருகிப்பொலியுவானின்முழுமதிபோற்
றோற்றம்பிறங்கியழகிலங்கச்சுதர்கள்வளர்ந்தார்சுகமாக. (௪௯)

தண்டைகலிப்பச்சிறுசதங்கைதாளிற்புனைந்துதனிப்பவளத்
துண்டினிடைவெண்மதிநிலவுகூட்டியமைத்தவாறதுபோன்
மண்டுவயிரக்கனையாழிமலர்மென்கரத்தின்விரன்மாட்டி
யண்டத்திருணீக்கியகதிர்போலணிபொன்மணிப்பூண்பலவணிந்து.

சவளநிரப்பியமுதருந்துஞ்சடங்குபுரிந்துமற்றெவையுங்
கவளக்களிற்றினரசர்பிரான்காலந்தெரிந்துகனிந்துதவத்
தவளநகைவெண்ணிளமூரற்றநயர்வளர்ந்தார்வயதைந்திற்
றுவளமார்பிலுபநயனவ்துவைசூட்டித்துயர்தீர்ந்தார். (௫௧)

காவுசாந்துபுலன்கடிந்துகாலங்கடந்துமேலுணர்ந்த
குரவன்பிருகுமுனிவனிருகுளிர்தாமரைப்பொன்னடிபாவி
யரசர்பெருமான்றிருப்புதல்வர்க்ககந்தூயுறுஞ்சீர்கலையனைத்தும்
விரவியளிக்கும்படிக்குரியகடன்களாற்றிவிடுத்தனனால். (௫௨)

தனதுமைந்தர்குருமைந்தர்தரணிக்கிறைவர்சருமைந்தர்
மனதுக்கினியதிருமைந்தர்வறுமையகற்றும்பொருண்மைந்தர்
வினவற்குரியாரவர்தமக்கேவிளம்பற்குரிமையெனப்பன்னூன்
முனமிப்படிச்சொன்முழுதுணர்ந்தமுனிவனேதவோதினரால். (௫௩)

வன்சொலகற்றிவழுக்களைந்துகுருசொல்பொருளின்வழிமருவித
தென்சொல்பயின்றுவடகலையுந்தெளிந்துதேனும்பாலும்போ
லின்சொலிதுவென்றறிஞர்குழாமேமாந்துள்ளந்தடுமாறப்
புன்சொல்லறியாத்திருப்புதல்வர்பினுந்தேர்முயற்சிபொருந்தினரால்.

வேதம்பயின்றார்சாத்திரங்கள்பயின்றார்புராணவிதிவிலக்குப்
பேதம்பயின்றார்பலமதங்கள்பிதற்றும்பிணக்கின்வகையறியும்
வாதம்பயின்றார்சொற்றேற்றுவழக்குப்பயின்றார்பயனுதவுங்
காதைபயின்றார்பிறவுமுளகலைகட்கிவரோர்கடலானார். (௫௫)

அணியாமகிமாகரிமாவுமிலகிமாவும்பிராத்தியுமார்
தணியாப்பிராகாமியமும்வசித்துவமுமீசத்துவமுஞ்சால்
பிணிதீரட்டமாசித்திவகையுமதனாற்பெறும்பேறுந்
துணிவிற்பயின்றங்கவர்களநுபவத்திற்கொண்டுதுகடீர்ந்தார். (௫௬)

வில்லின்றொழிலுங்கரிபரிதேருகைக்கும்விதமும்வீரமிகு
யல்லின்முறையும்போரடர்க்குமாற்றார்மருளவலியுந்து
சொல்லின்றிறனுமற்றுமுள்ளதொழிலும்புரியுஞ்சூழ்ச்சிகளு
மெல்லையிலையென்றெவர்களுங்கண்டியம்பப்பயின்றுவெளிதாக. (௫௭)

ஏற்றந்தாழ்வுசிறிதின்றியெல்லாவினையுஞ்சயமாகப்
போற்றுங்குருவாற்றிரியையம்பொருந்தாதுணர்ந்தபுதல்வர்க்குட
சாற்றுமதிமானதிகமதாய்த்தனிவீடினவர்தாமீளத்
தோற்றம்புரியும்விஞ்சையொன்றுசற்றன்சூரியானிடர்துதிக்க. (௫௮)

கற்றகலைகட்கெண்மடங்குகயினுங்குணமுங்கருணையும்வாய்ந்
துற்றடைந்தார்தமைநோக்குந்தோறுமுவகையுளத்தூறும்
பெற்றகுரவர்சுற்றத்தார்பெற்றிபேசற்கெளிதன்றே
மற்றுப்பகைஞரொட்டாகியிவர்தங்குறிப்பின்வழிநின்றால். (௫௯)

பருவம்பனிரண்டினிற்சிறந்தபழையமதனன்பன்னிருகை
முருகனிவர்தாமெனுங்காதன்முதிர்ந்துபுவனமுழுதேத்த
வுருவங்களுலுந்திருக்குமரரொருவர்க்கொருவர்பிரியாமற்
பெருகுமன்பிற்செய்வினையிற்பிழையாநேசம்பெரிதானார். (சுய)

தாய்போலுண்மைதனைப்பேணித்தந்தைநிகர்ஞானந்தழுவி
நேயவறத்தைச்சோதரனாய்நிருவித்தயையைநீங்காத
தூயசிநேகமெனச்சாந்தஞ்சொல்லுமனையாய்ச்சுதன்மானு
மேயபொறுமையகலாமலெவர்க்குமேலாய்விளங்கினரால். (சுக)

வேறு.

இருளறவருகதிர்மதிபுரையிவர்தம்
மருளறமனவெளிமணியொளிவிரியா
வருள்வலைபடுகயலெனவுயிரணவத்
தெருளுறுவினைநனிதினமருவினரால். (சுஉ)

சிலைபயில்கரவலர்திருநகர்புறமா
ரலைபுனைதிகுளமணிபொழில்வனநீண்
மலைகடலிடநொடிவரையளவினுமோ
ருலைவிலதிவர்நிதமுலவினர்வருவார். (சுங)

பகன்முழுவதுமிவர்பழமலிபொழிலார்
மகநிறைமுனிவரர்மலரடிபரவித்
தருகதைபொருள்பலவினவுவர்தபன
னுகுவெயின்மறையடைதியினகருறுவார். (சுச)

ஒருவரினொருவர்தம்வலிநிலையுணர
மருவிமல்புரிகுவர்வரிசிலைகுனித்
தெரிகணைகொழுவிமுனெதிர்குறிபிழையாக்
கரவிரலுதவுவர்மருவலர்கவல. (சுரு)

கந்துகநடவுவர்கவுண்மதநிரைசா
றந்திகணிரைநிரையுந்துவர்தரளப்
பந்துகள்பயிலுவர்படைமதனெனவே
விந்தைகொள்புயவலிவிளைதரவளர்வார். (சுசு)

திருநகர்புறநகரிவர்நிலைதெரிவோர்
வருமவர்புரிசெயன்மனவலியுணராப்
பொருமவரவரவர்புரிதவமகவென்
றுரிமையொடடுதினமுருகுவருமாயால். (சுஎ)

இன்னணநிகழ்வுழியிலறமகனொருநாட்
டன்னுயிரினுமிகுதகைமைகொள்புலமை
மன்னியமதிகலைமதியழகுறுசீர்
நன்னிலையவனிஃதுணர்வுறநவில்வான். (சுஅ)

உனையுடலதிலையெனதுயிருநினுயிரு
மெனையலதிலையெனுமொழியிதுசரதம்
மனதினிலொருபொருளுளதுநன்மதியோ
யினியஃதுணர்கெனவிவையிவைபுகல்வான். (௬௯)

வேறு.

நயந்தருந்தந்தையானோர்நற்றவம்புரிந்துநம்மைப்
பயந்துறுகலைகள்யாவும்பயிலுவித்தன்புசெய்ய
வயந்தரவளர்த்துபின்னுமதியினாலுணரத்தக்க
செயந்தருபொருள்கடேர்ந்துவதிந்தனந்தீதொன்றின்றி. (௭௦)

கற்றனகலைகட்கேற்பக்காசினிமீதிலுள்ள
மற்றுளநாடும்நாட்டின்வளங்களுமௌலிமன்னர்
வெற்றியுமவர்தஞ்செய்கைவிநயமும்பிறவுந்தேறி
யுற்றிவண்வருவோமாகினமக்குமேலொருவருண்டோ. (௭௧)

எத்தனைகற்றபோதுந்தன்மதியிருந்தபோது
மத்தனையளவின்மேலுமயற்புலத்தவரினல்லோர்
புத்தியுமவர்களாற்றும்புனிதமுந்தெரிதன்மேலென்
றுத்தமமறைகளாதிநூல்களுமுணர்த்திற்றன்றே. (௭௨)

சிறிதுநாட்செல்விற்செம்பொற்செழுமணிமௌலிவேய்ந்து
முறிதிரைப்பரவைஞாலமுழுவதுங்காக்குஞ்செங்கோ
லிறைமையிலிருத்துவார்பின்னிறையினுந்தவறிவேறோர்
முறைமையுநினைதற்கொவ்வாதரசியன்முயல்வதாகும். (௭௩)

ஆதலாலதுகாலத்திலாள்பரிகரிதேரின்றி
மேதகுசிவிகைவெண்சாமரங்குடைவிழப்பமின்றித்
தாதையால்விடைபெற்றந்தத்தாபணிவளங்கள்பார்க்கப்
போதலேநலமென்றென்றன்புந்தியினினைக்கின்றேனா. (௭௪)

நின்கருத்தெதனைக்குத்தந்தானிகழ்த்துவாயென்னக்கேட்டு
மன்கருத்துணர்ந்தபுத்திசிகாமணிவணங்கிமுன்னா
வென்கருத்துன்னதென்றிங்கிசைத்தநீமறந்தாய்போலும்
நன்கருத்துடையோயென்னைவினவுதனியாயமன்றே. (௭௫)

ஆக்கைவேறின்றிச்செய்கைகுணமுதலமைந்தவேனைச்
சேர்க்கையுமொன்றென்றெண்ணுஞ்செயல்பிழைத்ததற்குமாறாய்
வாக்குரைபுகறற்கந்திமட்டினான்கற்றதுண்டோ
பூக்கிளரலங்கலோயென்றதையும்புகல்வதானான். (௭௬)

கற்றறிவுடைமையில்லாக்கயவர்களெனினும்போந்து
மற்றுமோர்தேயஞ்சேரின்மதிகுணம்வனப்புவேறாய்ப்
பெற்றவனுள்ளார்போலும்பீடுவாய்ந்துறுவரென்றா
லெற்றிதின்மேற்கொண்டாக்கமளிக்குமென்றியம்புவேனால். (௭௭)

ஆர்த்தலைப்பரவைசூற்றுமவனியாத்திரைசெய்வோர்க
டீர்த்தமும்பெரியோர்பாதசேவையுஞ்செப்பவொண்ணு
மூர்த்திகளருளுங்கொண்டுமுற்றிலுநலமேயாகி
வார்த்திகந்தனிலுங்கூற்றின்வாதைதீர்ந்துய்வான்றே. (எஅ)

எல்லையிறோற்றத்துள்ளேமனிதராய்ப்பிறத்தலென்று
நல்லதிங்கதனின்மேலுநல்லதுசெல்வநண்ணல்
கல்விமற்றதனின்மேலுநல்லதுதலங்கள்காணச்
செல்வதுபோலுமில்லைநல்லதுதேருங்காலை. (எகூ)

பிணியணுகாதுமுன்செய்பெருவினைமுழுதுந்தீரு
மணியுறுஞ்சீர்த்திமேற்கொண்டளிக்குநல்லாக்கநல்குந்
தணிவில்யாத்திரைபோலொன்றிங்கிலையெனத்தரணியோர்கண்
மணியெனவிளங்கும்புத்திசிகாமணிவழுத்தலோடும். (அ0)

தன்னுளத்துவகைகூர்ந்துசாற்றுமந்திரியைநோக்கி
நின்னுளந்தெரிந்தேன்முன்னநெடுந்தவநோற்றுப்பெற்ற
மன்னுளமறிந்துநாளையேகுதல்வரம்பாமென்றான்
முன்னுளவரசர்க்கெல்லாமுதன்மைபெற்றுயருமொய்ம்பன். (அக)

மகாருற்பத்திப்படலம் முற்றிற்று.

ஆகப்படலம் ரு-க்கு திருவிருத்தம்-உருரு.

மந்திராலோசனைப்படலம்.

கல்லானைகரும்பருந்தக்கற்பித்தாயைக்
　　கலந்தணைந்துதாதையுயிர்கவர்ந்தபாவப்
பொல்லானைநல்லானாய்ப்பொருத்திவெய்ய
　　புரம்பொடியப்புன்முறுவல்பூத்தமேரு
வில்லானைக்கரிக்குருவிக்குபதேசித்த
　　வித்தகனைப்பழமதுரைமேவிவாழும்
வல்லானைப்பிறப்பிறப்பற்றகண்டாகார
　　மாகிவளர்சுந்தரனைவணக்கஞ்செய்வாம். (க)

வேறு.

பற்பலயோசனைப்பரப்புக்கொண்டுமே
லெற்பொலிமண்டலமியையநீண்டது
சிற்பநூல்வரம்பையுந்தெரித்துமுற்றிலும்
பொற்பமைந்தமரர்பொன்னுலகம்போன்றது. (உ)

மேயவானிரவியுமதியும்வெள்குறச்
சேயொளிநவமணித்தாணஞ்சேர்த்திமேற்
பாய்பசும்பொன்மணித்தகடுபொய்ச்சிமுத்
தாய்கதிர்விமானம்வைத்தழகமைத்தது. (ங)

எப்பெருமலைகளுங்கடலுமெண்ணுரு
தொப்பமையுலகமுமுலையுங்காலத்துந்
தப்பிவேறழிப்புகாவலிமைசார்ந்துவா
னப்படைமுகிலுருத்தமைத்தமண்டபம். (௪)

அன்னமண்டபத்திடையலங்குதாரிளை
ஞின்னியங்கடனிகர்த்திரைப்பவெங்கணுங்
கன்னியரிரட்டுவெண்கவரிகாறரத்
துன்னியநிலவுமிழ்கவிகைசூழ்வர. (௫)

அந்தரத்தரம்பையையழகில்வென்றதோர்
சுந்தரத்திருநுதற்றோகையாயமும்
மந்திரத்தவர்பெருங்குழுவும்வாய்ப்புறத்
தந்திரக்கடனிறைதழுவமேயினன். (௬)

அங்கண்வானகத்துறுமொற்றராய்மணிச்
சிங்ககேதனத்திறல்சீர்மைநோக்கியே
தங்கணாயகனெனச்சார்ந்துகண்களோ
யிங்கிவற்காயிரமிலையென்றேகினர். (௭)

ஆயதோரமைதியினரசன்பாலினி
லேயதங்கருத்தினையியம்பற்கெண்ணியே
சேயருமவ்வுழிசென்றுகைகளா
னாயகன்பதமலர்நனிதுபோற்றினர். (௮)

பார்மிசைவீழ்ந்தடிபணிந்தமைந்தரைத்
திரனுமெடுத்துமார்பிறுகச்சேர்த்துமே
லார்வமோடிருபுறமமைத்தவாசனஞ்
சார்புறவிருத்திநன்முதுகுதைவரா. (௯)

இனியநண்பரைக்குரவரையிலாவுழி
வினைஞராவேலையின்முடிவின்மெய்நிறை
மனைவியையமளியின்மைந்தர்தங்களை
நினைவினிற்புகழ்வதுநெறியென்றுன்னியே. (௧௦)

மைந்தர்மேலூறியவன்பைமன்னவன்
சிந்தையின்புறஞ்செலாதடக்கித்தீஞ்சுவை
தந்தசொற்புதல்வர்கடமதுமாமுகத்
திந்துவைநோக்கியாங்கிவைவிளம்புவான். (௧௪)

என்பெருந்தவத்தினுமெனதுமுன்னவர்
மன்பெருந்தவத்தினும்வனப்புவாய்ந்துநம்
அன்பினுக்கவதியென்றமைந்துநின்றுளீ
ரின்புறவந்தநுங்கருத்தையெண்ணினல். (௧௨)

மனத்தினிலொருபொருண்மருவியங்கதை
நினைத்துளம்வருந்தியநீர்மையாமெனக்
கனத்தநும்முகக்குறிகாட்டிற்றாலதின்
வினைத்திறமினதெனவிளம்புவீரென்றான். (௧௩)

சொற்றபோதிருவரிற்றேன்றன்மாமகன
நற்றவிசகன்றெதிர்நண்ணிநாயகன
பொற்றிருத்தாண்மலர்போற்றிவாய்புதைத்
துற்றதனகருத்தினைத்தெரியவோதுவான். (௧௪)

மக்களுக்காற்றுதந்தைமக்களின்
றக்கவரிவரெனுந்தகைமைமக்கட
மிக்கவிங்கிவாபெறவிரும்பித்தந்தைமுன்
றெக்கமாதவமெனசொல்லெனனுஞ்சொல்லதே. (௧௫)

இந்தமாநெறியுணர்ந்தெங்கட்காவதோர்
செந்தணிககலைமுதற்பிறவுஞ்செயதநு
மந்தமில்புகழ்க்குமாறாற்றறங்கண்ணிய
சிந்தையுட்கருததினைசசெபபனமேயினேம். (௧௬)

வில்வலியுரிமையுமழகும்வீரமுஞ்
சொல்வலிவிநயமுந்துணிபுஞ்சூட்சியு
மெல்லையில்கல்வியுமையந்தபோதினு
மில்லைவேறுழிப்புகாதவர்கட்கெனறுமே. (௧௭)

படைத்தரவேந்துமிப்பாரிற்பற்பல
விடத்துறும்பொருள்படாதவர்கட்கென்றுமட்
குடத்தினுள்ளேற்றியவிளக்கினைகொள்கைபோன்
மடத்தொழிலன்றிநன்மதியுண்டாகுமோ. (௧௮)

மற்றவர்தம்மினுமெளிமன்னர்கள்
சொற்றதோர்புறங்கர்துருவியாவகுறை
கொற்றவாசெயலெலாந்தெரிந்துகொளவரேல்
வெற்றியென்பதுபினும்வேண்டவேண்டுமோ. (௧௯)

என்பதைக்கருதியுமெமக்குநீர்செயு
மன்பினுக்குதவிவ்வுறாறற்குனனியு
முன்பனேபுறநகர்முழுதுநோக்குதற்
கினபமுற்றனமிதில்னனமெமனனுள. (௨0)

தேர்பரிகரிமணிசசிவிகைசாமரம
பேரிகைகவிகையாட்படைபின்மற்றுள
சீர்தருபொருளெலாமின்றித்தோமதித்
தார்புனைமந்திரிதநயனேடுமே. (௨௧).

போவதற்கெண்ணினேன்பொருந்திநீவிடை
தாவெனப்பணிந்ததன்றநயன்சொற்செவி
மேவலுங்கொடியதீவிடமுண்டாலெனக்
காவலனுயிர்நிலைகலங்கினானரோ. (௨௨)

பெயர்த்தொருவார்த்தையும்பேசப்பேசிடா
தயர்த்துநின்றாருயிரூசலாடிட
வெயர்த்தனன்மெலிந்தனன்வெதும்பியேங்கிமூச்
சுயிர்த்திலனொடுங்கினனுணர்வுள்ளோயவே. (௨௩)

வேலுடனுழைத்ததன்வீரஞ்சிந்திய
மால்கரிபோன்றுதாய்மன்னன்பூவணை
மேலவசத்தொடும்வீழ்ந்தெழுந்துதன்
பாலனைநோக்குவான்பையுனோக்குவான். (௨௪)

ஆர்வமுந்துன்பமுமகங்கொளாதுதன்
மார்பினோடிறுகுறத்தழுவிமைந்தன்மேற்
கூர்விழிப்புனலின்மஞ்சனங்கொண்டாட்டிமெய்ச்
சோர்வினோடின்னனசொல்லன்மேயினான். (௨௫)

வேறு.

என்விழியுமென்னுயிருமென்னுடலும்புவியரசுமெவையுமிந்த
நன்மகனையன்றிமறுபுகலுளவோவிவன்கானினடக்கவேநான்
றன்னுபெருஞ்செல்வமெலாந்தனியாகியிவணிருந்துதுய்க்கிலென்போன்
மன்னவர்களென்சொல்வாரன்றியும்பின்னிதுபோலும்வசைமற்றுண்டோ.

பிள்ளையிலாப்பெருந்துயரந்தணந்தேகமதியணிந்தபெருமான்றந்த,வள்
ளலிவன்பிறந்ததுதொட்டிதுகாறுமனம்படைத்தமகிழ்ச்சியெல்லாங், கொள்
ளைகொண்டுபிரிவெனுஞ்சொற் கூற்றுண்ணவேதனைமேற் கொண்டபாவிக்
குள்ளுயிர்வைத்திவ்வுலகிலுற்றிருக்கநியாயமினியுண்டோவுண்டோ. (௨௭)

மூலைப்பாலின்மணமாறாமுளரிமலர்த்திருவாயான்முதிர்வெங்கானு
மலைப்பாலும்புறநகருஞ்செல்லுவனென்றென்பாலின்வழுத்தற்கீங்கு
கலைப்பார்கள்கலைத்துளபுன்கட்டுரையேயன்றியிவன்கருத்திலுன்னிச்
சொலப்போமோயாவர்கொலிச்சூண்முடித்தென்குடிகெடுக்கத்துஜங்கொண்
[டிற்றார்.] (௨௮)

கைமலராலனமள்ளியுணவறியானிடையிலுடைகட்டவோரான்
செய்மலரினமளிவிட்டுத்தெருவிலின்னடைபடிக்கத்தெரியான்தீச்சூழ்
வெய்யநெடுங்கானேகவிரும்பிநின்றான்விளையாட்டோவினைமற்றியாதோ
மெய்யிதுவேற்பொய்யாதென்னுயிர்பிரிந்துநமனுலகமேவுமாலோ. (௨௯)

வருமகஞ்செய்தெமதுகுலம்வாழ்வித்ததசரதனும்வருந்தியீன்ற
பெருமகவுநான்கிலொருதிருமகனுங்கான்புகுதப்பிரிவாற்றாமற்
றருமகநொந்துயிர்விடுத்தானொருமகனைப்பிரிந்துயிர்நான்றரிக்கலாமோ
பொருமகந்தாய்ஞானிகளுமகவாசையெனுஞ்சலனம்போக்கற்குண்டோ ()

கரியொன்றுந்தேரொன்றுங்கவிகையொன்றுஞ் சிவிகையொன்றுங்கா
லாளொன்றும், பரியொன்றுமில்லாமற்பயமொன்றுங்கொள்ளாமற் பாலனை
ம்மா, அரியொன்றுமலைப்புரானுமனலொன்றுநெடுங்கானுமழகுவாயந்த, புரி
யொனறும்வளநாடும்புகுந்துவரவலியொன்றுபொருத்ததுண்டோ. (௩௧)

சினமிகுந்தபகைஞனிவன்சிலதனிவனெனபபகுக்கத் தெரியானுள்ளா
ரினமிகுந்துபொரவரிற்கண்டெதிர்மிகுந்தவலிதாஙகியிருஙகைவில்லின்
முனைமிகுந்தாசுகமபொழிந்துமுடிப்பதற்குப்புயவீரமுற்றுமுண்டோ
மனமிகுந்தவிவன்கருமமினைக்கிலதிதுனிதந்துவருத்திறறமமா. (௩௨)

வெயிலியங்கும்படவியெலாம்வினையியஙகுநெடுநேமிவிரட்டிநீண்ட
வயிலியஙகுந்தருமலர்க்கையரசாபிராணிவைபிதற்றியயாதனேக்கிப்
வயலியஙகுமபயிரசெழிக்கவானகமஞ்சுனமேகமழைவழங்கலபோலச
செயலியஙகுமதிவலலோரதெளிவியஙகுஙகருமஙகளசெப்புவாரால். (௩௩)

கற்றுயமற்றரசரினுஙகலையனைத்துமலையலையாயககடல்போற்செல்வ
முற்றுயுன்போற்பெருமையும்பருலகத்திறைக்குமுண்டோநீதான
முற்றுதபெருந்துயரினழ்குதற்கென்கடனோர்ந்தமுறையொனறின்றிப்
பறறுதூர்பஞ்செயகைமொழிகவிதுகேட்கவெனறுபகருவாரால். (௩௪)

பாலனுககோபனிரெண்டுவயதானதிவனழகும்பண்பும்பார்க்கில
வேலவனும்வாசமலாக்கோலவனுமாலவனுமவிதியுமொவ்வார்
ஞாலமிசையிவன்றனககோநராதிபரையினையெனவேநவிறறகாகேஙக
கால்னதிர்ப்படினுமொருகைபாாப்பானபுயவீரங்கடலபோன்றுள்ளான.()

தற்பருவஞ்சிறிதெனவுந்தருணமறிந்துறகருமஞ்சமைககவல்ல
விற்பனமின்றெனவுமொழிவிளமபுதனமமேழமைத்தேவிரிநதபூமேன்
முற்பிறந்தாகுபதியையனறியொருவிஜயனையுமொழிவார்வெனறிக
கிறபிறந்தாரிவர்க்கவரோடினிபபிறப்பாரும்மிலையாலினைசொல்லறகே. ()

வில்லுரிமைவலிவாயநதவீரருககுவேறுதுணைவேண்டாமென்னுஞ்
சொலலுரிமையல்லாதுசூழறவோருரிமையெனனதுணிவுகாட்டும்
பல்லுரிமைசோததிவன்றனபாலுரிமைசெயநினைகரும்பான்மைநல்ல
நெல்லுரிமைபுல்லினுககுநோபாதியெனசசொல்லுமநெறியேயாகும். ()

மன்னினைவுவருந்துவதெனவாளாகினமனமயககமாற்றிமைநதன்
றனனினைவுகருடனபடுதறகைமையன்றேலெவாகூடிததடுததபோது
மினனினைவோனேகுதறகிஙகிடையிலொருதடையுமிலையெனறேயெஙகள்
புனனினைவிறவேறறினைதப்புகன்றனமுனனினைவெதுவோபுரிவாயென
[ருர். (௩௮)

மநதிரத்தோரசொற்றுணிபுமைநதனிறகுமனததுணிபுமலியநோககி
யிந்திரா்கமெய்தாதபெருந்திருவோன்மருமம்போழ்ந்தெரிசெமபுண்ணிற்
சிநதுரததவேனுனைதநசெயகையெனததிகைப்பதுபோயதெளிவுசாந்து
தந்தரசசிரமுகமிலஙகுஞ்சுமநதிராசரற்கேட்பதொழுதுசொல்வான:- (௩௯)

என்போலுமந்திரிமார்நான்குபத்தோரொன்பதுபேரிசைத்தவெல்லாம்
பொன்போலப்பிறங்கினவப்பொருள்பிழைத்துப்பதிதாகப்புகறற்கேயென்
றன்பாலினிடமுண்டோதராபதியேயவர்வயினிற்சந்தேகிக்க
வுன்போல்வார்க்கடுக்குமதோதிரிகாலமுணரவல்லவுணர்வின்மேலோய் (௪௦)

குடியிறமைமைந்தரினுங்குறைவன்றேசெங்கோல்கைக்கொண்டசெம்பொ[ன்
முடியிறைமைமைந்தருக்கிங்கெத்துணையுமுவமிக்கமுடியாதிந்தப்
படியிறைமையோர்புகலும்பழங்கதைதெரிந்தளவேபகரவென்று
ஞெடியிறைமையற்கொள்ள தவர்க்கலதுவேறொருவர்நுவலப்போமோ. ()

மாருதியுமுலைப்பாறன்வாயருந்தத்தெரியாதவயதிற்றெண்ணீர்
வாருதியிலெழுங்கதிரைமாங்கனியென்றதின்மீதுவாவக்கண்ட
பேருதிக்குங்காலமெல்லாம்பேசியசொற்செவிநுழையப்பெற்றநீயுஞ்
சோர்வுதிக்குங்கவலைகொடுகவலுவதென்வீரருக்கோர்துன்பமுண்டோ. (௪௨)

கோசலைநாடாளுமுடிக்கோமகனுங்கோசிகன்பின்கூசாதேகிக்
காசலைவருதிமருதியுயிர்வீட்டிமகங்காத்தகாதை ன்பாற்
பேசலையோநாயகண்முனம்பிழைபுரிவார்தங்கள்குடிபிழைநீர்ந்துய்ய
மாசலைக்குந்திகிரியுந்திமா மெலாம்புரக்குமன்னம் றே. (௪௩)

வாள்வீமனை யர்த்தோன்வஞ்சனையான்மான்மகளைமகற்குச்சூட்ட
மூள்போதிற்றனியேகிமுடிமன்னர்பெருஞ்சேனைமுடியநூறித்
தோளாற்றல்காட்டியவிற்றொழிலாற்றறாமைக்குறித்துச்சொல்லற்கிங்கோ
ராளாற்றலுடையவர்களொருவருண்டோநீயிதனையயர்க்கலாமோ. (௪௪)

துருபதனைத்தேர்க்காலிற்றுணைத்தோளோடிறப்பிணித்துத்துரோண
னென்னுங், குருபதத்திலவிடுத்தவன்சொல்வஞ்சினமுந்தன்சினமுங்குறை
போய்த்தீரப், பெருவிஜயனவிசயமிந்தப்பேருலகில்வில்வீரர்பேணிப்பேசுந்
திருவிசயன்னசெவியிற்கேட்டறியாய்போலுமனந்திகைத்தாயின்றே. (௪௫)

இலங்கையின்மேல்வானிரவியெய்தாமல்வெம்பாசமிட்டுக்கட்டிக்
கலங்குறத்தன் கடைத்தலையிற்காப்பமைத்தவிராவணிதன்காதையெந்தத்
தலங்களினும்பெரிதன்றேதலைந்தறுகாலனங்குழும்பித்தண்டேனுண்ணு
மலங்கனவமணிமுடியாயிதுபோலிங்கெத்தனையென்றறைகுவேனால். (௪௬)

வேறு.

வடக ங்கெதன் யும் றவுமுள்ள-மந்தாமுந் தந்திரமுய வயங்கும்
வெம்போர்த்,திட வல்புந்தொற்றுணிப குன்றமுங்கொண்ட-திருமைந்தனி
வனிதன்மேற்றெரியா னொருவன்,றடையற மனுப்புவதேதமுறைமையன்றித்-
தடுப்பதுவுலைலவென்றறிவ ன்மல்குங், படணிகர் சும தி காணுஞ்சொ
ல்லிக்-கைதொழுதானதுகேட்டகாவலோனும். (௪௭)

செருமரல்போயகங்களித்தானெனினும்பின்னுந்-தீராத மகவாசைசிந்
தையுள்ளே, பருவாறந்தனன்மெழுகாயுருகிநைந்த-பாரவேந்தனிலையுணர்ந்
துபாங்கருள்ள, குருவெனுநற்பிருகுமுனிபுணர்வானிந்தச்-குமரனைநாந்தடுப்
பமெனினில்லைனென்றே, னிருபனுயிர்விடுவன்றப்பாதென்றுய்ந்த-நெறியா
லங்கவற்றெளித்துநிகழ்த்துவானால். (௪௮)

வேறு

மற்றவர்புதல்வர்போலுமன்னனின்புதல்வன்றன்னைச
சற்றுவேறெண்ணுறலெண்ணேற்றனிருதலருளாலிங்க
ணுற்றவனைவிரும்பிவண்டற்குறுதனபொருண்மற்றுண்டோ
யிற்றதினமேலுவந்தங்கெய்துறுங்காலமீதால். (௪௯)

செல்லுழிதீதொலைறின்றிதந்தவருயவியககத்தக்க
பல்பெருநாலுங்காதைபபயன்களுமபடைபபானபின்னு
மலவியங்கமலமேவுமணங்கினுக்கணங்குபோலோ
வல்லியைமணந்திங்கெய்துவானிதுவாயமையாலோ. (௫௦)

தனியனுயுலகமூன்றும்வெல்லுநின்றநயன்கட்பி
னினிமைசெயமதிமாறேடுமெயதுவானெனனில்பின்னர்க்
குனிசிலைவயவாயாரைகருதிததுரைகூறறசாகுட
புனிதனமாலயனவந்தாலுமபுறந்தரபபொருதுவெல்வான். (௫௧)

பல்வழித்தோற்றமான படைப்புளதவைக ளெல்லாஞ்
சொலவல்முறைமைதுயததரேயதல்கணடுநகலாய
வெல்லைவிலகருமமெல்லாமியறஙகயிலியைவதினறப்
புல்லி றம்றன்றினசெடகைமறம றன ...யப்போமே (௫௨)

கருப்பதிற்கலந்தசிங்கசகுருளைவெநசயமேற்றுவ
விருபபுறறததுவுமனறிவவ்வரவீனறகுட்டி
யுருபபெற்றபோழ்தினஞசமுட்பெற்றதுறமீனகுஞ்சு
குருப்பெறறுப்புனலினீந்துங்கொள்கையீங்குண்டோகூறாய். (௫௩)

ஆதலாலிவன்று ற்றதளவிலையெண்ணும்வெற்றா
போதலும ங்கருள்ளாராதங்களைப்பொருதிகட்டே
போதலுமாவாரனைலெச்சக வனப்பாமெ நதப்
பூதலந்தனி யென்பமோ பு ப்பூண்பானல். (௫௪)

... கவலைநீக்க கருத்துவந்துவனுககினை
யெயது றட்பணிப்பாயநீயென்றியமபியகுருவின்பாதந
...ற்பெ றற னபுன்கழற்றுணையுடையே றகென்று
... வேறொரு ...ணைநதுறுவ கண்டே . (௫௫)

வருமொழியிழுக்கா றுனைபபவர்ஞரந்தாததருக வல்
தருமொழிபிழைக்கிறசெயவங்கொதிசகுநல்லருளுங்குன்றும
பெருபாகியற்றுமவையமபேபெனப்பிதற்றும் டோ
ருரிமையுமுறவுமநீககுமொனறலபலவுமுண்டால். (௫௬)

நல்லதுநீதேயாகத்தீயதுநல்தேயாக
வல்லதுவேறொன்றுசவமைசசாசொல்லகற்றியிந்தத்
தொலலைமாஞாலங்காக்குநதோன்றலைகட்கென்றுநதுன்ப
மெல்லையில்லாதுசேருமிருமையும்பழிவநதெய்தும். (௫௭)

அமைச்சருங் குருவுஞ்சொன்னமொழிபிழைத்ததற்குமாறாய்ச்
சமைப்பது தகைமைத்தன்றென்றுணர்ந்து தன்னருகினின்ற
கமைப்பெரும்புதல்வன்றன்னைக்கைகளாற்றழுவிப்பாங்க
ரமைத்துடனிருத்தியுச்சிமோந்திதையறைவதானான். (௫௮)

எத்தனைநாளோபிள்ளையில்லையென்றுலகமேசு
மத்தனைநாளுநோற்றதென்றவமதனாற்பெற்ற
புத்திரனீயும்புத்திசிகாமணியெனும்பூமானை
மித்திரனாகக்கோடற்குன்றவம்விழுமிதாமால். (௫௯)

எனக்குறுமகனுமென்றுமிறைஞ்சிவாழெழிலமைச்சன்
றனக்குறுமகனுமென்றுஞ்சாற்றுவேற்றுமைசற்றின்றி
மனக்குறும்பகலநீக்கிவருங்கண்மாமணிபோலிங்கு
கனக்குறும்படிவளர்த்தகருமநான்கழறப்போமோ. (௬௦)

மன்மகனமைச்சனீன்றமகனிவனிவன்றானென்னுந்
தன்மையைமாற்றிநின்றதகைமையேயாயிதுபோனீயு
மென்கலம்புகுந்தபோதுமிடையினிற்பிறிவொன்றின்றி
மன்னியநட்பைக்காத்துவருவதுன்கடமையாலோ. (௬௧)

மக்களுமனையுஞ்சூழ்ந்தமரபுமாநிதியும்வேறுந்
தொக்குறும்விலகுநட்பிற்றுவக்குண்டுபழக்கமான
பக்கநீங்காதுநீக்கம்பண்ணிக்கொள்பவர்க்கேதுன்பஞ்
சிக்குறும்புகழைமாய்க்குந்தீயவன்னரகிற்சேர்க்கும். (௬௨)

தந்தையர்ப்பிழைத்தும்பெற்றதாயரைப்பிழைத்துமீன்ற
மைந்தரைப்பிழைத்துங்கொண்டமனைவியர்ப்பிழைத்தும்வாழ்ந்தோ
ரெந்தயானிலத்துமுண்டின்னுயிர்நட்புப்பிழைத்திங்குற்றோர்
வெந்துயர்பிழைக்காவாழ்க்கையல்லதுவேறென்விள்வேம். (௬௩)

அன்னைதன்பகையுந்தாதைபகையுமான்றவர்பின்னுள்ளோர்
வன்மனப்பகையுந்தாங்கிமாறுயிர்பிறிதொன்றின்றி
மன்னுநட்பாளற்கின்பம்வரித்துநல்வாழ்க்கைபேணு
நன்மகனிவனேமூர்த்திமூவரினல்லவராவான். (௬௪)

எப்பிழைதனையுந்தீர்க்கத்தெய்வமொன்றியலுநட்பிற்
றப்பிழைப்பவர்கட்கந்தத்தெய்வமேசதிக்குமென்றே
யொப்பிழையாதவேதமுணர்ந்திடுமெனக்குநானுஞ்
செப்புதறகைமைத்தன்றோசிந்தையிற்றெளிவுசான்றோய். (௬௫)

என்பணபலவும்பண்ணியிறையவனமைச்சனீன்ற
தன்பெரும்புதல்வன்றன்னைக்கைகளாற்றழுவியையநூ
வுன்புகலிவனுக்கான்றபுகலுனக்கிவனையன்றிப்
பின்புகலில்லையென்றபெருமிதம்பெற்றநீங்கள். (௬௬)

வாசமுமலரும்போலமருவிநீங்காதநட்பி
னேசமோடவிர்பூஞ்சோலைநெடுவரையடவிமற்றைத்
தேசமேமுதலாயுள்ளசெறிவளம்புகுந்துநோக்கிப்
பாசமோடெமக்குக்காட்டும்பண்புமுன்கடைமையாமால். (௬௭)

என்றுரைபுகன்றுவேந்தன்மைந்தர்கட்கினிமையான
பொன்றிகழ்மணிப்பூண்பாகுபூந்துகில்பிறவும்வேய்ந்து
வன்றிறற்கவசம்வீக்கிவயிரவாளிடையிற்சேர்த்து
மின்றிகழ்கழலில்வீரக்கழலொலிவிளங்கப்பூட்டி. (௬௮)

வடவரைகடுத்துநீண்டவரிவில்லுமதனிலார்த்த
படவரவிதுவென்றுன்னுநாணுமுப்புரம்பாழிட்ட
திடமுனைப்பகழிமானும்பகழியுஞ்சேர்த்துச்செய்யக்
கடவனகடன்களாற்றிக்கண்களிப்பமையநோக்கி. (௬௯)

வான்கொளாமகிழ்ச்சிவெள்ளமனக்கரையுடைத்துப்பெருகத்
தேன்குலாயலங்கல்வேந்தன்சிந்தையாகுலம்போய்ச்சிந்து
நான்கடையானபோதுநமர்கண்முன்றவமேநல்குந்
தான்கடைத்துணையுங்கட்கேயென்றுரைசாற்றிப்பின்னும். (௭௦)

இங்குநீர்பன்னிரண்டாண்டெல்லைக்குளெங்குஞ்சுற்றிப்
பங்கமில்லாதுமீண்டுபடருவீரென்னப்பார்ம
னங்குசொற்றனன்சேட்டுள்ளபுதல்வருமன்புகூர்ந்து
திங்களினுதயம்போலத்திருமுகஞ்செழிப்புற்றோங்க. (௭௧)

குருமலர்ச்சரணம்போற்றிக்குரிசிலையவ்வாறேத்தித்
தருமவர்வெண்ணீறேற்றுச்சபையிலுள்ளவர்கட்கெல்லாம்
அருமைகொண்டினிமைபேசியகல்பொழுதமைச்சன்மைந்த
னுரியதன்றந்தைபாதமுவந்தினிதிறைஞ்சநோக்கி. (௭௨)

(வேறு)

மன்னோர்புகழ்மந்திரிமாமகனும்
பொன்னார்மணிபுத்திசிகாமணியைத்
தன்னோடொருமாடுதனிக்கொடுபோய்
நன்னேர்மொழியொன்றுநவிற்றிடுவான். (௭௩)

களிதங்கியநல்லமுதக்கடலே
துளிதங்கியமென்கனியின்சுவையே
யளிதங்கியமாமலரேயழகே
யொளிதங்கியமாமணியேயுயர்வே. (௭௪)

பொன்னேபுகழ்புத்திசிகாமணியே
முன்னோரமர்செய்தமுதற்றவமே
பன்னாடவர்தேடுறுபாக்கியமே
யென்னுன்மொழியொன்றிதுகோடியென. (௭௫)

நீயுஞ்சிதிரேர்புவனேந்திரனுங்
காயுங்கொடுகொளனகரும்பொழிலும்
ஆயும்பலதேயமுமண்மியிவ
ணேயும்வரையில்வழிநோக்குவனால். (எசு)

முன்னைப்பிரியாதமுதாக்குறையீர்
பின்னைப்பிரியற்குமதெண்பிழையாத்
தன்மைக்குண்மிகுத்ததனிப்புகழே
நன்மைக்குறுமெய்த்துணைநல்குமரோ. (எஎ)

நெஞ்சிற்றகையின்றிநிகழ்த்திடினும்
வஞ்சித்துயிர்வீக்கமதித்திடினும்
மிஞ்சிப்புகலாதுளம்விம்மல்கொளா
தஞ்சித்தொழுதேவலமைத்திடுவாய். (எஅ)

தெய்வந்துணைசெய்வதினும்பெரிதா
யுய்வந்தருண்மன்னவர்கண்ணிலொரு
பொய்வந்துறிலங்கவர்போன்றிடவே
மெய்தந்தெழுமாணைவிளம்புவரால். (எகூ)

நீங்காதுநெருங்கியுறாதகனற்
பாங்கேகுளிர்காய்பவர்பண்பெனவே
யீங்காரிறைவர்க்கணிருந்துமுறை
யாங்காரியமாற்றலமைச்சியல்பே. (அ0)

கயமஞ்சுவபாகர்கருத்தினுமப்
பயமிஞ்சுவதென்பதுபண்பிறைவர்
வயமஞ்சுதன்மாண்பவர்தம்மினுமற்
புயமஞ்சுதன்மந்திரர்பூணணியே. (அக)

நட்டார்பிழைசெய்துறினுநல
மிட்டேறியமன்னரிருஞ்செவிகண்
பட்டாலவர்பாடுறநின்றடரு
மொட்டாரிவதென்பதுணர்ந்திடுவாய். (அஉ)

தாய்தந்தையர்தாரமகார்தமர்பொன்
னேயும்புகழ்தெய்வதமென்பவெலா
மாயுந்துணையில்வுலகத்தரசர்
நேயந்தருமெனைப்துநிச்சயமே. (அங)

ஈதன்றியுமன்னரியற்கைநமா
லோதுந்தரமன்றிவையுள்ளியவன்
பாதம்விலகாதுபணித்தபணி
நீதங்கொடுநீபுரிவாய்நிதமே. (அச)

செல்லார்நெறிமுற்கொடுசென்றுநகர்
வல்லான்வருபோதுபினீவருவா
யல்லாதெனிலன்னவையேயமைவாய்
நல்லாயிதன்மேலிலைநற்றவமே. (அரு)

நீயாவுமுணர்ந்தனைநின்மனதுக்
கேயாதனவில்லையினிச்சுகமே
போய்வாவெனவேபுகல்வானிருதா
ளோய்வான்விடைகொண்டுதொடர்ந்தனனால். (அசு)

மந்திராலோசனைப்படலம் முற்றிற்று.

ஆகப்படலம்-சு-க்கு-திருவிருத்தம் நடுசு.

நகர் நீங்குபடலம்.

காலர்கள்வீசுறுபாசமதாலுயிர்கவல்பொழுதுற்றுழையிற்
பாலர்மினார்கிளைஞ்ஞோரழுதின்னல்படுத்தினுநான்மறவேன்
நீலவிலோசனமாதுமையாளொடுநீண்மதுராபுரிவாழ்
பாலவிலோசனநீறணிசுந்தரபாண்டியனார்பதமே. (க)

வேறு.

பொன்னார்மனைபுக்கினர்தாயருழை
சொன்னாருருமேயெறிலியாற்றுவரு
மின்னாரவாமெனவெய்துயிரா
வன்னாருளம்விம்மியயர்ந்தனரால். (உ)

கண்ணீர்மழைபோலொழுகக்கதறி
மண்மீதுபுரண்டுதம்வாய்வாள
வுண்ணாடுபுலன்களொடுங்கிமனத்
தெண்ணாதனவெண்ணியிடைந்தனரால். (ங)

மகவில்லையெனப்புவிமாந்தர்முனே
தகவின்றிமொழிந்தசழக்ககல
நகவில்லவனல்கியநாண்முதலா
யகவிம்மியவோகையழிந்தனரால். (ச)

உமையன்றியிலாதவுயிர்க்கினியிங்
கமையுந்துணையேமனலாதுளவோ
சுமையென்றுதறந்தமைநீர்சுகமாய்ச்
சமையுந்தரநற்றருமந்தருமோ. (ரு)

பெற்றம்முமைமையின் றுபிரிந்து துய
ருற்றின்னுயிர்வாழ்தலினிவ்வுலகின்
முற்றும்மலடென் றுமொழிந்தமுறை
குற்றம்மெனவெண்ணுதல்கூடுமரோ. (சு)

நமையருள்செய்துயர்தெய்வநமைக்
குலமோடழியத்துயர்கூட்டிவிதை
யலர்மாநிலமீதெவர்பாலடைவாய்ச்
சொலவாகுதுமென் றுதுவண்டனரால். (எ)

என் றின்னனபன்னியிரங்கியழு
தொன் றுந்தழல்வாய்மெழுகாயுருகிப்
பொன் றுந்துயரெய்தியபூவனையா
ரன் றின்பமுறும்படியாற்றுவரால். (அ)

என்னே துயரித்தனையெங்களையு
முன்னேபெறநற்றவமுற்றுமிலா
வன்னுளினுநீவிரலக்கணுற
விண்ணுளிஃதென்கொல்லியைந்ததுவே. (கூ)

பூமாதுறழ்தாயர்புலம்படையக்
கோமானவிராமனெனுங்குரிஞ்சிற்
றீமாந்தியசேணெறிசென் றுமெழிற்
றேமாநகர்வந்தமையுந்தெரிவீர். (கo)

கங்கைத்துறையம்பிகடாவியசீர்
மங்கைச்சுதன்வேதவியாதன்வனஞ்
சங்கித்தவள்சொற்றழுவாதுறைத
லிங்கச்செயனுஞ்செவியேற்கிலிரோ. (கக)

வேறு.

இன்றொடொரீஇயாங்களிதன்புறமேய்ந்தநற்சீர்
பன்றூபுகுந்தொருநீங்குபடைப்புறுமற்
சொன்றடணவாதுறுவோந்துயர்நீங்குமென்ன
வன்னார்மொழியத்தெளிவெய்தியவன்னமன்னார். (கஉ)

பாலின்சுவையின்னமுதூட்டிநற்பாலர்கட்கு
மேலின்முழுதும்பணிவேய்ந்துவிளைந்தவன்பின்
சீலம்பெறவேகுதுமென் றுரைசெப்பவன்னார்
காலஞ்சலிசெய்துபொன்றூய்ந்துகடந்தனரால். (கந)

பண்டைத்திருமாலோடவன்றருபாலனுஞ்சீர்
கொண்டித்தலையெய்தியகொள்கையிதென்கொல்லென்னக்
கண்டுறவர்நெஞ்சமுவந்திருகண்களிப்ப
மண்டிப்பொலிசீயமெனத்திருவீதிவந்தார். (கச)

செல்லுந்திருமைந்தர்கடம்மனச்செய்கையெல்லாஞ்
சொல்லுஞ்சிலராற்றெரிந்தந்நகர்துன்னிவாழும்
வல்லின்முலைமாதருமைந்தருமற்றுளோரும்
புல்லுந்துயரத்தினோடின்னபுலம்பினைவார். (௧௫)

நம்மைந்துமுகத்தவனல்கியநல்வரத்தா
லிம்மைந்தர்பிறந்தனரொன்பதோரின்பமெல்லா
மெம்மைந்தருநீங்கியலந்தலையெய்தவிந்தச்
செம்மைந்துநினைந்துமுடித்தமையாவர்செய்கை. (௧௬)

பஞ்சும்மலருஞ்செறிமெல்லணைமீதுபதம்பெயர்க்க
வஞ்சுந்துயரெய்தியபாலர்களம்மவெம்முண்
மிஞ்சுந்தழலார்நெறியேகவிதித்தமன்ன
னெஞ்சுந்திடமுற்றிவணுற்றதென்னீர்மைநன்றே. (௧௭)

எல்லாவுயிருந்தமதாமெனவெண்ணுகின்ற
வல்லார்தவநாளும்வருந்தியளித்தவிந்த
நல்லாரிவர்மீதருணல்குதலின்றியென்னே
கல்லாரதர்மேவியகான்புகுவித்தகாட்சி. (௧௮)

தம்மாமகர்மீதருணீக்குதயாவிலோர்க
ளிம்மாநகரத்துறைவோமையியைந்துகாக்கச்
செம்மாமனமுள்குவரென்பதுதீமையல்லா
லம்மாவிவர்நல்லறமாற்றவோராறுமுண்டோ. (௧௯)

ஒப்பேதுமிலாதவர்யார்க்குமுயர்ந்தவென்றி
யிப்பாலகரேகுதல்கண்டநமக்குமினி
யெப்பாலகர்நற்றுணையாற்றுவரொன்றுளேங்கி
யப்பாவலரல்லதுநல்லறமல்லவென்பார். (௨௦)

வேளைங்கணைவேளிவரென்னவியக்குமென்றி
நீளும்புயமைந்தர்களென்குறைநேர்ந்ததிங்கு
மூளும்படையின்றிநெறீஇக்கொடுமுன்செலற்கோ
ராளுந்துணையின்றிநடந்தனரம்மவம்ம. (௨௧)

வேறு.

இன்னணம்புலம்பிமைந்தர்தங்களையெதிர்ந்துபோற்றித்
தொன்னகர்மாக்களெல்லாந்துயருளந்தயரும்வேலை
யன்னவர்த்தேற்றிச்செம்பொன்னணிமணிவீதிநீங்கி
மின்னுமேகஞ்சூழிஞ்சிவாயிலைமேவினரால். (௨௨)

மாலவன்புள்ளும்வெள்ளிவரையவன்விடையுஞ்செங்கை
வேலவன்மயிலும்பூவின்வேதியனனமுமிந்தக்
கோலவான்பரிகட்கென்றுமுவமிக்கக்குறையுமென்றால்
ஞாலமேற்சிறப்புவாய்ந்ததெதுவெனநவிறற்காவேம். (௨௩)

ஒன்றுமூன்றொன்றுவண்ணமொளிரவைங்கதிகள்பெற்று
நன்றுநற்சுழியுமெய்யிஞற்றமுநகையும்வானத்
தென்றுதேர்ப்புரவிமானும்மிவைகளின்குணங்களாயிற்
றுன்றுவெம்பொறிவீய்ந்துய்ந்தார்மனத்தினுந்தூய்மைத்தம்மா. (௨௪)

பரவையைக்கடக்குமண்டப்பரப்பினைக்கடக்கும்வானத்
திரவியைக்கடக்குமற்றவெவற்றையுங்கடக்குந்தேடி
யுரைசெயிலுரையிற்சாலாதுவமிக்குமுவமையாகாக்
கருமுகில்வெருவப்பையக்கனைக்குங்கந்துகங்களம்மா. (௨௫)

பாய்ச்சலில்வரைகள்யாவும்பரியவோர்சாய்க்கும்விண்ணின்
மீச்செலிலிரவிதேர்குப்புறவிழமிதிக்கும்பைய
மூச்சிடிலண்டங்கீண்டுமுதுபுனற்கங்கைசிந்தும்
பேச்சினிற்பேசலாமோயாவருமதனின்பெற்றி. (௨௬)

வேறு.

வேதத்தாயினுமதனுளேவிரிந்துருத்திரிந்த
பூதத்தாயினுமதனுள்ளேபொலிந்தபற்பலவாம்
பேதத்தாயினுமிவைகளின்நிலைசொலப்பெறுமோ
பாததத்தாலுலகேழுநுண்டுகள்படப்படரும். (௨௭)

காலெல்லாமுழுநித்திலங்கண்மணிவெறுக்கை
மேலெல்லாமுழைழ்யிரசிதம்விளங்குதாரகையின்
கோலமேயண்யெயிறுமற்றுவமையிற்குறுகாக்
கூலம்வெண்டிரைமதிவகிர்ந்தனையபொற்குரமே. (௨௮)

வேறு.

வாயுவேகிமனவேகியெனும்பேர்பொருந்திவதிந்ததிருத்
தூயபரிகளிரண்டிணையுந்தோன்றலாணைகொடுதோன்றி
நேயவுழையர்பணிந்தளிக்கவுவகைநிறைந்தநெஞ்சினரா
யேயபுதல்வரவைகளின்மேற்கொண்டாங்கெழுந்தாரெயினீத்தே. (௨௯)

நகர்நீங்குபடலம்

முற்றிற்று.

ஆகப்படலம்௭-க்கு திருவிருத்தம் ௱௯௮.

வளங்காண்படலம்.

வருவணிகமாதினுக்குக்கரிகிணறுவனிலிங்கம்வந்துசொல்ல
வருள்புரிந்திங்கொருமுதலாயண்டமுகடளவும்வளர்ந்தளாவுஞ்சோலைத்
திருமதுரைதனிலிருந்துசிந்திப்போர்தங்கள்வினைசிந்தச்செய்யும்
மருமலர்ப்பொற்கடுக்கையணிமாதேவனிருமலர்த்தாள்வணங்கிவாழ்வாம்.

வேறு.

வாவியகான்மனவேகியெனும்முறண்மண்டியகற்கிகடன்
மேவியகேள்விசமீரணவிஞ்சைவிரித்துரைகூறிடலுந்
தாவருவிண்ணவர்கட்புலனுங்கதுவாவகைதண்டலிலா
தோவலில்பற்பலவண்டமளாவவுயர்ந்துநடந்தனவால். (உ)

நடந்ததுபானுகடும்பரியேழுநடுங்கிமயங்கினநெஞ்
சுடைந்ததுமால்வருபுள்ளிறையன்னவையுற்றதுநக்கன்விடை
கடைந்தபயோததிமீதுழன்மந்தரமானதுகாசினிகீழ்
படந்திகழ்நாகர்விடங்களுமிழ்ந்துபதைத்துவருந்தினவால். (௩)

வேகவயப்புரவிக்கடைவாய்நுரைமீறுவிலாழிமழை
மேகமெனச்சொரியச்செறிமூச்செறிவிண்ணுலகுந்தருவும்
மாகமுநீள்கிரியுங்கடலுங்குலைவாகிவருந்தமனஞ்
சோகமடைந்துலகுந்தளரக்கனதூளிநிறைந்தனவால். (௪)

அன்னவைவாவுகடுப்பினையாவரறிந்துரைசெய்யவலார்
மின்னிடுமுன்னெழுபத்தொருயோசனைமேவினகீழ்த்திசையிற்
பின்னுமளப்பிலயோசனைசென்றபெரும்பகன்மத்தியிலே
மன்மகனுங்களைகொண்டுடனெய்வருமந்திரிபாலனறைவான். (௫)

தாகவிடாயதிதாகமதாகிஃதன்மையினுன்மனது
சோகமடைந்தனநாவும்வரண்டனசோர்வொடுகந்துகமும்
வேகமயர்ந்தனநாமும்விசைப்பரிமேதினிமீதிறுவிச்
சீகரமோதுகயப்புனலுண்டெதிர்செல்வுழிசென்றிடலாம். (௬)

என்றுதிரைக்கடலாடைகொள்பூமகனின்னுரைதந்திடவே
நன்றெனமந்திரிமீவருபாடலநானிலமீதுசெலத்
துன்றியவிஞ்சைபுகன்றனன்வாவுதுணைப்பரியுங்கடுகி
யொன்றியமின்னலிழிந்தனபோற்றரையுற்றனநொய்தினிலே. (௭)

வேறு.

வண்டினங்கறங்கலங்கன்மைந்தர்சோகமாறியே
கொண்டலங்குறங்குசோலைதிங்களங்கொழுந்துபோன்
மண்டுவாணுதற்கயற்கணூரைவானமாதரொன்
றண்டரூடலாகினானுமருதவைப்படைந்தனர். (௮)

சீலமுத்துதிர்த்தெழுந்தசெந்நெல்செந்நெலல்லகா
ரோலமிட்டுறங்குசோலைசோலையல்லவுழவரூச்
சாலிமைக்குமணிகளல்லவல்லமேவுதண்பணை
வால்வளைக்குலங்கள்பம்பும்வாவியல்லவல்லவே. (௯)

வாசநாறுசோலையூறுவானளாயதேறலுங்
காசுலாவுபூணினார்குழற்களுங்கலந்துபுன்
மாசிலாதமேதிநின்றிறங்குபாலும்வாறியே
யோசையுற்றெழுந்துகால்வழுக்குமாறெழுக்கரோ. (௧௦)

மானுறங்குமயிலுறங்குமழையுறங்கும்விரிமலர்த்
தேனுறங்குமனமுறங்குமாசிலாதசேறளாய்
மீனுறங்கும்விழியுறங்கும்வளைவிலாதசிறுமியர்
ஆனுறங்கும்வேயுறங்குமாயர்வாழுமுன்றிலே. (௧௧)

மஞ்சுலாவுபொங்கருவெந்துலாவுமயில்கணோர்
பஞ்சுலாவுசீரமைந்தபாதமாதராதர
நெஞ்சுலாவுபொழுதெலாநெருங்கிமாரனேவுகோ
லஞ்சுலாவுமதுகைமைந்தர்சென்றுலாவுமாறரோ. (௧௨)

வேறு.

இன்னணவளங்கெழுதமதின்முகடோரீஇ
மின்னலுமணியும்விரிந்தமேகமு
முன்னுமெய்ப்பொருள்களுமுருக்குறைந்துலை
பன்னரும்வெஞ்சுரப்படியின்மேயினார். (௧௩)

நீந்தராவறநெறினைப்புருதபுன்
மாநதரார்மனையெனமாட்சிகுன்றமே
பூந்தராதலம்வெடிப்புண்டப்பூந்தலை
யேந்தருமுடிதொடுத்தெரியமபாலையே. (௧௪)

கானெலாங்கரியவெங்கனற்கொழுந்தெழுக
மேனிமிர்ந்துருத்தலிவ்விசும்பவெ தா ன்
வானகத்தருச்சினைமலரும்வம்மணி
லேனையார்பொருளனவேவதின்றியே. (௧௫)

மேகமுஞ்செல்கிலகாலுமேடம்
காகமுஞ்செல்கிலகரியுஞ்செல்கில
நாகமுஞ்செல்கிலநாளுஞ்செல்கில
சூகமுஞ்செல்கில்சூருஞ்செல்கில. (௧௬)

இடியருக்கதம்பம்வெந்திரதுசந்தமைய
படிமிசையுகுதல்போற்பாலையெங்கணு
கொடியினங்கழுகொடுகுறியினந்தழல்
விடுசுடர்முருக்கலால்வெந்துவீழ்குமால். (௧௭)

முளைக்கதிரிரவிமெய்முழுதுந்தீய்ந்துவிண்
பிளக்கவேவெவ்வழற்பிழம்புபற்றுதல்
வளர்த்தவன்கரந்தகர்மாறிப்பாயுமென்
றளக்கர்சூழுலகெலாமறைதன்மானுமே. (௧௮)

முந்துமண்ணீரினைமுழுதுமுண்டுமேல்
வெந்துதீப்புகையெழும்பாலைவெப்பினா
லந்திவானகமெனவிருஞ்செம்மணி
சிந்திநீருகினவ வின்சேக்கைமய. (௧௯)

வடவனன்மானும்வெஞ்சுரத்தின்மாசுணம்
படுபசியாலுயிர்பதைத்துவாய்பிளந்
துடல்சுருண்டழியுமுன்றோடியாகுவெவ்
விடமுமிழ்பட நீழலொதுங்கிவ யமால். (௨௦)

சுலையுணர்ந்தவாவினைகடத்திப்பொய்நெறி
குலைவுறநீக்கிமெய்குறித்துநாட்டிய
நிலைபொருதுறவினர்நெஞ்சுநேயமில்
விலைமகணெஞ்சும்போல ம்வீய்ந்ததே. (௨௧)

கலைகமேபுரிந்துதன்கணவன்வேறுரு
விலைமகள்பாற்புகநோக்கிவெய்துயிர்த்
துலைமெழுகொத்துமெய்யுருகிவெம்பிய
குலமகண்மனமெனக்கொதிக்கும்பாலையே. (௨௨)

அப்பெரும்வெஞ்சுரமவர்கணண்ணவு
மொப்பருமமுதெனவூறுநீரொடு
செப்பரும்வளம்பலசிறந்துமல்கினா
லெப்பொருளீட்டுவாரறத்தையின்றியே. (௨௩)

மஞ்சினங்குமுறியேமழைபொழிந்தன
குஞ்சரம்வீழ்ந்தடிகுமரர்ப்போற்றின
வஞ்சியராமெனமயில்களாடின
செஞ்சொலாலவந்திகைமுகமன்செப்பின. (௨௪)

பாம்பெலாங்கடுவொழித்தமுதம்பார்மிசை
யேம்பலினுகுத்தனபாகினேழிசை
வீம்பிலாக்கின்னரமிதுனம்பாடின
பூம்பொழிலாகினபுகைந்தபாலையே. (௨௫)

காவெலாங்காலமில்கனிகளீய்ந்தன
பூவெலாம்பிரசமுமணமும்பொங்கின
வேவலிற்பரிக்குரம்வருடியேகின
மாவுறைமந்தியோடளப்பில்வானரம். (௨௬)

கவரிகளிரட்டினகமுகின்பாளைக
ணவமணிக்குடையெனப்பரவைநண்ணின
நவையில்வான்பணியொடுநாவிநக்கியே
சிவிரியிற்றெளித்தனசிறுமந்தாநிலம். (௨௭)

கன்னலுங்கதலியுங்கமுகுஞ்செந்நெலும்
பின்னியேககனமுங்கீழும்பீறிப்பின்
மன்னவர்மாலைவாய்மைந்தரேகுழி
யின்னல்செய்திருபுறமிடைந்துசாடின. (௨௮)

குள்ளமுநீண்டனகுருடுநீங்கின
கள்ளமுமுனிவரிற்கருணைதங்கின
வெள்ளமுங்கதித்தனவிளைவுமல்கின
வள்ளியோர்நடந்திடுவெறந்தபாலையே. (௨௯)

கொண்டல்கண்முழங்கினகுயில்கள்கூவின
வண்டர்வாழுலகமுமாவினூரும்பின்
புண்டரீகத்தவனுலகும்போன்றன
கண்டவர்மனத்தினைக்கவற்றும்வெஞ்சுரம். (௩௦)

காலெழாதுயிர்களுங்கரிந்துசாம்பிய
பாலையுஞ்சோலையாய்ப்பசந்துகாட்டிய
மூலமுமோர்கிலர்முழுதநோக்கியே
மாலைவேய்மைந்தரும்மகிழ்ந்துசென்றனர். (௩௧)

வல்லையில்வெஞ்சுரங்கடந்துமற்றுள
முல்லையில்குறிஞ்சியில்முழுதும்வைகிய
எல்லையில்பொருளெலாமினிதுகண்டுகண்
டல்லல்கொள்ளாதிவரவனிமீதரோ. (௩௨)

கோசலங்கேகயங்கொல்லங்கூர்ச்சரம்
காசங்காஸ்மீரங்கன்னடங்கேரள
தேசமேமுதலியயாவுஞ்சென்றுசென்
றீசறநோக்கிமேலறிவுதேருவார். (௩௩)

நீண்டுளநதிகளும்நிமலனாருள்
பூண்டுளதலங்களும்புகுந்துதீவினுங்
காண்டகுவரையினுங்கலந்துநாலிரண்
டாண்டுமேலிரண்டுசென்றகன்றோராண்டினில் (௩௪)

நமைமுதலுயிரெலாநயந்தளித்தநல்
லுமையினையின்புறவுயிர்த்துவிண்ணுல
கமைபவராதியோர்க்கின்புசெய்தரு
ளிமயமால்வரைப்புறன்பொதும்பரெய்தினர். (௩௫)

வளங்காண்படலம் முற்றிற்று.

ஆகப்படலம் ௮-க்கு. திருவிருத்தம் ௪௱௩.

சோலையைக் கண்ணுற்றபடலம்

வான்முதலாதிபூதபௌதிகமாகிநின்ற
வான்மகோடிகளுக்கெல்லாமங்கங்கேபோகந்துய்க்க
ஆனுயிருணவாயுள்ளும்வெளியினுமுணர்வாய்நின்ற
கோன்முகமானகூடற்கடவுளைக்குறுகிவாழ்வாம். (க)

வேறு

தேன்சிந்தியகனிசிந்தியசிறுகான்மலர்விரவிக்
கான்சிந்தியகுளிர்சிந்தியகவிதங்கியபொழில்வா
யான்சிந்தியமடிபானிறைவயல்சூழ்நகராச
ரூன்சிந்தியநெடுவேலிறையுறவோனெறிபுகவே.

குயிலின்றொனியொருபால்கிளிகுழறுந்தொனியொருபான்
மயிலின்றொனியொருபாலளிமலரெங்கணுமிசைகள்
பயிலுந்தொனியொருபாலொருபாலுமிதுபோலு
மியலுந்தொனியிலையென்றுளவிலையுந்தொனியியலும். (ங)

நாகந்தழைகுரவந்திகழ்நறைகான்முகைதளவஞ்
சாகங்கனிகிளைநீடியதளிர்மாவிலவங்கஞ்
சோகந்திகழ்மருதங்கனிதுவண்மாதுளைசொரியும்
மேகந்தொடுபூகங்கள்விரிசண்பகமயிலை. (ச)

மரவம்முனிகதிர்சாடியவரிபொன்னொளிர்கதலி
யரவம்புனையவர்கொங்கையைநிகர்தெங்குயரலரி
பரவும்பனைவானீடியபலவோட்டர்யாலி
மருவும்பலதருவொன்றியவளமிஞ்சியபொழிலே. (ரு)

கிளிபாடுவமயிலாடுவகிளர்சாமரைகமுகங்
கொளிர்வாணகைமடவார்புரையுறுகாறளவிடையே
துளிதேறலைமலியுண்டெழுசூதம்மிசைமுரலக்
குளிர்மாவுறுசினைநாடியகுயில்காகளநிரர. (சா)

அடைபாசனைவிலைமென்சினையயிலும்படியுதவ
வுடைவாளெனவிருபாலினுமொளிர்கேதகைமிடைய
விடையோனழல்விழிவீயுருவிலிபொன்முடிசூடிச்
சடைமாதவருடையச்சமர்தருபாசறையனைய. (எ)

வேறு.

பாரிணொட்டியநாட்டினிற்பகர்வதற்கரிய
சீரிணொட்டியபாண்டிநாட்டினுக்கொருதிலக
நேரிணொட்டியமித்தனுமுகவைப்பதிநிருப
ஞாரிணொட்டியவுயர்மரப்பொதும்பரொத்துளவால். (அ)

அந்தண்காவினின்மிகுவளமனைத்தையுநோக்காச்
சந்தமாமலர்த்தார்வனைகுரிசிலுந்தகவாய்ப்
பந்தநான்மறைபதித்துநாத்தழும்புறப்பயின்ற
விந்தைமந்திரிநயனுக்கிவையிவைவிளம்பும். (௯)

விண்டலந்தொடுவேணுவிலைக்குழாம்விருப்பங்
கொண்டியற்றிருல்வழிபடக்குலைந்திழிபிரசம்
வண்டலோடிடவாரைரக்கையணைவகுத்துப்
பண்டுலர்ந்தபூஞ்செடிகளிற்பாய்ச்சுவபாராய். (௧௦)

கந்திமேவியசானவன்கூலம்போய்க்கவிந்து
பந்தியாய்நிறைதோணிமலர்மீச்சென்றுபடித
விந்துநோக்கிவானெழின்மணிச்சுடிகையம்பாந்தள்
வந்துகவ்வினவாறுபோற்றோன்றுவமதியாய். (௧௧)

பூகமார்ச்சினைகுதித்திடக்கோகிலமுடைந்து
பூகமாமடற்றிரளினுள்ளோடவினைப்புதைத்து
சோகமுற்றனபிணிமுகந்தோகையைத்தாக்கி
மேகமாமெனவிரித்துநின்றாடுவபாராய். (௧௨)

மருத்துமோதியம்போதினையுகுத்திடவளர்ந்து
பருத்தகொம்பர்கள்கணவரோடுமெய்பறித்துத்
திருத்துபோணிசிதரிடச்சிந்தைகடிரிந்து
வருத்தமுற்றதாய்மகளிரைமானுவமதியாய். (௧௩)

மூசுதேனளிபிரசமுண்டணியிசைமுரல
மாசினைத்தளிராடுவமலர்க்கரநீட்டி
யாசினூட்டியமாக்களின்மரபுநின்றன்பாய்ப்
பேசுமங்கையர்நடித்தல்போற்பிறங்குவபாராய். (௧௪)

பூவுண்கோடரம்பொங்கரிற்குதிக்கின்றபோழ்தின்
மேவும்வாலினைவெவ்வராவெனமனம்விரும்பித்
தாவிமாமயில்பற்றுவதோய்ந்துளபுருடர்
போவநோக்கியமகளிர்கையீர்ப்பனபோலும். (௧௫)

ஊடியாண்மயின்மாதவிநீழல்புக்கொளிப்ப
வாடிவெங்கணன்மாழ்தல்போற்பெண்மயின்மறுகி
நீடுபிண்டியினிறைவுறப்பூத்தபூங்கொம்ப
ரூடுதேடியேயுலைந்துநின்றயிர்வனவுணராய். (௧௬)

குன்றவர்ப்புனம்வீழ்குரீஇயோச்சுகோற்பறையைக்
சென்றெடுத்தொருகோகுலமுழக்கிடச்சிறந்த
துன்றரம்பையினேரிணற்றுணர்களைத்தொடுத்து
மன்றலாற்றுவகடுவனோர்மந்தியைமதியாய், (௧௭)

களையமைந்தவாணுதலயிராணியின்கலவி
விளையுநன்னலந்துய்க்குமிந்திரன்மனம்விரும்பிக்
கிளைகளோடமராற்றியதருவினைக்கீழாய்
வளைதல்காண்பபோற்றிகிரிவான்வளைவனமதியாய். (௧௮)

வச்சைமாக்களின்மனைகளையகற்றியேவறிஞர்
மெச்சும்வள்ளியோரகத்திடைமேவல்போல்விரைந்து
நச்சிலாதசண்பகமலர்விலக்கியேநறைசால்
பிச்சிநேடிச்செல்பேட்டொடுபிரமரம்பாராய். (௧௯)

உழுவலன்பினைப்பெய்துளமார்வமோடொருகத்
தழுவும்வேசையர்பாற்பொருள்சிவறவளித்துப்
பழுதுதாங்கியவறிவிலிபோற்பழுமரங்கள்
குழுமிவீயுணக்கொடுத்தாசின்றுலைவனகுறியாய். (௨௦)

குரும்பைமாவினின்மாக்கனிகுரும்பையிற்குளிர்ந்த
கரும்புகந்தியிற்கந்தியுங்கரும்பினிற்கலந்து
சுரும்பர்பாண்டருசோலைவாயெங்கணுந்தோன்றல்
விரும்புநான்மறைப்பொருளெனவிளங்குவபாராய். (௨௧)

இளையபல்வளம்யாவையுமந்திரிக்கியம்பி
வளைகழற்புரவலன்மகனடந்துழிமதித்து
விளையுநெஞ்சினுநீண்டுநீண்டுயர்ந்தமண்டபமுங்
களைதிரைக்கடல்கடுத்தநீர்வாவியுங்கண்டார். (௨௨)

அன்னவாவியின்வளங்களையறிந்துரைசெய்ய
வுன்னலாவதோவும்பர்க்குமிம்பர்க்குமூராக
மன்னனுமற்றவர்கட்குமெம்மனோர்வகுத்துச்
சொன்னசிற்சிலவதிற்சிலநாமினித்தொகுப்பாம். (௨௩)

தீதடங்கியபுலப்பகையாவையுஞ்சிதைத்தே
யோதுபல்பொருட்சமயங்களுரைத்திடுமுரையை
யாதியந்தமில்லாததையறிவினாலறியு
மாதவத்தினர்மனமெனப்புனல்வதிந்ததுவே. (௨௪)

வானரம்பையராடலினரவமும்வளைகள்
கூனிரம்பிவாய்தொனித்திடுமரவமுஞ்சுரும்பர்
தேனிறைந்துபாண்மிழற்றியவரவமும்விரிந்த
பூநகழ்ந்ததேனிரங்கியவரவமும்பொங்கும். (௨௫)

நாளரும்பியநல்முளரிநாகிளவனமும்
வாளைமும்பல்புட்களுமலிந்திடுதுழனி
நீளும்பற்பலபாடைகணிரம்பியமாக்க
ளாளுமேழோர்நகரமெனவணிசிறந்ததுவே. (௨௬)

தாளமொப்பெனவெழுந்தவிண்டனிமுகிற்குலங்கள்
பரவையாமெனப்படுபுனலுழக்கிவாய்ப்படுத்தே
யுருவகன்றிடுமையமண்டபத்தின்மீதுயர்ந்து
கருதுமீசன்கைத்தநுவிதுவெனமழைகாலும். (௨௭)

மலரடங்கியவாவியின்வளையகன்கூலத்
திலகுபன்மணிராசிகளமைப்படனமனைநம்யா
னலகில்பூமகட்கமுதுணவென்றுகையமைத்து
நிலவக்காட்டுமோர்வள்ளத்தின்வளம்பினைநிகர்க்கும். (௨௮)

பருகுமாம்பலைக்கண்டலும்பங்கயங்குவியு
முருகுலாவுசெங்குமுதங்கண்மொய்யிதழ்விரிக்குங்
கருதிபஞ்செலப்பண்டுபோற்காட்டிடுங்காட்சி
பெருகுஞானமில்லாதவர்மதியெனப்பிறங்கும். (௨௯)

உலகமேத்தியபுலவர்நாட்டுளநல்மடவார்
மலர்கள்கொய்துநீள்வாவியிலாடுவமலிந்த
கலவியூடியபேடெனமேவாதிமங்கருதாச்
சல்சமீவரத்துண்டத்தாற்னேருமையிழுக்கும். (௩0)

கள்ளநெஞ்சகட்டவியர்கண்டனக்காற்றுத்
துள்ளும்வாட்கயல்கஞ்சத்திற்றுவக்குண்டுகிடத்த
றள்ளொணாப்பகைபெற்றவர்ருவர்கடனியே
விள்ளும்யோசனைகருதியசெயலினைவிரிக்கும். (௩௧)

கொண்டலைப்பொருகரிக்குழாங்கொடிகளாணீண்ட
மண்டபத்துறுகால்களிற்பிணித்துக்கைவாங்க
லண்டரானவரம்பரந்தடவியசிமய
விண்டிறலிருவேலைமுன்கடைந்தபோல்விளங்கும். (௩௨)

கற்றைவெண்மணித்துகையினுற்கவின்செய்பொற்படிக
ளூற்றுவானமுதுத பாற்கடனிகர்த்தொளிரும்
நற்றடந்திரைவாவியினங்கனைநோக்கிக
கொற்றவேந்தனுமமைச்சரேனைக்கங்கள்கூர்ந்தே. (௩௩)

சோலையைக்கண்ணுற்றபடலம்.

முற்றிற்று.

ஆகப்படலம்-௯-க்குத்திருவிருத்தம். சங.ச

அசனங்கொணர்தற்கேகுபடலம்.

அம்பந்தம்விழிகிளியின்மொழிசெம்பஞ்சாரடிச்சிறுசிற்றுடுக்கிடை
யின்றூர்கள்செய்யும்,வெம்பந்தமுழுவதுநீத்துலகமெல்லாம்,-வெண்ணீறைந்
தெழுத்துகண்டிவிளைவித்துள்ள சம்பந்தன்றனக்கருளியமண்வெங்காடுதனை
யகழ்ந்துதிருமதுரைதன்னிலென்றும், நம்பந்தப்படியடியார்க்கின்றுங்காட்டு
நம்சோமசுந்தரத்தைநண்ணிவாழ்வாம். (க)

வேறு.

பரிகணின்றிழிந்தவைகளுக்கரும்புனல்பருக்கி
விரியும்பொங்கரின்றருவிடைவிசித்துமற்றவர்கள்
வரிமிகுந்தொலிமலிந்தநீர்வாவியிற்புகுந்தங்
கரியநீர்குடைந்தருந்திமெய்யயர்வுதீர்ந்தப்பால். (உ)

கரையடைந்துவீற்றிருந்தனர்தென்றல்பூங்காவின்
விரையெலாங்கவர்ந்திவர்கண்மேன்மணந்தரவீசிப்
பீரைசெயத்திருமுகமலர்ந்துடல்புளகித்தார்
திரையினின்னமுதுண்டவர்போலுளஞ்செழிப்ப. (ங)

கோலயானவன்கண்வளர்குளிர்பயோததிபோற்
சீலம்வாய்ந்தபூவாவியிற்சீர்த்ததெப்பொருளோ
நாலுமாமுகத்தவன்றருநாட்டிடையிதன்க
ணேலநாமுளம்புரிந்தமாதவப்பயனென்றே. (ச)

பொன்னிறற்பொலிவிளிம்பினின்மணிக்குலம்பொருத்திச்
சொன்னதெய்வவான்றச்சராற்றொட்டபூகிழைத்து
மின்னொளாம்புகுந்துலாய்வரவிதித்தவிப்படிமே
லன்னம்வைத்துநாமருந்துதற்கவாவடைந்தனனால். (ரு)

வொட்சளையன்றியுநம்மனத்தியைந்த
வாவல்போக்குதற்கெவ்வழிமுடியுமென்றரசன்
கேவலத்துளம்வருந்தினனமைச்சனுங்கேளாக்
காவலாளனைப்பணிந்திதுகழறுவான்கனிந்தே. (சா)

வாட்டமென்கொனீமனத்தினினினைத்ததுவ்வாயாற்
கேட்டதுமுவந்தளித்துப்பின்கேட்பதுமளித்தற்
காட்டுனைத்தலையமைச்சனும்பாங்கனுமாகி
யாட்டுடன்றநானிலைசெயாதெதுக்குடன்வந்தேன். (எ)

விண்ணிறுதியவுலகிடைவிரும்பியோர்பொருணீ
யெண்ணுமுன்னுதவேனெனிலடிமையானென்னே
யண்ணலேயுனைத்தனிவைத்துச்செல்வதற்சகத்தி
னண்ணுந்துன்பினுலித்துணைதாழ்த்ததுநாயேன். (அ)

என்றுமேற்றிசையடையுமுன்னின்னமுதயினி
நன்றுதந்துனக்குதவுவனென்னநவிலா
நின்றவாம்பரியுகைத்தெழுந்தானெடுந்திசையுங்
குன்றமும்பெருங்கடல்களுந்தலைநிலைகுலைய. (௯)

பரியெழுந்ததுவிசையினுற்படர்திசைபரித்த
கரியிரிந்ததுகாசினிசுழன்றதுகணக்கி
லிருவிசும்புறுகோள்களுமுதிர்ந்ததிவ்வளவோ
வரன்மயங்கினனெனில்வேறெனையறவேன். (௰)

ஏகுமாநெறிவடதிசையியக்கர்கோனகர
மாகுமென்னவேயவிரொளிபரப்பியவிஞ்சி
மேகமாலைகடழுவநின்றிரவியும்வெள்கச்
சேகறும்படிதிருத்தியநகரொன்றுதெரிந்தான். (௧௧)

தங்கமாபுரியாகுமந்நகர்ப்புறஞ்சார்ந்து
மங்குறோய்மணிவாயிலைக்கடந்துநீண்மருகிற்
சிங்கவேறனான்சேர்தலுந்திருவினுஞ்சிறந்த
நங்கைமார்பலர்கூடினர்மயங்கினர்நவில்வார். (௧௨)

கதிருநாணியபணியினன்கவின்முகநோக்கா
மதியுந்தேய்ந்ததுதேய்ந்ததுமாரனல்வடிவம்
விதியினார்செய்தபிழையலால்விளைந்தழகொருவர்க்
கதிகமென்பதோரவதிகண்டறையுமாறெவனோ. (௧௩)

கந்தனோமெனிற்கண்களீராறிலைகாமன்
வெந்துதீர்ந்தனன்விண்டுமெய்கருகினன்விண்ணி
னிந்திரன்வரக்கருமஞ்சமொன்றுமீங்கில்லை
யெந்தமாநகரத்தாரணியவன்கொல்காணென்பார். (௧௪)

பவளமேனியானநெகனுப்பாற்கடலைப்பண்
டிவனுமாமுலையந்தரந்திரிதரக்கடைந்திங்
கெவர்கொலோதவநோற்றவராமுதுணையாமு
மவளையேபணிந்தாலதுபோதுமென்றயர்வார். (௧௫)

கலைவிலங்கினர்கைவளைதோற்றனர்கண்ணீர்
முலையின்முத்தெனவுகுத்தனர்முளரிவாய்முழுதும்
புலரமன்மதன்பகழியாற்புலிகண்டமான்போற்
றலைமயங்கினர்குழுக்கடந்தப்புறஞ்சார்வான். (௧௬)

பஞ்சியூட்டியபதங்களிற்பரிபுரங்கலிப்ப
வஞ்சிகாட்டியமருங்குலோர்வனிதையாலோர்ந்து
செஞ்சொலாளனற்றெருவகன்றொருபுடையிருந்த
மஞ்சுதோய்மணியாளிகைமறுகுறுமளவில். (௧௭)

வேறு.

மலர்தொடும்வாணிபம்மாறிலாவேலையாள்
கலகவேல்விழியினாள் கனகமாளிகையின்வா
யலகில்பல்சேனியானடைதலுமணமனா
னுலகமுண்டவனிவனெனமனத்துன்னினாள். (கஅ)

என்னகர்யாவணிங்கெய்துகாரணமெனப்
பொன்னனாண்முகமனோடுரைசெயப்புகலுவா
னன்னையேசொல்வதிற்பயனுனக்காவவோ
மின்னுசெங்கதிருமேற்கடலின்வாய்விழுமுனே. (க௯)

சேணதர்ப்புகுதுமோர்செல்வினாகினேன்
சோணவான்விதுவெனக்குளிரும்வாணுதலினா
யாணர்தேவமுதுபோலயினியீந்திடுகென
வாணிமேலுயர்பொனுமளவிலாதருளினான். (உ0)

வாங்கிமென்மலர்தொடுவாணிபமானினி
தூங்கருமுவகையோடமுதுபல்சமையல்செய்
தீங்கிவனுழைதருமளவையின்கதிர்கட
லோங்குநீர்மூழ்கினானுலகிருண்மூழ்கின. (உக)

கதிரவன்கடல்புகக்கனியிருள்படிபுக
மதிமகன்றுயர்புகமூரிவான்மஞ்சினம்
புதியமின்னலும்விழப்பொருவரும்முருமொடும்
பொதியுமாதிரமெலாம்பொழியுமாமழையரோ. (உஉ)

ஊழினாண்மழையின்மேன்மழையெனவும்பரா
ரேழுகாளங்கள்வாய்குமுறியேயெங்கணு
மாழிநீர்வறள்படவள்ளியேபொழிதலும்
வாழியான்சேதனமாறிநின்றெண்ணுவான். (உ௩)

வஞ்சர்தீவினைபுரைமங்குல்வாயெங்கணு
மஞ்சவேமஞ்சிழீஇயம்பினால்வெம்பரி
யெஞ்சுமன்றுனெறியேகுமன்றுவிறை
துஞ்சும்பிரிவெனுந்துயர்சுடுங்கனலினே. (உ௪)

சோலைவாய்மழையினாற்றுயில்வுறாதிறைவனுஞ்
சாலவெந்துயருழந்தழியவோதாயனாள்
கோலவாண்மனைசுகங்குறுகினேனெனில்விடா
தேலுமென்னடிமைநன்றென்றுநின்றேங்குமால். (உ௫)

அள்ளலாரிருளின்வாயரசனுந்தமியனாய்ப்
புள்ளெலாந்துணையெனப்புலராவோதெய்வமே
கள்ளமாயெனைமணங்கவலைவைத்தாயெனா
வெள்ளமுஞ்சிறிதெனவிழிகணீர்சொரியுமால். (உ௬)

திங்களீரைந்துசூல்சேர்கிலாதன்றியே
துங்கவன்றேன்றுநாடொட்டுமிக்காறுமே
தங்கிவேறிறையினுந்தவறிவேறுழைபுகே
னிங்கிராமுழுதுமெவ்வகைதணப்பேனென்று. (௨௭)

செங்கணீர்வாரவேதெருமலோடயருவான்
பொங்கிருட்டிலைவுறும்பொழுதுகாறிறைவனைக்
கங்கைசூடியசடைக்கானவாகாவென
வங்கைமாமலர்சிரங்குவியவஞ்சலிசெய்வான். (௨௮)

இன்னவாதுயருழந்திருளின்வாய்மருளுவான்
றன்னைநீங்கியதாரதலமளித்தொளிரும்வேன்
மன்னவன்றனியனுய்வாவியில்வைகுபோழ்
தன்னவற்குற்றவாறியாவையுமறைகுவாம். (௨௯)

அசனங்கொணர்தற்கேகுபடலம்.

முற்றிற்று.

ஆகப்படலம் ௰-க்குத் திருவிருத்தம். ௬௬௧.

நாகம்வெட்டியபடலம்.

தங்குகூடலி-லங்கம்வெட்டிய
மங்கைபாகனைச்-செங்கைகூப்புவாம். (௧)

வேறு.

போதலர்ந்தபுனற்றடமீதுநன்
மாதர்முல்லைமலர்ந்தொளிர்சோலைவா
யோதுகிள்ளைகுயிலொலியொண்குழைக்
காதிலேற்றிருந்தான்புவிக்காவலன். (௨)

அந்தவேலையகன்மலர்வாவியி
லந்தரத்திடியாமெனவார்கலி
முந்துவெண்டிரைநீரின்முழக்கென
வந்ததோரொலிமண்ணுமறுக்கொள. (௩)

ஒலியெழுந்திடவும்பருலைந்தனர்
வலியநாகர்மறுகியிரிந்தனர்
மலிகொண்மாதிரயானைமயங்கின
புலிகொளீசன்கைமானும்பதறின. (௪)

நனையவிழ்ந்தநறும்பொழில்வைகிய
புனையும்பொற்கழற்பூமகனேக்கியே
யினையபேரொலியாதெனவெண்ணியோர்
வினயமுந்தெரியாவகைவிம்முவான். (௫)

மஞ்சிடிப்பெனின்மேகம்வயங்கில
வெஞ்சலின்றிமிருகங்களெய்தில
வஞ்சொன்மீறுமவந்திகைதங்கிய
மிஞ்சுகாவிடைவேறொன்றுதோன்றில. (௬)

சண்டனும்பகடுந்தலைசாய்த்திட
வண்டகோளகைக்கப்புறத்தெட்டிய
வெண்டலங்கள்சுழன்றிரிந்தேமுற
மண்டுபேரொலிவந்ததியாதெனு. (௭)

பண்ணமைந்தபருவலியானையான்
கண்ணிமைத்திலனெஞ்சங்கலங்கில
னெண்ணுஞ்சீயக்குருளையெனச்செழுந்
தண்ணங்காவிற்றனிநின்றுலாவினான். (௮)

ஆயகாலையணிமலர்வாவியிற்-
றூயதோயஞ்சுழித்துவகிர்ந்திடத்
தீயையொப்பெனக்கட்பொறிசிந்தியே
காயும்வெஞ்சினக்கட்செவிவந்ததே. (௯)

மலைகள்யாவுமொருவழிவைத்திடி
லுலைவொணாதவுடற்புரையொக்குந்தண்
ணலைகொளுங்கடலேழினகலமோர்
விலைமணிப்படமொன்றுவிரிக்குமால். (௧௦)

காவுநீறெழக்கானகநீறெழத்
தேவர்நாடுந்திசைகளுநீறெழப்
பூவுநீறெழப்பொங்கும்விழிக்கடை
மேவுசீற்றவிரிகனல்சிந்தியே. (௧௧)

அழலுகுத்துப்படங்களோரைந்தினுற்
பழுதிலாசையிருள்படப்பாரின்மே
லெழுதுமேனியிறைவனைக்கொல்லவென்
றழிவுகாலம்பின்றூண்டவடைந்ததே. (௧௨)

மண்டுசீற்றமலிந்தெழுமாசுணந்
தண்டலைக்கண்புகுதலுந்தார்புயன்
கண்டுவெட்டிக்கருதிக்கைநாந்தகங்
கொண்டுதுண்டங்குறைபடவீசினான். (௧௩)

வீசவீய்ந்துவிழுந்ததுசெம்புனல்
வாசநாண்மலர்ச்சோலையைவாறியே
யோசைவாருதியூழிப்பெருக்கென
வாசைதோறுமலையெறிந்தோடின. (கச)

வரிகொளுகமடியப்பணம்பிழந்
தரியசோதிமணியிரண்டாழியிற்
பருதிவேறிரண்டுற்றெனப்பாய்திரைக்
குருதிமீதெரிவீசக்குமானும். (கரு)

எடுத்துநன்கரஞ்சேமித்திறுகுறப்
பிடித்தவாளிற்பிறங்குகுருதியுந்
தொடுத்துமெய்யிற்றுலங்குகுருதியு
மடுத்தவாவியடைந்துகழுவற்காய். (கசு)

நாகம்வெட்டியபடலம்.

முற்றிற்று.

ஆகப்படலம் கக-க்குத் திருவிருத்தம் சஎஎ.

பூலோகரம்பையைக்கண்ணுற்றபடலம்.

வானகமுமண்ணகமுமெடுத்துண்பான்போல்
வளர்பசியால்வருந்துகுடைக்காடனுக்குப்
போனகமும்வைகைநதிப்புனலுந்தந்த
புராரிதனைப்புனிற்றேனக்குருளைக்காகக்
கானகஞ்சென்றினியமுலைப்பால்கொண்டூட்டிக்
கலைபயிற்றிப்பெறும்பேருகாட்டித்தாய்போற்
றானகமுற்றருமையுறவளர்த்தகூடற்
றனிப்பரமன்றனைத்திருத்தாள்சார்ந்துவாழ்வாம். (க)

வேறு.

குளத்தினையவ்வழிகுறுகியாங்கதின்
றளத்தினைநண்ணியேதரங்கத்தண்புன
லளிக்கையாற்கவரவப்படியினீங்கியே
நளிப்புனரூழ்ந்தவ்விறையுநண்ணினன். (உ)

ஒருபடிக்கொருபடியுயர்ந்ததண்புனல்
பொருபடியாயிரந்தாழ்ந்துபோயின
மருபடிதீர்மிலைமன்னுமயமாய்த்
தருபடியாவையுந்தணந்துசென்றனன், (௩)

சென்றனன்படியெலாந்தீர்ந்துசேவக
னொன்றியகீழ்த்தளப்பரப்பையுற்றன
னூன்றியபுனலெலாந்தோமிலாதொளிர்
பொன்றிணிகவிகையிற்பொலிந்தமீமிசை. (௪)

உற்றவானலைப்புனலுயர்ந்துவிண்மிசை
பற்றியமாட்சியும்பளிக்குப்பொற்படி
யற்றதுநோக்கியோரயிர்ப்புமுற்றுறா
மற்றதன்சூட்சியைமனத்திலுன்னுவான். (௫)

அவ்வயினின்றிடுமளவைகீழ்த்திசைச்
செவ்வியபொன்மணிக்கதவஞ்சேர்த்திய
வொவ்வலிலுயர்நிலையொன்றுகண்டனன்
றெவ்வடுகுரிசிலுங்கடிதுசென்றனன். (௬)

பொற்கதவடுத்துறுபூட்டைப்பூமகன்
றற்கையாற்றீண்டலுந்திறந்ததம்வினை
முற்படத்துறந்தவர்க்கின்பமுற்றும்வந்
தற்புதங்கொளச்செய்யுங்காட்சியன்னவே. (௭)

திறந்தனதீவினைதுறந்துதிண்மைசா
லறந்தலைநிரப்பியவரசர்கோமகன்
சிறந்ததம்முளத்தினிற்றிப்பியங்கொடு
பிறங்குமவ்வாயிலின்பெருமைநோக்கினான். (௮)

வாவியம்புனல்புகாவண்ணம்வாயிலி
லோவவில்சூட்சியொன்றுஞற்றிவைத்துள
தாவலிலியந்திரத்தன்மைதேர்ந்துபின்
காவலனாங்கொருவழிகண்டானரோ. (௯)

இவ்வழியாற்றியவியல்பையெண்ணுங்காற்
செவ்வழியாமெனத்தெரிதற்பாலது
வெவ்வழியாயினுமேவினாலிதி
லெவ்வழியாயினுமெய்துமென்னவே. (௧௰)

நடந்தனன்பொற்படிநாலைஞ்ஞூற்றையுங்
கடந்தனன்கர்வதங்கணக்கில்சென்றனன்
றடந்திரைப்பாற்கடறயங்குந்தன்மைபோற்
படர்ந்தபூம்பழிக்குடைப்பாரைமீதரோ. (௧௧)

ஐயிருயோசனையகலமுள்ளது
செய்யவாய்நீளமவ்விரட்டிசேர்ந்தது
மையறுமலர்மகள்வதனமாண்பது
பொய்வினையவித்தவருலகம்போன்றது. (௧௨)

சூரியரொருவழிதொக்கமாண்பது
பேரரவிருக்கையின்பெற்றிசான்றது
காரியமுனிவருங்காண்கிலாதது
கூரிருட்பிழம்பையுங்குலைக்குங்கோட்பது. (கந)

தாமரைவனமது தருவின்காவது
மாமணிக்கோபுரம்வயங்கலானது
நாமுதற்றவத்தினோர்நயக்கும்வீடது
சேமநூன்மயன்கரந்திருத்திச்செய்தது. (கச)

பந்தியின்முத்தினம்பரப்புபேரொளி
சந்திரனெழில்கெடத்தழைக்கலாயதவ்
விந்திரனுலகமுமிணையிலாததோ
ரந்தமாளிகையினையரசனோக்கினன். (கரு)

தோணிலையாமெனக்குயின்றமுத்திமிழ்
வாணிலைப்படியினைக்கடந்துமாசிலாப்
பூணிலைமார்பினன்புக்குவைகிய
மாணிலைப்பொருளெலாமலர்க்கண்ணோக்கினன். (கசு)

செவிதருகற்பகநாடுந்தெண்டிரைப்
புவிமுதலுலகமும்போற்றப்போன்றுள
குவைமணிவெருக்கைபூங்கோவைமான்மத
மவிரிழையணிதுகிலளவிலான்றதே. (கஎ)

மங்குலுமாசுறுநீலமாமணி
யங்கதைத்தேய்த்தொளியவிருஞ்செம்மணி
யெங்கணுமிளநிலாவெறிக்கும்வெண்மணி
பங்கமிலொருவகைபகரற்பாற்றோ. (கஅ)

பளிங்குடையொளியிற்பசியதேறல்கா
ணளந்திகழ்பொறியெனநகைவிளங்கிட
வளந்திகழ்மனைகளங்குவான்கர
மளந்தொடுத்தமைத்தபொற்பாவையாடுமால். (ககூ)

கமுகெனமரகதக்கால்கணுட்டிமேற்
றமணியத்தாம்பினூற்றொடுத்துச்சாலமை
யுமிழ்நகைமணிகளாலொழுங்குநீற்றிவா
னமுதவாய்ச்சியரிலாதசையுமூசலே. (உ0)

பூணியல்வனமுலைப்பூவைமார்நிகர்த்
தேணியல்பித்திவானிலங்குமோவியம்
பாணியல்வீணையாழ்பலவும்பற்றியே
மாணியலிசையெழாவயங்குமோர்புறம். (உக)

செம்மணிவிதானமுஞ்செறிந்ததொங்கலுஞ்
சும்மையாய்ப்பனிமலர்சொரிந்தசேக்கையு
மிம்மையைத்துடைப்பவரெய்துபூமிபோற்
பொம்மல்கொண்டளவிலபொருந்துமோர்புறம். (௨௨)

தமிழெனச்சுவைதருதனித்தண்டேறலு
மமிழ்தினும்பாலினுமரியமூரலு
மிமிழ்தருகருணையும்பிறவுமெஞ்சிலாக்
கமழ்நறுங்கனிகளுங்கணக்கிலோர்புறம். (௨௩)

வயின்வயின்விளங்கியமணிகளாதிய
செயிராறுபொருளெலாநோக்கிச்சேவகன்
வெயில்புகாமாளிகைவிதத்தையோருங்கான்
மயிலனாருறையுள்போல்வயங்குகின்றது. (௨௪)

இன்னமுமறிகுதுமென்னவேகுழி
மன்னியகிள்ளையுமயிலும்பூவையு
மன்னமுநவ்வியுமணித்துவாழ்வுறும்
பன்னருஞ்சேக்கைபஞ்சரமும்பார்த்தனன். (௨௫)

பண்டெவரும்படையாதபண்டங்கள்
கொண்டெழிற்றிருநலங்குலவுமிம்மனை
யொண்டவருறையுளீதன்றிங்கோதொணைப்
பெண்டணிவாழ்வுறுபெற்றியென்னவே. (௨௬)

எழுநிகர்தோளினனெண்ணியேகுழீஇ
மழுவளைசக்கரம்வரிவிற்றோமரங்
கழுவியல்கப்பணங்கலப்பைசூலம்வே
லழிவிலாப்படைக்கலத்தமைவுநோக்கினன். (௨௭)

இயக்கனோவுரகனோவெவன்கொலோவொரு
சயத்தவன்முயற்கறைதவிர்த்ததிங்களை
நயக்குவாண்முகத்தியைச்சிறையினட்டதோ
மயக்கமாயிம்மனைவயங்குகின்றதே. (௨௮)

நக்கசெம்மணிபொருமனையினற்பெருந்
திக்கெலாந்தேடிநாஞ்செல்லுவோமெனிற்
றக்கதோர்பொருளினைச்சார்தலாமெனப்
புக்கியேபூவறைதுருவிப்போகுங்கால். (௨௯)

இன்னிசைத்தமிழெனவமுதமீதெனப்
பன்னரும்பாகெனப்பசியதேனெனத்
துன்னுபொன்வீணையின்றுழனிகேட்டனள்
மன்னனுமத்திசைமதித்துமேயினன். (௩௰)

இங்குவருவோனையெதிரெய்தியினிதாகச்
சங்கையனுமானமகலத்தனிவினவ
னங்கடனெனக்கருதிநங்கையுமெழுந்தே
பொங்கியபதத்துணைசிலம்பொலிபுலம்ப. (௨௯)

செங்கயல்விழிக்கடைசெவித்துணையழைப்பப்
பங்கயமலர்க்கையுறுவீணையொலிபம்ப
வங்கமுழுதும்பணிமதிக்கலைகளாயக்
கொங்கையிணைமென்கொடியிடைக்கிடர்கொடுக்க. (௩௦)

அன்னமெனவேகிமயிலாகுமெனமன்னன்
றன்னெதிர்புகுந்தயலொதுங்கிவெளிதாவு
மின்னெனநுடங்குமலர்மென்கொடியெனுல்கிக்
கன்னிகையுநாணமொடுதன்றலைகவிழ்ந்தே. (௩௧)

புன்னகைபரப்பிவிழியின்கடைபுரட்டிச்
சொன்னமணிவாய்மலர்திறந்தமுதுதுள்ள
வெந்நகரமேதுகுலம்யாவர்மகனஞ்சா
மன்னியிவண்வந்தவகையென்கொல்சொலுமையா. (௩௨)

மூவர்முனிவோரமரர்முற்றுமுணராத
வாவியுளிறங்கிவழிகண்டுவரவல்ல
காவலவமற்றெவரினும்பெருமைகைக்கொண்
டேவல்கொளுநின்னிலைமைசொல்லவியல்பாமால். (௩௩)

என்றுமடமாதுரைசெயின்னமுதுதேக்கா
நன்றெனமலர்ச்செனிகுலுக்கிநகைசெய்யா
மின்றிகழும்வாள்கரமிலங்குபுயவீர
னின்றுபினுறுங்கருமமுன்னியிதுநேர்வான். (௩௪)

என்பெயருமென்குலமுமென்பதியுமற்றை
நன்கருமமுந்தெரியவெண்ணிநவில்கின்ற
மின்பொருமருங்குல்வடமேருமுலைமானே
நின்கருமயாவுமறிதற்குளநினைந்தேன். (௩௫)

அல்லிரியவெண்கதிர்பரப்பிவிணமர்ந்த
வல்லைமதியிங்ஙனமறைந்துறைதன்மானும்
வல்லியிடையாரொருவரின்றிமயில்போலிவ்
வில்லிடையிருந்தனையிதெண்ணியயர்கின்றேன். (௩௬)

உள்ளபடிநின்பெயரையூரையுறவோரைக்
கள்ளமகலப்புகறனின்கடனெனச்சீர்
வள்ளலுரைசெய்யமடமாதுதனதுள்ளங்
கொள்ளைபடநின்றுயிர்குழைந்திதுகரைப்பள். (௩௭)

வேறு.

விழியழன்மாண்டசம்பராரிநற்றவத்தைமேவிப்
பழியகன்றிடச்சீர்வாய்த்தபடிவமொத்தொளிருமேனி
யெழுநிகர்தோளாய்நின்பாலெனக்குறுகருமமெல்லா
மொழிகுவன்றடைவேறில்லையாயினுமொழியக்கேண்மோ. (௫௮)

மிஞ்சுபாதலத்திற்பாரில்விசும்பினிற்கிடைத்தற்கெட்டாச்
செஞ்செவிமுழுதும்வாங்கித்தனதுமாதவமுஞ்சேர்த்துக்
கஞ்சனின்னுருவநீட்டிக்காட்டினான்வடிவுக்கேர்ப்ப
வெஞ்சலிலாயுளாற்றுமெதணியுளமிரங்கிற்றம்மா. (௫௯)

இன்றுநீதணைப்புற்றப்பாலேகுதலின்றியீங்கு
நின்றிடிற்றப்பாதுன்றனாருயிர்க்கிறுதிநேரும்
நன்றுநின்னழகுமுற்றுங்கண்டுளநாயேன்பின்னும்
பொன்றுதல்காணற்காற்றுமோவெனதுள்ளம்பூம. (௬௦)

ஆதலாற்காலந்தாழாதப்புறமகன்றுநீயும்
போதலேகருமமென்றுபூங்கொடிவருந்தாநிற்பப்
பேதைதன்குணனும்பேச்சுமொழுக்கமும்பிறவுநோக்கிக்
கோதிலாதுலகங்காக்குங்கொண்டலுண்டாட்டங்கொண்டே. (௬௧)

செழுந்தனியழகுநீட்டிச்செய்துளமலரோனெற்கிங்
குழுந்தினுண்ணியவாயாயுளூற்றினனென்றுன்வாயான்
மொழிந்தனைமுத்துமுத்தாய்முலைத்தடங்குழிப்பக்கண்ணீர்
பொழிந்தனைவாளாநைந்தாயுள்ளவாபுகன்றிடாமல். (௬௨)

உள்ளமுள்ளியவாகொண்டுகோப்பிலாதுவப்பமென்பூங்
கிள்ளைநன்மொழியாயென்பாற்கிளத்தலையெனினுநின்றன்
கள்ளமுமிவனுற்றூர்ந்தகருமமுமெனக்குநேருஞ்
சள்ளையுமுணர்வுற்றேனென்றீதையுஞ்சமைப்பதானேன். (௬௩)

தொல்லைநின்மாபுக்கொவ்வாதொருவனாற்றுன்பமுற்றிவ்
வில்லிடையென்றுநீங்காச்சிறையிடையிருந்தாய்போலும்
வல்லவன்வந்தாலென்னைக்கொல்லுவானென்றுவாடிச்
சொல்விறகென்றுங்கண்டேனின்பெருஞ்சூண்மற்றேதோ. (௬௪)

சக்கரத்தலைவன்மேலைச்சதுமுகன்வலாரிநீண்ட
திக்கமரெண்மர்மற்றைத்தேவர்தானவராயுள்ளா
ரொக்கவெஞ்சமரிலேவந்துடற்றினுமூழிக்காலை
முக்கணான்முடித்தாற்போலமுடிக்குவனனையார்வெல்வார். (௬௫)

ஆதலாலெனதுகேதமெண்ணுதலகற்றிநெஞ்சிற்
சூதொழித்துன்னையுள்ளவாறுநீசொல்வாயென்னப்
பூதலத்தரசன்கூறப்பூவையுமிவனாலென்றன்
றீதுபோய்வாழுநாளின்றுளதெனச்சிந்தைசெய்தே. (௬௬)

பூலோகரம்பையைக்கண்ணுற்றபடலம்.

உருவினிற்சில்லோர்புத்தியூகத்திற்சில்லோர்வீரம்
புரிதலிற்சில்லோர்மாறபொருளினுஞ்சில்லோரின்றி
யொருமுகமாகப்பெற்றோரிவனொழிந்துவரிசூழ்ந்த
பெருநிலமதனில்யாரைத்தெரிந்துரைபேசலாவேன். (௬௭)

உள்ளதைமறைத்துவேறொன்றோதினுமதனிலுள்ள
கள்ளமுமறியவல்லானிவனுழைகரப்பொன்றின்றி
விள்ளுதல்விழுமிதென்றுவேட்கையுற்றபலநீங்கிக்
கள்ளினுமினியதீஞ்சொற்கன்னியுங்கழறுவாளால். (௬௮)

காற்றினைக்கனலைமண்ணைக்கடலினைக்கடைநாடோற்றுங்
கூற்றினைமாற்றவல்லகுறுந்தலைப்பணமைந்துள்ள
சீற்றவாளரவொன்றனைச்சிறையிடைச்சேர்த்ததின்றோர்
வேற்றுருக்கண்டான்மாய்க்கும்விபுதராற்கொல்வும்வீயா. (௬௯)

போயதுவெளியிலீங்குபுகுது ன்வரவுகண்டாற்
றீயெழச்சீறிமாய்க்குமென்பதோர்தியக்கஞ்சேர
நோயடைந்தவர்போனின்றேனலதுநானுவல்வாயென்ற
நாயகனதுவார்த்தைமறுத்துரைநவிறற்பாற்றோ. (௭௦)

பாதகவுருக்கெழீஇயபாந்தள்வாய்ப்பட்டுமுனீங்கிப்
போதலேகருமமன்றெனப்புந்தியினினைக்கின்றேன்பி
னேதுநீசெயினுஞ்செய்கவென்றனள்சிரித்துத்தோன்றல்
வேதனைவிலங்கமாதுக்கிதனையும்விரிப்பதானான். (௭௧)

பாலருக்கணங்குதோன்றப்பாம்புபாம்பென்றதெண்ணீர்
வேலைசூழ்ஞாலமவாளாவிளம்புதல்கொண்டுசொற்ற
சீலயொள்ளியதன்னுள்ளந்தெரித்ததுமேலுமந்த
வாலமார்பாந்தள்வந்திங்கென்னையென்னாற்றற்காற்றும். (௭௨)

கன்னிநீகன்னிநெஞ்சங்கரைவதுதவிர்தியந்தப்
பன்னகந்தன்னைவாளாற்படுத்தனனாவ்நீத்துப்
பொன்னகர்புக்குமீளாதுன்மனத்துனியும்போன
பின்னுனக்காவதேதுமுளதெனிற்பேசுகென்றான். (௭௩)

மன்மகன்புகன்றவார்த்தைவன்பிணியாளர்க்காங்கு
நன்மருந்தளித்தாற்போனாரிதன்செவியிற்கேளா
மென்மயிர்பொடிப்பவங்கமெலவுதீர்ந்துடல்பூரிப்பப்
பொன்மலர்பொதுளவாசம்பொருந்துபூங்கொம்பர்போன்றே. (௭௪)

போயதுபுயங்கமீண்டுபுகுந்திலபொழுதுதீர்ந்து
மாயதாலழிவுண்டென்றற்கையுறவில்லையிந்த
நாயகனுரையுமெய்யேயென்றுளநயந்தாளாகி
யேயவன்றன்பாற்பின்னும்வினயமோடிதனைச்சொல்வாள். (௭௫)

நன்றுநன்றுரைத்தாய்நின்போனபாதிபர்தமக்கேயன்றி
வென்றிமற்றொருவற்கெய்தாதென்பதுசுதம்வீ
நின்றரமளவைத்தாகாவதனையெவ்வுழியினேர்ந்து
கொன்றனையென்னையான்மற்றினிச்சொலுங்கூற்றுமுண்டோ. (௭௬)

ஈசனுமாலுமேனையிமையவர்குழுவுமீண்டி
மாசுணந்தனக்கோரின்னல்வருவிக்கமனத்திற்றோரா
ராசுகஞ்செறிந்ததுணியனைமந்தநோளா வாளால்
வீசினேனென்றசொன்னாய்விழுமதுன்வீரமன்றோ. (௭௭)

தோற்றியவுலகுக்கெல்லாங்கூற்றெனத்தோற்றமார்ந்த
மாற்றருஞ்சீற்றமிக்கமாசுண ன்னலென்னை
யூற்றமற்றிறந்ததென்றிங்குரைசெய்த ற்றுநோக்கி
னூற்றிசைபரிக்கும்யானைநரியினுன்மாண்டதொக்கும். (௭௮)

வெங்கயங்கோடிகோடிமேவிநின்றடர்த்தபோதுஞ்
சிங்கத்தையூறுகாணுந்திறலுடைத்துளவோவையா
விங்குநீகாணமின்றியியம்புவதென்னையென்னுச்
செங்கையைக்குலுங்கக்கொட்டிச்சிரித்தனனிலம்புசிந்த. (௭௯)

சிரித்தலுஞ்செம்மனேக்கிச்சற்றமற்கொண்டானேனு
முருத்துறணகையாண்மீதுவெறுத்துரைமொழியானுகிப்
பருத்தபொன்முலையாயுன்மேலருத்தியாற்பகர்ந்தேனல்லேன்
விரித்தபூம்பொதும்பர்நாப்பண்மேவினானிருக்கும்வேலை. (௮௦)

காலனும்வெருவவிண்ணோர்கண்முகிழ்த்தொடுங்கமற்றை
ஞாலமுநடுங்கச்சீறிநாலொருதலையநாக
யேல்வருமளவில்வாளால்வீசினேனிரண்டுதுண்டாய்
வால்சுருண்டுடலங்குன்றிமடிந்ததுமண்மேலம்மா. (௮௧)

அத்தலைமடிந்தநாகத்தலைபிளந்தவிருஞ்சோதிச்
சித்திரமணிபிரண்டுதெரித்ததென்னுழைசேர்த்தே
னித்தைநீகாண்மினென்றுகாட்டினுனிருகணேக்கி
முத்தணிநகையினுளுமுகமலர்ந்தார்வமுந்த. (௮௨)

பாருளமணியின்மேலாய்ப்பயோததிபிறந்துமாயோன்
மார்பினிலிருந்ததெய்வமணியுமிம்மணிகட்கொவ்வாச்
சூரியனொளியுந்தோற்குமெனில்விலைதொகுத்துச்சொல்லற்
காருளர்நாவுமீராயிரமுளவனந்தனல்ல ல். (௮௩)

நம்மையிச்சிறையிலிட்டநாகத்தின்றலையினுறுஞ்
செம்மணியிவைகளல்லால்வேறிலையென்றுசேர்ந்தே
கொம்மைவெம்முலையாளின்னநயகாயகன்கோட்பாடெல்லா
மம்மநானினவித்தேவேனென்பதோபார்வமுற்று. (௮௪)

பூலோகரம்பையைக்கண்ணுற்றபடலம்.

பாம்படியுடையானேனும்பாம்பினைப்படுக்கற்பாற்றோ
தேம்படிதாராயிந்தமணிகள்போற்றேசுகொண்டு
நாம்படியளவைசெய்யாநவமணிராசிநீண்ட
தூம்படியறங்குவாயில்கிடந்தவைசூழநோக்காய். (௮௫)

அன்னவைகளிற்கவர்ந்துகாட்டினையதனைமாற்றி
யென்றுடைமணிகளென்றிங்கியம்புதற்கெனதுகையாற்
சின்னங்கள்பொறித்ததுண்டோதெரியல் சூழ்மார்பாநின்சொற்
றன்னையெப்படிநானம்பித்தெளிவுறுந்தகைமைத்தென்றாள். (௮௬)

சொன்னதுசற்றுநம்பாத்தொயின்முலைமயிலினாளுக்
கென்னநானினிமேல்வேறுபுகலுவேனென்றுவாடி
மன்னவனணங்கேபன்னூல்வகையறிந்தாலுமாதர்
தன்னியன்மடைமைநீங்காரென்பதுசரதமாலோ. (௮௭)

வஞ்சமேவடிவுகொண்டமாதரார்தமக்குநேரே
யஞ்சமாமுகன்சொன்னூலுநிசமெனவறிவிற்றேரார்
கஞ்சவேல்விழியாயென்சொனிசமெனநீயுங்காதிற்
கொஞ்சமுங்கொள்ளப்போமோகொள்ளினுங்குறைவேயன்றோ. (௮௮)

வீட்டியவதுவும்பொய்யேவிழுந்ததும்பொய்யேயாந்தட்
சூட்டுடைமணியும்பொய்யேசூழுமென்னுரையும்பொய்யே
கோட்டுமென்முலையாய்நின்கண்குறிக்கொளக்குறைந்தபாம்பைக்
காட்டினாலதுவும்பொய்யேயென்றுரைகழறுவாயே. (௮௯)

என்றலுமகத்தினுள்ளேயெழுந்தபேரிரும்பூதெய்திக்
குன்றெனப்பணைத்துவிம்முங்குடமுலைமடநல்லாளும்
வென்றியிலிவனேபேசும்விநயத்துக்கிவனேகாம
னன்றெனிலெவர்க்குமேற்கொள்ளழகுக்குமிவனேயம்மா. (௯௦)

என்பெருந்தவமோவென்முன்னவர்செய்மாதவமோவிந்த
மன்பெருமகனிங்குற்றானிவனைநான்வரனாக்கொண்டு
முன்பெருங்குறைகடீர்ப்பேனென்பதோராசைமுந்தத்
தன்பெருமனத்தினுள்ளேதகைந்துபின்னிதனைச்சாற்றும். (௯௧)

வீட்டியபாந்தடன்னைவிரும்பியென்கண்ணிற்காணக்
காட்டுவதுண்மையென்னிற்கருத்தினிற்றெளிவிலார்போற்
றாட்டுணைசலிப்பவாதஞ்சாதித்துத்தளர்ந்துநின்ற
கோட்டியென்கருமமென்றாளிவனலங்கொள்ளநின்றாள். (௯௨)

சொன்னசொன்னன்றுநன்றுதுடியிடைத்தோகாயந்த
மின்னுவாளுரகமாண்டவெறிமலர்ப்பொதும்பர்மேவி
நின்விழிகளிக்கநானுங்காட்டுவேனேரேயென்றான்
மன்மகனுறுதிநோக்கிமடவரன்மறுத்துந்தேர்வாள். (௯௩)

மூவரேயெனினுமற்றைமுனிவரேயெனினுந்தெண்ணீர்
வாவியுளிறங்கியிங்குவருவதற்கரவின்சென்னி
மேவியமணிகளின்றேல்வேறென்றலாகாதென்னைப்
பூவையுநினைந்துளையம்போக்கித்தன்னுடல்பூரித்தே. (௯௪)

கண்ணினாற்கண்டாலன்றிக்கட்செவிமாய்ந்ததென்றிங்
குண்மையெத்தனைநீசொற்றபோதினுமுறுதிகொள்ளே
னண்ணலேயென்றாள்பின்னென்செய்குவானரசனம்மா
பெண்ணருங்கலமேயந்தப்படிசெயப்பெறுவேனென்றான். (௯௫)

வீய்ந்ததுமெய்யேயென்றால்வேந்தனுக்கணிபூமாலை
வேய்ந்துடன்வாழ்வனின்றேல்வெறுத்துயிர்விடுவனென்றே
தேய்ந்தசிற்றிடையினாளுஞ்சிந்தையுணினைந்தாளாகி
வாய்ந்தகைவீணையேந்தியெழுந்தனண்மயில்போலம்மா, (௯௬)

பின்றொடர்ந்தேகிச்சென்றாள்பிடியுமால்களிறும்போலத்
துன்றியசுரங்கமெல்லாந்தணந்துநாய்த்தோயமல்கும்
மின்றிகழ்மலர்ப்பூம்வாவிவழிதரவெளிகண்டேறித்
தென்றல்வந்தசைக்கவாசஞ்சிந்துபூஞ்சோலைசேர்ந்தார். (௯௭)

மலைபிளந்திரண்டுகூறாய்வயங்கியதென்னவைந்து
தலைநிலைகுலையவாளாற்றரிப்புண்டுவாயிற்சோரி
யிலைமரந்துவன்றிநீண்டபொங்கர்களெங்குமோடி
யலைதரவுயிர்போய்மண்மேற்கிடந்தபேரரவைக்கண்டாள். (௯௮)

கள்ளவாளரவுமாண்டுகிடந்ததைக்கண்ணிற்கண்ட
பிள்ளைமென்மொழியினாளும்பேச்சயர்ந்துயிர்ப்புவிம்ம
வுள்ளெழுமுவகைவெள்ளந்தலைப்பனித்தோங்கத்துன்பந்
தள்ளினண்யேன்மேலின்பந்தருக்கினாடைந்தாண்மெய்யே. (௯௯)

வாடிநாளனேகம்பட்டமனத்துயர்வறுமையெல்லாம்
வீடினாளரசன்சீர்த்திவீணையிலிசைத்துக்கானம்
பாடினாள்பரதங்குன்றாவிதிமுறைபதங்கள்சேப்ப
வாடினாளுவகைத்தேறலள்ளியுண்டவசமானாள். (௧00)

மாசுணமதனாற்பட்டமாசினைத்துடைத்துமுக்க
ணீசனேவறிஞரானவேழையேற்கிரங்கிநின்னை
யாசையின்கணவனாகவனுப்பினானென்றுநேசம்,
பேசினாள்போனந்தம்பெருகமெய்பெருத்துநின்றாள், (௧0௧)

போதுறைமடந்தைபோலப்பொற்புநீண்டழகுவாய்ந்த
பேதையரெவரென்றாலும்பேதைமைபிழைக்காதென்று
வேதமும்புகன்றதன்றோவீரயானறிவில்லாம
லேதுசொற்றிடினுங்குற்றம்போக்கியாண்டருள்வையின்றே. (௧0௨)

சீர்தருமகதயாழிற்சேர்த்தியவாசமென்பூந்
தாரினைவாங்கியோங்குந்தாரபதிபுயத்தில்வேய்ந்து
கார்வரக்களிக்கும்பச்சைக்கலாபனன்மயில்போலணிப்
பார்நிலம்விரலாற்கீறிப்பாவையுமொதுங்கிநின்றாள். (௧௦௩)

நிலத்தினைவிரலாற்கீறிநாணமேனிறைத்துநின்ற
சொலத்தகாவடிவினாளைத்தூயதன்கரத்தாற்பற்றி
முலைத்தடம்வருடிவாயான்முத்தமிட்டணைத்துப்புல்லிக்
கலத்தல்போன்முயக்கங்காட்டிக்காவலன்களிப்புச்செய்தான். (௧௦௪)

ஐயன்கைதழுவலோடுமெரிமதர்நெடுங்கட்செவ்வாய்த்
தையலாளுடலமோடித்தடித்தனபொடித்தரோமந்
தொய்யணிகலசக்கொங்கைதுளும்பினததும்பியோகை
மெய்யினிலடங்காதாகிவேலையில்விரிந்ததன்றே. (௧௦௫)

கற்பெனும்பொற்பினீண்டகடியாளுடையநங்கை
யற்புதவாசேனானிங்கடைந்தவாறனைத்துஞ்சொல்வே
னொற்புகாமனையிலேகியெழுகவென்றிசைத்தாள்வேந்தன்
சொற்பணிகடக்கப்பாற்றோதுயர்கடிந்துயயும்வேலை. (௧௦௬)

வாவியிற்புக்குமீண்டுமலர்ப்பொழில்வந்தமேவந்த
ணுவிரோமைச்சைசின்றவசுவத்தை னையணுகித்
தேவியோடெழுந்துசெல்லச்சிந்தித்தானையோகாமம்
மேவினுமெல்லவர்க்குமபார்மேனனமதிவிளையுங்கொல்லோ. (௧௦௭)

தையலோடெழுந்துநொய்திற்சக்கரவாகந்துஞ்சும்
பொய்கையைநணுகலோடுமபூவைமன்னவனைநோக்கிச்
செய்யநீர்விலகற்குற்றகருமமென்க ஞ்சமித்த
பையுறுமணியாலென்றாளபார்த்திபனையநீர்ந்தான். (௧௦௮)

வாவியுளிறங்கிநீரும்வழிதாக்கடந்துபண்டைப்
பூவுமீளானகரினையலும்புதுக்கவெறிப்பவாய்ந்து
தேவர்நாடணையுஞ்செம்பொற்செழுமணியாடமபுக்குங்
கேவருச்சிலையினுக்கின்னனகருமஞ்செய்வாள். (௧௦௯)

துய்யநீராட்டிவாசந்துதைந்தெழுகலவைச்சாந்த
மெய்யெலாங்கமழத்தாசுவிக்கிநலணிகள்வேய்ந்து
செய்வனபிறவுஞ்செய்துசெஞ்சிலையனகனன்ன
வையனைச்சிறந்தசெம்பொனாதனத்தமைத்துப்பின்னர். (௧௧௦)

பரிகலந்திருத்திமூ ப்பருப்புநெய்பழமேதென்றீம்பா
லுரியனபடைத்துவேந்துண்டுள்ளமேடைந்தானுண்டு
விரிகதிர்மன்றதமேலாடுமவெரிமலர்விதானந்தூக்கிப்
பருமணிகுயின்றசெம்பொற்பஞ்சணைப்படுக்கைசேர்ந்தார். (௧௧௧)

மறைகளால்வகுத்தநீதிக்காந்தர்ப்பமணத்தின்வேட்டே
யிறைவனுமிறைவியாளுமிரதியுமதனுமென்னக்
குறைவறுகாமநூலாங்குறைபடக்களிப்புக்கொண்டே
முறைமுறைகலவிப்பூசலுஞற்றிடமுயங்கினரால். (ககஉ)

பரிபுரமொலிப்பசெங்கைப்பணிவளைகுமுறநீண்ட
வரிவிழிசிவப்பக்கூந்தலவார்ந்துதேன்கறங்கத்திங்கட்
டிருமுகம்வெயர்வதோன்றநசைசெயிதழ்நறவம்பொங்க
வரசியுமரசனோடுகலவிப்போராடினளால். (ககங)

பணிலங்களுடையத்தானைபரிந்துபாரிரிந்துசாய
மணிமதயானையஞ்சவகுத்தபேரணிபினோடே
வணிசிலைநிமிர்ந்துநாணற்றலைவுறமாலைசிந்தப்
பணிமொழியாளைவெற்றிகொண்டனன்பருதிவேலோன். (ககச)

மங்கையும்வங்கமாகமன்னனுமாலியாகத்
தங்களாற்புரியும்லீலைதனித்தனிகருவியாக
வெங்கணுமுடிவொன்றின்றியெற்றுவெண்டிரைகொழிக்கும்
பொங்கியகலவியென்னும்புணரியைக்கடந்தாரன்றே. (சகரு)

சித்திரித்தழகுவாய்ந்தசெழுமலரமளிமீது
முத்தணிநகையினாளுமுழுமதிமுகத்தினானு
மெத்தனைதரமோவந்தவிரவுவீணையதாவண்ண
மொத்தறுபசந்தானகுலீலையுமுஞற்றினரால். (ககசு)

வேறு.

கலவியின்பூசலிற்களைப்புற்றஞ்சிய
விலவிதழ்மடந்தையும்வருந்தியோமுரு
மலைமிசைதுயிலுமோர்மயில்தாமெனத்
தலைமகன்புயத்தொடுந்தழுவித்தூங்கினள். (ககஎ)

அங்கசன்பகழியாலலசிமெய்யெலாம்
பங்கமுற்றயர்ந்துளம்பதைத்தபார்மகன்
கொங்கையின்வேதுகொண்டொற்றிக்கூர்விழி
மங்கைவாயமுதினல்வருத்தமாறினன். (ககஅ)

அநுபவித்திதற்குமுன்னறிந்திடாதநல்
வனிதையுமன்னனுமவளர்ந்தகாதலி
னினிதுவந்தனபினும்புணரவெண்ணுங்காற்
றினகரனுதித்தனன்சிந்தைதேம்பவே. (கககூ)

பூலோகரம்பையைக்கண்ணுற்றபடலம்.

முற்றிற்று.

ஆக்கப்படலம் கஉ-க்குத் திருவிருத்தம், ருகூசு,.

வரலாறுகூறியபடலம்.

தாயாயிவ்வுலகமெலாமீன்றமாதா
  தன்னையொருகாஞ்சனைக்குத்தநயையாக்கி
வாயாதமணவாளன்றானுமாகி
  மனுமுறைகொண்டரசியற்றிவடிவேலோனைச்
சேயாகப்பின்னிருத்தியின்றும்வந்து
  தெரிசிப்பார்தங்களுக்கோர்தெய்வமாகி
யாயாமன்மறைமுடியின்மேற்பட்டிப்பா
  லணிமதுரையிருந்தானையணுகிவாழ்வாம். (க)

வேறு.

பருதிவந்துதித்தலும்பசும்பொற்றாரினான்
றிருமகட்கொருமகனென்னவத்திரு
மருமகட்கொத்துளமாதினோடுமங்
கருமைநீர்குடைந்துநீறணிந்துபின்னரோ. (உ)

காலையில்விதிமுறைகடன்கழித்தபின்
பாலமுதருந்தியேபாவைதன்னொடுஞ்
சால்புறப்பாகடைதரித்துச்சாந்தமு
மேலணிந்தகத்துறுகளிப்புவீங்கவே. (௩)

பச்சைமாமயிலெனும்பாவைமேன்மய
லிச்சைநீங்காதவணிருக்குமேல்லையின்
மச்சவேல்விழியினாள்வதனநோக்கியே
செச்சையம்புயத்தினானிதனைச்செப்புவான். (௪)

குழலொலியாழொலிகுயிலின்சீரொலி
பழுதில்பைங்கிளியொலிபாரவூறுகண்
டழகெழுகழைதருமரியசாறொடு
மெழுதிரையமுதெனவிரங்குதீஞ்சொலாய். (௫)

ஏந்தமாநகர்ப்பெயரேதுநின்பெருந்
தந்தையார்தாயெவர்தளர்ந்துபாம்பினொ
லிந்தமாளிகைபுகுந்திருத்தற்கேதுவென்
சிந்தையிற்கரவிலாதெடுத்துச்செப்பென்றான். (௬)

கௌவையார்கடலெனக்களிப்புக்கைமிகச்
செவ்வியகுமரனைவணங்கிச்சேயிழை
நவ்வியம்பெடையெனவொதுங்கிநாணியே
சொவ்வையங்கனியிதழ்திறந்துகூறுவாள். (௭)

வேறு.

கரும்பொனிணைத்திணிமருப்புக்கடாக்கழுத்தினுகம்பிணித்தூக்கருங்
காண்மள்ளர், விரும்புதடம்பணைகளிற்சென்றுழுமொலியான்மந்திமனம்வெ
ருண்டுதெங்கின், குரும்பையைவிட்டரம்பையினிற் குதிக்கின்றபொழ்துக
ளிக்குலைத்தேன்சிந்திச்,சுரும்பாற்றும்பூங்கமலவாவியலையிட்டேழ்ச்சுர்க்கு
[மன்னோ.] (௮)

இதுசிவணும்பல்வளமார்விரிஞ்சநகர்புரந்தருளுமெனதுதாதை
மதிசிவணுமணிக்குடையான்வணங்கார்கள்வலிக்குடையான்வாவுங்காலின்
கதிசிவணும்பரிக்குடையான்முரசதிருங்கடைத்தலையான்கனகமேரு
நிதிசிவணுந்தனதனைப்பான்விரிஞ்சனென்னாமமலிநிருபரேறே. (௯)

அன்னவன்செய்நற்றவத்தாலொருமகவாய்நான்பிறந்தேனரசேயெற்கு
மன்னிய பூலோகரம்பையெனப்பெயருஞ்சேர்த்தியவண்வளர்க்குநாளின்
மின்னிடைச்சிற்றடிக்கயற்கட்டாளநகைத்துவரிதழ்வாய்விரிவண்டேர்லந்
தூன்னுகுழற்பைங்கனகக்குரும்பைமுலைத்தோழியர்கள்சூழமன்னோ. (௧௰)

மலைப்புறனும்பெருங்காவுமணித்தடமும்பார்க்கவென மதித்தோர்நாளிற்
சொலைக்கடந்தவாணிரவிதோன்றுதகாலத்துஞ்சுடராலட்ட
குலக்கிரியின்றலைக்கிடந்தபுடவியிருட்படவிரியக்கொழிக்குமுத்தா
நலைப்புனல்விட்டெழுந்தவாற்பசுங்கருமுகில்வெருவ்வடர்த்துப்பாயும்.(௧௧)

கின்னரங்களின்னரம்பிற்கிளக்குமொலிதாமரையிற்கெழுமிவாழு
மன்னமலிவளம்பொருவுதிருவாவிக்கரையணுகியாயமோடும்
பன்னரியமலர்பரித்துப்புனல்குடைந்தாரணிதிருத்திப்பரிவிற்சூடிப்
பொன்னளிபாட்டயர்பொதும்பர்புகுந்துமணிக்கழங்காடும்பொழுதினுகம்.()

அருவனமும் பெருவரையுமலைபுனலுநிலைகுலையவடர்த்துச்சீறிக்
கருதரியவுலகமெலாங்கட்பிறங்குதழன்மோதக்காலனென்ன
வருமளவினுங்களெலாமலர்க்கரத்தால்வயிறலைத்துமருண்டுநெஞ்ச
மொருவர்சென்றவழியொருவருற்றறியமாட்டாமலோதுங்கினேமால்.(௧௩)

அவ்வேலையானெதுங்கும்வழிதொடர்ந்துதனதுருவையகற்றிநேரோ
வெவ்வியராட்சதனுருவம்வரைவிலெடுத்தணிகுழலாய்மெலிவுகோடே
லொவ்விலெனதுழையிருத்தியெனக்கடுகியிவண்கொணர்ந்தேயுய்த்தமே
செவ்விமலியரசேநீரென்கொழுநனெனவிதியார்செய்தமாண்பரல். [ஞெட்

அவ்வரவமெனையுய்ந்துவெங்காமப்பிணிதணிப்பாயணங்கேயானே
ரெவ்வமிலாதரக்கர்குலம்பெயரிடும்பன்மயன்றவத்தாலிரந்துகேட்பச்
செவ்வியனத்தானளித்தான்சீர்த்தமனையிலக்கணங்கடெரிவோமென்ன
ஒவ்வலிலாதிம்மனையையொழுங்குகண்டான்யானுமவனுழையிற்பெற்றேன்.

செய்யமனையெனக்களித்ததெய்வமயனளப்பரியதிரைநீர்வாரி
யெய்திடினுமெந்றிதருமற்றடையலராலிறுதிதாதிவைகட்கென்றும்.
வெய்யவன்மெய்யொளிநாணுமாயுள்குன்றாக்கமுறுமேன்மையானுன்
பையரவின்மணியிவையென்றுவந்தளித்தானெனவுறுதிபலவுங்கூறி. (௧௬)

இம்மனையுநின்னையுநானெனம்முன்னோர்தவப்பயனாலெளிதிற்பெற்றேன்
மும்மையுலகதில்வேட்டபொருளளிப்பன்முயங்கவெனமொழிதலோடுஞ்
செம்மனமுந்தட்டழிவுற்றொருவருடனோன்புளவாற்றீர்ந்துபின்னு
லும்மனம்போனபடப்பனெனவுரைக்கமனமிசைந்திருந்தானுறவில்லாமல். ()

அன்றுமுதற்சொல்லியநாளவதியுமின்றோடகன்றவதனாற்பட்ட
துன்றுதுயர்ச்சிறைதடிந்துசுகமளித்தீரெனப்பலவுந்துணைமென்கொங்கை
மன்றன்மலர்க்கொடியிடைப்பஞ்சடிக்கயற்கட்டுவரிதழ்வாய்மடந்தைகூறப்
பொன்றிகழும்வார்கழற்காற்புரவலன்கேட்டுளமுருகிப்புகலுவானால். (கஅ)

தந்திமருப்பெனப்பணைத்ததனக்குயிலேயெனதுபெருந்தவமேநின்றன்
சிந்தையுறுபருவரலைத்துடைத்தியெனதாயுள்வரைதீர்க்கொணாத
வெந்தவிதத்திடையூறும்வரிற்றடுப்பனயிராணியென்றபோதும்
புந்தியிலெண்ணேன்கலங்கலிஃதுண்மையெனப்புகலப்பூவைகேட்டே. (க௯)

புத்தமுதமுண்டவர்போற்புளகடைந்துகளபமுலைபூரித்தோங்கச்
சித்தமிசையடங்காதவுவகையளாயிரவுபகறெரியாவண்ண
மொத்திருவோருங்கலவியுறுபோகநறவருந்தியுணர்வொன்றின்றி
மத்தவெறியினர்போல்மாளிகையிற்றனித்திருந்துவாழ்ந்தார்மன்னோ. (உ0)

மன்னவன்மெய்வாய்செவிகண்மூக்கெனுமைம்புலன்கண்மறுவழிபோகா
கன்னிகையின்சத்தரசரூபகந்தபரிசமதிற்கலந்தெப்போதும் [மற்
பின்னமுறாதுறைந்தவனுக்கயலாகவவனறிவைப்பிரித்ததென்றாற்
றன்னிகரிற்புத்திசிகாமணிதன்னைத்தேடுதற்கோர்தகைமைத்துண்டோ. (

வரலாறுகூறியபடலம்.

முற்றிற்று.

ஆகப்படலம் கரு-க்குத்திருவிருத்தம் சுகஎ:

மந்திரிசோகப்படலம்.

தன்னைப்பாடும்பாணன்பொன்னுக்கேங்குஞ்
சமயமுணர்ந்துதவவெனத்தாமஞ்சூடுஞ்
சென்னிக்கேதிருமுகமொன்றீந்துதானுந்
திகழிரவிலவன்கனவிற்செப்பிமீண்ட
பின்னிக்கார்முடிதவழும்மாடக்கூடற்
பெருமானையொருமானும்பிறையுங்கொண்டு
வன்னிக்கானிலம்புனல்வானெனநின்றானை
வாக்குமனங்காயமொன்றவணங்கியுய்வாம். (க)

வேறு.

இங்கிவணிருப்பத்தங்கமாபுரிதன்னிலெய்தி
மங்கைமாளிகையிலுற்றமந்திரிமகனுஞ்சூழ்ந்த
கங்குலுமழையுங்காற்றுங்கரப்பவெண்ணிலவுவீசித்
திங்கள்வந்துதயஞ்செய்யத்தெரிந்தனன்வல்லைசெல்வான். (உ)

எழுந்தனமுதுதோளிட்டிரும்பரியுங்கத்துநொய்தில்
வழிந்தகண்ணீருமாறுவழிநிறைந்தாறுகோப்பக்
கொழுந்தடம்பொழிலுங்கானுங்குன்றமும்பிறவுந்தள்ளித்
தொழுந்தகுந்தோன்றலுற்றவாவியின்சூழல்சார்ந்தான். (௩)

வேறு.

சார்ந்துநோக்கினனோக்கிலன்பரியினைத்தவிர
வார்ந்ததிண்டிறலரசனையயிர்த்தனன்விரைவாய்
வார்ந்ததேனலைமண்டியவரிமணற்காவு
மீர்ந்தநுண்படிசத்தினாலிழைத்தபொற்றடமும். (௪)

துருவியோடினன்கண்டிலன்மனந்துடிதுடித்தான்
பொருமிமாமலர்க்கட்புனல்புயலெனப்பொழிய
வெருவிவேகவெம்பரியினைநிறுவிவில்வேந்த
னொருவனாவெங்கேகுவனென்றுநின்றுலைந்தான். (௫)

காலுங்காலெனக்காலினாற்செழுமலர்க்காவின்
பாலுமங்குள்புதர்களுந்தனித்தனிபடரா
நாலுபாலினுங்கறங்கெனச்சுழன்றுகண்ணாடி
மேலுந்தேடுதற்கெண்ணினன்மனத்துணிபிருக்க. (௬)

துய்யகாலின்முள்ளேறியகுருதியுந்துணைமென்
கையினான்முகத்தறைந்திழிகுருதியுங்கனத்த
மெய்யெலாஞ்செடிகிழித்தவெங்குருதியுமிகுந்து
பெய்யும்வான்முகின்மழையெனவனமெலாம்பெருக. (௭)

பேயுங்கூளியுங்காளியும்பெருஞ்சிறைக்கழுகும்
நாயுஞ்சேனமுநாடுமிங்கிவன்றுயர்நாடாக்
காயும்வெங்கதங்கைவிடுத்திரவில்வெங்கான
மாயுமந்திரிக்கருந்துணையமைதல்போலணவ. (௮)

செடியெலாஞ்செடியிலையெலாம்வேரெலாஞ்செறிந்த
கொடியெலாந்தருக்குலமெலாம்விலங்குபுட்குலமு
மடியெலாநொடிவரையினுமயர்ந்திடானாகி
விடியல்கண்டுமௌவினுந்தேடிமெய்மெலிந்தான். (௯)

நடந்துமோடியுநாளிகையொன்றினுமேழு
தொடர்ந்தகாவதஞ்சூழ்மபொதும்பரைத்துருவிக்
கடந்துதேடினான்றனிமைகண்டிரங்கியோகங்க
லுடைந்துபின்செல்கதிரவன்கடன்முகட்டுதித்தான். (௧௦)

கங்குல்போக்கிவெங்கதிர்வரக்கண்டமந்திரியுந்
தங்கணாயகன்வைகுழிமீளவுஞ்சார்ந்து
பொங்கர்வாய்தொறூஉநிரைநிரைதுருவியேபோவா
னங்கொராபாலினிற்றலைகளோரைந்துளவாவின். (௧௧)

வடிவுபெற்றுமற்றவையவும்பொருந்திவான்மலைநே
ருடல்பிளந்திருகூறுபட்டுதிரங்களோர்டிக்
கடன்மடுத்திடவாவிபோய்க்கழிந்தவாளரக்கன்
புடவிமேற்கிடந்ததுதெரிந்தான்மதிப்புலவோன். (௧௨)

நோக்கினாலரவன்றிதுநுவல்வதற்கரிதா
மூக்கமேவுபாம்புருவுகொண்டுள்ளதோரரக்கன்
றாக்கும்வெஞ்சமர்தன்னினம்மிறைவனாற்றிடிய
வாக்கைபாழ்படத்தேம்பித்தன்னுயிரும்போயழிந்தான். (௧௩)

இங்கிவன்றனைவீட்டுமுன்னிறைவனுக்கிவனாற்
பங்கமுற்றதுண்டாமெனிற்படிவமிங்கிருக்கு
மங்கதன்றிவல்விலங்கெடுத்தேகினாலடவி
யெங்குமோர்ந்தனங்காணுமக்குறிகளோவில்லை. (௧௪)

எட்டுநாகமுஞ்சிறிதெனக்கிடந்தசீங்கிதனை
வெட்டினானுநம்மிறைவனேயன்றிவேறன்றால்
வட்டவாண்மதிவதனத்தான்யானிவண்மயங்க
விட்டுமெய்மறைவாய்விளையாடல்செய்விழைவோ. (௧௫)

இரவியேகுமுன்போனகம்வாங்கினானீங்கு
வருவனென்றவன்வான்கதிர்மறைந்திருள்வந்துந்
தருகினானென்பதுணர்ந்தெனைநேடியேதனியாய்ப்
பரவுகான்பதிகடன்மலைபுகுந்ததோபாவம். (௧௬)

இங்குவாம்பரிநிற்றலாற்றேடிநம்மிறைவ
னெங்குமேகிலன்றன்னுயிர்க்கிறுதியுமில்லன்
கங்குன்மேனியிவ்வரக்கனாற்கவலையுற்றிருந்த
நங்கையேயவளோமயறநணுங்கிச்சென்றனனால். (௧௭)

அணங்கனார்மயற்சேற்றிடைமூழ்கினாலன்றி
யிணங்குநம்முறவகற்றிவாம்பரியினையிங்கே
யுணங்கநீக்கித்தன்னுணர்விழந்தான்றவசர்க்குளவோ
மணங்கொடாரவனம்மவோயேதைநான்மதிப்பேன். (௧௮)

என்றுபற்பலவெண்ணியேவிருகணீர்சொரிய
வன்றுநண்பகலளவினுந்தருகிடாதந்தத்
துன்றுசோலையெய்த்தனைசரங்கொலோதுருவி
யொன்றினுமுணராதுடன்மெலிந்துணர்வோய்ந்தான். (௧௯)

அரசவென்றுபேரோலமிட்டழுதுவாய்குழைந்து
கரைசெயாதகண்ணீர்மழைகான்றுமெய்கரைப்ப
நிரையினெட்டுயிர்த்துள்ளமுநெகிழ்ந்திடநின்றே
யுரைசெய்வானிதையுணர்ந்தபல்லுயிரெலாமுருக (௨௰)

வேறு.

என்னாருயிரேயென்னிருகண்ணேயெழில்சேரும்
பொன்னேதேனேபூவினரும்பேபுகழ்மானே
யென்னேயானுந்துன்புளவாகியிடர்மூழ்க
வன்னேகைவிட்டெவ்வழியுற்றாயறியேனே. (உக)

பொய்யாவேதப்போதமலிந்தபுகழ்வாழ்வே
மெய்யார்மெய்யேகாசினியாளும்விறன்மன்னே
யுய்யாதாகியானுமயற்றவுயிர்காவா
தையாவையாவெவ்வழியுற்றாயறியேனே. (உஉ)

இப்பாருள்ளோர்வன்கணனென்றெனையேச
வப்பாருள்ளோர்சீயெனநிந்தித்தறைகிற்ப
வொப்பாரில்லாவுன்றனையேவிட்டுய்வேனோ
வப்பாவப்பாவெவ்வழியுற்றாயறியேனே. (உங)

விண்ணோர்துய்க்குமெல்லமுதேநன்விரிநீர்சூழ்
மண்ணோர்துய்க்குமாசிலதேனேவறிஞோர்போ
லெண்ணாதெண்ணியானுளமொல்கியிடராழ
வண்ணாவண்ணாவெவ்வழியுற்றாயறியேனே. (உச)

எந்தாய்நின்னையிவ்வயினீத்தேயிதுகாறுஞ்
சிந்தாதுயிரோடின்னுமிருந்தேன்றீயேனுன்
னந்தாவிற்குமாநகர்செல்லினகையாதோ
வந்தோவந்தோவெவ்வழியுற்றாயறியேனே. (உரு)

கொம்பிற்கூவுங்குயிலேமயிலேகுறைவில்லாத்
தீம்பிச்சுமையேமன்னர்கள்வந்துதொழுதேற்ற
வும்பர்க்கேயுமோர்குடைநீழலரசுய்க்கு
மம்பொற்சிலையானே-கினைதெங்கண்ணறைவீரே. (உசா)

கடலுற்றிடினுங்காவுற்றிடினுங்கரவில்லா
துடனுற்றிவணீவருவாயெனமுன்னுரைதந்த
மடலுற்றிடுவேன்மன்னர்க்கெதிரெவ்வகைபோயான்
றிடமுற்றஞ்சாதென்சொலவல்லேன்றிருவில்லேன். (உஎ)

வாகைமிடைந்தமன்னரசோடுமகிழ்வாகச்
சாகமிடைந்தசேணதர்சென்றுதாழாதே
தோகைமிடைந்தநகர்புகவென்றுசொல்தந்தைக்
காகமிடைந்துதுன்புறயானீதறைவேனோ. (உஅ)

என்றினபன்னிநின்றழுதேங்குமிடைவீழுந்
தன்றிருமேனிநெய்யழலுற்றதகைசாலுஞ்
சென்றினியெங்கேகாண்குவனென்றேசிரமீது
குன்றிடியொத்தேகைகள்புடைக்குங்குலைவெய்தும். (உக)

மண்ணிருகையால்வாய்மிசைபெய்யும்மருளெய்துங்
கண்ணிமையாதுநோக்குமயிர்க்குங்கனல்சாலு
முண்ணிறைவெப்பாலென்புகணீறியுயிரோயும்
பண்ணியல்கொண்டானின்னலையாரேபகர்கிற்பார். (௫௰)

வேறு.

இன்னபன்னியுயிர்ப்படக்கியிடரின்மூழ்குமதியமைச்சன்
பின்னுந்தெளிவுற்றிதுநினைவான்பெருநீருலகிற்பிரியாத
மன்னைப்பிரிந்தென்னுயிர்பிரியாதிருக்கவழக்கோமந்திரத்தால்
முன்னமிறந்தார்தமையெழுப்புமுறைமைதெரியான்முடிவேந்தன். (௫௧)

செயிராவுலகமுழுவதினுந்தேடிக்காணப்பெறிலரச
னுயிரோடிருக்கினிருக்குகமற்றுயிர்போய்க்கழிந்துகட்டுவிட்டு
வெயிலாலுலர்ந்துதசைகழிந்தவெள்ளென்பெனினும்விஞ்சையினாற்
செயலான்மீளவரப்பயின்றுசிந்தையனுக்கந்தீர்குதுமால். (௫௨)

இன்றுமுதனீள்வனஞ்சோலைநதிபூவோடையெழில்கிளைறை
குன்றுதிருநாடணிநகரங்குறுகித்துருவியோரிடத்துஞ்
சென்றுகாணுதொழியிலுயிர்தீர்துமெனவேசிந்தித்து
நின்றமதிமானதற்கானகருமம்புரியநேர்ந்தனனால். (௫௩)

வேறு.

அப்பளமுமதிரசமுமான்பாலுஞ்சருக்கரையுமருந்தேனூறும்
முப்பழமும்பாயசமுநெய்முதலாஞ்சிற்றுண்டிமுழுதும்பெய்தே
செப்பமுடனமைத்தநறும்போனகத்தையுண்கமனஞ்சிந்தித்தானா
யப்படியிலிருந்தமுதின்கட்டவிழ்த்தானரசைநினைந்தழுதுகொண்டே. (௫௪)

எங்குபுகுந்தெவர்பாலிலெரிபசிநோயாற்றுதின்னமுதுவேண்டிச்
செங்கைமலர்விரித்தேந்தித்திரிந்தனையோமாறுதசெல்வந்துய்ப்பார்
தங்கண்மனைபுகுந்துண்டுதவிப்பகற்றியிருந்தனையோதரையாள்வேந்தே
யிங்குபுசிப்பதற்கினிமேலென்னுடன்வந்துறுவாயோவென்செய்வேனால். ()

சொல்லாமுன்னமுதுகொண்டுதுய்ப்பிக்கும்விநயம்வலிதொடர்புசற்று
மில்லாதவிவனென்றேயெனையிகழ்ந்துமறுநெறிசென்றெனக்கிங்கூட்ட
நில்லாமலனந்தேடிநெடும்புறவும்வளநாடுநேர்ந்தாய்கொல்லோ
வல்லார்க்குள்வல்லானென்றெல்லாருந்தொழச்சிறந்தமன்னரேறே. (௫௫)

எனப்புலம்பியோயாமலழுதழுதுமழைப்புனல்கண்ணிறைப்பவன்னந்
தனைப்புசித்தும்புசியானாய்மீதியெலாந்தாவுபரிதங்கட்கூட்டி
மனத்துயராஞ்சிறிதகலமலர்க்காவிலவ்விரவுவைகிப்பின்றை
கனக்கதிரோன்வரவெழுந்துகாலைவிதிக்கடன்முடித்துக்கவலைதீரான். (௫௭)

பரியிரண்டுமுடனாகத்தானுமுனமிருளிருந்தபதியினண்ணித்
தெரிவையகம்புகுந்தவள்பாற்றேசிகளைக்காத்தியெனச்செம்பொனீந்து
மரவுரியுங்கப்பரையும்வார்சடையுந்திருநீறும்வயங்கமேனாட்
புரமெரித்தபுனிதனெனத்தவவேடம்புனைந்துநெறிதுருவிப்புக்கான். (௫௮)

மந்திரிசோகப்படலம்.
முற்றிற்று.
ஆகப்படலம் ௧௪-க்குத் திருவிருத்தம்-௩௫௫.

அரசன்சோகப்படலம்.

கைநாகந்தனையுரித்தோர்மானாகந்தனிற்சேர்த்துக்கலின்மானேந்திப்
பைநாகமுழுவதூநற்பணியாக்கிதொண்டரைத்தம்பணிக்கண்ணாக்கிச்
செய்நாகம்வளைமுழங்குந்திருக்கூடலுகந்தருளுஞ்சிவனையென்றும்
மெய்நாகமுதற்காரணமவேறுபடாதொருங்குபடமேவிவாழ்வாம். (௧)

மந்திரியிவ்வாறரசன்றனைத்தேடிச்சென்றதற்பின்வளைவெண்முத்தஞ்
சிந்துதிரைப்புனன்மலிந்தசெழுவாவியுண்மனைக்கண்டுதொன்றின்றிச்
செந்துவர்வாய்மடந்தைமயற்கடன்மூழ்கியிரவுபகறீர்ந்தின்புற்றே
யந்தரவானவர்போன்றவரசனுக்குமேல்வரும்பாடனைத்துஞ்சொல்வாம். (௨)

மேதகுதன்னுடலுயிர்போல்வினைபுரியுமவயவம்போல்விளைந்தநட்பின்
காதல்விலகாதிருந்தகலைமகனைச்சிலைநுதற்செங்கயற்கட்செவ்வாய்ப்
பேண்தமயலான்மறந்துபிழையுறுவானென்னிலிவன்பின்னைப்பெற்ற
தாதையைத்தாயைக்கிளையைத்தான்மறந்தானென்பதைநாஞ்சாற்றலா
[மோ. (௩)

திசைமுகன்மாலீசன்முதற்றேவர்முனிவரர்பிறர்தந்திருவிற்றீர்ந்து [டி
வசையடைந்துநாணழிந்தான்மற்றிவனோவெற்றிகொள்வானவரிவிற்கோட்
விசையமெல்லாந்தண்மலர்ப்பூவிசிகமுனையாற்கவர்ந்துவிழுமந்தோன்ற
விசைபரப்பித்தனக்குருவொன்றில்லையெனுஞ்சொல்லுருவாய்த்திருப்போ
[ன்றன்னை. (௪)

பெற்றாரைப்பிறந்தாரைப்பிறவாதநெறியாய்ந்தபெரியோராதி
கற்றாரைமறந்திருகண்மணிபோலுந்தனக்குரியகருமங்காட்ட
வுற்றார்ந்தவொருவனையுமுள்ளார்ந்தவறிவினையுமொருங்குநீக்கி
முற்றாதமுகிண்முலையாண்மதிர்காதறலைக்கேறிமுயங்குநாளில். (௫)

பன்மணியார்சதுரங்கப்பலகைவரிமீதொருநாற்படையுந்தொட்டுத்
தன்மலர்க்கைசேப்பவிளையாட்டயர்போதணங்கனையதையன்மன்னு
நின்றொருமந்திரியையெனதாட்பலைத்தாலடிப்பனெனநிகழ்த்தலோடு
மின்னிலைவேலவன்றனதுமந்திரியின்னினைப்புவரமெலிவுற்றேங்கி. (௬)

கண்மயங்கிவாய்வறண்டுகருத்தயர்ந்துமூச்சடங்கிக்கால்கைசோர
வெண்மயங்கித்துடிப்போய்த்தாதனந்தவறியிடிவீழ்ந்தமரமீதென்ன
மண்மயங்கிவீழ்ந்தரசன்மாண்டார்போறகிடந்திடலுமலர்க்கணோக்கிப்
பெண்மயங்கியறிவழிந்துபேதுற்றாளேதுற்றபீழையென்றே. (௭)

வேறு.

மயங்கிநெடுமூச்சயர்ந்துவிழமன்னற்குற்றவாதையென்னே
பயங்களானமொழிகளொன்றும்பகர்ந்திலையேயிவனுடனாய்
நயங்கொளமைச்சன்வந்திருக்கவேணுமவனைநம்மயலாற்
செயுங்கொல்வேலான்மறந்துவிட்டசெய்கையாகுமெனத்தெளிந்தே. (௮)

தாங்கியெடுத்தாண் முகமீது தண்ணார்பனிநீர் தனைச்சிதறி
யோங்குபொதிகாசலத்தென்றலுலவச்செய்தாளுயிர்ப்பணுகித்
தூங்கிவிழித்தாமெனவெழுந்தான் றயாமனத்திற்பொருக்காளு
யேங்கியேங்கித்தழங்கியவான்கடல்போல்வாய்விட்டிறைந்தழுதான். (௯)

கையாற்புவியின்மிசைபுடைக்குங்கண்ணீருகுக்குமனமயரு
மையோவென்னுமெனதுயிரேவமைச்சேயென்னும்வாய்புலரும்
வெய்யிற்புழுவொப்பெனத்துடிக்கும்விடமுண்டவரொப்பாய்க்கலங்கு
மெய்யுமயில்பட்டுழல்யானையென்னமெலிந்தாங்கிதுபன்னும். (௧௦)

அமுதந்தருவேனெனவெழுந்தாயதனைக்கருதாதணங்கனையாள்
குமுதமலர்வாயமுதமெனுங்கொடுந்தீவிடமுண்டுளம்வருந்தி
திமிரக்கடலிற்படிந்தயருந்தீயேனுன்னைத்தெரிவேனோ
வெமதுதமர்மாதவம்போலும்விலகாதிருந்தவெழிலமைச்சே (௧௧)

கூடிவந்தமன்னவனுமெங்கேயடைந்தானெனக்குறித்தே
நாடும்பொழிலுங்கான்வரையுநனிதுதேடியயர்ந்தனையோ
வீடினேனென்றுனதுயிரும்வீடிப்புகழ்மேல்விளக்கினையோ
சாடுமெயற்காற்படுகறவகாய்த்தவிக்குந்தமியேனறியேனே. (௧௨)

துயிலும்பொழுதும்விழித்திருக்கும்பொழுதுமற்றைத்தொழில்கள்பல
பயிலும்பொழுதும்விலகாமலிருந்துநெடுநாட்பழகியநான்
குயிலின்குரனமென்மழலைமொழிக்குமரிமையற்றூண்டிலிலே
யயிலப்புகுந்துபடுங்கயல்போலாவியோய்ந்துள்ளலமந்தேன். (௧௩)

காமனாலேகாமனுருக்கண்கள்பலவாய்பெற்றுழன்றான்
காமனாலோராவணனுங்கலங்கியாக்கத்தீடழிந்தான்
காமனாலோராமனெழிற்கலைகள்கரையக்கனங்குறைந்தான்
காமனாலேகீசகனுங்காற்றின்மகனாலுயிர்கழிந்தான். (௧௪)

அறத்தைமாய்த்துக்கருணையைவேரறுத்துக்கல்வியழகழித்து
மறத்தைப்பெருக்கிப்புறத்தோர்சொல்வசையையிசையாய்த்தலைக்கேற்றித்
திறத்தைக்கெடுத்துச்சுவர்க்கநெறிசேராதகற்றியாவருக்கு
நிறத்தைக்குறைக்குநவியனிகர்காமந்தருக்கநெஞ்சழிந்தேன். (௧௫)

தக்கோர்மனத்திற்கூடலானகாமந்தருக்கத்தலைமாறிப்
புக்காறமுங்கருணையுநற்புகழும்போக்கிப்புலம்படைந்தே
னெக்காலத்தினுமினிக்காண்பேனெனநெட்டுயிர்த்தேங்கி
மிகவேமன்வருந்தக்கண்டுமனஞ்சகியாளாகிவிளங்கிழையாள். (௧௬)

காந்தண்மலர்க்கையாலெடுத்துக்கண்ணீர்மாற்றிவியர்வகற்றி
நீந்தறகரியகடல்புடைசூழ்நிலங்கண்முழுதுந்தனிபுரக்கு
மேந்தற்கிறைவாநீமயங்குமியல்பீதெனனேயியம்புகென்னச்
சீர்ந்தமருமத்திளஞ்சீயந்தனதுநிலைமைதனைவிரிக்கும். (௧௭)

பெருகுபுனற்றண்பழனமெலாம்பிறங்கும்வளைநித்திலம்வான்றிக்
குருகுநளினத்தளமலியக்குவித்துக்குடிகொண்டடைகிடக்கும்
மருவியிளஞ்சூலால்வருந்துமந்திக்குயர்வானரமெழிலி
வெருவக்குதித்துச் சோலைநறுந்தேன்கொண்டூட்டிவியப்பெய்தும். (கஅ)

விடாதத்தடங்காதெழுந்தவாரால்வெருவிச்சினந்தாங்கலம்பிணிக்குங்
கடாவைக்கட வியுழுமுழவர்களெங்கக்குழைத்துக்கதித்தண்ட
கடாகம்வெடிக்கத்தகர்த்துமழைக்காலோடிரங்குங்கமலமலர்த்
தடாகத்தமரமிரவுபகலோயாதொலிக்குந்தடங்கடல்போல். (க௯)

இன்னவளஞ்சூழ்புவனேந்திரநகருக்கிறைவனெழில்குலவும்
பொன்னங்கமலத்திருமார்பன்புகழ்சேர்தாலபுரந்தரனன்
மன்னனவற்கோரைம்பதின்மரமைச்சர்தன்னின்மதிதெளிந்த
நன்னற்சிலைவேளனையவடிவழகன்சுமந்திரநாகரனும். (உ0)

தங்கட்குரியமகவின்றித்தவிப்புற்றுலகம்புலம்படையச்
சிங்கம்புலிவெங்கயநாகந்திரியுங்கிரிசூழ்வனஞ்சேர்ந்து
கங்குல்பகலாயூணுறக்கங்கருதாதிவர்கள்கண்ணுதிவுக்
கங்குபரமன்வெளிப்படுங்காலளவுந்தவமொன்றாற்றினரால். (உக)

துள்ளுவிடையான்றிருவருளாற்றோன்றறனக்குநாலுமதி
வள்ளறனக்கென்னினுநல் விஞர்மகனும்பிறந்தோம்பெற்றவர்க
ளுள்ளங்களிக்கப்பெயட னக்குப்புவனேந்திரனென்றுரைத்தமைச்சன்
பிள்ளைக்கினியபுத்திசி மணியென்றழைக்கப்பெயர்புனைந்தே. (உஉ)

வேதத்தாதிசாத்திரமும்விரிஞ் ன்முதன்மாமுனிவாரு
மோதற்கரிதெண்ணெண்கலையுமோதுங்குருவாலுணர்ந்துமற்றைப்
பேதப்படுத்துமிலக்கண்முமம்பிழைபாடறக்கற்றனமதன்மே
னீதத்தழகாவனிறநந்தார்பிழைக்கும்விஞ்சைநிரம்பினனால். (உங)

வடிவிற்குணத்திவ்வலிநலையின்மற்றைவினையிலிருவோரும்
படியிற் தாமென்னச்சிறந்தபருவம்பனிரண்டினிஞரங்கண்
முடியிற்பெருத்தவரசனடிமுறையால்வணங்கிவிடைவாங்கிக்
கொடியபுறவநதிசோலைகுலவிச்சிலவாண்டதிற்குறைய. (உச)

இங்குபுகுந்துவாவியிறுற்புறஞ்சூழ்ந்தி ங்குமசாலையொங்
தங்குவளங்கள்பலகுறித்க த்த ாகஙகுடைந்துவிடாயகலக்
கொஙகுவிரிதா வனு ன்ன கூ ருச் குளிர்நலவிற்
பொங்குமமுதம்புசிக்கினலமென்றனதன்மேற்போயினனால். (உரு)

வருமுன்பாந்தடனைவீட்டிமழலைதெளியாமதுமொழி
பெருகும்வரிப்பூங்கருங்குயிலேயென்மேல்விளைந்தபெருமயலா
லுருகியற்புசிறிதின்றியுற்றேனற்றேனுறவோனைக்
கருமமிதுபோலுளவோநானினிமேலவனைக்காண்பேனே. (உசு)

என்றுபுலம்பிமடவரலோடெழுந்துசுரங்கந்தனைத்தணந்து
மன்றன்மலர்ப்பூந்தடங்கடந்துமதுக்காலளிசெவ்வழிமுழங்க
தென்றல்குலவமிளஞ்சோலைதேடியிருகண்புனல்சோர
நின்றங்காற்றியென்செறியுந்துருவிப்பார்த்துநிலைதளர்ந்தான். (௨௭)

விண்ணினிடிகேட்டுடல்வருந்தும்வெங்கணரவமெனமயங்கி
மண்ணிற்புரண்டுபூழியுடன்மறைப்பவாய்விட்டாற்றிமலர்க்
கண்ணிற்கலுழிமாறாதுகடல்போற்பெருகியலையெறிய
வெண்ணிற்பெரியசராசரங்களியாவுமிரங்கவிதுசொல்வான். (௨௮)

கல்விநிறைந்தபெரும்புணரிசுவற்றியழகின்காடகழ்ந்து
செல்வமுதவுஞ்சுரபிசிந்தாமணியைச்சிதைத்துத்திருநீங்க
நல்லகுலமுங்குடிப்பிறப்புமாய்த்துநவைக்கோர்துணைநல்கும்
புல்லினுனியினனையபணிக்காமத்துற்றபொருளன்றே. (௨௯)

பாம்புந்தீயும்பெரும்பேயும்பகைவருறவுங்கொடிததனிற்
காம்பினிணைத்தோட்செங்காந்தட்கையார்கமலக்கண்ணென்னுந்
தாம்பிற்றுவக்குண்டவர்முலையாந்தந்தாவளத்துக்கிரையாகித்
தேம்பித்திரிதன்மிகக்கொடிதுவினைகளிதுபோற்றெறுதலுண்டோ. ()

கானற்பெருக்குஞ்சசக்கோடுமலடிமகனுங்கயிற்றரவும்
வானப்பதியுமம்மலரும்போன்றமணிதர்புழுவாழ்க்கை
யீனப்பழிப்பார்கலியழுந்தாதெழுந்தாரன்றேயென்றுமுள
மானப்பெருமையவரன்றேவுலகநோக்கிவணங்குறுமால். (௩௧)

நரம்புகுருதிதசைமூளைமயிர்தோலென்புநணிமலிந்த
குரம்பையதனிற்கணுக்கணிகருறுப்பைப்பொருப்பின்குயமெனவுங்
கரும்பின்மொழிவேல்விழியெனவுங்கமுகுகளம்வேய்தோளெனவும்
விரும்பிமகளிர்நலந்தோய்பவர்க்குச்சுவர்க்கமிகையன்றே. (௩௨)

அம்மாவறிந்துமறியார்போலனங்கன்கலகப்பெரும்பூசற்
றம்மால்வருந்தியுயிரிழந்தகூடுநிகர்த்துன்றனைப்பிரிந்து
விம்மாதுழன்றுவெறிதடைந்தவினையேனவினைகளிதன்மேலுஞ்
சும்மாவிடுமோவெமதாயுடலைக்குந்தணிபுஞ்சூட்டிடுமால். (௩௩)

தானூர்பொழிலுந்தடவரையுங்கடலுநதியுங்கழனிகளும்
வானுடனையதிருநாடுகரும்நோக்கிவரநினைந்து
போனாரமைச்சனறனையரசன்போக்கியொருபூங்குயிற்குரலின்
மானுறவுமருவிவந்தானெனுஞ்சொல்வசைக்குள்வாழ்வேனோ. (௩௪)

தம்மாலலர்சற்றிலதாகிநான்சொல்பணியைத்தலைதாங்கி
யெம்மாநிலமும்புகழேறப்பெறும்பேரியைந்தாயெழிலமைச்சே
செம்மாந்தெழுபூண்முலையாசையறிவைச்சிதறவுயிர்திரிந்தே
யம்மாநரகப்பெருங்காணியாளக்கிடந்தெனவானன்றே. (௩௫)

ஒருநாளொருவன் றனைநெறியி லுற்றுலவற்கேபினுமற்றை
வருநாளிடுக்கண் பெறிலிவன்றன் னுயிரேயெனினும்வழங்கியருள்
பெருநாணிறுத்துமுறையென்பதறிந்தும்பெரியோய்பேதமின்றி
மருவாவிருந்தவுனை மறந்திங்குயிரோடிருந்தேன் மதிநன்றே. (௧௬)

என்றுபுலம்பித்தன் னுயிரைமாய்க்கக்கருதுமிறைவனையுங்
குன்றுமுலைக்கோகிலமனையாளேங்கியுள்ளங்குழைந்தவளாய்ச்
சென்றுதலைக்கேறியவிடமந்திரத்தாற்றீர்க்குஞ்செயலினர்போ
னின்றுமெல்லமனந்தெளியுநெறியோர்ந்திதனைநிகழ்த்துவளால். (௧௭)

அரசேவருந்தேல்வருந்தேனீயறியார்போலவறிவழிந்து
கரைசெய்வதற்குமிகவரியகவலையுழந்தானுனக்கினிமே
லுரைசெய்பவராரந்தோவிவ்வுலகிற்பிரமனொருவருக்குப்
பரசுங்கருவிலமைத்தபடியலதுவேறோர்பயன்படுமோ. (௧௮)

வாம்மணிமேகலையார்க்குமைந்தர்தமக்கும்பொதுவான
காமனொருவனில்லையென்றெவர்தம்முறவுகைக்குவரு
மோமக்கனல்வாயிருந்துதவமுஞற்றிநெடுநாளுயர்வான
நேமம்மறைதேர்முனிவர்களுமொருகாற்காமன் றனைநேர்வார். (௧௯)

முறையோர்ந்தறஞ்செய்தவிர்பசும்பொன்முடிவேய்ந்தவனிமுழுதாண்
விறையோனுயர்கோசலைநாடனெல்லாங்காதிமகற்கீந்து
மறையோனிடத்தின் மனைவியைவிற்றவனும்புலையன்வசமாகிக்
குறைசேர்ந்ததுவுமகளிர்நலங்கொண்டோவிதியின்கோட்பட்டோ. (௨௦)

காதற்புருடன் றனைவிலகியவன் றனிருகண்மணிகவினுஞ்
சீதைதக்கரக்கன் மயல்செறிந்தோவிலங்கைபுகுந்துசிறையிருந்தா
ளோதற்கிதுபோலெத்தனையோவுலகிலெவர்க்குமுளநாளும்
வாதைக்கிடந்தீர்ந்தின்புறினல்லறமேபுரியமாட்டாரால். (௨௧)

நினைக்கும்பொழுதிங்குனையனையாளெனினுங்காலவகைநினைந்து
வினைக்கும்வினைசெய்முறையமைச்சின்விரகுதெலாலுனையுந்
தினைக்குணைப்பந்தருகாதுதேடிச்சென்றசெயலாகு
மனைக்குமனையான் றனைநாமுமடையுங்காலமடைகுதுமால். (௨௨)

அன்றிமயலாவிரிந்தேனென்றரசேநீயுமறிவனுங்க
லென்றுரைன்றகாதிதனைக்கேட்டோர்நகைப்பாரெனப்பலவுங்
குன்றுமுலையாள்குழைந்தினிதாய்க்கூறுமொழியான்மனந்தேறி
நன்றுகருமமெனப்புகுந்தாங்கிருந்தான்சுரங்கந்தனைநண்ணி. (௨௩)

அரவின்றலைச்செம்மணித்துணைமாற்றவிரும்பசும்பொன்னணியாழி
யிரவிநாணும்வகைதிருத்தியிவன்கைவிரல்வேய்ந்திரவுபக
லரிவையுழைநின்றகலாதுய்வேண்டும்போகத்தமுதருந்திப்
பாவியுழைவாரொருபகலப்பாவையோடும்வெளியேறி. (௨௪)

சந்தார்மரவமகிற்கோங்குதயங்கும்பொதிகாசலநின்று
நந்தாருவரித்திரைபடிந்துநறுஞ்சீதளந்தோய்ந்தளிமுரலுஞ்
செந்தாதிரைத்துமலர்கடோறும்வாசந்திர டிவருநதென்றல்
பைந்தாரிவர்தம்மேல்விசிரிக்கோடைதணித்துப்பரிவியற்ற. (சரு)

வாவிஙாப்பண்வீந்தகிரிமான வர்ந்துவானிரவி
தாவுசுடர்பின்னிடையவொளிதயங்குமணிமண்டபத்தினிடை
மேவிப்பகரின்பாழுககலவிளையாட் யரும்விருப்பினராய்ப்
புவையாசனமற்றருநதார்வாச நவருந்தீவினைபுகல்வாம். (சசு)

அரசன் சோகப்படலம்

முற்றிற்று.

ஆகப்படலம் ௰ருக்குத்திருவிருத்தம்-எ௱௪௧.

விஜயதரன் வேட்டைப்படலம்.

தொல்லைவழுதிதன்நகரைச்சூழ்ந்துபுறத்திற்கிடந்தபெரு
மெ யறியா ளம்வருநதிபிரப்பவிரங்குற்றொருபணியால்
வல்லையறிவித்தன்று திருவாலவாயென்றின்றுமுளோர்
சொல்லப்படைத்தபரமனடிதொழுதுபடைப்பாம்பெருஞ்சுகமே. (க)

வேறு.

விசையநகர்புரந்தருளும்விசையதரன்றனதுபுடவென்றியாலே
திசைமுழுதுங்கொடுங்கோன்மைத்திகிரிசெ மநமுறைமைதிறம்பிநீங்கா
வசைபெருக்கியறம்போக்கிமகளிர்நலம்பாழாக்கிமறையோர்வேள்வி
யிசைவிலககிமனுத்தீர்ந்தவெவ்வுயிருந்தின்றுமனதேம்பல்கொள்வான். (உ)

வில்வலியிற்கதைத்தொழிலில்வெங்கரிதேர்பரியுகைக்கும்வீரந்தன்னின்
மல்வலியிலிவன்போலும்வான்புவிபாதலமூன்றுவரைப்பிற்கற்றோர்
சொல்வலிகொண்டெ மிக்கத்தொலையாவெஞ்சு னைப்போற்றேற்றமிக்கோ
கல்வலிதிண்டோளமார்கண்டொதுங்கமண்டமர்செய்காலன்போல்வான். [ன்

அங்கவன்றன்மனைவிசுபலீலையென்பாடிருவினுஞ்சீரழகுவாய்ந்த
நங்கைவயிற்றினிற்பிறந்தவிவன்காதற்சுதர்மூவர்நமன்போல்வீர
சிங்கனதிவீரசிங்கன்சித்திரகேசரியென்பார்தெவ்வரூரைப்
பொங்குமழன்மடுத்துமற்றைப்புவனமெல்லாந்தமதேவல்புரியச்செய்வார். ()

முப்பதினாயிரங்கோடிகுமுதமெங்கஞ்சாகரம்போன்முழங்குதானை
செப்பரியநான்கமை சரிருநான்குபடைத்த வாசிவனையன்றி
யெப்பெரியகடவுளர்வந்தெதிர்ப்பினுமோராகைபார்ப்பாரொன்னிலன்றார்க்
தொப்புரையிவ்வுலகமிசையுள்ளசிறுமானிடரோவுரைக்கநேர்வார். (ரு)

வான்புவிபாதலமூன்றில்விசையாதரன்பெயர்கேட்கின்மறலிகைப்பட்
டூன்பிரிந்தவுயிரேபோன்மத்தேறியுடைதயிர்போலுள்ளமாழ்கி
யான்பிரிந்தகன்றெனநின்றலம்வருமேலெவ்வுலகோரவனைவெல்வா
ரேன்பிறந்தானிவனென்னத்தீவினைநரகம்பாவமுதலெல்லாம்வையும். (சு)

பாரனுக்கத்தீவினையும்பயந்தொழிக்கநயந்தவிண்ணோர்பண்ணையென்னும்
பேரொதுங்கநல்லறமும்பேசாதுவாயடங்கப்பிறவுமஞ்ச
நேரொருவரில்லாமனெறிதவறியரசிருந்தநிருபன்போல
வாரொருவரைச்சொலுவேமந்நாடொட்டிந்நெடுநாளளவுமம்மா. (எ)

வேறு.

விடையவன்றிரிபுரம்வீட்டவாங்கிய
வடவரைசிறிதெனவயங்கும்வில்லினான்
கடையுகக்கனலையுங்கனற்றுங்கண்ணினான்
படர்மழைவெருவுறப்பகருஞ்சொல்லினான். (அ)

குமரியர்விழியெனக்குறிக்கும்வாளினா
னமன்முதுகிடமுனைநயக்கும்வேலினா
னமரருமுனிவரும்பிறருமஞ்சவே
தமரெனவெங்கதந்தழுவுந்தன்மையான். (கூ)

ஆயவன்வேட்டையினருத்திமீக்கொளாப்
பாய்பரியானையும்படைக்கைவீரரு
நாய்களுமெயினருநணுகவென்றன
னேயெனுமளவின்மந்திரிகளீட்டினர். (க0)

காற்றெனவயப்பரிகலந்தவெங்கடுங்
கூற்றெனமதமழைகுழுமக்குன்றுக
போற்றெனத்தேர்க்குலஞ்சூழவான்முகி
லேற்றொலியியங்கலித்தெழுந்தெங்குமே. (கக)

சூலம்வேல்சக்கரஞ்சுரிகைதோமரம்
பாலம்வில்லங்குசம்பாசநாந்தகங்
சோல்கவண்கப்பணங்குடாரமீட்டியென்
றேல்பதினெண்படைக்கலங்களேய்ந்தவால். (கஉ)

தாரைவேய்ங்குழற்றவில்சங்குகைத்துடி
பேரிகைதக்கைமாக்குரடுபேசொணா
வார்முரசுறுமிவாய்வழங்குபேரொலி
காரொலிகடலொலிகல்லிச்செல்லுமால். (கங)

புவனியைப்புதைத்தனபோர்வெஞ்சேனைகள்
சிவன்வலக்கணைப்புதைத்தெழுந்ததேர்க்கொடி
கவனமாப்புதைத்தகாற்றுகழிற்கார்கட
லுவனிலாத்திரைவரண்டூற்றடைத்ததே. (கச)

ததியிருள்செறிந்தன தயங்குவான்குடை
புதவெயில்பொழிந்தனபொலன்கொடேர்க்குல
நதர்தருகுறுமன்னர்நடந்தசேணதர்
மதிநிலவெறிந்தனமகுடகோடியே. (௧௫)

(வேறு)

கச்சிறுக்கிவரிவிற்குழைத்துநிமிர்காலினிற்கழல்செருப்புறுய்ச்
செச்சைநத்தொளிவிரிந்துமொய்த்திருள்செருக்கலைத்துநிலவொழுகந
லுச்சியிற்கழுகிறக்கைபற்பலவொழுங்குசேர்த்துமுகிலேமெறன
நச்சுவிற்சுடிகைகட்செவித்திறணடந்தவேடுவானந்தமே. (௧௬)

கற்றெருடுத்துநிமிர்மேனிமால்வரைகவித்தகாளகம்விரித்தல்போ
லற்றெருடுத்தவுடையோடுபட்டிகையணிந்துவாணுதலிலழகெழ
நெற்றெருடுத்தசாமிட்டுநற்கவடிகெட்டிறுக்கிமுடிதொட்டுவா
னெற்றெருடுத்தசிறுபிறையெனக்கதுவுமெயிறுநாறெயினர் கோடியே.()

விற்குழைத்துமுலையாசுகங்குல்வுதூணிவென்பிடாலேப்பநீ
ழற்குழைத்தகருமேனியோடுகிறுதாவடர்ந்துசெறிதாடியும்
பற்குழைத்தலகுமென்றுபுட்கரிபரந்தசெங்குருதிவாய்களுங்
கற்குழைத்தகழலும்பொருந்திவருவேடுவப்படைகவித்தவே. (௧௮)

மேருவிந்தகிரியாதிதுன்றிநிமிர்வெற்பெலாமொருநெறிக்கணே
சாரநின்றுநடைகொண்டுசென்றுலவுதன்மையொத்துமிளிர்பொன்ம
தேருகந்துவருவீரர்தங்கள்புடைசெப்பொணாதசகடங்களில் [ணித்
வார்விசித்தவலைகூடைகண்ணிகொடுவந்தவேடர்குழுமுந்தவே. (௧௯)

நனிசுருண்டகடைவாணிமிர்த்துவிரிநயனவங்கிபொறிசிதறவிண்
டணிவெழுந்தமுகிலிடியெனக்கொடியதனதுவாய்களிடையுறுமியார்
துனிபடப்பிடர்பிணித்தசங்கிலிகடுகவெளழக்கடிதுதிருகியேழ்
பணிகடற்புடவிநிலைகட்டழியஞாளிபற்பலபரந்தவே. (௨௦)

வாய்வளர்த்துவயிறொட்டிமார்பகலமாகிநாமுழமிறங்கவான்
றேய்பசாசநிலையுத்தொடர்ந்திடெறுலைத்துவாளெயிறுதோன்றவே
பாய்நடுங்கதிவலித்தகாற்கொலுசுபம்பியார்கவிபடுப்பவெந்
தீயெழுஞ்சிகையெனச்சிவந்திருகண்மீறிவந்தசிலநாய்களே. (௨௧).

நந்துதந்தமகராலயங்கரைதகர்த்துநாற்புறனுநண்ணிநீண்
முந்துபூவுலகடங்கமீக்கிளருமுறைமையொத்தொலிமுழக்கியே
கந்துகந்தெனவெழுந்துதாவுபடைகண்டுவண்டுளாலங்கலான்
சிந்தையுந்துவகைகொண்டுமந்திரிகளோடுசெல்வதோர்சிறப்பினான். ()

குண்டலம் புடைவிரித்துநின்றெளிகுலாவவிண்டலவுகொண்டல்வாய்
விண்டமின்னினமெனத்திரண்டுசுடர்வீசுபொன்டகுடம்வேய்ந்துநீ
டுண்டவெண்பிறையினைந்தகிம்புரிகடோள்புனைந்துவரையருவிபோன்
மண்டுமாலைபுரண்மார்பினிற்கவசமார்த்துவாள்புடைவயங்கவே. (௨௩).

வேலெடுத்துமுனையாசுகங்குலவுவில்வளைத்தொலிவிளங்கநீள்
காலினிற்கழல்செருப்பணிந்துகடைநாளெழுந்துவருகாலனொ
டாலகாலவிடமுங்கொடுங்கனலுமஞ்சியோடவரியேறுபோற்
கோல்பிடித்துவலவன்கடாவிரதமேறிவெற்றிபுரிகோமகன். (௨௪)

கொற்றவெண்குடைநிழற்றவெண்கவரிகுலவவார்முரசுபேரிகை
யெற்றுபேரொலிமுழங்கமற்றுளவியங்கள்விம்மியெழுகடலெனச்
சுற்றவந்திசர்வணங்கிவாழ்த்துமொலிதுள்ளமன்னர்புடைசூழவே
வெற்றிமாநகரவீதிவிட்டெயிற்கடந்துகான்வரைகண்மேவியே. (௨௫)

கைவகுத்துவலையூடுகெட்டிநிரைகாணெலாம்படைகலந்துநின்
றெய்யும்விற்பகழிகோன்மழுக்கண்முசலங்களெஃகுவளைசக்கரம்
வெய்யவெங்கனல்பரப்பியெங்கணும்விளங்கவங்கதில்விழுந்துநீள்
கைமலைக்குலமழிந்தயாளிபுலிகரடிமான்மரைகழிந்தவால். (௨௬)

நாய்கடித்தகடியிற்பிழைத்துடனடுங்கவந்தபல்விலங்கின்மேற்
றோய்பசுங்குருதிவாரவேடுவர்தொடுத்தவிற்பகழிதுளைசெய
வாய்பிளந்துயிர்பிரிந்துவானுலவுமலைகள்போற்குவியவனமெலாம்
போய்வளைந்தவலையூடுபுட்குலமடிந்துதங்களுயிர்பொன்றுமால். (௨௭)

வேசைமையல்விலகாதகாமுகர்விரும்பியங்கவர்கள்பாலினின்
றாசைமீறவுயிர்தேய்தல்போலவனம்யாவுமேகுநெறிமாற்றிய
பாசமீதுசுழல்புட்குலங்களுயிர்பாறிவாய்வெருவல்கொண்டதோ
ரோசையந்தரமெலாநிரந்தமழையோலமென்னவொலியோங்குமால். ()

குந்தநேமிகணைசூலம்வேல்கயிறுகொண்டுவேடுவர்குழுக்களாய்த்
தந்தியாளிபுலிகேழன்மான்மரைதடிந்துதாவியெழுபுள்ளெலாஞ்
சிந்தநூறியெலிமுயலுடும்புகள்சிதைந்துவீழவுடறிசைதொறும்
வெந்துதீச்சுடர்பிறங்கமொய்த்துவனவேட்டையாடினர்விரும்பியே. ()

பாவிரும்பியருளாதவன்கொடியபாமரர்க்குரியபொருளெலா
மேவியள்ளியெரிவாய்மடுத்துவிளையாடல்கொண்டுவெருவிந்தைபோற்
காவுகான்வரைகடாவியாவுமொருகைக்குளேவரவளைத்துவில்
லேவுமேவின்முனையாலழிந்துயிரிழந்துபோயினவிலங்கரோ. (௩௦)

வட்டவாணுதன்மடந்தைமார்விழிவலைக்குளேமனம்வருந்துறு
தெட்டவோடிமயலாறிமேன்மைபெருமான்கள்போலவிளமானெலாந்
துட்டவேடுவரடர்ந்துகான்வரைதொடர்ந்துதுன்றுகணைவாய்தொறுங்
கட்டுபாசவலையைக்கடந்துவெளிசென்றுநின்றுடல்களிக்குமால். (௩௧)

வேறு.

தோள்வலம்படவயவர்கைச்சிலைதொட்டவேல்கணைசுரிகைபாயவே
தாளொடிந்துகண்சிதறமெய்யுரந்தசரவாய்களிற்குருதிசாய்த்துவெண்
மூளைசிந்திநற்றலைநொறுங்கிடமுழுவதும்பொடியாகிநீள்பெருங்
கோளடைந்துமாவனமெலாம்வளங்குறைவடைந்தபுட்குலம்விலங்கவே. ()

தலைதுமிந்துவானளவுமாமுகிறழுவமேனிவந்தொளிகுலாவிய
மலையெனத்திரண்டொழுகுசோரிகண்மகிதலத்தினிலருவிபோலெழுந்
தலைபரப்பமெய்முழுவதும்புதிதாகவேபுவிமாதுசென்னிறக்
கலைபுனைந்துவீறழகுதோன்றிடக்கானெலாங்கவின்காட்டன்மானுமே.(௩௩)

ஏனமான்மரைகாடிமந்தமாவெலியுடும்புபுல்வாய்முயர்குலந்
தான்மடிந்தவைவாறிவேடுவர்தழன்மடுத்துடறனைவெதுப்புமே
லூன்வகிர்ந்துதின்றூர்வமோடுமாடுற்றஞாளிகட்குணவருத்தியே
கானறும்புனல்பருகிமெய்யுளங்களிதுளும்பவெங்கானின்மீளவும். (௩௪)

அன்னநாரைகொக்கன்றில்குக்கில்கேகயஞ்சிவல்கவுதாரிதாக்கணம்
பொன்வரிக்குயில்பூவையஞ்சுகம்பூனிசிட்டுபூஞ்சிட்டுகம்பள
மின்னதாயபுட்கொட்டுகண்ணிவைத்திட்டுவான்சுமைகட்டியீங்கிது
மன்னன்மாமகற்கிதுநமக்கிதுமனைவிகூத்தியர்க்கென்றுவாவுவார். (௩௫)

மாதமொன்றுநீள்வனமெலாமுளமாவிலங்குபுள்வளங்களைக்கவர்ந்
தேதுமின்றியேயாதுசெய்துமென்றேந்தல்பாற்சொலவேந்தர்கோமக
னோதுவேடுவெப்படைகளீருமதார்வயிற்செலுமெனவுரைத்துமப்
போதுதன்பதாதிகணெருங்கியேழ்புணரியாமெனப்புடைகுலாவவே. (௩௬)

ஈரிரண்டுமெந்திரிகளோடுதானிரதமேறியவ்வனமிரிந்துபோய்ச்
சூரியன்செறிபாதவங்களாற்சுடரிழந்திருள்சொரியநீழல்செய்
வேரியம்பொழினோர்தெரிந்ததின்மேவினான்படைவீரர்வெங்கரி
தேர்பெரும்பரிபார்பெருத்துறச்சிந்தைவேடையானொந்துதாகமாய். (௩௭)

மன்னர்கோமகன்மாடுநின்றதோர்மதியமைச்சர்நான்கவரின்மன்னவன்
சொன்னசெய்வதிற்றுருசுளான்புரிசூதும்வாதும்வஞ்சகமுநாளெலாந்
தன்னதாகவேதழுவதுற்சனன்றனைநோக்கியேதாகநீங்கவே
யின்னபோதினிற்புனல்கவர்ந்துவாவென்றசொல்லின்முன்னேகினானரோ.

சோலைவாய்தொறுஞ்சூரைமாருதஞ்சுழறல்போலவேதுருவியேகியோர்
பாலின்முன்னமேகடைபடாதவெண்பாற்கடற்பெரும்படமலிந்தபொற்
கூலவாவியைக்குறுகியம்புனற்கொண்டுபின்னவன்கண்டுகொண்டநற்
சீலமங்கையினிலைமைநோக்கினாஞ்சிந்தையாகுலஞ்செறியநோக்கினான். ()

பொன்றிரண்டொளிவீசும்வாசமார்பூவின்மென்கொடிகாவியுண்கணும்
மின்றிரண்டசிற்றிடையும்விந்தமாமேருவின்முலைப்பாரமும்பொருத்
தின்றுநின்றதோர்பெண்கொலாமிவரெங்குளார்கொலோவென்றுமெய்மறந்
தன்றுமந்திரியச்சமெய்திமேலவசமாகினானறிவுமாழ்கியே. (௪௦)

மதிகொள்வாண்முகமதுமலர்ந்ததாமரைகொலோவிழிமான்கொலோமொழி
புதியதேன்கொலோபூவைமேனியும்பொன்கொலோவிதுபுரியநோக்கினாற்
பதியினாகர்தம்பதியின்வானவர்பதியினில்லதோர்படிவமெய்திட
விதியினார்தவமன்றியாவரால்விளையவாற்றலாமெனவிளம்புவேம். (௪௧)

கானெலாமொளிவீசமூசியகானமாதினைக்காணிலாதவன்
மானமாறிநீள்வானமீதினில்வாவநாடொறும்மனதுசெய்வனோ
வூனமில்லவடனியளாகியிங்குற்றதேதெனவுணருமுன்னொரு
மீனகேதனன்கேதமெய்துசீர்விளையும்வீரனவ்வுழைவிளங்கினான். (சஉ)

ஆணிலாணிபோற்றோன்றுமிங்கிவனழகெலாந்திரண்டார்வமாய்விளை
காணிகைக்கொளுங்காவல்பெற்றுளகாளைதன்னையுங்கண்டுகண்ணெதிர்
நாணினீங்குதற்கியாவர்வல்லவர்நாரதாதியர்கீதமோதநீள்
சேணில்வாழுமோர்தேவர்கோமகன்சிறியனேயிவன்சீர்மைநோக்கினால். ()

பெண்ணினுக்கிவளாணினுக்கிவன்பேசவாய்ந்துளார்பீடுதோன்றவே
மண்ணில்வானினிற்பாதலத்தினின்மனதினும்நினையாதவண்ணமா
யுண்ணிறைந்தசூதுளவெலாமுணர்ந்துள்ளநாளெலாந்தவமுஞற்றியே
தண்மலர்த்தவிசண்ணல்செய்தகைச்சமர்த்தைநான்சொலச்சமர்த்தனுவனோ

என்றுநின்றுநின்றெண்ணுமந்திரியிவணலத்தைநாமென்றுநீக்குத
னன்றுநல்லதுகண்டபோதவைநாயனுக்கெனநவில்வாரதலா
லின்றுநம்மிறைக்காக்குதல்கடனென்பதெண்ணிமீண்டேந்தல்பாற்புகுந்
தன்றுதாவநீரால்விலக்கிநீங்காதமோகநீரளிக்கவுன்னினான். (சரு)

விஜயதரன் வேட்டைப்படலம்.

முற்றிற்று.

ஆகப்படலம்-கசு-க்குத்திருவிருத்தம் எசகூ.

பூலோகரம்பையின்வடிவுரைத்தபடலம்.

பொற்புமிகுந்ததாருவனப்புனிதமுனிவர்பன்னியர்தங்
கற்புமொழுக்குமளக்கவொருகபாலிவடிவுற்றவைபுரிந்து
வெற்புநிகாமாமதிட்கூடன்மேவிவெளியாயொளியாய்நின்
றற்புநிறைத்தானிறைத்தானெனுளத்துமவன்பொன்னடித்துணையே. (க)

வேறு.

தாகமுநீங்கநன்னீர்தனைக்கொடுத்தரசன்கொண்ட
சோகமுநீங்கச்செய்ததுர்ச்சனன்சுகம்போலச்சோ
வாகமுமுளமும்வேவவவாவெனும்விறகிட்டோயா
மோகவெவ்வந்தீயைமெல்லமூட்டினான்முடிவில்லாமல். (உ)

அன்னமோகிளியோசோலையகத்துறுமயிலோகாரின்
மின்னலோகுயிலோயாதோவிரிமலர்வாவிநாப்பண்
மன்னியதென்கொலென்னமயறாக்கூர்ந்துநோக்கிப்
பின்னுநானெடுநேரம்போய்ப்பெண்ணெனத்தெரியலுற்றேன். (ங)

தெரிந்தனன்றமியளாகச்செழுமலர்வாவிநாப்ப
ணிருந்தவளியற்கைநோக்கிலிந்திரநகரினின்றுந்
திருந்திழைதவறிமண்ணிற்சேர்ந்ததுபோலுமந்தோ
விரிந்தபேரழகிமாட்டோர்வீரனும்விளங்குகின்றான். (௪)

இருவரேயழகுக்கெல்லையாமெனவியைந்தார்மாந்த
ரொருவருமறியாதாங்கணுற்றவாதெரியநோக்கிற்
கரவினிற்கலந்தார்போலக்காட்டினதவனைத்தீர்த்தவ்
வாசியையரசேநின்பாற்சேர்ப்பதற்காசையுற்றேன். (௫)

காணியின்மயிலினாளும்வீரனுங்கலந்தகாதன்
மேனனிகளிப்புத்தூண்டவிரும்புபேர்விளையாட்டாலே
நாணடைந்ததுவுமீங்குநண்ணியதுவுந்தேரார்
மானவவென்றான்கேட்டமன்னவன்யாவளென்றான். (௬)

இந்திரையென்கேன்யானுமெழிலுறநாவில்வாழுஞ்
சுந்தரியென்கேன்வேரிசூழ்ந்தருமுளரிப்போதில்
வந்தவளென்கேனெந்தவண்ணநானெளிதிற்றேர்ந்திங்
கந்தமிலுருவத்தாளையாவளென்றறைவனையா. (௭)

பாவணங்கவிர்பூமாதுபார்வதியிவளைக்காணி
லாவல்கொண்டயன்மாலீசனணுகுவாரென்றேவன்றே
நாவினின்மார்பின்மெய்யினாளுநற்குடிநீங்காமன்
மேவினாரென்றால்வேறுநானெனதைவிரித்துச்சொல்வேன். (௮)

மானெனினோக்கஞ்சோலைமயிலெனிற்சாய்கைசெம்பொன்
றானெனின்மேனியல்லான்மற்றவைதருகற்பாற்றோ
வான்மதிதேய்த்தசோதிவதனத்தாட்குவமைசின்ன
வூன்மதியுடையேன்சொல்லாலுரைசெயற்குளவோபாவம். (௯)

மங்கையர்க்குவமையாவும்வகுத்தனர்புலவர்மேலோ
ரங்கதைப்பகரநெஞ்சமஞ்சுவனரியதேடி
யிங்கெதையுரைப்பேன்பின்னுமிசைந்தவாறிசைப்பேனென்னாக்
கொங்கலர்குழலினாடன்வடிவெலாங்கூறலுற்றான். (௧0)

(வேறு)

கரியவிண்மழையோசைவலத்திரளோகலையில்புன்மாந்தர்கண்மனமோ
வரியநெய்புழுகுநாவிமென்பனிநீரளைந்தகிற்புகையொடுங்குலவி
விரிமலர்த்தார்வேய்ந்தளியினம்பாடமினுமினுத்தறலினுமிளிர்ந்து
வருகதிரவிக்குமிருட்பிழம்பெனவும்வார்ந்துகள்ளொழுகியகுழலாள். (௧௧)

மாதுதன்வதனமுழுமதிக்கிடையின்மற்றொருமதியினைவகிர்ந்து
பாதிநன்னுதல்செய்ததனுளார்திலதம்பாதியையவளைத்துவைந்ததுவோ
சோதிமென்குமிழின்பூவையுமெள்ளின்றொளையுந்தொல்லைமாஞால
மீதுளார்கொடிமூக்குவமையென்றுரைத்தார்நானவைவிளம்புதன்மிகையே.

நெறிகுழன்முகிற்குமுகமதியதற்குநேருறுமிந்திரதனுவோ
தெரிவரிதாயவுருவினான்சிலைகூறாக்கிவைத்திருத்தியசெயலோ
வரிவிழித்தரங்கக்கடறதும்பாதுமலரயன்கரத்தினால்வகுத்த
கரையதோகரையாமனத்தையுங்கரைக்குங்கன்னிகைமுகத்தொளிர்புருவம்.

பரவையிற்பரந்துமதர்த்துமைசெருக்கிப்பானலங்கரிந்துகச்சீறித்
தெரிவருமூவர்நிறமெனச்சிறந்துசெவ்விளம்பிணையெனமருண்டு
கருதுபொய்வஞ்சங்கொலைகளவெவையுங்காலனுக்கணையெனப்பயிற்றித்
திருமணிக்குழையைக்கிழிபடத்திறந்துசேணுறப்புரளும்வாள்விழியாள்.(கச)

குமுதமுங்கிடையுங்கோபமுமுருக்குங்கொவ்வைமென்பழனுமேதுவன்றி
யமுதமுள்ளூறித்ததும்புசெம்பவளத்தணிபொருவள்ளமொன்றிருக்கி
லெமதுவாயொருவாறிசையுமாங்கவடன்வாயெனவிசைக்கவுமையா
வுமிழ்நகைவிரியுமுருந்ததோமுத்தோவொளிநிலாப்பரப்புவெண்முறுவல். ()

ஆடியோவிரதப்பசுங்களோகுழைக்குமணியலர்ப்படையினான்கரத்திற்
கூடியவரிவட்டகட்டுநெட்டிலைவாட்டேட்டிடக்குறித்தசாணையவோ
சேடுறுதரங்கப்புனல்வதிநிலையோசேயிழையொளிர்மணிக்கபோலம்
பாடியபொருளிலெப்பரிசெடுத்துப்பாடினுமிணைதரற்பாற்றே. (கசு)

சூழிமணித்தடத்திலார்ந்தவள்ளையிணைத்தோயமுட்டோய்த்துகத்திரியைப்
பழிபடப்பாணுர்பையுளிற்புகுத்திப்பருமணியூசலைப்பழித்துக்
கழிமடமாந்தராவியைப்பிணிக்குங்கயிறெனத்தோள்வரைநீண்டு
விழியெனும்பிணைபோயுலவிமீள்வதற்காய்விதித்தபொன்னிலையெனுங்கு
[ழையாள் (கஎ)

தாமரைவதனமென்றிடின்முனமேதையலார்முகங்களுக்கொல்கும்
பூமதிக்குடைந்துபோயதாலதனைமீளவும்புகலுதல்புகழோ
பாமகண்மாமன்பஞ்சவாயுதத்திலொன்றைநான்கண்டமாய்ப்பகர்ந்தான்
மாமகள்வாய்வைத்தூதியதுளையுமருவுபுன்னெனச்சிலுமாமே. (கஅ)

விண்டுவும்பசியகரும்புமென்றடந்தோட்குவமையென்றாய்ந்துநான்விண்
முண்டகமன்றிக்காந்தளின்மலர்கண்டூழுவதும்புறஞ்செலமுடுக்கிக் [டான்
கொண்டலுந்தருவங்குடிபுனைந்தலைமேற்குலவியசென்னிறப்பவளத
துண்டணிவிரல்கொளங்கையுநகமாந்தூய்மதிச்சுடர்களுமுளவோ. (கக)

முண்டகமுகைபம்பரங்குமிழ்சூதுமுடிகுடங்குரும்பைகோங்கரும்பு
செண்டுசெப்படங்கக்கனத்தடிதடித்துததிதலைபூத்தணிவடமலர்த்தா
ரொண்டருகலவைசுமந்துசிதளமார்ந்துத்தராசங்கமிட்டெதிர்சென்
றண்டர்கோன்யானைக்கோட்டொடும்பொருதவணாந்துவிண்ணோங்கியமுலை
[யாள். (௨௦)

மாலவன்றுயிலுமாலிலையன்றிவயிற்றினுக்குவமைவேறிலையென
றேலநான்மறையாகமநெறியுணர்ந்தோருரைசெய்தாரதுபிழைத்துரைத்தற்
கேலுமோவுதரபந்தனமடிப்பார்ந்திலங்கியவிளங்கிழையழகாங்
கோலவான்கடலின்றரங்கமென்றலகோர்கூறினால்வேறெதுகுறிப்பாம் ()

கண்டகர்கழலினிகளங்கொன் மூலையாங்கஞ்சமென் முகையினைத்தாங்கும்
தண்டுகொல்வண்டினொழுக்குகொன் மதன் கைச்சலாகைகொலென்றுமாண்
புடையோர், பண்டுசொல்லுவமையாவையுந்தள்ளிப்பாவைதன்மேகலைமணி
யி,லுண்டவான்சுடர்போன்றொளிசெயுமுரோமத்தொழுங்குதேர்ந்தியாவரே
[யுரைப்பார். (௨௨)

மூந்துபேருலகமுழுவதும்படைத்தமுதிர்மறைநான்முகத்தொருவன்
வந்தவாண்மனையின்வனப்பழித்தவிர்வெண்மதிநிலாவுலவுசெஞ்சடைமேற்
சிந்துதெண்டிரைநீர்க்கங்கைமாநதியின்றிகழ்சுழியனைத்தையுஞ்சுழிந்த
வுந்தியஞ்சுழிகண்டுளஞ்சுழிந்தாசையுறாதபேருலகினிலுண்டோ. (௨௩)

சிங்கமுந்துடியுமின்னலுமயங்கச்சிறுத்தசிற்றிடையினைமட்டு
மங்கையைநீயுமணந்துபஞ்சணையின்மருவுநாண்மறந்திடாதுனது [துப்
செங்கையாற்பரிசித்தறிந்துகொண்டெனக்குஞ்செப்புவாயொப்புவேறெடுத்
புங்கமில்லாதுபுகல்வதற்கெவரிப்பாரிலைசபடித்தனரம்மா. (௨௪)

வரம்பினைக்கடந்தவடிவினுள்கவான் மன்மதன்மனைவாயிலினட்ட
வரம்பையோமகரதோரணக்கலையோயானையின்றுதிக்கையோயாதோ
விரும்புபேரல்குன்மான்குழம்பாவின்விரிபணமாசிலையின்றேற்
சுரும்புசூழிருலின்றேன்வழிந்தனையசுவைதரும்வட்டெனச்சொலலாம். ()

சினைவராலாவநெற்பொதிகணைக்காலிணைதருஞ்செழுமணிமுழந்தா
ணினைவராதரித்தாரலவனையெதைநானிகழ்த்துவனிறைமதிவணிக
ரனைவராடக்த்தைநிருவைசெய்யருகுதராசணிபாடுநல்லாமை
தனைவராதொதுக்கும்புறவடிக்கென்றேசாற்றலாம்புத்தகந்தவிற. (௨௬)

பஞ்செனச்சிவந்தகால்விரற்றிருப்பாற்கடற்படுபவளத்தினுள்ள
செஞ்செவிமுழுதுங்கவர்ந்துவெண்மதியைச்சிதறிவண்டினங்குடைந்தொலி
கஞ்சநாண்மலரினிதழெனவிரிந்துகற்பகத்தளிர்நிறங்கவற்றிக் [செய்
கொஞ்சமுங்குறையாதழகெலாஞ்சூழ்ந்துகுடிபுனைந்திருந்தகொள்கையதே.

கற்பகக்காவூடிருந்திளவேனிற்காலம்வாய்கூவுபூங்குயில்க
டற்பகையாகயாழ்குழல்சீனிசருக்கரைதேன்முதற்கனிபா
னற்பதம்பொருந்தியுலர்ந்தவெள்ளெலும்புநனிபசந்துயிர்தரநாளுஞ்
சொற்பகரமுதமழலைமென்மொழியஞ்சுகத்தினுக்குதவியசொல்லாள். (௨அ)

மதம்பெய்வாரணங்களூடறீர்ந்துருகமையல்செய்வனப்பிடிபோலப
பதம்பெயர்த்தணிசெம்பவளவாயன்னம்பாடுறப்படித்தமென்னடையாள்
கதம்பகத்நூரிசந்தனம்புழுகுகலந்தெழுவாசமின்றெனினு
நிதம்பெருந்தொலைசென்றளாவுபூவாசநிரம்பியபொன்னின்மேனியினள். ()

இன்னதோர்வடிவின்மடவரல்வடபாலிரும்பொழில்ஞாங்கர்சூழ்கிடந்த
மன்னியவனசப்போதலர்வாவிமையமண்டபத்திடையொருவன்
றன்னொடிருந்தாளவனைநானுனக்குத்தாரமாய்ப்பொருத்துதறமென்
றுன்னியிங்கோட்டமோட்டமாயுற்றேனுன்றவமுலகில்வீணுறுமோ. (௩௰)

பூலோகரம்பையின்வடிவுரைத்தபடலம்.

முற்றிற்று.

ஆகப்படலம்-௧௭-க்குத்திருவிருத்தம்-௭௭௬:

விஜயதரன்மோகமுற்றபடலம்.

பொருமிதங்கருமந்தீர்த்திடநெஞ்சம்புலர்ந்துதன்னடிதொழுதிரந்த
தருமிதங்கைக்குப்பொற்கிழிபெறவேதமிழ்க்கவிபாடியங்கதனில்
வருமிதங்காட்டுங்கீரனைக்கடிந்தமதுரையம்பரன்றனைத்தொழுது
கருமிதங்கடத்திவாழுநாண்முழுதுங்களிக்குதலெனதுபுன்கருத்தே. (௧)

மந்திரியுரைத்தமதுரவாசகங்கண்மன்னவன்செவித்துளைமண்டிச
சிந்தையுட்புகுந்துமெய்யெலாம்பரவிச்சிரம்பணித்தடங்கொளுச்சோகந்
தந்திடமயங்கித்தெளிவுறுத்தனங்கன்சரங்களாலுரம்பிளந்தெறியுஞ்
செந்தழன்மெழுகொத்துருகிவாய்புலர்ந்துதிகைப்பொடுயிர்நிலைதிரிந்தா
[ன்.

வாடினன்மெலிந்தான்மந்திரியுரைத்தமடவரல்வனப்பெலாமனத்தி
னாடினன்கண்முன்கண்டதுபோலுளைந்துளமுருகிமேன்மோகங்
கூடினனுயிர்விட்டகன்றசையாதகூடெனக்குறுகுறுத்தச்ச
நீடினன்செய்யும்வகைசிறிதிலனாய்நெட்டுயிர்ப்பெறிந்துநின்றுழன்றான். (௩)

இந்தநாள்வரையுங்கண்டுகேட்டறியாதிப்பெரும்வனப்பெலாம்படைத்த
மந்தவாணைகைமென்மயிலியற்குயிலின்மழலையஞ்சுகத்தினைமருவிச்
சிந்தையாகுலம்போமளவினும்வேறுசிந்தியேனென்பதுசருதாச்
சந்தணிகடகவாகுநீள்புயத்தானசாற்றுதுற்சனன்முகநோக்கி. (௪)

கண்டுநீயுரைத்தகருந்தடநெடுங்கட்காரிகைதன்னைநான்கவர்ந்து
கொண்டுபோய்வதுவையாற்றுதலின்றிக்கோநகர்க்கேகுதல்குறியேன்
மண்டுவெம்படையின்றெழுகவென்றுரைத்துமதுமலர்வாவியைநோக்கித்
திண்டிறன்மணித்தேர்கடாவிவந்துற்றான்றிசைபுவிவானமுந்தியங்க. (௫)

வேறு.

வாவியைநாற்புறம்வளைந்துமாப்படை
மேவிடத்தேரைவிட்டிழிந்துவேந்தர்கோன்
காவியுண்கண்ணியைக்கண்ணினோக்கினா
னாவியுமனமுநின்றூசலாடவே. (௬)

புதுமலர்த்தேனுணப்புகுந்தவாவுறு
மதுகரஞ்சுழறல்போன்மாதுமெய்யழ
கதிமதுரத்துளியமிழ்தருந்திட
மதுகையான்கண்ணளிசுழன்றுமாழ்கின. (௭)

போதுறைமடந்தையும்பொதுமடந்தையென்
றோதுவவொருவரோடுறவுபெற்றவிம்
மாதினுக்கீதுசொல்வேனமைச்சன்வாயினா
லோதியவுவமமாயிரத்தொன்றேதிலன். (௮)

மந்திரிகூறியவனப்புக்கெத்தனை
யிந்தமாதழகுகண்ணீரைஞ்ஞூறுடை
யிந்திரனன்றிக்கணிரண்டினோக்குதற்
கந்தகன்மேன்மையென்றவலமெய்தினான். (௯)

முன்பெருநற்றவமுழுதுமுற்றிய
வென்பெரும்பாக்கியம்போன்றிங்கெய்தினா
டன்பெரும்வடிவினைக்கண்டுசாற்றிய
வன்பனாமமைச்சனுக்கெதுகொண்டாற்றுவேன். (௧௦)

கற்படிமனத்தினேன்காத்துவைகிய
நற்படிமுழுதுமின்னாரிக்கீந்திவள்
சொற்படிகேட்பதேயமார்துய்த்துறும்
பொற்படிவாழ்க்கையீதொழித்தென்பூணுவேன். (௧௧)

அங்கசனம்புபாய்ந்தலசவங்கமும்
பங்கமுற்றாவியுள்பதைக்கின்றேற்கிவள்
செங்கனிவாய்மருந்தருந்தித்தீர்ந்துயிர்
தங்குவதன்றிவேறெதுவுஞ்சாலுமோ. (௧௨)

தேவர்கண்மூவர்தன்றேவிமாருமிப்
பாவையுமன்றியேபாரினாகரின்
மேவியவிசும்பினில்விளையுமங்கைய
ரேவல்செய்குடிமையினியல்பிற்றாமரோ. (௧௩)

காணவுங்கேட்கவுங்கனிந்துபேசவும்
பூணவுமுகரவும்பொருந்துமென்புலன்
மாணிழைவடிவினையன்றிமாறுமா
றேணுளபொருளெலாந்தீதென்றெண்ணுமால். (௧௪)

என்புலனிவள்வயினெய்தவீங்கிவ
டன்புலனென்வயிற்றந்ததையலை
யன்புலவாதுகொண்டகல்வதின்றியே
பின்புலன்விடுத்துநான்பெயர்தனன்றரோ. (௧௫)

போர்முனைந்திவனுயிர்போக்கிப்பொன்னிகர்
காரிகைதனையுங்கைப்பற்றிக்கானகன்
றூர்வயினடப்பதற்குள்ளயோசனை
நேர்வதுகடனெனநிருபன்சாற்றலும். (௧௬)

அமைச்சரும்வீரருமரசன்சொற்படி
சமைக்குதுமெனத்திரண்டார்த்துத்தானையோ
டிமைக்குமுன்கடலெனவெழுந்துசுற்றினா
ருமைக்கொருநாதனுமயக்கமுற்றிட. (௧௭)

விஜயதரன்மோகமுற்றபடலம்.

முற்றிற்று.

ஆகப்படலம் ௧௮-க்குத்திருவிருத்தம் ௭௯.

புவனேந்திரன்முனிவுற்றபடலம்.

இந்திரனெழிலிக்காகவிமையவர்குழுக்கொண்டீண்டி
வந்தமர்பொருதவண்ஞன்றனைவென்றுவாகைசூடிச்
செந்தமிழ்நாடுகொக்கச்செழியனுக்குதவியாண்ட
சுந்தரனெந்தையம்பொற்றுணையடிமுடிமேற்கொள்வாம். (௧)

வேறு.

வினைவிளையாட்டின்மேல்விருப்பமுற்றிய
மனைவியுந்தானுமம்மன்னன்மாப்படை
தனையுணர்ந்திலர்பினுந்தாக்குவான்புரி
யினையபேரொலிசெவியெய்தக்கேட்டனர். (௨)

ஆர்கொலாமிவர்மழையார்ப்புமார்கலி
வார்திரையோசையுமடங்கச்சீறியே
யோர்வயவாசியுந்தேரும்பூட்கையும்
பார்வளைத்திடமறப்பரந்துசுற்றினார். (௩)

கூர்த்தவெவ்வரவெனக்கொதிக்குங்கண்ணினார்
போர்த்தொழில்புரியவேபுகுந்ததாமென
வார்த்தைநம்பால்விடுதூதின்மார்க்கம்போ
லார்த்தபேரமலைவானலைத்ததின்றரோ. (௪)

முன்னைக்கண்டேவரோமொழியக்கேட்டுள
பின்னைக்கண்டித்தலம்படரப்பெற்றிவ
ரென்னைக்கொன்றப்புறமெளிதிலீங்குநின்
றன்னைக்கொண்டகல்வுறுந்தகைமைத்தாமரோ. (௫)

புலிமுகம்புகுந்தமான்போலும்பூனைவா
யெலிமுகம்போலுநின்றேங்கவென்கையின்
சிலிமுகமழையெனச்சிந்தியீங்கிவர்
வலிமுகந்தொலைத்துடல்வாட்டல்காண்பனால். (௬)

வீட்டுவேனிவருடற்குருதிமென்றசை
யூட்டுவேன்றுணங்கைகொண்டலகையுண்டிடக்
காட்டுவேனென்வலியென்றுகட்கடை
கோட்டினானுலகெலாமறுக்கங்கொள்ளவே. (௭)

மன்னவன்வீரமும்வலியும்வாய்மையுங்
கன்னிகைகண்டுளங்களித்தபோதினுந்
துன்னலர்பெரும்படைநோக்குந்தோறெலாந்
தன்னுளம்பறைதரத்தளர்ந்துசாம்புவாள். (௮)

ஐயநான்புகறல்புன்மொழியென்றுலுநின்
செய்யநற்றிருவுளமுணர்தல்சீர்மையா
லெய்துறுகாரணமொன்றுமின்றியே
வெய்யவரோடமர்விளைத்தன்மேன்மையோ. (௯)

காவலவுன்னைவென்றென்னைக்கைக்கொடு
போவதற்கெண்ணிணென்றபோதினும்
வாவியுளிறங்கிநாமனைக்கண்மேவிடின்
மேவலர்கிடக்கயார்தெரிந்துமேவுவார். (௧௦)

முனிவினைநீக்குகமுளரிவாவியு
ளினிதுநாம்போவதற்கெழுகவென்றுரை
தனுவலான்பொன்னடிதாழ்ந்துகூறினள்
வனிதையர்க்குண்ணலம்வாய்ந்தகற்பினள். (௧௧)

அவ்வுரைகூறலுமரசன்காதினில்
வெவ்வழல்செறித்தனவெகுளிவீங்கினன்
செவ்வழிநயனங்கள்செம்புநேர்படக்
கொவ்வைவாய்மயிலுளநடுங்கக்கூறுவான். (௧௨)

என்னையெண்ணுதுரையிகழ்ந்துகூறுவார்
தன்னையேதுணிக்குமென்சரங்களென்பது
முன்னைநீயறிகிலாதுரைத்துமுற்றிலுங்
கன்னிகையாதலிலுய்வுகண்டனை. (௧௩)

என்னொருவலியுமிங்கெதிர்ந்துசுற்றிய
மன்னொருபடைகளின்வலியுங்காண்பரான்
முன்னருஞ்சுரரொடுமுனிவரும்புவி
துன்னியவேந்தரும்பிறருந்தொக்கினே. (௧௪)

இந்திரன்மாலயனீசனேனையர்
வந்தமர்மலையினும்வளைத்தவிற்சாஞ்
சிந்திநின்றவர்புறங்காட்டச்செய்யுமென்
விந்தைநின்பாற்சொலல்வெட்கமேகொலாம். (௧௫)

அருந்தவம்முனிவர்கட்காக்கமீக்கொள்வோர்
விருந்தினுக்கீகைக்குநன்மைமிக்குளோர்
வருந்திறற்சமர்க்குமன்னவர்கள்வையமேற்
பொருந்துவரவர்க்கிவைபுகழின்பூணரோ. (௧௬)

பாரினிலரசர்தம்பான்மைக்கேற்புறும்
வீரமென்பதுதனுவீங்கவுண்டுபுன்
ஞரியரிளமுலைநலங்கடுய்த்துமேற்
காரியஞ்சோர்ந்துகண்டுயில்தல்காண்பதோ. (௧௭)

இற்றொருகணத்தினிலெதிர்ந்துளோரெலா
மற்றுகக்குருதிநீராறுமண்டிட
வெற்றிகொண்டுலகுமப்பாலுமேவவென்
கொற்றமுநாட்டுவேன்கோதைகாண்கென. (௧௮)

செஞ்சிலைவாங்கிநாண்சேர்த்துப்பல்லவம்
மிஞ்சியதூணியும்புறத்துவீக்கினன்
புஞ்சமார்கவசமுங்கழலும்பூட்டினன்
குஞ்சரமேற்செல்கோளரியின்கொள்கையான். (௧௯)

ஏறியவெகுளியுமெடுத்தவில்லும்வாய்
மீறியசொல்லுங்கொண்டெழுந்தவீரனை
யாறியகுணத்தினளஞ்சிப்போற்றிநின்
றூறியகவலையோடிதனையோதுவாள். (௨௦)

மன்னநின்வாய்மொழிமறுக்கவல்லனே
னென்னொருபேதைமைக்கியைந்தபுன்மையாற்
சொன்னசொற்பொறுத்துக்கொடுணிவதாயினு
மின்னமொன்றுளவவையெண்ணல்கோடியால். (௨௧)

கடங்கவுள்கரிநிரைகண்டுதம்முனை
மடங்குமோமடங்கலுந்தெவ்வர்வன்சமர்க்
கடங்குமோநின்வலியறிவிலாதநான்
றடங்கல்சொல்வதும்பெருந்தகைமைத்தாகுமோ. (௨௨)

போர்புரிவதுவிளையாட்டின்பொம்மலென்
றோர்வதுதகைமைத்தன்றொன்னலார்புரி
சீரறிந்திடம்வலிகாலந்தேர்ந்துமேற்
சார்வதுநலனெனுந்தன்மையாய்ந்துளாய். (௨௩)

நீரினையருந்தவோநெறிவிலங்கியோ
போர்பொரக்கருதியோபுறத்தோரெண்ணமோ
வோர்கிலாதிவாவயிற்சீற்றமுற்றெதிர்
வீரநீசெலுத்துதன்மேன்மையின்றெனு. (௨௪)

எண்ணினேனலதுவேறில்லையென்னிரு
கண்ணினிற்கட்செவிகாலன்வாய்ப்படப்
பண்ணினதறிந்தும்நின்பருமநீள்புயத்
திண்ணமெஞ்ஞான்றினுமறக்குஞ்செய்கையோ. (௨௫)

பூசவிற்றிரிபுரம்பொடிக்கப்புக்குமவ்
வீசனுமங்கமோடேகினனெனிற்
றேசுடையலங்கலோய்தனித்துச்செல்லுதன்
மாசுடைத்தல்லதுவென்றிவாய்க்குமோ. (௨௬)

இலாதவரீகையுமிளமைவாய்ந்துழி
நலார்மயனீக்குவோர்துறவுநன்புவி
யெலாமொருங்கெதிர்ப்பினும்வென்னிடாதவில்
வலார்மனப்பொறுமையுமாண்பென்றெண்ணுநீ. (௨௭)

இச்செருக்குறித்துருத்தேகற்குள்ளமுங்
கிச்செனக்கனலுதல்கிருபைத்தாகுமோ
துச்சநீக்கியபுகழ்த்தோன்றலேயிவை
யச்சமென்றோர்தலுமழுகிற்றாமரோ. (௨௮)

வாவியுளேகுதும்வாவென்றாயிழை
காவியங்கட்கடைக்கலுழிவாரநின்
றாவலித்தழுங்குதலறிந்துவேந்தனும்
பூவைசொற்றனிமைகண்டிரக்கம்பூண்டனன். (௨௯)

மானமுங்கல்வியும்வலியும்வண்மையுந்
தானமுமெய்ம்மையுந்தவமுஞ்ஞானமு
மானிலமீதிலெஞ்ஞான்றுநீக்கமே
மானிழையார்மயல்வாய்ந்தமாந்தர்க்கே. (௩0)

ஆதலாற்றன்வலியயர்ந்துவாணகை
மாதுசொல்லாலுளமருண்டுவேந்தனும்
போதலர்வாவியுட்பூவையோடுபோ
யாதவனிகர்மனையமர்ந்துவைகினான். (௩௧)

புவனேந்திரன்முனிவுற்றபடலம்.

முற்றிற்று.

ஆகப்படலம்-௪௯-க்குத்திருவிருத்தம் ௮௨௪.

புனல்குளியோடுபடலம்.

விருப்பணிமாறன் பரிகள்வேண்டுமென்றுதவியவெறுக்கைகண்முற்றுந்
திரும்பணிதனக்குமடியவர்தமக்குஞ்செலவுசெய்தினுமறுதாயின்
கருப்பணியாதநெறிதனிலாசைகதித்துளவாதவூரருக்குக்
குருப்பணியுருக்கொண்டாண்டநம்மதுரைக்குதிரைநாயகனடிதொழுவாம்.()

(வேறு)

அங்கவர்நீர்புகுந்தம்பொன்மாமணி
தங்கியமாளிகைதன்னிற்சார்தலும்
மங்கையையுடனுறைமன்னனைக்காண்கிலா
திங்கவர்கட்புலன்மயக்கமெய்தினார். (௨)

மண்டபத்துற்றவர்வாவியம்புனற்
றெண்டிரையுட்புகுந்திருந்தசெய்கையைக்
கண்டுகொள்வதற்கொருகருமமோர்கிலார்
மண்டியவருத்தமுங்களிப்புமன்னினார். (௩)

கண்ணினுமனத்தினுங்கரந்திலாதுறை
பெண்ணிவளென்கொலோபெரும்புனற்றிரை
நண்ணினாணுமிதைநாடிநோக்குறி
லெண்ணுருதிந்திரசாலமேய்க்குமால். (௪)

நம்பெரும்பதாதிகணண்ணனோக்கிய
செம்பவளந்தரும்வாயின்சேயிழை
யம்புயமாதுநீராழுவத்தாழ்தல்போற்
றம்பதியொடுபயந்தன்னின்மூழ்கினாள். (௫)

வாவியினீரிடைமறைந்துவைகிய
காவியுண்கண்ணினாள்கன்னலெத்துணை
மேவுவாள்வெளிவருமளவும்வெம்படை
காவலாயமைகவென்றுரைத்தகாவலன். (௬)

பகலெல்லாங்காத்தவணிருக்கப்பானுவும்
மிகுமிவன்காமத்தீச்சுடுமுன்மேற்றிசைச்
கிரிபுக்கொளிப்பதற்கேகுஞ்செய்கைபோ
னகையிழந்தேகினான்மாலைநண்ணவே. (௭)

சோலைவாய்க்குயிலொலிதுள்ளவன்றிலும்
வேலைவாயோசையுமீறவெம்புலி
போலமந்தாநிலம்புகுதச்செக்கர்சூழ்
மாலைவல்லிருளெனுங்கூற்றம்வந்தவால். (௮)

கங்குலும்வாடையுங்கடலினோலமு
மங்கசன்பகழியுமாலகாலமேற்
பொங்கியதாமெனப்புகுந்துமோதலும்
வெங்கயநுகர்விளாங்கனியின்வேந்தனும். (௯)

தன்னறிவழிந்துவெந்தழலினீட்டிய
பொன்னெனச்சிவந்துளம்புகைந்துதீய்ந்திடப்
பின்னொருவழியினுநிலைபெறாமனின்
றின்னனமந்திரிக்கியம்பன்மேயினான். (௧௦)

நீரினின்மூழ்கியின்னேரம்வைகுதல்
பாரினில்வாழ்பவர்க்கரிதுபன்னக
னூரினிலுள்ளவளலதிக்குன்னுங்காற்
காரிகைகங்கையோகமலக்கன்னியோ. (௧௧)

செங்கதிர்ப்பகலெல்லாந்தீர்ந்தும்வந்திடா
மங்கையுமாதிரம்வளைந்துமன்னிய
கங்குலில்வந்திடுமென்னக்கண்விழித்
திங்கிருந்தோமினியென்செய்தாற்றுகேம் (௧௨)

ஆதவனுதயஞ்செய்யளவுந்தாமரைப்
போதலர்வாவியின்புறத்துக்காத்திதின்
சூதினைத்தெரிந்துநாந்தோயமூழ்கிய
மாதினைக்கவர்வுறுமார்க்கமின்றியே. (௧௩)

சென்றிடிற்கண்டவர்சிரிப்பராமென
வென்றியான்வெகுளியும்வியப்புமானமுந்
துன்றிடவிரவெலாந்துயின்றிடாதுளங்
கன்றிடப்புலம்பியேகவலையாகினான். (௧௪

மந்திரிமன்னவவருந்தனான்புகல்
செந்துவர்ப்பவளவாய்த்திருவைக்காலையிற்
றந்துநின்மனத்துனிதணிப்பலென்றலுஞ்
சிந்தையாகுலஞ்சிறிதகற்றித்தேர்வலான். (௧௫)

பெண்ணினைக்காணுமோர்பீழைகொண்டுதன்
கண்ணிணையிமைத்திடான்கங்குல்போம்வழி
யெண்ணினானென்னல்வாயிரவிலின்றெனோ
நண்ணிரவகன்றுளநியாயநன்றரோ. (௧௬)

தருச்செடிமலர்விரைததைந்துதென்றிசைப்
பொருப்புவிட்டாழிநீர்பொருந்திச்சீதளம்
விருப்புறக்கவர்ந்துமேல்வீசுந்தென்றலு
நெருப்பினுங்கோடைமெய்நிணாத்ததென்கொலோ. (௧௭)

நன்றெனவிருப்புறநமக்குமுன்னமே
நின்றொலிகுயிலுநீள்பனையைநீங்கிடா
வன்றிலுமுயிர்திரிந்தாக்கைதேய்ந்துளங்
கன்றிடக்கதறினகாட்சியென்கொலோ. (௧௮)

என்மதிபாழ்படுத்திடருள்ளாக்கிய
புன்மதியவண்முகப்பொலிவுக்கஞ்சியே
தன்மதிமாழ்கியதனிமையோர்ந்திடா
நன்மதிவன்மதிநமக்கின்றாயின. (௧௯)

இன்னணம்பித்தரிற்புலம்பியேங்கிய
மன்னனும்வாவியைவளைந்துகாத்துறுந்
தன்னெடும்படையொடுதங்கினானிருள்
பின்னிடைந்தலரியும்பிறக்கும்வேலைவாய். (௨0)

வள்ளவாய்க்கிளிமொழிமடநல்லாடனைக்
கள்ளமாய்க்கவர்வுறக்கருதுபாவியை
யுள்ளமோர்ந்தேசுதல்போலுமுற்றதோர்
புள்ளெலாம்பொழிலிடைப்புலம்பியார்த்திட. (௨௧)

பூக்கிளரணங்கினைப்போன்றபூவையை
நீக்குவானிவனெனநினைந்துதம்நெடும்
வாக்கினால்லைவதுமானுமானிறக்
காக்கைகள்கலைந்தொலிகதறிற்றெங்குமே. (௨௨)

முண்டகமுகைவிரிந்தொளிரும்மொய்ம்புனற்
றெண்டிரைமூழ்கியதேவிதன்னையுங்
கண்டிடலுனக்கரிதென்றுகாவல
னண்டையிற்புகறல்போலளிகளார்த்திட.. (௨௩)

கோல்வளைமடந்தையைக்குறிக்குமன்னனின்
பாலவளெய்தினும்பயன்படாளினி
மால்கொளாதேகுவையெனச்சொல்வாறுபோல்
வால்வளைதிரைப்புனல்வாய்விட்டாப்புற. (௨௪)

இருள்கிழித்தாழியொன்றேழுகொய்யுளைப்
பரிமணித்தேர்மிசைப்பருதிவானவன்
கருநிறக்கடன்முகட்டெழுந்துகைக்கொளா
விரிநெடுந்திசையெலாம்வெயிலைவீசினான். (௨௫)

தங்குலமன்னவன்றனதுபாரியைப்
பங்கஞ்செய்வதற்குறும்பதகனாவியை
யிங்குசுட்டிடுவதற்கேவுமாறுபோற்
செங்கதிர்ச்சுடர்வெயில்செறித்ததெங்குமே. (௨௬)

சூரியன்றோன்றியுந்தோயமூழ்கிய
காரிகைவெளிவரக்காண்கிலேமினிப்
பாரினுஞ்செயத்தகும்பான்மையென்னென
வீரன்மெய்மெலிதலுமமைச்சன்விள்ளுவான். (௨௭)

புனல்குழிப்பவர்களாற்புனலின்மூழ்கிய
வனிதையைத்தருவிநின்வயின்வழங்குவே
னெனவுரைத்தொற்றரையேவிவந்தவவ்
வினைபுரிமாக்களைவிளித்துச்சொல்லுவான். (௨௮)

கண்ணிமைப்பதன்முனங்கறங்குதெண்டிரை
நண்ணியவாவியுண்டிநாரமார்
பெண்ணினைக்கொணர்வதற்கழைத்தபெற்றியீ
தண்ணறன்பணியெனவமைச்சன்சாற்றலும். (௨௯)

பெருமதயானையின்வலிமைபெற்றுள
வோருபதினாயிரமாக்களொல்லையிற்
கருமுகிற்குலங்கடற்படிந்தகாட்சிபோற்
பொருபுனல்வாவியிற்புக்குதேடினார். (௩0)

அன்னமுநாரையுமாழிப்புட்களுந்
தன்னிருப்பிடங்குலைந்தெழுந்துதாவியம்
மன்னனைத்திட்டுதல்போலவானெலாந்
துன்னியபுலம்பல்கொண்டிரங்கிச்சோரவே. (௩௧)

படுவையும்வள்ளமும்பரப்பிப்பாதலந்
தொடுவலைநீண்டுறத்தொடுத்துவீசிவெங்
கடகரிமானத்தண்கயத்துண்மூழ்கியே
தடவினர்சேடனுந்தவிப்புற்றேங்கவே. (௩௨)

சுற்றினார்நாற்புறந்துருவிக்கீழ்த்தளம்
பற்றினாராழமும்புகுந்துபார்த்திட
முற்றுறுதாகியேமூச்சுளோய்ந்துயி
ரற்றனர்சிலர்கண்மேலாகினாரரோ. (௩௩)

போனவர்போகத்தண்புனலின்மேலெழுந்
தானவர்கால்கரமயர்ந்துபேசவு
மானமாய்நரம்புதோல்வலிப்பக்குந்தியே
மோனமாகினர்தவமுனிவர்போலவே. (௩௪)

அண்ணலுக்கருமையாயலங்குநீருறை
பெண்ணிணையீகுதுமென்றபெற்றியா
ருண்ணிறைமகரங்களுண்டுவந்திடக்
கண்ணிணையீய்ந்துளங்கலங்கினாரோ. (௩௫)

வராற்பருவாளைமீன்மலங்குமாச்சுறுக்
கராக்களான்மெய்யுளைமாக்கள்கால்கையி
லராப்பிணித்திடநரகாழ்ந்துமூழ்கல்போற்
றராப்படுநீரினுட்டவிப்புற்றாரரோ. (௩௬)

இன்னணந்தேடுதற்கெய்தினார்களிற்
றன்னுயிர்மாண்டபேர்தவிரத்தப்பினோர்
மன்னவன்பாற்புகுந்தடிவணங்கியே
யுன்னருந்துயரினோடுரைவிளம்புவார். (௩௭)

வார்கடலாழமும்வானினீளமும்
பாருடையகலமும்பார்த்துமீளுவோ
மோரிமைப்பொழுதினிலோங்குநாண்மலர்
நீர்நிலையறியவுநெஞ்சமாழ்கினோம். (௩௮)

உற்றவர்தங்களிலுடலழிந்துயி
ரற்றவரனேகராலரசனின்றவப்
பெற்றியானுங்களும்பிழைத்துப்போந்தனம்
மற்றுவேறிலையெனவழுத்திப்போயினார். (௩௯)

புனல்குழிப்பவர்களுட்புகுந்துதேடியவ்
வனிதையிங்கிலையெனவழுத்தியேகலும்
மனநிலைதளர்ந்துவேன்மன்னன்பின்னொரு
வினையமுஞ்செயவறியாதுவிம்மியே. (௪௦)

வாங்கரும்வறுமையேவாழ்க்கையென்றுளார்
தாங்கினாரும்பொருடன்னைப்பெற்றுப்பி
னீங்கிடத்தலைமுறுநீர்மையாமென
வோங்குநெட்டுயிர்ப்பெறிந்துள்ளமாழ்கினான். (௪௧)

கண்ணிடைப்புக்கியென்னுயிரைக்கைக்கொடு
புண்ணுடைத்தலமுறச்செய்துபோனதோர்
பெண்ணிவடன்னையெப்பிறப்பிற்காண்டுமென்
றண்ணலுஞ்சோர்ந்துநின்றழுதுவிம்மினான். (௪௨)

பெண்ணிவள்வடிவெனும்பெருமைகண்டவென்
கண்ணினுக்கென்னலங்காட்டுகிற்பினு
மெண்ணுமோவின்னுயிரிழப்பதின்றியே
மண்ணின்மேன்முகந்துசோறுண்டுவாழ்வனே. (௪௩)

என்றுநின்றிடைந்திடைந்தேங்கியேங்கியே
தன்றிருவிழிகளிற்றாரைசாய்ப்புறத்
துன்றியபடைகளுந்தன்னிற்சோர்ந்துளங்
கன்றிடப்பின்னருங்கழறுவானரோ. (௪௪)

வேறு.

மைகலந்துவாளொளிர்ந்துமான்மருண்டவுண்கண
ணெய்கலந்தகூந்தலாளினிலையினின்றுநாணழப்
பொய்கலந்தமாயமேபுணர்த்துமாறுபாடதாய்க்
கைகலந்திடாதொளித்தகாலமென்னகாலமே. (௪௫)

அஞ்சனந்திமிர்ந்துகாதடர்ந்துவேவெருடார்ந்துதீ
நஞ்சமிஞ்சுபங்கயங்கணங்கைகொங்கைசெங்கையான்
மிஞ்சிடாதணைந்துமோகவெறிவிலங்கவயளிமேற்
கொஞ்சிவாய்குழைந்துதேனருந்துநாளென்னாள்கொலோ. (௪௬)

முத்திழைத்துமணிகுயிற்றிமொய்த்தபொன்களாற்புறப்
பத்திதைத்திலங்குசித்திரம்பதித்துமென்பணிக்
கொத்துமாமலர்க்குலங்குவித்தபஞ்சணைக்கண்மேற்
றத்தையொத்தமொழியினாண்மெய்தழுவுநாளென்னாளரோ. (௪௭)

வட்டடர்ந்தடர்ந்தசக்ரவாளகோளவரையினோ
டெட்டியானையின்மருப்பிடந்தெழுந்துருத்துவா
ரிட்டமார்பிடங்கவர்ந்திலங்குகும்பமுலைகள்கை
பட்டடங்கிடாதுளந்தருங்கொலென்னபயனரோ. (௪௮)

ஏலமார்தமாலதாலமின்குருந்துசண்பக
மாலமார்பொதும்பரூடமைந்தவாவியின்கண்மின
போலநின்றெனுவியுண்டுபோனபூவைபொன்னிறக்
கோலமெந்தநாளில்வந்துகூடநன்மைகூடுமோ. (சகூ)

வஞ்சமாகவந்துபோனவஞ்சிவஞ்சகத்தினாற்
றஞ்சமாகநம்புமென்றனைப்பிரிந்தெனாவியுந்
துஞ்சல்காணநீயுமந்தமாதினோடுதுயர்செய்தா
னெஞ்சமேயிவ்வுலகில்யாவர்வந்துநன்மைநேருவார். (ரு௦)

கள்ளையுண்டுவண்டினங்கறங்கலங்கலோதியுங்
கிள்ளையுண்டமொழியும்வாள்கிளர்ந்தவேலின்விழியுநீள்
வள்ளையுண்டகுழையுமன்றிமறலியாலுமெனதுயிர்
கொள்ளைகொண்டிடப்படுங்கொலோவெனக்கொதித்தனன். (ருக)

கெண்டைகாணுமரிமையிற்கெடாதிருந்தகிளிமொழி
வண்டுகொண்டநயனமின்மருங்குலாளைவாவியின்
றெண்டிரைக்கணீர்புகுந்துதேடியென்கணுரைசெய்தா
லண்டர்மானதத்தடத்தின்வாழ்வுமங்களிப்பனால். (ருஉ)

பாடுவண்டினங்கறங்குபங்கயங்களெங்கணுஞ்
சோடுநாடுபேடையைத்தொடர்ந்துவாழனங்களே
வாடிநாணிடைந்துநொந்தரற்றுகின்றவாறெலா
மோடிநீரினுட்புகுந்துமாதிடத்தினுரைமினே. (ருங)

செய்யவாயுமுகமுநீலவொண்கணுஞ்சிறந்தபூண்
டொய்யில்கொங்கையுந்திரண்டதோளுமினறுடிக்கிடை
யையநுண்மருங்குலுமமெனக்களித்தெனாவியாந
தையலாளைநீயொழித்ததன்மையென்கொல்வாவியே. (ருச)

வேறு

விண்ணவரமுதோபாகோவிரிபசுமலர்ச்செந்தேனோ
கண்ணினுக்கிடம்பெறுதகாட்சியோகமலமேவும
பெண்ணிவடானோநானுமபெண்ணெனக்கனவுகண்ட
வண்ணமோவெதையீங்கோர்ந்துமனத்துயர்தணிப்பனென்றே. (ருரு)

சுடுந்தழல்வெயிலிற்பட்டபுழுவெனத்துடித்துவேந்தன்
படுமபரிதாபங்கண்டுற்பார்ப்பதற்கஞ்சியென்ன
கொடும்பழிவிளைத்தேனென்றமைச்சனுங்குழைந்துமண்மே
னெடும்பனைமரமபோனின்றெநஞ்சயர்ந்திதனைச்சொல்வான். (ருசு)

ஐயநின்னறிவுமெய்யுமாவியுஞ்சூறையாடிச
செய்யதாமரைநீர்வாவிசென்றுபுகவொளித்துக்கொண்ட
தையலைக்கோணர்ந்துநாளையுனக்குநான்றருகேனென்னில்
வெய்யவென்போலுந்தீயருலகினிலவேறுமுண்டோ. (ருஎ)

உலகெலாம்புகழுவுன்போலுலகபாலகராயுள்ள
தலைவரும்வியக்கவிந்தத்தையலைத்தாரமாக்கி
விலகுறுதிருந்துநீவிர்மேவிவாழ்திருவின்மிக்கு
நலனெலாங்காணுங்காலநாளையேநான்செய்வேனால். (ருஅ)

வருந்துறுதரசேயின்றுமாநகர்க்கெழுகவென்றான்
றிருந்தலர்ச்செருக்கும்வேலான்செப்பியவமைச்சன்சொல்லாற்
பொருந்துயர்சிறிதுள்ளாறிப்போவதற்கியைந்தானேனுங்
கருந்தடங்கண்ணியாசையடிக்கடிகலக்கநைவான். (ருகூ)

அங்கசன்பகழியாலுமாழியினார்ப்பினாலும்
திங்களின்கலையினாலுந்தென்றலின்செருக்கினாலும்
பங்கமுற்றுவியோயும்பதகனிங்ஙுன்ளைக்கொண்டே
யிங்கதுதீர்வேமென்னுமார்வமுற்றிருந்தேனின்னும். (சுo)

உன்னுரைபிழைக்கிலென்றனுயிர்சிலைபிழைக்குமென்னுந்
தன்மையிங்குனக்குநானென்சாற்றுவதென்றுசாற்றி
மன்னெனநிந்தானைசூழமாநகர்வந்துபுக்கான்
பொன்சுடரிரவிமேலைப்பொருப்பிடைச்சென்றுபுக்க. (சுக)

புனல்குளியோடுபடலம்.

முற்றிற்று.

ஆகப்படலம்-உo-க்குத்திருவிருத்தம்-அஅரு.

விஜயதரன் கைக்கிளைப்படலம்.

வேதநான்கினுக்கும்பொருடெரியாதுமெலிந்துளவரபத்தன்றனக்குத்
தீதறத்தெரித்தற்கொருகுருவடிவாய்த்திருவுருக்கொண்டுநன்மதுரை
மீதமர்ந்திருந்தசோதிவானவனைவிளம்பியசராசரங்களுக்கோ
ராதிநாயகனைமாதுபாதியனையஞ்சலித்தருவினைகடப்பாம். (க)

வேறு.

தக்கும்வெவ்விடம்போற்சிறிக்காரிருள்கனிந்துநீடுந்
திக்கெலாம்புதையவோடிச்செருமினசெக்கர்வானம்
மக்களிறுரிவைபோர்த்துவார்சடைவிரிந்துவார
முக்கணுளொருகால்வைகுமுறைறைமபோன்றிறுத்தவன்றே. (உ)

மேற்றிசைப்பருதிப்புத்தேண்மறைதலும்விரிந்தகங்கு
ளற்றிசைமுழுதுந்துன்னிநண்ணினவானமெல்லாந்
தோற்றினவுடுக்களிந்தத்தோன்றலுக்கனங்கன்வேறே
யாற்றியபுதுப்பூவாளிபோன்றெறுளியவிர்குலாய. (ஙா)

கங்குலினகாஞ்சார்ந்தகாவலன்படையைநீங்கி
நங்கையர்கவரியின்றிகளிர்மணிவிளக்கமின்றிச்
சங்குபேரிகைகொம்பின்றித்தனிநடந்தொருவனை
மங்குறேய்கோவிற்புக்கான்மனையுளார்வருத்தமன்ன. (௪)

கவரியுங்குடையுந்தீபசாலமுங்கயற்கண்மாதர்
பவுரியுநாதயாழும்பலாண்டுமற்றுளவுநீங்கி
யுவரியிலொலியுமன்றிலோதையுங்குயிலினோர்ப்பு
மவிர்மதிக்கலையுந்தென்றற்புலியுநின்றடர்ப்பநைந்தான். (௫)

உண்டிலனுறக்கமில்லனுடுக்கையும்படுக்கைதானுங்
கண்டிலனொருவரோடுங்கழறிலன்காமனம்பு
கொண்டுபுண்செய்யநெஞ்சங்குழைந்தனன்மண்மேற்பூழி
மண்டிடக்கிடந்தான்மாதைமறந்திடாதுயிர்ப்புமாழ்கி. (௬)

நோக்கியபொருள்களெல்லாநுண்டிடைவாவிபோலுந்
தாக்கணங்கனையாள்போலுந்தன்னெதிர்காட்டக்காட்டத்
தேக்குமெய்புளகங்கொள்வான்றிருமுகம்முறுவல்பூப்பான்
வாக்குபசாரஞ்சொல்வான்மறைந்திடமயக்கங்கொள்வான். (௭)

புத்திரர்சோபங்கூரமனையவள்புலம்பக்கேளீர்
தத்தமக்குள்ளேயெண்ணித்தளர்வுறமயங்கிமண்மேற்
பித்தரிற்கிடந்தவேந்தன்பெரிதுநாணடைந்துநாமு
மித்தலத்திருத்தறீதாமெனநினைந்தெழுந்துபோவான். (௮)

நீண்டொளிர்விளக்கங்கோடிநிரைவிளக்கனையாரேந்தக்
காண்டகுமயிலினோர்வெண்கவரிகால்குழைப்பவாங்கு
வேண்டியதெல்லாம்விண்ணின்றருவெனமின்னோர்நீட்ட
வாண்டுநின்றகன்றுவேறோரணிமணிமாடம்புக்கான். (௯)

பத்தியிற்பவளக்காற்போதிகைபளிங்கவிரும்பச்சை
யுத்திரங்கொடுங்கைநீலமுயர்துலாஞ்சுவர்செம்பொன்னாற்
சித்திரித்தாணிவீக்கிச்செய்தமண்டபத்தினூடு
நித்திலங்குயிற்றிப்பட்டுநிரைமலர்விதானந்தூக்கி. (௧0)

வெள்ளியான்மணியாற்பொன்னால்விரிசினைவேர்தூரூற்றிக்
கள்ளுலாமலருங்காயுங்கனிகளும்பிறவுஞ்சோதி
துள்ளியநீலம்பச்சைதுகிரினால்வகுத்துக்கோடி
யுள்ளினும்வெளியினுங்காலுலவுமுய்யானமாக்கி. (௧௧)

அஞ்செவியனத்தின்றூவியணிவிரித்தனிச்சப்போது
பஞ்சணைநிரம்பக்கொட்டிப்பரப்பினோர்படுக்கைசெய்தான்
செஞ்சிலையானுக்கந்தச்சேக்கையின்மலர்விற்காமன்
வெஞ்சரமென்னமேன்மேல்வேதனைவிளைத்தவன்றே. (௧௨)

அலர்செயுமுருவிலான்விற்பகழியென்றறியாதேனோ
மலரெனக்கொணர்ந்துகொட்டிவாட்டியென்னுயிரைவாங்குங்
கலகமேபுரிந்தீர்தென்றற்காற்றெனவிடங்கால்பாம்பை
நிலமிசைக்கொணர்ந்துவிட்டீரின்னமென்னேருவீரோ. (கங)

செந்தழற்பிழம்பைவாங்கித்தேய்வைமென்பனிநீரென்னச்
சிந்தினீர்விடத்தையூட்டிப்பாலெனச்செப்புகின்றீர்
வந்தவெய்புலியையென்றுமதிப்பிலாதெனக்குவானத்
திந்துவென்றுரைத்தீர்கூற்றையிருளெனவியம்புகின்றீர். (கச)

மலிதிசைமயக்குங்கங்குன்மத்தமாவுகைத்துமார
னொலிகுயிற்காளமேங்கவுவரியின்முரசமார்ப்ப
வலிபடுகரும்புகோடவளைத்துநாணேற்றிப்பூவின்
சிலிமுகந்தூற்றற்கென்னோநான்புரிதீமையென்றான். (கரு)

ஒன்றொழித்தலர்பூவாளியுளவெலாமுடன்றுவாங்கிக்
குன்றொழித்தெழுந்தபொற்றோண்மருமத்திற்குழிக்கவெய்தா
னொன்றொழித்திட்டமாதையிலக்கங்கொண்டஞ்சாதென்மு
னின்றொழிச்சாதசாமனின்னமுமென்செய்வானோ. (கசா)

கரும்புநாணேற்றிவேனிற்காலநீளிரவிற்சூழ்ந்த
சுரும்பொலிமுல்லைநீலந்துய்யதாமரைசூதஞ்சோ
கரும்புகொண்டென்னைவெல்வானெண்ணியவனங்கனந்தக்
குரும்பைமென்முலையினாட்கு மின்னலைக்கொடுப்பான்கொல்லோ. (கஎ)

வெவ்வியவீரர்க்காண்மைவீரமேவிளம்பிநேரே
யொவ்விநின்றுபோராடலம்முறையொழுக்கமின்றி
யிவ்விருணயந்துகள்வராமெனவெதிர்தோன்றாது
செவ்வியென்னுயிரைமாய்க்குந்திருவிலீதிறமைநன்றால். (கஅ)

ஈசனைப்பகைத்துமேனாளெரிவிழிக்கனலான்மாண்ட
மாசுடைத்துலகிற்றீராவசையடைந்துருவந்தேய்ந்து
தேசழிந்தருவமானதீய்மையைமறந்தாய்போலுங்
கூசிடாதெதிர்த்தவீரக்கோட்டியென்கொள்கைத்தம்மா. (ககூ)

மாங்குயிற்காளமீறமறிகடன்முரசமார்ப்ப
வாங்குவிற்கடைகால்கோட்டிமலர்ச்சரமாரிசிந்திப்
பூங்குழலாளைவெல்லும்போர்த்திறமின்றியேனோ
வீங்கெனோடெதிர்த்துநின்றாயென்மயலுன்னதன்றோ. (உ0)

கயல்விழிப்பவளச்செவ்வாய்க்கன்னியாமிரதிமீது
மயல்பெரிதுற்றனான்றாமதனகேளுனக்குமேலோர்
வயவலியனங்கன்சீறிவன்சமராடுவானேற்
புயவலிகாட்டிப்பூசற்கென்னொடும்பொருதுவாயோ. (உக)

வீரம்போயாண்மைகுன்றிவிழிக்கனன் மாண்டுதீர்ந்த
மாரநின்வலியீதாயின் மன்னனுன்னைவெல்லப்
பாரமோவுலகமூன்றும்பரிக்குமென்னெஞ்சினென்னற்
சோரமாமொருத்திபுக்குநினக்குபகாரஞ்சூழ்ந்தாள். (௨௨)

பூங்கிழைகுழைக்குமவேனிலானொடுபுலம்பினையுந்
தேங்கமழ்தாராறகினனவிருமடிசேரும்வண்ணம்
பாங்கினின்மலருங்காயும்பழங்களுந்துவன்றுஞ்சோலை
மாங்குயிற்பெருகுதிகூக்கூவெனவொலிவளங்கிற்றம்மா. (௨௩)

குயிலினங்கூவக்கூவக்கொதித்துளந்துடித்துவாடு
மயில்வலானகுயில்காணீவிரன்னையையடாத்துமேனுண்
மயலினுக்காக்கிவிட்டவாறுகண்டனரேவண்ட
மியலகொடியினங்கண்மேவுங்குடமையினிட்டதன்றே. (௨௪)

காகத்தைத்தாயாயெண்ணிக்கைவிட்டனனிறமேகாட்டு
மேகத்துக்கொதிங்கிமாதாவிளம்புசொற்குலாணுணி
யாகத்துமகத்துமாறுக்கருப்படைந்ததனையெண்ணு
மோகத்தினெருப்புக்கூதுங்காலெனமுழங்குகின்றீர். (௨௫)

மாரனற்குயிலானீங்காவசந்தமென்காலானுந்து
வீரம்போயரிகுடைந்தவிரிசினைப்புனகுபோலச்
சோரும்வாள்வீரற்கந்தத்துன்பிலைத்தனையோகோடி
நேருறநெருப்பிற்காந்துநிலாச்சுடாநிரப்பிற்றம்மா. (௨௬)

வான்முடிவெடித்துக்கங்கைமாந்திவழிதல்போல
மேனிலத்தவிருமிந்துகாந்தமெனபுனலுமவெள்ளைப்
பானிலாக்கதிருமெய்யிற்படுந்தொறும்பாராளவேந்த
னூனுயிர்கருகித்தீயினமெழுகெனவுருகிச்சொலவான (௨௭)

நீளிருள்யானைமாயத்துநிணப்புலாற்குருதியுண்டு
மூளகொடும்பசியாற்றுத்துமுனிவொடுமெழுந்ததிங்கட்
கோளரியின்றுமென்னைக்கொன்றுயிர்தின்னவோவிச
சாளரந்தோறுங்கையாங்கதிர்களாற்றடவிச்சார்ந்த (௨௮)

அமிழ்தொடுபிறந்துமீசனணிசடைவளர்ந்துஞ்சீத
முமிழ்திரைக்கங்கைமாதோடுறவுபெற்றுறைந்துமென்னே
விமிழ்குணமின்றிவாங்காதெரிதழற்சுவாலைவீசத்
தமிழினுக்குதவாலுத்தர்போன்றெனைச்சாடுகின்றாய். (௨௯)

தாரையாலுடலந்தேய்ந்துதளர்ந்தமைமறந்திங்கேனே
மாரனோடுறவுசேர்ந்துவரிக்குயிற்கினிமைகாட்டி
யீரமில்லாதசெந்தீக்கலைவிர்த்தெழுந்தாய்நீபோற
பூரியரொருவரிந்தப்பூதலந்தன்னிலுண்டோ. (௩௦)

கான்புலிதனிலும்வெம்மைகாட்டிவெண்ணெருப்பாயுற்ற
வான்புலிக்கெதிரேமுன்னம்வாவியிலொளித்துக்கொண்டு
நான்புலியணைக்கவாராநண்ணுதன்மானைக்காட்டி
யூன்புலியருந்தச்செய்தலுழையருந்தருமமாமால். (௩௧)

நீளிரவென்னும்பாந்தணெட்டெயிற்றுளையினூறிக்
கோள்புரிந்துலகைக்கொல்லுங்கொடுந்தழல்விடத்தைவெள்ளை
வாளொளிபிறங்குமிந்துவளங்கும்வெண்கலையென்றேனே
சூள்வினையறியுஞ்சூட்சியறிஞருஞ்சொல்லுகின்றார். (௩௨)

எரிமுனைப்பகழிப்புத்தேளிராகவனேவமேனாள்
விரிதிரைவரண்டவாழிமீண்டுதன்னுள்ளம்வெள்கா
துருவில்செய்யுமாயவுறவினான்றாசமாகி
யரசரைப்பகைத்தற்கென்ன யாயமீதம்மவம்ம. (௩௩)

வாலியாற்கடையமுன்னமறுகிப்பின்னனுமனீண்ட
காலினாற்கடக்கவஞ்சிக்கவிக்கொருதலைமையான
நீலனாற்றடுக்கநாணநீண்டுயர்பெருமைநீத்த
சால்கடலொலிக்கென்னுள்ளஞ்சலிப்புறுந்தகைமைத்தென்னே. (௩௪)

கடலொலிகுயிலினோசைகால்படுபரிசமேகந்
தொடுபனையன்றிலார்ப்புச்சுடர்மதிக்கிரணச்செந்தீ
யடல்செயத்தளர்ந்துவாடுமரசர்கோன்கண்முன்னாகக்
கொடியிடைமடந்தைபோலவுருவெளிக்கோலந்தோன்ற. (௩௫)

என்னுயிர்முழுதுங்கைக்கொண்டிரும்புனல்வாவியுற்ற
கன்னியிவ்விருளில்வெய்யகானெறிகடந்துகானொந்
தின்னிலந்தன்னில்வந்தவெளிமையென்றனிமைநோக்குந்
தன்மையாலன்றேகைமாறெதுசெயத்தகுவேனம்மா. (௩௬)

வருகவந்தென்னைச்சேர்ந்துமகிழ்ந்தினிதுவந்துமுத்தந்
தருகவென்றெழுந்துகட்டித்தழுவுவான்காணாதேங்கிப்
பொருகனலுலைவாயூதுந்துருத்திபோற்பொருமிமூச்சுப்
பெருகவாய்பிதற்றிநைவானென்செய்வான்பெருமைதேய்வான். (௩௭)

ஓடுவான்மாடத்துள்ளும்வெளியினுமொன்றென்றாக
நாடுவான்காணாதாகிநாவுலர்ந்தஞ்சிமெய்யும்
வாடுவான்றுயிலும்வாசமலரணையுதறிச்சும்மா
தேடுவானிருளினெல்லைதேறுவான்றெருமறீரான். (௩௮)

இகல்புரிபவனொன்றாலுமுயிரினோடிருக்கிலோர்காற்
புகும்வழிதன்னிற்காணலாமெனும்பொருளாலன்றோ
தகவிலான்றனதுமன்னற்கிடர்செயுந்தன்மைகண்டும்
பகலவன்கருதாதந்தவிருள்வெளிப்படுத்திவந்தான். (௩௯)

மாரன்பூங்குயில்காலன்றில்வாரிவெண்மதியமென்னுஞ்
சார்பெரும்பகைகள்யாவுந்தபனன்முன்னிமமேயாகித்
தீர்வுறவிருளும்பாரத்தியக்கமுஞ்சிறிதுமாறி
வீரனுமெழுந்துகாலைவிதிமறந்தவைக்கண்மேவி. (௪0)

(முற்றிற்று.) ஆகப்படலம்-௨௧-க்குத்திருவிருத்தம்-௯௨௫.

வஞ்சவணப்படலம்

நங்தெரிகடனீர்சுவற்றிவிண்ணவர்கணாயகன்மணிமுடிவளையாற்
சிந்திமாமேருமுடியினைச்செண்டாற்சிதைத்தநம்செழியர்கோன்றனக்கிங்
கெந்தநாளினுஞ்சீர்வழங்கியகூடலிறைவனைமுறைமுறையிறைஞ்சி
யந்தகனாணைமுழுவதுநீங்கியழிவிலாச்செல்வமேலடைவாம். (௧)

வேறு.

ஆங்கொருமணிசெய்பொன்னாசனத்திடையமர்ந்துவல்லை
யீங்குநம்மமைச்சர்தம்மிற்றூர்ச்சனனென்பான்றன்னை
நீங்கள்சென்றழைமினென்றானேர்நின்றதூதர்நால்வர்
பூங்கழல்வணங்கியோடிப்புகன்றனரவனும்புக்கான். (௨)

புக்கவனிறைவன்பாதப்போதுதன்றலையிற்சூடிப்
பக்கமுற்றஞ்சியென்கொல்பணியென்னையழைத்ததென்றான்
றிக்கெல்லாம்வென்றதிண்டோட்டோர்வலானிரவிற்பட்ட
சிக்கெல்லாம்புகன்றான்வாய்நீர்தீர்ந்திடக்கண்ணீர்சிந்த. (௩)

மாதினை மணந்துகும்பவனமுலைநலங்கடுய்க்கு
மேதுவொன்றிலையென்றாலுமினமொருதரமென்கண்ணாற்
றீதறநோக்குகில்லேனென்னிலென்னுயிர்தீர்ந்தின்றே
சாதன்மெய்யென்றான்கேட்டமந்திரிசகியானாகி. (௪)

அரசநின்கவலைநோய்திலகற்றுவனஞ்சலென்னா
வுரைசெய்துவெளிவந்தாங்குவள்ளுவற்கூவியாலைத்
தெரிவையைக்கொணர்ந்தார்க்கிந்தச்சீமையிற்பாதியோடுந்
தருகுதும்பிறவுமென்னச்சாற்றுதிர்முரசமென்றான் (௫)

மந்திரிபுகன்றவாறேவள்ளுவர்துள்ளியார்த்து
நந்துவெண்டிரைகொண்டெற்றுநளிர்கடன்முழக்கமென்னத்
தந்தியம்பிடரிற்செம்பொற்றடமணிமுரசமேற்றி
யந்தமாநகருநாடுமறைந்தனரிடைவிடாமல். (௬)

முரசொலிமுழக்கங்கேட்டமூரிமாநகரினுள்ள
வரசிளங்குமரரோடுமரிவையர்பிறர்மற்றேனோர்
விரைசெறிபுயத்தான்காமவெறியடைந்தனன்கொல்லோவென்
றுரைசெயவஞ்சித்தத்தமுண்ணினைந்திதனைச்சொல்வார். (௭)

ஒருவனான்முடிக்கவொண்ணாதொருபெருங்கருமமூரார்
விரைவினின்முடிப்பாரென்றுமவர்க்குமேற்பட்டுப்பாரிற்
பாவியதென்னினொய்திற்பார்த்திபர்முடிப்பாரென்று
மரசறிந்தறியான்போலிவ்வுரைசெயற்கவாவென்கொல்லோ. (௮)

இப்பெருமுலகிலன்றியிதன்புறத்துலவாதுற்ற
வெப்பெருமுலகிலேனுமிவனினைத்திடிற்கிட்டாமற்
றப்புதற்குளவோவெந்தப்பொருள்களுந்தடையொன்றின்றிக்
கைப்படுத்திடவல்லானிவ்வுரைசெயுங்கருத்தென்கொல்லோ. (௯)

வேட்டைக்குப்போய்மீண்டுற்றவேந்தனுக்கென்னேவிந்தக்
கேட்டைத்தந்துள்ளவெல்லாங்கெடநினைந்தவர்களெந்த
நாட்டைக்கொண்டுய்யவல்லாரிதுவெலாநம்மான்மேனு
ணீட்டித்தவினையேயல்லாதிலையெனநிகழ்த்திநைவார். (௧௦)

வேந்தனென்செய்வானப்பாவினையெலாந்தனைநீங்காது
போந்ததுற்சனனென்றோதுமமைச்சன்செய்புலையாட்டென்பா
ராந்தினைப்பொழுதிலெல்லாமறியலாமென்றுநெஞ்சங்
காந்துவார்வாயில்வந்தபடியெலாங்கழறுகிற்பார். (௧௧)

வாவியையூன்றுவைகல்காத்ததின்மறைந்துவைகுந்
தேவியைத்தேடற்கானதீரொத்தனையோகோடி
யேவினானிறந்தார்போகவெஞ்சினார்மீண்டுமோளக்
கூவினான்முரசஞ்சாற்றியிதுநல்லகொடுமையென்பார். (௧௨)

மாதெனக்கனவுகண்டுமந்திரிவிழித்துச்சொன்ன
சூதறியாமலிந்தத்தோன்றலுமெய்யாய்நம்பி
வேதனையுழந்தான்காலவிதிவசநாமுஞ்சென்றிப்
போதெனசொலினுங்கேளானெனவுளம்புலம்பல்கொள்வார். (௧௩)

பத்தினியிருக்கமூன்றுபாரினுமேவல்கொள்ளும்
புத்திரரிருக்கவந்தோபூபனுக்கெவராலிந்த
மித்திரநடந்ததென்பார்வேந்தனுநாமுமெல்லாஞ்
சத்துருவாலேநாளைத்தவிக்குதல்சரதமாலோ. (௧௪)

வேறு.

இன்னணம்நகருளாரியம்புமேல்வையி
லந்நகர்குடபுலத்தமைநதுவைகுவாள்
மன்னவன்றீமையோர்வடிவுபோன்றுள
தன்மையாடழல்விடந்ததும்புநெஞ்சினாள். (௧௫)

வேதியர்தீக்குலமென்றமெய்ம்மையைப்
பூதலந்தன்னைக்கொண்டறியப்புக்குவெம்
பாதகிநிறப்பெனும்பரவையூழ்கியெச்
சாதியரிலத்தினுமுண்டுசொருவாள். (௧௬)

மங்கலமிழந்துதன்மானந்தீர்ந்துபின்
றங்குலம்புறஞ்சொலச்சமைந்தபொய்ம்மையாள்
வெங்கிடமாமறைவேதியர்க்கொரு
சங்கடமாமவடநயன்வெங்குவாம். (௧௭)

இலந்தனிற்றரித்திரஞ்செல்வமின்மையாற்
சலந்தருகதங்கொடுதாயுமோர்பச
லலந்தலைப்படமகன்றலையிலங்கையாற்
புலந்திடச்சட்டுவத்தடித்துப்போக்கினாள். (௧௮)

சிரந்தனிற்புடைத்துளதீயதாயைநீத்
தரங்கையுற்றவிர்மதியரவுகூவிளங்
கரந்தைகொள்பவனுறைகாசிக்கேகினான்
வரந்தருமுனிவரின்வடிவமன்னியே. (௧௯)

மகன்படர்வனத்திற்செல்லமற்றிவள்
சுகம்படாதன்னகர்முழுதுஞ்சோறுவேட்
டுகந்தவர்மனைதொறுமுண்டுவைகினாள்
முகந்தொறும்பறையொலிமுழக்கங்கேட்டனள். (௨௦)

கூனியிற்கொடியவள்பறையின்கூக்குரற்
றூனறிந்துன்னுவாடடத்துள்வைகிய
மானனையாளையும்வவ்விநல்கினாற்
கோனிவன்புவியினிற்பாகிகொள்ளலாம். (௨௧)

பசியினலருவனம்புன்னைபோலனைக்
கசிவினலைழத்தவரலுங்களிப்புறச்
சசிநிகரொருத்தியைரன்தாரமாக்கியே
சுசிமணிமகுடமுஞ்சூட்டிவாழலாம். (௨௨)

கண்ணினுக்கடங்கொணக்காட்சியீங்கிருந்
தெண்ணுவதிவையலாதிலையென்றெண்ணியே
பெண்மையினலங்கெடுத்திருந்தபேதையு
மண்ணல்வாழரண்மனைவாயினண்மியே. (௨௩)

தூதுவர்சொற்கொடுதோன்றல்பாலினிற்
பாதகிபுகுந்தடிபணிந்துநிற்றலும்
வேதியர்குலக்கொழுந்தாயமென்கொடி
யேதிவண்வரவுநீயாரையென்றனன். (௨௪)

மன்னவாவிங்நகர்வாழுநாற்குலத்
தன்னிலந்தணர்குலத்தமியைநான்விதந்
தென்னவோபுதுமையொன்றியம்பக்கேட்டன
னன்னதின்மெய்மையையறியமேயினேன். (௨௫)

இரவலர்க்கொருதருவென்னவைகிய
புரவலநின்னுழைபுகறற்கென்னுளங்
கரவுளதாயினுங்காதிற்கேட்டதிங்
குரைசெயிற்றீங்கடையாவென்றுன்னினேன். (௨௬)

அரசநீவேட்டைவேட்டாங்கட்டினிற்
றிரைசெறிவாவியிற்றிருவையொப்பதோ
ரரிவையுளாளவடனையிங்காக்கினோர்க்
கிருநிலம்பாதியென்றெவர்க்குந்தோன்றவே. (௨௭)

முரசினமதகரிமுதுகின்மூரிநீர்த்
திரைசெறியொலியெனத்தெருக்களெங்கணு
முறைசெயமுழக்கினருண்மையாயினும்
மரசநின்னேர்புகுந்தறிதற்கெண்ணினேன். (௨௮)

மாதலவரசநீமனத்துளெண்ணியிங்
கேதொருபொருள்குறித்தேவினனுமிப்
போதினின்முடித்துமெய்காட்டப்போந்தநா
னாதலாலுண்மையெற்கறைதல்வேண்டுமால். (௨௯)

என்றனன்முறுவலித்திறைவனின்மொழி
நன்றிதுபோலுமென்பாலினண்ணியே
யொன்றியநகருளாரொருவராயினுஞ்
சென்றவட்டருதுமென்றுரைதெரித்திலர். (௩௦)

ஒருவரும்புரிவதற்குடன்படாதவிக்
கருமநான்செய்குவனென்றகட்டுரை
யருமைகண்டேதனக்காற்றல்வல்லனென்
றருமமன்றிதுமுனோர்தவமென்றெண்ணினேன். (௩௧)

ஓதுநின்மொழிகரிந்துளபைங்கூழினுக்
காதரத்தொடுபொழிமழையினைசைகூர்
காதினிற்கேட்டலுங்கவலைநீங்கினேன்
மாதினைக்கொணர்ந்தெனக்கீதல்வல்லையேல். (௩௨)

பூமியிற்பாதியும்பொன்னிருந்துள
சேமமுந்தருகுவன்பிறவுஞ்செய்குவ
னிஃதுண்மையென்னாயுளின்வரை
சாமியென்றுன்னையென்றலையிற்கொள்வனால். (௩௩)

இதுமறேனெனவுவட்கியைந்தபல்சிறப்
புதவிநீயவைபுரிவாயென்றோதலுங்
கீதுமெனப்பணிந்தவன்விடையுங்கைக்கொடே
மதிவிநயத்துடன்மனையினண்ணினாள். (௩௪)

நண்ணியவிதந்துபெண்ணணுகுஞ்சூட்சியோன்
றெண்ணினள்வல்விடமெவையுங்கூட்டினள்
பண்ணினண்மருந்தைப்பார்த்துக்கூற்றுவன்
கண்ணியவுயிர்நிலைதகெங்கினனரோ. (௩௫)

மருந்தினைச்செப்பினில்வாங்கித்தானையிற்
சுரந்துதன்னிடையினிற்கட்டிப்பின்னவ
ளருந்துதற்குணவுகையமைத்துவல்லைபோய்த்
தூர்ந்தான்சொல்லியவாவிதுன்னினாள். (௩௬)

காவலன்சொல்லடையாளங்காட்டிய
வாவியுமையமண்டபமும்வாய்ந்தமென்
பூவிரிபொதும்பரும்புக்குநோக்கினாள்
தேவருமருள்கொளச்செய்யுஞ்செய்கையாள். (௩௭)

துங்கவன்நமக்கடையாளஞ்சொல்லிய
பங்கயத்தடமிதிற்பவளவாய்க்கனி
தங்கியுள்ளிருந்தனைத்தவிரவேறினி
யெங்கணுமிலையெனமனத்தெண்ணியே. (௩௮)

மற்றொருபுறத்தினில்வைகியாங்கவள்
பெற்றதோர்தநயனன்றிறந்தபெற்றியோன்
முற்றிலுமுறைமுறைமொழிந்துகூவென
வுற்றிருந்தாற்றவுமொருப்பட்டாளரோ. (௩௯)

வேறு.

பச்சைக்கிளியேகற்பகமேபாலின்சுவையேபசுந்தேனே
யிச்சைக்கமைந்தவடிவழகேயிறையேகருணைக்கிருப்பிடமே
யச்சிற்கடைந்தவிரத்தினமேயரும்பொனணியேயன்பேயென்
கச்சம்பெறமுன்னுயிர்விடுத்தாயெனக்காருலகிற்கடன்கழிப்பார். (௪௰)

கட்டிக்கனியேசருக்கரையேகரும்பேகல்விக்களஞ்சியமே
மட்டுவிரியாமுகிழரும்பேமானேபசியமரகதமே
கட்டுக்கடங்காமதகளிறேகனந்தீர்ந்துலகிற்கடையழிய
விட்டுப்பிரிந்துநீயொளித்தவிதமென்விதமென்னறியேனே. (௪௧)

மைந்தாவயதுபதினாறில்வதுவையாற்றியுனைக்கொண்டே
சிந்தாகுலந்தீர்ந்திடநினைத்ததீயேன்மனச்சிந்தனைசிந்த
வந்தோவந்தோபுவியிலுயிரனைத்துமிருக்கச்சினத்தடர்ந்து
வந்தான்பாவிநமனுனக்கேயெனில்யானுயிரும்வாழ்வேனோ.

மன்றல்புரிந்தகணவனுயிர்மடிந்ததுயரான்மனந்தளர்ந்து
பொன்றநினைநதேனுனைநினைந்துபுவியிலிதநாள்புகலாக்கி
யென்றுமிருக்கக்கருதியதற்கிடர்தீராவெவ்விருள்விடுத்துச்
சென்றுபரலோகமபுகுந்தசிறுவாகருணைத்திறமிதுவோ. (௪௩)

மண்ணிற்குமரருடன்கலந்துவரையுந்தரையுமாநதியும்
நண்ணிவிளையாட்டயர்ந்துநிதநடக்குந்தொழிலுநவையெனவே
விண்ணிற்புகுந்துதேவர்களுமரம்பைமாருநினைவியப்ப
வெண்ணற்குரியதருநிழற்கீழ்விளையாட்டியற்றவெய்தினையோ. (௪௪)

மைந்தவுனக்குநான்புரிந்தவஞ்சவினையைநெஞ்சிலெண்ணித்
தந்தைக்குரைக்கக்கருதியவோதனிசென்றனைநீதந்தையையு
மந்தவுலகிற்கண்டுதொழுதுரைக்கவவனுநின்மீது
சிந்தைமகிழ்ந்துபரிவியற்றத்தீராவுவகைசிறந்தனையோ. (௪௫)

அல்லாரிருளும்பகலுமுடலழிந்துமெலிந்துவிழிபுகைந்து
கல்லோமரமோசெடியோமுட்காடோமேடோகனவரையோ
வெல்லாந்துருவிநினைக்காணாதிடராலழுங்கியீடழிந்தேன்
வல்லோர்பழிக்கும்பழிக்குணின்றுவன்மியுயிர்தான்வாழ்வேனோ. (௪௬)

காடுமேடுஞ்செடியுமலைக்கல்லும்புல்லுங்கலையினமும்
பேடுங்குயிலுங்கிளியுமயிற்பெடையும்பிடியுங்கடகரியு
நீடுந்துணையாய்ச்சூழ்ந்தரற்றநிரைகண்புனலாறலையெறிய
வாடியரற்றுமெனைத்தேற்றமகனேயிவணீவருவாயோ. (௪௭)

மானேகுயிலேமயிலினமேவண்டின்குலமேவனக்குழுவே
கானேவனதேவதைகாளாய்க்கதறியழுதபெருங்குரல்கேட்
டேனெழுந்துபரந்துமகனிருக்குமிடந்தேர்ந்தெளியேற்குத்
தானேபகராதுரைத்தீர்களிறப்பும்பிறப்புந்தவிர்த்தீரோ. (௪௮)

வஞ்சங்களவுகொலையகற்றிமண்ணிலெவர்க்குமுபகார
நெஞ்சிற்குறித்துப்பலதருமநிரப்பிமறைபினெறிநின்றேற
மஞ்சவினைநான்பெறக்கிடைத்ததவம்போய்மீண்டும்வல்வினையே
மிஞ்சித்துயர்தந்திடக்கிடந்திங்குழைத்தேற்கினியென்விளைநலமே. ( )

என்றென்றேங்கிக்குழைந்துகுழைந்திரவும்பகலுமோயாம
னின்றுங்கிடந்துமிருந்துமிந்தநீலிபொய்மைத்துயர்காட்டி
யன்றுபுலம்பிப்பெருங்குரலிட்டழுதவமலைவனமலைப்ப
வொன்றுமிருகம்பறவைமுதல்யாவுமுருகியுழைந்தனவால். (௫௰)

புல்லும்வருந்தப்பொழில்வருந்தப்புனலும்வருந்தப்புறங்கிடந்த
கல்லும்வருந்தப்புலர்ந்தமரக்காலும்வருந்தக்கடைநாளிற்
கொல்லுநமனும்வருந்தமனக்கொடியாள்கொடுமைத்துயர்பெருக்கி
யல்லும்பகலுந்தனதுமனம்வருந்தாதழுதாளரசழிப்பாள். (௫௧)

வேறு.

தவ்வைக்கிணைதானலதில்லையெனுந்தகைத்தாள்
கௌவைக்கடல்போன்றழுதேங்குமக்காலையந்தச்
செவ்வைப்புனலுட்புகுதன்புசிறந்திருந்த
கொவ்வைக்கனிவாயினளோடிறைகூறுகிற்பான். (௫௨

இரவும்பகலும்வெளியேறுதலன்றிநாமு
விரவும்பொழுதாற்றினதாலுளம்வேடைமிக்குப்
பரவுந்துயர்தந்ததுபங்கயவாவியின்கட்
பொருவும்மணிமண்டபம்புக்குதற்போதுமென்றான். (௫௩)

அங்கானுரைசெய்தலுந் தூயிளவன்னைய்யன்னுண்
மன்னுன்ன தின்மொழியானுமுரைக்கவல்லேன்
முன்னுளமர்நம்மொடுமொண்டுமுனிந்துவந்த
வொன்னுரவர்போலெவ்வேரனுமங்குற்றுநேர்வார். (ருச)

அல்லாத்போதுமறிந்தற்கரிதார்கியநம்பிருப்பை
யெல்லாருமுணர்ந்துறுவார்தனுஞ்யிர்க்கீறுநேரு
மல்லார்திணிதோட்புயமன்னவவென்னமாது
சொல்லார்பொருளுள்கியதோன்றலுமீதுசொல்வான். (ருரு)

புறஞ்செல்வதின்றுயர்போந்துறமென்றுநாடிக்
குறஞ்செய்துளமின்னறும்படிகூறுநங்காய்
மறஞ்செய்வலியன்னவரில்லின்மறைந்துறைந்தா
னிறஞ்செய்துல்கோரவர்சொற்பணிநேர்ந்துதாழ்வார். (ருசு)

கண்ணில்லவரல்லதுகாண்முடமானமாக்க
ளெண்ணும்மதியற்றவராதியராயவெல்லா
நண்ணும்புகழுன்னுபுமற்றவைநன்றுநீக்கி
யெண்ணன்றமுளிகுவவோர்பெறும்பேருகொள்வோர். (ருஎ)

விதியால்வருவெவ்வினையாவர்விலக்கவல்ல
மதியாருளரென்பதுமவ்விதியன்றிவாயா
தெதுவுமெனவென்பதுநீயுணராததில்லை
யதிசுந்தரமாகியமாதரிலன்னமன்னாய். (ருஅ)

என்றேசொலமாதுபின்னதுசொலவல்லளாவ
ணன்றேவழிகூடநடந்தவர்நாரநீங்கிக்
குன்றேயிஃதென்றுயர்கொண்டன்மிடைந்துலாவும்
பொன்னூர்புரண்மண்டபமூடுபுகுந்துவைகா. (ருகூ)

வேறு.

வண்டொலிவளையினூர்ப்புவரால்வெடிப்புகழும்வாளை
கெண்டைபாய்துழனியன்னங்கெழுமொலிபுட்களோலம்
மண்டிடத்தென்றலந்தண்மதுமலர்வாரித்தூற்றக்
கண்டுகண்ணுவந்துநெஞ்சங்களிப்புறவிருந்தார்மன்னோ. (சுய)

நோக்கினளிதற்குமுன்னேநேற்றம்மாதவத்தாலுற்ற
பாக்கியப்பொருள்போன்றிங்குபடர்ந்தனரினிவீண்காலம்
போக்கினனினைத்துவந்தபொருள்பயன்படாதென்றெண்ணி
மூர்க்கையுமழுதாண்முன்னின்மூய்மடியேங்கியேங்கி. (சுக)

மார்பினில்வயிற்றிலெற்றியணிக்கரம்விரல்கள்சோரிச்
சோரநீள்விழியிற்கண்ணீர்சொரிதரத்துகிலைமூண்மாசர்
வேர்கொடிசெடிகிழிக்கமெய்யெலாம்வெயர்நீரோடப்
பாரினிற்பாய்ந்துமுட்டியாற்றினள்பதகியம்மா. (சுஉ)

அழுதபேரமையுண்டலைத்திடவரசன்கேட்டுத்
தழுதழுத்தாவிசோரத்தநயனின்றிரந்தவர்போற்
பழுதுபட்டெவளோவிந்தப்பார்வனந்தனிலேநின்றிங
கிழுதுவெங்கனற்பட்டாற்போலேங்கினானென்னோபாவம். (௬௩)

புலியின்வாயகப்பட்டாவிபோம்பொழுதுள்ளமாழ்கி
மெலியுமான்கதறுதற்போற்கதறினள்வீரநின்குட்சி
வல்தினிற்றேறியிங்குவருவனென்றுரைத்தான்மாதி
நலிவுகொண்டையோவிந்தவினைக்கெதுநவில்வேனென்னா. (௬௪)

பதைபதைத்துள்ளநோவப்பனிமதிவதனஞ்சாம்பி
யதையெடுத்துரைத்தபோதுங்கேட்குமாறிலுற்கோயில்லை
விதிவலிவந்தாற்றத்தமதியினால்விலக்கவாழ்த்
னதியவனிபவற்குமின்றேனுங்கடந்துய்யப்போமோ. (௬௫)

என்றுதன்னுளத்தோடுன்னிமாதுபின்னிறைவற்போற்றி
யின்றுரைசெய்வாளநாதாநயலன்மாலனவாபோல்வாய்ந்த
வென்னறியும்விதயப்பாடும்வினையறிதொழிலுமற்றுந்
துன்றினாய்காலமூன்றுந்துருவிமேற்சூட்சிமேதர்வாய (௬௬)

அரசநின்னுரைக்குச்சற்றுமறிவிலிவேறுகொண்டிங்
குரைசெயற்குளவோநாயேனுணர்ந்துளவொன்றுகோடி
அரவினாலுறுவகேடற்றுன்னருட்டுணையகலாணின்றன்
பிரிவெனிற்பேதுற்றுள்ளம்வருந்தினபிரிதென்சொல்வேன். (௬௭)

ஏவலோவெனமேபேய்போலிருந்தழுதற்றானந்தப்
பாவையைவினவலாலென்பயன்படுமதுவலாமற்
காவலநெறிக்கண்போவார்க்கேற்றனகருமங்கோடி
மேவுறுமதைநாம்பற்றிக்கேட்பதால்விழுமமென்றே. (௬௮)

தொழுகுலத்தவனுணில்லாளென்பதுந்துயரமெல்லா
மிழுதையென்பதுமெய்யாமென்றியம்புதல்போலுநாண்
மொழிபுகன்றவற்றுமோசைசெவிபுலன்மூழ்கக்கேட்டும்
வழுவிலாதுயர்ந்தமன்னவருந்துதல்வம்பேயென்றாள். (௬௯)

பின்னுயிர்பிரிதொன்றுண்டென்றெண்ணுறம்பீடுசாராக்
கன்னிகைகவன்றுசொற்றக்கருமங்களறிவிற்றேரா
மன்னவன்முழுதுமந்தமறையவளாற்றுமோதை
தன்னுளமகலானின்றங்கிதுரைசமைப்பதானான் (௭0)

மக்கள்புன்மிருகம்புள்ளென்றோர்வன்முதற்சவகோடி
சிக்குதுன்புழலாவாநின்றுற்றறுஞ்செயலுஞ்சீருஞ்
சக்கரநடாத்துசெங்கோற்றராதலவேந்தர்க்கென்று
முக்கணானுமைக்குமேனாண்மொழிந்தநூன்முறைமையன்றே. (௭௧)

காந்தழல்வீழ்ந்துளளாவிகலங்குகார்க்கோடனென்னும்
பாந்தளுக்கபயமீந்தாங்கெடுத்தபார்த்திபன்கைநோவச்
சாந்தவல்விடத்தாற்சித்தஞ்சலித்ததோதன்னைக்கொல்லப்
போந்ததோர்வேடற்காவிபுருக்கனற்புக்கிற்றன்றே. (எ௨)

தாபதனைதைக்கவர்ந்துசென்றதசமுகன்றம்பியென்றே
வீரவில்லிராமனோர்ந்தும்விலக்குமற்றவர்சொற்கேளாப்
பாரினிலபயங்காத்தபண்புநீயறியாய்போலும்
நேரினிற்றடுத்துவார்த்தைதங்கழ்ததுதனீர்மைத்தாமோ. (எ௩)

வனந்தனிலொருவரின்றிமகனிறந்தனனென்றேங்கித்
தனந்தனியழுதுநொந்தாடன்னைநான்புகுந்துகேட்டு
மனந்திருந்துவதல்லாமன்மற்றுநீவாளாவின்னே
யினம்படச்சொலினுங்கேளேனென்றெழுந்தேகலுற்றான். (எ௪)

முன்னமேமுடுகிநம்மோடமர்பொரமுனிந்துவந்த
வொன்னலாருளுற்றுஞ்சூட்சிவினயமென்றுணர்ந்தேனீது
பின்னைநாடெரியும்போய்வாவென்றனள்பேதைதான்மற்
றென்னதான்செய்வாள்கேளாதேகினனிருந்தாளிப்பால். (எ௫)

தன்னொருபிடியைநீங்கித்தனிவருகளிறுபோன்ற
மன்னவன்வரவுகண்டவஞ்சகியிவனேயந்தக்
கன்னியின்றலைவனென்னுக்கருத்தினுணினைந்தாளாகி
மன்னுதன்னுயிரைப்போக்குமாறுபோன்மாயஞ்செய்வாள். (எ௬)

தானையினுனியைநாவிற்றடிப்புறச்சுற்றிக்கையா
லூனுயிர்விலக்குவேனெனவுருத்தெழுவாளைநோக்கி
யேனமாவீணையாகாவிதுவென்னபாவம்பாவங்
கானிடையுடலைமாய்க்கக்கருதினுய்ந்னினில்லென்றே. (எ௭)

வடுத்தமனனுத்தொட்டீர்த்தவவள்கையைத்தன்கையாலே
தடுத்தனனருயினல்லோயென்கொனீசமயளாகத்
தொடுத்துநூதுயரினேனுமுயிரினைத்துறக்குமார்க்க
மெடுத்தனைபாவம்பாவமீதுமறுதொழிகவென்றான். (எஅ

அந்தணர்பாவைபோலுந்தோற்றினதம்மாநீயு
மெந்தவூரெதுபேரிங்குதனிமையாயிருப்புவிட்டு
வந்துநொந்தரற்றிக்கண்ணீர்வழியமன்னுயிர்நீத்தற்குத்
தொந்தரையென்கொலுள்ளவாறினைச்சொல்லுமென்றான். (எகூ)

கேட்டனளடங்காதுள்ளக்கிலேசமோடபலங்காட்டி
நாட்டநீர்சொரியநாவும்புலர்ந்திடநடுங்கிமெய்யுங்
கோட்டமுற்றயர்ந்துமண்மேற்குப்புறக்கிடந்துமூச்சு
நீட்டியேதேம்பித்தேம்பிநிகழ்த்துவாள்நீலியந்தோ (அ0)

தம்பிநீயாரேயென்னைத்தடுத்துயிர்மாளாவண்ணம்
வம்புசெய்தார்பேர்கேட்கவந்தனைமைந்தன்றன்னை
வெம்புதீக்கூற்றமுண்ணவிருந்துசெய்திட்டவேறோர்
தம்பமொன்றற்றபாவியுனக்கெதுசாற்றலாவேன். (௮௧)

விடுவிடுதம்பிநானென்னுயிரினைவிடுவேனென்று
படபடத்துரைத்துச்சோரும்பார்ப்பனிமுகத்தைநோக்கிக்
கடகரியனையானென்னகருமநீயுரைத்தாய்மாண்டோ
ருடனிறந்தவர்களெந்தவுலகினுமுண்டோசொல்லாய். (௮௨)

மைந்தனுக்கனலின்மூழ்கவஞ்சினமுரைத்துநின்ற
சுந்தரவில்லிக்கன்றூட்டியமாமுனிவனேகி
யிந்திரன்றடுக்கச்சாந்தமெய்திஞானிதுவல்லாமல்
வந்ததூதுவனாற்சீதைமன்னுயிர்தரித்தாளன்றோ. (௮௩)

என்னுரையெள்ளாதுள்ளவாறெடுத்தியம்பல்செய்வா
யன்னைநின்புதல்வன்மாண்டானாயினுநானேபிள்ளை
தன்னையொத்துனக்குவேண்டுந்தனமனமாடையாய
பின்னையெத்தனையென்றாலும்பிரியமுற்றளிப்பேனம்மா. (௮௪)

உண்மையீதென்றுசொன்னவள்ளறனுரையைக்கேளாப்
பெண்மையின்பெருமைநீத்துப்பிழையுறுகைமையென்னுந்
திண்மையாணினைத்துவந்தகாரியஞ்சித்தியாக
வண்மையிலரன்செய்தானென்றகமகிழ்ந்தடக்கங்கொண்டே. (௮௫)

வேதியர்குலத்துக்கெல்லாமேன்படவாழ்ந்தோனென்ற
னாதனான்மறையுமற்றைக்கலைகளுநவிலுநாவான்
நீதுரையாதோன்றீயநோயினாலிறந்துதீர்ந்தான்
கோதுளனெனினும்பின்னோர்குழந்தையைத்துணையாய்க்கொண்டு. ()

வாழுநாளகவையைமூன்றாகிப்பின்வருடந்தன்னி
லாழியின்மாதுக்கொப்போரணங்கினைவதுவையாற்றுஞ்
சூழ்வினைபலவுந்தேடிநிரப்பிடத்துணியுமெல்லை
யேழையேனிழைத்தபாவத்தாலுயிரிழந்தானந்தோ. (௮௭)

கணவனையிழந்துபெற்றகாளையையிழந்துதேடும்
பணமுதற்பிறவுந்தோற்றபாவிநானினிமேற்பாரிற்
பிணமெனவாழும்வாழ்விலாருயிர்பிரிந்துமாழ்தல்
குணமெனத்துணிந்தேன்செய்யாதகல்வனோகுறைமீக்கொண்டே. ()

மறையவர்குலத்துவந்துமங்கலமிழந்துபாரிற்
குறையெலாநிறையாநின்றகொள்கலமனையபாவி
சிறையறுபுட்போனின்றுதேம்பினேனையாங்சொன்
முறையினையகங்கொண்டெய்தலெனக்குறுமுறைமைத்தாமோ. (௮௯)

ஆதலாலிறப்பேனீயுமகலுவாயிதனையன்றி
யேதுரைசொற்றபோதுமென்மனமிசையாதென்னப்
பாதகிருது கொண்டுபகர்ந்ததோர்மாற்றந்தோரா
வேதனையுழந்தான்காவலவியினுள்ளம்விம்முற்றே. (கo)

இரக்கமுற்றம்மாநீயுமிறப்பதையிருந்துகாண்டற்
காக்கிலேனலதுவேறோருவுணவேனவனிமுற்றும்
புரக்குநாணிதுகாவாமற்போதலும்புகழோவென்று
வாக்கண்ணீர்பெருக்குதவாளுக்கிவையிவைமறுத்துஞ்சொல்வான். (கக)

தாயுநீயெனக்குப்பெற்றதநயனுனக்குச்சொன்ன
வாயுரைதப்பேன்காப்பேன்வருகவென்றுரைத்தான்கேட்டா
ளேயெனவிருந்துகாலவரையினைநோக்கிப்பின்னுந்
தீயெனவருத்தஞ்செய்யுங்கொடுந்தொழிற்செய்கையன்னாள். (கஉ)

மன்னவன்குணமும்பேச்சும்மற்றுந்தன்னிடத்தில்வைத்த
தன்மையுமுணர்ந்தாள்வந்தகாரியஞ்சமைந்ததென்றே
புன்மையேபொருளாய்க்கொண்டபுலனிலியுளம்பூரித்து
வன்மைசற்றகற்றியின்புமருவல்கொண்டிதனைச்சொல்வாள். (கங)

நினையொருபொருட்கொண்டென்பால்வருவதற்குடனேர்ந்தாலும்
மனைவிபெற்றவர்மற்றேனோர்மரபுளோரென்மீதன்பு
புனைவரோகுலத்தாலொத்தபுகல்வரோபொருந்தாதையா
வினையினேன்வினைக்குநீயும்வருந்துதல்வியர்த்தமன்றே. (கச)

திங்களினிலவுங்காற்றுஞ்சேண்முகின்மழையுஞ்சந்தி
தங்குறுதருக்களுள்ளகனிகளுந்தரணியாள்வோர்
துங்கவான்பொருளுமீசனிலையமுஞ்சொலுங்காலென்றும்
பங்குளவுயிர்கட்கெல்லாமென்பதோர்பான்மைகண்டாய். (கரு)

அன்னைநீபுகன்றகூட்டத்தவர்களின்மனையாளின்றிப்
பின்னொருவருமிங்கில்லையவளுநின்பிரியம்போலச்
சொன்னதுகேட்பதல்லான்மறுத்துரைசொல்லாணல்லா
ணின்னுளம்வாளாவிங்குநோவலுந்தனிக்குமென்றான். (கசு)

வந்ததுபலித்ததென்றுமறையவள்மனதுபூரித்
தந்தரத்தமிழ்துண்டாற்போலவசனோடெழுந்துகூடி
யிந்துதீர்ந்தலர்காண்டற்கருந்தநீர்வனசயானுஞ்
செந்திருவனையாள்வைகும்வாவியின்பாங்கர்செல்வார். (கஎ)

வேறு.

தந்தாவளமனையான்முனமேசத்தனளரிகளம்
பிந்தாதுகைகொடுசெய்வினையவர்போலிவள்பிரியா
நந்தாதுமெய்க்கண்பாகிடக்கேதலமாக
வந்தார்மதுசொரிதாமரைநிரைவாவியின்மருகே. (கஅ)

வருமிக்கொடியவள்வஞ்சகமிகவல்லவளெனவாய்
வெருவிக்குருகனநாரைகுலங்குழுமெலிவோ
டுருகிச்சிறையடிகொண்டுமெய்யுதறிப்புறமோடப்
பொருமிக்கதறுதல்போலலைபுரள்வாவிபுகுந்தே. (௯௯)

உருவம்பாவியசீரழகொழுகுஞ்சுவையமிழ்தின்
றிருவைந்தருநிறையிந்திரைசெயன்மூந்தறமகளீர்
பொருவுந்தரமிகுசுந்தரபுனிதஞ்செறியிளமைப்
பருவம்பெருகியமங்கையினெதிரெய்தினர்பண்பாய். (௧௦௦)

புச்சம்பணிதீபேய்வினைபொருவும்பொருளிவளென்
றச்சந்தருபெருமேனியினுளங்குவரக்கண்
டச்சங்கொடுமனநொந்தலம்வந்தேயிருநீர்வாய்
மச்சம்புரள்வதுநேர்விழிமடவாளிதுமொழிவாள். (௧௦௧)

கவளக்களிறேயென்னுரைகருதாதுபுறம்போ
யிவளைக்கொடுவந்தாயிவளெவளென்பதுணர்ந்தா
யவளைக்கொடுவினவற்கெவரயனின்றுளதறைவார்
தவளக்கலைமதிவேணியனருளெவ்வினைதருமோ. (௧௦௨)

கற்றாய்கலைமுழுதுங்கரைகண்டாய்பலவினையு
நற்றாயெனவுனையேபுவிமுழுதுந்துணைநணுக
வுற்றாயஃதுணராதுளமோடுநெறியோடப்
பெற்றாயெனிலினிமற்றுநின்னுரைமாறுதல்பெறுமோ. (௧௦௩)

சுடுசெந்தழல்விடநீடியதொடர்நாணிலிசகரர்
தொடுதண்கடலினும்வஞ்சகவினைமிஞ்சியதொழிலா
ளடுவெங்கரியுடையாயுயிர்நமனூர்பதியணவப்
படுவெங்கொலைபுரிவாள்வருபாவம்பழிபாராள். (௧௦௪)

இதுநாள்வரையெவருநமதிருவேமொருதனியே
மதிபோகியபடியேவதிமனையின்புலனறியா
ரெதுகாலமோதெரிகின்றிலமின்றல்லதுநாளை
யதிகாலையில்வெளியாவதோர்மொழிமாமுரசறைவாள். (௧௦௫)

கொஞ்சுங்கிளிவரிகோகிலமனையாளிவைகூறி
மிஞ்சும்பழவினைவந்ததுவிதியின்வணமெனவே
நெஞ்சம்புலர்வதுகண்டிறைநினைவுந்தடுமாறிப்
புஞ்சம்பொருமதியின்றெளிவுற்றேயிதுபுகல்வான். (௧௦௬)

என்சொல்லியபொழுதும்நினதுளமுந்தெளிவிலதாய்
வன்சொல்லியென்மனதுங்கெடுவகைசொல்லுதன்மாறா
மின்சொல்லியவிடையாயிவள்விதியின்வினையுலகோர்
முன்சொல்லியுமுடியாவவைபின்சொல்லுதன்முறையோ. (௧௦௭)

வேறு.

வேதியர்தமக்குளாக்கமிக்குமேதினிக்குள்வாழ்ந்த
மாதிவள்கணவன்மாண்டுமைந்தனுமடியப்பின்னே
ராதரவில்லாதேழையாகினாளலமந்துள்ளம்
வேதனைவிலங்காடன்னுளாருயிர்விலங்கநின்றாள். (௧௦௮)

சாதியிற்கொடியற்கேனுந்தாழ்வுவந்துற்றானீக்கிப்
பாதுகாப்புறுதல்வேந்தர்பண்பிவள்பார்மேற்றீரா
தேதுகோட்படினுமாற்றிநன்னெறிக்கேதுவாக்கும்
வேதியர்மடந்தைசாதல்கண்டுநான்விலங்கற்பாற்றோ. (௧௦௯)

உள்ளவர்நிற்கவில்லாதவர்களுமூரூரெய்தி
வள்ளல்கண்டிரந்துசெந்திவளர்த்தியகரத்தார்க்கீந்து
தெள்ளிமைபெறுவரென்றாலீங்கிவடியக்கநோக்கித்
தள்ளிநான்வருதற்கெந்தவழிநிலைசாருமாலோ. (௧௧௦)

ஆதரவில்லாதேழையாகினளிவளாலென்ன
பாதகம்வரும்வந்தாலும்பாரினிலதுவுமெற்கு
மேதகுபுகழேயன்றிவெம்பழிவிளைக்காதென்றான்
மாதுபின்கணவன்வார்த்தைக்கேதுரைமறுத்துச்சொல்வாள். (௧௧௧)

செல்வமற்றனைந்தான்மாண்டுசிறுவனுமிறந்தானென்று
சொல்வதுமுழுதும்பொய்யேதுன்னலரிவட்கொண்டென்னைப்
புல்வதற்கானமாயம்புணர்த்துவிட்டனரென்றோரா
நல்வழியென்னச்சற்றுநயக்குதனன்மைத்தாமோ. (௧௧௨)

ஆயினுங்கொழுநன்சொற்கேட்டமைதனன்மகளீர்க்கென்றுந்
தூய்மையும்வாய்மைதானுநல்லறத்துணிபுங்கண்டாய்
நீயெனசெயினுஞ்செய்கநாயினேனெறித்தப்பாக
வாய்பிழைத்தனனென்றாலும்பொறுத்தருள்வைப்பாயென்றாள் (௧௧௩)

விற்பனமயிலுமந்தவீரனுமாறிமாறிச்
சற்பனபாசையாலேதன்பெருங்கருமமெல்லாஞ்
சொற்படப்பிரித்துப்பேசியிணங்கினரொன்னுஞ்சூழ்ச்சி
கற்பழிந்தவளுங்கண்டாள்சாடையாய்க்கடைக்கணோட்டி. (௧௧௪)

செம்மறைக்குலத்துள்வந்தேன்றிருவெலாஞ்சோர்த்துய்த்தே
னெம்மறைக்குலத்துளேனுமெனைநிகர்ப்பவர்களில்லை
யம்மநான்செய்தமுத்தீவினையினோவலதெவ்வாறோ
விம்மையேயெல்லாந்தோற்றேனிருமையுங்கடைப்பட்டேனால். (௧௧௫)

மந்திரமுறையாற்கொண்டமணவனையிழந்தகேதஞ்
சிந்தைவிட்டகலாமுன்னஞ்சிறுவனுமடிந்தான்செல்வம்
வந்ததுபோலேபோனமற்றொருமார்க்கமின்றி
வெந்தழற்சருகாய்நீறிமெய்மெலிந்துள்ளம்விம்மி. (௧௧௬)

வாழ்பவர் தமக்குண் மிக்குவாழ்ந்தா னவர்கண் முன்னே
தாழ்வடைந்திருத்தறீ தாமென்பது தன்னை யுன்னி
யாழிவாய்த் துரும்புபோலுமலைந்துளம்வருந்தியிந்தச்
சூழ்பெருங்கானில்வந்தென்னுருயிர் துறக்கநின்றேன். (கக௭)

சொன் மகன் மணவன் மாண்ட துக்கமுந் துயரும்போக
நன் மகனுன் முன்செய்த நற்றவப்பயன் போல்வந்து
பின் முகம்பாராதென்னைப்பிரியமோடழைக்கவுற்றே
னுன் முகங்கண்டேனெல்லாங்கிடைத்தல்போலுள்ளங்கொண்டேன்.()

மருகிநீயுனக்குவாய்த்தமாமிநானம்பியென்று
னருமைமன்மகனுமுங்களாக்கமுமென்னதாமென்
றுரிமையெத்தனையோபேசியுரைத்தனளுள்ளத்துள்ள
கருமமுட்கரந்துவார்த்தைவெளிப்படையாகக்காட்டி. (கக௯)

மாயம்வல்லவளுஞ்சொன்னவஞ்சகமுழுதுமிந்தச்
சேயிழையறிந்தாளோனுஞ்சிந்தையுள்ளடக்கிக்கொண்ட
நாயகன் கருத்துக்கொத்து நடப்பதுந் தாயமென்று
தாயுதன்னுளத்திற்கொண் டாள் பினுமொருசூழ்ச்சியோர்வாள். (க௨0)

நாரியர்மனம்வா ள நவர்க லாழுங்காணப்
பாரினின் முடியாதிந்தப்பார்ப்பனிகுணமும்பேச்சுஞ்
சாரியுமுடிவுநம்மைமுடிப்பதோர்கருமமின்றி
நேர்படவந்தாளில்லையென்பதுநினைந்தாளாகி. (க௨க)

வாயினிலினிமைதோன்றமதிமுகமலர்ச்சிகாட்டிச்
சயிழைகரங்கள் கூப்பி செப்புவாளணையொன்றின்றி
நாயகனேடுவாழ்ந்தநாரியென்பொருட்டாற்றெய்வந்
தாயெனவுன்னைக்கூட்டித்தந்ததுசாதமன்றே. (க௨௨)

மாமிநீ து ந்த அருமகனுமிந்தக்
காமகன்மகனுமென்றுகூறினையதுபோலென்றும்
புமியிற்பிரியாநேசம்பொருந்தியென்னுடனேவாழ்வாய்
சாமளவினுநீங்காதுன்பணிவிடைகொண்டுசார்வேன். (க௨௩)

சிறுமையேனாலென்னுந்தன்மைக்கேற்பனசிந்தையுள்கி
ஒநறிபிழைத்தெதுவுமோர்காலுனக்குநான்குறைநேர்ந்தாலுங்
குறிப ணைத்து மா தக த்திலுள் வருத்தங்கொள்ளா
றுத்துதல் செய் தன் றும் புப்பதுன்கடமையாமே. (க௨௪)

என்பனபலவும்பன்னியினியவையுங்குழையுங்காட்டித்
தன் பதம்வணங்கி நின்றதையலையுவந்துபுல்லிப்
பொன் பதமின்மேலவந்துபொருந்தினதென்றுபரி
தன் மேனு வளுக்கானமொழிபுகன்று சிசொற் ர். (க௨௫)

மூவருமகிழ்ந்துகூடிமுளரிசெங்குமுதநீங்கா
வாவியுளிறங்கிச்சென்றோர்மனையினிற்புனல்விலங்கும்
பாவனைதன்னையோராப்பார்ப்பனிதுருவியிந்தக்
காவலனணிந்தகைமோதிரமெனுங்கருமங்கண்டாள். (க௨௬)

விண்பதமெனினுமென்கையாலன்றியிவளால்வேண்டி
யுண்பதமொழித்தியென்றுகொழுநனுக்கோதியன்னான்
றண்பதம்விலகாநின்றுசார்ந்தனளுதையாழின்
பண்பதம்பாடுஞ்சோலைப்பசுங்கிளியனையபாவை. (க௨௭)

பதப்படத்திருத்தியென்கையாற்றருபதார்த்தமெல்லா
முதற்குலத்துள்ளீரட்டித்தருவதுமுறையாமென்றாங்
கிதப்படப்புகன்றாண்மாதுகருத்தினுக்கிசைவுற்றுள்ளங்
கதப்படாதடிசிலாற்றுந்தொழில்வினைகைக்கொண்டாளால். (க௨௮)

தண்டுலம்பருப்புநெய்காய்தயிர்முதலடுதற்கான
பண்டமுமடுப்புமவேறுபண்ணிநீர்குடைந்துநொய்தின்
முண்டையுஞ்சமையலாற்றிமுதலுண்டிவருக்கிய
வொண்டொடியதனைச்சோதித்தாசினுக்கூட்டியுண்பாள். (க௨௯)

இன்னவாறுறைபுநாளிலிருபிறப்பவளுமந்தக்
கன்னிகைகுணமும்பேச்சுங்கருணையுங்கவினுமற்றத்
தன்மையுநோக்கிநோக்கித்தன்னுளம்பூரித்தாலு
மன்னவட்காற்றுந்தீமைநேருமோரமைதியாய்வாள். (க௩0)

பூசனையன்பரன்புபுனலிடைக்குளார்ச்சிபூவின்
வாசந்தீச்சூடுசெம்பொன்னொளியிவைமாற்றிவேறா
யாசறப்பிரிக்கும்விச்சைவிதகறிபவர்க்குமின்னோ
நேசநீக்குதற்கோர்விச்சையறிவுறுநீர்மைத்தாமோ. (க௩க)

கணவன்மேற்றணவாக்காதற்காதலிதன்னையின்னே
யிணைபிரித்திதமதுவேந்தற்கீந்தவனுளேனல்கும்
பணமுதற்பூமிபாதிபகிர்ந்திட்டப்படுவேமுள்ள
மணவும்வஞ்சனைபோய்வேறேநினைப்பதிங்கழகிற்றம்மா. (க௩௨)

எனநினைந்துலவைமாய்க்குமிருங்கடல்காலநோக்கித்
தனதெலைகடவாதுற்றதன்மைபோலொடுங்கியந்த
மனைவயின்றொழில்செய்தொந்தனதெனமருவியன்னோர்
வினையெனவுறைந்தாள்பேதமணுவினுமவள்தோன்றாயம். (க௩௩)

கோள்வினையவளுந்தானுங்குரிசிலுங்கூடிவாழு
நாளினிலொருநாட்பூப்புநணுகலும்விலங்கியந்த
மாளிகைதன்னிலோர்பால்வைகினள்வதுவையாற்று
மாளனுக்கேவாலன்னமூட்டுதற்கமைப்பாளம்மா. (க௩௪)

கண்டினுமினியதீஞ்சொற்காரிகைகல்லையுள்ளங்
கொண்டனளெனினுமன்னன்கொழுநனுக்கெவராலட்டி
யுண்டிடப்புரிவாளந்தோவூழ்வினையுருக்கொண்டென்ன
வண்டையிலிருக்குமுண்டைதன்னைவிட்டயலிலம்மா. (கஙரு)

மறையவடன்னைக்கூவியம்மநின்மகனுக்கன்னங்
குறைவிலாதமைத்துன்கையாற்கொடுமெனநயந்துசொன்ன
முறைமையையுணர்ந்தாள்வந்தகாரியமுடிந்ததென்றுங்
கிறையினுந்தருகாளாகிச்சமைத்தனளினிமையாக. (கஙசு)

பருப்பினிற்சோற்றிற்சாற்றிற்பாறயிர்நெய்யினஞ்ச
நிரப்பியிட்டாசைக்கூவிநேயமோடிருத்தியன்னம்
விருப்பினாற்படைத்தாளுண்டான்விண்ணவர்கடலைமேனாட்
பொருப்பினாற்கடைந்ததுய்யபுத்தமுதெனப்பூரித்தே. (கஙஎ)

எமக்குவஞ்சகஞ்செய்தன்னமிதுவரையட்டியீயா
வுமக்குநான்புரிந்தகுற்றமென்கொல்லென்றுரைத்துப்பாரைச்
சுமக்குமன்னவனுமுண்டான்சுடுநெருப்பனையாடன்னாற்
கமுக்கமாய்விளைத்ததெண்ணியுள்ளுளேகளிப்புக்கொண்டாள். (கஙஅ)

தாய்தந்தைமகவுதாரந்தமருறவினர்மற்றேனோ
ரேயவெத்தனையோநண்பாங்கியற்றினும்பொருளீட்டற்கு
மேயவர்கருதார்வஞ்சம்விளைப்பதையொழியாவொன்ற
வாயுறைதீயாட்கொண்டிவ்வுலகின்றும்வழுத்திற்றன்றோ. (கஙக)

உண்டனன்முழுதுமுண்டுதீருமுன்முன்னாலுண்ட
பிண்டம்போயுடலைக்கவ்விப்பித்தலைத்தறிவையோட்டித்
தொண்டையையறட்டிநாவைச்சுருக்கியுள்ளிழுத்துமூச்ச
மண்டிநெஞ்சடைப்பப்பஞ்சப்பொறிபுலன்மயங்கிற்றம்மா. (கச0)

மூச்சிலாதறிவுநீங்கியொய்யுடற்றுடிப்பொன்றின்றிப்
பேச்சிலாதுடல்விட்டாவிபிரிந்திடப்பிணமாய்ச்சாய்ந்தான்
வா[illegible]சுதென்றுவந்துமன்னனன்யணிவிரலொழிதன்கை
டாய்ச்சிறுள்விசையதேசம்பகிர்ந்த[illegible]ட்டிகொள்வாள். (கசக)

இங்கிவன்பிணமாய்மண்மேற்கிடந்தனனிதுதேராத
யங்கைநீர்குடைந்துவேறுவத்திரம்புனைந்தங்கோர்பாற்
றங்கிவீற்றிருந்தாணின்றன்றலைமகற்கமுதிட்டாயோ
வெங்குளானொன்றுகூவிக்கேட்டனனிழுதைசொல்வாள். (கசஉ)

அன்னமேயன்னமிட்டேனயின்றுகண்விழித்திடாம
லென்னமோதுயின்றானென்றாளிருசெவிக்கெரிவேலூட்டுந்
தன்மைபோற்கொதித்துநெஞ்சந்தட்டழிந்தறிவுமாழ்கி
யென்னடியம்மாசெய்தாயென்றெழுந்தோடிப்பார்த்தாள். (கசங

வஞ்சனைப்படலம்.

முற்றிற்று.

ஆகப்படலம்-உஉ-க்குத்திருவிருத்தம்-க0எஉ.

பூலோகரம்பைசோபப்படலம்.

மாமிமாதுலனோடுவெந்தினிதாட மறிதிரைக்கடல்களோரேழும்
பூமியின் மதுரைவயின்வரவழைத்தபுராரிமுப்புரந்தழன் மடுத்த
சாமிநான் மறையோர்முனிவரர்தேவர்தருவிறைகமலவாலயன்கை
நேமியோன்பரவுமூர்த்தியிங்கவனை நெடுந்துணைக்கொள்ளுவைநெஞ்சே.

வேறு.

பார்த்தனள்கிடந்தகோலம்பதைபதைத்தங்கமெல்லாம்
வேர்த்துநெட்டுயிர்த்துவாடிமெலிந்திருகண்ணீர்பொங்கக்
கூர்த்தவாளரவுவானத்திடிக்குடல்குறைந்தாற்போல
வார்த்தைசற்றில்ளாயேங்கிமன்னன்மேன்மறுகிவீழ்ந்தாள். (உ)

மஞ்சுதோய்வரைமேற்பச்சைமயிலுளமருகிவீழ்ந்து
துஞ்சினாற்போலமாதுதோன்றறன்மார்பிற்சாய்ந்து
கஞ்சமென்முகமுங்காலுங்கரங்களுநகருகிச்சாம்ப
வஞ்சியுள்ளேங்கிமூர்ச்சையடைந்தனள்பிணம்போலம்மா. (ங)

தன்னுயிர்ப்படங்குமண்மேற்சாய்ந்ததன்றலைவனோடு
நின்னுயிர்ப்படங்கிற்றென்றுவென்றிமையவரிரங்கியேங்க
மன்னுயிர்ப்படங்கக்கன்னனலூன்றுபோய்மயக்கநீண்டான்
றன்னுயிர்ப்படைந்தாலென்னமீண்டுகண்விழித்துநோக்கி. (ச)

[illegible]க்குகண்காதுசேரமுத்த[illegible]ட்டணைத்துவாயா
றைக்கினைச்சுவைத்துள்ளுநறுநல்லமுதறியாளேங்கி
ப[illegible]க்கையையுமுழுதுநகையயாற்ற[illegible]வினையுயிரில்லாமை
நோக்கநெடுழல்வாயப்பட்ட[illegible]வெண்ணெய்போலுருகிநொந்தாள். (ரு)

வேறு.

கையிலெடுத்தாண்யா[illegible]ணைத்த[illegible]ள்களிவ[illegible]யைப்
பையமுகந்துமீளவயின்று[illegible]
செய்கைமறந்தாளயாவமறைந்தாடெருமந்த[illegible]ள்
கொய்மா[illegible]தெய்வக்கொம்பெனவாடிக்குழைந்தாள். (சு)

கோதுளவெல்லாமோருருவானகுடிகேடி
பாதகம்வஞ்சந்தீவினையஞ்சாப்பழிகாரி
[illegible]துசெய்தன்னம்வின்னமதாகத்துய்ப்பித்தா
[illegible]ாதகிளுனம்மன்னுயிர்பொன்றியழிவானேன். (எ)

நஞ்சோதீயோகெவ்வினைநாளுநமனேயோ
வஞ்சாநின்றுயென்னடிபாவியறிவில்லாய்
மஞ்சார்பொன்னின்மால்வரைமன்னனுயிர்மாள
வெஞ்சாதின்னல்செய்தயனின்றேயின்புற்றாய். (அ)

மாமியுநானீ மருமகள் காணிம் மண்ணுளும்
நேமிவலத்தானன் மகனீ துரிசமென்றேற
பூமிதனக்கும்வானுலகுக்கும்பொருள்காட்டித்
தாமதமின்றிமாறிமுடித்தாய்சண்டாளி. (௯)

நாலிருநாளாய்க்கானிடைமேவிநனிநீலிக்
கோலமெடுத்தேநீயழுமொப்புகளாலே
காலனையேமுன்கூயிவராவிகவர்தற்கோர்
மூலமதென்றிங்கெண்ணினனேர்க்கமுடித்தாயே. (௧௦)

அன்னையெனக்கோரன்மன்னவன்மீதிலருளில்லா
வன்மைவலித்தேயின்னுயிர்போக்கிமாள்வித்த
தன்மையெதற்கென்றுன்னிவருந்துந்தமியேனை
யென்னசெயற்கோகல்லெனவஞ்சாதேதிர்நின்றாய். (௧௧)

பொய்யாள்பொய்மைச்சூதுசெய்வாணீபோகாதே
யையாவென்றவென்னுரைதள்ளியயல்புக்கி
வெய்யதாய்நின்னுருயிர்கவாகூற்றின்வினைகொண்டா
யெய்யாநின்றேன்செய்வகைகாணுதிடருற்றேன். (௧௨)

தாதைசெய்காவற்கன்னிகைமாடந்தனின்மேனாள்
பாதகிமூன்றுவருடமிருந்துபல்னற்றேன்
றீதுமிகுந்தேனரவொருவருஞ்சிறைவைக்க
வேதனையுற்றேனெவர்தவமாபின்விளைவுற்றேன். (௧௩)

சிநதைகளித்தேனின்பெருநேயந்திறமென்றே
சந்தமலர்த்தார்வதுவைபுனைந்துசாயாத
விந்திரபோகமெனறதருக்கற்றிடர்சூழ்க
வந்தகனைககைகாட்டியழித்தாளறமற்றாள். (௧௪)

பாலைமழற்கணீசனைவெல்வேனவர்பாலென்
வேலனைவெல்வேன்மாலினைவெல்வேன்விழியேனென்
சாலவருந்தேலென்றுபுகன்றதருக்கெல்லாங்
காலனைவிழுங்கச்செய்திவளாண்மைகதித்தாளே. (௧௫)

வேறு.

மின்னிலைவேற்படைசுமந்துமருவலர்கள்பகைகடிந்துவீறுதேன்ற
விந்நிலமெலாமொருதன்குடைநிழற்கீழ்ப்பொதுவான்றிறமைசெய்யு
நினனிழல்போனீங்காதநேயருந்திருந்தேனைநீங்கிநீயும்
பொனனுலகம்புகுந்தனையோபுரந்தரனோர்வரிசசெயப்புகழ்பெற்றாயோ. ()

கரிமருப்புங்குரும்பையும்பொற்கலசமும்பம்பரமுமணிக்கனகசெப்பு
மிருபொருபபுமிட்டுந்துபணைத்தெழுந்தமுலைக்கோகிலமேயென்றுமநானுன
பெருவிருப்பந்தவிருகிலேன்றருவிருப்பாளவரினுமனம்பேணேனென்ற
வருவிருப்பமறந்தொருநாணமற்றுதல்கேளாதிருந்தவருடானென்னே. (௧௭)

நாடிழந்துநகரிழந்துநற்றாயுந்தந்தையையுநனிதுநீத்துக்
காடுறைந்தபாந்தளினாற்கேடடைந்துசிறையிருந்துகவலைகொண்ட
பாடிழந்தேனொருவருக்குங்கிடைப்பரியபெருந்திருவும்படைத்தேனெற்கிங்
ஈடிலையென்றுவந்திருந்தேனிடையிலிந்தவிதிவருமென்றெண்ணிலேனே. ()

மதிமுகமுங்குருநகையுமணிவாயுந்திருவுறையும்வரைத்தோண்மார்பும்
பொதியவிழ்செங்காந்தண்மலர்பொருகரமும்பதநளினப்போதும்பொன்
கதிர்பரவுமேனியுநற்கருணைவழிந்தொழுகியசீர்க்கண்ணுங்கண்ணா [போற்
ணிதமுவந்தின்புறுசுகம்போய்க்குறையுவந்திங்கிருக்கமனநேருவேனோ. (க௯)

பூலோகரம்பையிவள்புநிதமில்லாளெனநீத்துப்புயங்கந்தூங்கும்
மாலோனுந்திசைமுகனும்வானவனும்விருந்தூட்டமற்றோர்போற்ற
வாலோவல்லதுமலரோவமரர்பதியாதியதாயழகுவாய்ந்த
மேலோகவரம்பையரிலெவர்நலந்தோய்ந்திடப்புகுந்தாய்விளம்புவாயே (௨௦)

என்றுபலபலபிதற்றிப்பூலோகவரம்பையெனுமிளமானேங்கி
யன்றுமுழுவதுமாற்றியவ்விருளுமயனாளுமழுதுமேனி
கன்றிடப்பூங்குழல்சோரக்கலைசோரவளைசோரக்கண்ணீர்சோர
வொன்றுநினைவிலதாகிநெருப்பையயின்றுமிழ்வார்போலுயிர்ப்புவீங்க. (௨௧)

வேறு.

கைநெறித்துவயிறலைத்துமுகத்திலெற்றிக்கண்ணருவிவான்மழைபோற் காலக்கோல,மெய்ம்முழுதும்புழுதிபடப்புரண்டுவேடர்விடுமுனையின்கணைபட வேவெருவியோலஞ்,செய்யிளமான்பிணையெனவேகதறிச்சோலைதிகழ்ந்தபசு ங்கிளிமொழிமென்மழலைதேங்கப், பொய்யிடைநொந்தலமுறவாய்ந்தெழுந்த கும்பப்புணர்முலையாள்பட்டதுயர்புகலப்போமோ. (௨௨)

கற்பிலருந்ததியனையாளழுதனோக்கிக்கலைமாதும்மலைமாதுங்கரியமேனித் தற்பரன்மாதுமழுதார்பொன்னாட்டுள்ள தடமுலையரின்னாரழுதார்தவஞ்செய் மௌன, விற்பனமங்கையரழுதாரியக்கர்நாகர்விஞ்சையர்கன்னியரழுதார்வி ளம்பற்கொவ்வா, விற்பிறந்தார்முழுவதுநின்றழுதார்தன் மதேவதையும்ம றையுமழுதேங்கிற்றாலோ. (௨௩)

மண்ணழுதமாமழுதவிலங்குபுள்ளூர்வனமழுதவனமழுதவடிவொன்றில் லா, விண்ணழுதபுனலழுதவழுதவெந்தீவிரிகதிர்தண்மதியழுதவியனாள்கோ ள்க, ஒண்ணுறுதாரகைமுதலாயழுதவெல்லாமினிப்புவியிலையோதயையருளி ல்லையந்தோ, பெண்ணலமில்சண்டாளமுண்டைமட்டும்பேருவகையுளஞ்சா ய்த்துப்பேய்போனின்றாள். (௨௪)

மாண்டமணவாளனொடுதானுமாண்டுமாநிலத்திற்புகழ்பெறுதன்மாபா மென்று, பூண்டபொலன்கொடிநினையுமளவிற்கண்டபொல்லாதாணல்லா ளைப்புகழ்ந்துபேசி, வேண்டுமனம்போனடந்துகவறன்யாற்றிவிசையதே சத்திறைபால்விடுத்திலோமே, ஈண்டுபுரிவினைமுழுதும்பாழ்போயத்தீரா தென்றலைக்குப்பழியொன்றேயெய்துமாலோ. (௨௫)

என்றுநினைந்தோவியம்போன் மாழாந்துள்ளமேங்கியழுதாளைமனத்தினி மையோடுஞ், சென்றிருகையாற்றாக்கிக்கண்ணீர்மாற்றிச்செம்பொனவளைதி ருத்தியிடைச்சீலைசேர்த்தி,மன்றன்மலர்க்குழன்முடித்துமேனிமுற்றுமண்டு தூசுள்போக்கியுற்றவாட்டந்தீர,வொன்றலவெத்தனைகோடிபொய்சேர்வார்த் தையோதினான்பெரும்பழிசெய்தீதினானே. (௨௬)

இன்னவூரின்னபெயரின்னசாதியென்பதறியாதிவனோடேனோமேனான் மன்னியுறவாகிமனையவளுமாகிமாறாதபெருஞ்சுகம்போற்றுயரில்வாழ்ந்தாய் பின்னிவனிங்கிறந்ததுநின்முன்னோராற்றும் பேசரியமாதவத்தின்பெற்றி யென்றே, கன்னியெனத்துளமதித்தேதனிதுவோராமற்கவலுகின்றாய்நாணபுக லுங்கருமங்கேண்மோ. (௨௭)

பாரரசும்பெருந்திருவும்பெற்றுவாய்ந்தபலவரசர்கழலிறைஞ்சிப்பணிகி ன்றாற்றப், பேரரசுபுரிந்திருந்தநினதுதாதைதபெருந்தவத்தானேற்றெடுத்த பேதைநீயு, மோரரசன்றனைமதித்துமாலைசூட்டியொருகுடைக்கீழிருந்தெவ ருமுனையேபோற்ற, வார்சிலையாரேவல்செயக்கவரிவீசவாழ்வதுபோயிதற் குள்ளமகிழ்ந்ததென்னே. (௨௮)

செல்வமில்லான்கல்வியில்லானழகுமில்லான்றிறமையில்லானிவனுமொ ருசிறுவனீங்கு, புல்லிமனதுவந்தணைந்தபழுதுதீர்த்தென்போல்வாளைக்காத் தருளும்புகழ்கைக்கொள்வாய், வல்லிமடவார்க்கிளமைகழிந்தாலின்பம்வாய்க் காதென்றந்நாளில்வானுலாவு, மெல்லிநமன்றருவேந்தன்காலானோரையுழி ற்குந்திம்தாய்ந்துநலமெய்தினாளால். (௨௯)

அகப்பற்றும்புறப்பற்றுங்கடிந்துசுத்தவறிவானகோதமனுக்கமைந்ததேவி மகப்பற்றின்றொடர்புவிடாதொருநூறுற்றும்வானவனைத்தோய்ந்துநலம்வ ழுவுற்றாலு, மிகப்பற்றோரவளையுமோர்தெய்வமாகவின்றுமுவந்தங்கைகுவி த்திறைஞ்சினாரா, னகப்பற்றுவிட்டுமதக்கரிக்கோடேற்றநூறுங்களபக்கொங் கைதிகழ்நங்கைமானே. (௩0)

வேறு.

மாதருக்கரசாகியவனநடைமடந்தா
யீதுரைக்குவனின்னமுந்தேறுதற்குறுதி
வேதமோதியகுருமொழியாமெனவிரும்பிக்
கோதிலாதநின்மனத்தினிலுணர்ந்தவைகோடி. (௩௧)

கரும்புஞ்செந்நெலும்பூகமுங்கதலியுங்கலந்து
பெரும்புயற்றலைகிழிபடத்துவன்றிவிண்பிறங்கு
மரும்பரும்பியசோலைவாய்த்தேறலையருந்திச்
சுரும்பர்பாண்செயமயினடங்கொளக்குயிற்றொனிக்கும். (௩௨)

பரவுபல்வளமோங்கியபணிக்கடற்புவியிற்
பொருவிலாதுயர்விசையமாநகரதுபோலும்
விரவுநான்முகன்மால்சிவன்மலர்கடல்வெள்ளி
வரைதெரிந்தனர்மாசெனப்பினுந்தவம்வதிந்தார். (௩௩)

ஆயமாநகரிருந்துபேருலகெலாமளிப்பான்
காயுமொன்னலருக்கமுஞ்சீர்த்தியுங்கவரு
நாயகன்வலியோரெளியோர்களைநலியா
தேயவாணையான்செல்வமோதனதனுமிசையான். (௩௪)

தருவிருந்தசெங்கரத்தினன்றருமங்கொடலையா
னுருவமைந்தசித்திரத்தினுமதனினுமொளியான்
மருவிருந்தசெந்தாமரைமலரெனமதியாத்
திருவிருந்தரசியற்றியசெழுமதிமுகத்தான். (௩௫)

வங்கர்சோனகர்மகதர்மச்சரர்கௌடத்தர்
கொங்கர்தெங்கணர்சிங்களராரியர்குலிந்த
ரங்கைகூப்பிநின்றளந்திடுந்திறைநிதியளக்கர்
பொங்குசெங்கதிர்த்தேர்ப்பரிதகைந்துவண்பொருவும். (௩௬)

விடைவலான்றிருமார்பினன்வேதன்விண்ணவர்கோன்
கடையுநாட்கலந்தெழுந்தபேரோதைவான்கடல்போற்
றடைபடாதமும்முரசமெந்நாளினுந்தவிரா
தடையலர்க்கிடியேறெனமுன்றினின்றதிரும். (௩௭)

உரனுமூக்கமுங்கல்வியுஞ்செல்வமுமுயர்வும்
வரனுநீடுமுத்தேவராற்றரக்கொடுவாழ்ந்தா
னரனெனச்சொலுஞ்சொல்லலானவிலுங்கால்விசைய
தரனவற்குமூவுலகினுமிணைசொலச்சமையா. (௩௮)

கோகிலக்குரல்கிளிமொழிமயிலியல்குறித்த
போகமங்கையர்புவனததுல்வானத்திற்பொலியு
நாகலோகத்திலெத்தனைகோடிநானவில்வேன்
வாகுமன்னவனவர்களைக்கனவிலுமதியான். (௩௯)

முன்னைநாடிநின்மரபுளார்புரிதவமுறையா
லுன்னைநாடினனென்பதுதெரிந்துகொண்டொருகாத்
தன்னைநாடிமன்மதன்விடுசரங்களாற்றவிப்புண்
டென்னைநாடினனவன்கருத்தாய்ந்துநானெழுந்தேன். (௪0)

இங்குவந்துமதமையங்கண்டிவனுயிர்வாட்டி
யங்கவற்குனையளிப்பதற்கெண்ணியவடைவே
கங்கைசூடியின்கருணையான்முடிந்ததுகனிவாய்
மங்கையாகுலமறந்ததுசெயமனம்வலிப்பாய். (௪௧)

இல்லையாமெனினின்னுயிரிரிதரவாட்டி
யொல்லையேகுவனென்றசொற்காதினிலூதுங்
கொல்லன்வாயுலைத்தீப்படுங்கோலெனக்குறுக
வெல்லையற்றதுன்பெய்தினின்றுய்குவாளிதனை, (௪௨)

என்னின்முன்னவர்தீமையோவலதுநானிழைத்த
பன்னரும்பெரும்பாவமோவித்துயர்ப்படவென்
றுன்னிமுன்னயன்படைத்தனனினியவையுங்கிக்
கன்னிலென்பயனென்றுளந்தேறியக்கன்னி. (௪௩)

மன்னையின்னுயிர்நீக்கினண்மற்றொருமன்னன்
றன்னையென்றனக்கருமணம்புணர்த்தவுஞ்சமைந்தாள்
சொன்னவாய்மொழிநீக்குவனேலெனைத்தொலைக்கப்
பின்னையுந்துசங்கட்டினண்முடிக்கவும்பெரியாள். (௪௪)

தந்தைதாய்கிளைமுதலியதிருவெலாந்தமியேன்
முந்தநீத்தொருபாந்தளாலிவன்றனைமுற்றுஞ்
சொந்தமாக்கினேனிழந்துயிர்சுமப்பனேயினிமே
னந்தலன்றிமற்றெதுகொண்டுவாழ்வுறநயப்பேன். (௪௫)

அரசனுருயிர்க்குயிர்நிகர்த்தருந்துணையாகப்
பரசுமந்திரிநீங்கினன்படிமிசையெவரு
முறைசெயுமுயிர்நீங்கிடின்மீளவுற்பவிக்கு
நிறைசெய்விச்சையதென்றுசொன்னெறியுமொன்றுளவால். (௪௬)

இன்றுமற்றிவளோடுசென்றவனையெவ்விதத்து
நன்றுகண்டுசொற்றித்துயர்நீக்கிநன்னலங்கொண்
டென்றும்வாழ்குவனன்றெனிலெரியளென்னுயிரும்
பொன்றுவன்மறுதறுதிவேறிலையெனப்பூவை. (௪௭)

தாயுந்தந்தையுந்தமர்களுந்தனமுதற்பிறவு
மாயுந்தெய்வமுநீயலாதிலையெனவந்நாள்
வாயுரைத்தநானின்பெருநேயத்தைமறக்க
வேயுமோவுனையலதுவேறெனக்கென்னகதியே. (௪௮)

இன்றுநாள்வரைமதியிலாதெனதுபெண்ணலமுஞ்
சென்றதேனுநின்றிருவருளுண்டெனிற்றீயேற்
கன்றுநல்லனவாமெனவெண்ணினேனம்மா
நின்றநின்னுரைநன்றுதீதென்னினுநீக்கேன. (௪௯)

ஆதலாலிவனுறவுநீத்தப்புறங்கடத்தற்
கேதுவன்றுகொண்டிருந்தனனிவையெடுத்துன்பா
லோதவென்னுளமரசனுக்குரிமையிற்பிரியா
வாதரத்துளீதொன்பதுகருதியஞ்சினவால். (௫0)

அறந்தவாக்குடியொழுக்கிலேனெனினுமாருயிர்போ
யிறந்தவிக்கூளைபரமெடுத்தொருபுடையிட்டு
மறந்திடாதநிற்குறிக்கொடுநடக்கவுமதித்தேன்
சிறந்ததாயினேயென்றவட்காவனசெப்பி. (௫௧)

பொன்றினுன்றனைத்தயிலமிட்டறையிடைபோக்கி
யொன்றுமாமனைத்தாள்வலித்ததிற்குறியூன்றி
நின்றிலாதுபின்னவளொடுநேயமாய்ப்பேசி
யன்றுபோய்மறுநாட்செலவமைந்தனரம்மா. (௫உ)

மதியிலாதவான்வனசமில்லாதநீள்வாவி
நதியிலாதவூர்நாதனிலாப்படைநலஞ்செய்
நிதியிலாதவர்வாழ்க்கையென்பதுங்கர்த்திவளும்
புதியவாண்முகம்பொலிவிழந்துள்ளமும்புழுங்கா. (௫௩)

இறைவனைப்பிரிந்திருப்புவிட்டிழுதைமுன்னேகப்
பிறைநுதற்றிருமடந்தைபின்னேகியேபெருநீர்
நிறையும்வாவியைநீத்தளிநெருங்குபாண்மிழற்று
நறையுலாமலர்ப்பொழில்கடந்தருநெறிநடவா. (௫௪)

வேறு.

கடகரியும்பிடியுமயிற்கணமுமுழுபிணிமுகமுங்கலையுமானுந்
தொடர்புதீரத்திரிவனவும்வருவனவும்போவனவுஞ்சூழநோக்கி
மடவாறன்கணவனையுமருவுமலரமளியையுமனத்திலுன்னி
நெடுவிழிமுத்திறைப்பதெனத்தாரைமுலையிற்பாயநெட்டுயிர்த்தே. (௫௫)

போவதுகண்டவ்வனம்வாழ்புள்விலங்கூர்வனமுதலாம்பொருள்களெல்லாம்
பாவையிவடுயர்க்கிரங்கிப்பரதவிப்புற்றலம்வருமோர்பான்மைபோலக், காவ
ளமுந்திருநதியுங்கழனிகளுமொலிபரப்பிக்கலேந்துலாவச், சேவடிநொந்தொ
சிந்துமலர்க்கொடிதுவண்டுநடப்பதுபோற்சென்றாண்மனனே. (௫௬)

கல்விடரமுட்பொதுத்துக்காலுதிரஞ்சிவந்துவனங்காட்டநீண்ட
சில்லுடைமாருடல்கிழிப்பச்செடிகொடிபூந்துயின்மயிரைசிக்கியீர்ப்ப
நல்லவளும்பொல்லாதாணடந்தவழியத்தனையுநடந்துசெல்ல
வெல்லவன்கண்டிவடுயராற்றுதொழித்ததெனக்குடபாலெய்தும்வேலை. ()

பூலோகாம்பைசோகப்படலம்.

முற்றிற்று.

ஆகப்படலம்-உ௩-க்குத் திருவிருத்தம்-௧௧உ ..

பெண்ணழைத்தபடலம்.

ஏடெதிர்செல்புனலின்வைகை
மாடுகொள்செம்பொன்மதிள்கூடல்
நீடுவிளங்கநிறைந்தானைப்
பாடுதல்செய்குவைபாழ்நெஞ்சே. (க)

வேறு.

விசையநகரெயிற்புறஞ்சூழ்ந்தாகாயமுடிதடவிவிரியுங்கொப்பூ
டசையுமலர்த்தேன்சிதறியாறுகுளம்வயல்பெருக்கியழகுகாட்டித்
திசைமயக்குமிளஞ்சோலைமயிலினமென்சிறைகோலித்திருக்கூத்தாட
வசையகற்றுமவ்விடத்தின்மறையவனன்மாதினொடும்வந்துவைகா. (உ)

ஒருவனைக்கூய்நீவிரைவிலோடிநமதிறைவனிடத்துனக்காயிங்கோர்
திருவனையமாதினொடுமறையவன்வந்தானெனவேசெப்பினனுன்
பொருகலியெலாமகலவரிசையவனுலுதவப்பொறுப்பாயென்று
ரிதமுடனவனெழுந்தங்கரசவையிற்புக்கியிவைதொழுதுசொல்வான். (ங)

மன்னவநின்குலம்வாழிநீவாழிநகர்வாழிவளமைவாழி
யென்னசொல்வேனெப்பொழுதுங்கண்டறியாத்திப்பியநானேந்தாநீயு
முன்னம்வனவேட்டைசெய்தமுளரிமலர்த்திருவாவிமுன்னிவாழ்ந்த
கன்னிகையுமறையவனுங்கடிநகரின்புறத்திலுற்றார்காண்டியென்றான். (ச)

உடல்பிரிந்தவுயிர்மீண்டதெனப்பசியானெடுங்காலமுழலுற்றோர்க்குக்
கடலமுதம்வலியவந்தகாட்சியெனப்புகன்றமொழிகாதிற்கேளாச்
சுடர்வலயந்தெரிப்பமணிமார்பகன்றுதோளிரண்டுஞ்சுடரோன்சுற்றும்
வடவரையிலோங்கிவிசும்பணவமரிற்கூச்செறிந்துமகிழ்ந்தான்மன்னோ. (ரு)

சொன்னவனைமுகநோக்கிக்கருணைபொழிந்தினமொருகாற்சொல்லுமென்
தன்னுளத்திடங்காதலவைசெறிந்தகடல்குளித்ததனையாள்வேந்தன் னத்
தின்னவனுக்கிறையெந்தவெறாம்பெறுகவெனவளித்துமுன்னம்பெண்ணைக்க
ண்டு,மன்னியநட்பாளுமைத்தமந்திரியைச்சென்றழைத்துவாபோவென்றான்

இறைகூற்றுமவன்கருத்தையுணர்ந்தமதிமந்திரியுமிறைஞ்சியேகி
முறைசாற்றும்வள்ளுவனாலூரிமதயானையின்மேன்முரசந்தாக்கிக்
குறைசாற்றுங்கோனகரமுழுவதுமின்றறிந்துமணக்கோலஞ்செய்யப்
பறைசாற்றுமெனவிடுத்துப்பாவையழைப்பதற்குரியபலவுங்கண்டான். (எ)

முரசெறியுந்திருவோலஞ்செவிக்கமுதமெனத்தேக்கிமுழங்கிநீண்ட
கரைசெறியாவுவணிகெடுங்கடற்றலையிற்படிந்துதிரைக்கடல்போற்பொங்கி
வரைசெறிசிந்துரக்களபமருப்புமுலைத்துவரிதழ்வாய்மடநல்லாரு
மரசரிளங்குமரர்களும்புதுக்கோலந்திருத்திநகர்க்கழகுகாண்பார். (அ)

கதலிகுருத்தெழுந்து விசும்பணவவிளங்கரும்பதின் மேற்கவினப்பூகம்
மதிசதுர்சென்னெறிக்கி ர்செய்வதுபோலுங்காவணங்கள்வகுத்துப்பொன்
புதியநவமணியான்மென் மதுமலா் ற்றுமங்ளைபொலியத்தூக்கி [ஞற்
யிதுபெரிதிந்திரபதிக்கென்றெத்தெருவுமொத்திருக்குமெழில்செய்வாரால்.

சந்தனத்தானிலமெழுகித்தமணியத்தாற்சுவர்புதுக்கித்தவளம்வேய்ந்த
யிந்திரநீலத்தகட்டானிலைதெரிந்துதெற்றிமனையிடங்கடோறுங்
சொந்துகமுகெழிற்பாளைதலைவிரியப்பூரணப்பொற்குடங்களேற்றி
யிந்துநிலாக்குருத்துமுளைத்தெழுந்ததெனமுளைப்பாலியியையவைப்பார். ()

வெள்ளைநிலாத்துளிமுறிந்துவிழுந்ததெனவெண்சுதையால்விளக்கிமாடத்
துள்ளும்வெளிப்புறனுநவமணிகுயின்றுவிதானமலரொழுங்குசேர்த்துக்
கிள்ளைகுயின்மயில்பூவைபாவைபசும்பொன்னி ாற்கிளரக்கீறிக்
கள்ளொழுகுநறுநதெரியல்சுருங்கைவழிபடிநீளக்கட்டுவாரால். (கக)

வீதியினிற்சாந்தெறிவார்மணியெறிவா ம தெறிவார்விருப்பங்காண்பார்
வேதியர்க்குமாதுலர்க்குஞ்சோறளிப்பார்தாமுமொருவிருந்துமாவார்
சோதிமணிக்கலன்தெறிவார்சிவிகைபரியிரதமிசைசூழ்ந்துசெல்வா
ரேதினைநதாமதமெனச்சென்றருங்கழிநல்லோரைகனனலியையப்பார்ப்பார்.

சொந்தமனையெனவயலார்மனைபுகுதவவருமந்தத்தொழிலேசூழத்
தந்தமதுமனையருப்புத்தெரியாயன்மனமருளத்தயங்குஞ்சோதி
யிந்தநகரழிஞேக்கியிந்திரநகரதருவர்சித்தரியக்கர்நாகர்
சிந்தைமகிழ்நதிமையாதுவிழிததவிழிக்குருடெனத்திரிந்தாரின்றும். (கங)

(வேறு)

சிந்துரந்தீட்டிநெற்றித்திருமணி சுட்டிசாத்தித்
தநதிடைக்கொட்டியானந்தரித்துநூ புரங்களோடுகப்
பந்தணிமுலை மேற்றெ ம்பொற்பதக்கமிட் டா ந்தூக்கிச்
செந்துவர்ப்பவள செவ்வாய்மயிலெனச்சில்லோர்சூழ. (கச)

பயிரண்டி நதிவா மெட்டை த்துச்செம்பொற்
றபுனைந்தநகமெல்ல கைகளின்மணிச் ன்கள்பூட்டி
நீலமிசைத்தருமென்கொம்பர்நட ந்துமெ ல்நீர்மையென்ன
சிலைநுதற்களபக்கொங்கைமங்கையர்சில்லோர்சூழ. (கரு)

கால்வளைசிலம்பிரேனை கைவளைகுலுங்குமோசை
மால்செயநோக்கிமை தர்வழிதொறுமறுகிற்பக்
காலனுக்குறவுகாட்டிக்கருவிளைமலரைவாட்டிச
சேலெனபபுரளும்வாட்கட்பாவையர்சில்லோர்சூழ. (கசு)

மயிலினிற்சாய்கைதாங்கிமானினிற்பார்வைவாங்கிக்
குயிலினிற்கிளவியோங்கிக்கொடியிடைநீங்கிமண்ணிற்
பயில்சிறைப்பவளவாயோதிமம்பரந்தலவிற்றென்ன
வெயில்விரித்தொளிருமேனிமெல்லியர்சில்லோர்சூழ. (கஎ)

வண்டடைகிடக்குஞ்சஞ்சமலர்மிசைவாள்போற்றுவுங்
கெண்டைகண்மிளிர்வதென்னகிளர்விழியழகுகாட்டுந்
துண்டமுமபவளவாயுந்தூயவெண்மதியங்காட்ட
செண்டணிகலைசெகொங்கைமங்கையர்சில்லோர்சூழ. (௧௮)

வாசமென்கலவைசசாந்தம்மான்மதம்பனிநீர்செம்பொற்
றேசணிமுத்தமாலைசெழுமணியாரந்தாமங்
கோசிகங்கடகமேனைநிலைறத்தகோடிகங்களேந்திப்
பாசிழையவர்கள்கோடியேயந்தணர்பக்கமெல்லாம் (௧௯)

தேர்நிரைமதமாவாசிசிவிகைவெண்கவிகைகுஞ்சம்
பார்நிறைந்தேதகவேழுபரவையின்னியங்களார்ப்ப
வார்முரசோதைசங்கம்வழங்கொலிமறையோராசி
கார்மழையஞ்சவண்டங்கலங்குறக்கலக்கிறம்மா. (௨௦)

மதமலைவயவெஞ்சீயமழவிடைகுழுமியேகும்
விதமெனவரசாவீராவினைபுரியுழையாவெள்ளம்
புதுநலங்கொண்டுசெல்லப்பூரணகலசமேந்தி
விதிமுறைமனுவாயோதிவேதியாமருங்குமேவ. (௨௧)

இந்துவெண்கவிகையோங்கவெங்கணுங்கவரிதுள்ளத்
தந்திரபாலாசுற்றத்தமணியதேர்மேறகொண்டு
மந்திரிதானையோடுமணிநகாப்புரிசைநீத்துச்
சுந்தரியிருந்தமெனபூஞ்சோலையைத்துன்னினாரால். (௨௨)

சோலையிற்புகுந்துமாதராயங்கள்சுமந்துவந்த
மாலையுங்கலவைசசாந்துமவடங்களுங்குழையும்பூணும்
பாலையுங்கசப்பித்தாறுமபனிமொழியவண்முனவைத்து
வேலைசெயயடியேங்கட்குனறிருவுளம்விளம்புயென்றா. (௨௩)

பருமலர்சுமந்தகூந்தன்மயிற்குலமனையாய்நின்றன்
றிருவுளமவிளம்பவெனறுசேவிததுப்பரம்புன்னற
வரிவையாதபமைமே ாககிவேதனையகத்துள்ளாக்கிப்
புரிநகைமுறுவல்காட்டிமுகமதிபுதுக்கினாளால். (௨௪)

வேறு.

வாசநறும்புனலாட்டியகிற்புகையாற்குழல்புலர்த்திமலர்கள்சூட்டிக்
கோசிகநுண்டுகில்புனைந்துகுவிமுலையிற் ளபாறுங்கோலஞ்செய்து
வீசுகதிர்மணிப்பணியாலுட புனைந்துதிலதநுதல்விளக்கித்திட்டி
கூசவலங்காமிட்டாரோவியத்துக்கழகளிக்குங்குமரிதன்னை. (௨௫)

சுற்றுமயினீர்போக்கிக்கண்ணெசசில்கழித்துமயிற்குழலூடு
கொற்றமயிறபெடையெனனனெருளிகுலவுமரசர்குலக்கொடியைசசெம
பறறுநவமணிகுயினறதேரேற்றியிருமருங்கும்பதாதிமொய்ப்பப் [பொன்
பொற்றொடியார்கவரிதரக்குடைநிழற்றநகர்நோக்கிப்புறப்பட்டாரால். (௨௬)

சிவன் மனைவி திசைமுகத்தோன் மனைவி திருமான் மனைவி தேவருர்வா
ழவன் மனைவியவர்களிலிங்கிவளொருத்தியின்றெனில்வேறவனிமீதி
லெவன் மனைவியெனச்சொலலாமிதுவரைக்குநம்மரசனிவளைக்கண்டும்
புவனமிசைபொறுத்திருந்ததருமையெனநகர்முழுதும்புலம்பிற்றம்மா. ()

இத்தனைபேர்நகரிருந்தோமிதிற்றுணிவாய்மறையவளுமெழுந்துசென்றிங்
கத்தனைபேரும்வியக்கவலையுதவுந்திருமகள்போலழகுவாய்ந்த
சித்திரப்பொற்பாவைதனைச்சேர்த்துவந்தாளவளுமணிச்சிவிகைமீது
தத்துபரியானரசுபாதியின்மேற்கொடுத்தாலுந்தகுமேயம்மா. (உ௮)

துற்சனன்போல்விரகரிந்துசூட்சிவிநயம்புரியுந்தொழிலிற்றூய
சற்சனரெத்தனைகோடியாமெனினுமொவ்வார்காண்டரையாள்வேந்தன்
முற்சனனந்தனிற்புரிந்ததவப்பேற்றாலமைச்சியலின்முறைநின்றூற்றற்
கிச்சனனந்தனிற்கிடைத்தானிவன்போன்மற்றரசர்களுக்கெய்துமாலோ. ()

மாதிவடன்மனத்தெளிவுமுகக்குறிப்புநோக்கிடலிம்மடநல்லாளைப்
பாதகிநம்மறையவளும்பழிவிளைத்துப்பெருங்கலகம்பண்ணியேதோ [ப்
சூதுசெய்துகொணர்ந்ததுபோற்றோற்றினதிம்மங்கையினூற்றொல்லைமெத்த
பூதலமன்னனுக்குறுநம்போல்வார்க்கிவ்வூரிருப்புப்பொருந்தாதம்மா. (௩௦)

இந்திரனுந்தருநிழற்கீழிருத்தினன்மான்மார்பகத்திலேற்றுவைத்
லந்தணன்வைத்தான்சிவனுமங்கத்தைப்பங்காக்கியளித்தானிந்தச்
சுந்தரியைநம்பெரியதோன்றலெந்தவாறமைத்துத்துய்ப்பானென்பா
ரந்தரங்கந்துற்சனனுக்கல்லாமலெவர்க்குவெளியாகுமென்பார். (௩௧)

வாவியினுட்புகுந்திருந்தமடமயிலையொருமூன்றுவைகலுற்றுக்
காவலவன்றனைஞலேயானமட்டுஞ்செய்துபலன்கைக்கெட்டாமற்
சேவலமுற்றானிந்தக்குடிகேடியெவ்வாறுகிடைத்துவந்தா
டேவர்மனைவியரெனினுங்கொணர்வாண்மங்கையர்க்கிவளோர்தீப்பூடம்மா.

மாநகரமுழுவதுமிவ்வாறியம்பநகரைவலமாகவந்து
மேனகைக்குநலனுதவுபூலோகவரம்பைதனைமிளிர்செம்பொன்னுற்
றானமைத்தமண்டபத்தினிடைசேர்த்தாரதுவறிந்துதமர்போல்வாரை
யானவட்குக்கடிபுரிந்தேவற்பணிக்குவேறுசிலவாயமீயா. (௩௩)

வந்தவர்க்கெல்லாங்கனகமழைமேகமெனப்பொழிந்துமாதைத்தேடித்
தந்தவட்குங்கரிபரிதேர்சிவிகைகொடைபொன்றுகில்பூண்டந்தேயம்மா
விந்தநலத்திற்பாதியுனதென்றனவளுமகிழ்ந்திறைவாமவன்றன்
மைந்தன்வருமளவுநனதென்றுதவும்வரிசையொடுமனையிற்புக்காள். (௩௪)

ஆதவனிங்கிதுகாணற்காற்றான்போன்மேற்றிசைசென்றடையவேந்தன்
பாதகமும்மறையவள்செய்பாதகமுமெனக்கருகிப்பாந்தகுங்குற
பூதலமெலாமவிழுங்கத்திசைமறைத்துக்காமிகள்வெம்போர்மேற்காமன்
மோதவிடுத்தேவியமும்மதநால்வாய்க்களிறெனவேமொய்த்தவன்றே. (௩௫)

ஆகாயமும்புவியுந்திசையுமிருள்வலைவீசியதனிற்றப்பிப்
போகாமற்காமுகராம்புட்படுக்குமதவேடன்புறப்பட்டானென்
றோகாகளக்குயிலின்றொனிமுழங்கத்தென்றலிறையுருத்துப்பாய [ணி.
வாகார்மன்னறிந்தொருபூமடந்தைதுணைக்கொண்டுவெல்வான்மனத்திலுன்

கங்குறொலைத்தொருகோடிகதிர்பரப்பிவெயிலெறிந்துகடலிற்றோன்றுஞ்
செங்கதிரின்மணிமகுடந்திருத்திநுதல்வீரபட்டந்திகழத்தோளி
னங்கதங்கொண்டணிகவசம்பூணந்துகழல்கழற்கணிந்தங்கவிருஞ்சோதித்
திங்களிரண்டெனப்பசும்பொற்குண்டலங்களொளிவருடச்சேர்த்துப்பின்
[னும்.

வரையருவிமணிகொழித்துவார்ந்ததெனவுத்தரியம்வயங்கப்பூணாற்
கருமுகில்வாய்விண்டகொடிமின்னலெனத்துவளநறுங்களபமார்பின்
விரைதிசைகடொறுங்கமழக்குற்றுடைவாளொளிபுரண்டுவிசும்பிலேற
மருமலர்த்தாரசையமணிவடங்குலவத்தடங்கையின்வேல்வயங்கமன்னோ. ()

தவளமதிக்குடைககனந்தடவியிளநிலவெறியத்தயங்குஞ்செம்பொற்
கவரிபுடைகாலிரட்டவந்தியர்கட்டியங்கூறக்கணிதர்வாழ்த்தப்
பவளவலிக்கொடியிடையார்மணிவிளக்கம்பலகோடிபற்றிச்செல்லப்
புவிமகள்கால்வருடநறுங்குதலைமொழிமடவியர்கள்புறம்புசூழ. (௫௯)

சங்கேங்கமுழவதிரக்கற்பகக்காப்பசுந்தேறல்சாய்த்ததென்னச்
செங்கனிவாயரும்பமடவியர்பாடுஞ்சுருதிநயஞ்செவியிலேற
மங்குல்வாரவானடிக்குமயிலெனநின்றருநடனமாதராடக்
கங்குலிடைநிலவுவெயில்கலந்தெழுந்ததெனவெழுந்தான்காவல்வேந்தன். ()

அவ்வளவிலொருதூதிவிரைவினடந்திறைவன்வரவறையக்கேளாச்
செவ்விநிறையெழினிநடுவாகவிடுத்தப்புறத்திற்றிகழுஞ்சோதி
தவ்வுமணியாசனமொன்றமைத்தருத்துகவலைமனந்தாக்கத்தாங்கி
யொவ்விமகிழ்ந்தவள்போலவெதிர்தூதுபோகவிடுத்துறையுங்காலை. (௬௧)

மங்குறோய்ந்தெழில்பரவுமாடநிலைகடந்தெவர்க்கும்வருதிபோக்கி
நங்கையரிற்சிலருடனாய்நாற்புறனும்பணிமாறநடந்துவேந்த
னங்கவளாற்றிரைக்கிப்பாலமைத்தமணியாதனமேலமர்ந்துசோலை
தங்குபசுமழலைமொழிக்கிளிக்கமுதமூட்டுவர்போற்சாற்றுவானால். (௬௨)

இன்னமனதிரங்கலையோவிடங்கொடுக்கமுடியாவோவிருவர்க்கூடும்
மன்னுதிரைபுரிவித்துமறைவின்மொழிபேசாமன்மௌனமாகி
யன்னமேதனியிருந்தாலகன்றபொழுதிரவேயிவ்விரவல்லாம
லென்னபலன்கலகமிடுமோரனுக்கார்சமாதானமியம்பவல்லார். (௬௩)

வட்டமதிதருவதனத்திருநுதலாய்வின்மாரன்மலர்ப்பாணங்கட்
கிட்டகுறியெனப்பொலிந்தவ்வாளிபொதுளியகூடாமெனவென்னுள்ளந்
தட்டழிவுற்றணியூசலாடுவதையெடுத்துனக்குத்தமியனென்வாய்
விட்டுரைக்கமுடியாவேகட்டுதிரைநீக்கிலுண்மைவெளிச்சமாமே. (௬௪)

திருவதனமொவ்வாதசிறுமதிக்கென்பெருமதியைச்சிதறியுன்ற
னிருவிழியொவ்வாதகடற்கெனதுளத்தைத்துயர்க்கடல்வாயிடுகாட்டிப்
பொருவுகுரலாலகன்றபூங்குயிலுக்குருகியுடற்பொலிவுமாறிக்
கருகியபுல்லுருவாகிக்காலினுக்காருயிரினைக்கைகாட்டிநொந்தேன். (சகூ)

மாலையெனும்பெருங்கூற்றம்வரும்பொழுதெலாமுனதுமாலையன்றி
வேலையறியேன்வேலைத்திரைமுகட்டிறக்கதிர்பரப்பிவெய்யோனெய்துங்
காலையினுங்கனியிதழ்த்தேன்மாந்துவதெக்காலையெனக்கருதிச்சோர்வுற்
ருலைநெரிந்திடுகரும்பின்கோதுநிகர்த்துடறேய்ந்தென்னுவியோய்ந்தேன்.()

வண்டலம்புபூங்குழலாய்மானலம்புவரிவிழியாய்வாசத்தண்பூச்
செண்டலம்புகுடமுலையாய்சிலம்பலம்புசிற்றடியாய்சிறியேனுளை
கொண்டலம்புமதிமுகத்தாய்கொவ்வையலம்பியகனிவாய்க்கோதாய்நின்னைக்
கண்டலம்புமெனதுள்ளத்துயரலம்பநெடுத்தெவரேகழறுவாரால். (சஎ)

கனமொழித்தகருங்குழலாய்கனியொழித்தபனிமொழியாய்கயத்துணியு
முனமொழித்தாயன்றுமுதன்முழுதுமொழித்தேன்றுயிலைமுதிர்தீம்பாலி
னனமொழித்தேனுடுப்பதொழித்தணிவதொழித்துள்ளவெலாமகலத்தள்
ளி, யினமொழிக்காதுயிரிருந்தேனினைக்காணுமாசையெனுமேக்கத்தாலே.

இந்திரனில்வாழ்வுகண்டேனுரகனுக்குங்கலைதெரித்தேனெயிற்றுப்பேழ்வா-
யந்தகனிலாணைதந்தேனருந்தவங்கள்பலகிடந்தேனலர்பூவாளி
சிந்துமுருவிலிவலிக்கென்னுயிரழிந்துபுவியினிடைதீராவண்ண
மிந்தவரஞ்சுரந்தெனதுகுடிபுரப்பதறமாமென்றிறைஞ்சிச்சொன்னான். ()

வேறு.

பொல்லாதவனங்குபுகன்றமொழி
நல்லாள்செவியேறுதலுநகையா
வல்லானிவன்மையலைமாற்றுவதெச்
சொல்லாலெனவுள்கிமனந்துடியா. (ரு௦)

ஓமாக்கினியிற்பெரிதுற்றிடுவெங்
காமாக்கினியிற்றளர்காவலனை
யேமாக்கநயந்துளவின்சொலினூற்
போமாக்கமியற்றல்புணர்ப்பலெனா. (ருக)

காந்துந்தனதுள்ளமுறுங்கவலை
வேந்தன்னுணராமல்விலக்கியவன்
பாந்தம்பெரிதாகமுன்னாட்பழகும்
பூந்தண்குழன்மாதெனவேபுகல்வாள் (ருஉ)

அரசேயெனதுள்ளமறிந்துகொளா
துரைசெய்குவதென்னையுமைத்தவிர
விரைசெய்மணம்யார்க்கணிவித்திடவித
தரைவந்துபுகுந்ததுநான்றனியே. (ருங)

ஓயாதுநீரோதியவாய்மொழிபோ
னாயேன்மொழிசொற்றனலம்பெறுமோ
பேயேபெரிதாணுழைபேசவெனி
லாயாதொருநாணமமைந்துறுமால். (௫௪)

நின்றேயமுநின்குலமும்பெயரு
மென்றாதைதன்மாசமுகந்தனிலே
சென்றேவருமாதவர்செப்புதல்கேட்
டன்றேமயல்கொண்டதறிந்திலைநீ. (௫௫)

நென்னற்பொழுதென்னுருவங்கணிறைத்
தின்னற்படுகின்றமையென்னையுமை
முன்னைத்தெரிவுற்றுமுதிர்ந்தமையா
லென்னைத்தெறுமென்பதியம்புவதோ. (௫௬)

நந்தாதொருகூபநறும்புனலை
வந்தோடியவெள்ளம்வலிந்துறுமோ
சிந்தாகுலநீக்குதல்சிந்தைசெய்வாய்
சந்தார்மணமாலைதரிக்குவனால். (௫௭)

மன்னாவுனைநான்மணமேபுரியிற்
றன்னான்மதிமூன்றுதணப்பளவும்
முன்னான்மறைநோன்புமுடிக்குவலென்
றன்னாளொருவாய்மையமைத்துளனால். (௫௮)

நானெண்ணியவெண்ணநலம்பெறவே
வானெண்ணியதேவும்வழங்கினவான்
மீனெண்ணியகண்ணியர்வேளனையாய்
கானெண்ணுதனீகருதாதொழிக. (௫௯)

முற்சொல்லியநோன்புமுடித்தொருநா
ணிற்சொல்லியநேயம்விளைப்பனெனல்
பிற்சொல்லுவதின்றுபிதற்றுதலா
னற்சொல்லலவென்பரெனாளுநலோர். (௬௦)

எலியென்பவையிற்பெருமாவெலிதான்
வலிகொண்டுசெய்மாதவமண்டினதா
லொலிதண்கடனீளுலகத்தரசாய்
நலிவன்றியிருந்தமைநாமறியேம். (௬௧)

மிருகண்டர்மகற்குவிளம்பகவை
சரிகண்டனுரைத்தல்கடத்தியநாள்
வருகண்டமிதென்றெமன்மாவலிபோய்ப்
பெருதண்டம்வியந்தமைபேசுவதோ. (௬௨)

வேறு.

பருவநேர்ந்தரியவானம்பொழிவதும்பருதிப்புத்தே
ளிருளெரிப்பதுவுமேரியாறுநீரெஞ்சலின்றிப்
பெருகுகிற்பதுவுநன்மைபேணியபெரியோருள்ள
மருள்சுரப்பதுவுங்கைம்மாறெண்ணியோவியற்கையாலோ. (சூங)

ஆதரம்புரியுமாண்பாலவரினுமரியகாதன்
மாதருங்கொள்வாரென்றவாய்மைநான்வாயாவெள்கா
லோதவுந்தகுமோவேந்தேயுனதுளங்கருணைகொண்டு
பேதையேற்கருள்செய்தென்றும்பெரும்புகழ்பெறுவாயின்றே. (சூச)

அம்பிகைவளர்த்தவெண்ணுன்கறத்தினுள்விரதபங்க
மிம்பரிலெவர்செய்தாலுமிழிமலனுகர்ச்சிமாறு
வெம்புபுன்புழுவாய்ப்புள்ளாய்மிருகமாய்ப்பிறப்புற்றம்மா
கும்பியில்வருந்தியெந்தநாளினுநலங்கொள்ளாவால். (சூரு)

அடிமையாலுமதுநேயம்விளைப்பதற்கானநோன்பு
முடியுமுனதற்குப்பங்கமுறுவதோர்முறைமைநேரிற்
படியின்மேலெவரென்றாலும்பழியவர்தலைமேற்போட்டுக்
கொடியதீக்குழியிற்பாய்வலென்பதோருண்மைகொண்டேன். (சூசூ)

கல்வியுங்குணமுந்தேசுங்கருணையும்வரையாநீண்ட
வில்வரையகலத்திண்டோள்விரல்கெழும்வேந்தாலீங்கு
புல்லியநான்சொல்வாய்மைப்பொருள்குறித்தவையின்றாற்றற்
கொல்லையினிதியந்தானமுழையர்களுதவல்செய்வாய். (சூஎ)

உன்மனக்கருத்துங்கண்டேனுனதுமேற்றீராமைய
லென்மனக்கருத்துஞ்சொன்னேனினிதற்குமேலெதுசெய்தாலு
நன்மனங்கொள்வேனென்றாரிசொல்விநயந்தேராத்
தன்மனத்துள்ளதென்றுநினைந்தனன்றவம்போய்த்தாழ்வான். (சூஅ)

கரைபுரண்டெழுந்தவெள்ளங்கண்டபின்கரைகொண்டாற்றி
வரைசெயவொடுங்கிச்செல்லுமாறுபோல்வரைசெய்திண்டோ
ளரசுளமடங்காதோங்கியார்த்தெழுங்காதனீத்தந்
தெரிவைசொல்லணைக்குளாகிப்புறங்கடந்தேகல்செல்லா. (சூகூ)

பெருகுநீர்வெள்ளமுந்திப்பிறந்துளவேகமாறி
வரவரக்குறைந்துமுற்றும்வற்றியவாறுபோலக்
காவழித்தெழுந்துநெஞ்சிற்கதித்துளகாதல்வெள்ள
மரிவைகற்பனற்பட்டுள்ளேசுவரினவரசற்கன்றே. (எ0)

மங்கைநல்லறமேயந்தமன்னனுக்குண்மையான
சங்கையைத்தேற்றத்தேறித்தன்னுளமகிழ்ந்துமுற்று
நங்கைசொனம்பிநோன்புநடாத்துதற்கமைச்சனாலே
பங்கமில்லாதுசெய்யவிளித்துரைபணித்துப்போனான். (எக)

தெய்வதந்தொழுதன் மாற்றிக்கணவனைத்தொழுதல்செய்து
கைதவமகற்றிக்கற்பினெறிநின்றுபகாரபுகாக்கும்
பெய்வளையவர்களாற்பெய்யெனப்பெய்யும்பெருவானென்னிற்
பொய்கொலைகளவுகட்காமங்களிங்கவர்ப்போற்றுவோ. (எஉ)

மன்னவனுரைத்தவாறேமந்திரிதொழில்செய்வோரா
லன்னவண்மனமுமின்னதென்னவேயறிந்துகொண்டு
பின்னதற்கானவெல்லாம்பெறுவதற்குரிமையான
பொன்னறைமுழுதுமாதுதன்வயம்புகுத்திப்போனான். (எங)

பெண்ணழைத்தபடலம்.

முற்றிற்று.

ஆகப்படலம்-உச-க்குதிருவிருத்தம்-கஉ0உ.

பூலோகரம்பைபூசாவிதிப்படலம்.

கருக்குமைக்குழற்கன்னியர்மையாலாற்கலங்குந்
திருக்கறுத்துநற்கதிபெறவேண்டிலோர்தெய்வ
மிருக்குமென்பதைமறந்துசொக்கீசனையென்று
முருக்குமுற்றடிபோற்றுவீர்மெய்ப்பதமுறவே. (க)

வேறு.

மாதுபொன்னறைகைக்கொண்டுமன்னனுற்றனக்குத்தந்த
தாதியர்வேலைக்காரர்தங்களைக்கூவிநீவீர்
வீதிநான்குளதாயுள்ளவெளியினில்வேள்விச்சாலை
சாதுகட்கினிமையாயதண்ணமுதூட்டுஞ்சாலை. (உ)

நீர்த்துறைவாவிதண்ணீர்ப்பந்தற்கணிறைபல்பண்டஞ்
சேர்த்துறுமரங்குபூரிசெயத்தகுமிடமங்காடி
மூர்த்திகள்கோவின்மற்றோர்முறைதரவிருக்குந்தானம்
பார்த்துறவழகாயோலைகழியினுற்படைமினென்றாள். (ங)

எப்பெரும்வழிச்செல்வோருமாங்குவந்திருத்தற்கேற்ற
துப்புறவானதானந்துருவினீள்வேலிசூழ்வித்
தப்பெருமிடத்திற்கோவிலரண்மனையாகசாலை
செப்பருமணநீர்ச்சாலைதெருக்கணுற்சந்திமற்றும். (ச)

ஒல்லையிலியற்றிவந்தாங்குரைசெய்தாரதனைக்கேளா
வல்லியும்விரைவினெய்திமலர்க்கண்ணானோக்கிநோக்கி
யெல்லையிலாதவின்பமெய்தியாங்கவர்கட்கெல்லா
நல்லணிகன்றுசெம்பொன்கைமணித்தூசுநல்கா. (ரு)

வானமுதனையமூரற்பருப்புநெய்வடைபாயசந்
தேனறுங்கருணைதீம்பால்செழுங்கனிமுதற்சிற்றுண்டி
யானவையெல்லாமோயாதிரவுநண்பகலுமாக
மேனனிகளிப்புக்கொண்டிங்கடுதொழில்வினைசெய்வித்தே. (௬)

வருபவர்க்கெல்லாமன்புற்றுதவிப்பின்மருவுநட்பா
ரிருவரிலொருவர்தம்மியிதிற்பிரிந்தவருண்டோவென்
றருமைகொண்டுரைத்துநங்களுரைக்கெதிர்யாவரேனுந்
தருவரேலவரையென்பாற்றருகுவீரென்னச்சாற்றி. (௭)

தன்பெருங்கணவன்மீண்டாருயிர்பெறச்சமைக்கும்விஞ்சை
யன்பனென்பாலினெய்தற்கானருளன்றிவாயா
தென்பனவுன்னிமின்னாளென்பரவாரம்பூண்ட
நூன்பனைமுறையாற்பூசித்தருள்பெறுமுயற்சிகொண்டாள். (௮)

ஆயதோராளவையின்கணருமறைமுழுதுமோர்ந்த
தூயமாமுனிவர்சூழத்தொன்முனிமரீசியாங்கு
மேயவான்கடவுட்கங்கையாடுவான்மேவலோடும்
நாயகியெதிர்கொண்டேற்றுவரன்முறைக்கடன்கணல்கா. (௯)

மாதவம்பழுத்ததன்னமாமுனியரசேநீரு
மேதொருநலனுமில்லாவெளியைநாணிருக்குமிந்தப்
பாதையிற்படர்தற்கென்னபழந்தவம்பயின்றேனென்றுந்
தீதெலாம்வினையமாகச்செப்பினாண்முனிவன்றேர்ந்தே. (௧௦)

மும்மையுமொருமையாயிங்கிம்மையின்முடிக்கவல்ல
செம்மையோரெனினும்பண்டூழ்வினைத்திறந்திறம்பற்போமோ
வம்மைநீவருந்தல்வல்லையானருளளிப்பானென்றே
கொம்மைவெம்முலையினாளுக்கீதையுங்கூறுவானால். (௧௧)

சந்திரமதிபாஞ்சாலிதமையந்திசனகியாதி
முந்தியவிறைவர்தங்கண்மொய்குழலவர்கள்கோடி
தந்தமதூழாற்பட்டசளக்கெடுத்தியம்பயாவ
ரிந்தமாநிலத்திலுள்ளாரென்பதுமுணர்வாய்நீயே. (௧௨)

வேள்வியொன்றியற்றற்கெண்ணிவேலைசூழ்ஞாலந்தன்னை
யாளுமன்னவரினான்சென்றேறுதுமுன்னன்பினோடுந்
தாள்பணிந்ததற்குவேண்டுந்தனமுதற்பிறவுந்தந்தான்
நீள்விழியணங்கேநின்றன்றாதையாம்நிருபர்கோமான். (௧௩)

அங்கவன்மகணீயாதலாலவன்றவமுநின்றன்
பங்கமில்கற்பும்வாளாநீங்குமோபயன்படாமற்
செங்கையின்மழுமானேந்துஞ்சிவன்றிருவருளால்வல்லை
மங்கையித்துன்பம்வானத்திரவிமுன்பனிபோன்மாயும். (௧௪)

நன்றறிபவர்கடென்பநண்ணிநிற்பதுவும்பொல்லாப்
புன்னெறியிலவர்களின்பம்பொருந்திநிற்பதுவும்மேலை
யொன்றுமூழ்வினையினல்வந்துறினுமோர்தொடர்பாய்க்கூடி
நின்றிடாதென்னும்வாய்மைவேதத்தினின்றதன்றே. (கரு)

வருந்துதனீக்கியீசன்மலர்ப்பதமனத்துட்பாவித்
திருந்துமாதவநீநோற்கிலிடர்தவிர்ந்தின்பமெல்லாம்
பொருந்துவாயென்னச்சொன்னான்புனிதையம்முனிவற்போற்றி
யருந்தவம்புரியுமார்க்கமியாதெனவறைவதானான். (கசு)

ஈசனைப்பணிதற்குள்ளமெண்ணுவார்முதலிலீசன்
றேசுருவானவெண்ணீற்றியல்பினைத்தேர்ந்துகொண்டிங்
காசறவெவ்வேறாயபொருள்களுமமைத்துளன்பாய்ப்
பூசனைபுரிவாரந்தநெறிமுறைபுகலக்கேண்மோ. (கஎ)

பூதிசாதனமல்லாமற்புகலுதற்குலகில்வேறு
சாதனமில்லையென்றுசவுனகாதிகளுக்கீச
னோதியமுறைமையீதாமென்றுமுன்னெழுதியோதா
வேதமும்பினுமற்றுள்ளநூல்களும்விளம்பிற்றம்மா. (கஅ)

சிவனுருவாகுநீறுதிருவிழியாகுமக்க
மவனிறமாகுங்காவித்துகிலிவையங்கங்கொண்டிங்
கெவனெவளெதனையுள்ளத்தெண்ணிமெய்யன்பினோடுந்
தவங்கணிந்தியற்றுவாரேலப்பயன்றன்னைச்சார்வார். (ககூ)

நீறமைப்பதற்குப்பேறுமூன்றதாநிகழ்த்துங்காலை
யூறமையாதகர்ப்பமனுகர்ப்பமுபகர்ப்பங்கள்
வேறுவேறாகத்தூயமறைகளாகமங்கள்விள்ளும்
மாறிலாவதனிற்கர்ப்பஞ்செயுமுறைவழுத்தக்கேண்மின். (உ0)

காதிழந்ததுவுமீனாக்கன்னியுமலடுங்கன்றும்
வாதைகொள்வதுவுங்கூலமில்லதுமடிகன்றாவுங்
கோதுறுமலங்கடின்றுதிரிவதுங்கொம்பிலானு
மேதைதீர்ந்தறவுமேனிமெலிந்ததுமானபத்தும். (உக)

உடலிடைக்குற்றமாமென்றுணர்த்துவதகற்றிநல்ல
நடையதாய்நாளும்பார்வைக்கினியதாய்நறியமேனி
யுடையதாய்நிறங்கொள்காந்தியுள்ளதாய்க்குறுகுரோம
மிடைவதாய்நிறைந்தவான்கள்விளங்குபைங்குனிமாதத்தில். (உஉ)

தண்பணைச்சாலித்தாண்மேய்ந்தம்புயத்தடநீருண்டு
நண்பினிலூரியதேவாலயங்களின்வாயினண்ணி
வஃபிடர்குடங்கிற்கூலங்குணக்கினில்வதிதனோக்கி
ழண்படாவாகவீழ்கோமயத்தினைமனுவாயோதி (உங)

தடக்கையாலிலங்குபொற்றாமரையிலைதன்னிற்றாங்கித்
தொடக்குறுவழும்புநீக்கித்தூயதானத்திலீசற்
றெடுத்தவைம்முகத்தில்வாமஞ்செறித்துநற்றூபதீபங்
கொடுத்துக்கோசலத்தின்மட்டித்துறும்புருடத்திற்கூட்டி. (௨௪)

உண்டைசெய்துலர்ந்தபின்னருவாக்களட்டமியிலோம
குண்டமிட்டதைப்பூசித்துக்குறுங்கனற்பதடிகொட்டி
விண்டநாண்மூன்றுசென்றீசானத்திலெடுத்துவெண்மை
கொண்டகோசிகத்திற்கொட்டிவடித்தவைபாண்டங்கொண்டே. (௨௫)

அள்ளியேவாயிற்பட்டிட்டடைத்துநற்றரையில்வைத்தே
யெள்ளில்வெண்முல்லைவில்வமிலங்குபூமலராலர்ச்சித்
துள்ளுசங்கற்பங்கூறிமண்டலமுருக்கொண்டேற்றிக்
கொள்ளுநீறதனைக்கர்ப்பமென்னநான்மறைகள்கூறும். (௨௬)

அன்றைக்கன்றெடுத்தேயிந்தமுறைப்படியமைத்தநீறு
நன்றதுவாகுஞ்சொன்னவனுகர்ப்பநவிற்றல்கேண்மின்
றுன்றுசித்திரைக்காலின்முட்டையைக்கொணர்ந்துதூள்செய்
தொன்றுகோசலம்பெய்தந்தப்படிகொள்வாருணர்ந்தமேலோர். (௨௭)

வன்னிபட்டுலர்ந்தகானின்மருவுநீறள்ளிமுன்னஞ்
சொன்னவானைந்தாற்சேர்த்துக்கனலிடைச்சொரிந்துதூய்மை
மன்னுவதுபகர்ப்பத்தின்வாம்புகாண்வழுத்துங்காலைப்
பின்னியநிறங்கள்வெவ்வேறுள்ளதுபேசக்கேண்மின். (௨௮)

பொன்னிறமிலம்பாடெய்க்கும்பொலிமரகதநோயாற்றி
மன்னுயிரழிக்குஞ்செந்தீமாட்சிமைவடிவைமாய்க்கு
மின்னிறங்கழிந்துவானின்மதிநிறமெய்துமாகி
லன்னதேயாயுள்செல்வமரனருளளிக்குமன்றே. (௨௯)

இதுவறிந்தியற்றல்செய்தற்கறிவிலாரெனினுமீசன்
பதநினைந்துமிநீறள்ளிப்பூசினும்பவந்தீர்ந்தென்றுஞ்
சதுருகமுகமாய்ச்சொற்கஞ்சார்ந்துமூவார்களென்னி
லதுவலான்மாற்றிவேறென்னேற்றமிங்கறைவனம்மா. (௩0)

மானுரியுழுவைமென்றோல்வயங்குகோசிகங்கூறாற்றித்
தானளவாகுமீராறங்குலநீளந்தன்னிற்
பானுவின்வட்டமாயெட்டங்குலமகன்றபைக்குண்
மேன்மைகொணீறுபூரித்தணிவதுவிதியாமன்றே. (௩௧)

அணிபவர்நதிபூவோடையம்புயத்தடங்கண்ஞாங்கர்
திணிபொருமடங்களாவின்கொட்டங்கடிகழ்பைஞ்சோலை
மணிநிறைகோவிற்பூசைக்கமைத்தமண்டபங்கண்மேலார்
பணையுடையரசுபுற்பார்பழுமரமறையோரில்லம். (௩௨)

உத்தமமாகுந்துய்யோருறைவிடங்கூபங்கால்வாய்
சுத்தமாம்பொட்டல்குட்டமூற்றுநீர்தொகுத்தவீது
மத்திமங்தெருக்கள்சந்தியசத்தியர்மனைமற்றுள்ள
வத்தனையிடமுங்கூடாவதமமென்றருநூல்சாற்றும். (௩௩)

உத்தமதானஞ்சாயுச்சியபதந்தன்னையுய்க்கு
மத்திமதானஞ்சாரூபத்தினைமருவவைக்கும்
மித்தைகொளதமத்தாருக்கிதுபுரியாதுவீணும்
பித்தர்கள்பதமுங்கிட்டாதெனிலவர்பெறும்பேறென்னே. (௩௪)

வாமத்திலிருந்துமத்திமையனாமிகையாலீர்த்து
நேமத்தங்குட்டையாலேவலப்புறநின்றுநேரி
லாமத்தினெதிரிலீர்த்துப்புனைகுதலங்கமாமென்
றாமத்தஞ்சூடிமேனாளுமையினுக்குரைத்தவீதால். (௩௫)

முற்சொன்னமுறைமையன்றியினுமொருமுறைமைகொண்டு
தற்சனிமத்திமையனாமிகைதனையுங்கூட்டிக்
கற்றவராதிகல்லார்முழுவதுங்காலந்தோறு
நெற்றிநீறிடுவாரந்தநெறியுநன்னெறியேயம்மா. (௩௬)

அங்குட்டங்கனிட்டைநீக்கியணிவிரன்மூன்றதானும்
பங்கிட்டவுறுப்பிலுச்சிநுதலுரமுந்திபக்கந்
தங்குதோண்முழங்கைமுன்கைதகுமணிமுழந்தாள்கேள்வி
பொங்கியவெரிந்பொற்கண்டம்புகல்பதினாறுதானம். (௩௭)

பொலிநுதன்மார்புதிண்டோள்புண்ணியத்திருநீறள்ளி
மலிவிரலளவாறிட்டுவனைதன்மற்றவைகட்கொன்று
மொலிநிறைகன்னமுச்சிபரிசித்தலொன்றேபோதும்
வலிபெறச்சதுக்கம்வட்டம்பொட்டிடன்மாசுதானே. (௩௮)

மங்குதல்வன்மைமத்திமறைபடல்விலகல்கோணல்
பங்கமாயொன்றொடொன்றுபொருந்துதல்பாரிலாறுந்
தங்கியகுற்றமாகுந்தலைநுதலகலமுந்தி
செங்கையாற்றரிப்பார்நல்லீசானமந்திரமேசெப்பி. (௩௯)

தலைநுதலகலமுந்திதவிரமற்றவைகட்கெல்லா
மலகிறற்புருடம்வாமமகோரநற்சாதமாண்பென்
றுலகினிற்பெருநூற்கொள்ளையோதினததுவுமன்றிச்
சிலைநுதலணங்கேநான்குவேதமுஞ்செப்பிற்றன்றே. (௪௰)

பொருவியசந்திமூன்றுங்கனற்கையார்புனலினோடு
மருவுதல்செய்வார்மத்தியானமேல்வனைவரவ்வா
றுரியநாட்பகன்முன்பின்னிலுற்றநீர்மாற்றித்துய்ய
வரிவையரோடுமாருவிரதருமணிவாரம்மா. (௪௧)

ஆயநான்மறையோராதிமுனிவர்க்குமரியவீசன்
நேயமுற்றவர்க்குங்கற்பநெறிமுறைமற்றிரண்டி
லாயதீக்கையினோர்க்கொன்றுமலாதவர்க்கொன்றுமாசு
தூயநான்மறையாறங்கநூல்களுந்தொடர்ந்துசொல்லும். (௪௨)

மறையவர்வனைவர்பாதம்வரையிலுத்தூளஞ்செங்கோ
லிறைஞவருந்திமேலிட்டேற்றவர்வணிகரானோர்
குறைபடாப்பட்டம்போலுமணிவர்சூத்திரர்குன்றாத
பிறையெனவிரலான்மூன்றுகீற்றணிபிறங்கச்செய்வார். (௪௩)

இம்முறைதெரிந்தும்வாளாவிகழ்ந்துகைதீண்டாதுற்ற
வெம்மையர்விலங்காய்ப்புள்ளாய்ப்புளிஞராய்மெலிந்துவெந்தீச்
சும்மைவானரகில்வீழ்ந்துதொலைவாற்றுறைதேராதா
ரம்மைபாகனையேபோற்றிப்புனைவரேலருள்கொண்டுய்வார். (௪௪)

மந்திரம்வணக்கநோன்புமாதவம்வேள்வியாதி
வந்துளவினைகட்கெல்லாங்கற்பமேவரம்பாமென்ன
முந்துநான்மறைகள்சொன்னமுறைமையீதாகுமிந்தச்
சுந்தரத்திருநீறன்றித்தொழிலொன்றுந்தொடங்கார்தூயோர். (௪௫)

ஈசனல்லுருவத்துட்பூத்தெழுந்தநீறிதனைமுன்னை
வாசவனாதிவானோர்வனைந்தனரவ்வானோரு
மாசறவானகட்கோரோரவயவமாகியெனறுந்
தேசுறவிருத்தலாலவ்வான்களேதெய்வமாமால். (௪௬)

இங்கதின்மயத்தைமேற்சொல்விதிப்படியியற்றுநீறுந்
தங்குவைதீகஞ்சைவஞ்சாற்றுவைதீகந்தனனிற்
பங்கிரண்டுளதுசைவத்துள்ளதுபங்குமூன்று
மங்கதுவாகுநகற்பமனுகற்பமுபகற்பங்கள். (௪௭)

வேதனாரதன்மார்க்கண்டன்விராடனத்திரிவசிட்டன்
சீதமெனமுகத்தாள்சாவித்திரிசீமந்தனிமற்றுள்ளா
ராதியினோற்றுப்பெற்றபேறும்பின்னவர்கணோற்ற
காதையுமுனக்குத்தோன்றவுளதுகொல்கழறுதற்கே. (௪௮)

நின்றதோர்கற்பமாதிநெறிநடந்திதற்குமுன்னம்
நன்றடைந்தவர்கள்கோடிநானறிந்தளவிற்கொஞ்ச
மின்றுனக்குரைப்பக்கேண்மோவெறிதிரைக்கடல்சூழ்வைப்பி
லொன்றியெவ்வளமுந்தாங்குமுத்தரத்திசைக்கணமமா. (௪௯)

வேறு.

மருவுந்துளவத்தாரணிந்ததிருமான்மணிப்பொன்மலர்க்கழலைப்
பரவும்பூசைநனிதியற்றித்திரிவான்போலும்பலதெய்வம்
விரவிப்பழிப்பான்பழிக்குலவாமகராலயம்போல்வெறிதுடையா
னொருவனகாசிப்புறக்கணுளானிரங்காவரங்கப்பெயருடையான். (௫௰)

கையிற்பொருளைநான்றறினுங்கொடுகொளொருவர்கைப்பொருளை
நொய்திற்கவரும்பாதாளகரண்டிவிரகநோய்பிணிக்கத்
தையலொருவேசையினிருகண்வலையிற்சாம்பித்தனமனைத்து
மையோகொடுத்தானவடனத்தாற்பின்னுந்தனத்துக்கலைவானால்.(௫௧)

காட்டேதுறுவான்கொலைபுரிவான்கரவுபயில்வான்பொய்க்கரிக்குக்
கோட்டேபுகுவான்பொருளெனிலோகுறியான்மானநவைகுறியா
னூட்டேதிரிவானவன்குலத்தோர்நல்லோர்வல்லோரெல்லோரு
மாட்டேகரமேகெடுபூட்டேயெனச்சொல்வசையுமகிழ்ந்தேற்பான். (௫௨)

இச்சையடைந்துமூரூராயெய்திப்பொருள்கைக்கிலனாகிப்
பிச்சையெடுத்துநாட்கழிப்பான்பினுமங்கதுவுங்கிடையானா
யச்சமுறுத்தவேசைமயலதன்மேலுறுத்தவரும்பிணிநோய்
மிச்சமுறுத்தநடைதளர்வுற்றரவைப்பிணம்போல்வெளிகிடந்தான் ( )

அங்கணடைந்தருமலிகுப்பைச்சாம்பரணிகாலுறலூன்றித்
தங்குமவன்றனாபியுரநுதலின்மிதித்துத்தணந்தேக
விங்குகிடந்தானுயிரிழப்பவதனைக்கவர்வானிருட்படல்போற்
பொங்குநிறங்கட்டழற்சண்டனொற்றர்புகுந்தார்பொருக்கெனவே.(௫௪)

ஆழிவலவன்கணத்தவருமடைந்தாரீசனடிபரவும்
வேழமனையகணத்தவரும்வந்தார்வாதம்விளைத்திகலிச்
சூழுஞ்செருச்செய்தெமன்கணத்தின்றலைவர்தமையுந்துளவனடி
வாழுங்கணத்தின்றலைவரையும்வாட்டிக்கயிலைவாழ்கணங்கள். (௫௫)

பொன்றிக்கிடந்தானுயிரைமணிவிமானத்தலையினிடைபொருத்தி
நன்றிக்கைலைவருமவரைப்பின்னுந்தடுத்துநான்மறையோன்
றன்றிக்கடைந்துகூறுதலுமவனுமங்குதான்புகுந்து
வென்றித்தலைவர்மூவரையுங்கேட்பவெமன்றூதரும்விரிப்பார். (௫௬)

ஐயாவிவனுமறக்கொடியன்றேவைக்கோவையந்தணரை
வையாநின்றுமீனரில்மருவாநின்றுமறைமறந்தும்
வெய்தாயுறைந்தானெமதிறைவனதற்குத்தண்டம்விதிக்கவெணி
நொய்திற்செலுத்தப்புகுந்தனமாலெனமாலவன்பாலவர்நுவல்வார். ( )

தேவேயெமதுதிருமாலுக்காழ்வாரிவர்த்திருத்துளவக்
கோவைக்குறித்துக்கெடாதவட்டாட்சாத்தைக்குறித்துக்கூறுமறைப்
பாவைக்குறித்துநிதம்பூசைப்பணியைவிலகாதியற்றிவந்தார்
மேவற்கரியவைகுந்தங்கொடுபோவற்கேமிடைந்தனமால். (௫௮)

என்றூர்பரமன்கணத்தலைவர்தமைநான்முகவனினிதிறைஞ்சித்
துன்றுமறைப்பண்ணிசைமொழியாற்றுதித்துக்கேட்பவவருமையா
வொன்றுமறியோமிழிகுலத்தோருயர்ந்தகுலத்தோரெவரேனும்
பொன்றுபொழுதினீறணிந்தாற்கைலைக்கிறைபாற்புகுத்திடுவோம். ( )

அதனாலிவன்றன்சடத்திலொருமூன்றுதானத்தணிபரமன்
பதனான்குகத்துந்தரற்குரியநீறுபதித்தான்பாருமென
விதநாய்மிதித்தபதத்தூளைக்காட்டவேதன்மிகமகிழ்ந்து
கதமாற்றுவதற்குளத்திலெண்ணிக்கனிவாயிதனைக்கழறுவனால். (௯௰)

உலகம்படைப்பேன்படைத்தளிப்பானொருமாலவன்முத்தொழிலோடி
கலகிற்றொழின்மற்றெத்தொழிலும்படைத்துக்காத்தேவழிக்கவல்லனங்
திலகனவனுமம்புகல்வோர்தெரிசித்தோரங்கவர்க்கண்டோ
ரில்குதிருநீறணிபவர்களிவர்கட்கிமவாதனையிலவாம். (௯௧)

ஆதலாலிங்கிவற்றடிப்பதழகன்றென்றேயயனுரைத்துப்
போதவிண்டுசண்டனுலகத்திற்றூதுவரும்புகுத
வேதங்கழிந்தும்புண்ணியனாய்மேவமறையோன்றனைப்பரமன்
பாதம்பரவவிரைவினுயிர்பற்றிப்போனார்பரிவாக. (௯௨)

வேறு.

நீற்றினுக்குள்ளபெருங்கழ்த்தினோர்மலன்கண்ணெனன்
றேற்றியவணிகொளக்கமணிகளினியல்புமுற்று
மேற்றுடையவனல்லாலெம்போலியாளவையெண்ணிச
சாற்றிடமுடியாவாமென்றுள்கினுஞ்சுருமத்தல்கேண்மின். (௯௩)

வேறு.

உச்சியிலொன்றுசிரத்தினற்பதுகாதொன்றினுக்காறும்பொற்களத்தி
னச்சுவதெண்ணான்குரத்தினூற்றெட்டுநாணிலந்தன்னிலுள்ளவர்க
ளிச்சைகூர்ந்தென்றுமுருத்திரனக்கமெழில்பெறத்தரிப்பரேலவரை
வச்சிராயுதன்மாலயன்முதல்வானோர்வணங்குவார்சிவமெனமதித்தே. (௯௪)

ஒருமுகமைந்துமுகம்பதினொன்றோடுயர்முகம்பத்துநான்கான
திருமுகமணிகொண்டணிபவருலகிற்றிருவெலாமொருங்குறத்துய்த்து
வருமுகந்தோறுந்தம்புகழ்மாயாதிருப்பர்காணமற்றினியெற்றோ
குருமுகங்களிற்சென்றறிகுவர்மனத்திற்குறித்ததுசெயத்துணிகுவம். ( )

ஒன்றினுக்கொன்றொன்றேறியமுகங்கொண்டொளிர்மணிக்குவைகளிலொ
ன்று, தன்றிருமெய்யிற்றரித்துநீர்குடைவார்தமக்குப்புண்ணியநதியெல்லாஞ்
சென்றுவந்தாடும்பலனெலாங்கிடைக்குந்தீநெறியணுகைபேய்பூத
மொன்றினும்வருந்தாரும்பருக்கரசாயுயர்பதமுறுதியிலுறுவார். (௯௬)

உருத்திராக்கப்பெருமையீதாகுமோங்குகாவியந்துகின்மகிமை
விரித்திடக்கேண்மின்காவியேவிமலன்மெய்ந்நிறமென்னநான்மறைக
ளுரைத்தனவதனைக்காணினுங்காணற்குளத்தினுன்னினைப்பினுமவர்கட்
கருத்திகொளதுவுங்கைவருமென்றலன்றிருவாணைநிச்சயமே. (௯௭)

நவைபடாநங்காயிம்முறைநீயுநற்றவநோற்கவென்றுரைத்தாங்
கிவைதிருநீறுகண்டிகைமுதன்மற்றிவைதுகில்வையெனச்சிறந்த
செவைபெறச்சிவசாதனமளித்துஞற்றத்திகழ்திருமந்திரம்புகன்றே
கவைதரும்விரதநோற்குமாறிதனைக்கழறுவான்றன்மனங்கனிந்தே. ()

சிவந்தனக்குரியவிரதமெட்டாகுந்திங்களாதிரைசிவனிசிமுன்
றவந்தரும்பரணோன்புமாமகேச்சுரங்கேதாரஞ்சூற்படைமதால்லைவிரத
முவந்துசெய்வதுவாமதுவெவாமொருங்கேயுதவுவதிங்கணோன்பந்த
நவந்தருநோன்புநோற்குநாளவதிநானறிந்துள்ளவாநவில்வேம். (௬௬)

வேறு.

முதற்பெருங்கடவுளீசன்மொய்குழற்சத்திமாருட்
பதப்பெருமுதல்விமுக்கட்பரையென்பவவர்கட்கான
விதப்பெருநோன்புகட்குட்டிங்கணோன்பென்பவெண்ணின்
மதப்பெருநூல்களாதிமறைகளும்வழுத்திற்றன்றே. (௭௦)

ஆதலான்மதிநாட்டொட்டுமுமமதியளவுங்கஞ்சப்
போதலர்வாவிவாசப்புனல்படிந்தரையிற்காவி
மேதகவுடுத்துநீறுமெய்யணிந்தக்கமாலை
கோதறவிதியிற்சொன்னவுருப்பெலாங்குலவப்பூண்டு. (௭௧)

மல்லிகைபிச்சிமுல்லைவனசமந்தாரைவில்வம்
வல்லனகொண்டுவேழமுகவனைமுதலிவாயாற்
சொல்லுசங்கற்பங்கூறித்துணையடிதொழுதுவேலன்
நல்லபொன்னடியையவ்வாறர்ச்சித்துநயந்துபோற்றி. (௭௨)

பாவனைக்குரியவீசன்படிவமுப்பதுகளஞ்சுக்
கேவளோவேனுமேற்பட்டிருக்கு [illegible]ம்வெள்ளிதங்க
மாவதுகொண்டிலிங்கமாவுடையடைவேயாற்றி
காவியங்க[illegible]ட்டியுருவுமவ்வாறுகண்டே. (௭௩)

கனியமுதைந்தானைந்துகரியமுதைந்துகூட்டி
யினியநீரிளநீர்க்குநீர்பனீரியல்பானன்னீர்
நனியுறுதயிலஞ்செந்தேன்சந்தனநலங்கொண்டாட்டித்
தனியவிர்பசுமபொற்பட்டுத்தரித்துவெண்ணீறுசாத்தி. (௭௪)

மணிமரகதம்வெண்முத்துவயிரந்துப்பவிருஞ்செம்பொற்
பணிபலகூட்டிப்பள்ளித்தாமம்பைந்தாமங்கோவை
யணிபெறமார்பிற்சூட்டியறுகெருக்கலர்பூந்தும்பை
திணிமுடியிலங்கச்சேர்த்தோராயிரம்பெயருஞ்செப்பி (௭௫

ஆயிரம்வில்வங்கொண்டேயருச்சனைபுரிந்தவ்வாறு
காய்பகலிரவுநீங்காமழலிருகாலந்தாழா
தேயவன்போடுபார்வீழ்ந்திறைஞ்சித்தன்குறைகண்முற்றும்
ஈயகதீர்க்கவென்னேக்கருள்கெனநவின்றுபின்னர். (௭௬)

ஒருபொழுதுண்டுமற்றைப்பொழுதெலாமுறக்கநீத்து
வருபொழுதானமூன்றுமதிவரையினுமேற்போர்க்குத்
திருநலங்கரிதேர்வாசிசிவிகைபொற்கவிகைசெம்பொ
னருமணிப்பணிதூசனனமளிப்பதும்விதியாமன்றே. (௭௭)

மூவெழுவிரதந்தன்னின்முதலுளவிரதமீதென்
றேவருந்தேவர்தாமுமறைகளுரிசைத்தபொல்லாப்
பாவர்களெனினுமின்னோன்யாற்றுவார்பக்கமோர்கான்
மேவுவார்பாதைதப்பியாயினும்வீடுகொண்பார். (௭௮)

ஒன்றுபாதலம்பார்வான்மூன்றுள்ளவரனந்தகோடி
நன்றுகொண்டாற்றிப்பெற்றபேற்றினைநவிற்றற்கார
தென்றுமாமுனிவன்கூறியுத்தரதிசைக்கணேக
யன்றுபோயயனேட்டிங்கணேற்பதற்கமைந்தாளம்மா. (௭௯)

பூசாவிதிப்படலம் முற்றிற்று.

ஆகப்படலம் ௨௫-க்குத்திருவிருத்தம்-௧௨௮௧.

பூலோகாம்பை பூசனைப்படலம்.

மும்மையுந்தருசெல்வமுழுவது
மிம்மையிற்றரவேண்டினர்க்கியவே
யம்மையோடுதென்கூடலமர்ந்தெளி
தெம்மையாண்டருளீசனையேற்றுவாம். (௧)

முனிவன்பூசைவிதிமுறைமுற்றினு
மினிதுகூறியகன்றபினீங்கிவள்
புனிதனேன்புபுரிவதற்கேயுளம்
கனிந்துகொண்டதன்மைநவிற்றுவாம். (௨)

வேறு

விடியமுன்னெழுந்துவாசமென்புனல்படிந்துகாவி
துடியிடைக்கணிந்துமெய்யிற்றுளவெண்ணீறுதேய்ந்து
முடியிருசெவிபொற்கண்டமுன்கரந்தோணீண்மார்பு
படிதரவக்கம்பூண்டுபேடார்சடைபரப்பியம்மா. (௩)

சிவனுதல்விழியிற்பட்டசிலைமதனுருவமீண்டாங்
கவனுழைவாங்கின்றவான் றிருமகளைப்போலுந்
தவவடிவணிந் தரித்தக்கடன்முறைசமைத்துப்பின்னர்
நவநவமாகவந்தோர் தமக்கெலாந்தான நல்கி. (ச)

பிறைநுதன் மடவாள்பெண்மைக்கேற்புறுபெருமைவாய்ந்து
நறைபடுதருக்கணுணை நவமணிவெறுக்கை தூசு
மறையவர்குருக்கள்வாணர்வறிஞர்மற்றிப்போர்க்கெல்லா
முறைமுறைவழங்கியீசன்பூசனைமுடிக்கநேர்வாள். (ரு)

பொன்னிறவீசனுதிதிருவுருமுழுதும்பூவை
யுன்னுமுனிருமித்தாங்குப்பிரதிட்டையனையாற்றிச்
சொன்னசிப்பிகட்கும்பூசைத்தொழில்புரிபவர்க்குஞ்செம்பொன்
றன்னுளப்படியேநல்கிப்பின்னிவைசமைக்கநேர்ந்தாள். (சு)

அமுதமோரைந்தானைந்தோடாரங்கெதங்கருந்தேன் பன்னீர்
கமழுநெய்நறுநீரின்னபூரணகலசமாட்டித்
தமனியத்தூசுசாத்தித்தனிமணிப்பணிகள்பூட்டிக்
குமிலவண்டிதழிவில்வங்கொய்யறுகலர்பூவேய்ந்தே. (எ)

தித்திப்புப்புளிப்புக்கைப்புத்துவர்ப்புக்காருவர்ப்புச்சேர்த்து
மத்தித்தவன்னமாதிநிவேதனம்வழங்கிப்பின்னு
நத்தித்தன்கையாற்றீபதூபமுநனிதுநல்கிச்
சித்தத்தினன்புகொள்சோடசவுபசாரஞ்செய்தே. (அ)

மறைகளாயிரஞ்சொன்னுமமுழுவதும்வாயாற்கூறிப்
பிறைகளார்கடுக்கைநாகம்பிறங்குசெஞ்சடியென்றுளி
னிறைமலரொன்றென்றாகவருச்சனைநிரப்பிமாது
முறைமைகொண்டினிதுபோற்றித்தன்குறைமொழிவாணின்றே. (க)

சோதியாய்மூலாதாரந்தொட்டுநீண்மேலாதா
மாதியாயனுதியாகியைம்பெரும்விரிவாய்த்தோன்றும்
பூதமாய்க்கலந்தவிச்சைப்பொருட்படத்தோற்றிநின்ற
நாதனேபோற்றிபோற்றிநண்பனேபோற்றிபோற்றி. (கO)

கற்றவர்வனைத்தாய்போற்றிகாமனைக்காய்ந்தாய்போற்றி
யுற்றநஞ்சயின்றாய்போற்றியுவாவுரிவுடையாய்போற்றி
புற்றரவணிந்தாய்போற்றிபுலிவளர்பதத்தாய்போற்றி
நற்றவர்க்கருள்வாய்போற்றிநன்மறைநாதாபோற்றி. (கக)

எங்குமாய்நிறைந்தானந்தவின்பமேவடிவாய்த்தோன்றி
யங்கங்கேயமர்ந்தாய்போற்றியடியருக்கா ... ருந்
தங்கியகருணைவள்ள ... னின்பெருந்தாளைச்சேர்ந்த
மங்கையென்மனுவேற்றுய்க்கவந்தருள்புரிவாய்போற்றி (கஉ)

எண்ணுறுபிறப்புக்கெல்லாமிழிந்ததாங்கீழ்க்கடையதான
பெண்ணுறுபிறப்பிலென்னைப்பிறப்பித்துப்பெறும்பேர்கொள்ளா
வண்ணநீபுரியநான்செய்வல்வினைப்பயன்றானென்னே
நண்ணியகுறைநோக்காத[illegible]நயந்துதவு[illegible]நா[illegible]ா. (௧௩)

முப்பாம்பொருளேயாதிமுதல்வனேயாப்தர்போற்று
மப்பனேயெளிமைவாய்ந்தவடிமைநான்புரிந்தகுற்ற
மெப்படிக்கிருந்தபோதுமீண்டருள்சுரந்திங்கின்றே
கைப்படுத்தென்னையாட்கொள்ளக்கருதுவாய்கருணைமூர்த்தி. (௧௪)

மனக்குறும்பகலாநீலிவஞ்சனைபுரியமாய்ந்த
வெனக்குறுமகிழ்நனைவியெய்யதுவென்மேனிமீதெங்
கனக்குறும்படிநான்வாழக்கருணைநீபுரியாயென்னி
லுனக்குமுன்பழிபோட்டாவித[illegible]ப்பலிதண்மையென்றே. (௧௫)

நனவினிலிடைவிடாதிவ்வ[illegible]றுவைநானின்றுபோற்றிக்
கனவினுமறவாட்[illegible]நோட்கநதலினகனவின்மெய்யிற்
புனைதிருநீறுங்காளகண்டமும்[illegible]முனைனாலும்
பனிமதிச்சடையும்பாந்த[illegible]ணிதருபடிவமோடு. (௧௬)

சங்கரனங்கைகண்முன்சார்ந்துநின்றணங்கேநீயும்
பங்கமுற்றழுங்கேனிற்காம்பயன்படுகருமமுற்று
மிங்குனதமைசசனெய்துவானையுமெய்யதுஞ்
செங்கதிர்ப்பனிபோன்மாய்ந்துதுன்பெல்லாஞ்சிதையுமாலோ. (௧௭)

என்றுவந்தருளித்தன்பாலடியருக்கெளியனான
மன்றுணின்றரு[illegible]கொள்வானவன்மறைதலோடுந்
தன்றுயினீங்கியின்ப[illegible]ழைந்துவகையாளாய்ச்செங்கை
யொன்றிடத்தலைமேற்கூப்பியிறைஞ்சியேயுருகாநோக்கி. (௧௮)

ஈரிருமறையோடாறுசாத்தி[illegible]ண்மை[illegible]ப்
பேர்பெறுபுராணமுப்பது[illegible]தம்பின்னுரு
சாறுபத்துநான்குசார்க[illegible]கியான[illegible]ாதி
நேருறுதொண்ணூற்[illegible]றுதத்துவ[illegible]முஞ்சூழ்ந்தே. (௧௯)

தருவியேதெரிய[illegible]ற்றுத்தங்களிற்[illegible]யாங்கூா
வருபெரு[illegible]ாயா[illegible]தமணி[illegible]ப[illegible]ஞ்சேதித்
திருவுருமை[illegible]னம்[illegible]யந்தசிறுசண்ணு[illegible]தோக்
கருணைதந்தகன்றுபோனகனிவுமென்கண்ணைதன்றே. (௨௦)

மலவலைவினையாற்சிக்கிவருந்துமாந்தயாம[illegible]ன
[illegible]க்குரியாதாரநாத[illegible]வாவென்றுபோற்றித[illegible]
தலைவிமைதவம்விடாமற்[illegible]க்துராஞ்சலிப்பொன்றின்றி
நிலமிசையிருந்தாண்ம[illegible]ண்டகணவன்மேனேயநீட்டி. (௨௧)

மடக்கொடிபுரியுஞ்சூட்சிமாதவவினைதேராம
லடிக்கடிவொற்றுள்விட்டுக்கேட்டுமேலடங்காவோகை
தொடுத்தநெஞ்சினனாய்மன்றல்சூட்டுநாடொருவிநோக்கி
யெடுத்தகைவிரல்கடேயவெண்ணிவீற்றிருந்தான்வேந்தன். (உஉ)

மங்கையுங்கணவற்காகமாதவம்வலித்தாள்வேந்த
னங்கவள்சொலுநாளெண்ணியணிவிரல்வலித்தான்முண்டை
யெங்கணுமகனைத்தேடவேவலாட்போக்கிச்சீமை
பங்கிடவலித்தநெஞ்சோடிருந்தனள்பாதைபார்த்தே. (உ௩)

பூலோகாம்பை பூசனைப்படலம்.

முற்றிற்று.

ஆகப்படலம்-உ௬-க்குத் திருவிருத்தம்-க௩0௪.

மந்திரியாத்திரைப்படலம்.

பாவனையைப்பாவனைதீர்ந்ததீதமான
    பழம்பொருளைப்பேசரியபான்மைக்கெட்டா
மேவியசற்காரியயூகத்திற்றோற்றும்
    விவேகநிறையானந்தவெள்ளந்தன்னை
மூவிதமாகியதலத்துந்தானேதானாய்
    முதிர்ந்துநின்றமுழுமுதலைமலத்தான்மூடுஞ்
சீவனுக்காதா முறுஞ்சாட்சியான
    சித்துருவைந்த்தியத்தைச்சிந்தைசெய்வாம். (க)

வேறு.

வாக்குமெய்மனதுமாறாமாதவம்வரித்துநின்ற
தாக்கணங்கனையாட்குற்றதன்மையீதரசைநீத்த
வேக்கரவாலூண்டுக்கமிழந்திருவிழிநீரோடக்
கூக்குரல்கொண்டுதேடுமமைச்சியல்கூறுகிற்பாம். (உ)

சடையும்வெண்ணீறுஞ்சங்கக்குழையுஞ்செங்காவிசாந்த
வுடையுமுந்நூலும்யோகத்தண்டுமானுரியுங்கையிற்
குடையுங்காவடியுந்தாங்கியுண்பலிக்கலனுங்கொண்டு
விடைவரும்பரமன்போலுமெய்த்திருவேடம்பொங்க. (௩)

இரவுநீள்பகலுந்தூக்கமிழந்துணவிழந்துவாயா
லரகர்சிவாவென்றேதுமொலியமுதாமென்றோர்ந்தோர்
விரிசெவிபருகத்தோய்ந்தமெய்யினீர்ழிகண்ணீரால்
கரையவுள்வருந்தியங்காதுரும்பினுமெலிந்துகாட்ட. (௪)

நாவுலர்ந்தங்கமெல்லாநடுங்கிநெட்டுயிர்ப்புவீங்கிப்
பூவுலர்ந்ததுபோனெஞ்சம்புலர்ந்திடப்புறம்பிறக்கண்ட
பாவையர்மைந்தர்வான்செல்பறவையூர்வனவிலங்கு
கேவலித்தழுதன்றன்றன்பினிற்பெருங்கேதங்கூர. (௫)

படுத்திடானிருக்கானில்லான்பல்பெருங்காதமெல்லாந்
தொடுத்தொருகாதமாகவனிலம்போற்றுருவிச்செல்வான்
றடுத்திடைக்கண்டுகேட்டோர்க்கரசொடுதான்வந்துற்ற
தெடுத்தெடுத்துரைத்துக்கண்ணீரிறைத்திறைத்தேக்கங்கொள்வான்.

அல்லும்வெம்பகலுமோயாதலைகடற்புடவிக்குள்ள
வெல்லைகண்முழுதும்போய்ப்போய்த்தேடுவானிதயத்தெண்ணிப்
புல்லொடுபுதருஞ்சூழ்ந்தபுறவமும்பொழிலுமான்மேய்
கொல்லையுங்குறிஞ்சிக்காடுங்குடியிருப்பிடமுங்காண்பான். (௭)

பல்லிபாம்பெறும்புதேளை. பறவைவன்மிருகமாதி
சொல்லியவுயிர்களெல்லாமொன்றொன்றாய்த்துருவிநோக்கி
நல்லனமணிதர்க்குள்ளுநாடியென்றுந்தேடிச்
செல்லுமிங்கிவனைக்கண்டாரியாவரேயுணர்வுதீரார். (௮)

அங்கமாந்திரமில டமவனங்கன்னடங்காசஞ்
சிங்களமராடமக்கஞ்சீனஞ்சோணகநேபாளம்
வங்கம்வங்காளம்போடமகதமச்சரங்காஸ்மீரங்
கொங்கணநிடதங்கொல்லிகூர்ச்சரங்குருகுவிந்தம். (௯)

பப்பரம்பாண்டிசோழம்பல்லவம்விதற்பமீழஞ்
செப்புகேகயம்பாஞ்சாலந்திராவிடந்துளுவமாதி
யொப்பெருந்தேயமெல்லாமொன்றொழியாதுபோய்ப்போய்த்
தப் பறநாடிக்காணாதாகினான்றருக்குத்தாழ்ந்தான். (௧௰)

கானென்னமலைதானென்னகடலென்னசிறிதாதேட
நானென்னபெரிதாவென்றுலைந்துதன்கன்றுமாய்ந்த
வானென்னவறிவுமாழ்கியாருயிர்தனையுநீக்கு
வானென்னவொருபூந்தேமாமரநிழல்வந்துபுக்கான். (௧௧)

புக்கவன்பசியுந்தண்ணீர்த்தாகமும்பொருந்தியாவி
யுக்கமண்மீதுசாய்ந்தானுணர்வுபோய்மூர்ச்சையாகித்
தக்கவன்றுயின்றனாதிதற்பரன்றாங்கியாங்கு
மிக்கிவன்கனவிற்றேறுந்தன்மைகொண்டெதிரின்மேவி. (௧௨)

காவிதோயுடையும்யோகபட்டியுங்கவின்மான்றோலு
மேவுவெண்ணீறுஞ்சங்கமிளிர்குழைக்காதுங்கிளார்
கோவணப்பொலிவுங்கையிற்குடையுமுந்நூலுந்தண்டு
நாவினிலமுதமன்னபாடலுநனிதுகாட்டி. (௧௩)

அல்லல்கூரமைச்சன்பானின்றமைச்சனின்றுன்பமெல்லாஞ்
செல்லுநாளரசன்வந்துசேருநாளணித்தாயுற்ற
தொல்லையிற்றாங்கஞ்சிந்துமுவரிசூழுலகினீயும்
புல்லியகவலைநீங்கிவிசையமாநகரிற்போனால். (கச)

மற்றுளபொருள்களெல்லாந்தேற்றுதும்வருந்துறும
விற்றெழுந்தேகுவரென்றிறைதிருவருள்கொண்டோதி
யற்றகன்றிடக்கண்டேக்கமகன்றவன்விழித்துக்கண்ட
நற்றிருக்கனவினீர்மைநயந்துளங்களிப்புநல்கா. (கரு)

தன்னுருகண்பாடெல்லாந்தணந்தன்புதழைப்பவீசன்
பொன்னுருசித்தவேடம்பொலிந்துநின்றருளிச்செய்த
நன்னலந்தனக்குநாயேன்செய்தநற்றவந்தானேதென்
றுன்னினனிரண்டுகையுமுச்சிமேற்குவித்துச்சொல்வான். (கசு)

போதுளான்புணரியுள்ளான்புகுந்தினந்தேடிக்காணப்
பாதசேகரமுந்தூயபனிமதிமுகமுமென்க
ணோதரித்திடவோர்சித்தவேடங்கொண்டருளிப்போன
நீதமென்னளவதாக்கினைப்பருந்தகைமைத்தன்றே. (கஎ)

ஆதியேயநாதியானவப்பனேவொப்பில்லாத
சோதியேசுடரேயிந்தத்தொல்லைமாஞாலந்தன்னி
லேதொருநலமுமில்லாதிழிந்துநாயினுங்கேடான
பாதகன்றனக்காயிங்கணெளிவந்தபான்மையெற்றே. (கஅ)

வில்லினாற்பிடம்பாற்காலானின்றிருமேனிக்கந்நா
ளல்லல்செய்பவற்குமாறுதலர்சொரிந்தன்புகாட்டிச்
சொல்லணிபவற்குமொன்றுய்வேற்றுமைதோற்றுவண்ணம்
புல்லநல்லருள்கொண்டெய்த்தோய்க்கிதுவுமோர்பொருட்பாலாமோ. ()

இயக்கமற்றங்கிங்கெண்ணுதெங்குமாய்நிறைந்தவள்ளல்
வியக்கவென்கணவிற்சித்தவேடங்கொண்டருளிச்செய்த
நயக்கரும்பொருளுமெய்யேயல்லதுநாயேனெஞ்சின்
மயக்கமென்றறிதல்கூடாவென்பதோர்மகிழ்ச்சிவாய்ப்ப. (உ0)

பார்மிசைவீழ்ந்தாங்கீசன்பதமலர்பணிந்துபோற்றிக்
கார்வரைக்காடுங்காடுங்கனிதருசோலைக்காடு
நேர்படவொதுக்கிக்காசிநின்றான்றனைவந்தித்துச்
சீர்தரும்விசையநாட்டைத்தென்முகம்வைத்துச்செல்வான். (உக)

அந்நகர்நோக்கிமூன்றுநாணடந்தயனுட்காலை
மன்னெறிசெல்லுமந்தமந்திரிதனக்குமுன்னாற்
சொன்னவந்தணர்கள்வாணர்சோதிடர்வறிஞராதி
யெந்நிலத்தவருமாங்கணொருநெறியேகக்கண்டான். (உஉ)

அன்னவரேகுஞ்சூட்சியினதெனவறியானேனுந்
தன்னுறுசெலவுக்காண்டோர்சார்பெருந்துணையாமென்றுங்
குன்னியேவிரைவிற்புக்குநடந்தனனுடந்தையாக
மன்னியநட்பால்வேண்டுங்கருமங்கள்வாய்ப்போக்கிட்டே. (உரு)

ஒருத்தனையுவந்துநோக்கியுளதருமூப்பாற்றுன்பம்
பொருத்துளீர்நடத்தற்கென்னேபொருட்படுங்கவைதானீங்கெ
ணருத்தியாலெவருஞ்செல்லுமடைவென்கொலருண்மினென்றெ
விருத்தனுமிவனைநோக்கிநகைத்திவைவிளம்பலுற்றான். (உ௪)

எந்தவூரப்பாதம்பியிப்பெரும்புதுமைகேட்க
வந்தனையறியாய்கொல்லோமானிலந்தனிலெஞ்ஞான்று
மிந்திரபதியையேய்க்கும்விசையமாநகரினேந்த
லந்தணமடவாட்கொண்டோர்மங்கையையழைத்துவந்தான். (உ௫)

மங்கையுமூன்றுமாதம்வரையொருவிரதம்வைத்துச
சங்கையில்லாமலன்னதானமும்பொருளும்வாறி
மங்குலுந்தருநாணவழங்கினளென்னுமோசை
யெங்கணும்பரவக்கேட்டாங்கேகுமிக்கூட்டமென்றான். (உ௬)

தம்பியீதன்றிவேறென்றிலையெனச்சாற்றிநீயு
மெம்பினல்வருவதானல்வாவெனவெழுந்துநொய்திற்
கம்புகண்கைகாலாகக்களப்புக்கொண்டோய்ந்தமூப்பன்
றும்பிபோறபறந்தானன்னனவாவினைச்சூழநோக்கி. (உ௭)

புன்னகைபுரிந்தன்னன்சொற்பொருள்குறித்தாய்வான்
சொன்னதோர்கனவின்சூட்சிநிமித்தமுமிவன்றன்சொல்லு
முன்னிடிலிதற்குளேதோர்புதுமைபுண்டதனெத்த
மன்னனைக்காண்டற்கானகாலமும்வாய்க்குமென்றே (உ௮)

எண்ணியக்கூட்டத்தோடேயேகினன்விசையநாட்டை
நண்ணினனுவணம்போத்துநலந்தருகுறிக்கொண்டாற
கண்ணினன்றேக்கியுள்ளங்களிப்பினனடப்பான்
புண்ணியம்போலவூர்வாழொருவன்வந்திவன்முன்புக்கான். (உ௯)

புக்கவன்றன்னைநோக்கிப்புலமகன்றன்முன்
தக்கமன்னவனைக்கண்டதாமெனத்தழைக்குமன்பாற்
டக்கம்வைத்துறவுகூறிப்பலவிதநலம்பாரட்டி
ரிக்கசூட்சியினலன்னன்பாலிவைவினவலுற்றான். (௩௦)

எந்தவூரிருந்துநீவிரெங்குபோவதற்காயிங்கு
வந்துளீரிந்தவூரின்மார்க்கத்திலெவருங்கூடிப்
பந்தியாய்த்திரண்டுசெல்லும்பான்மையென்பகருமென்றே
யந்திரிபகரக்கேட்டவழுவிலான்வழுத்துகிற்பான். (௩௧)

இங்ஙனேகிக்கெதிரிற்றோன்றும்விசையமாநகரிருந்தேதன்
பன்னிவாழ்பதிக்குச்செல்லப்பயணங்கொண்டுற்றேனையா
நன்னகராள்வான்வேட்டைபோயொருநாரிதன்னை
மன்னியமறையாட்கொண்டுவரித்தனன்வந்தமாதும். (ருஉ)

சத்திரங்கட்டியன்னதானஞ்செய்கொடியுங்கட்டி
யெத்தனைபேரென்றாலுமிராப்பகலோய்வில்லாமற்
புத்தமுதளித்துவேண்டும்பொருள்களுமீந்தாளந்த
வுத்தமிமதியமூன்றுவரைக்குமோர்நோன்புண்டென்றே. (ருங)

அன்னசத்திரத்துக்கேகுமிப்பெருமநீகமென்றே
சொன்னவனிடத்திற்பின்னுந்தூய்மதியமைச்சனையா
வென்னவற்புதமீதந்தவேந்திழையாண்டையுள்ளாள்
பின்னிவளெவ்வாறேகிக்கொணர்ந்தனள்பேசுயென்றான். (ருச)

மன்னவன்வேட்டைபோனகாட்டினின்மலர்பூவாவி
தன்னிலங்கொருவனோடுசார்ந்துவீற்றிருந்தமாதை
முன்னறிந்தவனைத்தந்தார்க்கிந்நகர்முழுதிற்பாதி
பின்னுவந்தளிப்போமென்னப்பெரும்பறைசாற்றக்கேட்ட. (ருரு)

மறையவனணிந்துசென்றுவாவியுளிருந்துவாழ்ந்த
பிறைநுதலவளுக்கென்னபேசியோபொருத்தமாக்கி
யறைகழலவன்பாலீந்தாளதுவினைந்திட்டாநெஞ்சம்
பறைதருமெவர்க்குமென்றான்கேட்டவிற்பனனுஞ்சொல்வான். (ருசா)

சநகாதியன்மாறேவர்தானவர்முதலாயுள்ள
விங்கொருவருக்குங்கூடாதிப்பெருங்கருமஞ்செய்த
நங்கைமாசமர்த்தியிந்நகர்வயினவடன்னில்ல
மெங்குளதிருக்கின்றாளோவில்லையோசொல்லுமென்றான். (ருஎ)

கேட்டவனகைத்துப்பின்னுங்களத்துவானையாவந்தக்
கோட்டியாண்மறையோர்தங்கள்குலத்தினுக்கொருகோடாலி
தாட்டிகளிறக்கம்வாராதரவின்றித்தனிமையாகிச்
சேட்டைதன்னுறவுகொண்டுதிரிபவட்கொருசேயுண்டு. (ருஅ)

மாதுபேர்வெங்கிட்டம்மாண்மகன்பெயர்வெங்குபொல்லாப்
பாதகியொருநாளன்னம்படைக்குஞ்சட்டுவத்தான்மண்டை
வதனையுருத்தத்தாக்கிவிரட்டிடனவனும்போனான்
யாதமோரெட்டுமெட்டுவருடமுமானதம்மா. (ருகூ)

மகனையுமிழந்துகொண்டவரனையுமிழந்தமுண்டை
யகன்மனைகுடிபாலிந்தவூர்ப்புறம்பமர்ந்துபேய்போற்
சுகமனைவாழுமெந்தச்சாதியார்சோறிட்டாலுந்
தகவிழந்தேற்றுண்டின்பந்தரித்திரமாகவாழ்ந்தாள். (சா௦)

மங்கைதன்பொருட்டாலிந்தமன்னவன்மிக்கவெல்லாந்
தங்கமாய்க்கொடுத்தானின்பந்தருக்கினாள்பாதிச்சீமை
பங்குகொண்டாளச்சென்றபாலனைவரவுநோக்கி
யிங்கிவளிருந்தாளேவலாட்களைப்போக்கியின்றே. (சக)

என்றவனுள்ளதெல்லாமிடைவிடாதெடுத்துக்கூறி
யன்றவன்விடைகொண்டேகவமைச்சனுமறிவானோக்கிக்
கொன்றையஞ்சடையான்முன்னங்கூறியகனவுமார்க்கந்
துன்றியநிமித்தமாதிச்சொற்களுந்துருவியாய்வான். (சஉ)

மந்திரியாத்திரைப்படலம் முற்றிற்று.

ஆகப்படலம்-உஎ-க்குத் திருவிருத்தம் கஙசரு.

மந்திரிதந்திரப்படலம்.

பொன்னிலையிலொன்றாகியுலகமெல்லாம்
பொன்படைத்தபூடணம்போற்பொருள்வேறாகித்
தன்னிலையிலன்னியமில்லாதுநீண்ட
சர்வசுதந்தரமான்சாட்சிதன்னை
யந்நிலைக்கேயெனைத்தெளியத்தெளிவுகாட்டு
மருணலத்தைமருண்மிகுத்தாரறிவுக்கெட்டாச்
சொன்னிலையைத்துரியநிறைபொருளைக்கண்ணீர்
சொரியவனுதினம்பரவித்துதித்தல்செய்வாம். (க)

வேறு.

வழுவிலாதவன்வாய்வழங்கிய
பழுதிலாதசொற்பான்மையின்பொருண்
முழுவதுமுணர்ந்தார்வமுற்றியே
யெழுதரும்புகழாழியெண்ணுவான். (உ)

மன்னன்வேட்டைபோயாடுமாவனந்
தன்னையெண்ணியவ்வாவிதன்னையு
முன்னினான்முனமுற்றுவைகிய
வன்னதானமேயாகுமாலரோ. (௩)

மாதையெண்ணினானமதுமன்னனைக்
காதல்கூர்தரக்கைவயங்கொளும்
பேதைபோதுமாலவளையும்பிரித்
தேதமாக்கினாளிருபிறப்பினாள். (௪)

ஈதெலாம்வெளியாகுமீங்குறை
பாதகம்புரிபார்ப்பனத்திபாற்
போதன்மேயினாலென்றுபுந்தியு
ளாதரித்தவனகரையண்மினான். (௫)

விசையமாநகர்மேவியங்கொரு
திசைபொருந்துசத்திரந்தெரிந்ததி
லிசையும்யாத்திரைக்கேய்ந்தபல்பொரு
ணசைவிலக்கியங்குய்த்துநல்லவன். (௬)

மாசுதோய்கரிவாங்கிமெய்யெலாம்
பூசியங்கொருகந்தைபொத்தியே
கூசிடாதபேய்க்கோலங்காட்டினற்
றேசமாநகர்வீதிசெல்லுவான். (௭)

வீதிவீதியாய்மேவியேபல
சாதியோருமஞ்சாதிவன்றனை
யோதுதீதுகேட்டுள்ளுருத்தெழு
வேதைதீர்தருநகைவிளக்கியே. (௮)

கோநகர்ப்புடைக்குடபுலக்கணி
வீணமானவளுறையுமில்லினைத்
தானறிந்தவண்சார்ந்துவாய்விடா
மோனமாகியேமுழுதுமோருவான். (௯)

அண்டையில்லின்வாயமர்ந்துவாழ்வுறும்
பெண்டுபிள்ளைகள்பேருமூருநேர்
கண்டுமற்றுளகருமமுங்குறிக்
கொண்டுதேறுவான்றனிகுலாவுவான். (௧௦)

அந்தவீதிவாயண்மிவாழ்வுறும்
மந்தணம்பொருமறையவர்க்குள
சொந்தமன்னியந்துருவல்கொண்டுதன்
றந்திரந்தெரியாதுசங்குவான். (௧௧)

கோத்திரங்குலங்குடிமையும்புரி
சூத்திரம்புகல்வாய்மைதூய்மையு
மாத்திரஞ்செறிந்தைந்துமூன்றுநாள்
பார்த்தறிந்தவன்பழையவேடமாய். (௧௨)

பூசினான்றிருநீறுபொன்மணிக்
காசுகுண்டலங்கதிர்விரிந்தெழ
வீசனென்றசெங்காவியேய்ந்தசீர்த்
தூசுசாத்தினான்சுவண்டிசைக்கணே. (௧௩)

நூக்கிலைவத்தகாவடிதுலங்கமுத்
தீக்கொழுந்துபோற்சிகைமுடித்தவ
னுக்கினன்மறைநவிலுபாடலோ
டாக்குமவாயொலியாசராவென. (க௪)

அக்குமாமணிக்கோவையார்வரை
புக்குமார்பினிற்புரளவோர்கையிற்
றக்கமாமயிற்பீலிதண்டொடெண்
டிக்களாவுமான்றோல்சிறப்பவே. (க௫)

தவமெலாந்திரண்டுருவுதங்கிய
திவனலாதிலையென்றுகண்டவர்
பவம்விலங்குநற்படிவமெய்தினு
னவமிருந்ததோர்புதுமைநாடுவான். (கசு)

வேறு.

சீதக்கலைவெண்மதிவதனத்திருவுந்திருத்தாமரையிணைந்த
பாதத்துணையுங்கனிவாயும்பனிமென்னகையும்பதம்பாடுங்
கீதத்தொனியுமருண்மிகுந்துகிளர்ந்தமலர்க்கட்கடைநோக்கும்
போதத்தழகும்போழகும்பொலியப்புதியதவம்போல்வான். (கஎ)

கந்தனிவனேயலதெழிற்பூங்காமனிவனேயலதிவர்க
டந்தையிவனேயலதுபெருந்தவஞ்செய்தவந்தானிவனெனவே
சிந்தையடங்காதணிநகரமுழுதுந்தியங்கிக்களிதேங்க
வந்தத்தெருவின்மருகணைந்தானலரிகுடபாற்றிசையடைந்தான். (கஅ)

கல்லாப்பதகனுள்ளமெனக்கருகிச்சடியகொலைபுரிந்தப்
பொல்லாப்பதகிதீவினைபோற்புவிவான்றிசைமுற்றிலும்போர்த்தங்
கெல்லாப்பொருளுந்தலைமயங்கவிருள்சேர்ந்தெழுந்தமருண்மாலை
யில்லாப்பெறும்பேரியைந்தானுக்கருநற்றுணைபோன்றிருந்தனவால். ()

தையலிரதிகேள்வன்முனந்தழலான்மடிந்தபழிமாறச்
செய்கைமறந்துதவமிழைக்குஞ்செயலொத்தங்குவருபவனை
யையமறநான்மறையாய்ந்தோர்நோக்கியிவன்செய்யருந்தவத்தான்
மையற்படுசிந்தையராகிமுகமன்னோடும்வரவேற்பார். (உ0)

கூட்டங்கூட்டமாகவந்துகுவிந்தமறையோர்குழாங்களெல்லா
நாட்டங்கலுழன்பினராகிநனியாய்ந்துவகைநலந்தோய்ந்து
கேட்டுமிதுநாட்கண்டறியக்கிடையாதிந்தநெடுந்தவனெந்
நாட்டிலுள்ளான்பெறக்கிடைத்ததோநாஞ்செய்தவமோநமர்தவமோ. ()

வண்டுபுதுப்பூமதுவருந்தமறுகித்தவிக்குமாறதுபோற்
கண்டுபேசக்கிடையாதெம்மருங்குநெருங்கிக்கவலையுளங்
கொண்டமறையோரொருவரின்முன்னொருவர்விலக்கிமுன்குறுகிப்
பண்டுதவனற்றிருவழகைப்பார்த்துப்பார்த்துப்பரிவாவார். (உஉ)

நாப்பாவலருநான்மறையுநமக்குமுன்னேநவின்றதொரு
பாப்பாரெனும்பேர்பலித்ததெனப்பார்ப்பார்பேசப்பரப்பார்
பூப்பாலவனுமவனளித்தபூப்பாலகரும்பொருந்தாத
கோப்பானதுமெய்நீக்கமுறாத்தவக்கண்படைத்தானெனக்குழைவார். ()

அட்டாட்சரமுஞ்சடாட்சரமுமதின்மேலெழுபஞ்சாட்சரமுந்
தொட்டார்ந்துறுமந்தணமறையோரிவன்றன்றவத்தின்றொழினோக்கி
யெட்டாப்பழமேனினைப்பாகியிருகான்முடவனருகார்ந்து
கொட்டாவிக்கொண்டதுபோலுங்குறையாநாணங்குறைவாவார். (உ௪)

தவமேபெரியதவம்விளைவுதாங்கிமற்றோர்தமக்கருளுஞ்
சிவமேபோலிங்கெழுந்தருளுந்தேவரீர்நீரிருப்பதற்கு
நவமாகியநாடேதுமதுபதங்கொண்டெமதுமனைநண்ணப் [ப்பார்.
பவம்போய்க்குறையாப்பெருந்திருவும்பலனும்படைத்தோமெனத்துதி

துதிசொன்மறையோர்முகநோக்கித்தாய்நித்திலவெண்ணிளமூரன்
மதிவெண்கலையினிலவெறிப்பமணிச்செம்பவளவாய்திறந்து
புதியவதிதிதனைப்போலுமெனைநீர்வினவப்புகுந்ததுவும்
விதியின்வணமென்றதிசனமுற்றேயிதனைவிளம்புவான். (உ௬)

தாயாம்வெங்கிட்டம்மாள்சொற்சகியாதெழுந்தேன்றலைவிதியாற்
போயாதரிக்கவோரிடமும்பொருந்தாதழுங்கிப்புழுங்கியநான்
காயாசமுமேதரித்துநெடுங்காசித்திருக்காவடிதூக்கி
யாயாசமுந்தீர்வதுநோக்கியயராதிரவும்பகலுமாய். (உ௭)

காசிகன்னியாகுமரிமுதன்மற்றீசன்கலந்துறையுந்
தேசமுழுதும்பணிந்துநதித்தீர்த்தமுழுதும்புகுந்தாடி
மாசகழீஇநற்றிருத்தொண்டுமருவிமறையாய்ந்தருவினையுங்
கூசக்கடைந்தநவமணிபோலுள்ளந்தெளிந்துகுணப்பட்டேன். (உ௮)

அண்டந்தனிலேயிருபாதிக்கப்பாலாகுநான்புகுந்து
கண்டுதெரிசித்தாடிவந்தகடவுட்டலமுந்திருநதியும்
பண்டுவினையும்புதுவினையுமினிமேல்வினையும்பற்றறமற்
றெண்டுபுரிந்துநமதான்றாட்டுணையேதுணையாய்த்துணிந்தனனால். ()

அற்றேமறந்தேன்பெற்றெடுத்தவன்னைதனையும்பொருடனையுங்
குற்றமகன்றேன்றவக்கோலங்கொண்டேனெனினுநமதுபெருஞ்
சுற்றத்துள்ளீருமதுநட்பின்றொடர்புமறக்கத்துணியாதிங்
குற்றேன்முன்னூழ்வினையிருந்ததாலோவுமையுங்கண்ணுற்றேன். (௩௰)

என்றுபுகன்றபுத்திசிகாமணியுமவர்தம்மிருப்பிடமு
நன்றுபெயருங்குலமுறையுநலமும்பலமுநனிதாய்ந்து
நின்றுமுறுவலொடிக்கடிசெய்தன்புகாட்டிநெறிதவறு
தன்றுபுகல்வான்றனதுமதியாலுமீசனருளாலும். (௩௧)

மாமிமாமன்றாய்தந்தைமகவுதாரமுடன்பிறந்தார்
பூமிநிதியம்ஞாதிகட்குட்பொருந்தும்வழக்குப்புகன்றுமுடிவு
மாமியெனவேபன்னெடுநாட்பழகுமவர்போலயிர்ப்பகற்றிச்
சேமமுழுதுந்தனித்தனியர்வினவிக்களிப்புச்சிந்தைசெய்வான்.(௩௨)

சிங்கமையர்மகனீவிரிவருஞ்சிறந்ததிருக்காஞ்சித்
தங்கமையர்மகனந்தச்சாமிநாதையர்மக
னங்கண்மாமன்பிள்ளையொடுமுறவுநயந்தாரிருவோரு
மெங்குபோனார்தம்பியிவரியாரோபுதிதாயிருக்கின்றார். (௩௩)

குப்பாவுனதுதம்பியெங்கேகுமாகுருநம்பியரீன்ற
சுப்பாவெனவோர்பயலுண்டாங்கவனுமெத்தப்படுசுட்டி
யப்பாவையர்நமக்கதிகப்பிரியமவர்தந்திருமகனு
மெப்போதேனும்வீண்காலம்போக்கான்றொழில்செய்திருப்பான்காண்

காடாகுடிக்கண்ணப்பவையர்மகனுமெத்தக்களவாணி
தேடாதளித்தான்பொருளையெலாஞ்சித்தனாதவையர்மகன்
பீடார்தவமும்புகழ்நிதியும்பெற்றுச்சிறந்தாரவர்குடும்பம்
வாடாதிருந்ததெனக்கேள்விநீவிரென்னைமறந்ததென்னே. (௩௫)

நீருமரவுநிறைசடிலனிணைவிலுதவுந்திருவருளா
லூரும்பேருங்குலமுறையுமுள்ளதாகவெடுத்தெடுத்தங்
காருமறியப்புகன்றிடும்போடையாளங்கேட்டதிசயித்துச்
சாரும்பெரியமன்றயவர்கண்முழுதுமுவகைததைத்தனரால். (௩௬)

மனைக்குட்புதைத்தபெரும்புதையன்மறந்துவருந்தித்தவிப்புறுங்கா
ளினைப்புற்றெடுத்துமகிழ்ந்தவர்போலிவன்சொன்முறைமைநெறியுண
யனைக்கும்புகல்வோமெனப்போனார்சிலவரிவனையகலாமற் [ர்ந்தே
றனக்குட்டானேவியந்துவியந்திதனையுரைக்கத்தலைப்பட்டார். (௩௭)

வெங்கிட்டம்மாளீன்றதிருவெங்குவையாநீயுமினிந்
தெங்கிட்டெழுந்தேகினையோவென்றெங்கண்மனதுமிகவருந்திச்
சங்கட்டங்கொண்டதுசிவனார்தாமேயறிவாரவரருளா
னங்கட்டமுமின்றகன்றிடவேவுந்தாய்மெத்தநலமாச்சு. (௩௮)

தாயார்பொல்லாதவளெனவேசாற்றிஞயங்கவள்போலும்
வாயாதப்பாவுனக்கினிமேன்மண்ணில்விசும்பின்மற்றுலகி
லேயாதெனவெல்லாந்தேடியிருந்தாளுன்னையெதிர்பார்த்தே
போயாதாவாய்வார்த்தைசொல்லிப்பணிவாய்போவோம்வாவென்றார்.

அரசர்க்கரியபெருங்கருமமுடித்தாளதனாலவட்கரிய
வரிசைக்கடற்குட்படிந்துள்ளங்குளிர்ந்தாண்மைமந்திரம்போல்வா
ருரைசேர்த்தெரிந்துபுகன்றிடவுமுளவோமறையோர்தங்களுக்குட்
பரவுற்றுமர்போற்றவம்புரிந்தாரியாரேயிந்தப்பாருலகில். (௪0)

அவனிக்கரசேய்யும்தேவல்கடவாதுறைவேோங்களையுமினிக்
கவனிப்பதுநின்கடமையெனக்கழறிக்கூட்டிவருமளவி
லிவனைக்குறித்துச்சொலப்போனார்புகலவிவளையெதிர்நோக்கித்
தவனத்தொடுகாத்திருந்தவளுங்கேட்டங்குள்ளந்தரியாளாய். (௪௧)

வாவிமடிந்தான்புரிந்ததவத்தோடுமதிமான்புரிதவமுந்
தேவிபுரிந்துவருதவமுந்திரண்டாங்கிவடன்பழவினையைக்
கூவியுளத்தைமயக்கவெனக்குறித்துவிடுத்தவாறதுபோன்
மேவுமிருள்வாய்வருபவனைமகனென்றெண்ணிவிரைந்தோடி. (௪௨)

கண்டாளகன்றகன்றுவரக்கண்டுமறுகுமானினம்போற்
றொண்டாளன்புமுழுவதுந்தன்குழந்தையிவனென்றேங்கிமொழி
விண்டாள்கரைந்தாளழுதிருகண்விழிநீர்பாலவெங்கொலைசெய்
சண்டாளஞ்சேர்கொடுந்துட்டமுண்டையின்பந்தருக்கிறாள். (௪௩)

ஐயாவருகவெமதுகுலத்தரசேவருகவருள்பரவுந்
தூய்யாவருகப்புவிபுரக்குந்துரையேவருகத்துயரகற்று
மெய்யாவருகவிப்பிரர்க்குண்மேதாவிகனேவருகமனங்
கையாமருந்தேவருகமணிவருகவிருகண்மணிவருக. (௪௪)

வள்ளைக்குழையார்மடலெழுதும்வடிவினழகேமாநிலமேற்
பிள்ளைக்கலிதீர்த்தருளுதவும்பெருந்தெள்ளமுதேபெறும்பேறே
யுள்ளத்துணையெள்ளளவுமுள்ளாவொள்ளியிகழ்ந்தவுரையுறப்புங்
கள்ளக்கொடியேன்றனைநோக்கிவலுவில்வருநின்கருணையென்னே. ()

அப்பாவையாவர்சேஜயன்றளவளாவியருண்மிகுந்து
செப்பாவினிமைவ்சனமெல்லாஞ்செப்பிச்சிந்தைதியக்கமுறக்
கைப்போதாலேயணைத்துமுத்தங்கனிவாயிட்டுமுகமோந்திங்
கெப்பாலவருமுருகமனதுருகியுடல்பூரிப்பெழுந்தாள். (௪௬)

பக்கம்விலகாதவனையொருபாங்கரணைத்துப்பார்த்தியு
மிக்கநடந்துமனைபுகுந்தாங்கிருக்கவிதித்துவிரும்பியுற்ற
தக்ககிளைக்கும்பிறர்க்குமுபசாரஞ்சாற்றியடைக்காயோ
டொக்கநிதிபூந்துகினல்கவுவந்தாங்குற்றமதிமகனும். (௪௭)

தாயைப்பணிந்துதிருநீறுங்கங்கைநீருந்தானெடுத்துத்
தூய்மையுடன்முன்னுதவியந்தமுறையேசூழ்ந்தகேளிர்க்கு
மாயபிறர்க்குமணக்கனிவோடளித்தாங்கவர்களகன்றதற்பி
னேயம்பெருகவிருவர்களுந்தனித்தங்கிருக்குநேரமதில். (௪௮)

அம்மாநிரப்பேநமக்குரியபொருளாய்க்கைக்கொண்டனுதினமும்
விம்மாநின்றநிகொடுந்துயரான்மெலிவுற்றெனைநீவிரட்டியநாட்
சும்மாகிடந்தபாழ்மனையின்றமரருலவுஞ்சுவர்க்கநிகர்த்
தெம்மாநிலமும்புகழ்தரநல்லழகுவாய்ப்புற்றிருந்தனவால். (௪௯)

மறையோரெல்லாநன்மயிகழ்ந்துவைதுபேசத்தலைப்பட்ட
குறைபோய்ச்சிறந்தமரியாதைகொடுத்திங்குனையுங்கொண்டாடி
முறைநின்றேவற்பணியுடற்றிமுழுதும்வணக்கமுதிர்ந்துலகி
னிறைமைமதித்திங்கெனக்குமவர்வரும்போதெனமோவியம்பினரால்.

தாயேயிதனைநினைந்துநினைந்துளத்திற்றீராச்சமுசயங்கொ
ணுயேயேற்கரியவெளியாக்கிவில்வாயெனவேகரங்கூப்பிச்
சேயோனுரைக்கவருகிருந்துசிந்தைகளித்துத்தீயவனும்
வாயாற்புகலத்தலைப்பட்டானிவனுங்கேட்கவகைப்பட்டான். (ருக)

அப்பாவதுவிங்கொருபுதுமையிவ்வூராளுமரசனுக்கோர்
செப்பார்முலையாண்மேற்காதல்செறிந்தங்கவளைக்கொணர்ந்தாருக்
கிப்பாரளிப்பேர்ம்பாதியின்மேலெதுவுங்கொடுப்போமெனப்பறைக
டப்பாதறைந்தாரப்பெரியசத்தங்கேட்டுநான்புகுந்தே. (ருஉ)

அங்கமடையாளங்களெல்லாமரசன்புகலவறிந்துகொண்டு
பொங்குவி ங்கள்பலசேர்த்தமருந்தொன்றமைத்துப்புறப்பட்டே
நங்கையுறையுமலர்வாவிக்கரையைநண்ணியொருவாரந்
தங்கியிருந்தாங்கிரவுபகலோயாதழுமென்றனையறிந்தே; (ருங)

கன்னிநலம்பெற்றவளுயிர்போன்றிருந்தவொருபொற்கழல்வேந்த
னென்னையணுகியழைக்கவினிதெய்திவாவியுட்புகுந்து
துன்னுசராங்கமிருந்தவர்களமையந்தெரிந்துசூழ்வினையான்
மன்னைவதைத்தம்மாதினையிம்மன்னற்களித்திவ்வாழ்வுற்றேன். (ருச)

பாரிற்பாதிபகுந்துனக்குப்பசும்பொன்மகுடமுடிவேய்ந்து
நேரிலரசரடிவணங்கநிறைவெண்கவரிபுடையிரட்டச்
சீரினெழினித்திலக்கவிகைதிகழ்தண்ணிழற்கீழிருந்திறைமை
பூரிப்பதுகாண்பதற்காசைபொருந்திவரவுபுரிந்திருந்தேன். (ருரு)

பிள்ளையெனுநீர்ம்மயிலுலிப்பெருங்காரியத்தைக்கரவாது
விள்ளத்துணிந்தேனூராளும்வேந்தன்றனக்கும்விண்டிலனால்
வள்ளாலிதனைப்புறம்பினுக்குவாய்விடாதிங்கொழிகவெனக்
கொள்ளையுபசாரம்புகன்றகொடியாடன்னைக்கரங்கூப்பி. (ருசு)

அம்மாவுனைநானினைப்பளவிலம்பரயன்மான்முதற்சிறந்த
கைம்மானவனுஞ்செயற்கரியகருமமுடித்தாயதுபெரிதன்
றிம்மாநிலத்திற்புனற்றடத்துளெய்திமீண்டிங்கெளிதின்வரச்
செய்யாமணியந்திரம்யாவையாண்டையறிந்தாய்செப்பென்றான். (ருஎ)

கற்றாயுரகர்பதிப்புகவேகற்றுவிசும்பின்மிசைப்பறக்க
வுற்றார்க்குற்றகூற்றுமிதற்கொவ்வாதம்மாவிதைநினைக்கச்
சற்றேவிளைவவெனக்குரியதரமோதவங்கள்சிறிதுமிலாக்
குற்றமிகுந்தேற்கிதன்மேலுநீசெய்நலங்கள்குறையுளவோ. (ருஅ)

கானம்புகுந்துபகலிரவாய்த்தனியேவாவிக்கரையிருந்து
மானந்துறந்துவாயாற்றிமன்னனுடன்போயவன்றனையு
மீனம்படக்கொன்றிவ்வூராளேந்தற்கவளையினிதளித்தோய்
வானம்புவியிற்பாதலத்திலிணையாருனக்குவழுத்துகிற்பேன். (௫௯)

என்றுபுகன்றபுத்திசிகாமணியுமிறைஞ்சியிரும்புனற்குட்
சென்றுபுகுந்துமீளவுநீதிரும்பிவந்தபெருங்கதையை
யொன்றுங்கரவாதெனக்கறியவுரைப்பாயெனப்பன்முகமனொடு
நன்றுபுகலமேன்மேலுமகனென்றுள்ளநனிதுவந்தே. (௬௦)

மகனேபுதுமையதுகேளம்மன்னன்காத்தோர்கனையாழி
பகலோனொளியுமொழியுமெனிற்பலவேறொளியைப்பகர்தன்மனத்
தகவோவதையென்னுழைகவர்ந்தேனதனின்பெருமைசாற்றுங்கா
விகலின்கடலும்பெருங்கடலுங்கடக்கும்வழியுமீந்திடுமால். (௬௧)

இதுபாரெனக்காட்டினளிருள்வாயெழுவெஞ்சுடர்விட்டெறிகதிர்நே
ரதுநோக்கிடக்கண்ணொளிகூசியமைச்சனொதுங்கியதிசயித்தே
யெதுகாரியமுஞ்செயவல்லதிவள்கோசலைநாடரசழித்த
சதிகாரிகளாங்கூனியுங்கேகயர்கோன்மகளுஞ்சரியாகார். (௬௨)

பொல்லாளிவளைக்கடத்திவெளிபுகுந்துமடத்திற்புக்குறையு
நல்லாளவட்குள்ளனகுணங்களுடையாய்ந்துநமக்குரிய
வல்லாளனைக்காண்பதற்க னவழிதேறுதனம்மாவென்றே
யில்லாளனைத்தோற்றிருந்தாட்குமகனுமிருந்தானிதுபுகல்வான். (௬௩)

ஊழிக்கதிர்களொருங்கெழுந்திங்குதித்ததெனநல்லொளிபரப்பு
மாழிக்கதிர்வெவ்விருள்சீத்துவெயில்விட்டெறியுமழகதனை
யேழிப்புவனமொடுபுவனமேழுமெழுநாட்பலகோடி
வாழ்வித்திதனுக்கிறையளவுமுவமையுரைக்கவலையாவால். (௬௪)

ன்னைக்குறித்திக்கனைபெரியதிருவும்படைத்தாயென்றுயரின்
ன்னைக்குறித்தெத்தனைகோடிதவங்கடலைநின்றாற்றியதின்
பின்னைக்குறித்தெத்தனைசெய்தான்பெறினுநீசெய்பேறெதிலே
ன்னைக்குறித்ததனையலதுபுவிமேன்மலைபோல்விளங்கிடுமோ. ()

பொருளைவிடுத்து புவிவிடுத்துப்பொருப்புமுலைமேல்விருப்பமுறு
மருளைவிடுத்தீரைந்து மதிசருவாய்ந்துயிர்த்தமாதர்தின்
னருளைவிடுத்துபப ற்றறவெனக்கேயிதின்மேலவாவுற்றூற்
றெருளைவிடுத்தார்க்கிம்மணிமோதிரமென்செயுமோதெரியேனால். ()

எனக்குநினைக்கநினைக்கவியப்பெய்திற்றுமென்றினிதுவந்து
தனக்குட்டானேவுருகிமனத்தனிமைகாட்டுந்தனிமகனை [ய்
யுனக்குத்தானேயல தீவர்க்கிங்குதவக்கொணர்ந்தேனிதுவெனப்பொ
கனக்கச்சிறந்தாள்சிலபகல்போய்த்தருவன்கவறல்கழிமினென்றாள். ()

கேட்டானுள்ளேயொருவிநயங்கிளரவடக்கிக்கொடியவடன்
றுட்டாமரையைப்பணிந்தெனது தாயேநின்கட்டாவிதனை
வேட்டற்கென்னுமனத்துணலம்விளைவுற்றனவோபழமையுள்ள
கோட்டித்தனம்விட்டகலாதகுணங்கொண்டுரைக்கக்குறுகினையால். ()

எந்தவுலகிலெவரிடத்திலெந்தப்பொருள்யான்விருப்புறினு
மந்தப்பொழுதிற்றருவர்பினனுமயன்மாலீசன்வரவெனவே
சிந்தித்துறினும்வருவரிந்தத்திறமையடைந்தவெனக்குனது
புந்திக்கிதுவோர்பெரிதெனக்கொள்ளதன்மேலாசைபொருந்துவனே.

புதியமனையொன்றெடுத்ததிலேபுதிதாய்க்குடிபுக்குறினுமவர்
மதியும்வனப்பும்புரிசெய்லும்புதிதாய்மாறிவாரவற்றோ
விதுவுமொருவர்க்கொருவர்சொலிக்காட்டற்கறிவற்றிருப்பவரெப்
பதியுமுளரோநினைக்கில்வெகுதுக்கம்படைக்கும்பரிதாபம். (எ௦)

செல்வம்பெருக்கிமுறைபுரக்குஞ்செங்கோலரசுநீயெனக்கு
நல்கக்கிடைத்துநலம்பெற்றேன்போதும்போதுநானெழுந்து
செல்லப்பெறுவேன்பழங்கானந்திருவுஞ்சிறப்புநனிசேர்த்தே
யல்லற்படுதீவினைவிலக்கித்தனியேயாள்வாயறனோய். (எக)

காசிதொலையோகாவடியுங்கண்மோநடந்துகாலலுந்துக்
கூசிவருந்தித்தளர்வெய்துங்கிழமைப்பருவங்குறுகினவோ
சீசியிருவென்றெழுந்ததிருச்செல்வன்முனிவின்செயனோக்கிப்
பேசாதளித்தாடோசியவள்பிழையில்லான்செய்தவப்பேற்றால். (எஉ)

காசிமுதன்மேதாவிகளின்கூட்டங்கலந்துகடவுளைப்
பூசைபுரிந்துமறையாய்ந்துபுனிதஞ்சிறந்தபுதல்வாநின்
னேசம்பெருகிவாவெதிர்பார்த்திருந்தகொடியநீலியென்மேற்
பாசமபிரித்துப்பேசியதும்பண்டைவினையின்பயனன்றே. (எங)

மையல்புரியும்புலனொடுக்கிமலைநடாதொருமுழுகிவாழ்மனைக்கண்
செய்யுமறங்கள்பலவாற்றித்தீர்த்தங்குடைந்துமூர்த்திகளைப்
பொய்யின்மனமெய்வாக்கொன்றப்போற்றிவிரதாதிகளேற்று
வையமிசையோர்மகவின்றித்தவிப்புற்றுடலம்வருந்துவரால். (எச)

மகனேயெளிதிற்பெறக்கிடைத்தேனின்னையதுவுநம்மாபோ
ரிகதீர்த்தமோநான்புரியுந்தவமோவறியேனுனையிழந்து
சுகமென்பதுபோய்க்கடையழிந்தேன்சுவாமிசெயலான்மீண்டுவர
மிகவிம்மிதங்கொள்வேன்மறந்துவிளைவிப்பதற்கென்வேட்கையவோ.

முதலாயிம்மைக்கண்மறுமைக்கண்வந்துறுமாதவமெல்லா
மிதனாற்கிடைக்குங்குறையாவாலெவர்தஞ்செவிக்கும்புலப்படுத்தாப் [ல்
பதனம்புரிவாய்நினைக்கொண்டேப்பலனும்படைக்கவேண்டுமென்சொ
விதனம்படாதின்றொழிகவெனவிண்டாளுமைச்சன்வியப்பெய்தி.(எசு)

தாயேதெய்வமலதிலையென் றருமாமறைநூல்சாற்றியவா
றுயாதொருபுல்லறிவானுனைநந்தமொழியின்பிழையனைத்து
நீயாதரிப்பாயெனவெகுவாய்நேயம்பெருகவணங்கியநற்
சேயானவனோடகமகிழ்வாயிருந்தாட்கிவனுஞ்செப்புவான். (எஎ)

சோரும்பசியாற்சுழன்றுவெகுதொலைவெங்கானநடந்தலுத்தே
சாருமெனக்கின்றிரவுமட்டுஞ்சமையல்செய்துசோறளிக்க
நேரநேண்ணிசியடைந்தநீர்மையதனாற்றவமுனாற்றும்
வார்பொன்முலையாண்மடத்துண்டுவருவேனெனச்சம்மதித்தனளால்.

கைக்காவடியுமேற்றுகிலுங்கவிகைதண்டுமான்றோலும்
பொய்க்காரிக்கேமெய்க்கவவண்போட்டுக்கட்டுங்கலையோடு
செய்க்காரியத்திற்கண்ணுள்ளான்றீர்ந்தாங்கிருந்துவெளியேறி
மைக்காரிருளிற்றனிநடந்துவந்தான்மடத்தின்மருங்கம்மா. (எகூ)

வேறு.

தீதானவள்சொற்றேருங்காற்
கோதாகியசூழ்வினைகொண்டே
மாதாநிகரம்மடவாளை
யீதாக்கினளாலிதுபாவம். (அ0)

மாண்டான்மாதவமாதாலே
பூண்டார்காதல்புறம்போகா
நீண்டோரான்பினெறியற்றே
தூண்டாவினையின்றொடர்பானான். (அக)

பொங்கர்மடிந்தேபுலர்வான
வெங்கணரக்கன்வினையாலே
நங்கையிடற்பட்டதுநாடா
தங்கவள்போகத்தடைவானான். (அஉ)

நங்கோனல்லதுநாமாய
விங்கேநன்மனமேயாவால்
சங்கேதப்பொருடானெல்லாம்
பொங்கார்மின்கட்புகினேரும். (அந)

அல்லாவாயாதெனவாயா
சொல்லாலெண்படுதூயோனு
நில்லாதாகிநிசிக்கண்ணே
யெல்லோரும்புகுமடமெய்தா. (அச)

ஊழித்தண்கதிருள்ளாக
வாழ்விக்குந்திருமணியாழி
பாழிக்கண்ணவர்பாராதே
யாழிக்கையுளமைத்தானால். (அரு)

சென்றான்செல்பவர்திரளோடே
யொன்றாதவ்வயினுளவெல்லா
நின்றேநோக்குதனேர்வானா
யன்றேகூற்றினனாய்வுற்றே. (அசு)

மந்திரிதந்திரப்படலம் முற்றிற்று.

ஆகப்படலம்-உஅ-க்குத் திருவிருத்தம்-கசஙஉ.

பூலோகரம்பைமீண்டுற்றபடலம்.

விண்ணாகிவாயுகனனீர்மண்ணாகி
விரிந்தசராசரப்பொருளின்வீக்கமாகி
யெண்ணாகியெண்ணிறந்தசேடமாகி
யெவ்விடத்துமாங்காங்கேயிருந்துநோக்குங்
கண்ணாகிக்கண்ணிறைந்தகாட்சியாகிக்
கருத்திலுறுசீவனுக்கோர்களைகணாகி
நண்ணாதசேயணிமையகலமாகி
நடந்துவரும்பெரும்பொருளைநாடிநிற்பாம். (க)

வேறு.

வேலியிட்டணிகொணான்குவீதியிட்டதில்வெவ்வேறு
கோலியிட்டமைத்ததானமுழுவதுங்குழாங்குழாங்கள்
பாலியிட்டுவமஞ்சொல்லாப்பற்பலபண்டங்கொண்டு
சோலியிட்டாற்றாநின்றவயினயின்றுருவல்காண்பான். (உ)

தண்டலைமொருபாலான்யாற்றசும்பொருபானெய்மோரு
கொண்டடைகுடங்களோர்பாற்கொழுங்கனிட்சுங்காய்மூல
மண்டியகுவியமொர்பான்மற்றுளபொருளுமவ்வா
றெண்டிசாமுகமுமண்டமுக்குதொட்டிலங்குமாலோ. (ங)

வெள்ளியங்கிரியுமேருகிரியும்வேறமையவெள்கி
யுள்ளினிற்கலந்துபல்வேறுருவெடுத்திருந்தாலொப்பத்
தெள்ளரிப்பிதம்பருப்போடறுசுவைக்கருணைசேர்ந்த
கொள்ளைவான்குவியற்காடெம்மருங்கினுங்குறையாநிற்ப. (ச)

அடுபவர்கோடிகோடியடுதினையள்ளிவந்தோர்க்
கிடுபவர்கோடிகோடியிடவிடவுண்டாங்கேப்பம்
விடுபவர்கோடிகோடிவிருப்பந்தீராதுபின்னுங்
குடுவைபாத்திரநிரப்பிக்கொண்டுசெல்வார்கள்கோடி. (௫)

சடையினர்முண்டித்தார்ந்ததலையினர்தயங்குகாவி
யுடையினர்பூதிதோய்ந்தவுடலினர்சுருக்கிவைத்த
குடையினரொருவர்முன்னேயொருவர்போய்க்குந்தவாய்ந்த
நடையினர்கிடையாய்க்கூடிநுகர்வர்நாவுரிசைநாடி. (௬)

மந்தம்வாயூமைநொண்டிவடிவினிற்குறள்கூனேய்சா
லந்தகமுதலாயுள்ளபெருங்குழாமனேகமான
பந்தியெம்மருங்குஞ்சூழ்சச்சடிப்பெரும்பரவைதள்ளி
யந்தரமுழுதும்வானமழையெனவமலையார்ப்ப. (௭)

அயில்பவரோதைமூரலமைப்பவரோதையாற்றப்
பயில்பவரோதைசாவற்பண்ணுவரோதையுண்டு
துயில்பவரோதைதானஞ்சொரிபவரோதையின்ன
வியல்பினவோதைநீங்காதிரவும்வெம்பகலுமெங்க. (௮)

உண்டவருண்டுசெல்லவுண்டிடவருவோர்தம்மைக்
கண்டுபின்னுண்டுபோகக்கையமைத்தின்னமுண்பா
ருண்டுகொல்லோவென்றாங்காங்கொலிபறையறைந்துகூவி
மண்டலமுழுதுஞ்சுற்றிவருவர்கண்மாறிமாறி. (௯)

இதுவெலாநோக்கிநோக்கியிரும்புவிமுதலாயெந்தப்
பதியினுந்தவநோற்பாரிப்படியிலையென்றுபூரித்
ததிசயமடங்காநெஞ்சோடமைச்சனும்பின்னுமாங்கு
மதிவளர்சடையான்கோயின்மருங்கணைந்தெட்டிப்பார்த்தான். (௧௦)

பவமெலாமகன்றுதீராதறமெலாம்பரித்துப்பார்மேற்
றவமெலாந்தழையமல்குந்தருவின்மென்கொடிபோனின்ற
திவளெனத்தவாங்கம்பொங்கவிந்திரதிருவுநாணச்
சிவமெனக்கருணைவாய்ந்துசிவனைப்பூசிப்பாளாகி. (௧௧)

மின்னினிற்கதிர்களாய்ந்துவெவ்விருட்சீக்குஞ்சோதி
பொன்னினன்விளக்கங்கோடிபுறம்பெலாம்பொலிவித்தீசன்
றன்முடிக்கணியுமாலைசந்தனந்தாமந்தூசோ
டன்னமானைந்துமாதியாவனபிறவுமாக்கி. (௧௨)

வார்முலைமகளிர்வெள்ளமருங்குசூழ்ந்தேவலாற்றக்
கார்மயிலனையாளீசன்கதிர்மதிமுடிமேற்கங்கை
நீர்மலிகலசமட்டிநித்திலப்பணிபொன்னுடை
சீர்பெறச்சாத்திச்சந்தந்திருப்பளித்தாமஞ்சேர்த்து. (௧௩)

பலவுபசாரத்தோடுநிவேதனம்படைத்துவில்வஞ்
சலசமந்தாரைமுல்லைமல்லிகைசாதிபிச்சிக்
குலமலரருச்சித்தேத்திக்கும்பிட்டுக்குறைகள்வேண்டி
மலைமகள்கொழுநன்னாமமாயிரம்வாயால்வாழ்த்தி. (௧௪)

விண்முதற்பூதமாகிப்பூதத்தின்விரிவுமாகிக்
கண்முதற்காட்சியாகிக்காட்சியின்கருணையாகி
யெண்முதலெல்லாமாகியெண்கடந்தில்லாவான
வண்ணலேயனாதிமுத்தவநீதமேவமலமூர்த்தி. (௧௫)

கருவகங்காரவன்பேய்க்காடகழ்ந்தொருமூலத்து
ணிருவிகற்பாங்கயோகநிதியமேமதியஞ்சூடு
மருள்பொழிமுகிலேதேனேயமுதமேயென்னப்போற்றித்
தருணியுந்தவனின்றாற்றுந்தன்மையுமனத்திற்கொண்டு. (௧௬)

வருத்தமுமானத்தீயுமனத்தினைவருத்தமேரு
பொருத்தபூண்முலையாள்வாடிப்புலர்வதும்புறம்போர்த்தோராத்
தரித்தமாதவத்தின்வேடத்தனிமையுஞ்சடைப்புநீங்கா
விரித்தபூங்குழலுமாறாவிம்முநெட்டுயிர்ப்புமோங்க. (௧௭)

உண்டிடாதுறங்காதுற்றவொண்டொடிதவத்தின்கோலங்
கண்டனன்றனக்குத்தோன்றாகட்புலன்றுளிப்பத்துன்பு
கொண்டுளைநையமெய்யுங்குழைந்துபாழ்பட்டுநின்றான்
பண்டையதவமுமின்றுபயில்பெருந்தவமுமுள்ளோன். (௧௮)

என்னையிம்மாதைநோக்கியென்மனமேனோவென்றன்
றன்னையுமறியாதேங்குந்தனிமையுஞ்சலிப்புஞ்சார்ந்த
துன்னினாலிவளேவேந்தோடுறவுகொண்டுற்றுவாழ்ந்த
வன்னமேயாகுமல்லாலறத்தினதமைவேயாகும். (௧௯)

கருமத்தின்களைகட்டெல்லாவுலகமுங்கடைநாட்கூட்டும்
பருமித்தபதங்கள்வாய்ப்பப்பண்புதந்தின்புதோற்றி
நிருமித்தநெறிநின்றாற்றநிறைதவங்குறையாநின்ற
தருமத்தின்வடிவமென்பதிப்பெரும்வடிவுதானே. (௨௦)

கற்பினிற்சிறந்தபஞ்சகன்னியர்தாமுமிந்த
விற்பிறந்தாளுமொக்குமென்னினுமவர்கட்கெல்லாஞ்
சொற்புகழ்குறைந்தவோரோர்துகளுண்டிங்கிவளுக்கெல்லா
நற்புகழாகக்கூடித்திருநடநடியாநின்ற. (௨௧)

மாதிவடவமீதாயின்வாவியிலாவிமாண்ட
காதலனுயிருநம்போல்வார்க்கொருகருமப்பாடுந்
தீதுறவாஃகாதெந்தநாளினுஞ்சிறப்புச்செய்யு
மாதலாலீசன்சொன்னவருணலப்பட்டேனம்மா. (௨௨)

இவையிவைநிரம்பவெண்ணியிவனிற்குமளவிலாங்கோர்
கவையன்வந்தப்பாவின்னுமுண்டிலைபோலுங்கண்டே
னவையிலோய்கேட்கின்மாதுமுனியுநீநயந்துண்டபாற்
செவைபடவுமக்கிங்கேற்றகருமங்கள்செய்மினென்றே. (௨௩)

கூட்டிப்போயெவருங்கூட்டமாகவேகுழிமியுண்ணு
மூட்டரங்குள்வைத்தன்னமுதவிநெய்கருணையாண
மூட்டெனப்போட்டார்பின்னும்பூப்பழம்வடைபாயாசந்
தீட்டினானெனெடுநாட்கொண்டவாட்டமுந்திகைப்புந்தீர. (௨௪)

உண்டவன்கைகால்சுத்திபண்ணினானொருவனாங்குக்
கண்டுவந்தளித்தான்கந்தம்வெள்ளடைக்காய்பூவாதி
கொண்டுபோயொருவன்பூரிகொடுப்பவரிருக்குங்கூடத்
தண்டையில்விடுத்தானுண்டோரழைத்துமுன்னிருத்தியையா. (௨௫)

இருவரிலொருவர்தம்மைப்பிரிந்தவருண்டோவென்று
பெருமவர்வினவக்கேளாவிதிலொருபிழைபாடில்லாக்
கருமமொன்றுள்ளதென்றுகவைகொள்வான்கருத்திலுன்னிப்
பொருமலோடலமந்துள்ளம்புன்னகைபுரிந்துசொல்வான். (௨௬)

நினைவினால்வாக்காற்றேரநீண்டுறுகருமங்காண்பான்
வினையினால்வினாவிற்றீரிவ்வுண்மையென்விளம்புமென்ன
வனையவர்புலப்படாமலவனொடுமாதைச்சார்ந்து
பினையிவன்வாய்மைகூறப்பேதையுநகைசெய்தப்பால், (௨௭)

வன்படுகாவல்யாப்புவையுமின்னும்பானாளைத்
தென்படுவிநயஞ்சொல்வேனென்றனளதுபோற்செய்தார்
நன்படுநாயனாணைகடப்பரோநன்றியோர்ந்து
பின்படுகருமங்கொள்ளப்பேணுகிற்பவர்களம்மா. (௨௮)

வந்தவரெல்லாமுண்டுவருபவர்க்களிப்போருண்டு
தொந்தரையகன்றபின்னர்தோகையுந்தனியளாகி
மந்தணமறிவாளாங்கோர்மடக்கொடிதன்னைக்கூவிப்
பந்தனமிருந்தான்றன்னைத்தருதியென்பாலிலென்றாள். (௨௯)

மாதுழைதாதிமாதைமருவுதல்கொள்ளநெஞ்சிற்
காதல்செய்யரசன்காவற்கலைமகனிவர்களன்றித்
தீதுறுபித்தும்பேயுஞ்செயுந்துயிலென்றாற்பின்னை
மேதினிதுயினீத்தென்னைநடுநிசிவிளையுமாலோ. (௩0)

ஏகியேகொணர்ந்துவிட்டாளவளையுமிவணீத்தப்பாற்
போகவென்றுரைத்தாள்வேலைபொருத்துநெஞ்சுளைந்தாளென்ன
தாகமோவிவர்கள்பேசத்தலைப்பட்டார்நமக்கேனிந்த
மோகரிப்பென்றுநீங்கித்துயிலின்மேன்முயக்கமானாள். (௩௧)

பொற்றொடிபோனபின்னர்புனிதங்கொள்கலைவலானே
டுற்றொருவருக்குந்தோன்றாதுபாயமாய்த்தனிப்பட்டாங்கு
மற்றொருமாடுபுக்குமறைவினிலிருத்திவாய்ந்த
நற்றவமாணுளோராதனமிருந்துளநாணற்று. (௩௨)

வாக்கினான்மனாளன்மேனாள்வழுத்தியவனை யாளங்க
னோக்கினாளுச்சிதொட்டுப்பதம்வரைநுண்மையாக
நீக்கமிலறிவிற்றேறிநெடுந்தவமிழைத்துநின்ற
வாக்கையானிவனேநம்முளமைச்சனென்றயிர்ப்புநீங்க. (௩௩)

முன்புறவிவனையாண்டுங்கண்டிலமுகத்தைநோக்கி
யென்புகளுருகிநெஞ்சமிரங்கினதெண்ணில்வேந்த
னன்பினுக்குரியனானவதியனிவனேயென்னா
மின்புரண்மருங்குற்செவ்வாய்வேல்விழிவினாவலுற்றாள். (௩௪)

வருபவர்தங்கட்கெல்லாமாநிதிவளங்குமாக்க
ளிருவரிலொருவர்தம்மையிழந்தவருண்டோவென்றுங்
குரைசெய்தாலிரண்டிலொன்றைநேருரையோதாதென்னை
பெரியைநீர்மறுத்துக்கேட்டகாரணம்பேசுமென்றாள். (௩௫)

செந்திருவனையநீஞ்சொற்சேயிழைபுகலக்கேட்ட
மந்திரியிவளாலெல்லாமறியலாமிவ ன்வாயான்
முந்தியபொருட்கொண்டப்பான்மொழிகுதன்முறைமையாமென்
றந்தரங்கத்துளெண்ணியிவைவெளிக்கறைவதானான். (௩௬)

அம்மவீதென்னேசொற்றாயடிமைநான்மனத்திற்சூதின்
பொம்மல்கொண்டுரைத்ததன்றுவிசு த்தின்போலிகொண்டு
செம்மனத்தவர்கடம்பாற்செப்பினதென்றான்கால
மும்மையுமுணரவல்லான்பினுமிவைமொழியலுற்றான். (௩௭)

இகபரமிரண்டிலொன்றையிச்சைகொண்டதற்குச்சொன்ன
வகமுகமாகித்தானமாற்றுதன்யாற்றிமாறாய்
வெகுமுகமாகச்சொற்றவேட்கையின்விளைவுக்கென்ன
தகவுளதெனவெண்ணுற்றவலநிலைசமைக்கவென்றான். (௩௮)

அங்கத்தின்பெருமைபோலுமறிவினும்பெருமைகொண்டா
னிங்கத்தன்வேதன்மாயோனிவனுளமெளிதிற்றேறிப்
பங்கத்தம்பகர்தற்காகாவாயினுமினுமோர்பாலாய்
நங்கத்தவித்தையாற்கொண்டாய்குவமென்னநங்கை. (௩௯)

அன்னவைகிடக்கநீவிரிருப்பதற்கழகுதந்த
தெந்நகர்பெயர்மற்றியாவையிங்குவந்தடைதற்குற்ற
தன்மையெனதனையேனுஞ்சாற்றுவாய்விரித்தென்றாள
புன்னகைநிலவுவீசப்புரிந்திவைபுகல்வதானான். (௪௰)

தாண்டவமாடுமுக்கட்டற்பரனருளையன்றி
யீண்டொருபொருளுமில்லையென்பதையிதையத்தெண்ணி
மூண்டெழும்பசியாற்றுமனகர்தொறுமுட்டிவாங்கு
மாண்டியையூரும்பேரும்வினவுதலடைவோவம்மா. (௪௧)

எந்தவூர்பேர்நான்சொல்வேன்காசியிலிருந்திவ்வூர்க்கு
வந்தனனீசெயன்னதானத்தின்வரம்புகேட்டுச்
சொந்தமாய்ப்புகுந்திங்குண்டேன்சுகமெலாநீசெய்காவற்
பந்தனமென்னுஞ்செந்தீப்புசிக்திடப்பதைப்புற்றேனால். (௪௨)

என்றவன்புகலக்கேளாவிவன்மனக்குறிப்பும்பேச்சு
மொன்றினும்பொருந்துறாமலுற்றனபுரிந்துநோக்கில்
வென்றிமன்னுழைநின்றாற்றுமந்திரவிரகற்கல்லா
லின்றுவேறெவருளத்துநினைவிற்குமியையாவம்மா. (௪௩)

ஐந்துறுகரணமொன்றுபட்டுநல்லாறுபுக்கி
மைந்தறப்புலனைவென்றுவாசனையொடுக்கியுள்ள
நைந்திடாத்தவரின்றாற்றுநியாயநீநண்ணிற்றேனும்
பந்தம்விட்டகலாதேக்கம்படைத்ததுன்சிந்தைபாவம். (௪௪)

மெய்மனம்வாக்குமூன்றும்வேறுபட்டுள்ளந்தேராக்
கைதவம்போலும்வேடங்காட்டினகருமநோக்கிற்
செய்பொருளிழந்துநாடுந்தெருமரலெனவென்னுள்ள
மையுறலுற்றேனில்லையெனினுநிற்கங்கமாகா. (௪௫)

எந்தநாட்டொட்டிவ்வேடமெடுத்துளீரெனுங்காலும்மை
மந்தணமுணர்வார்தங்கண்மரபுமிம்மகனைப்போலுஞ்
சுந்தரவதனமிங்குதுலங்கினவந்தோநீவீர்
தந்திரமாகவேதுக்குரைசெயுஞ்சாலமென்றாள். (௪௬)

நம்மனத்தடக்கிவேறுநவின்றனம்வாய்மைநாங்கொள்
பொய்யலின்வேடநாடும்பொருண்முதலெல்லாமோர்ந்து
கொம்மைவெம்முலையினாளுங்குறிபுகல்பவர்போற்சொன்னா
ளம்மவிங்கிவடன்னுள்ளத்தறிவகோசரமென்விள்வேம். (௪௭)

மாதிவணமதுவேந்தன்மனைவியென்பதற்கோசற்றும்
பேதகமில்லைக்காணும்பெட்பினாலெவருங்காணாச்
சூதுசெய்தவளுமிந்தத்தொழிற்றலைநின்றாளென்று
போதமுற்றவனுமந்தப்புலன்வெளிப்படுத்தானாகி. (௪௮)

என்னைக்கொண்டெனக்குவேண்டுங்கவையுளமெதனினுநேர்வே
னுன்னைக்கொண்டெனக்குவேண்டுங்கருமங்களொன்றுமில்லை
முன்னைக்கொண்டதுபின்னைக்கொண்டுமற்றவையென்றாலும்
பொன்னைக்கொண்டமைந்தபாவாய்புகலுவாய்பொருட்கொண்டின்றே.

மாண்டவனுயிரைமீண்டுவருவிக்கும்வலிமையாவும்
பூண்டமந்திரியைக்காணும்புலன்வெளியெவர்க்குந்தோன்றா
வேண்டுமாதவத்தினோடிங்குற்றனனென்றுமின்னா
ளாண்டொழியாமலெல்லாமுரைத்தனளழுதுகொண்டே. (சுஅ)

கேட்டமந்திரியுநெஞ்சங்கிறுகிறுத்தலமுற்றேங்கி
நாட்டநீர்சொரியச்சோர்ந்துநாவுலர்ந்தவடன்செம்பொற்
றாட்டுணைபரசித்தாயேதனதுயிர்நீத்தவேந்தன்
கூட்டினையென்செய்திங்குவந்தனைகூறுமென்றான். (சுகூ)

ஐயகேடயிலமிட்டோராங்கிடைப்பசும்பொன்னாலே
செய்தநீள்பெடகந்தன்னிற்சேமஞ்செய்துற்றேனென்று
தையலுநுவலக்கேட்டான்றன்னுளந்தெளிவுசார்ந்தே
வுய்தல்கொண்டேற்றோநானுநீயுமிவ்வுலகுமென்றான். (எ0)

பையுளுற்றுயங்கிநின்றபாவைதன்பதமேற்பின்னுங்
கைகுவித்திருகணீர்மெய்மழையெனக்கரைப்பநொந்து
வையகந்தன்னில்வேந்தன்மரபினைவளர்க்கவந்த
தெய்வமோவவன்முன்னாளிற்செய்தவப்பயனோவம்மா. (எக)

அம்மகேளென்றன்புத்திசிகாமணியாதைநீங்கி
வெம்மைகொள்பரிமேற்கொண்டெமிளிர்மணிமனைகண்முற்றும்
மைம்மலிந்திலங்குந்தங்கமாபுரிமன்னியன்னங்
கைம்மலிந்தேற்றுக்கங்குனண்ணிசிக்கண்மீண்டுற்றேன். (எஉ)

இருப்புழியிறையைக்காணாதிருகணீரிறைப்பச்சூழ்ந்த
பொருப்புழிவனக்காவோடைபொழின்முதற்றுருவிநெஞ்ச
நெருப்புழிச்சருகாய்நீறிநின்றிடாதலைந்துநானுந்
திருப்புழியிரவிகீழ்பாற்றிக்குழியுதயஞ்செய்தான். (எங)

மலைவகிர்ந்தனையபாந்தண்மடிந்துயண்மீதிலுற்ற
நிலையுணர்ந்திறைவன்வாளானேர்ந்ததென்றுணர்ந்துவேந்தன்
சிலைநுதன்மகளிர்கையிற்சிமிழ்ப்புண்டானென்னவுன்னி
யுலைகின்றமனமுநானுமசுவங்களோடுமீண்டே. (எச)

தங்கமாபுரியிலன்னந்தவளிடத்திலம்மா
விங்குநான்வருதல்காறுமிவுளிகட்குணவுநல்கி
பங்கமிலாதுகாமினெனச்சொலிப்பசும்பொனீந்து
கங்குலும்பகலுமாகத்துருவியென்கால்களோய்ந்தே. (எரு)

ஊற்றமற்றினிமேற்றேடற்குற்றனவுயிர்போய்மாண்ட
மாற்றம்போலொருதேமாவின்மரநிழற்றுயிலும்வேலை
கூற்றுதைகழலானென்பாற்சித்துருக்கொண்டுசொன்ன
தோற்றமுற்றதர்புக்கங்கங்குறுபொருடுருவியாய்ந்தே. (எசு)

இதுமுடித்திட்டதோசிமறையவளிலமோர்ந்தந்நாள்
புதுநலங்கொள்ளப்பெற்றபுதல்வன்போற்புகழ்ந்துபேசி
மதிவிநயத்தினோடேயவள்கைமோதிரத்தைவாங்கிப்
பதியைநின்பாலிற்றேர்தற்கிவ்வுழிபடர்ந்தேனம்மா. (௭௭)

கொண்டநின்கற்புநீசெய்தவங்களுங்கொடியதோசி
முண்டையைமருட்டத்தந்தமோதிரமிதுபாரென்னாக்
கண்டனள்கவலைதள்ளிக்களிப்பெனுங்கள்ளுண்டுள்ளம்
பண்டுயிரகலமாண்டபதிநலம்படைத்தாள்போலும். (௭௮)

வாங்கினாள்சென்னியேற்றிமலர்க்கண்ணிலொற்றிமெய்யிற்
றாங்கினாண்முலையிற்கூட்டித்தழுவினாடழைந்தாளின்பம்
பாங்கினுமுளத்தும்போர்ப்பப்பகர்மொழிபிறிதொன்றின்றி
மூங்கைபோனின்றாளாசைக்கணவன்றோண்முயங்கலொத்தே. (௭௯)

வீம்பிநெட்டுயிர்த்துமெய்யின்மெலிவுபோய்ப்பணைத்தமொய்ம்பின்
கொம்மைவெம்முலைகள்சொர்ணக்குடமெனவிளங்கியோங்கச்
செம்மலர்வதனம்வானத்தெழுஞ்செழுந்திங்களென்னத்
தம்மழகடங்காளாகிப்பிறிதொருதையலொத்தாள். (௮௦)

நெறியெலாங்கண்ணாய்நின்னைக்காண்புதோர்நேயநெஞ்சிற்
குறியமைத்தாண்டிவேடங்கொண்டிவணுற்றேனிந்த
முறைபிறற்கரியாவண்ணமுழுவதுஞ்சிவனோன்பென்றிங்
கிறையவற்கோதியன்னான்பொருண்முற்றுஞ்சூறையிட்டேன். (௮௧)

அங்கவற்கவதியின்றோடாயினவவனுமிந்தக்
கங்குல்போய்க்கழிந்தானானைக்கடிமணமுடிப்பானெண்ணி
யிங்குவந்துறுவானுமினிநொடிப்பளவும்வாளாத்
தங்குதல்பங்கமாமென்றுரைத்தனடவத்தின்றையல். (௮௨)

உற்றவாறமையநோக்கிக்கங்குல்போயொழியாமுன்ன
மற்றவர்மனத்துங்கண்ணுமுணர்வுறாமார்க்கமாகப்
பொற்றொடியோடுநாமும்போவதுகருமமென்னா
முற்றிலுநினைந்தான்பின்னுமிதனையுமொழிவதானான். (௮௩)

மன்னனைவீட்டியிந்தமாநகரெரிக்கணூட்டிப்
புன்மறையவனைவாட்டிப்பொருபடையடங்கமாட்டி
யன்னைநின்றனையுங்கூட்டியேகுதற்கமைந்தவீர
மென்வயிற்கிடக்கநானுமதுசெயற்கெண்ணுகில்லேன். (௮௪)

மாண்டமன்னவற்குமுந்தியாருயிர்வழங்கியப்பான்
மீண்டிவைபுரிதனன்றென்றுளந்தனில்விளைந்தவேட்கை
தூண்டுகெட்டொடர்புற்றேனுக்கம்முறைநீருஞ்சொன்னீ
ரீண்டினிதிருந்துவாளாவெண்ணுதல்பழுதாமென்றே. (௮௫)

கற்றவிஞ்ஞைகளின்மூத்தாண்மந்திரங்கருத்துட்கொண்டான்
சுற்றிலுமுள்ளுங்காக்குமாக்கள்கண்டுயின்றாரென்னும்
பெற்றியினளவோமூன்றுபுவனமும்பிரமைகொண்டு
முற்றினுமயக்கமுண்டதிவர்க்கினித்தடையுமுண்டோ. (அசு)

இருவருமொத்துக்கூடியெழுந்தனர்துயிலான்மோகம்
மருவலையுலகென்றாலும்வருமிவர்வடிவங்காணற்
கருமையென்றுருவந்தோன்றாதமைக்குநல்விஞ்சையுற்றுத்
திருநகர்வீதிநீங்கிப்புரிசையைக்கடந்துசென்றார். (அஎ)

மங்கைதன்றுன்பமென்னும்வல்லிருட்செறிவினோடு
கங்குலின்செருக்குமாறத்தங்குலக்கனியைக்காண்பான்
பொங்குபேராசைகொண்டுபுறப்பட்டுவந்தபோலு
மெங்கும்வெண்கலைகள்வீசியெழுந்தவான்றிங்களன்றே. (அஅ)

விதலையாற்சூழ்ந்ததீமைவிலங்கியும்விலங்காவண்ணந்
ததையிணர்க்கூந்தலாளைத்தடுத்ததுபோலுநீண்ட
சுதைபடுமண்டப்பித்திமுழுவதுந்துன்னிமல்கும்
புதையிருள்கிழித்துச்சிந்துநிலாக்கதிர்பொலிந்ததெங்கும். (அகூ)

திருமகளிருந்துநீரப்பிறிதொருதிருவுமின்றி
மருவியதவ்வைகூடிமாநகரிருள்வாய்த்தூக்கம்
பொருவிடத்திருவுமிங்குபோந்தனளென்றுகானம்
பெருமைகொண்டிவர்தல்போலுநிலாக்கதிர்பெய்யப்போனார். (கூ0)

கானகந்தன்னிலொத்துக்கால்கொடுநடக்கமீட்டா
மானனையாட்கோர்விஞ்சைவழங்கினனிமைக்குமுன்னம்
போனபார்நெறியின்றூரமினைதெனப்புலப்படாமற்
றன்முனமிருந்ததூய்நீர்த்தடாகநீள்குடிலைச்சார்ந்தார். (கூக)

மறையவள்கொல்லக்கண்டுவருந்தியவருத்தமாறு
நிறையுநெஞ்சினனாய்ச்செல்லுநிதங்கடீர்ந்தின்றைக்கந்த
விறைவனைக்காணுங்காலமிதுவெனவருவான்போலுங்
கறைகிழித்துதயன்கீழ்பாற்கடன்முகட்டுதயங்கண்டான். (கூஉ)

பூலோகரம்பைமீண்டுற்றபடலம் முற்றிற்று.

ஆகப்படலம்-உகூ-க்குத் திருவிருத்தம் கருஉச.

புவனேந்திரனுயிர்பெற்றபடலம்.

பாலமுதுங்கற்கண்டுங்கனியுஞ்சேர்த்துப்
படைத்தருசிபோலுமின்பம்படைப்பமேனா
ளாலடியிற்சனகாதிகுறைகடீர்த்தங்
கத்துவிதப்பொருளளித்தவாசையென்றன்
யாலிருந்தகன்மானுபவங்களோட்டும்
பரமதயாநிதிப்பொருளைப்பார்ப்போர்க்கெல்லாங்
கோலமடிக்கடிபுதிதாய்க்காட்டிநிற்குங்
குறையாதபெருந்திருவைக்கூடிவாழ்வாம். (௧)

வேறு.

கங்குலிற்சாம்பிக்கூம்புங்கடிக்கமலங்கடீர்ந்து
மங்கையால்வருந்திக்கேண்மைவன்மையால்வரவுகாண்டு
தங்களிற்களிப்புக்கொண்டுததும்பியதகையேபோலுஞ்
செங்கதிருதயநோக்கிச்சேயிதழ்மலர்ந்தவன்றே. (௨)

அன்னங்கணளினப்பள்ளிதுயிறணந்தருகுலாவப்
பொன்னளிமுழங்கமாறாப்புரிவளைத்தமரவாவி
தன்னெழின்மகவுநீங்கச்சலனமுற்றிருந்துவாடு
மன்னைபின்கண்டின்பூறுமாறுபோற்றிரைகளார்ப்ப. (௩)

பண்டுதீர்ந்தயலிற்சென்றோர்மீண்டுதன்பாலிலெய்தக்
கண்டுளங்களித்துப்பேசுங்காட்சியைக்கடுப்பவாங்கே
யொண்டொடிமருங்குசூழ்கொண்டோதைமாறாதுபோர்த்து
வண்டுகள்பாடக்கிள்ளைகுழறுவமலர்க்காவெங்கும். (௪)

வாவியைக்கண்டான்சோலைவளங்களைக்கண்டான்மேனாட்
காவலனோடுதங்கியிருந்துழிகண்டானெஞ்ச
மாவலிப்பெய்திச்சற்றேயயர்ந்துளந்தெளிந்துபின்னும்
பூவையோடிறங்கிநீருட்புகுந்துபோய்ச்சுரங்கம்புக்கான். (௫)

புக்குதூய்மணிகளாலும்பொன்றொகையாலுங்கூட்டிச்
சிக்கிருள்சீக்குஞ்சோதிச்செழுங்கதிருதயம்போலு
மிக்கொளிபரப்பிநின்றமிளிர்மனைவளைகண்ணுற்
றக்கவன்காணவுள்ளந்தகைந்துநாண்டடுப்பநின்றே. (௬)

இம்மனைவளைநோக்கியிதிற்குடியிருந்துவாழு
மம்மனைக்கண்டவேந்தனம்மினுயிரம்பங்காகச்
செம்மனைபோலுநண்பிற்சிறந்தவரெனினுமந்தோ
தம்மனைநீயுள்ளங்கொள்ளாரென்பதுசரதமாலோ. (௭)

எவ்வுழிச்சேமஞ்செய்தாயிறைவனையணங்கேயென்ன
செம்மல்வலங்குழலாள்கேட்டுப்பூட்டியமனைத்தாணீக்கிச்
செவ்விமன்னவனைச்சேர்த்தபேழையைத்திறந்துகாட்டக்
கௌவைகூரமைச்சன்கண்டான்கண்கணீர்மழைபோற்கால. (அ)

சீர்முகத்தெற்றிக்கண்ணீர்சிந்தமென்கரங்கள்சேப்ப
பார்முகத்துற்றுப்பூழிபுதையமெய்பதைத்துளேங்கி
நேர்மொழிமறந்தானுள்ளநிலைதடுமாறிச்சோர
வேர்வைகொண்டுயிர்த்துவாய்விட்டழுதிவைவிளம்பலானான். (கூ)

வேறு.

ஆனையரியேற்றினையுண்டதுபோலுமாங்குவுமோர்
பூனையையுண்டதுபோலும்புலக்கேட்டர்ணலக்கேடாய்
வானைவிழுங்கியகொடியமாஞ்சானினைக்கொல்ல
வேனையாவென்னினைந்திங்கிறந்தாயோநானறியேன். (க0)

தாமரைநூலிற்பெரியதந்தியுரற்கால்பிணிக்கச்
சேமத்துளார்ந்துயிர்போய்த்தீர்ந்தனவாமொக்குமிந்தக்
காமச்சழக்ககலாக்கைம்பெண்புரிந்தகொடுந்
தீமைக்குணீயிறந்தாயையாஞ்சீர்சிறப்பே. (கக)

சிந்தித்தாள்பாக்கியத்தைத்தீக்கொடியாடநஞ்சாற்
பந்தித்தாணீயுயிரும்பாழ்பட்டாய்நானேங்கிப்
புந்திக்கிடர்கொடுத்துப்பூவையர்போலேயழுத
நிந்தைக்கிடர்விளைப்பார்நீணிலத்திற்காணேனே. (கஉ)

நின்றாதையென்றாதைநீணிலத்திற்றனையொடுங்
கன்றால்விளவெறிந்தோன்போன்றுவலிகண்டிருக்கக்
கொன்றொருகொடியகூன்கிழட்டுத்தோசிமுண்டை
யென்றாலிதற்கழுதிங்கேங்காவோவென்வீரம். (கங)

தாதைபுரிசெங்கோற்றனையுணர்ந்தால்வெங்கூற்றும்
வேதைபுரியாவுலகில்யார்புரியமேவுகிற்பார்
தீதைவிலகாதுனுயிர்சேர்ந்திருந்தலோகமெங்கே
வோதையாவென்கவலைதீர்த்திங்குயிர்பெறவே. (கச)

என்னைப்பிரிந்திருக்கவிவ்வளவுமொவ்வாத
மன்னைப்பிரிந்துயிர்தான்வைத்தமதியிலியைப்
பின்னைக்குறித்துப்பெருநீருலகருமை
தன்னைக்கொடுக்குநலந்தானளிக்குந்தன்மையவோ. (கரு)

அன்பொருவிக்கற்றகலையாவும்புறம்பொருவிப்
பொன்பொருவிக்காந்துதிருமேனிபிணம்பொருவி
மின்பொருவிக்கட்கலக்கநேர்ந்ததுகண்டிப்பெரிய
புன்பிறவிநாணொருவிப்போகாதிருப்பேனே. (கசு)

வேறு.

இரவலராம்பறவைகணின்றிரவாமைவலுவினினின்றெவையுஞ்சோரத்
தரவலரிலாதுதவுந்தமனியத்தூய்மணிகுலவுந்தருவேநட்பின்
காவிலர்கண்ணொளியாயிப்புவியினுக்கோர்களைகண்ணாய்க்காவல்பூண்ட
புரவலநின்னடிபரவினாரேவற்புரிநாளும்பொருந்துமேயோ. (கஎ)

எண்ணாளுந்திறலரசர்நின்னேவல்கடவாநின்றிறைஞ்சியேத்த
விண்ணாளுமொருவனெனமின்னுமணிமுடிவேய்ந்துவிரிநீர்சூழ்ந்த
மண்ணாளும்பெரும்புகழைவாய்மடுத்திங்கேப்பமிட்டமறையாளன்னு
பெண்ணாளும்பகைவனுந்தோள்வலிநோக்கனழுதுபேதுற்றேனால். (கஅ)

அயிராவிவ்வுலகமிசையவதரித்தசீவர்கட்கோர்வாக்கைநீக்கி
யுயிரான்றதைக்கவர்வானீயுடனுயிரெனுமோருண்மைகண்டுஞ்
செயிராகவுயிரெனுமென்றனைநீக்கியுடலான திருவோய்நின்னைப்
பெயராவிண்ணுலகடைத்தகூற்றுவனோர்பழைமையினுற்பேதுற்றாரோ. (கக)

பலபன்னியமுழதானையழுதழுதுருகியாமற்பார்த்துநின்ற
நிலமன்னர்குலமகளுநெடுங்கரங்கொண்டமைத்தப்பாநீயேயிங்கு
புலனில்லார்போன்மயங்கிப்புலம்பினாற்புலர்வானபூமான்றானு
நலமன்னவேண்டாவோவெனக்கரைந்தாணயந்தமைச்சன்வினயநாடி. (உ0)

வாசநறுந்தயிலமிட்டுமணிப்பேழைதனிற்கிடத்திவைத்ததுங்க
ணேசமிகும்புரவலனைநேரிழையுந்தானுமனநேசநீங்காப்
பாசமொடுதூக்கியவிர்பொற்றவிசின்மிசையிருத்திப்பண்டுமெய்யிற்
பூசுதயிலங்கழியப்புதுவாசங்கமழுநறும்புனல்கொண்டாட்டி. (உக)

திருக்காப்புநுதன்முதன்மற்றவையவங்கண்முழுவதிலுந்திகழச்சாத்திப்
பொருக்காப்பொன்கலையணிந்துபுதுமணிகண்டிகைமணிப்பூண்பூட்டிநீங்கா
மருக்காப்புமலர்புனைந்தாங்கொருபுறத்தின்மறைவுபடவைத்துமாதை
யிருக்காப்புப்புறம்பகலாவெனப்பணித்துவினைபுரிவானிவைசெய்வானால். ()

மிக்குநறும்புனல்குடைந்துதவளமதிவெண்ணீறுமெய்யிற்பூசி
யக்குவடஞ்சிரங்கரங்கண்டமும்பூண்டுபுறக்கரணம்யாவுநீக்கிச்
சிக்குவாதனைபோக்கியகமுகமாயுட்கரணந்திருத்திமாண்டோன்
பக்கமுற்றெதிரினிற்பத்மாதனமேலமர்ந்துசெபம்பண்ணுவானாய். (உங)

வாக்குமனமெய்யமூன்றும்வசமாகியொருநெறியின்மன்னிநிற்ப
தாக்குமலவலிகோசநிலைபிரிவுற்றதிரேகமாயைதள்ளிப்
போக்குவரவற்றிருந்தபூரணத்தைத்தன்னெதிரின்பொருளாமுன்னிட்
டேக்கமுறுவாசியைப்பந்தகமாக்கிச்சுழிமுனைக்கண்ணேறநாட்டி. (உச)

தாரகமாம்பிரணவமூலந்திருத்திமூவிரண்டுதலமுந்தானாய்
நேர்பரவியசைவின்றிச்செபம்புரிந்தானொருச்சாமநேரமட்டும்
மாரணமன்னவனுடலினவயவங்கள்பயப்பயவேதுடிப்புவாய்ந்து
பூரணமாயுயிர்ப்பிறந்துதுயின்றவர்போல்விழித்தெழுந்தான்பூரிப்போங்க. ()

சாற்றுமெழின் முகவைமுத் தூரா மலிங்கச்சேதுபதி தன்னைக்கண்டாங்
கேற்றுவர்வெங்கலிகெடவன் பசிப்பிணிவிட்டகத்தடங்காவின் பங்கொண்
டோற்றமெனமேன்மேலுஞ்சொல்லரியபேருவகைதுளும்பச்செம்பொ [ட
னூற்றியசித்திரச்சலசமலரென வாண் முகமதிநின் றழகுகாட்ட. (௨௬)

மலர்முகமுமலர்விழியுமலர்வாயுமலர்க்கரமுமலர்மென்காலும்
புலருதயங்கண்டதிருப்புண்டரிகமன் றலர்ந்தபுதுமையொப்பக்
குலமகனும்பண்டயநல்வடிவினுமெண் கோடிபங்குகோலம்பொங்க
நிலமிசையன் ஞெருருபுதியமன் மதன்போலழகு கொண்டுநிறைந் திருந் தான். ()

பாரேயல்லதுவிசும்புபாதலமேமுதலாகப்பரந்துகோர்த்து
நேரேநின் றிடுமூலகினெடுநாளாய்த்தொடுத்திதுநாணெறிக்கேடாகப்
பேரேபோய்மாண்டவரைப்பிழைத்துவரப்புரியும்விஞ்சைப்பெருமைபூண்ட
தாரேயிங்கவன்போலுமொருவரைநாந்தெரிந்துரைக்குமவதியம்மா. (௨௮)

கற்றமதிமகன்புரிந்தவிஞ்சையினுலுயிரடைந்தகாவலோனு
மற்றவனைக்கண்டடங்காமகிழ்ச்சிதனதுளம்புதைப்பமறுகித்துள்ளி
யுற்றுமெய்மேல்வீழ்ந்தகலமுறத்தழுவியுடல்குழையமுகத்தையொட்டிக்
கொற்றமிகுமுத்தமிட்டோயாதிருகண் மஞ்சனநீர்கொண்டங்காட்டி. (௨௯)

அப்பாவுன் றனைப்பிரிந்திங்கெப்போதுநினைப்பில்லாதளியற்றேனை
யிப்போதெப்படியறிந்திங்கெய்தினைநீநான்புரிந்ததவந்தானென்னே
செப்பாயென் றயராதமுகமனெடுபலகாலுஞ்சிந்தைதேம்பிக்
கைப்போதாலடிக்கடிநன் முதுகுதைவந்தானந்தக்கடலுளாழ்ந்தான். (௩௦)

ஆர்சொன்னார்வாவியினீரகல்வதற்கெவ்வுபாயமுறையறிந்தாயென் றன்
காரிகையுநின்வரவுகண்டாளோவெங்குற்றாள்காணேமிங்கே
யாரடியம்மாவெளியேயரம்பைதனைக்கூவென்றனவளுங்கேட்டு
மாரணமாகியவேந்தன்வாயொலியென் றகத்துவகைமண்டநின்றே. (௩௧)

அங்குவரலாமோவென் றமைச்சனைக்கூய்வினவுதல்கேட்டம்மாநீயு
மிங்குவருவதிற்றடையொன் றிலையென்றான் போய்ப்புகுந்தாங்கெதிரினின் ற
மங்கைதிருமுகங்கண்டான் மாதவவேடப்பொலிவின் வனப்புங்கண்டா
னங்கையிதென் கோலமந்தோநான் றுயினீத்தெழுவதின் முன்னுடிநின்றாய். ()

சொல்லென்றுபலகாலுந்துருவியதின்பொருண்மனத்திற்றோன்றனுகி
மல்லொன்றுவசைப்புயத்தான்மம்மருழன் றுளம்வருந்துமாறுநோக்கி
நில்லென்றுகையமைத்துநீண்டிருகண்ணுலிமுலைநிறைத்துமேனி
சில்லென்றுவெயர்த்துமொழிகுழறவிளம்பசுங்கிளிபோற்செப்புவாளால் . ()

சத்துருவென் றுரைத்தமொழிதனைக்கேளாதுளமுவந்துதாயென்றாய்நின்
மித்துருவாமறையவனைக்கூவியவளாற்றெறிவாய்வீராநீசெய்
நித்திரையுநான்புனைந்தநீண்டுயர்மாதவக்கோலநெறியுமென்றாள்
புத்தியினுலாகித்துப்புலப்படாதவைகருதிப்பொருமுமேல்வை: (௩௪)

கன்னம்விலகாதழுழுத்தோசிமுண்டையுமக்கினிதாய்க்கையாலிட்ட
வன்னநுகர்ந்தென்புரிந்தீர்புகன்மினெனக்கேட்டரசனயர்ச்சிநீங்கி
முன்னைநினைப்புளங்கொழுவநல்லதுரைத்தாயந்தழுதிதைசோற்றி
லென்னவினைசெய்தாளோதெரியேனுண்டுமுடிந்தெழுதன்முன்னே. ()

குடல்புரட்டிவாய்குமட்டிக்கொடுந்தழலின்மழுக்காய்ச்சிக்கொழுத்தல்போ
னுடல்புரட்டித்தொண்டையைநாவுள்வரட்டியாருயிர்நின்றூசலாடப் [லெ
படபடப்புற்றறிவிழந்தேன்பின்னடந்தவகைதெரியேன்பாவியென்னைக்
குடிகெடுத்தாண்முண்டையவளெவ்வுழியாள்கூவுமெனக்குமரிகேளா. (௩௬)

பார்புரக்குந்துரையேநீரிவ்வளவோபேரறிவுபடைத்திரென்று
வார்முலையிற்றாளமெனமதர்மழைக்கண்டுளிசொரியவாய்விட்டார்த்து
நேர்மொழியில்லாதகொடுநீலியும்மைப்பிணமாக்கியென்னைநிந்தித்
தாருமுளஞ்சகியாததுயர்பூட்டிவிரற்புனைந்தவாழியோடே. (௩௭)

முன்னடத்தியெனைக்கூட்டிவிசையதரன்பால்விடுத்தாண்முடிகொள்வேந்
பின்னடத்தைதெரியாமற்காதல்கொண்டுவருமளவிற்பிரியமாகச் [தன்
சொன்னடத்தையால்விலக்கிவிரதமதிமூன்றுவரைதூய்தாயாற்றப்
பொன்னடத்திவாப்புரிவித்தங்குநமதரன்றிருத்தாள்பூணிப்புற்றே. (௩௮)

மந்திரியைவரவுநினைந்தரவுபுனைந்தவன்பணிக்கண்வதியுமேல்வைச்
சுந்தரனுநினைத்தேடித்துலைநாடிமுகம்வாடித்துயரங்கூடி
யிந்துமுடித்தவனருளாலிருபிறப்பாடன்மனைக்கணிருள்வாயந்நா
டந்திரமெல்லாந்துருவிமோதிரமுங்கைசேர்த்துச்சார்ந்தானென்பால். (௩௯)

கலந்துமொழிபலபேசிவிஞ்சையினுற்புறஞ்சூழ்ந்தகாப்புநீத்துப்
புலர்ந்துதைதயன்வருமளவிற்றிருவாவியடைந்திங்குபுக்குநின்னை
யுலர்ந்தபொழுதினிற்பதனம்புரிபெடகந்தனைக்காட்டவுற்றுநோக்கி
யலந்தலைப்பட்டோயாமலழுதிருகண்புனல்சோரவப்பாற்றேறி. (௪௦)

புனலாட்டிக்கலன்பூட்டிப்புதுமலர்கண்முடிசூட்டிப்புழுகுசோட்டிப்
பினைநாட்டிப்புகழ்நீட்டிப்பெயர்காட்டிவுயிர்மீட்டும்பெரியவிஞ்சை
தனைநாட்டிச்செபம்புரியவெழுந்தனையென்றுயர்ந்தகற்பின்றரமேற்கொண்ட
மனையாட்டிபுகன்றவெல்லாங்கேட்டனன்பின்னேதுசொல்லவல்லானம்மா.

ஏதுசெய்வதெதுபுகல்வதென்பதறியான்மயக்கமெய்திநெஞ்சின்
வாதனையுற்றான்மனைவிவழுத்தியசொற்கேளாதவகையுமெண்ணிப்
பேதையர்போனுணமுற்றான்பேச்சயர்ந்தானிவர்புரிந்தபெருமைநோக்கி
யாதரித்தங்கவர்க்குரியமுகமனுரைபலகாற்கொண்டறையாநின்றான். (௪௨)

பொன்போலுமதியுடையீரும்போலுஞ்சிறந்தபுகழ்ப்பூண்வேய்ந்தென்று
மன்பாலுங்குணத்தாலுமழகடைந்தாரொருவருண்டோவவனிமீதி
லென்போலுநன்மதிபோயெந்நாளுந்தீராதவசையேயெண்ணிப்
புன்பாலும்விலகாதார்புகல்பரலிலொருபாலும்புகறற்குண்டோ. (௪௩)

முந்தெமதுகுலமுழுதுமூவாநின்றுலகமிசைமுதன்மையோங்க
வந்துதவும்பெருந்தெய்வமாண்புடையீருமக்கினிநான்வாய்ந்தகைமா
றெந்தவிதமெப்பிறப்பிலெவ்விடத்திலெக்காலமினிதினாற்றி
நந்துதவிலாதநன்றிகொளுந்தகைமையுறும்பேறுநண்ணுவேனால். (௪௪)

இம்மோசஞ்செய்தானையெரிவாயிட்டவனையென்பாலேவினானை
யம்மாவெவீங்கூற்றினுக்கோராருவிருந்தாய்ச்செய்ததின்பின்னவனியோர்முன்
செம்மாதைமறுமன்றற்றெரியல்புனைகுவன்றவறிச்சிந்திப்பேனேற்
றம்மாதாவுக்கிடர்செய்வார்க்குறுதீநரகமெனைச்சாருமாலோ. (௪௫)

அறத்தாரும்புறத்தாரும்புரிவதற்கொவ்வாதவசையாற்றுப்பட்ட
திறத்தானைத்தானையொடுஞ்செங்குருதிவாயலகைதெவிட்டவூட்டி
நிறத்தாலேகிளறிசைகொண்டணியேனேல்விந்தைமகளென்னைநீங்க
மறத்தாரிற்கீழ்ப்பட்டுக்கடையாகிக்கொடுநரகில்வாழுவேனால். (௪௬)

இற்பிறந்தாளைத்துயரின்றலைசெறித்தான்முடித்தலையையென்கையேவான்
முற்படக்கொன்றவனகரமிருந்தையுகவெங்கனலான்முழுதுவேய்ந்து
தற்புகழ்கொண்டெனதுபுயந்தனில்விந்தைவிளையாடச்சமைக்கேனென்னிற்
சொற்பிறழ்ந்துமன்னவைபொய்க்கரிக்குறுவார்புகுநரகஞ்சூழுவேனால். (௪௭)

என்றிருகட்கடைசிவந்துபொரியொடுவெம்புகைதவழவெரியுஞ்சிந்த
மென்றுதடுதின்றிருகைபுடைத்தண்டமுடிகுலுங்கவிண்ணோர்பண்ணை
நின்றயலின்புறம்பொதுங்கநீண்டுறுயாதிரங்கலங்கநெளித்துச்சேடன்
றன்றலைகம்பிதங்கொள்ளநகைத்துருமேறெனச்சினந்துசாற்றலோடும். ( )

மந்திரியுமையாவம்மன்னவன்செய்கொடுந்தொழிலைமதித்தேயென்றன்
சிந்தைவருந்தினனென்றான்மாவீரகேசரிநின்சிந்தைதானு
னொந்துவருந்துவதுவெளியிடச்சிறிதோவேறுரையென்னுவல்வேன்வீரர்
பிந்தியினிச்செயுங்கருமமுந்தியெடுத்துரைப்பதுவும்பிழையாமன்றே. (௪௯)

செப்பியநின்வஞ்சினமுந்தீராதமனத்துனியுந்தீரும்வண்ண
மப்படியேபுரிகுதுமாலதுகாலந்தாட்காதிவ்வரங்கைநீங்கி
யொப்பரியபூவுலகைச்சேர்ந்துநமதசுவமதையுடனேகைக்கொண்
டிப்பெரியகாரியமேலேகுதல்செய்வோமென்றானிசைந்தான்மன்னன். (௫௦)

ஆயபொழுதன்னமன்னனீர்குடைந்துபூசைமுறையாற்றியன்னந்
தூய்மையதாயட்டிடவாங்கவர்நித்தக்கடன்முடித்துத்துய்த்தாரிட்ட
பாயசமுப்பழம்வடைதேன்பாற்குழம்புசோறுகறிபருப்புநெய்சேர்த்
தேயமனத்தாயாசந்தீர்துயில்வுற்றணிசோலையெய்தினானால். (௫௧)

வேறு.

மந்திரிவிரைந்துதங்கமாபுரிதன்னிலன்னந்
தந்தவண்மனையிற்புக்குத்தனியுபசாரஞ்சாற்றிக்
கந்துகங்களைக்கைக்கொண்டுகண்ணமைப்பதற்குமுன்னம்
வந்தனனிரதமொன்றுசெய்குவான்மனத்துளெண்ணி. (௫௨)

கற்றதன்விஞ்சையாலுங்கைவலியாலும்புத்தி
யுற்றநுட்பத்தினாலுமும்பரின்விமானமேலாய்க்
குற்றமில்லாதவாசத்தருக்களின்குலங்கள்கூட்டி
மற்றுளமணியாற்புத்திசிகாமணிவகுத்தான்மன்னோ. (௫௩)

குத்துக்காற்சட்டமச்சுக்கொடுஞ்சிபொன்னுருளைகூட்டிச்
சித்திரம்புதுக்கிப்பச்சைசெழுந்துகிர்மணிப்பொன்னீல
நித்திலங்குயிற்றித்தாமநிரைநிரைமறுகுதூக்கிப்
பத்தியிட்டுயர்த்திச்செய்தான்பரிதிதேர்பழைமைதோன்ற. (௫௪)

மண்ணமையாதுதட்டைமாதிரம்பொருத்துகின்ற
விண்ணமையாதுநீளம்வெற்பமையாதுதிண்ணங்
கண்ணமையாதுசோதிகவிஞராலுவமைசொல்ல
வெண்ணமையாதென்றாற்பின்னெனதுகுறித்திபம்பச்சாலும். (௫௫)

ஆத்தடந்தேரைநோக்கியதிசயித்தண்ணலிந்தப்
புத்தியும்விநயப்பாடும்விஞ்சையும்புதிதாய்க்கற்ற
வுத்தமனினதுசெங்கையுளைவுறாதிதனையாற்றுஞ்
சித்திரவினைக்கிற்றான்புசேமத்தைத்தின்னுமன்றோ. (௫௬)

அளவறுசெல்வத்துய்த்தோர்யாவரென்னினுமோர்காலம்
வெளிவரிவெளிமையாகிமெய்யுளைவதுநோக்காது
களவறுவினையின்மூள்வரென்பதுன்கண்ணதாமென்
றுளமெலிந்தன்புகூறியுருகினனுயிர்த்துநின்றான். (௫௭)

வலங்கொடுவணங்கிப்பூசைவான்முறையாற்றித்தேர்மேற்
பொலங்கொடியோடுதானுமேறினான்புலவரார்ப்பக்
கலங்கலிலாதபுத்திசிகாமணிகைக்கோல்வாங்கி
நலங்கிளரசுவம்பூட்டியோட்டினனெறியைநாடி. (௫௮)

பூண்டுறுகலினவேகப்புரவிகண்முனைந்துசெல்லத்
தூண்டினன்றார்க்கோனீட்டிச்சூழ்பெருங்கடலுந்தீவு
நீண்டமாதிரமும்பாருங்குலுங்கிடநிமிர்ந்துவானின்
றீண்டுபொற்கொடிகளாடச்சென்றதுதெய்வத்திண்டேர். (௫௯)

சிறுவரைநொருங்கவானஞ்செறிபணைமரங்களெல்லா
முறிபடமுழங்குயோதைமூரிநீருவரியார்ப்பக்
குறுகிடக்கோவையண்டங்கோப்புவிட்டலையப்பாரி
னெறிகிழிந்தாறுமாறுநெடுந்திரைகொழிப்பச்சென்ற. (௬௦)

குன்றமும்புறவும்பாலைவனங்களுங்குறைத்துநீங்கி
யென்றுவெஞ்சுடர்புகாதவிருநெறியெல்லாந்தாவி
யன்றலர்ந்தொழுகுசெந்தேனணிமலர்ப்பொலிவுகாட்டு
மன்றலம்பணைசூழ்வேலிபூகநீண்மருதம்வந்தார். (௬௧)

கோட்டமில்லாதநல்லோர்குணங்குறித்தெந்தநாளுங்
கேட்டவர்கண்டபோதங்கவர்க்கிவர்கேண்மைநீட்டிக்
கூட்டிமெய்தழைதல்போலுங்கோமகன்வரவேற்றன்பு
பூட்டிநன்மருதமென்னும்பூமகளுடல்பூரித்தாள். (சுஉ)

பனிமலர்ச்சோலையெங்கும்பாளினுக்குருகிமந்தி
கனிகவர்ந்தாட்டுந்தோறுஞ்சிந்தியகமழ்பூந்தேறல்
புனிதமள்ளியராறுபொலிவித்தபுலம்பாய்ந்தோடி
நனிதுவர்கழ்ந்துதூயநலந்தருநாரமாக்கும். (சுங)

வீரனைக்காணுமாசைவேட்கையாற்பலகண்கூட்டிப்
பாரினினோக்குகின்றபான்மைபோற்கலாபர்தூக்கிக்
காரிகைக்கினமாயுள்ளகளிமயிலீட்டங்கோடி
நேர்நெறியிடங்கடோறுநின்றுகூத்தாடுமாலோ. (சுச)

வாவியும்பூகவேலிவயல்களும்வண்டுமொரூப்
பூவிருந்தழகுகாட்டுநாட்டுளபொருள்கணோக்கித்
தேவியுமமைச்சுந்தானுந்தேரொடுவிரைந்துசென்றோ
காவறிந்ததிலேபுக்காங்கிருந்தனர்காலந்தாழ்த்தே. (சுரு)

புவனேந்திரனுயிர்பெற்றபடலம்-முற்றிற்று.

ஆகப்படலம்-௩0-க்குத் திருவிருத்தம்-கருஅக.

பூலோகரம்பையைத்தேடவிட்டபடலம்.

சூதானவெளியாகிச்சூதுதீர்ந்த
சுயம்பாகிவயம்பெருகுசோதியாகிப்
பேதாதிபூதநிறைபுவனமாகிப்
பிறப்பிறப்புப்பிணிமூப்பின்பிரிவுமாகிக்
கோதானபலகன்மக்குழுவுமாகிக்
குறைகடந்துகுறையாதகுணக்குன்றாகித்
தாதாவாயெனைக்கலந்துதானேயாகித்
தனியானதன்னிலையிற்றனித்துவாழ்வாம். (க)

வேறு.

ஈதெலாமறியானாங்கித்தவத்தினால்வருந்தியீன்ற
மாதினையிழந்துவாடுமன்னவன்விரிஞ்சதேசன்
றூதரைவிளித்திநீவீர்தொல்லைவான்கடல்சூழிந்தப்
பூதலமுழுதுந்தேடிப்பூவையைக்கொணர்மினென்றே, (உ)

நடத்தொழிற்பாவையன்னநங்கைதன்வனப்புமுற்றும்
படத்தினிற்கோட்டியொற்றர்பாற்றரவாங்கிவேந்த
னிடத்தினிற்செலவுபெற்றாங்கெழுந்தனர்பவனவேகந்
தொடுத்திடப்புவனியெல்லாஞ்சுற்றினார்துருவினாரால். (௩)

தீவுகளேழுஞ்சூழ்ந்ததிரைக்கடலேழுமற்றைப்
பூவுலகதனிலுள்ளபொருப்புகண்முழுதுந்தூய்தாங்
காவுகள்கழனியோடைகயஞ்சிறுகூபந்தொட்டு
மேவியவிடங்களூடுநகர்முதன்மிடைந்துநாடி. (௪)

கோற்றொடிதனைக்காணாதுகொதித்துளம்வெதும்பிவாடிக்
காற்றினுங்கடியவேகர்கோடிமேற்கலந்ததூதர்
மாற்றொருவிநயமின்றிவாய்புலர்ந்தயர்ச்சியோடுங்
கூற்றின்வாயுயிர்போலந்தச்சோலையைக்குறுகினாரால். (௫)

வானளவாகிநீண்டுமாதிரத்தளவுஞ்சூழ்ந்து
கானளவாகிப்பூவுங்காய்களுங்கனியும்வாய்ந்து
தேனளவிகந்துநின்றசெழும்பொழிலூடுபுக்கார்
கோனளவாகிவந்ததூதுவர்குழாங்களம்மா.. (௬)

அப்பெருங்குழாங்கள்கண்டாங்கரசனுமிவர்கள்யாவ
ரிப்பெருஞ்சோலைவந்தீங்கெய்தினாரேதிலார்செய்
தப்பிதக்கூட்டமோவென்றெண்ணினான்சங்கைதீரா
னெப்படிக்கானபோதுநீக்குதலியல்பாமென்றே. (௭)

பகர்ந்தசொற்கேளாமுன்னம்பாவையுங்கூர்ந்துநோக்கி
யகந்தெளிந்தையாவிந்தக்கூட்டமாற்றலர்களன்று
சகந்தனிலென்னைநாடித்தாதையாலேவவீங்கு
புகுந்தவர்போலுமென்றுடுதேருமடுத்துப்புக்கார். (௮)

புக்குளதூதர்தம்மிற்பொருபடைத்தலைவனான
வுக்கிரவீரனென்னுமுயர்மதியவனுமாங்கு
தக்கவரோடுமுற்றதையலின்வனப்புமுற்றுஞ்
சிக்கறநோக்கிநின்றுசிந்தையிற்றெளிவுகொள்வான். (௯)

ஆர்கொலாமிவர்களிந்தவடவியிற்படையொன்றின்றித்
தேரொடுந்தெரிவையோடுந்தீரர்களிருவர்சேர்ந்த
காரணமிவளுந்தேவரூரினிற்சலந்துவாழும்
வார்முலையரம்பைமாதோவலதுநமரம்பைமாதோ. (௰)

இங்குளவிருவர்தங்களெழினலமெண்ணுங்காலைச்
சங்கரன்மகனுங்குல்லைத்தாரவன்மகனுமொப்பத்
திங்களின்முகமுங்கஞ்சத்திருக்கையும்பவளவாயுங்
கொங்குயர்தோளுந்தாளுங்கொண்டனர்குறைவொன்றின்றி. (௧௧)

ஒருவனேவேந்தனுக்கொருவனேயமைச்சனுக்கு
இருவரில்வேந்தற்கிந்தவிளம்புலைமகளுங்காதல்
மருவினளிவர்க்குவேறோர்மாற்றலனுலேதுன்பம்
பொருவினபோலுஞ்சிந்தைபொருமியேபுலருகின்றார். (கஉ)

என்பனவறிவாற்றோர்ந்தியுக்கிரவீரனென்பான்
றன்பெருங்கூட்டநீங்கித்தனித்தவன்படர்ந்திடுநேடும்
பின்பவரிடத்திற்புக்குப்பேதையும்படமுமொன்றாய்
நன்பெரும்பொருளைக்காட்டநாதிபன்மகளென்றோர்ந்து. (கங)

மன்னவன்றன்னைத்தாழ்ந்துமாதையும்பணிந்தான்மன்ன
னெந்நிலத்துள்ளாய்நீபுரிப்பெருங்கூட்டஞ்சூழ
விந்நிலம்புகுந்தாய்வந்தகருமமென்னியம்புகென்றா
னன்னவன்பின்னும்வேந்தனடியிணைபோற்றிச்சொல்வான். (கச)

மண்ணுலகதனிலெல்லாவளங்களுமலிந்துமல்கும்
விண்ணுலகதனையேய்க்கும்விரிஞ்சதேசத்தையாளு
மண்ணலெம்விரிஞ்சன்மேனாளாற்றுமாதவத்தாலீன்ற
பெண்ணிவளெனமோகாலபேதத்தாற்பிரியமன்னன். (கரு)

வாடினனழுதுசோர்ந்துபலர்க்கணீர்மழைபோல்வாரத்
தேடினன்செவ்வுதந்தேயங்களைச்செலுத்திநாங்க
ளுடுகாடாகவந்தநாட்டொடுத்திதுநாட்பட்ட
பாடுகண்டெடுத்தநாளேனுமனந்தனும்பகரற்பாற்றே. (கசு)

அண்டத்தைக்கடந்துநீடவனைகர்போயமைந்தார்நாங்கள்
பண்டுற்றதவத்தாலிந்தப்பாவையையையயாவீங்கு
கண்டுற்றோமென்றுநெஞ்சஞ்சவல்கொடுகண்ணீராகலக்
கொண்டுற்றபடத்தைநீட்டக்கோமகன்குறித்துவாங்கி. (கஎ)

நோக்கினன்படமுமாதுநுண்பெருமழகுமொன்றாய்
நீக்கமில்லாதுகாட்டுநீர்மையைநினைந்துமோக
மேக்கனன்மாறிமாறித்தேமையைப்படத்தைப்பார்த்து
மூக்கணிவிரல்வைத்தோயாததிசயமுதிர்வுற்றானால். (கஅ)

தன்பெரும்வனப்புமுற்றுந்தவறிடாதமைத்துச்செய்த
பொன்பெரும்படத்திறக்கோட்டுமிலாஞ்சனம்புரிந்துநோக்கி
மின்புரைமருங்குற்பேதைவியந்துதன்னெதிரினின்ற
வன்புறுதூதன்றன்மேலருள்சுரந்துரைவதானாள். (ககூ)

தூதவவிரிஞ்சதேசமுழுவதுஞ்சுகமோவென்றன்
றாதையுஞ்சுகமோபெற்றதாய்செவிலித்தாயாதி
மாதருஞ்சுகமோமென்பூவைகிளிபொன்னன்னபாவை
தீதிலவோவென்றாள்கேட்டவனுளநெருமல்கொண்டே (உ0)

அன்னைநீபிரிந்தகாலந்தேடியிங்கடைந்தநாங்கண்
மன்னவன்செயலுந்தாயர்மார்க்கழுநகர்நாட்டுள்ள
தன்மையுமறிதற்கெங்குசார்ந்தனம்பூவைகிள்ளை
பொன்மணிப்பாவைமீதுமறப்பிலைபோலுமந்தோ. (௨௧)

கெடுவரோநல்லோர்பொல்லோர்கெடநினைந்திட்டபோதும்
படுவரோகீழ்மைதுக்கம்படைப்பரோபடைத்தபோதும்
விடுவரோவிழுமமென்றவியப்புரையெல்லாமிந்தக்
கடுவிழியவள்பாற்கண்டேனென்றெனக்கவன்றுதூதன். (௨௨)

நகரினைநீங்கிப்பொல்லாநாசத்தாற்கோட்பட்டாயென்
றகமுழந்துற்றுநின்பேராயங்கள்புகல்க்கேட்டு
மிகமெலிவடைந்தோமந்தவினைகடந்திவரைச்சேர்ந்த
தகவறிந்தாலோநாங்கடேடுதல்சமையோமம்மா. (௨௩)

உருவிலாவொருவன்றன்னையழகனென்றுயர்த்திச்சொன்ன
பெருதமிழ்க்கவிஞரிந்தப்பெருமைசாலவனுக்கென்றே
பெரருணயந்துரைக்கலாவார்பூவைநீபுரியாநின்ற
தருமமோவிவரைச்சார்ந்தாயாவருந்தவம்பெற்றோமால். (௨௪)

நற்றிருவனையாயெந்தநாளினுலையேயன்றி
மற்றினிக்குறைகளில்லவாமெனமகிழ்ந்துபேசிக்
கொற்றவற்போற்றியிந்தக்குமரியையையாநீயிங்
குற்றதுமுதலாயெல்லாம்விவரமாயுரைக்கவென்றான். (௨௫)

புன்னகைபுரிந்துபுத்திசிகாமணியொடுதாம்போந்த
தன்மையுமமைச்சனீங்கத்தையலைமணந்துவாழ்ந்த
நன்மையும்விசயதேசநாதிபன்கைமையாற்செய்
தின்மையும்பின்னுமுள்ளசெயலும்விண்டிதனையெல்லாம். (௨௬)

கடங்கலுழ்யானையானுக்கறியவேகாலந்தாழா
முடங்கலொன்றெழுதியீயென்றுரைத்ததன்முதல்வன்வாய்மை
யடங்கலுமமையக்கோட்டியமைச்சனுங்களிக்கவாங்கிப்
படங்கொடுவந்ததூதன்பணிந்துபின்னிதனைச்சொல்வான். (௨௭)

ஐயமீருங்கண்மாட்சியாண்டுகண்டறைதற்காவேம்
வெய்யகானீத்துக்காலன்விரைவினிற்புக்குமுன்னீர்
வையகம்புரக்குமெங்கண்மன்னையிவ்வுழியில்வல்லை
யெய்துதற்கமைப்பேமென்றுவினிதுவந்திறைஞ்சிச்சென்றான். (௨௮)

சென்றவன்குழுவோடன்றேசேணதர்முழுதுநீங்கித்
தன்றிருநாட்டிற்புக்குமளவையிற்சாரக்கண்ட
மின்றிகழ்புரிசைவாயிற்காப்புடைவீரரோடி
மன்றலந்தொடையன்மார்பன்மலரடிவணங்கிச்சொல்வார். (௨௯)

எகியதூதர்கூட்டமேந்தனின்றவத்திற்றோன்றுந்
தோகையைக்கண்டார்போலுந்துள்ளியகளிப்பாலுள்ள
மோகையங்கடல்கொண்டார்ப்பவுற்றனரிற்றென்றோத
வாகைவேலவனுங்கேட்டான்கூட்டமும்வந்ததன்றே. (௩௰)

வந்துறுதூதர்கூட்டமழையெனமுழங்கியார்த்து
மந்தாரப்புயத்துமன்னன்வைகுபேரவைக்கண்மன்னி
புந்தியின்மகிழ்ச்சியோடும்போற்றினாரவர்தங்கட்குட்
டந்திரயூகச்சேனைத்தளாதிபனங்குசார்ந்து. (௩௧)

போற்றினானுவகையுள்ளம்புதைதரப்போய்வந்துற்ற
மாற்றமொன்றுரையானாகிமலர்க்கணீர்மழைபோல்வார
வாற்றறோற்றிலனாயின்படம்புரிந்தவசனாகி
வேற்றவர்தெளிப்பத்தேறிவிளம்புவான்விழுமந்தோன்ற. (௩௨)

கடன்மலைகாடுமேடுகதிர்விளைபழனஞ்சோலை
யிடமுதற்பிறவுந்தேடியெய்த்துளம்வருந்தியாவி
விடுபவர்போலெல்லாமும்விசையொடடைந்தேயாண்டோர்
நெடுமரப்பொதும்பர்புக்குநின்பெருந்தவத்தைக்கண்டோம். (௩௩)

கண்டதோர்காட்சிபோலுங்காரிகைகருமமுற்றும்
விண்டிடமுடியாவாகியுள்ளத்தைவிழுங்கநாணங்
கொண்டனனெனதனைத்தேறிக்கூறுவேனரசேநின்ற
னண்டையிற்புலவர்மானக்கற்றபேரறிவிலேனே. (௩௪)

(வேறு)

காவினிற்பசுநறுங்கனிகளின்பிரசநீழ்கழனியின்கண்
மேவுபைங்கூழ்வளர்ந்தமரர்பொன்னுலகினும்விளைவுமல்கத்
தாவரித்தனமிகுத்திலகுநல்வளனெலாந்தழையநாளும்
பூவினிற்றிருவிருந்தரசுபூரித்தகாம்போசமனனே. (௩௫)

சீலவங்ககரினுக்கிறையவன்றெய்வவிந்திரனையன்ன
தாலவிந்திரன்முனம்புரியுயாதவமெலாந்தரணியின்கண்
பாலனாயவதரித்தருவினிற்றிருமலர்ப்பகழிமாரன்
போலவந்தழகெலாங்குடிபுகுஞ்சிவனருட்பொலிவுறீக்கோன். (௩௬)

சுமந்திராகரனமைச்சியல்செயும்புலவரிற்றூய்மையுள்ளஞ்
சமந்திராசனையநுண்மதிமகனிவனினுந்தன்மைநண்பா
னிமந்தராவினைகளுந்தரவலானிரவலர்க்கெழில்போல்வார்
நிமந்தராரியபன்னூல்பயின்றட்டமாசித்திசேர்ந்தார். (௩௭)

கராசலங்கதறவன்றேவுகைத்திகிரியாற்கராமடித்தோ
ராராவினிற்றுயிலுமாலவனுமிங்கவர்களுமன்றியாவர்
தராதலத்திணைசொலச்சாருவார்நேர்பெருந்தாதைபாலிற்
பாரவரும்விடைகொடிவ்வுலகெலாமுறுவளம்பார்க்கவந்தார். (௩௮)

காவுகானுடைதண்கழனிமால்வரைகடற்கரைமிகுத்த
தீவுதேயங்கள்போயிமையநீள்சாரலிற்றிகழ்தடங்கா
மேவிமந்திரியினுற்போனசந்தரமனம்விளையும்வீர
னேவில்வாளரைவென்றனதுநன்மகண்மணந்துலவுநாளில். (௫௯)

ஆதகாதவனெனும்விசையதேசத்தையாளரசனென்பா
னோதகாதகைமைபொல்லாதவட்கொண்டுநல்லுரைதராத
பாதகாதிகள்புரிந்தரிவையைப்பழுதினிற்படர்தல்காணச்
சூதகாதந்தெரிந்தறிஞன்வந்தவ்வயிற்றன்னியன்றே. (௬௦)

அரசனுக்குயிர்கொடுத்தவனைவெல்குதுமெனுமாண்மைதோன்றப்
பரசினூர்மதுவிரிந்தொழுகுபாதவமுறும்பழுவமென்றே
யுரைசெய்தங்கவர்தருமோலைகையுதவிறனுரைதராமு
னிருபனெஞ்சினின்மிகுந்துலவுமன்பாழியினீந்தல்கண்டான். (௬௧)

ஓலையுந்தூதர்வாசகமுநோக்கவேயொத்துநோக்கி
மாலைசந்தனமணித்தூசிவர்க்குதவுசீர்பன்னர்மன்னன்
சாலையந்தணரிலங்கோயில்பூசனைமுதற்றழையவாற்றிக்
காலையிற்பயணமென்றுரைசெய்தானகரெலாங்களிதுளும்ப. (௬௨)

பூலோகரம்பையைத் தேடவிட்ட படலம்,

(முற்றிற்று.)

ஆகப்படலம்-௫௧-க்குத் திருவிருத்தம் (௪௯௫௧)

எழுச்சிப்படலம்.

தத்துவத்தைத்தத்துவமாறைந்துமாறுந்
    தான்கடந்துவெளியானதலத்திலார்ந்த
சுத்தமதையத்துவிதவிரிவைஞான
    சொரூபசுகவிம்பமதைச்சுடரைக்குன்றா
வத்துவைநற்பாக்கியத்தைவழக்குத்தீரா
    வருஞ்சமயசாகரத்தைமௌனமான
நித்தியத்தையழியாதநிலையையுள்ள
    நீங்காதநீக்கமதைநினைந்துநிற்பாம். (௧)

வேறு.

அன்றெழிந்திரவிகீழ்த்திசையில்வந்துறுதலுமரசர்கோமான்
நன்றுகாலையின்விதிக்கடன்முடித்துரியநற்றுணைநல்கித்
தன்றிருப்புதல்வியைக்காணுமாசையினுளந்தழையுமன்பா
லின்றுநம்படையெலாம்விசையதேசத்தின்மேலெழுகவென்றான். (௨)

சொற்றவாசகமுணர்ந்தணிநகர்ப்புறனெலாம்பறைதுவைப்ப
வுற்றவாகினிகளிற்கலினவெம்புரவிதேரும்பல்காலாள்
வெற்றிவெண்சங்குபல்லியமணிக்கவரிவெண்கவிகைபீலி
மற்றுமுள்ளனதிரண்டற்றுகாந்தத்தினுமண்டியார்ப்ப. (௩)

வேறு.

நதிசரங்கிரிசரம்வனசரமெனநவிலுமூவகையான
கொதிகொளுங்கனற்றருவிழிமுரஞ்செவிக்கோடுநிமிர்வானின்
மதிபிளந்துவெண்ணிலவுகொண்டெறிவனமதமழைநிரைகாலும்
புதியவாரணநிரைநிரைபுயலினும்பொருப்பினுநெறிபோத. (௪)

மல்லர்கேகயம்வானரமழவிடைவழிபயில்பெருவேகம்
புல்லவாய்ந்துநீள்புணரிவெண்டிரைகளின்பொலிந்தனபுலநீடு
நல்லமெய்நிறங்குரல்சுழிநாற்றமுநனிதரயமான
செல்வவாம்பரிகணக்கிலநடந்தனசேடனுஞ்சிரமாற. (௫)

அடியுயர்த்திவச்சிரத்திறலெச்சிகைத்தம்பொறலுருண்மாட்டி
முடிதுலக்கிமற்றருகெலாநவமணிமுழுவதுமுறைவேய்ந்து
கொடிவிரித்துவிண்ணுலகினுமரம்பையர்குழுவினுங்கூத்தாட
நெடியசக்கரப்பொருப்பெனத்தேர்த்தொகைநெருங்கினநெறியெங்கும்

எய்யும்வில்லினர்கோலினர்வேலினரெரிசுடர்க்கதிர்நேமி
பெய்யுங்கையினர்பெருமழைதன்னினும்பெருகியசிறுசொல்லர்
வையநுங்குநாள்பொங்குவான்கடலினுந்தொகைசொலவரம்பாகா
வெய்யகான்புலிவீரர்களெங்கணுமிடைந்தனர்தொடர்ந்தேக. (௭)

பானுவெங்கதிர்மறைத்திருள்பரப்பியங்கவிர்பனிமதிகோடி
தான்முளைத்ததுபோன்றுவெண்கவிகையுஞ்சாமரப்பெருங்காடும்
வானகத்தினுந்திசையினுமலிந்தனதுவசமுமருகார்ந்த
தானைமாக்கடன்மடுத்துவிண்ணுலவியமுகிலினுந்தழைத்தோங்க. (௮)

சங்குவிம்மினதூரியமார்த்தனசடாரிகண்முழங்கினமதமா
மங்குலாமெனப்பிளிறினவாசிகளொலித்தனமணித்தேர்க
ளெங்கணுந்தொனிகிளம்பினவயவரார்ப்பெழுந்தனதிரைவாரி
பொங்குமோசையைப்படுத்தனநிலத்தினும்விசும்பினும்புகழ்கூர. (௯)

கருதுநாட்கடையுகந்திரண்டுடைத்தவான்கடலினுமிடநீடி
வருபதாகினித்தொகைசெலமகிபர்மந்திரித்தலைவரும்போத
பொருதுமால்களிறனையநல்விரிஞ்சனும்பொன்மணித்தேரேறி
மருதிடந்தவனெனத்திருமுடிமிசைமதிக்குடைநிலவூர. (௧௦)

புனிதவாணுதற்பூவையர்கவரிகால்புரட்டிடவிருபாலு
மினிதுவந்துநான்மறையவராசிகளியம்பிடத்தமிழ்வாணர்
நனிதுபாடவந்திகர்சனம்விலக்கிமேனயந்துகட்டியம்போட
வனிதமானமற்றவரெலாமுற்கொடுமன்னனின்மகிழ்ந்தேக. (௧௧)

வாசியாள்கரிதேர்கொடிசிவிகைமற்றுளவெலாம்வரைவில்லா
தூசியூடுசெல்லாவகைநெருங்கியார்த்துறுத்துமாநெறிபோதத்
தூசியாழ்கடல்சுவற்றிவான்சூரன்வெஞ்சுடரொளிநிரைவீட்டி
யாசையெங்கணுமிருட்பிழம்பாக்கினவமரருமஞர்கூர. (௧௨)

பவமணித்திடாதுலகியலறமெலாம்பரித்துமன்னவற்காக்கிச்
சிவமணித்தநல்லிதயமும்வாய்மையுஞ்செய்கையுந்திறம்பாவாற்
றவமணித்தவனமைச்சரின்முதன்மையன்றனக்குநேரிணையில்லா
நவமணிப்பெயர்மதிவலானடத்திடநடந்தனநெறிநாடி. (௧௩)

யானையீட்டமோகுதிரையின்கூட்டமோயாளியொத்தனவீரர்
சேனைவெள்ளமோவாத்தியச்சும்மையோதேர்கொடிகுடையாதி
யேனையுள்ளனபெருக்கமோகணக்கினிற்சுருக்கமாயெடுத்தோதில்
வானைநீங்குறுமீனினைக்கடலினுண்மணலினைவரையாவால் (௧௪)

மாடவீதிவிட்டணிநகர்ப்புரிசையும்வாயிலுங்கடந்தேகி
யூடறீர்ந்திருசிறகராற்பேடையைநீவிமெய்யுவப்பாக்கி
மாடணைத்தொளிர்நளினமேலனந்துயில்வளம்பணைகுளஞ்சூழ்ந்த
நாடகன்றுமற்றருவனம்பெருவரைநடந்ததர்நனிநீத்தே. (௧௫)

கானுங்கான்வரையருவியுமோடையுங்கழனியுந்திருநாடுந்
தானுநால்வகைப்படைகளும்பெரும்படைத்தலைவருமுடனுக
வானுங்கீழுறமேலுறுசினைமலர்மதுகரங்குடைந்தூதுந்
தேனும்வேரியுநிரம்பியபொதும்பரைச்சேர்ந்தனன்சேரமுன். (௧௬)

விண்ணெலாஞ்செழுங்கேதனமதிக்குடைவிரிந்துவெங்கதிரோட்ட
மண்ணெலாங்கரிதேர்பரியாள்விபினத்தினுமலிவாக
வெண்ணெலாங்கடந்துற்றவிச்சேனையையிருவருமெழில்வாய்ந்த
பெண்ணெலாந்தொழுமரசியுங்கண்டனர்பிரியமுற்றெதிரெய்தி. (௧௭)

அடியிறைஞ்சினார்விரிஞ்சனுந்தேரைவிட்டவனியின்மீதாகிக்
கொடியையமார்புறத்தழுவினன்கட்புலன்கொண்டுமஞ்சனமாட்டி
நெடியதுன்பினுக்கிரங்கினன்பரிவினன்மருகனைநேர்நோக்கி
வடிவுணர்ந்தனன்றுமறந்துள்ளமுமடங்கொணமகிழ்வானன். (௧௮)

வேறு.

மருகன்வனப்புமகள்வனப்புமாறுபாடொன்றின்றிப்
பொருவுந்தரத்தைநேர்நோக்கிப்பூரித்திருகண்புனல்வெள்ளம்
பெருகமிதப்பொத்ததினீந்தும்பெருந்தேரரசன்பிரியாம
லருகினிற்கும்புத்திசிகாமணிக்குமுகமனறைந்தனனால். (௧௯)

மூவருடனுந்தானகலாதெழுந்துமுத்தின்குடைநிழற்றக்
காவலாளன்மதுமலர்ப்பூங்காவிலணுகியோர்புறத்தின்
மேவியிருப்பவிரிஞ்சநகர்வேந்தனமைச்சன்நவமணியு
மாவன்மிகுந்தங்குறுபடையுமிவரைவணங்கியருகடைந்த. (௨௦)

அரவாலிடையூறடைந்ததுவுமாசனதனைத்தடிந்துதன்னை
மருவாமணம்பெற்றிருந்ததுவுமறையோர்குலத்தின்மணமிழந்து
பெருவாரணவஞ்சகிவினையாற்பிழையுற்றதுவும்பினுநடந்த
கருமாகருமங்களும்புகல்வுற்றரம்பையுள்ளங்கரைந்தனளால். (௨௧)

கேட்டதந்தைதனதுளமுங்கிலேசித்தெரிவெந்தீயினிடை
நீட்டுமெழுகொத்துருகியிந்தநிபந்தீர்ந்திடநம்வலியெல்லாங்
கூட்டிப்பகைவன்றனையுமறைக்கொடியாடனையுங்குலமடங்க
வீட்டிநகரைத்தீமடுத்தபோதும்விலங்காமிகையன்றோ. (௨௨)

வானம்புவிபாதலமூன்றின்மற்றவுலகிலெலனைத்தெரிந்த
கோனென்பவரும்முனிவருந்தேவர்குழுவும்பிறர்குழுவுந்
தானிங்கிதுசெய்திடக்கருதாரந்தோவிந்தத்தரணிமிசை
யீனம்பொருவும்விசையதரான்புரிந்தானந்தமிசைநன்றே. (௨௩)

குலத்திற்பிறந்தார்களவின்கண்மனத்திற்குறியாக்கொடுஞ்செய்கை
பலத்திற்சிறியவிசையதரன்படைத்தானென்றாற்பரவைசுற்று
நிலத்திற்சிறந்தபுகழாளர்க்கெதிரோர்மாற்றநேர்கின்றே
வலத்திற்புகலநமக்கினிமேலெந்தநாளும்வாயுண்டோ. (௨௪)

சொல்லாலினியென்பயனுளதிங்கவனைச்சேனஞ்சூழ்களத்திற்
செல்லார்ககனத்தவர்முனிவோர்திகழ்மேதினியோர்முதலாய
பல்லோர்கண்முன்னனதுபெரும்பாழித்தடந்தோள்வலிக்கமைந்த
வில்லால்வெல்லாதினிச்சோறுமுகந்துவாழ்தல்விழுமியதோ. (௨௫)

என்றுபுகன்றுவிரிஞ்சைநகர்க்கிறைவன்றனதுமருமகனை
நன்றுபுகன்றிவ்வுலகமிசைநின்னைப்பெறவுநற்றந்தை
சென்றுபுரிந்தமாதவத்தின்செயலுஞ்சீருந்திகழநமக்
கன்றுபுகழ்வோர்பலராலும்வினவிக்கேட்டேனதுமுதலாய். (௨௬)

நின்னையுனக்குமிகுநேயநிரைத்தபுத்திசிகாமணியாந்
தன்னைக்காணப்பெருகுமவாவுடையேனுள்ளத்தனிக்கவலை
பின்னைக்காணுதொழிக்கமகட்கினியவரனாய்ப்பெறக்கிடைத்தே[ன்றோ
னென்னையெனக்கிங்கினிக்கிடையாப்பொருண்மற்றெவையுமெளித

மகவொன்றின்றி நெடுங்கால மதிவேணியனை மனத்தடக்கித்
தகவுதருநற்றருமமெல்லாஞ் சாதித்திந்தத் தாரணியி
னகமாமுலைமென்கொடியிவளை நானுமுன்னம் பெறக்கிடைத்து
மிகவுமருமையாய்வளர்த்தேனது வீண்போகாவிழுப்படைந்தேன். ()

எனதுதிருவும்பெறும்பேறுமெவர்க்குந்தோலாப்புயவலியுங்
கனதையுறுமற்றுள்ளனவுமிவளாற்பெறமுன் கருதியவென்
மனதின்வணமேசிவனருளால்வாய்ப்பக்கிடைத்தேனெனையுமென்றன்
வனிதைதனையுமுவந்தாசிங்கின்னேகைக்கொண்டறம்வளர்ப்பாய். ()

இன்னபுகன்றமாதுலனையிறைஞ்சிப்புவனேந்திரனையா
வென்னதவமோநின்னருளுமகடன்னலமுமினிதடைந்து
மன்னர்க்கதிகவாழ்வுற்றேன்முகமனுரைத்தன்மாபாமோ
வென்னப்புகன்றுபலபேசியிருந்தாரிரவியேகினால். (கூ0)

வேறு

அந்திமாலைபுகுந்தபோதிருளண்டமுற்றும்விழுங்கின
விந்தெழுந்தனவாவியோடையிலேடவிழ்ந்தொளிர்தாமரை
கொந்தவிந்துகுவிந்தவண்குமுதங்கள்வாய்விரியப்பளி
தந்தபைம்பொழிலெங்கணுங்குரானடைத்தனபுட்குலம். (கூக)

மாவினிற்சிலசந்தினிற்சிலமங்குலூடுநிவர்ந்தெழா
நாவலிற்சிலகோடாக்குழுகாடமத்தகநாகமோ
டோவலிற்பொலியொட்டகம்பலகட்டிவொண்டுகிலொண்படாம்
மேவுபொன்மணிமாடமாநகர்மேலுநீடவிரித்தனர். (கூஉ)

படம்விரித்தனர்தீபமேற்றினர்பன்மலர்க்குலமென்றளி
ரிடம்விரித்தனரிறைவரும்பலவீரரும்பணியேவல்செய்
படைகளுங்களியானையும்பரிவெள்ளமும்படுதிரைமிகுங்
கடலடங்கினதெனவுறங்கினகங்குநீர்வரையின்கணே. (கூகூ)

எழுச்சிப்படலம் முற்றிற்று.

ஆகப்படலம்-கூஉ-க்குத் திருவிருத்தம்-கசுகுச.

வெங்கிட்டம்மாள்காவற்படலம்.

கண்ணளித்தவேடனுக்குத்தங்கணீங்காக்
 கருணையளித்தினியதமிழ்க்கவிகொண்டன்பாய்ப்
பண்ணளித்தமூவர்தமக்கழியாப்பேறு
 பரிந்தளித்துவந்திசந்தபழம்பிட்டுக்கு
மண்ணளித்துவழுதிபிரம்படிக்கிரண்டு
 மாவடியையவன்முடிக்கேவைத்துப்பின்னு
மெண்ணளித்ததிருவாலவாயுண்மேவு
 மெம்மிறையைமும்முறையுமிறைஞ்சிவாழ்வாம். (௧)

வேறு.

இங்ஙவர்துயின்றனரிதற்குமுன்செறி
கங்குல்போய்க்கதிரவன்கடலிற்றோன்றலு
மங்கைசொலவதியன்றெழுழியமன்னவன்
பொங்கியமணஞ்செயப்பொருமும்வேட்கையால். (௨)

பதிகூவணப்பதியாகப்பண்ணிநன்
னதிகுடைந்தொளிருநீறணிந்துநான்மறை
விதிமுறைக்கடன்கழித்திரவிவெள்குறப்
புதுமணக்கோலஞ்செய்கலன்கள்பூட்டியே. (௩)

அவனிபர்சூழ்வரவமைச்சர்போற்றிடக்
கவனவெம்பரித்துறையாளர்காப்புறப்
புவனமும்விசும்புநின்றதிரப்பொள்ளென
வுவமையிலியம்பலவொலிப்பவெங்கணும். (௪)

கடுத்ததும்பியவிழிக்கனியனங்கணின்
றெடுத்தெறிகவரிக்காடெழுந்துதுள்வரத்
தொடுத்துவிண்கேதனங்குலவச்சூழ்மதி
யடுத்துவெண்குடைநிலாப்பரப்பியார்ந்தெழ. (௫)

வேதியராசிகள்விளம்பவெண்ணகை
மாதர்பல்லாண்டிசைவழங்கவந்தியர்
மோதுசந்தடியினைவிலக்கிமுன்செலச்
சீதமென்பனிமலர்ச்சாந்துசிந்தவே. (௬)

சுடர்மணிவிளக்கிருகரங்கடுக்கியே
மடவியர்மிடைந்திருமருங்குஞ்சூழ்வரக்
குடமுலையார்களாஞ்சனங்கைகோத்தெடுத்
துடன்வரவிசையமன்னவனுமொல்லையில். (௭)

பத்தியிற்பவளக்காணிறுவிப்பாசொளி
யுத்திரங்கொடுங்கைநற்பொதிகையுய்த்துநற்
சித்திரப்பொற்றகடுக்கிச்சீர்வளை
முத்தினங்குயிற்றியாகாயமுட்டவே. (௮)

பொழிநிலாக்கதிர்ச்சுடரெழுந்துபூமியில்
வழிவதுபோலெழில்வயங்கவுச்சிமே
லழகுசெய்சிகரம்வைத்தமைத்துமாநில
முழுவதுந்துதிகொண்மண்டபத்தின்முற்றியே. (௯)

மடங்கலாசனத்திடையிருந்துமன்றல்செய்
மடந்தையைத்தருகெனவணங்கிநால்வர்க
ளடந்தனர்மடந்தனினண்ணிவேலைசெய்
துடந்தையாயுறைந்தவர்துயிலுணர்ந்தனர். (௧௦)

காலையிற்கன்னிசொல்வருதிங்கக்கொளா
வேலைசெய்வினைஞருமெழுந்துமெல்லியல்
பால்வரக்கண்டிலர்பதைப்புமீக்கொளச்
சாலையும்புறனும்போய்த்தடவிப்பார்த்தனர். (௧௧)

பார்த்தனரெங்கணும்பார்த்துக்கால்கரம்
வேர்த்தனர்திகைத்தனர்மெலிந்துவெவ்வேறு
வார்த்தைகள்சொல்லும்வாய்வரண்டியாவருங்
கூர்த்தவெந்துயர்தலைக்கொண்டுவிம்மினார். (௧௨)

நைவினைகொண்டவர்நாடியெங்கணுஞ்
செய்வினையாதொன்றுந்தெரியகிற்றிலா
ருய்வினையில்லையென்றுணர்ந்தங்கோடினர்
நெய்விடுதழற்படவெழும்புநீர்மையார். (௧௩)

செல்வழியரசனுற்செலுத்துநாதரு
நில்லுநினில்லுநினீவிரில்வழி
யல்லலும்பொருமலுமாகிவந்தவா
சொல்லுமினென்றவர்க்கிவர்கள்சொல்லுவார். (௧௪)

இருள்கிழித்திரவிவந்தெழுதனோக்கியே
வரிவையைவழக்கம்போலடைந்துகண்டிலோம்
வெருவியேதிசைதொறுமேவியெங்கணுந்
தருவினோமிதைச்சொலத்துன்னினோமென்றார். (௧௫)

வந்ததூதுவரவைகேட்டமாத்திரஞ்
சிந்தநொந்தயர்ந்தளர்திகைத்துநீவிரே
யிந்தநற்சோபனமியம்புவீரெனப்
பிந்தினோரவர்கள்பேதலித்தங்கேகியே. (௧௬)

சென்றவர்பேரவையிருந்தசெம்மலின்
பொன்றருகழலிணைபோற்றிவாய்புதைத்
தொன்றுரையெனமுடிதுளக்கியோதெனக்
கன்றியமனத்தவர்கழறுவாரரோ. (கஎ)

தங்கள்போழகினுக்கியைந்தையரு
னெங்களுக்கிருவரிலொருவரைப்பிரிந்
திங்குவந்துரிற்றெறிந்திசைக்கச்சொல்லினு
ளங்கதுபோனடந்தொழுகுநாளரோ. (கஅ)

ஒருவன்வந்தானயற்புலத்துளான்கொலோ
திருநகரான்கொலோதெரியகிற்றில
முருவமுங்கருமமுமுணரினுன்மறைப்
பொருண்முடிப்பொருணிகாழகின்பொற்பினுன். (ககூ)

அங்கவற்றெறிந்துமாதினுக்கியாங்கள்போய்ச்
சொன்னவப்பொழுதினிற்சூட்சிதேர்கிலோங்
கொன்னவிர்சிறையிடைக்கூட்டுமென்றன
ளெந்நிலமும்பகலிழந்துநின்றதே. (உ0)

வெங்கொடுங்காலனும்வெருவமீப்படர்
கங்குலும்வாடையுமழையுங்கைமிக
வெங்களாற்புரிதொழிலிழுக்கியேவரு
மங்கிருந்தோம்விழிக்குருடராமென. (உக)

அப்புறநடந்தவாறறிகிலோங்கதி
ருப்புநீர்க்கடல்வாரத்துயிலுணர்ந்துபோய்த்
துப்பிதழ்மடந்தையைத்துருவிக்கண்டில
மெப்பெருந்திசைகளும்வரையுமெங்குமே. (உஉ)

வேறு

என்றியர்சொலச்சொலவெழுந்தவெகுளித்தீத்
தன்றிருவிழிக்கடைபரந்துதிசைதாவக்
கொன்றைமுடியீசனின்மலர்ச்செனிகுலுக்கா
வெனாறுதடுதின்றுகைபுடைத்துடல்விதிர்த்தான். (உங)

நன்றரசுநன்றுவலிநன்றெனதுசெய்கை
நன்றெனவடிக்கடிநகைத்துடல்பணிப்பக்
குன்றமனைசயத்திசைகுலுங்கவிணைடுங்க
நின்றவர்களைச்சினமுருக்கியுரைநேர்வான். (உச

சித்தர்மருளாமுனிவர்தேவர்கடிகைத்தா
ரித்தரையுளார்திறையளந்தெனதுவாய்மை
பத்திநெறிநின்றுபணிசெய்துடல்பதைத்தா
ரித்தகைமையார்புரிவர்முற்றுசிசமேயோ. (உரு)

மூவர்முனிவோரமாரியாருமுனியாமுன்
காவனுழைகின்றவாலாதொருவர்கண்டீர்
தேவியைமனத்துணிவுகொண்டொருவர்தீண்டிப்
போவதுகொலோபகர்திர்பொய்ப்பயமவிடுத்தே. (௨௬)

என்றவனுரைக்கவெதிரஞ்சியவர்மீள
பொன்றுபொழுதிற்படுபெருந்துயர்பொருந்தி
துன்றியவிழித்துணைகளிற்றுளிதுளிப்ப
நன்றுளம்வருந்தியிவைநாப்புலரவிள்வார். (௨௭)

ஐயநினதாணையொருவர்க்கயர்வ்தாமோ
மெய்யுரையலாதுரைவிளம்பியறியோமாற்
றையலையழைத்தமறையாடநயனென்றிங்
கெய்துபொழுதிற்சிலர்களையமொடிசைத்தார். (௨௮)

அன்னதையுரைக்கமனதஞ்சினதலாமற்
பின்னைவினைகண்டவைபிழைக்கிலமெனுஞ்சொன்
டின்னவர்கண்மன்னவன்மதித்தெதிரினின்றோர்
தன்னைவிரைவாயவடனைத்தருதியென்றான். (௨௯)

சொற்றமொழிகேட்டடிபணிந்தெழுதுருக்கர்
நற்றெருவகன்றுமனையிற்கடிதுநண்ணிக்
கொற்றவனழைத்தபணியென்றுரைகொடுத்தே
மற்றவள்பிடர்த்தலையலைத்துவெளிவந்தார். (௩௦)

மந்தணமுடித்தமறையாளையவர்வல்லைக்
குந்தநடைகொண்டுதலைக்குப்புறவலைத்தே
யந்தநகரத்திலுளயாவரும்வெறுப்ப
வந்தரசன்வைகுமணிமண்டபம்விடுத்தார். (௩௧)

வந்தவளும்வல்லைநெடுமன்னவன்மலர்த்தாண்
முந்திருகரங்கொடுவணங்கிமொழியாமுன்
சுந்தரமுடித்தலைதுளக்கிநகைதோன்ற
வெந்தழலெனச்சினம்விழித்துரைசெய்வானால். (௩௨)

வேதியர்கடங்கள்குலமீதினிலுதித்த
பாதகியுனக்குரியபாலகனையிங்க
ணீதவறிடாதழைமினென்றுரைநிகழ்த்தப்
பாதமலரைத்தொழுதுபாவையிவைசொல்வாள். (௩௩)

மாசிறவமோடுலகின்மன்னும்வளமோங்குங்
காசிமுதலாயபலதேசநெறிகண்டே
யீசனையலாதிவனெனப்பெருமைகூரப்
பூசுரர்களோடிரவில்வந்துமனைபுக்கான். (௩௪)

என்றனிருதாண்மலரிறைஞ்சிமருளெய்த
வொன்றுபலகோடியுபசாரமொழியோதி
நன்றமுதருந்தியிவனான்வருவனென்னாப்
பொன்றிகழுமாதுதவனோற்குமுழைபுக்கான், (௩௫)

போனவனைவல்லிருள்புலர்ந்திதுவரைக்கு
நானும்வரவெண்ணிநெறிநண்ணியெதிர்நோக்கா
வானவனையுந்தெரிதலின்றியயர்வுற்றேன்
மானவவெனப்புகலும்வல்லியுரைகேளா. (௩௬)

வேறு.

பற்கடித்திருகண்செந்தீப்பரப்பிவெம்பாந்தள்போலுஞ்
சொற்கொடுமுனிந்துசீறித்துட்டிநீபுகன்றவார்த்தை
முற்கொடுவினைந்தோகேட்குமுறைமையின்விநயங்கண்டோ
வற்புதமாகச்சொற்றாய்நின்னுரையழகிற்றம்மா. (௩௭)

கொல்லர்தந்தெருவிலூசிகொண்டுவிற்றிடுதற்கெண்ணும்
வல்லமாக்களினின்றீண்டுவெம்பியென்னுழையிற்சொன்ன
சொல்லைவிட்டுளத்திலுள்ளசூதைவிட்டுளவாக்கொண்டின்
றெல்லவர்கட்குந்தோன்றவெளிமைநீத்தியம்புகிற்பாய். (௩௮)

மெய்மறைக்குலத்தில்வந்தும்வேதியர்விழுப்பநீங்கிச்
செய்தொழிலிழுக்கினின்றதிருவிலிதீமையாற்றும்
பொய்மையையகற்றியென்பாலுள்ளவைபுகன்றாயாகி
லெய்துவையாவியின்றேலிழக்குவைசரதமீதால். (௩௯)

எனவுருத்தசனியஞ்சவியம்பியவேந்தன்பாதந்
தனில்விழுந்திறைஞ்சிநாயேன்சாமிகாரியத்திற்றோடங்
கனவினுந்துணிந்துசெய்யக்கடவனோநின்மேலாணை
மனமுறவறியேனுள்ளவாறிதுவழுத்தக்கேண்மோ. (௪0)

என்மகனொருவன்காசிக்கேகினான்மேனாளன்ற
தன்மைநின்சமுகந்தன்னிற்சாற்றியதறிவாயந்த
நன்மகன்வரவாணீண்டநெறிதொறுநாடாநின்ற
புன்மையேன்மெய்யாய்வந்தோன்றன்னையென்புதல்வனென்றே. (௪௧)

உள்ளவரெல்லாஞ்சொன்னாரெனக்குநானுற்றதாலே
பிள்ளையென்றுவந்தேனன்னான்பேச்சினும்வடிவினானுங்
கள்ளமென்பதுதோன்றாதுகாட்டினானடந்தவெல்லா
நள்ளிருள்வரையுஞ்சொன்னேன்கேட்டுமேனயந்துகொண்டோன். ()

மங்கையைக்கடத்தியீங்குகொணர்ந்தநாண்மாண்டமன்னன்
செங்கையினாழியென்பாற்சேமித்துவந்தேனந்தோ
வங்கதுதனையுங்கேளாக்கேட்டுக்கையடக்கஞ்செய்தே
பங்கமிலாமன்மிக்கசாலங்கள்பலவும்பேசி. (௪௩)

மடந்தனிலுண்டுமீண்டுவருவனென்றெழுந்தானெந்த
விடந்தனிலேகினேவறிகிலேனிருள்போய்த்தீர்ந்தும்
விடிந்ததுமுதலாய்த்தேடித்தேடிநான்வீதிதோறு
நடந்துகாலலுத்தேனுண்மையென்றனணைத்துவேந்தன். (௪௪)

பாதகிகொடியசூதுபண்ணியென்றன்பேர்சொல்லி
மாதினைக்கொணர்ந்தாய்பெற்றமைந்தனுக்காக்கிவிட்டாய்
தீதிலாவுரியசாலஞ்செப்பினையிதுபோல்யாவர்
பூதலந்தனிலேசெய்யப்போதுவார்பாவம்பாவம். (௪௫)

வாவியிற்புக்குமுன்னோர்மன்னனைவதைசெய்தந்தப்
பூவையைக்கொணர்ந்தநீயப்படியின்றுபுரிதனீக்கிப்
பாவையைமட்டும்பாலற்காக்கினபரிவுநோக்கி
லோவில்புண்ணியமுன்செய்தற்கெவனெனவுவக்கின்றேனல். (௪௬)

வேறு.

வேதியாகருணீபிறந்துநோனுதறம்விலக்கிப்
பாதகத்தினுக்குறையுள்போன்றிருந்தவெம்பதகி
தீதினுக்கெரிசூளையிற்கொடுத்துடல்சிதைத்த
போதினுஞ்சினமடங்குமோவொடுங்குமோபொருமல். (௪௭)

அங்குநின்றபோர்மறவரையரசனும்விளித்தே
யிங்கிவட்கொடுபோய்முனைவாளினலெரிந்து
செங்கனற்படுசூளையிலிடுமெனத்திறலோர்
பொங்கியார்த்துப்புன்முயன்மிசைநாயெனப்போர்த்தார். (௪௮)

அன்னகாலையிலமைச்சர்நான்கவரினிற்சிறந்த
தன்மைமிக்குளதருமனென்றொருபெருந்தகையோ
னென்னபாவமென்றிரங்கியாங்கெதிர்நின்றுவிலக்கி
மன்னனைப்பணிந்தின்னனநீதியின்வகுப்பான். (௪௯)

மாதர்தங்களைமுனிந்துரைவழங்கினுமாறுப்
பாதகந்தருமென்பதையறிந்தநீபாரில்
வேதமங்கையைவெங்கொலைசெய்திடவிரும்பி
யோதினையாசியற்கையினீதமோவுரையாய். (௫௦)

தேவைநான்மறையந்தணர்தங்களைச்சிசுவைப்
பாவைமார்களையெளியரைப்பசுக்களைப்பதைக்க
நோவுசெய்யினுநவல்கொலைபுரியினும்புரிதற்
கேவல்காண்கினுமெண்ணினுநரகமெய்துவரால். (௫௧)

இவள்வயிற்சினங்கொண்டுநீயிசைத்தகாரியங்க
ளவளவுஞ்சரிபிழையெனச்சொல்லுதற்காகேந்
தவளவாணகைமடந்தையர்தங்களிற்பொல்லாக்
கவளயானைவஞ்சகத்தினும்வஞ்சகங்கதித்தாள். (௫௨)

ஏதுசெய்யினுஞ்செய்குவளாயினுமிதிலோர்
சூதுகொண்டிவள்செய்ததாய்த்தோற்றலேதோன்றா
லேதினாலெனிற்கள்ளமுள்ளெண்ணினாலெவர்க்கும்
போதலர்ந்தநன்முகத்தினிற்காட்டுமப்பொருளே. (௫௩.)

அகத்திலுள்ளவையயற்பொருளாடிகாட்டுதல்போன்
முகத்தினிற்றெளிவித்துறுமுறைமைசற்றிலசாற்
சகத்துநாதவிங்கிதனைநாடிமண்ணினாற்றரைமேன்
மிகத்தவாதவற்புதச்செயல்விளைத்தனமேன்மேல். (௫௪)

அரசுபாதிகொண்டரசர்வந்தடிதொழமகற்கு
விரைசெய்தார்முடிமிலைச்சுதற்கெண்ணும்வேட்கையினாள்
பரசுமிப்பெரும்பாதகம்பண்ணுவாளெனநா
னுரைசெயற்குளமொருப்படேன்விநயமொன்றுளவால். (௫௫)

மங்கையோடுறவாகியமன்னனுக்குயிர்போற்
றங்குநண்பினனொருவனுண்டவனிவன்றன்னைப்
பங்கமுற்றிடப்பிரிந்துபின்றேடுறும்பரிவா
லிங்கிவட்குறுமகனெனப்புலன்வெளியேற்றி. (௫௬)

கோதைமாடனைந்திரவினிலிருவருங்குறித்த
பாதைகூடினர்நாளையேயிதுவெளிப்படுமென்
றாதரித்தெனதறிவினிற்றோற்றினதையா
வீதறிந்துபின்கொலையிவட்புரிதியென்றிசைத்தான். (௫௭)

தனதுமந்திரிசொல்லியதன்மையுந்தையன்
மனதுநொந்துகண்வார்ந்துரைசெய்வதுமதித்தே
யினமிதைத்தெரிவோமெனவெங்கணுந்தூதர்
தனைவிடுத்திவடனைச்சிறைதகைந்துவீற்றிருந்தான். (௫௮)

(வேறு)

நினைவொன்றுசெய்கையொன்றாய்நிகழ்ந்திடத்தளர்ந்துவாடி
மனையென்றுமக்களென்றுமற்றுளபொருள்களென்றுந்
தனையென்றுந்தோன்றானாகிச்சாம்பினான்பாரிலந்தோ
முனையொன்றுதவமிலார்க்குப்பினையொன்றுமுடியுமாலோ. (௫௯)

(வேறு)

மாதுபிரிந்தமையெண்ணிமாறாதபேருயிர்ப்புமலியநீங்கா [ணா
வேதைமிகுந்திறையளவும்விழிமுகிழாதனமருந்தாவேறொன்றெண்
தாதுலரிற்கருமமிழந்தணிவிசையதாணிருப்பவங்கமோடும் [ம்.
போதலர்பூப்பொழிலினிடைதுயின்றுளமற்றவர்செய்கைபுகலுகிற்பா

வெங்கிட்டம்மாள்காவற்படலம் முற்றிற்று.

ஆகப்படலம்-௩௩-க்குத் திருவிருத்தம்-௪௭௨௪.

சமர்த்தன்றூதுப்படலம்.

உலகமெலாந்தன்னுளத்திலடக்கிச்சுத்த
　　வொளியானவெறுவெளியையுணர்ந்துநித்தங்
கலகமிலாதிருந்துசுகம்பெற்றவன்பர்
　　கண்மணியையானந்தக்கடலைமெய்யின்
றிலகமெனவிளங்கியபொன்மலையைவானத்
　　தெள்ளமுதைக்கற்கண்டைத்தேனைப்பாலை
யிலகியதென்மணிமாடக்கூடன்மேவு
　　மெம்மிறையையெப்போதுமேத்திவாழ்வாம். (௧)

வேறு.

இவ்வருத்தியிங்கிருந்துழிக்காவினிலிருந்த
புவனவிந்திரன்றுயிலுணர்ந்தருங்கடன்புரிந்து
கவனமற்றிடாதருப்பமுற்றுளத்தினைக்கரைப்பத்
தவனமுற்றுவன்மாமனோடாய்ந்திவைசமைப்பான். (௨)

என்னையின்னுயிர்போக்கிநம்மெழின்மிகுமரம்பை
தன்னைமுன்கவர்ந்தேகியதரியலன்றனது
சென்னியைத்துணித்தவனகர்தீயெழச்சினவிச்
சொன்னவஞ்சினமுடிக்குதற்கின்றுநான்றுணிந்தேன். (௩)

வில்வலங்கொடுதாங்கிநான்வெஞ்சரமோட்டி
மல்வலங்கொடுமாற்றலர்க்காகியார்வரினுஞ்
சொல்வலங்கொடுதுகள்படுத்தமார்கடிக்கப்
பல்வலங்கொடுபாரெலாம்புகழ்படைக்குவனால். (௪)

நின்கருத்தினையுணரவுநின்குலவமைச்சன்
றன்கருத்தினையறியவுங்காலந்தாழ்த்திருந்த
தென்கருத்தெனவியம்பியமருகனுக்கேற்ப
நன்கருத்தனும்விரிஞ்சதேசத்திறைநவில்வான். (௫)

நின்பெருந்தரமோவிவனின்முனிவுக்கார்
முன்புகுந்தமராற்றுவார்முப்புவனத்து
மன்புகந்துறமேவல்செய்தருள்பெறக்கருதிப்
பின்புகுந்துகாத்திருப்பவர்தொகைசொலப்பெறுமோ. (௬)

பார்விசும்புபாதலமுதற்றம்வலிபடைத்த
வீரரெண்ணினுங்கருவியுங்காலமும்வினையு
நேர்தெரிந்தவர்வலியையுந்துணையையுநினைந்து
போரியற்றுதனெறியெனத்தனுமறைபுகன்ற. (௭)

எதுநீங்குளராயினுநல்வழிதிருந்துமாறெண்ணித்
தூதுவிட்டவர்மனக்கருத்தென்னெனத்துருவித்
தீதுபின்னவர்க்காகநஞ்சேவகஞ்செலுத்தி
மோதிவெல்லுதனீதியின்முறையெனமொழிந்தான். (௮)

விரிஞ்சனிவ்வுரைவகுத்தலுநன்றெனவியந்து
தருஞ்சிறப்பெலாந்தனையொழிந்திலையெனுந்தகைசால்
வருந்தரத்தனன்றமைந்தறிந்துரைசெயும்வலியான்
பொருஞ்சமர்க்குயர்திண்மைசால்நவமணிபுகல்வான். (௯)

வன்மைசெய்திடர்விளைத்திடுமாற்றலரெனினு
நன்மையாற்றுதலொறுத்தலென்றருமறைநவின்ற
தன்மைநல்லறந்தறந்துநாம்வஞ்சினந்தழுவிப்
புன்மையாற்றினுலென்சொலாதிப்பெரும்புவனம். (௧௦)

பண்டுவஞ்சனைபுரிந்துதன்பாரியைக்காவாய்க்
கொண்டுவன்சிறையிட்டவாளரக்கன்மேற்குற்றங்
கண்டுதன்பெருங்கருணையின்பவைவெளிகாண
விண்டுவாவெனவிண்டுமுன்றூதுவிட்டனனால். (௧௧)

மங்கைகூந்தலைருட்டீர்த்துமுன்மன்பெருஞ்சபையி
லங்கையாற்றுகிலுரிந்திடக்கண்டுமஞ்சினர்போற்
றங்களாற்றலுமேற்றழுந்தள்ளிமுன்னைவர்
பொங்குகானகம்புகுந்ததுபுகழ்குறித்தன்றே. (௧௨)

மன்னநின்பெருமாதுலனுரைமறுதவன்பாற்
சொன்னநம்பெருந்தூதனையிவ்வழிதூண்டி
யின்னதென்றறிந்ததற்குளவிநயங்கொண்டியற்றல்
நன்மையென்றனன்புவனவிந்திரனதுநயவா. (௧௩)

வேறு.

தன்னிருகண்மணியானபுத்திசிகாமணிவதனந்தன்னைநோக்கி
நின்னிருகண்ணுறுகருமநிகழ்த்துகெனக்கூறியதன்னிருபன்பாதம்
பின்னிருபொற்கரம்பரவிப்பிறங்குமணிமுடிவேய்ந்தபெருமநீயுஞ்
சொன்னபடிபுரியுமெனையெதிர்நோக்கிவினவுதலுந்தூய்மைத்தாமோ.

சிற்றறிவிங்குடையேனென்பதுதெரிந்துமெனைக்கேட்கச்சிந்தைசெய்த
கொற்றவநின்றிருவுளத்துக்கேற்கினுமேற்காதெனினுமுணர்ந்துகோ
நற்றவருமொருகாலமாரசாயகம்பொருவநலம்போய்த்தீமை [டி
யுற்றிடுவரெனினுமுணர்ந்துளபொழுதுநீங்கியதினுண்மைகாண்பார்

தடவரையைவாங்கியதிண்டுமதியைநிறுவியிந்தத்தரையைத்தாங்கும்
படவரவைத்தாம்பாக்கிப்பண்டுதேவாசுரர்கள்படர்ந்துதண்பாற்
கடல்கடையத்தன்வருத்தங்கருதாதுகடைந்தவர்க்குக்களிப்புநல்குந்
தொடரமுதங்கொடுத்தனபின்னுறுநலந்தோய்ந்திடக்கருதுஞ்சூழ்ச்சி
[யாலோ.

வெந்தழலின்பொறிசிதறிக்கடும்பாந்தளிந்துவின்மேல்வெகுண்டுகெவ்வ
வந்ததுகண்டொழியாதுவருந்தாதுகலைகுறைந்துமழுங்கிடாது
முந்தியதன்னிலைமையினுமும்மடங்குகதிர்நிலவுமுழுதுங்கூட்டிச் [றே.
சிந்தியதன்றோகுணமும்செய்கையுமற்றெவர்க்கும்வெளிதெரியவன்

வெம்மாசுபழிபாவங்கருதாதுவிசையதரன்விரும்பிச்செய்த
விம்மோசந்தனக்கவனையெவ்வளவுபுரிந்தாலும்பவமேயில்லை
யம்மாநின்கருணைகுறித்தகந்தெளிந்துநன்மாமனமைச்சன்சொன்ன
செம்மாண்பலாதவைகள்செயற்கருதலேனக்குமதுசிந்தையாமால். ()

தூதேவியெதிரிவலிதுருவியதின்மேற்சமரந்தொடர்ந்துசெய்தன்
மாதேவர்முதலானமற்றவர்க்குந்தனுர்வேதமரபாமன்றோ
சீதேவிகாதலன்போற்றிகிரிகொடுதரணியெலாஞ்செங்கோலேந்தும்
பூதேவவெனப்பணிந்ததனதமைச்சனொடுமிருவர்புகன்றவெல்லாம். ()

தீதகற்றிச்சிறந்ததிருவுளக்குறிப்பானடுநினைந்துதேர்வல்லோனு
மாதிலனைமுகநோக்கிமாற்றலர்பாலேகியிங்குவரவேதக்க
தூதினுக்காருரியவரென்றாய்தலுந்தன்சூழ்படைக்குட்டோலாவெற்றிச்
சாதகத்திண்டோண்மார்பன்சமர்த்தனெனும்பெயருடையோன்றன்
[னைக்கூவி.

வேறு.

அரவுயர்த்தவன்பாற்புகுந்தன்றுபஞ்சவர்க்கு
விரவுதூதுசொனேமியோனவனினும்விநயம்
பரவுசிந்தையான்பவனவேகத்தினும்படர்வா
னுரவிவன்றாமனுமனங்கதனிகர்த்துள்ளோன். (உ0)

அமர்தலைக்கணின்றமராருமடுவதற்கரிய
சமர்த்தனிங்கிவன்றன்னையேவுதியெனத்தரைமே
னிமிர்த்தகீர்த்தியானுரைசெயமருகனுநேர்ந்தான்
றமர்தரத்தினன்றனையழைத்தின்னவைசமைப்பான். (உக)

இன்றுநீவிரைந்தேகிமாற்றலனுழையீங்கு
நின்றநம்பெருவலியெலாமுற்படநிகழ்த்தி
யன்றவன்வலியாவுநின்னறிவினாலறிந்து
பின்றிடாதுநின்றுரையினுக்குரையெதிர்பேசி. (உஉ)

கவனமான்றடந்தேர்கரிகாற்பலங்கலிப்புற்
றவனியெங்கணும்போர்த்தெழுந்தமர்ப்பறையதிர்ப்பப்
புவனவிந்திரன்றனதுமாதுலனொடும்போர்க்குத்
தவனமாகிவந்துற்றனனென்பதுஞ்சாற்றி. (உங)

வாவிபுக்குமுன்கைமையாலரசைவஞ்சித்த
பாவியப்பழிக்குன்னையிப்பாரெலாமறிய
வேவினுக்கிறையிடுவதோர்வஞ்சினமென்னு
மேவுகூற்றொடும்புகுந்தனனென்பதும்விளம்பி. (உச)

அரசுமாயுளுமாக்கமுங்கேளிருமகலாப்
பரிசிவாழ்வுறும்படியுளத்துள்கிலப்படியே
யுரைசெயவானவனேவலின்புறக்கடையுற்று
வரிசையின்பணியாற்றினனெலன்பதும்வழுத்தி. (உரு)

வருதிநீவிரைந்தேகெனப்பணித்தலுமன்னன்
பொருமலர்க்கழன்முடியுறவீழ்ந்துகைபோற்றிப்
பருமயானைமேற்பாயும்வெஞ்சீயம்வான்படர்ந்த
பெருமைபோல்விசைத்தேகினன்சமர்த்தனும்பெரியோன். (உசு)

இப்படைக்குணியலதுமாற்றலர்கள்பாலெய்திச்
செப்புவார்களின்றென்பதோர்முறைமையுந்திருவு
மொப்பவாய்த்தனமெனுங்களிப்புளத்தினுள்ளூறத்த
தப்பிலாதநற்சமத்தனுநடையினிற்சலியா. (உஎ)

வேகவாயுவினதியைங்கதிகளும்விலங்கப்
போகுமண்ணெறிப்பூழியால்விண்ணெறிபுதைய
மாகமெங்கணுந்தன்பெரும்புயவலிமண்ட
நாகமஞ்சவெஞ்சினங்கொடுசீறியேநடந்தான். (உஅ)

இலங்கைமாநகர்க்கேகியதூதனேவிவனென்
றலங்கன்மாமுடியும்பரும்பிறருநின்றயிர்ப்ப
விலங்குநீண்முடிவிலங்கலூர்வனநெடுவிருக்கந்
தலங்கண்மேல்விழப்புடைத்துலைந்தெழுகடல்சலிப்ப. (உகூ)

சென்றுதெண்டிரைக்கடலெனச்செறிந்தபோரகழி
துன்றுபொன்மதில்வாயிலைத்துறந்துபோய்த்தூதன்
குன்றுவான்மழைமு[illegible]சொலிபுறமெலாங்குமுறப்
பொன்றிரண்டொளிபொருவுகோமனைக்கடைபுக்கான். (௩0)

ஊதைமாருதம்போன்றநாற்படைக்கடற்றுணைவர்
வீரவாட்கையர்திக்கிருபுடையினுமிடையப்
பாரின்மன்னவெப்பக[illegible]ழும்பதம்பணிந்திறைஞ்சக்
கார்பசுங்குழன்ம[illegible] வியர்கவரிக[illegible]ல்புட[illegible]. (௩க)

வட்டவாண்மதிநிலவினைமுழுவதும்வாங்கிப்
பட்டுரித்திலமெனப்பெயர்பாரினிற்பார்த்தா
ரிட்டழைத்திடச்சித்திரம்புனைந்தெழுசுடர்கள்
விட்டெரிந்தபொன்மணிக்குடைமுடிமிசைவிளங்க. (௩உ)

கானயாழிசைநாரதரிசையினுங்கனிவாய
மானவேல்விழிமடந்தையர்செவிப்புலன்வழங்க
வானநீண்மரப்பொதும்பரில்வாம்பொன்மயில்போ
லனமென்குழலரியர்சதிமுறைநடிப்ப. (௩௩)

அமரர்சேனையினதிபதியாகியவயில்வேற்
குமரவேளினுங்குறைபடாக்கவினலங்கொண்ட
சமரகேசரிதனக்கிடர்தருபகையென்னுந்
திமிரபானுவென்றடிக்கடிகட்டியஞ்செப்ப. (௩௪)

அக்கயன்னதிகாயன் மற்றவனுக்குமுன்னோ
னொக்குமென்றுசுற்றுவரிசூழலகெலாமுரைக்கத்
தக்கபேருபெற்றடங்கொணுவில்வலிசார்ந்த
மக்கண்மூவருமருங்கினிற்புலியெனவயங்க. (௩௫)

மலையிற்றோற்றியம்மலையுளசிறகரின்வயங்கு
நிலையிற்றோள்வலயங்கள்சூழ்ந்தழகுறநிமிர்ந்த
தலையிற்றார்புனைந்திலங்கியபொன்முடித்தபனன்
விலையிற்றோங்குசெங்கதிரினுஞ்சிறுவெயில்விரிப்ப. (௨௬)

எண்டலங்களினிருள்கவர்ந்தெழுந்தவானிரவி
மண்டலங்களிற்குண்டலமணிக்குழைவயங்கக்
கண்டமிட்டபொற்கண்டிகைக்கவின்மணிப்பதக்கம்
விண்டதூய்வடங்கிடந்தணிவெண்ணிலாவெறிப்ப. (௩௭)

சூலபாணியனேமியன்சுடர்முனைக்குலிசன்
காலனுதியர்காணவுங்கேட்கவுங்கலங்கு
மாலகாலமொத்தரிமணித்தவிசின்மீதமர்ந்த
ஞாலமன்னவனிருந்தபேரவையிடைநண்ணி. (௩௮)

நோக்கினனிவனிலையினைநோக்கவுமெடுத்து
வாக்கினலுரைசெய்யவுங்கேட்கவுமனத்து
ளாக்குவாரெவர்சமர்புரிந்தாக்கையுமுயிரும்
போக்கிவெல்வவோதேவரான்மனிதராற்புவிமேல். (௩௯)

இலங்கைநாதனைச்சூரனையிரணியன்றன்னை
வலங்கொள்வாலியைமதுகயிடவர்களைமலிந்த
குலங்கொள்வீரரைக்கேட்டதேயன்றிநேர்குறித்து
நிலங்கண்மீதிவனெழிந்தமற்றெவர்களைநேர்ந்தேம். (௪0)

அரசர்கட்கடாதனவெலாந்தனதுபூணுகப்
பரசமெய்புனைந்திருந்தவிப்பதகனேடமரம்
பொருவினைமதிறைவற்குமருகற்கும்புரமுன்
னெரிசெயதானருளின்றெனில்வெல்லுமாறெவனே. (௪௧)

செல்வமிக்குவில்வலிபொருத்தழகினிற்சிறந்த
தொல்லைநிக்குளசூருந்தொலைநல்லறங்க
ளில்லையாமெனின்முழுவதுந்தோற்றுயிரிழந்தே
சொல்லுதீநரகாழ்வரென்பதுமறைத்துணிபால். (௪௨)

வஞ்சமென்பனயாவுமிங்கொருவடிவாகி
யஞ்சனீத்துவெம்பவஞ்சுமந்தரசியலிருந்தான்
வெஞ்சினந்தருமிவனைநம்வேந்தர்களமரிற்
றுஞ்சல்காண்பதுபெரிதலத்தும்பைசூடுவரால். (௪௪)

என்றுபற்பலவெண்ணியங்கவனெதிரெய்தித்
துன்றுதாமரைச்சரண்டொழுதஞ்சலிசொல்லா
நின்றதூதனைநிருபனுநேர்படநோக்கி
யின்றுயாவனீவரவெவன்சொல்லெனவிசைத்தான். (௪௫)

விரிஞ்சமாநகர்புரந்தருள்விரிஞ்சர்கோன்படைக்குட்
பெருஞ்சமர்த்தனென்பெயருனைக்கண்டிவைபேசிப்
பொருஞ்சமர்க்குளம்பொருந்துமேலறிந்துவாபோவென்
றருஞ்சிறப்புளபுவனவிந்திரன்சொலவடைந்தேன். (௪௬)

தூதுவந்தவென்சொற்பொருளுண்மையைத்துருவி
நீதியென்றுகொண்டந்நெறிநீநடந்திடிலோர்
தீதடைந்திடாதாக்கமுங்கல்வியுந்திறனும்
பூதலத்தினீண்டாயுளும்புகழ்ச்சியும்பொலிவாய். (௪௭)

அன்றெனிற்பெருஞ்செல்வமுங்கல்வியுமாகும்.
பொன்றுமென்பதுசாதமென்றெதிரினிற்புகன்றே
யின்றுவாவெனவேவினனவைசொலற்கீங்கு
துன்றினேனெனத்தோன்றலுங்கேட்டுளந்துடியா. (௪௮)

புவனவிந்திரனென்பவன்யாவனிப்புவிமே
லவனுநீண்முடிவிரிஞ்சனுமொன்றுசேர்ந்தடங்காக்
கவனவெம்படையோடெனைச்சமர்பொரக்கருதுந்
தவனமென்கொலிங்குரைசெய்வாய்விரைந்தெனச்சாற்ற. (௪௯)

கேட்டதூதுவன்முறுவலித்தையகேள்கிளர்நீர்
நாட்டினம்முடைநாயகன்பயந்துளநாரி
சூட்டுதொங்கலான்றொல்புவனேந்திரத்தோன்றல்
பூட்டுவிற்குமுன்புரஞ்சுடுபரஞ்சுடர்போல்வான். (௫௦)

தன்னல்கார்வளைத்துலவுகாம்போசமாநாட்டின்
மன்னர்மன்னவன்மகிதலப்புரந்தரன்மகனென்
றெந்நிலங்களும்புகழ்புவனேந்திரனென்பான்
மன்னுங்கல்வியிலழகினில்வலியினின்மலிந்தோன். (௫௧)

மல்லினாற்புரிகதையினால்வாளினான்மழுவால்
வில்லினால்வெலற்கெண்ணுதன்றிகையெனவிலக்கிக்
கல்லினாற்பெருந்தோளினான்றனதொருகனிவாய்ச்
சொல்லினாற்புவியேழையுந்துகள்படத்துவைப்பான். (௫௨)

பாரிலட்டமாசித்திகள் பழுதறப்பயின்ற
வீரன்வீரரும்வெலப்படாவிரகுடைவீரஞ்
சாருங்கீர்த்தியான்றடங்கணார்க்குயர்மதன்றபனன்
நேரிணைந்தபூணிரைவரைத்தோளுடைநிருபன். (௫௩)

வினைதடுத்துமேல்விதியையுமதியினால்வெல்லு
முனைதிரட்டிமூவாநெறிநாடொறுமுயல்வா
னனைதனக்குமேலன்புதந்தமைச்சியலமைந்தான்
றனையுடற்குயிராமெனவுறவுகொடைகையான். (௫௪)

நீதியும்பெருங்கருணையுநற்குணங்களுநிறைந்த
மாதவங்களும்வாய்ந்தொருவடிவுகொண்டனைய
சோதிவேலினன்றொன்மைசேர்தூய்மையைத்தொகுத்துப்
பூதலப்புயங்காதிபனோதவும்போமோ. (௫௫)

அனையதன்மையனறிவினுமனத்தினுமகலா
வினைசெய்மந்திரிதன்னொடும்விருப்பமுற்றுயர்ந்த
கனைகழற்கதிர்வேலினன்காவலரிறைஞ்சப்
புனையுநீண்முடித்தாதைபால்விடைதரப்போற்றி. (௫௬)

தங்கண்மாநகர்துறந்துசாகரம்புடைதழுவு
மங்கண்மாநிலமுழுவதும்புகுந்துசீராய்ந்து
பொங்கர்சூழ்புனல்வாவியிற்புக்குமந்திரியைத்
திங்கடோன்றுங்காலமுதளிப்பாயெனச்செலுத்தி. (௫௭)

இருந்தகாலையிலிரும்புனல்வாவியுளிருந்தோர்
கருந்திணாகம்வந்துறுதலும்வாளினாற்கடிந்து
முருந்துமுத்தவெண்முறுவலாண்முளரியம்விழிகட்
கருந்துநல்விருந்தாகினானடைந்துவாழமைதி. (௫௮)

முறைபிறழ்ந்துநீமோசமாய்விதந்துவான்முன்னா
ளிறைவனுக்கிடர்விளைத்தவன்பாலினிதிருந்த
பிறைநுதற்றிருமடந்தையைப்பிழைபடப்பிரித்த
குறைவுநீக்கிப்பின்மந்திரியவடனைக்கூட்டி. (௫௯)

மன்னனுக்குயிரோடவடன்னையும்வழங்கி
யுன்னைவெல்லுமாறுன்னிநங்கோமகற்கோலை
தன்னைமுன்விடுத்தவனையுங்கூட்டிவெஞ்சமருக்
கின்னமாநகரெயில்வளைத்திருந்தனரின்றே. (௬0)

வஞ்சகம்புரிந்தாருயிர்வாட்டித்தன்மனையாங்
கஞ்சநாண்மலர்த்திருநிகர்கன்னியைக்கவர்ந்தாய்
கொஞ்சமும்பவமென்பதுகுறிக்கொளாவுன்னைத்
துஞ்சல்கண்டுநின்றொன்னகர்தீயினாற்சுட்டு. (௬௧)

வெற்றிகொள்வதற்கெண்ணினனைவசெயமிக்கா
னுற்றவர்க்குயிரென்னினுமுதவுவானுனது
குற்றமுங்குறியானவன்சரண்புகிற்குறையா
மற்றுநின்னுயிரளித்தரசளிக்குவன்மாறன். (சுஉ)

அரவுயர்த்தவன்கீசகனரக்கர்கோன்வாலி
பரவுமிந்திரனதியோரெத்தனைபழையோர்
விரகதாபவெந்தீயினால்வேதனைமிகுந்து
நரகமேறியெந்நாளினுந்தீமைநண்ணினரால். (சுங)

தேவைநிந்தனைசெய்திளஞ்சிசுக்களைக்குருவை
யாவையந்தணர்தங்களையாருயிரழித்த
பாவகாரிகளென்னினுமுய்வரிப்பார்மேற்
பூவைமார்நலங்கெடுத்தவர்க்கதுமறைபுகலா. (சுச)

உடலைவிட்டுயிரொழிந்தவர்தம்மினுமுலகின்
நடலைகொண்டொளநங்கையர்நலத்தினைநயந்திங்
கிடரினாழ்ந்துதீநரகிடைமூழ்கினரெரிநீர்
கடலினுண்மணலெண்ணிக்கொண்டற்றனகாண்டி. (சுரு)

வலம்பிழைத்திடாமறைவழிமன்றல்செய்மனையாள்
குலம்பிழைத்திடாதிருக்கவும்வேறொருகுலத்தோ
ரிலம்பிழைத்திடநினைப்பரேலிம்மைமபோய்மறுமை
நலம்பிழைத்துநீங்காதநீநரகினைகுவரால். (சுசு)

முச்சகந்தனிலெதிர்த்தவர்முடித்தலைதுணித்துச்
செச்சைவேந்திடுமன்னவராண்மையிற்றிறம்பி
யிச்சையாற்பிறனில்விழைந்தொழுகுவார்க்குலங்
கொச்சைவாய்ப்பழிகூறுதலொழிந்தென்னகூறும். (சுஎ

கல்விமாய்ந்துநுங்கவிநலங்குன்றிடுங்கதித்த
செல்வந்தேய்ந்திடுஞ்சிறியர்வாய்ப்புன்பழிசேர்க்கு
மல்லன்மேற்றருமாயுளைப்பொன்றிவித்தப்பாற்
சொல்லும்வன்னரகாழ்த்திடுங்காமவெந்தோணி. (சுஅ

ஈதெலாமறியாதநீயில்லையென்பின்னே
போதுவாயெனினின்முடிவன்பதம்பொருத்தித்
தீதுதீர்த்துனக்காவனவுரிமையுஞ்செய்து
பாதுகாக்குவலுண்மைதப்பாதெனப்பகர்ந்தான். (சுகூ

வந்ததூதுவன்வழங்குசொற்செவியிடைவடவை
வெந்தழற்பிழம்பாமெனவெகுளியுநகையுஞ்
சிந்தயாவருந்திடுக்கிடத்தேவருந்திகைப்ப
வந்தரத்திடிமுழங்கல்போல்வாய்திறந்தறைவான். (எ0

என்னடாவொருதூதுவந்தெனக்குமுன்றுணிவாய்ப்
பன்னலாமொழிபகர்ந்தனையுன்னையிப்பார்மேற்
சொன்னவாய்கிழித்துயிருண்பன்சொன்னவின்சொல்லா
னன்மைமிக்குளசோபனமொன்றுளநயந்தேன். (எக)

மாதுபுக்குளமாதிரந்தேடியென்மனது
வேதையுற்றனனவையொழிந்தார்வமேல்விளையக்
கோதைவந்தனளென்பதோர்நல்லுரைகுறித்தா
யாதலாலுனக்காருயிரளித்தனனம்மா. (எஉ)

வருந்துவன்பிணியாளர்க்குமாமலைமுடிமே
லிருந்தநன்மருந்தின்புறவலுவிலெய்துதல்போற்
பொருந்துமங்கலம்புகன்றநின்னுள்ளம்பூரிக்க
தருந்தனம்முதல்வேண்டுவகோடிநான்றருவேன். (எங)

போரில்வென்றவர்புரந்துளபுனற்றிருநாட்டை
நேரினீபெறத்தார்முடிசூட்டியேநிருபர்
பாரிலேத்தவுஞ்செய்குவனென்றுரைபணித்தே
வீரன்பின்னுமங்கவனொடுசின்மொழிவிளைத்தான். (எச)

எந்தநாடிவன்விரிஞ்சன்மாமகடனக்கிவனுஞ்
சொந்தமாதுலன்சுதன்கொலோநன்றுநீசொற்று
யந்தமாதினைக்கொணர்ந்துநானெதுபலனடைந்தே
னிந்தவெட்கமுஞ்சொலத்தகாமௌனமுற்றிருந்தேன். (எரு)

அரம்பையென்பவளத்தைமாமகளவளிவற்கு
விரும்புமன்றல்செய்துடலுயிர்போனலம்விளைந்தார்
பெரும்புவிக்குஞன்பேதஞ்செய்திவர்களைப்பிரித்தேன்
திரம்புகுற்றநீயாய்ந்திதுசொல்லவுநேர்ந்தாய். (எசு)

வேசையென்பதோர்செயறெரியேன்மனம்விளைவுற்
றுசைநீடினேனென்னைப்போலிடையில்வந்தவடன்
பாசமெய்தினன்வெகுளியுநாணமும்படைத்துப்
பூசனேர்வதென்புவியிலில்லாததோர்புதுமை. (எஎ)

அந்தமந்திரிசெய்தசூதறிகிலாதந்தோ
பந்தநான்மறைப்பாவைமேற்பழிவிளைத்தொருநான்
முந்துவாண்முனைக்கிரைகொடுத்தருங்கனன்முடிக்கச்
சிந்தைசெய்தவிப்புன்மதியெங்ஙனந்தீர்வேன். (எஅ)

வசையகற்றிமுன்பிரிந்ததோர்மாதினைமருவற்
கிசையத்தூதுவிட்டானெனவெண்ணுநானவர்மே
னசைவிலக்கியெப்படிப்பெருஞ்சமர்முனைநடத்திப்
பிசைதல்தூண்குவதென்பதோர்பீழையும்பெருத்தேன். (எகூ)

எலியெதிர்த்துவன்சமரினுக்கேற்படிற்பூசை
வலியிழந்துபின்வாங்குமோமானினம்வளைந்து
புலியைவெல்லுமோபுயங்கமுங்கலுழன்வாய்ப்புகுந்து (அ0)
மெலிவதாகுமோசீயத்தைவேழமோவெருட்டும்.

முன்னைக்கொல்வதாய்மூண்டபோரடையலர்முடிய
மின்னைக்கொல்வதோர்வேலினாற்கொன்றவீற்றிருந்தே
னென்னைக்கொல்வதற்கெளிதலவிவரொடுஞ்சேனை (அக)
தன்னைக்கொல்வதென்றானையிற்சிறியாற்சமைப்பேன்.

என்னையென்றிருப்புதல்வரையெனதுகைவிற்காச்
சொன்னவாகினித்தொகுதியைத்தொகுதியின்றலைமை
மன்னர்தங்களைக்கிளைந்திடுனொடாறுமருவார் (அஉ)
கன்னியர்க்குளகருப்பமுங்கலங்குமால்காண்டி.

தேவரோடினர்தானவரடங்கினர்சித்த
ரேவருநமதேவலின்புறக்கடையிருந்தார்
மூவரும்முயலாமுனமெதிர்நின்றுமுடிப்பார் (அங)
பூவருஞ்சிறுநொய்யரோவெனைவென்றுபோவார்.

ஓதகங்கொளநாளையேசெறுவினிலுதிரஞ்
சேதகங்கொளச்சிலையொலிசெவித்தலஞ்செறித்துப்
போதகங்கள்காற்பலம்பரிதேர்த்தொகைபொன்றச் (அச)
சாதகங்களுண்டுவப்புறத்துணங்கையுஞ்சமைப்பேன்.

வென்றனேற்றல்கொண்டாரமர்விளைக்குமோர்வீர
மின்றுசொல்வதிற்பயனென்னைநிற்கவென்பாலி
னன்றுசொல்லியதூதுவநவில்பொருணயந்தாங் (அரு)
கொன்றுநீசொலற்குன்னுழைவேண்டினேனுறுதி.

கடந்துபோனதோர்காரிகையெனதுகைவசமாய்ப்
படர்ந்ததாமெனநேரிநிற்சோபனம்பகர
நடந்ததூதுவநாடொறுங்கோடிநானலமே (அசு)
தொடர்ந்துசெய்யினுநீசெய்தவுதவியைத்தொடரா.

என்னைவேண்டிநீமீண்டுபோயீண்டுனையேவு
மன்னைவேண்டுவதொன்றுளமாதைநம்வயினின்
முன்னைவேண்டியீந்தப்புறந்தன்குறைமொழிதல் (அஎ)
பின்னைவேண்டுவையென்பதேயவைசொலப்பெறுவாய்.

நெய்யினாற்பெருநெருப்பினையவித்திடநினைவு
செய்யும்புன்றொழிலாளர்போற்செறுச்செயக்கருதும்
வெய்யர்தங்களுக்கறியநான்விளம்பியவனைத்தும் (அஅ)
பொய்யிலாதுநீபுகலுதிபோவெனப்புகன்றான்.

சமர்த்தன்றூதுப்படலம்.

சொற்றவாசகங்கேட்டலுந்தூதுவனகைத்துக்
கொற்றவாவுனதாண்மையும்விநயமுங்குறிப்பு
முற்றுணர்ந்தநானெனமதுமன்சமுகமுன்னிலையிற்
சொற்றிடாதபோதென்பெயர்சமர்த்தனேசொல்லாய். (அகூ)

மந்தரந்திகழ்புவனவிந்திரன்றனைவானி
னிந்திரன்முதல்யாவரும்வெல்வதற்கிறையுஞ்
சிந்தைசெய்திடாரறிவிலாத்திருவிலிமாரன்
றந்தபித்தமேலிட்டிவைசொற்றனைதகவோ. (கூ0)

இங்குநின்பெருந்திருவெனும்யானையெம்மிறைவன்
செங்கைவாய்ந்தவிற்குதையுதைத்தெழுந்தவெந்தீவாய்ப்
புங்கமாகியசிங்கமும்புசித்திடப்பொன்றிப்
பங்கமாகுவதுணர்ந்திடாதேழைமைபகர்ந்தாய். (கூக)

வாய்மதர்த்துநீவழங்கியவுரைகளான்மன்றே
நோய்மிகுத்துநற்றூய்மையும்வாய்மையுநோக்காத்
தீயுகுத்துநற்றிருவெலாந்தீர்ந்துவெங்கானப்
பேயினுக்குறவாக்கிவன்னாகினைப்பெருக்கும். (கூஉ)

சென்றுமேல்வருகருமங்கள்சிந்தியாவுன்பா
னின்றுநானினியென்கொடுநிகழ்த்தினுநெறியீ
தென்றுகொள்கிலாயிறுதிவந்தெய்தினெல்லவர்க்கு
நன்றுந்தீயதாய்த்தீயதுநல்லதாய்நணுகும். (கூங)

ஆனதாலுனதாயுளுஞ்செல்வமுமாசும்
போனதாலினிப்பொருந்துமென்றுள்கலும்போமோ
யீனமேபடத்துணிந்தநீயிருவெனத்தூதன்
கோனகர்ப்புறங்கடந்திடக்குறித்தனன்கொடியோன். (கூச)

வம்புசொன்னதோர்வாய்கிழித்திவனுடல்வாட்டிச்
செம்புணீர்கொடுதின்னுமினென்றுகண்சிவந்து
தம்பெரும்படைத்தலைவரையேவலுஞ்சமர்த்த
னும்பரோங்கினனிவர்முடிகீழ்ப்படவுதைத்தே. (கூரு)

வந்துபற்றியவீரரைமண்ணின்மேற்றலைகள்
சிந்தமோதியங்கவருடல்பொடிபடத்தேய்த்து
நந்துமிந்நகர்நாளையேநல்லவரெல்லாம்
முந்துவீர்புறநகர்க்கெனமொழிந்துபோயினனால். (கூசு)

சமர்த்தன்றூதுப்படலம் முற்றிற்று.

ஆகப்படலம்-ஙச-க்குத் திருவிருத்தம். கஅஉ0.

கோமனைப்புரிசையுமகழின்கொள்கையு
மாமனைப்பெருக்கமுங்காத்துவைகுவோர்
தீமனச்செய்கையும்பிறவுஞ்செப்பினு
லேமனைச்சிறியனென்றெவருமெள்ளுவார். (கஅ)

ஆயிரமாயிரங்கோடியானைதே
ராயிரமாயிரங்கோடியாடன்மா
வாயிரமாயிரங்கோடியாட்படை
யாயிரமாயிரங்கோடியாகுமால். (கக)

மக்களின்முன்பிறந்தவன்றன்வல்லபந்
திக்கெலாநிரம்பினமேதவரூரினும்
புக்கினநடுமகன்புகழும் வீரமுந்
தக்கதோரிளையவன்சமர்த்தையென்சொல்வேன். (உ0)

கருமமுங்கருமத்தின்விளைவுங்கண்டுமேல்
வருபொருளுணர்ந்துசொன்மதியின்மிக்கநற்
றருமனென்றெருபெருந்தலைமைமந்திரி
யருமையான்பினுமுளவமைச்சர்தங்களில். (உக)

துச்சனனென்றுளான்சுடுநெருப்பினு
நச்சினுங்கொடியவனுரியர்க்குளே
மிச்சமென்றுயர்புகழ்விளைந்தகற்பினுட்
கச்சமுந்துன்பமுங்கொள்ளவாற்றினன். (உஉ)

தந்திரனவையனென்றிருவர்தக்கநன்
மந்திரத்துள்ளவர்வலியும்வன்மையுஞ்
சுந்தரத்தோளினீர்சொல்வதென்னவர்
வந்தமர்நாளையேமலைதல்காண்பிரால். (உங)

வேறு.

வீரசிகாமணிசேனைநாதன்சுந்தன்விந்தனதிகோபன்வலன்வினதன்மத்தன், பாரின்மிகுபடைத்தலைவரெண்மரண்டபகிரண்டமுழுவதும்பம்பரம்போற்சுற்றிச், சாரிகொடுசமர்புரியவல்லாரிந்தத்தாரணியாள்மன்னரெல்லாந்தன்னைத்தாழப், போர்கடந்துதும்பைமுடிபுனைந்தவெற்றிபொருவிசையதரன்பெருமைபுகலப்போமோ. (உச)

வேறு.

அழகமைந்துபெருந்தவஞ்செய்தரசுரிமைநெடுங்காலமாற்றித்தீர்ந்த
விழவரசர்தமிலொருவரிவன்போலும்புயவலிமையெய்திற்றுண்டோ
பழவினையாலுமதுகொடும்பகையடைந்தானன்றெனில்வெம்பாந்தள்சூடு
மழவிடையானென்னினும்போர்கடந்துதும்பைமுடித்திடவுமார்க்குமுண்
[டோ.

புவனேந்திரன் கேள்விப்படலம் முற்றிற்று.

ஆகப்படலம்-நடு-க்குத் திருவிருத்தம்-கஅசுடு.

புவனேந்திரன் படையெழுச்சிப்படலம்.

கருங்குவளை தாமரையிற்பூத்ததென்னக்
  கவின்முகத்திலுலவியசீர்க்கண்ணார் தங்கண்
மருங்குவளையெழில்காட்டுமுயர்ந்தமாட
  மணிக்கொடிகணிறைவிளங்குமதுரை தன்னி
லொருங்குவளைவீதிதொறுநடந்துவிற்ற
  வொருநாதனிருபாதமுளமேற்றூர்க்குத்
தருங்குவளைதனமுதலார்ச்சிதமுந்தந்து
  சாம்பொழுதுஞ்சுவர்க்கபதந்தருந்தப்பாதே. (க)

வேறு.

என்றுபுகன்றடிபாவியினிதிருந்தானவ்வேலையிரவிகீழைக் [ன்னி
குன்றினினின்றெழுபரித்தேரொடுவிசும்பினிடைகுதித்தான்கொடுமையு
யன்றுபெருங்கொலைபுரிந்தபாதகனையின்றுசமராடித்தம்பால்
வென்றிபெறுவாரெனுமோர்ருத்தியுந்தக்காண்பதற்குமேவுவான்போல். ()

வல்லிருளுமல்லியுந்தன்வாயடங்கிப்புறஞ்சாயமதுகசாலம்
புல்லியருந்தேனுகர்தாமரைமலருந்துயில்பவர்கண்மலரும்பூப்பக்
கல்லுதையங்கிளித்திளஞ்செங்கதிரோட்டிப்புலரிவருங்குறிமுன்காட்டி
யெல்லவன்வந்துதித்தலுங்கண்டெல்லவருங்கடனாற்றற்கெழுந்தாரன்றே. ()

ஆகமத்தினெறிப்படிநின்றருங்கடன்கண்முறைதவறாதாற்றித்தங்கள்
சேகரவாகினியோடுந்திருப்புவனேந்திரத்திறைவன்சிந்தைக்கேற்ற
பாகமுதுண்டடைக்காயும்பகிர்ந்தருந்திச்சந்தனமென்பனிநீர்கூட்டி
மோகமுறப்பூசியுடுத்தணிந்தனர்மூவாதபணிச்சுடர்கண்மூச. (௪)

போர்ப்பணைகள்கிடந்துபுறந்துவைத்திடப்பல்லியமார்ப்பப்புதியசெம்பொற்
றேர்க்குலமும்பரித்தொகையுஞ்சிந்துரமத்தகக்களிற்றின்றிரளும்வானின்
கார்ப்பருவமழையெனநின்றதிர்ச்சிதரக்கவண்டிகிரிகதிர்வேல்சூல [ற.
மேர்ப்பனபற்படைக்கலங்கொண்டரியினம்போல்வயவர்சூழாமெங்குஞ்சுற்

முத்தணிபொற்கவிகைநிழன்முடிகவிப்பக்கேதனவான்முகடுதோய்வுற்
றெத்தலமுமிருள்விரிப்பமுடிமன்னரணிவெயில்விட்டெரியச்செங்கைச்
சித்திரவிற்படைத்தலைவர்புடைநெருங்கியார்த்திடமுத்தேவரோடு
சித்தர்முனிவரமரர்சிரம்பொதிரச்சம்பரவிச்சிந்தைதேம்ப. (௬)

மாமணிப்பொன்முடிவேய்ந்துகவசமணிந்திடையினிற்குற்றுடைவாண்
மாட்டிச், சேமவரிச்சிலைவாங்கித்தூணியும்வெந்நிடைதாங்கிச்சேனுலா
வுஞ், சோமனுதையம்போலுந்தூய்முகமண்டலநிலகத்துரகத்தேர்மேற்
காமனுங்கந்தனுநாணப்புவனேந்த்ரன்சமர்பொருதக்கருதிநின்றான். (௭)

காமனின்றதெனநின்றதிருப்புவனேந்திரன்பணிக்குங்கருமநோக்கி
மாமனின்றானவன்பணிக்கண்நவமணிநின்றானவன்றன்வருதிதாங்கித்
தீமனவெம்படைத்தலைவர்நின்றாரத்தலைவருரைசிரமேற்கொண்டாங்
கேமன்வரினும்விடுவதிலையெனும்வெஞ்சினப்படைகளெங்குநின்ற. (அ)

ரின்றவடதிசைக்கடுப்பக்கீழ்த்திசையிற்றளாதிபனைநிறுத்திமற்றைத்
தென்றிசையின்மாதுலனுமேற்றிசையினவமணியுஞ்சேரச்செய்து
வன்றிறல்கொள்புத்திசிகாமணியோடுசமர்த்தனுந்தன்மருங்குகாப்ப
வென்றிகுறித்திகல்விசையத்ரன்போர்க்குவருமார்க்கம்விளைமினென்றான்.()

தோட்டம்வயற்சோலை திடல்சூழ்பலன்கண்முழுவதுங்கைச்சூறையாடிக்
காட்டிடையுள்ளதும்வீட்டிக்கறவையான்றுருவைகளாக்கவர்ந்துபக்க
நாட்டையடங்கலுநகெடுத்துக்குடிகளையங்கவர்பொருளைநாசமாக்கிக் [ன்.
கோட்டையுங்கொத்தளமுமிடித்திருந்தையுகநகரையெரிகொழுத்துமென்று

எழுகடலுநான்காகியெழுந்துபுறம்வளைந்ததெனவியங்களார்ப்பக் [ளாம்
குழுமியவெம்பெருஞ்சேனைகோனுரைத்தமொழிப்படியேகுறித்தவெல்
பழுதுபடத்தூற்றியெறிசூறையிட்டுப்படர்ந்துதிரிபரிசுநோக்கி
யழுதிருகண்புனல்சோரவிசையதரன்பாற்றூதரறைவதானார். (சக)

வாயினுஞ்சிரழகமைந்தமதிட்புறத்தும்போரசழிமாட்டுநாட்டுங்
காயெரியுங்கடுவிடமுங்கொடுங்கூற்றுநடுங்கநெடுங்கடல்போலொன்னார்
தாயினரங்கதிற்கீழ்பாற்றளாதிபன்றென்றிசைமாமன்சார்ந்தார்மேல்பா
லேயநவமணிநின்றான்புவனேந்திரன்வட பானின்றேவமன்னே. (கஉ)

கரும்புகடிந்திளங்கதலிக்கனிசிதைவறுக்கைநறுங்கனியுஞ்சிந்திக்
குரும்பைதகர்த்தருங்கமுகின்குலைசாய்த்துமாங்கனியைக்கொள்ளையாடிச்
சுரும்பினஞ்சூழ்மதுவனங்கடேட்படுத்துக்கதிர்ப்பழனஞ்சூறையிட்டு
விரும்பினமட்டுங்காட்டும்நாட்டுமவாதிக்கிரமம்விளைவித்தாரால். (கங)

மான்வாங்குமீன்விழியார்மானமெமாம்வெளிவாங்கவனைந்தனூசு
தான்வாங்கிசசிறைதகைந்தார்தடுத்தவரையுயிர்வாங்கித்தனமுங்கோடா
ஆன்வாங்குகளேபரமொத்துயிர்வாங்காதவருநிலையுற்றார்மற்றென்
றேன்வாங்குஞ்சிறையளிசூழ்ந்திசைமுரலுந்தார்மார்பாசெப்பவென்றார். ()

ஒற்றர்வடவானலம்போலுரைத்தமொழிசெவித்தலைசென்றுருவலோ
டுங்,கொற்றர்குவணிப்புயத்தான்கொழுங்கடைக்கண்சிவப்பேறக்கோவை
யண்ட, மிற்றதெனநகைத்துருகைபுடைத்தரியேறெனவெகுண்டாங்கிமை
யோரஞ்சச், சுற்றிமருங்கவையிருந்தோர்தமைநோக்கிமழையிடிபோற்று
ணித்துச்சொல்வான். (கரு)

சேலிருந்தவரிநெடுங்கட்டிருவனையாடனைக்குடியைத்தேவியாக்க -
மாலிருந்தவெனைவஞ்சித்திரவினிற்புன்காவாவளவிச்சென்ற
பாலிருந்தமுடைமாறுவாய்ச்சிறியபாலனுமேட்டயனுமன்னி
மேலிருந்தபடையொடும்வந்தமர்க்குநகர்ப்புறமிடைந்தவிந்தைநன்றால்.(கசு)

வெறிகோடிகிடைத்திரண்டுவெஞ்சமருக்கேற்படினும்வீரமாய்ந்து
பொறிதேய்ந்தழிம்டப்புலியும்போர்க்கொதுங்கிப்பப்படுமோபுலிமேலிந்தச்
சிறியவரோசெருவெல்வார்பகழியொன்றாலவர்தலையைச்சிதறியென்கைக்
குறிபிழையாதுடனுற்றபடைமுழுதுங்கூற்றமுண்ணக்கொடுப்பேனின்றே.

ஒருமகனுக்கறம்புரியாக்கருமவினைப்பயனென்றெந்துள்ளமாழ்கி
மருமலர்ப்பூங்குழலாளைப்பெறக்கிடைத்தவிரிஞ்சைநகர்மன்னர்க்கிந்தப்
பெருநிலயேன்மருமகனாகியபலர்க்குள்ளிச்சிறியபிள்ளைமேலென்
னருமைவிலகாமலென்னைப்பகைத்தமருக்கெதிர்த்தவிதமழகிற்றம்மா.(௧௮)

தேவர்முனிவாரியக்கர்சித்தர்முதலோர்பரவுந்தேவதேவர்
மூவர்களுமென்வலிக்குமுன்னிற்கா வைகிற்கமுதுபார்தன்னி
லேவரெனைப்பணியாதார்வ்வுலகிலறியார்போலெளிமைவாய்ந்த
மேவலர்சற்றசசமின்றியென்னெனுவெந்தமராடல்விரும்பலொன்னே. (௧௯)

என்றுசினந்தெரியொடுவெம்புகைதவழக்கட்டுயிர்த்தவ்விறைவன்செம்பொ
ற், குன்றுபுரைமணிநெடுந்தேர்கொணர்கவென்றுன்றுற்சனனுங்கோமான்
பாத, நின்றிருகையாற்பாவியவர்மீதுநீபொரவுநெறியோநாயேன், சென்று
பகைதொலைத்துணக்கம்மாதினைபுங்கொணர்ந்துமன்றல்செய்வனின்றே. ()

படையின்றித்தனிப்புகுந்துபடைவையெனப்புறஞ்சூழ்ந்தப்படையைக்கொன்
றே, யிவையொன்றுமில்லாளைத்தடையன்றியுனக்குமன்றலிசைப்பேனேக
விடையின்றுதருகவென்றவிரகறிதுற்சனன்றன்னைவிலக்கியங்க
ணிடைநின்றநவையனுமன்னவன்மலர்த்தாண்முடிசூடியிசைப்பதானான். ()

வில்வேநத்துற்சனனுல்விளம்பியசொன்னலமெனினும்வீரானோ
ரெல்லோரும்பின்னின்றுவேறினிமேலெதுகருமமியைந்துசெய்ய
வல்லோர்களுடன்சென்றுமறுவலரைப்போர்க்களத்தின்மடியநூறிப்
பொல்லாளாய்ப்புறம்போனநல்லாளையில்லாளாய்ப்பொருத்துவோமால். ()

எகவிடையருளெனக்கையிறைஞ்சியபுன்னவையனும்பின்னேகமுன்னால்
வாகுபெறநின்றிருதாண்மலர்தொழுதுதந்திரனுமன்னுவின்னோர்
சேகாமாய்ச்சென்றாலுந்தனித்தனியேசென்றாலுந்தெவ்வர்தங்கள்
வேகவலிய க்கிவெந்ரிபடைப்பர்கெலோநமனுலும்வீயாரம்மா. (௨௩)

அதனைந்துதெவ்வர்வலிக்கடங்குவதும்முடிபுனைந்தவரசர்க்கென்றும்
புதுவசைத துவொன்றிடுமதனலெதுவரினும்போமெசய்ய
மதினைத்தேனதன்மேலுமன்னுநின்மனச்செயலும்வலியுமெண்ணித்
துதிருநற்கருமநெறிதுணிந்தியற்றத்தகுவையெனத்தொழுதுசொன்னான்.

தந்திரனோடமைச்சரொருமூவர்சொன்னமார்க்கமும்பின்றரணிவேந்தன்
சிந்தைபொருமனச்செயலுஞ்சாலர்கள்வலச்செயலுந்தெளிந்துளாய்ந்து
மந்தணங்கொள்ளறிஞர்களிற்பெருங்கருணைமாருதமதியான்மிக்க
சுந்தஞ்சேர்தருமனெனுமந்திரியுமிறைவனடிதொழுதுசொல்வான். (௨௫)

புவனேந்திரன் படையெழுச்சிப்படலம் முற்றிற்று.

ஆகப்படலம்-௩௬-க்குத்-திருவிருத்தம்-௧௭௫௦.

அன்னவரொடுசமாடவெண்ணுதன்
மன்னவநமக்கழகல்லமன்னவர்
சொன்னவைபுரிவதேதுணிவுஞ்சூட்சியு
மின்னமுமுண்டுகேளெனவியம்புவான்.
(௧௮)

வாலியுந்தம்பிதன்மனைவிமேன்மனங்
கோலினதாலமுதுதித்தகோதைதன்
ருலிபோய்வருந்துறத்தானுந்தென்றிசைக்
காலன்வாயப்பட்டுயிர்சழிந்துற்றனரோ.
(௧௯)

பாந்தளந்துவசனும்பாண்டுமைந்தர்த
மேந்திழைமேன்மனதிசைவைத்தலாற்
சேர்ந்தனபெரும்புகழனைத்துஞ்சிந்தியே
மாந்தினரெலாம்வசைநின்றோங்கவே.
(௨௦)

மண்ணகத்தவர்செயனிற்சமாட்சிகொள்
விண்ணகத்தமரர்கோன்வேட்கைகொண்டொரு
பெண்ணகத்தரும்பிழைபெற்றாராயிரங்
கண்ணகத்தடைந்தனன்கவலைநீங்கிலான்.
(௨௧)

கற்புறுமகளிரைக்கண்ணிற்காண்பதுஞ்
சொற்பிழைபுகல்வதுந்துயரஞ்செய் து
மறுபமோவிதுமுனமாற்றித்ந் தவர்
கற்பமேலாயினுங்கணக்கிற்சார்வரோ.
(௨௨)

பிறர்மறைக்க செவிசெவிடுபெற்றவர்
திறன்மனைக்கட்கணுவகுருடுசேர்ந்துபின்
ப ம்விளைகூட்டினுமூங்கைபோன்றுள ர்க்
கறநெறியெறினியறையவேண்டுமோ.
(௨௩)

திருகளு றைவருமொ திருகரு
தருபய மா னைற்றனைழுத க்குன்ப
 கசவ யெள்ளுட மி
னகசமுற் ருட்பதற்கவா .
(௨௪)

நல்ம துசெய்யினை து மற்றின்றிமெய
பொல நபுரிவதிம் மைமற்பொல்லதைச்
செல்வ குன்னினுமவற்குச்சொல்லொணாப்
பல்பெரும்பாவமுற்றலாபழுக்குமோ.
(௨௫)

தருமன் நீதியுரைத்த படலம் முற்றிற்று.

ஆகப்படலம்-௩௰௭-க்குத் திருவிருத்தம்-௪௮௯.

நருமன்தசமுகன்கதையுரைத்தபடலம்.

அரியுமயனுமறியாவமலன்
விரியும்புவியாய்ப்புவியும்வினவித்
தெரியும்பொருளாய்த்திருவாமதுரைப்
புரியுமுடையானவனென்புலமே. (௧)

வேறு.

எய்துமூவுலகினுக்கிறைவனாகியே
வெய்யவாணிருதரில்விறலின்மிக்குளான்
செய்கையும்வீரமுஞ்சிதைந்துமாண்டமை
யையகேணுனறிந்தளவுஞ்சொல்வனால். (௨)

வேறு

உன்னிலுங்கதிப்பெத்தனைகோடியென்றுரைப்பே
னெண்ணிலங்களுந்தனதிருதாண்மலரிறைஞ்ச
முன்னிலங்கையிற்பொன்மணிமுடிபுனைந்திருந்தோன்
மின்னிலங்கும்வாட்டசமுகனரக்கரில்விறலோன். (௩)

ஈசன்வாழ்திருக்கைலையையிடந்துமுக்கடஞ்சா
லாசைவெங்கரிமருப்பொசித்தமரைவாட்டித்
தேசுகற்பகஞ்சுரபிசிந்தாமணிசேர
வாசவன்றிருக்கவர்ந்தவன்றனைச்சிறைவைத்தான். (௪)

சண்டனின்றுகட்டியமிடத்தாமரைக்கிழவன்
கண்டுகோள்கரணந்திதிநாட்சொலக்கடலோன்
றெண்டிரைப்புனல்சிதறிடக்குப்பைசேராமன்
மண்டுவெந்துவந்தடிக்கடிதுடைத்தவண்மருக. (௫)

இரவிசந்திரனென்பவரிவனகர்க்கெதிரே
வரவுதீர்ந்திருமருங்கினுநாடொறும்வாவ
வரவின்மங்கையரியக்கியராம்பையர்முதலோர்
பரவியேவல்செய்தாருயிரோடுளம்பதைப்ப. (௬)

இயக்கர்விஞ்சையர்மையவர்நாரதர்கருடர்
மயக்கமுற்றிடமாமறைவேள்விகண்மறவா
வியக்குமாதவர்வேதியர்முனிவரர்மெலிய
வியக்கமற்றுமற்றியாவருமுறுபதமிழப்ப. (௭)

அரக்கர்மாப்படையாயிரம்வெள்ளமோடவ்வா
றி க்கமற்றுளமூலமாத்தானையுமையைய
புரக்கும்வஞ்சகன்சிசான்புரிதொழிற்கஞ்சி
வரக்கணீருகுத்தயனுழைவானவர்வழுத்த. (௮)

கேட்டதாமரைக்கிழவனுங்கிளத்தியவிமையோர்
கூட்டமோடுபோற்றிரைக்கடல்குறுகிமென்னறுந்தேன்
றேட்டவிழ்ந்தபைந்துழாய்முடிப்பரமனைத்தொழுது
நீட்டும்வேற்படைநிசிசரர்சுடுதொழினிகழ்த்த. (௯)

அந்தவானவர்க்கருள்புரிந்தணிதுழாய்ப்பரமன்
முந்துவானரமாகிநீர்முழுவதுமொருங்கே
சிந்துசூழ்புவிசென்மின்கணுங்களின்றிறத்து
வந்துநாமுமையயோத்தியிற்றசரதன்மகவாய். (௧௦)

அரக்கர்வேரறுத்துங்களுக்கருள்துமென்றமல
னிரக்கமுற்றுரைசொற்றிடவிமையவரிறைஞ்சித்
தரக்குநேர்வலிசமைந்துவானரங்களாய்த்தரைமேன்
மரக்கனற்படுமலையினும்வனத்தினும்வதிந்தார். (௧௧)

ஆயகாலையயோத்திமாநகரினுக்கரசன்
றூயசிந்தையன்றசரதன்சுதர்களின்மையினன்
மேயதன்குருவதிட்டன்பால்விளம்பலுமவனுஞ்
சேயவானவர்சூழ்தெரிந்தின்னவைதெரித்தான். (௧௨)

வேறு

தன்றுடுமழைமறப்பத்தளர்வடைந்தரோமபதன்றடங்கட்செவ்வாய்
மின்றுரைக்கொடுகலைக்கோட்டுறுமுனியைவருத்தியுளமெலிவுதீர்ந்தா
னந்நாளுமவனாட்டினிடையிருந்தானீயுமழைத்தரியவேள்வி
யிந்நாளிற்புரியின்மகவெய்துமென்றானிறைவனுமப்படியேசெய்தான். (௧௩)

கலைக்கோட்டுமுனிமகத்தாற்காகுத்தன்முதலாயகாளைவீரர்
நிலைகோட்டமில்லாதுநெடிதுபிறந்துலகமிசைநெறிநீண்டன்ன
சிலைக்கோட்டமறப்பயின்றுகரிபரிதேர்கலைபயின்றுதிரியுநாளில்
மலைக்கோட்டினிடைவாழுமாநிருதிதாடகைதோள்வலியான்மாழ்கி. (௧௪)

வேறு

மாதவக்கோசிகன்வரவுகாண்டலும்
பாதமேற்றசரதன்பாசியெய்துதற்
கேதுளதவமிருந்தேனென்றோதினன்
கோதிலாதவனிவன்றனக்குக்கூறுவான். (௧௫)

நாளெலாநலிந்தனளுனைசெய்நல்லற
வேள்வியைத்தாடகையரக்கிவெம்மையா
டோள்வலித்தோன்றனின்சுதர்கடங்களி
லாள்வலியிராமற்கொண்டுதற்கெண்ணினேன். (௧௬)

தருகவென்றுரைத்தலுந்தசரதப்பெருங்
குரிசிலும்வருந்தித்தன்குருவதிட்டன்சொல்
லுரிமையாற்கருநிறத்தொருதன்கொண்டனேர்
திருமகனொடிளையவனுஞ்சேரவே. (௧௭)

மாமுனிபின்செலவழுத்தினான்றிருத்
தாமரைக்கண்ணனுந்தம்பியும்நெடு
நாமவிற்றாங்கினார்நாடகன்றுவெங்
தீமலிகான்சுரமெளிதிற்றீரவே. (௧௮)

கோலமாமுனிவனுங்கூறும்விஞ்சையாற்
பாலைநீத்தருவனம்பலவுந்தள்ளியே
நீலமால்வரைமுடிநெற்றிமுற்றினார்
காலனையனையதாடகையுங்கண்டனள். (௧௯)

கோசிகமுனியுடற்கோதுதள்ளியே
தேசுறுவள்ளலைச்சிந்தைநோய்கெட
லாசையின்கொழுநனையமைத்துப்பின்னொரு
மாசிலையவனுயிர்வெளவுவேனெனா. (௨௦)

குன்றமுந்திசைகளுங்குலுங்கப்பார்நெறிந்
தன்றுகம்பிதங்கொளவாவிற்சீறியே
துன்றினாள்கொண்டலுந்தூயவன்சர
மொன்றுகொண்டவளுயிரோட்டினானரோ. (௨௧)

மக்களிற்சுவாகும்வல்லரக்கர்தானையும்
புக்குயிரழியமாரீசன்போயொரு
திக்கினின்மறைந்தனன்செய்யவேள்வியைத்
தக்கவன்முடித்துப்பின்னிவர்க்குச்சாற்றுவான். (௨௨)

ஆளுடைச்சனகனாலாற்றுநற்றிரு
வேள்வியுங்காண்குதும்வீரவென்றுபின்
நீளிருஞ்சரங்களும்வில்லுநேர்ந்தனன்
றாள்பணிந்தவனுடனிவருஞ்சார்ந்தனர். (௨௩)

மிதிலையினெயிற்புறமேவவாங்கெழு
கதிரெனக்கல்லுருக்கழிந்துவானுலா
மதியெனவொருதிருமகளுமுன்வர
விதியெலாமுனிசொலவியந்தவீரனும். (௨௪)

அகலிகைதன்னைக்கோதமனுக்காக்கியே
மகன்சதானந்தனோடெழுந்துவல்லையின்
மிகவலிச்சனகன்பேரவைக்கண்மேவியே
யிகல்படாதவன்விருந்தியைந்துபின்னரோ. (௨௫)

சீதைதன்னிலைமையும்வில்லின்செய்கையுங்
கோதமன்காதலன்கூறக்கோசிகன்
சீதரன்றிருமுகநோக்கச்சீதவன்
வேதனைதீர்ந்தவர்வியக்கவொல்லையில். (௨௬)

கார்முகமிறுத்தனன்கண்டுதாதையைச்
சீர்பெறச்சனகனும்வருத்திச்சீதையைத்
தார்பெறக்காகுத்தன்றனக்குச்செய்துபின்
னூர்விடுத்தயோத்தியைநாடியுற்றனர். (௨௭)

பாதையிற்றடுத்துளபரசிராமன்கை
மேதகுவில்லினோடவன்றன்வீரமுந்
தீதறவாங்கிமேற்செல்லும்வேலையிற்
றாதையும்பரதனைத்தாயின்றாதைபால். (௨௮)

சென்றிடப்பணித்துப்பின்சேனைசூழ்வர
வன்றவந்தயோத்தியிலடைந்தபிற்றைநா
டன்றிருக்குமாரனுக்குரியதன்னர
சொன்றிடப்புனைவதற்குளத்திலுன்னியே. (௨௯)

வேறு

புரவலன்வசிட்டனாதிப்புனிதவேதியராயுள்ள
குரவரைவினவிவேந்தர்குழுக்களுக்கோலைபோக்கி
முரசறைவித்தானானைமுதன்மகன்முதன்மையான
வரசினுக்கணியனாமென்றமரருமார்வந்துள்ள. (௩௦)

வானுக்கும்புவிக்குமேனையுலகுக்குமனந்தான்பொல்லாக்
கூனிக்குமனமில்லாதுபோதவர்கோட்பங்கென்றாங்
கோனுக்குந்தலைவியாற்றீவினைசெய்தாள்வரங்கொண்டப்பான்
மீனுக்குமிடர்செய்கண்ணாளிராமனைவிளித்துச்சொல்வாள். (௩௧)

சரதமன்னளித்தவிந்தத்தாரணிமுழுதுமெங்கள்
பரதனேயாளநீபோய்ப்பார்வனம்பதினாலாண்டு
விரதமாதவமேசெய்யவேந்தர்கோன்பணியீதென்றா
ளிருதயாலயம்பூரித்தேயெழின்முகமிலங்கச்சொல்வான். (௩௨)

தந்தைசொல்பணியன்றாயினும்பணிதலைக்கொண்டாற்ற
வுய்ந்தனனென்னைப்போலியாரென்றுவகையோடிறைஞ்சிப்பெற்ற
சுந்தரப்புயத்தான்பாதந்தொழுதன்னன்றிசையைநோக்கி
வந்துதன்றாயைப்போற்றிச்சுமித்திரைமனையிற்புக்கு. (௩௩)

பொன்னடிவணங்கிச்சூழ்ந்துபொருமுகின்றோர்கட்கெல்லா
நன்னயநவின்றுதம்பிதன்னொடுநளினக்கோயின்
மன்னியசனகியோடுந்தவத்துருவரித்துவானின்
மின்னிகரெயினீத்தொல்லைவெய்யதீக்கானமேவி. (௩௪)

ஆற்றுநீர்கடந்துநாவாய்கடவியகுகனுக்கன்பு
வேற்றுமையின்றிக்காட்டிவிபுதருக்காக்கங்கூறிப்
போற்றியமுனிவர்க்கெல்லாமெதிருரைவணக்கம்போக்கித்
தோற்றுசெங்கதிர்சுலாயசித்திரகூடந்துன்னி. (௩௫)

ம்ங்கையர்கழுத்துக்கெல்லாமங்கலமான்றுய்ய
பங்கையத்தவிளுக்கந்தப்பனிவரையிடங்கடோறுந்
தங்கியவளங்களெல்லாந்தனித்தனிவகுத்துக்காட்டி
யங்குறைநாளிற்றம்பிபரதனுக்கரசன்கையால். (௩௬)

தீட்டியமுடங்கல்போலும்வரக்கண்டுதிருவோலெனல்லை
நாட்டிடைநடந்தயோத்திநண்ணினானிறைவற்கேதங்
கேட்டனனழுதுசோர்ந்தான்கிளர்ந்தெழுசேனைசூழக்
காட்டிடைபுகுந்துவேடற்கண்டுமுன்னவனைக்கண்டான். (௩௭)

காண்டலுமுவகைதூங்கக்கரைந்தகண்ணருவிகால
வாண்டகைதழுவித்தந்தைதவலியென்கொலறைதியென்ன
மூண்டெழுதுயராலுற்றபரதனுமொழிந்தள்ளாட
நீண்டநன்மனத்தான்கேதநிகழ்த்தியாகுலித்துநின்றான். (௩௮)

தம்பியைநோக்கித்தந்தைக்குற்றதுதன்னைநோக்கி
வெம்பியமனத்தான்கண்ணீர்விரிந்துமெய்பாவச்சூழ்ந்தாங்
கும்பரோடிம்பர்காறுமுருகநின்றாற்றியோயா
நம்பியைவசிட்டன்றேற்றத்தெளிந்தனனமரோடப்பால். (௩௯)

பாங்குறைநதியின்கட்போய்விதிமுறைப்படியேதந்தைக்
காங்குசெய்கடன்களியாவும்வசிட்டனுலாற்றவாற்றி
யேங்கியபரதற்கையன்பாதுகையீந்துபாரைத்
தாங்கவென்றனுப்பிமாதுந்தம்பியுந்தொடரத்தானும். (௪௰)

தண்டகாரணியஞ்சென்றார்தவத்துறைமுனிவோரெல்லாங்
கண்டனர்தாயைக்கண்டான்கன்றெனக்கனிவுகூர்ந்து
விண்டனர்நிருதர்செய்யும்வினையெலாம்விரித்துமேலை
யண்டசத்துயிலின்சோதிபயமொழித்தபயநல்கி. (௪௧)

மோனகர்பாலர்கில்லர்முண்டகர்கபிலர்மச்ச
ரேனையமுனிவராசீர்வதிக்கவின்னருளுமேற்றுக்
கானகமிருந்தார்வெய்யவிராதனைக்கடிந்துஞான
மானவன்சரபங்கன்றன்மாசுறுபிறப்புமாற்றி. (௪௨)

இகத்தவாவிகந்துநான்குசுருதிதேர்ந்தீறிலாத
மகத்தவாதவருக்கெல்லாம்வண்டமிழ்வகுக்குஞான
வகத்தன்வான்வரையைத்தாழ்த்தவகத்தியன்றனைக்கண்டம்பும்
மிகத்தவாவுயர்ந்தவில்லும்வேண்டியவாமும்பெற்றே. (௪௩)

வருமுழிதனிற்சடாயுமன்னனைத்தந்தையாக
வுரிமைகொண்டவிரும்பஞ்சவடிக்கரையொளிருஞாங்கர்
பரவுதம்பிகையாற்செய்தபன்னகசாலையெய்தி
யரிவையோடிறைவனீங்காதமர்ந்தினிதுறையுமெல்லை. (௪௪)

மாயவளரக்கர்க்கெல்லாம்வாழ்வும்வாணாளுநீக்கும்
நோயவள்வனத்திலுற்றநோன்புடைமுனிவோர்க்கெல்லாந்
தீயவள்கொடியசூர்ப்பநகியெனுந்திருநீங்குற்ற
பேயவளிராமற்கண்டுபெருமயலூறநின்றே. (௪௫)

அங்கசப்பாவிக்காற்றாதகங்கசப்பாகினொந்தேன்
யங்கில்வைத்தருள்செய்கென்றபதங்கையையிளையான்பற்றிக்
கொங்கையுங்குழையும்மூக்குங்குறைத்துநீகுறித்தோர்க்கெல்லா
மிங்கிதைக்காட்டென்றோட்டியிருந்தனராவளுமப்பால். (௪௬)

வேறு.

தாங்கலருந்துயருழந்துபெருங்குரலிட்டிருகாமுந்தலைமேற்றாங்கி
வீங்கியதோட்கானடிமேல்வீழ்ந்தழுதுபுலம்புதலுவெகுளிமிக்கா
னாங்கிருவர்தமைவிடுத்துமடிந்ததற்பின்றானையொடுமநுசர்மாள
வோங்குசமரம்புரிந்துகாகுத்தன்பகழியொன்றாலுயிர்விண்ணுற்றான். (௪௭)

வானடுங்கத்திரண்டெழுந்தகரனாதியவர்மடிந்தவன்மைநோக்கிக்
கானடுங்கவிருகரத்தால்வயிறலைத்துவிழியருவிகாலக்கோல
மேனடுங்கவிரிதலையோடலையெறியுமிலங்கைநகர்மேவித்தங்கள் [வான்.
கோனடுங்கக்கூறுதலுங்கேட்டுவடவானலம்போற்கொதித்துச்சொல் (௪௮)

சிந்துதிரைக்கடலுலகிற்சேணுலகிற்பாதலத்திற்றிகழாநின்றோர்
தந்தமதுதொழிற்றலைவிட்டெமதுகடைத்தலையேவிற்றாங்கிவாழ்ந்தா
ரிந்தவிதமாறுலகத்தெவர்செயலங்கவர்க்குன்றலிடையூறென்னைச்
சிந்தையுறுதெருமாறீர்ந்துள்ளபடிநடந்தவகைசெப்புகென்றான். (௪௯)

கையேந்தும்வரிசிலையார்காமனுங்காலுருவேந்தக்கனத்தபேரு
மெய்யேந்துமணிப்புயத்தார்நிருதர்குலம்வேரறுக்கவிருதுகட்டி
மையேந்துவனமுறைந்தார்தயரதன்றன்மக்களவர்மரபுக்கேற்ற
நெய்யேந்துகருங்குழற்கைகேசிசொன்னசரதமொழிநெறியினின்றார். (௫0)

தங்களிலேயிளையான்மற்றெவர்க்குமிளையான்கொடியசளக்கனென்னைக்
கொங்கைகளுங்கொடிமூக்குங்குழையுமறிந்தானெனவேகூறலோடும்
வெங்கணரவெனப்புழுங்கிவெகுளியினான்மூவுலகும்வெவநோக்கி
யங்குகரனார்க்கிதைச்சென்றறைந்தாயோவிலையோசொல்லடிநீயென்றான்.

சென்றுரைத்தேனுற்றுடல்போர்ச்சேனையுடன்கரனெழுந்துசென்றகாலைக்
குன்றுரைக்குமணிநெடுந்தோட்குமாரர்களிராமனெனுங்கருணைக்கொண்ட
லொன்றுரைக்குமுனங்கூற்றுக்கிரைகொடுத்தான்கைப்பகழியொன்றாற்க
ண்டு, வென்றிமுனிவரர்புகலவிண்ணவராவலங்கொட்டிமேன்மேலார்ப்ப.

காணிறக்கமுனிவருங்களிப்பேறவிண்ணவருங்கலக்கஞ்செய்ய
நாணிரக்கமில்லாமனவைபுரியநீபுரிந்தசவைதானென்னை
யூணிரக்கமில்லாதாயுரையென்றானங்கவளுங்கோசோமுன்ன [ள்.
மாணிரக்கமுறத்தடந்தோள்வரையிடந்தோய்கேளெனநின்றழுதுசொல்வா

சென்னிமிசையிருந்தவளுந் திருமார்பி லிருந்தவளுந் திகழுமென்றா
மன்னியிருந்தவளும் விண்ணில்வதிந்தவளுங் கழற்றுகளின் மாட்சியொவ்வா
வன்னவளை நினைக்கெனவே யாவெனடுக்கச் செலுமவ்வேலையவளைக் காக்குஞ்
சின்னவன்செய் செயலென்றுணர்ந்தது கோபங்காமஞ் செறிந்தவன்றே. (௫௪)

தம்மானந் தனைமறந்து தங்கையுறும் வலிமறந்து தவமேற்கொண்ட
வம்மானை யடைந்து புகழ்ந்தனுசரித்தான் றடுத்துமுடன்றானைப் பொற்றோள்
விம்மமானின் றெழுமுவகையொடு மெழுந்தார் மாரீசனை விரைந்து முன்போ
யெம்மானுந் தனைத்தொடரப் பொன்மானாயச் சனகிவிழிக் கெதிரே நின்றான்.

பொன்மானின் வடிவறிந்து புவிமானும் பூமான்பாற் புகன்றாடம்பி
கனமானும் வலியரக்கர் கருதிய வஞ்சகமென்றான் கருத்திற்கொள்ளா
மினமானு மணிமலர்க்கை வீரகுணி தசரதன் றிருத்தி விரையலுற்றான்
பின்மானமவிடுத்த திலங்கைப் பெருமானு மொழித்திருந்தான் பிழைசெய்தற்
[கே.

சாற்றோடு மெய்வயிலோடுங் கானூடு மோடுக்கா லோயநதையன்
கூற்றுவிகொளக் கொடுப்பேனெனக் குறிக்குமவ் வேலை குதித்து விண்ணின்
மேற்றுவசசரந்தொடுத்தான் வீழ்பொழுதினமாரீசன் விளம்பு மோதைக்
காற்றாது சனகி துடித்தே தவமறுத்த திளையோனு மறியச் சென்றான். (௫௭)

சென்றிடக்கண்டிரக்கமில்லாத் திருவிலியும் பொருவரிய தேகமாற்றித்
துன்றுசடைமுடி விரியக் கமண்டலமு மரவுரியுந் துலங்கக் கீழாந்
தொன்றுதிருக் கோவணமும் வெண்ணீறு முந்நூலு மொளிர்ப்பப் பாசம [ட்டி.
வென்றவர் போன்றை திரைமூப்படைந்த தொருமெய்ஞ்ஞானியென வேடங்கா

அங்குவரக் கண்டலுங் கண்ணீர்மாற்றி யெதிரேகியடிகணீவி
ரெங்குறைவோரிங்கு வருகாரணமென் கூறுமென விவளுகக் கொல்லா
தங்கவனுந் தேவர்முனிவர்க்கரியதொன னிலங்கையதி லெந்நாளுந்
தங்கியிருப்போமுலகோ டெவ்வுலகுக் கூமைத்தேறத் தவங்கள் செய்யும். (௫௯)

வேறு.

இருந்தநீவிர் யார்மகள் பெயரே திவணிருந்து
வருந்துகின்ற தெனச்சொலுமென வடிகணின்மாட்டுப்
பொருந்தினாக்கலாத் தகங்கொளாச் சனகனாப் புதல்வி
திருந்துகாகுத்தனறேவி யானெனப் பெயர் சீதை. (௬௦)

கேட்டவஞ்சகனடாதபுன் மொழிபல கிளத்தி
நாட்ட மோடுமெய் வுற்கமு மெரியுக நடுக்கி
வாட்டமுற்றிடச் சாலையை மண்ணொடு மவாங்கி
யோட்டமுற்றபொற் றேரில் வைத்தெழுந்தனனெல்லே. (௬௧)

எழுதவேலையக்கியே பூசைவாயெலியென வேங்கிப்
பழுதிலாத்தகற்பமுடையவள் பற்பலபன்னி
யழுதவோசை கேட்டடாதடா வெனச்சினந்தார்த்து
வழுவிலாத் தங்கழுகிறையரக்கனை மறித்தே (௬௨)

ஏறுதேரினைப்பாகனையிவுளியைச்சிலையைக்
கூறுசெய்தொளிர்குழைகளுமகுடமுங்குலைத்து
வேறுவேறுறக்கவசமுந்துவசமும்வீழ்த்திச்
சீறிநின்றமருடற்றினான்சனகியுந்தெளிய. (௬௩)

ஆயகாலையிலரக்கனுமெருண்வகட்கரச
னோயமுக்கணான்வாளினாற்சிறையினையொழித்துப்
போயினானகர்புகுந்தொருபொழுதும்பரிற்புவியின்
றாயினாடனைச்சிறையினிலிருத்தினன்றனியே. (௬௪)

பொற்பினாள்சிறைபுக்கபின்மானின்பின்போன
வற்பினான்றனைநேடியவிளவலுமடைந்து
சற்பினான்மனக்கவலையுந்தடுத்ததுங்கனன்று
சொற்பினாற்சொன்னதுனியும்பின்வந்ததுஞ்சொன்னான். (௬௫)

கேட்டபோதிளையோனுமறுமொழிகிளத்தாக்
கோட்டமுற்றனன்றுடித்தழன்மெழுந்தனக்குலைந்தான்
காட்டினூடெரிகாலெனக்காலினாற்கடுகி
யோட்டமீக்கொடுபன்னகசாலைவந்துற்றான். (௬௬)

உற்றுநோக்கினன்றேவியைக்காண்கிலனுயிராங்
கற்றதாமெனநெடிதுழன்றலம்வந்துகலநீர்
சுற்றுதெண்டிரைச்சுழிப்பிசைச்சுழல்வபோற்சுழலாக்
கொற்றவன்றிருக்குமரனுங்கொதித்துளங்குலைந்தான். (௬௭)

குலைந்தநம்பியோடிளவலுங்குலைந்துதன்னுயிராங்
கலந்ததாயினுந்தமையனைத்தேற்றியேயண்ணா
வுலைந்துநிற்பதென்னெடுத்தவர்தங்களையுடன்போர்
மலைந்துதேவியைமீட்குதனலமெனவழுத்த. (௬௮)

சென்றுதென்றிசையோயினார்தேர்ச்சுவடறிந்தா
ரன்றுவெஞ்சமரங்கொடுத்தரக்கன்வாளெறியக்
குன்றுபோற்சிறையிழந்திவர்வருநெறிகுறியாக்
கன்றிவீழ்ந்துயிர்ப்படங்கியதாதையைக்கண்டார். (௬௯)

கண்டபோதவர்கண்கணீர்சொரிந்துமெய்கரையக்
கொண்டல்வண்ணனுங்கைகுலைத்தாருயிர்கூற்றாங்
குண்டதாமெனவுயிர்ப்பவிந்தொடுங்கினான்விழியா
வண்டரோடுநின்றெண்டிசாமுகங்களுமயர. (௭0)

தம்பிதேற்றிடத்தெளிந்தனன்றாதையுந்தெளிந்தே
நம்பிமார்க்குளவாறெலாங்கேட்டுடனலிவாய்க்
கொம்பனாடனக்குரியதன்கொள்கையுங்கூறா
வும்பரேற்றனன்புகழ்த்தலையேறியவுரவோர். (௭௧)

தாதையைக்கரத்தேந்தியேதடநதிக்கரைபோ
யோதுநீர்க்கடனுஞற்றிவானெனுங்கெரிமூட்டி
வேதையுற்றவர்மீளவும்விரைந்துவெங்கானின்
பாதைகூடினர்சீதையைத்தேடினர்பரிவால். (எஉ)

ஆர்ந்ததிண்டிறல்வீரருமயர்ச்சியொன்றின்றிக்
கூர்ந்துகானினுமலையினுந்தடத்தினுங்குறுகாத்
தேர்ந்துதேர்ந்தொருவழியினுஞ்சீதையைத்தேறாச்
சோர்ந்துநின்றவரல்லினூடொருவனந்துன்னி. (எங)

பகலெலாநடந்திளைத்தகால்வருததமும்பசியு
மிகவருத்திடச்சனகிதன்பிரிவெனும்வெந்தீ
யகமிறுத்திடவிளவலைநோக்கியேயையா
தகையசற்றுநீர்தருகவென்றோதலுஞ்சலியான். (எச)

புக்குமாவனமெங்கணுந்துருவினன்போனான்
பக்கநோக்கியோர்பாதகியயோமுகிபரிவாற்
கைக்குளேயிளவலைக்கவர்ந்தேகலுங்கனன்றே
மிக்குநாசிகாதணிமுலைகொய்தவளை மீண்டான். (எரு)

மீளும்வேலையில்வீரனுமிளவலைத்தேடிக்
கோள்புரிந்துளகொடியால்வஞ்சனைகுறிக்க
மூளும்வெஞ்சமநடந்தவோவெனப்பலமொழியா
வாளியேறனையாயெனக்கூவியாங்கடைந்தான். (எசு)

அடைந்தகாலையிலிளவலுமடிபணிந்தாங்கு
நடந்தவாறெலாம்புகறலுங்கேட்டிருநயன
மிடைந்தநீரொடுதழுவியேவிடியல்காண்பளவு
முடங்கையாயிருந்தப்புறங்கானகமுற்றார். (எஎ)

கவந்தனென்பவன்றனையுங்கண்டாருயிர்கவர்ந்தே
சிவந்தவாயினர்சவரிசொல்வழியையுந்தெருளா
வுவந்துசெல்லுழியோங்குபம்பாநதியுற்றுப்
பவந்தராதுயர்மதங்கமால்வரைப்புறம்படர்ந்தார். (எஅ)

தனுவினர்வருதனிமைகண்டரிக்குலத்தலைவ
னனுமனைவிடுத்தறிந்துவாவெனச்சொலவனும
மனுவின்நாயகன்மலர்க்கழல்வணங்கியங்கவர்க
ளினிமையுற்றிடப்பேசிமீண்டிரவிகாதலன்பால். (எகூ)

ஓதமாருதிசூரியன்கான்முளையுணர்ந்தே
வேதைதீர்ந்தெதிர்கொண்டுநல்லீசனை மேவி
பாததாமரை பணிந்துநண்பாகினான் பரிவாற்
சீதைநாயகனபயந்தந்தவருழைச்சேர்ந்தான். (அ0)

குரக்குவானரத்தலைவனார்குறித்தகானூடே
தாக்கனார்மராமரந்தனைத்தனித்துளையாடிப்
புரக்குமன்பினாற்றுந்துமியென்பையும்பொடியாய்க்
காக்கவெற்றினார்கைவலிகால்வலிகண்டார். (அக)

தங்கண்மீதுமுன்னரக்கனாற்றயங்கியதையல்
செங்கையாலெறிகலன்களையவர்க்குளந்தெளிய
வந்துகாட்டலுநோக்கித்தன்னுயிர்குழைந்தமலன்
றங்கணீருகுத்தானடிதொழுதுசாற்றுவரால். (அஉ)

வாலிதன்னுயிர்வாளியால்வாங்கியென்னரசிங்
கேலவேதரவென்றலுமம்முறையியந்தான்
நீலமேனியன்சொற்கொடுநேர்வரக்கூவி
பாலின்மேனியரிருவருமல்லமர்பயின்றார். (அங)

அய்யனுமறைநதொருசிறுவாளிகொண்டவன்மே
லெய்தகாலையில்வாலியுமேசிப்பின்னிவனைத்
தெய்வமென்றுகண்டவன்பதம்வேண்டியேதீர்ந்தான்
றையறன்னையுவானரர்தேடுறச்சமைநதார். (அச)

மிக்குமாதவன்காதலன்றனித்தனிவிளித்துத்
தக்கநீர்விரைந்தரியபல்லுலகெலாந்தாழாப்
புக்குநாடிமீண்டெய்தவென்றவதியும்புகன்றே
யக்கணஞ்செலவேவினானனையுமறைந்தே. (அரு)

எவ்வினனதிற்றென்றிசைக்கிசைந்தமாருதியு
மேவுவானரவெள்ளமோரிரண்டுடன்வீரற்
காவியன்னவங்கதனொடுசாம்பனுமடையக்
காவெலாங்கடந்தொருபிலம்புகுந்தனர்கலங்கி. (அசு)

அங்குமாதவமாற்றிமெய்யொடுங்குமோரணங்கைத்
தங்கடாயெனக்கருதியதலைவர்பாற்றையல்
சங்கையாவுமுற்புகன்றுபின்வாங்கொடுசார்ந்தா
ளிங்குநின்றவாதிசயித்தப்புறமேக. (அஎ)

திருவலுற்றவர்மயேந்திரவரையினைச்சூழ்ந்தே
யொருவைமன்னனைக்கண்டனாரரக்கனென்றிதயம்
வெருவலுற்றனரிராமமந்திரம்பலவிளம்ப
வுருவமுற்றனன்சனகிசெல்வழியையுமுரைத்தான். (அஅ)

கடலைநீந்துவதெவரெனயோசனைசருத
கடலையென்றெழுசாம்பனுமூப்பினனலிந்தேன்
விடலையங்கதனங்கதன்பெருமையுமேவா
ரடலையும்புயத்தநுமனேகடக்குமென்றறைந்தான். (அகூ)

அறைநதகாலையின்மயேந்திரத்துச்சிமேலனுமன்
நிறைந்தவானவர்பூமழைசொரிந்திடநிமிர்ந்தே
குறைந்திலாதெழுந்தான்விசைதாதைமுற்கூட
மறைந்துவைகுமைநாகர்க்குச்சிலவுரைவழங்கி. (௧௦)

சலதிமேல்வருமனுமனங்காரதாரகையின்
புலவுவனகுடர்பிடுங்கியங்கவளுயிர்போக்கிக்
குலவுமின்னெயில்வெயில்விரிகோநகர்க்கொருபா
லிலகுவானுயர்பவளமால்வரையினையெய்தி. (௧௧)

இருந்தமாருதியெதிர்ந்துளவிலங்கணியுயிர்கூற்
றருந்தவீட்டிவெவ்வரக்கர்கண்புலப்படாதுருவங்
கரந்துநுண்ணியகொதுகினுஞ்சிறியவாயக்காலால்
விரிந்தநீண்மணிமாளிகையிடந்தொறூஉம்மேவி. (௧௨)

திருவினன்கரிபரிநிரைசுடர்மணித்தடந்தேர்
மருவுசாலைபூஞ்சோலையுய்யானனம்வாவி
பரவுகூலம்வன்பிலம்புளினத்திரள்படுகர்
தரவுயர்த்தபொற்கோபுரமாலையஞ்சதுக்கம். (௧௩)

ஒருபதாகியதலையினானோடுசேர்ந்துறங்கு
மரிவைதன்னையுஞ்சனகியென்றயிர்த்தவள்கொடுவாய்
வெருவல்கண்டுளந்தெளிந்துபின்விலங்கியேகருணன்
பொருவுமாளிகைசார்ந்துவீடணன்மனைபுக்கான். (௧௪)

நோக்கினானிவனிந்நகர்நோக்குதற்குரிய
பாக்கியம்பெருவானெனவப்புறம்படர்ந்தா
னாக்கவிந்திரனிருஞ்சிறையுறைந்தவாயிலிற்சென்
றூக்கையிற்பெரியோனதிகாயன்வீடடைந்தான். (௧௫)

கரியநாழிகைபாதியிற்காலனும்வெருவி
யிரியுமாயவல்லரக்கர்வாழெழின்மனைப்புறஞ்சூழ்
தெருவெண்ணாயிரத்தாயிரகோடிமேற்றேடி
யொருவனேதிரிந்தணங்கினைக்காண்கிலாதுளைந்தான். (௧௬)

எழுநூறுகாவதமகன்றிலங்கியவிலங்கைப்
பாழிமாநகர்முழுவதுந்தனித்தனிபடர்வுற்
றாழிநாயகன்றூதனுந்தேடினனறியா
தாழித்தீமுருகிழுதெனவுள்ளநெக்குருகி. (௧௭)

அப்புறங்கடந்தான்செறிந்தோங்கிவானளவுஞ்
செப்புதற்கரிதாய்வளந்திகழ்பொழிறெரிந்தான்
வெப்பொ[illegible]த்தவன்மேவியத்தலத்திடைவிருக்கக்
கொப்பி[illegible]த்திருந்தான்பெருங்கூட்டமுங்குறித்தான். (௧௮)

தலையிற்கண்ணினர்கண்ணினிற்றலையினர்தாழ்ந்த
முலையில்வாயினர்வாயினின்முலையினர்முழுது
மலகையன்னவெவ்வரக்கியர்குழுவிடையமிழ்தின்
னிலையின்வந்தவளிருப்பதுகண்டுளநெகிழ்ந்தான். (௯௯)

மண்புரண்டுசிக்கேறியவோதியுமழையாற்
றண்புரண்டுசேறூடியமேனியுந்தழன்மே
லெண்புரண்டபூங்கொடியெனக்கருகியவிடையுங்
கண்புரண்டுநீரொழுகியவதனமுங்கண்டான். (௧௦௦)

கானின்வாயெரியுழுவையிற்கோட்படக்கரைந்தே
மானினுயிர்படுவதுமரக்கியர்வளைத்துத்
தேனனாட்கிடர்விளைப்பதுந்திரிசடைதேற்ற
ஊனிலாளுயிர்த்திருந்தகற்புடைமையுமுணர்ந்தான். (௧௦௧)

அன்னகாலையெண்ணாயிரகோடிவாளரக்கர்
கன்னிமாரொடுதசமுகன்வந்ததுங்கன்னிக்
கன்னமன்னவடனைப்பணிந்திரந்ததுமவளாற்
சொன்னசொற்களுங்கண்டுளந்துடித்தனன்றூதன். (௧௦௨)

அரக்கனேகலுமரக்கியர்காவலுமயரத்
தரைக்குநாயகன்றேவிதன்னுயிரினைத்தானே
யொருக்கவெண்ணியாங்கெழுதலும்விருக்கமேலுற்ற
குரக்குமாணிகைகுவித்திதுகூறினன்குறுக்கே. (௧௦௩)

கேட்டறிந்தனளனுமனற்சொலச்சொலக்கிளர்ந்த
வாட்டநீங்கினண்மணிவிரன்மோதிரம்வாங்கிச்
சூட்டினளவடெய்யசூடாமணியவன்பா
னீட்டியேகெனவிடுத்தனடவனையுநிகழ்த்தி. (௧௦௪)

எழுந்தமாருதியிரும்பொழில்காவல்செய்திருந்தோ
ரழிந்துசிந்தநின்றார்த்தமராடலையறிந்தோர்
மொழிந்தபோதுகிங்கார்படைமுழுவதுமூண்டு
கழிந்தகாலையிற்பஞ்சசேனாதிபர்கடுகி. (௧௦௫)

மண்டுபோர்செயவாங்கவர்சிரங்களைவாலாற்
கொண்டுசெற்றிநுண்பொடிபடத்தரையிடைக்குமைத்தான்
கண்டசம்புமாலியுஞ்சமர்புரிந்துயிர்கழிந்தான்
விண்டகாலையக்கயன்பொருத்தாருயிர்விண்டான். (௧௦௬)

இலங்கைமாநகர்கடற்சுழியெய்துறுகலம்போற்
கலங்குகாலையிந்திரசெயித்தறிந்துளங்கனன்றே
பொலங்கொடேர்பரியானைகொண்டருஞ்சமர்பொருதா
னிலங்குமாருதியவைவையெலாந்துகள்படவெற்றி. (௧௦௭)

தோழித்துவெஞ்சிலைமுறித்தவனுளந்திகைப்பப்
போரழித்தலும்புரந்தரன்புறந்தரப்பொருதி
யூரழித்தவனுறத்துமாருதியுரமுளைய
வீரழிப்பனென்றயன்படைவிட்டவன்கட்டி. (௧௦௮)

தாதைபால்விடுத்தானவன்யாரைநீசாற்றென்
றோதமாருதிநினைத்தொலைத்துன்குடிகெடுக்குஞ்
சீதைகாதலன்றூதனுமாவெனச்செப்ப
போதநீங்கியதசமுகன்வெகுளிமேற்பொங்கி. (௧௦௯)

கட்டைநீக்கிவான்முழுவதுந்துணிகளுங்கயிறுந்
தொட்டிறுக்கிமேலிழுதுடனெண்ணெயுஞ்சொரிந்தாங்
கிட்டதீவிசும்பெழுந்துமாநகரெலாமெரியச்
சுட்டவானரமீண்டுதன்றுணைவர்பாற்சொல்லி. (௧௧௦)

சாம்பனங்கதன்வானரத்தானையுஞ்சார
வேம்பலோடுபோய்மதுவனங்கொள்ளையிட்டவர்தஞ்
சோம்பறீர்ந்தனர்ததிமுகனெதிர்த்துளந்துளங்கித்
தேம்பல்கொண்டுமுனேகிடவெழுந்துபின்சென்றார். (௧௧௧)

சென்றகூட்டத்தைமாருதிவிலங்கிமுன்சென்றே
யென்றுமாமகனோடிருந்திவர்வரும்வழிமேற்
றுன்றுகண்செலத்தனதுளமுலைந்துயிர்சோரும்
வென்றிநாயகன்பாதமேல்வீழ்ந்துகைதொழுதான். (௧௧௨)

தொழுதமாருதிதோகைதன்னிலைமையுஞ்சொல்லி
வழுவிலாதசூடாமணிதன்னையும்வழங்க
வெழுதுமேனியானனுமனையுவந்துபின்னெழுந்தே
பழுதில்வானரமெழுபதுவெள்ளமும்பரவ. (௧௧௩)

சுக்கிரீவனந்தன்சதாகதிதருதோன்றன்
மிக்குசாம்புவன்சதவலிகேசரிவினதன்
தக்கமாநளனாதியபெரும்படைத்தலைவ
ரொக்கதம்பியோடமலனுங்கடற்கரையுற்றான். (௧௧௪)

அங்குவைகினானனுமனாலழிவுண்டவிலங்கை
பொங்குதீப்புகைசாடமெய்புழுங்கியவரக்கன்
றங்கண்மந்திரத்தாரிளையாரொடுந்தனித்துத்
துங்கயோசனையெண்ணுங்கால்வீடணன்றுணிவாய். (௧௧௫)

வேறு.

நீதியொன்றுநிகழ்த்தினான்
மாதுகொண்டமனத்தினான்
போதியென்றுபுறத்தொரு
சூதுகொண்டுதுறத்தினான். (௧௧௬)

அன்னகாலையமைச்சரோ
டுன்னிவீடணனெல்லையிற்
பின்னுதெண்டிரைபிற்பட
மன்னைவந்துவணங்கினான். (௧௧௭)

வீரமேவியவெஞ்சிலைப்
பாரமேவியபண்ணவன்
சாரநேருரைசாற்றிமே
லாரவாரமறிந்தனன். (௧௧௮)

வாழியேந்தியவன்மக
னேழுநாட்டவமெய்திற
றுழிவேந்தனறிந்துபின்
றுழவந்தபயந்தர. (௧௧௯)

வெள்ளநீர்க்கடன்மீதிலே
துள்ளுவானரர்தோள்களாற்
கொள்ளைமால்வரைகொண்டுபோய்த்
தள்ளொணாதுதடுத்தனர். (௧௨௦)

வென்றிவானரவீரரா
லன்றுசெய்யணையின்றலை
சென்றுசாரணர்சேரவே
யொன்றுவாய்மையுணர்த்தினன். (௧௨௧)

எள்ளனின்றவிலங்கையி
லுள்ளுமால்வரையொன்றின்மேல்
வெள்ளவானரமேவவே
வுள்ளல்சென்றுவதிந்தனன். (௧௨௨)

அன்னகாலையரக்கனும்
மின்னுகோபுரமேவியே
சொன்னசாரணருந்தொகுத்
தின்னவின்னவியம்பவே. (௧௨௩)

அங்குதேரமைதிக்கணே
யிங்குமாருதியின்சொலாற்
செங்கைவில்லிதெரிந்தனன்
றுங்கவான்மணியின்சுதன். (௧௨௪)

மின்மணிக்குலமேவிய
பன்னுமௌலிபறிப்புறு
மன்னைவந்துவணங்கினன்
சொன்னமாப்புகழ்துன்னவே. (௧௨௫)

மானமிக்குவரம்பிலா
வீனமிக்கவனுக்கிவை
நீநிகழ்த்தெனநேர்ந்தன்
ஞனைவீரர்தமக்குளோ. (கஉசு)

வீரமிக்குவிளங்கிய
சூரவாலிசுதன்றனை
சாரவென்றுசமைத்தன
ஞர்வமுந்துளவன்னவன். (கஉஎ)

வேறு.

அனுமனையன்றிநீயென்ருண்டகையருளைப்பெற்ற
வெனைநிகர்ப்பவர்கள்யாவரெனவுவந்தெழுந்தவீரன்
புனைமணிவாயினீங்கிப்பொன்னகர்வீதிதள்ளிக்
கனைகழலரக்கற்கண்டானவனுமீண்டிவனைக்காணு. (கஉஅ)

நின்றுளகுரங்கேநீயார்நேர்ந்ததென்னிருதருன்னைக்
கொன்றுயிருந்தாமுன்னங்கூறுகவென்றுகூறும்
வன்றிறலவனைநோக்கிநின்னைமுன்வாலாற்கட்டிக்
கண்டிலையய்யனையவெங்காண் கடன்மலைபலவுஞ்சூழ்ந்த. (கஉகூ)

நாற்றிசைப்புறமுந்தாவித்திரிந்தனன்நாகர்வேண்டப்
பாற்கடலமுதந்தந்தான்பாலனுனைக்கண்டு
வேற்கடனயனமின்னைவிடுதலன்றெதிர்ந்தபோரின்
மேற்கடற்பகழியாலேபடுதலென்பதும்விளம்பி. (கநo)

எய்துவாயென்னவந்தேனென்றலுமிலங்கைவேந்தன்
கைபுடைத்துருமினக்குக்கண்ணெரிகதுவநோக்கி
பையநின்றதையேற்குபக்கமுற்றமையானீயு
முய்திறங்கண்டாய்மீண்டுபோர்த்திறமுணர்த்தென்றேட்ட. (கநக)

வேறு.

தானவின்றதும்பினேதனக்கிராவணன்
மேனவின்றதுஞ்சொலவீரன்போர்க்கினி
யானைவைபுரிமினென்றருளவானரத்
தானைகளார்த்தனசெவியிற்சார்தலும். (கநஉ)

இருந்தபொன்னிலங்கையிலெழுந்தமாப்படை
விரிந்தவான்கடலெனவிண்ணுமண்ணுமே
னெரிந்தனநிமிர்ந்தெழுபூழிநீடலாற்
சரிந்தனபானுவின்கிரணந்தாழவே. (கநந)

தேர்மிடைந்தனகொடிமிடைந்துசேனுறு
கார்மிடைந்தனதடிகான்றுவில்லுமிழ்
தார்மிடைந்தனபுயமிடைந்துதள்ளுறுப்
போர்மிடைந்தார்முடிமிடைந்துபொங்கினர். (கநச)

சங்கொலிகடலெனத்தழங்கவாசிகண்
மங்குலினெழுமடங்கதிரவாரணம்
பொங்கியவுருமெனப்பொலியச்சீறிய
வெங்கண்வாளரவெனவரக்கர்விம்மவே. (௧௩௫)

தானைகளுற்புறந்தழுவத்தோன்றினான்
மாணமிலரக்கனுமலிந்திரண்டிரு
பாணிறைவீரரும்பகைத்துவெஞ்சமம்
மேனிலைகோத்துடன்விளைவித்தாரரோ. (௧௩௬)

கொடியறத்தேரறகொடியவீரர்கண்
முடியறக்கரிபரிமுழுதுமெய்யறப்
பொடிபடுபொழுதினிற்பொங்கிமாருதி
கொடியராவணன்புயந்தன்னிற்குத்தினான். (௧௩௭)

வளையெயிற்றரக்கனுமாறிமோதியாங்
கிளையவன்மேலும்வேலெடுத்தங்கோச்சினா
னுளைவுறவனுமன்கையேந்தியோடுமவ்
வளவையின்மனுகுலத்தரசன்கண்டனன். (௧௩௮)

கைப்படுகார்முகங்குழைத்துக்காய்கணை
நெய்ப்படுதழலெனநிமிரவீசியே
யெய்ப்படுத்துறுநிசாரர்நின்றேங்கவே
பொய்ப்படுத்தவர்க்குமன்றவசம்போக்கினான். (௧௩௯)

இடிபடுசரங்களாலெதிர்ந்துளோரெலாம்
பொடிபடப்பாய்கரிபுரளப்பூட்கையின்
முடிபடத்தேர்க்கொடிமுறியமூரிவி
லொடிபடத்தசமுகனுலைந்துசாம்பினான். (௧௪௦)

தேரணியுடைந்துவில்லொடிந்துசெய்தவெம்
போரிழந்தவசமாய்ப்பொருமினான்றனைக்
கார்நிறவண்ணனுங்கண்ணிற்கண்டனன்
றூர்முடியவற்கிவைசாற்றமேயினான். (௧௪௧)

எற்றுளபடையெலாமிழந்துநின்வலி
தோற்றனைநாளைவாவென்னச்சொல்லினான்
றூற்றிளபூகமேற்றூவிமீன்கண
மாற்றுநீருகளுமையோத்திநாடனே. (௧௪௨)

வாளிழந்தரியசொல்லிழந்துவன்பெருந்
தோளிழந்தகலமுமிழந்துதுக்கமாய்க்
கோள்கொணர்ந்தருசிறைகூட்டுங்கொற்றவ
னாளிழந்தணிகரிலங்கையண்மினான். (௧௪௩)

சுற்றியகரங்களால்விழுதிற்றூங்கவே
பற்றியபழியொடும்பாரைநோக்கியங்
குற்றவரோடுரையாடவொல்கியே
மற்றவனடந்துபோய்மனையின்மன்னினான். (௧௪௪)

பொருவியமண்டபத்தூடுபொன்மணி
விரவியவாதனத்தினிதுமேவியங்
கொருவனைவிளித்துநம்மொற்றர்தங்களைத்
தருகவென்றுரைத்தனனவருஞ்சார்ந்தனர். (௧௪௫)

வேறு

ஆலமனையான்றெண்டிரைநீராழிக்கப்பாலமர்ந்தபெரு
மூலபலத்தைக்கொணர்திரெனமொழியக்கேட்டங்கவரேக
நீலநிறத்தான்றயினீங்கிநினைந்துவருந்திநிலைதளராக்
கோலமனைத்துமாவியவான்குறித்தங்குறுதிகூறியதை. (௧௪௬)

தள்ளிவெறுப்பமகோதரனாற்றக்கவிநயம்பலவெடுத்தாங்
குள்ளத்துள்ளவுரைத்தவெலாமோகோகேடென்றுணராமற்
கொள்ளைத்தலையான்றனக்கிளையகும்பகருணன்றனைக்கூவி
வெள்ளப்பெருக்கானறவெருமைசோறுவெறுப்பமிகவளித்தே. (௧௪௭)

ஆடைபுனைந்துபொற்கலனிட்டலங்காரஞ்செய்தனுசரித்த
சாடையறிந்தான்சனகிதுயர்தணியாதிருந்ததகையோர்ந்தான்
வேடைமிகுந்தான்றமையனுக்குவிண்டானுரைகேளாததனாற்
கோடையிடிபோற்சமரநெடுங்கோலம்புனைந்தான்களம்புகுந்தான். ()

வேறு.

வருபவன்றன்னையும்வள்ளனோக்கவங்
கிருபதுகையினாற்கிளவலென்முனோன்
வெறுவுறுமேனியனென்றுவீடணன்
றருமுறையாலவன்றன்னைக்கூட்டென. (௧௪௯)

ஏவினான்வீடணனேகிமுன்னவன்
சேவடிதொழுதுரைசெப்பச்சீர்தரு
கோவினான்மறுத்துரைகூறக்கேட்டனு
மேவுவெஞ்செருத்தொழின்மலைதன்மேயினார். (௧௫௦)

மாருதியங்கதன்மயிந்தன்சாம்புவன்
சார்பெருந்தலைவரைத்தாக்கித்தன்கையாற்
சூரியன்புதல்வனைத்தூக்கியேகலுங்
கார்நிறவண்ணனுங்கனன்றுபொங்கியே. (௧௫௧)

விட்டனனெற்றியில்வேகவெங்கணை
பட்டதுசோர்வினைப்பார்த்துமூக்கையுங்
கிட்டியகாதையுங்கிள்ளித்துள்ளியே
யட்டிலாவானரத்தலைவனவாவவே. (௧௫௨)

தங்கை தன்மூக்கெனத் தனதுமூக்கிழந்
தங்குதன்சினமிழந்தயர்கின்றான்றனைச்
சங்குறைகரத்தினுற்றனிவில்வாங்கியோர்
வெங்கணையாற்சிரமறுத்துவீழ்த்தினான். (௧௫௩.)

இங்கவனிறக்குமுன்னிலங்கைநாதனுந்
தங்களிலொருவனைச்சனகனுக்கியே
மங்கைபாற்சென்றுரைவழங்குமெல்லையிற்
றுங்கவன்மடிந்தமைதூதரோதினார். (௧௫௪)

ஓதியகாலையிலோதநீர்த்திரை
மோதியதாமெனமுழங்கும்வாயினான்
மீதெடுத்தாற்றிமெய்மெலியநோக்கிய்
சீதையுந்தெளிந்தனடியக்கந்திரவே. (௫௫௫)

கேட்டனன்றன்சிறுதாதைகேதத்தை
வாட்டமுற்றெழுமதிகாயன்மன்னிரு
தாட்டுணைபணிந்தனன்சமருக்கேகினன்
கூட்டுறவோடுயிர்கொடுத்துமாய்ந்தனன் (௧௫௬)

வேறு.

அதிகாயனிறந்ததுகண்டணியிலங்கைநகர்முழுதுமடடாவிந்த
விதிகாலநம்மளவோவெற்றிநரற்கோவெனவேவிளம்புமோதை
புதிதாகச்செவிப்புகுதப்புழுங்கியநெஞ்சழன்றெழுந்தான்புயங்கஞ்சிந்துங்
கொதிகாலவிடமனையராவணிபண்டமரர்களைக்குமையவென்றான். (௧௫௭)

தாதைதிருத்தாள்பணிந்தான்றம்பிதனக்கிரங்கியகண்டாரைசோர
வூதைமிகுந்தெரிநெருப்பினுயிர்த்தவனுக்காயபலவுறுதிசொல்லிச்
சீதையுநின்னிலாளாயில்லாளேலெனதுவில்லுந்திறனுந்தீர்ந்திப்
போதுநகர்விலங்கியதேபோர்க்கும்விலங்கேனெனவும்புகன்றுபோனான். ()

ஊழிதிரிந்துலகமெலாமுண்ணும்வடவானலம்போலுறுத்துச்செங்க
ணேழிரண்டொட்டொர்ருபத்தாயவெள்ளங்கடலெனச்சென்றெழுந்துசுற்ற
வாழிவரைபோனிமிர்ந்தம்பரந்தடவுதேர்க்கொடிநின்றசையச்சீறிச்
சூழியணிந்திபம்பிளிறத்துரகதங்களுருமினொலிதொனிப்பச்சேர்ந்தான். ()

அந்தரம்பாதலமுலகம்முழுதுந்தூளியடைந்திடவெஞ்சினந்திருகியார்த்தசேனை, நந்திடவங்கதனனுமான்பனசன்சாம்பன்நளன்குமுதன்சதவலிகேசரிமற்றுள்ள, தந்திரவாகினித்தலைவர்முழுதுமோடச்சாடியிராவணியினை யோன்றன்மேற்பாணஞ், சிந்தினனெத்தனைகோடிமாற்றித்தம்பிதீயவனுக்கவ்வாறுசெலுத்திப்பின்னும். (௧௬0)

சேர்ந்தபடையத்தனையுஞ்சிறுதுகள்செய்தவன்கரத்தின்சிலையுநாணுஞ்
சார்ந்தகொடும்பசழிகொடித்தேர்குதிரைபாகன்விழத்தரித்துவெற்றி
சோர்ந்திடநின்றார்ப்பரித்தான்ராவணியுங்கலங்கிவிண்ணிற்சென்றுபாசந்
தேர்ந்துவிட்டானிளையவனோடொருகுரங்கும்விலகாமற்சேர்ந்துக்கட்ட. ()

பாசத்தாற்பிணித்ததுகண்டிருவிழிநீர்கடலெனவேபரவிராமன்
மூசித்தேனொழுகுதுழாய்முடிசாய்ப்பப்படிசாய்ந்துமூர்ச்சையுற்றா
னேசத்தானத்திலராய்நின்றமரர்கலுழனையேநினைப்பவந்தான்
நாசத்தார்தலைவிலக்கிநாகநெளிவுற்றோடநலம்பெற்றாரால். (கசுஉ)

பின்னாளுந்தென்னிலங்கைப்பெருமானுக்கொருமகனும்பெரும்போர்தாக்கி
முன்னாளுக்கெத்தனையோகோடிபங்குமுயன்றொன்றுமுடியானாகித்
தன்னாலேபெயர்ந்தந்தவிருளினும்பல்சமம்புரியச்சமைத்தான்கூசி
யெந்நாளுங்கலகமிடுமோதானையிந்திரனையேவியன்றே. (கசுங.)

அப்பாலுமயன்பாசத்தாற்பிணித்தான்சீதையைக்கொண்டவரைக்காட்டி
யிப்பாலிற்கொணர்கவெனவேவியபோதவளேகியெரிவாயுற்ற
கொப்போடுகுழைமலருங்குழைந்துகருகுவபோலுங்கூடவென்றே
யொப்போடுமழத்தேற்றித்திரிசடையுங்கொணர்வித்தாருயிர்ப்பற்றார்கள். ()

மாருதியாற்சஞ்சீவிமலைகொணரப்பிழைத்தெழுந்தார்வானோர்தங்கள்
சோர்வகன்றாரிலங்கைநகர்சுடவென்றேமன்னுரையாற்றுள்ளிக்கொள்ளி
யோரொருவரீரிருகையோயாமலெடுத்தேவவுரவோன்வாளி
காருருமினனச்செறியக்கண்டுதசமுகன்முதலோர்கலக்கமுற்றே. (கசுரு)

தன்மகன்பாற்கூறுதலுந்தங்கள்குலத்தொருவனைப்பொய்ச்சனகியாக்கிப்
பொன்னகர்விட்டெழுந்துவடபாற்போனமாருதிபாற்புகன்றுகாட்டி
மின்வடிவாளாலெறிந்துமாறிநிகும்பலைபுகுந்தான்விறலோனங்கண்
மன்னவன்பாற்சொலமருளுந்தன்மைகண்டுவீடணன்போய்வந்துசொல்ல. ()

நிகும்பலைகண்டடைந்திவர்கணிருதர்பெருங்கடல்கலக்கிநேரேசெந்தீ
மகம்பயிலுமொருவனைக்கண்டகஞ்சுடவன்மொழியனுமன்வழங்கலோடு
முகம்புரண்டதெனக்கொதித்தோரிமைப்பளவிற்றாதையிடத்துணர்த்திப்
பின்னு,மகம்பன்நிகும்பன்பொருதிமாய்ந்திடவேயாச்சமராமாற்றினானே.()

வேறு.

வாசவன்வரினும்வேதன்வரினுமால்வரினுமுக்க
ணீசனேவரினுமற்றையிமையவர்வரினுமென்கை
யாசுகமொன்றால்வென்றுன்முன்னையுமழிப்பனென்றா
வீசினானுருமினவாளிவிட்டாமழையென்னமேன்மேல். (கசுஅ)

அன்றவன்விட்டவிட்டபடையெலாமவற்றான்மாற்றி
நின்றாளயிளவல்பின்னுநீசனைநெருக்கிச்சீறி
நன்றுநன்றுனதுவிற்போர்நமன்பதிவிருந்துகொள்ளு
வின்றனுப்புவனென்றார்த்தாங்கிருஞ்சிலைகுழையவாங்கி. (கசுகூ)

ஒன்றொருபத்துநூறுகோடியென்றொன்றற்கொன்று
மின்றிரண்டடங்காவெள்ளமெனச்செலவீசியானை
பொன்றிடப்புரவிமாளப்பொருபடையடங்கநூறி
வென்றவனரக்கன்மேலும்பகழியின்கூடுவேய்ந்தான். (கஎ0)

வாசியற்றிரதமற்றுவரிசிலையற்றுவெம்போர்த்
தூசியற்றுண்மையற்றுச்சொல்வலியற்றுநெஞ்சங்
கூசியுற்றனன்செய்வான்பின்னவன்குறித்தாங்கேவு
மரசுகம்வாங்கிமாறிவீசினனமலனஞ்சி. (௧௭௧)

வேறு.

இம்பருக்கும்பருக்குமறைக்குமெட்டாவிறையவனேயிராமனெனில் யானுமன்னேன், றம்பியென்னிலெனதுரையுநன்றமென்னிற்சனகிகற்புமற னுமென்மேற்றழைக்குமென்னில், வெம்பியவெஞ்சிலையரக்கன்றலையைமண் ணில்வீழ்த்துகவென்றொருவாளிவிரையவாங்கி, நம்பரமென்றமரரெல்லா மார்வந்துள்ளநயந்துவிட்டானவனுயிரும்நமன்பாற்கண்டான். (௧௭௨)

உலகமெலாங்களிப்படையவறமும்வாழவோங்கியநால்வேதமுனிவோ ருந்தூய்மை, யிலகவிண்ணுட்டமரரெல்லாந்தத்தங்காதலெல்லையரோடார்வ முறவிடர்க்குளான, திலகமன்னசனகிமனக்கவலைதீரத்தீயவரக்கர்குலமுழு துந்தியக்கங்கொள்ளக், கலகமெலாம்புரிந்துபழிபாவம்வல்லகள்ளன்மடிந்த தைத்தாதைகாதிற்கேட்டான். (௧௭௩)

நெய்யெரிந்தநெருப்பெனவேதுடித்தான்சிந்தைநெட்டுயிர்த்தான்மெய் பரவிநிறைகண்சோரக், கையெறிந்துவயிறறைந்தானெயிறுதின்றுகடலிறைந் ததெனவழுதுகலங்கிவெம்போர், செய்தெரிவெங்களம்புகுந்துமகனைக்கண் டான்றேவியோடாகுலித்தான்றிருவிலாத, பொய்யுறவோன்பட்டகொடும் பாட்டையாரேபுகல்கிற்பார்கலைகற்பார்புவிமிக்கோரே. (௧௭௪)

மேனதானுமயக்கமுற்றான்றன்னைத்தேற்றிமொழிபுகலுமளவையின்கண் முடுகியோரே, ழோதமனமூலபலம்வரக்கண்டன்றூர்க்குள்ளதெலாஞ்சொ லக்கேட்டவுடனேவெம்போர்ப், பாதைகொண்டார்ரகுவீரனெதிர்வந்துற் றான்பகைதீரவிளையவன்மேற்படையொன்றேவிச், சீதையின்மேற்காத னின்றானின்றான்சேனைசிந்தியதுகன்னலொன்றிற்றேவரார்ப்ப. (௧௭௫).

மூலபலமடிந்ததுவுமரக்கர்மாய்ந்துமுடிந்ததுவும்பொன்னிலங்கைமுன் னேயென்ன, காலமெனவெகுளியொடுநகையுந்தோன்றக்கதிர்ப்பிறைவா ளெயிறுதின்றுகனன்றக்காலை, கோலமெலாமுன்முடித்துப்பின்னேநின்ற கொடியமகோதரன்சமரங்கொடுத்துமாண்டாங், கோலமிட்டுத்தரைவிழுந்த தனையுங்கேட்டானோயாதபெருங்கவலைக்குள்ளிட்டானே. (௧௭௬)

வற்றியநீர்க்கடலனையதானையோடும்வாவுமணித்தேரேறிவரிவிற்கோட்டி வெற்றிமதாகவெனச்சங்கமூதிவேதியர்க்குமாதலர்க்கும்வேண்டிற்றெல்லா முற்றமுகின்மழையெனக்கையோய்வில்லாமலொளிர்பசும்பொன்னிதிகூ றையுதவியப்பாற், கொற்றவனும்ரகுவீரன்கணையாற்பட்டான்குறைப்பட்ட வானரருங்குணப்பட்டாரே. (௧௭௭)

வேறு

முக்கணன்வரையிடந்தமுரண்டடந்தோட்டசக்கிரிவன்முடிந்தவார்த்தை
இக்கனைத்தும்புகக்கேட்டாடெய்வமயன்மயந்தமகள்சேற்கணவி
யுக்கமூலைக்குவட்டினிற்கையுறவெறிந்துவயிறலைத்தாளுயிர்த்தாளொல்லை
மிக்குவரக்கியர்சூழவிரிதலையோடமர்க்களத்தைமேவினாளால். (௧௭௮)

கண்டான்காதலனைக்கருவரைமேலருவரைசேர்காட்சியென்னத்
திண்டாடிமேல்விழுந்தாள்செந்நெருப்புந்தீவிடமுஞ்சேர்த்துவாரி
யுண்டாள்போலுள்ளந்துடித்தாள்வெள்கிநடுங்கினண்மெய்யொடுங்கியுயிர்த்தாடன்
பாற், பண்டேவல்கொளுந்தேவமாதரெல்லாம்பார்த்திரங்கிப்பரிவுகூர. ()

மஞ்சிருக்குங்குழலாளைமதியிருக்குமுகத்தாளைவாளைவென்று
நஞ்சிருக்கும்விழியாளைநலமிருக்குங்குணத்தாளைநளினம்போலும்
பஞ்சிருக்கும்பதத்தாளைப்பார்த்திருந்தபெருங்காதல்பதிந்துநின்றன்
னெஞ்சிருக்குமனநினைந்தோவுடன்முழுதுந்தடவியதுநெடியோன்வாளி. ()

வேறு

என்றழுதிங்கிவள்கிடப்பார்வணனுக்கிளையோனு
மின்றிகழுமணிமார்பில்விழுந்தழுதுபுரண்டதற்பி
னின்றவனுக்காயபலநீர்க்கடனுதியநிரப்பி
யன்றுவந்தானுக்கிலங்கையரசாளமுடிபுனைந்தான். (க௮௧)

மன்னுபலகீர்த்தியினன்மாண்டதற்பின்வீடணனுந்
தென்னிலங்கையரசாண்டான்சிலைவலிராகவன்மீண்டுந்
தன்னிலங்கைக்கொண்டுநகர்தன்னிலேசென்றுசெய்ய
பொன்னிலங்கமௌலிபுனைந்தான்புகழ்புனைந்தான். (க௮௨)

வேறு.

உள்ளதுசொல்வினேனுறுதியென்றுநீ
கொள்ளினுநல்லதுகொளாமலப்புறந்
தள்ளினுநல்லதுதாழ்வுமேன்மையும்
வள்ளலேயுனையலால்வரவற்றுறுமோ. (க௮௩)

ஐயநானறிந்தறியாதுசொல்லிய
கைதவமென்னினுங்கருணைசெய்வதே
யுய்திறமென்றனனுருத்துவேந்தனு
நெய்யெரிநெருப்பெனநிகழ்த்துவானரோ. (க௮௪)

வேறு.

அகலிகைசனகிதிரௌபதிபோலுமரம்பையுங்கற்பினிற்சிறந்து
மகநிறைமுனிவோர்தங்களாற்பிறரால்வழுத்தவுந்துதிக்கவும்வாய்ந்த
தகையளோபாந்தளுறவுகொண்டொருவன்றன்னையுங்கரவினிற்கலந்த
மிகையினுள்பொருட்டாலிவர்களென்றோடுவெஞ்சமராடவும்விதியோ. ()

என்பெரும்விறலைக்கேவலித்தொருபுன்னேழைமைச்சிறியவைப்பெரிதாய்
மன்பெருமவையோர்மதித்திடநீதிவழுத்துவான்போலுநீயுரைத்த
வன்பினுக்கவதியென்கொலோநம்பாலாண்டெலாவேண்டுவதுவந்தே
யின்புறவாழ்ந்தாய்துன்பினுக்ககன்றேயிருக்கவுமெண்ணினையிதமே. (க௮௬)

தருமநீமுதன்மையமைச்சனாதலினாற்சபையினிலவமதித்துரைத்த
கருமநான்பொறுத்தேன்போதுமந்திரஞ்செய்காரியம்போவெனச்சுழிந்தே
திருநகர்ப்புரிசைப்புறமெலாம்வளைத்ததெரியலர்சேனைகண்முழுது
முருவமில்லாதுதுகட்படுத்துமினென்றுருத்தூற்றலைவருக்குரைப்பான். ()

தருமன் தசமுகன்கதையுரைத்தபடலம் முற்றிற்று.

ஆகப்படலம்-௩௮-க்குத் திருவிருத்தம்-௨௦௮௦.

உ

படைத்தலைவர்வதைப்படலம்.

பொன்னுளேவொளியும்புனலுளேகுளிரும்பூவுளேவாசமும்போலத்
தன்னுளேபுவனமுழுவதுந்தோன்றத்தானுமப்புவனமேற்றோன்றி
யென்னுளேயிருந்தான்மதுரையுளிருந்தானேழைகட்கொருபொருளாகிப்
பன்னகாபரணனவனையேதுதித்துப்பாடுதும்பவம்விலங்கிடவே. (௧)

வேறு.

வலனதிகோபன்வினதனீர்கீழ்பான்மருவியதளாதிபன்படையை
யுலவையுந்தீயுங்காணும்போற்படர்வுற்றுலப்புவீர்தென்றிசைவந்து
கலகமேபுரியும்விரிஞ்சனைவீரசிகாமணிகைப்பிடியாகத்
தலமிசைப்பிணித்துத்தருகவன்மத்தன்றன்னொடும்போர்க்களஞ்சார்ந்தே.

குடதிசைச்சேனாநாதனுஞ்சுந்தவிந்தனுங்குறிப்புடனேகி
யடர்நவமணியைப்பாழ்படுத்திடுமினப்புறம்வடதிசையமர்ந்த
சுடர்முடிப்புவனேந்திரனொடுசார்ந்ததுணைவனும்படைகளுந்துசளா
யிடர்படமுருக்கிநொடிவரைப்போதிலெய்துவாய்நவையனீயென்றான். (௩)

மன்னவன்பணித்தபணிமுடியேந்திவருதினிப்பெருவெள்ளஞ்சாய்த்துத்
துன்னியவினதன்வலனதிகோபன்சூறைமாருதமெனக்கீழ்பா
றன்னிலைதெரியாதெதிர்த்துமேலுற்றதளாதிபன்சரத்தினாற்றளர்வுற்
றெந்நிலம்புகுந்தாவெனவியப்புறவானேறினாருடற்சுவையிழித்தே. (௪)

வென்றிறல்வீரசிகாமணிமத்தன்வெம்படைபன்முகஞ்சேர்த்துக்
கன்றியசீற்றமுருத்தெரியாதுகடுங்கணைநெடுந்தடியோட்டித்
தென்றிசைபுகுந்தார்விரிஞ்சனாற்சிதையாதிவர்கள்பின்றிரும்பினபோது
மொன்றியகூற்றுமீளவும்விடுமோவுயிர்ச்சுவைநசையொழித்துடனே. (௫)

மேற்றிசைச்சேனாநாதனுஞ்சுந்தவிந்தனுமேவியங்குற்ற
காற்றினும்வலிகூர்நவமணியெடுத்தகைச்சிலைப்பிறைமுகக்கணையாங்
கூற்றுவாயருந்தத்தீர்ந்தனர்வடபாற்குறுகியநவையனும்படையுஞ்
சாற்றியசமரமுழுவதும்புரிந்துசமத்தனாற்றன்னுயிர்சாய்ந்தான். (௬)

தீயெனவெழுந்தகாலிருதலைவர்சிதைந்தனர்நவையனுஞ்சிதைந்தான்
போயினபடையும்பொன்றினவினிமேற்போக்கரிதெனமணிப்புரிசை
வாயில்காத்திருந்தோராயிரங்கோடிவாட்படைமறவருமாண்டா
ரேயெனுமளவிற்றிருப்புவனேந்திரனேவியதானையோடெதிர்ந்தே. (௭)

நவமணிவிரிஞ்சன் றளாதிபன்மூன் றுதிசையுளநாட்டினுங்காட்டும்
பவமணிகுடியையவரிடுபெயரைப்பண்டவர்கொண்டபண்டத்தைத் [துச்
தவமணிபவர்க்குத்தத்தம்வார்ப்பவர்போற்றரையொடுதரையெனச்சமைத்
சிவமணிபுவனேந்திரனுழைச்சேர்ந்தார்கண்டவனுளங்களிசிறப்ப. (௮)

அணிநகர்ப்புறஞ்சூழ்ந் தனந்தன்மாமுடிநின் றம்பரத்தளவினுநீண்ட
திணிமதிளுட்டுங்கேதனம்பறிமின் சிகரியுநாஞ்சிலுமுறுப்பும்
பணிதரவகழிப்பரவையைத்தூர்மின்பாங்குறுகதலியின்படப்பும்
மணிமலர்க்காவுமிலஞ்சியுங்குளனும்வயல்களும்வரம்பழித்திடுமின். (௯)

எனக்கனன்றிருகண்பொறியெழப்புவனேந்திரன்புகல்வாய்மொழிகேட்டு
மனக்கடுஞ்சினமூண்டெழுந்தவாகினிகள்வாள்கதைசக்கரங்கலப்பை
முனைக்கொழுநவியங்கொடுமாமுசலம்மூவிலைச்சூலம்வேல்வளரி
கனக்கரம்வாங்கிவிடுத்தனர்மகராலயமெனப்பேரொலிகறங்க. (௧௦)

கொடிபறித்துயர்த்துகொத்தளஞ்சிறந்தகோபுரம்பொறிக்குலந்துகளா
யிடிபடத்தாக்கியகழியைத்தூர்த்தேயெழின்மலர்ச்சரளமென்சோலை
யொடிபடமோதிக்கதலியின்படப்புள்ளூறுதேன்பெருக்கெடுத்தோடும்
படுகுலைசிதறிப்பயிர்களோங்கியசீர்ப்பழனமும்பாழ்படச்சிதைத்தார். (௧௧)

எல்லொடுபொருதிநீண்டபொன்புரிசையிடிபடுந்தோறெலாந்தகர்ந்த
கல்லொடுவயவர்பிடுங்கிவீசியபூங்காவொடுகொடிசெடிவீழ்ந்து
சொல்லொடுதொகுக்கவராதபேரகழிதூர்ந்ததுசேர்ந்ததினுளு
மல்லொடுபகலுங்குடிபுகுந்திருந்தபுட்களுமாகுலமடைந்த. (௧௨)

தடிகொழுநவியங்கொண்டுகைவலியாற்றனித்தனிதகர்த்திடச்சிதறி
யிடிபடுமோசையண்டமுந்திசையுமிடையிடைநெக்குவிட்டுலைந்து
வெடிபடநாட்டுகொடிகளுமெயின்மேல்விளக்கியபொறிகளுந்தவிடாய்ப்
பொடிபடத்தூசிகதிர்வெயின்மறைத்துப்பொங்கிருள்பரப்பினவெங்கும். ( )

கோளெலாமடியமதியமுங்கதிருங்குழைந்திடச்சுடரெலாங்குறுக
வாளெலாம்பிறங்குமனையெலாந்தூக்கிமறிகடற்புவியெலாமகிழத்
தோளெலாமுளைவற்றருந்தவஞ்சுடத்தித்தொன்மறைக்கம்மியப்புலவர்
நாளெலாஞ்செய்தபுரிசையுந்துகளாய்நாழிகையொன்றிற்றீர்ந்தனவால். (௧௪)

பாய்திரையகழிப்பரவையிலிருந்தபறவைகண்முறைமுறைதமது
வாய்களிலுயிர்த்தகருவினைக்கோலிவான்முழுவதுஞ்சுழன்றாற்றத்
தோய்துறைபுகுந்தகயங்கண்மேற்புரிசைதுலக்கியபொறிக்குலமிடிந்து
சாய்தலுந்தலைகணெறிந்துகார்மலையினருவிபோலுதிரங்கள்சரிந்த. (௧௫)

தூர்ந்தவானகழிப்பெரும்புனல்கடைநாட்டோன்றுசாகரங்களோரேழுஞ்
சேர்ந்துபார்முழுதுநுங்கியார்த்தெழுந்தசெய்கைபோனகரினும்புறனும்
வார்ந்தலைகொழித்துமண்டிடக்கண்டமாநகர்ச்சனமெலாம்வெருவி
நேர்ந்தனவிறுதிபிழைப்பினிநமக்கிங்கிலையெனநின்றுநெட்டுயிர்த்தார். (௧௬)

நாற்றிசையறியப்போன தூதுவருநராதிபன்பாலினின்மீண்டு
போற்றிநின்றாசேனம்பெருந்தலைவர்மந்திரிபொன்றினார்படைகள்
காற்றினிற்சிதைந்தபஞ்செனக்கழிந்தார்கடிமதிட்காவலர்முழுதுங்
கூற்றின்வாய்புகுந்தார்மருவலர்நகரிற்குறுகினார்கோட்டையையிடித்தே. ()

அரசன்வீற்றிருக்கப்பட்டினங்கொள்ளையானதென்றவனிபர்முன்ன
முரைசெயும்பழையகாதைநின்னளவிலுற்றதென்றெரற்றருமோதக்
கரைபுரண்டெழுந்தகடலெனச்சீறிக்கட்கடைக்கனற்பொறிமலியப்
புரவலன்பால்வீற்றிருந்ததோரிளையபுதல்வனுமின்னணம்புகல்வான். (கஅ)

படைத்தலைவர்வதைப்படலம் முற்றிற்று.

ஆகப்படலம்-௬௧-க்குத் திருவிருத்தம்-உ0௬அ.

சித்திரகேசரி சிங்கன் வதைப்படலம்.

உள்ளும்புறம்புந்துணையாகியுற்றபொருளும்பயனுமாய்க்
கொள்ளும்பொழுதுபாலமுதாய்க்குறையாதிருந்தென்குடிகாக்கும்
விள்ளுமறையும்பிறவுமறியாதவிமலன்விரிசடையிற்
கள்ளும்மலருங்கலந்ததிருமதுரைப்பெருமான்கழல்பணிவாம். (க)

வேறு.

தந்தைநீயுயிரோடிருக்கவென்கையிற்றனுவொடுபலபடையிருக்க
மந்திரிமாருமிருக்கவாகினியுமற்றுநம்முயிரினுஞ்சிறந்த
பந்துமித்திராருமிருக்கவோர்சிறியபாலர்கண்மனத்துணிவோடு
வந்தமர்பொருதிறனெனிற்சோறுமுசந்தினிவாழவும்வழக்கோ. (உ)

இற்றொருகணஞ்சென்றவர்களையென்கையிருஞ்சிலையாசுகமுனைகொண்
டற்றுகநூறிவெற்றியுமனக்கேயாக்குவனன்றெனிலென்றும் [டு
வெற்றியும்வேண்டேன்வாழ்க்கையுமிறுவேன்விடைதரவென்றுளம்வெகுண்
பொற்றிருத்தாதைபதத்துணைபோற்றிப்போயினான்போர்மிசைபோவான்.()

மாதிரத்திருள்கொன்றெழுசுடர்க்கிரணம்மலிந்தபைங்கனகுண்டலங்கள்
காதிலிட்டவிர்பொன்மணிமுடிசிரமேற்கவினுறமார்பினிற்கவசஞ்
சோதிதந்திடப்பூண்டணிகழன்மாட்டிச்சுடர்நுதற்பட்டமுங்கட்டிப்
பூதரவரிவிற்றூங்கிநற்றூணிபுறத்துறக்கோதைகைப்புனைந்தே. (௪)

ஆரடாநமதுதேர்பரியானையாட்படைபண்ணுதியென்றே
வீரடால்கொண்டசித்ரகேசரியும்விழிசிவந்தனற்பொறிவிளங்கக்
கோரடாகையினெடுழுந்தொருதேர்மேற்கொண்டனன்கண்டவர்வெருவி
நேரிடாதொதுங்கநடந்தனனளித்துடறலைப்பணிசெய்த. (௫)

தந்திகட் டிரண்ட முகிலெனத் தேர்கட் டவரைக்குல மெனத்திரண்ட
கந்துசந் திரண்ட கடற்படு திரைபோற் கணக்கிலா மீனின மெனக்காலாட்
பந்திகட் டிரண்ட படைக்கலத் தொகுதியம் பொழிலெத் தனைகோடி
தந்தபூந் துணர்கா யக்கனி யிலைகளைப் போற்றிரண் டனதரா தலமெங்கும். (௬)

இரவியு மதியு மிருளொடு பகலென் றிருபகுப் பின்றியே யொன்றாய்ப்
பொருவினதென்னப் புதுமையென் றெவரும் புந்தியின் றலமர நிழற்ற
திருவிசும் பகமுழு வதுஞ்சுடர் விட்டெரி கதிர்க்கவி கையுங்கொடியும்
பரவிலாக் கவரிக் காடுபோற் கடலின் பாய்திரைக் குலமெனப் பரந்த. (௭)

விண்ணகந் தடவி நிவந்தபொற் கொடிஞ்சித் தேர்நிரை மிளிர்வனசுடர்கள்
கண்ணக னுலக முழுவது மபுதைத்த காரிருட் பிழம்பையுண் டிரவி
யெண்ணுறுங் கதிர்கள் விடுப்பனக் கடுப்ப விதிலுறு பரித்துக் கையதின் வாய்ப்
பண்ணமை கலினப் பசும்பரி புரைந்து பாய்வன வாயுமெய்ப் பதைப்ப. (௮)

அம்பரந் தடவியாடு பொற்கொடிகள னந்தனுயிர்ந் தலைக்கிடந்த
விம்பாவாழல்கைத் தணங்கைகொண் டங்கா தெரிப்பசியாற் றுதற்குக்கந்து
நம்பியைச் சூழக் கவிவதுபோலு நாற்பெருந் திசையினுங் காட்ட
தும்பியின் குழாங்கள் பதாதியங் கடலிற் சூழ்புகினிரை யெனத்தோன்ற. (௯)

தேர்செலு மோதை மால்கரி முழக்கஞ் செழும்பரி யொலிப்பு வாண்மறவர்
வார்கழற் றமரந் திரண்டன மகரா லயத்தினு மவானமுடிக் குலவுங்
காரினு மதிர்ச்சி பிறந்தன திசையின் காவலர் சிரம்பொதிர்ந் தார்
மேருவின் சிகரங் குலுங்கின விமையோர் விழிமுகிழ்த் தோடினார் வெருவி. (௧௦)

சங்குவார் முரசு பேரிகை கிடுக்குத் தக்கைகைத் துடிதவில் சகடை
மங்குலின் முழங்கத் தாளவெண் கவிகை மதிநில வெறிப்பவெண் கவரி
யெங்கணு மிரட்டப் பீலிகா ளாசியிடை யிடைநெருங்க வெஞ்சேனை [த்த.
பொங்குசா கரம்போ லொலித்தன துகள்போய்ப் பொலிகதிரு டலினைப்புதை

ஒத்தன வலியுஞ் செயற்கையும் பேசு முள்ளனச மணிலைபடைத்த
சித்திரத் தேராயிரங் கோடிதிரண்டனர் திரதர் செறிந்தார்
மத்தமா வனைய வீரரெண் ணிறந்தோர் மருங்கினிற் றுவன்றினார் மழைபோ
லெத்திசை யினும்பல் லியந்துவைத் தேங்க வெழுந்தன பெரும்படை யீட்டம்.

மந்திரி களிலே தந்திரன் றனைமகற் குற்றுணை செலப்பணித்து
முந்தின புதல்வர் தனிலிடு மகனை முகமனோ டுடன்றுணை யாக்கிக்
கந்துகங் கரிதே ராட்படைத் துவசங் கவிகைசா மரம்பல பவுஞ்சுஞ
சிந்தையி னினைத்த படியெலா மேகச் செலுத்தினன் றனித்தனி திரட்டி. (௧௩)

சித்திர கேசரியுந் தன்மகனாஞ் சிங்கனுஞ் சங்கையில் லாத
மத்தகமத் தமாவாம்பரி மணித்தேர் வரிப்புலி யனையவாண் மறவ
ரொத்துடன் சூழமாநகர் வீதியிடம் பெற்றொல்லையி லேகிச்
சத்திரநீழல் விரிஞ்சாகோன் மருகனின் றுழிவட திசைச்சார்ந்தார். (௧௪)

மலையமாதவன்முன்னுவரிநீர்முழுதும்வாய்மடுத்தருள்கொடுபின்னு
நிலமிசைவிடுத்தவாறுபோனகரநெடுமதிள்வாயிலூடுமிழ்ந்த
குலமணித்தேர்குஞ்சரம்பரிகாலாட்குடைகொடிசாமரத்தொகுதி
பலதிசைமுகத்துமொருதிசைமுகமாய்ப்படர்வதுகண்டனர்பகைவர். (கரு)

ஆயிரங்கோடிதேரினுக்கொருதேராதவன்றேர்நிகர்த்ததின்பாற்
பாயொளிமதியின்விமானமொத்தொருதேர்மீதினும்பலபடைதாங்கி
நாயகரிருவரெதிர்ந்தனரிவர்கள்யாவர்நீநவிலுதிசமர்த்த
வேயெனுமளவிலெனப்புவனேந்திரனிசைத்தசொற்கேட்டிவையிசைப்பான்.

தேர்மிசைமஞ்ஞைக்கொடிவிரித்துற்றோன் சித்திரகேசரியவன்றன்
சார்பினிற்றுவசவோதியஞ்சிங்கனிவனடுத்தமையனிங்கிவர்கள்
பேர்சொலிற்புவனமூன்றினும்பால்வேட்டமுஞ்சிறுபிள்ளைவாயடங்கு
மாரினியிவர்தம்வீரமும்விளைவுமறிந்தமராற்றுதற்காவார். (கஎ)

ஐயநின்கைவில்லலதுநின்னமைச்சனருஞ்சிலையாசுகமலதிங்
கெய்வலிக்குறியார்யாவரென்றிசைப்பேமெனப்புகல்சமர்த்தனைநோக்கிச்
செய்வலிப்புவனேந்திரனிளமுறுவற்செய்துபின்மாதுலன்றன்னை
வெய்யநின்படையோடருகுநின்றெமதுவிற்றொழில்காண்மின்களம்மா. ()

எனவிவன்புகல்போதெயில்கடந்தமர்க்காங்கெய்தியதுணைவனுந்தானு
மனவலிப்படையும்போர்க்களங்குறுகிமாடுறுசாரணர்தம்மை
நனிதுநீராய்ந்தமட்டிலுமிவரைநவிலுதிர்விரைந்தெனப்பலசால்
வினவலும்பதமேற்பணிந்துவாய்புதைத்தேவிளம்புவார்விவரமாய்விரித்து.

இந்திரஞாலத்தேரினுஞ்சிறந்ததேரினிலிந்திரன்புரவி
பிந்திடவாயுமனநிலைபடைத்தபெரும்பரியிரண்டுகொண்டிருந்த
சுந்திரவில்லிதிருப்புவனேந்திரனருகினிற்றோழமைநீங்காத்
தந்திரன்புத்திசிகாமணிமாமன்னவமணிபின்னின்றதக்கோர். (உ0)

ஈங்கவர்பெருமைநுவல்வதற்கடங்காயினுமிறைவருங்காத்திற்
றூங்கியவரிவிலாவரிக்கிலக்குத்தப்பிடாரசரதமென்றுறுதி
நாங்களுநினைத்தோமென்றுதஞ்சென்னிநாயகர்பதமலர்பொருத்திப்
பாங்கினிற்பணிந்தார்சித்ரகேசரியுஞ்சிங்கனும்பரிவுகூர்ந்துவப்ப. (உக)

ஒற்றர்கள்புகலுமளவையிலிரண்டுபாலினுமுளபெரும்படைக
டெற்றியொன்றொன்றோடிடித்தனவடித்ததெரித்தனவரிச்சிலைப்பகழி
மற்றுளதண்டுபிண்டிவேல்சூலமழுக்கவண்டிகிரிவாண்முதலா
யுற்றனபடைகளெடுத்தனவீசியுடற்றினவுருத்தனவொலித்தே. (உஉ)

கரியொடுகரிமுட்டினபரிபரியோடருஞ்சமர்கலந்தனவுயர்வான்
கிரியெனக்கொடிஞ்சித்தேரொடுதேருங்கிட்டினமட்டறபூசல்
புரிபடைக்கலங்கொண்டாளினோடாள்கள்பொருதினமுறைமுறையோசை
விரிநெடுந்திசைகளெட்டினும்பரவிவிபுதர்தஞ்செவித்துளையடைத்த. (உங)

வேறு

மோதல்கொண்டுதொடர்ந்துநடந்தனர் மூரிவெஞ்சிலைநாண்குழையக்கணை
வாதுகொண்டுதொடுத்துவிடுத்தனர் வாள்கவண்கதைவீசியெதிர்த்தனர்
காதுகொண்டடியூதைகிளப்பியகார்வயக்கரிதேர்பரியாளொடு
தீதுகொண்டுடலங்கிழியத்தலைசிந்தவிந்திரனார்படைநொந்ததே. (௨௪)

மண்டுகைச்சிலைகொண்டெறிநாணொலிமண்டியண்டமிடிந்துபொடிந்தெழ
கொண்டலுங்குலையக்கணைமாமழைகொண்டெற்றிநெடும்படையாளுடற்
றெண்டைமண்டைநெறிந்துநளகுடமுருங்கவெங்குருதிக்கடலெங்கணு
முண்டுபேய்நடனம்புரியப்பயந்தோடினார்விசையன்படையாளரோ. (௨௫)

தன்பெரும்படைசாய்ந்துபுறங்கொடுதானிடைந்தமைகண்டொருதேர்மிசை
மின்பெரும்புயலிந்திரவில்லொடுமேவிவந்தமரம்பொருதாலெனப்
பொனபெருஞ்சயிலக்கையில்விற்குதைபூட்டிநாணொலிகாட்டியடுங்கணை
யொன்பதேவினன்மந்திரிதந்திரனுற்றமேவலர்கணமுளமுட்கவே. (௨௬)

பின்னுமெத்தனையெத்தனையாயிரகோடிகோடிபெரும்பகழித்தொகை
யுன்னுமாறரிதென்னநெடுஞ்சிலையொன்றினேழிகையொன்றினில்வான்மழை
யென்னவீசியதிர்த்திருகட்பொறியெங்கும்வீசிநடுங்கமடங்கலின்
முனைநின்றமராடினனந்தரமுற்றசெங்கதிரும்மிருண்மூடவே. (௨௭)

தந்தியுக்கனதேர்களுடைந்தன தாவுபாடலமுந்துகளாயின
சிந்திமூளைசொரிந்தனவாள்படைசேரவுங்கரியாகியிடுங்கனல்
வெந்துவெம்புகைநீடின்பேரொலிவிம்மிவானகமெங்குமிடைந்தன
பந்திகொண்டுகவந்தநடந்தனபந்தலிற்பலபுட்கள்பறந்தன. (௨௮)

வாள்கவண்கதைகொண்டுசுழற்றியவல்லபங்களிழந்துநெடுந்தலை
மூளைசிந்தநொறுங்கிவிழுந்துவிண்மூடிவெம்பிணமாகியவெம்படை
யாளருங்கரிதேர்பரிநந்தியவாகுலம்பெரிதானதுணர்ந்துள
மூளும்வெஞ்சினமண்டுசமர்த்தனுமோகரித்தவன்மீதமர்முந்தினான். (௨௯)

இங்குநின்றபெரும்படையாவையுமென்கண்முன்றுணிசெய்தனைநின்வலி
பங்கமெய்தநெடுந்தலையைச்சிலைபாய்கணைக்கிரையாக்குவனென்றனல்
பொங்குவெங்கணராவெனவங்கொருபூதரம்புரைபாரவரித்தவர்
செங்கைகொண்டுருமேறெனநாணொலிசெய்துசெஞ்சரமாமழைசிந்தியே. ()

சுற்றிநின்றபடைக்கடலைப்பெருஞ்சூறைமாருதமோதிடவேதுக
ளுற்றபஞ்செனவூதியிமைக்குமுன்னங்குதேர்பரிபாகுமணிக்கொடி
யற்றுமண்மிசைமீளவிடுத்தவனங்கைவிற்றுணிசெய்துமினோர்கணை
நெற்றியிற்படவெய்தனனிங்கவனோர்சொலப்படுமோவொருவீரனை. (௩௧)

மாறுதேரினிலேறிநெடுங்கிரிமானும்வெஞ்சிலைகோலிமுனைக்கணை
நூறுநூறுதொடுத்தவன்வெம்படைநூறியங்கவனேறியதேரையோ
ராறுசந்திரவாளியினாற்பொடியாக்கிவில்லையொடித்துமுடித்தலை
கூறுசெய்குவனின்மினெனத்துடிகொண்டுதந்திரனுமமுரைகூறியே. (௩௨)

வாசிசாரதியற்றுநெடுங்கையில்வாங்குவெஞ்சிலையுங்கணையும்பொடித்
தூசியுற்றடியிற்றுமுடிக்கொடிதூட்கிளம்பிடநெட்டமைதட்டுக
ளாசுவிட்டுருடேருடைபட்டுமெய்யாகுலத்துடனோடவடிக்கணை
வீசநொந்துமனந்தளாவெய்தினன்வெங்கொடாவலிமேவுசமர்த்தனே. (௩௩)

சிங்கமென்னமுழங்கிநெடுஞ்சிலைசெங்கைகொண்டதளாதிபனுஞ்சர
மெங்கணும்படவீசியெதிர்ந்தவர்யாவருந்துகளாகி மடிந்தொரு
பங்கமெய்தமுனைந்துநெடுஞ்சமர்பண்ணிவந்தையுகந்தருள்செய
சங்கமூதினனண்டமுடைந்தொலிசந்ததென்றுவிணோர்புறமோடவே. ( )

வச்சிரக்கணைநான்குவிடுத்துமுன்வந்தெதிர்த்ததளாதிபன்வாங்கிய
கைச்சிலைக்குதையைத்துணிசெய்தணிகட்டுகொய்யுளைமாவொடுதேருரு
ளச்சையவெட்டிமுறித்தவன்மெய்த்துளையாடினன்னதிவெள்ளமெனச்செறி
பச்சிரத்தமிகுத்தொழுகக்கலைபற்றிமூர்ச்சையடைந்துபதைத்தனன். (௩௫)

கண்டுநெஞ்சமழன்றுசிவந்திருகண்கள்சிந்துகனற்பொறியெங்கணு
மண்டநின்றுசுழன்றுநெடுஞ்சிலைவாங்கிநீசைமுறுக்கிமுனைந்தெதிர்
கொண்டன்மாமழைபெய்தனவாளிகள்கொண்டுதந்திரனைச்சயர்வேதனை
யுண்டுபுண்படமீண்டமராடினனெல்கினறசமாத்தனுருத்தரோ. (௩௬)

பின்னையெத்தனையெத்தனைகாய்கணைபெய்துபெய்துதனக்கெதிரானவர்
சென்னியெத்தனையெத்தனையோபொடிசெய்துசெய்துகடக்கரிதேர்பரி
தன்னையெத்தனையெத்தனைகூறுகடான்படப்புரிவித்தனன்மற்றிவன் [றன்
முன்னையெத்தனையெத்தனைபோர்தொறுமூண்டமன்னர்முகங்கள்கலக்கி

வில்லிழந்தனர்வாசியிழந்தனர்வெங்கண்யானைரதங்களிழந்தனர்
மல்லிழந்தனர்செங்கையிழந்தனர்வார்கழற்றுணைமுற்றுமிழந்தனர்
சொல்லிழந்தனர்பல்லொடுநற்றலைதுள்ளியோடிடவோடினராருயி
ரல்லிழந்தபகற்படுசந்திரனாகினர்விசையன்படையாளரே. (௩௮)

வேறு

சுடர்முடித்தாருந்தேருந்துரகமும்பாகர்தாமுங்
கடகரிக்குலமுஞ்செம்பொற்கவரியுங்கதிர்செயமுத்தின்
குடைகளுங்கொடியுஞ்சிந்திக்குருதிநீராற்றின்கொளளைப்
படிகளமுழுதும்பாய்ந்துசிவந்ததுபரிதிமான. (௩௯)

தேரற்றார்பரிகளற்றார்சிலையற்றார்சரங்களற்றார்
தாரற்றார்தலையுமற்றார்தலைவராயவந்தோரெல்லாம்
போரற்றார்பூசன்மாறுப்பெரும்படையீட்டமெல்லாம்
போரற்றாராறுதவீரசமர்த்தனும்புலிமுன்புக்கு. (௪௰)

வானமுந்திசையும்பாருமலைகளுங்கடலுமற்றைக்
கானமுமிடம்பெறாதென்றுரைதரக்களமேனின்ற
மானமாப்படைகண்முற்றுமானம்விட்டாவிநீங்கி
யூனமாயினதேகண்டாருமயருமுளநொந்தேங்க. (௪௧

கைப்படுகணையாற்சேனைமுழுவதுமுதிரங்கான்று
பொய்ப்படுபுவிவிட்டென்றுமெய்ப்படுமுலகம்புக்க
நெய்ப்படுநெருப்பிற்காந்தித்தந்திரனிமிர்ந்தசீற்றப்
பைப்படுபாம்பிற்சீறிப்பருஞ்சிலைப்பகழிதூர்த்தே. (௪௨)

எரிருதேரையானைத்திரளினைப்பரியீட்டத்தை
வீரரைவிருதைச்செம்பொற்கவரியைக்குடையைவீழ்த்தி
யோரொருபகழிக்கோரோராயிரமுடைந்துசிந்தப்
பாரொருபத்துநான்கும்பயப்படநடுக்கியார்த்தான். (௪௩)

இலையறுத்தலகுகூட்டியிருமுனைநீட்டிவாய்ந்த
கொலையறுத்திடுகூர்வாளியேயொருதொடையிற்கோத்துச்
சிலையறுத்தேறிவந்ததேரறுத்தருகுசூழ்ந்தோர்
தலையறுத்தோடவிட்டான்சமர்த்தனைச்சரமொன்றாலே. (௪௪)

சேகரப்படைகண்முற்றுஞ்சிதைபடத்திண்டேரூரும்
பாகனும்பரியும்பொன்றப்பாழ்படுத்தம்பொன்றாலே
வாகினித்தலைவனானதளாதிபன்மயங்கிவீழ
மோகரிப்போடுதந்திரன்கோளரிமுழக்கஞ்செய்தான். (௪௫)

படைபொருதலைவரானவிருவிரும்படையும்போரிற்
கடைபடுமொருவனுண்மைக்கஞ்சிவெங்காலாலெற்றுண்
டுடைபடுமுவரிநீர்போலோடுவதுற்றநோக்கித்
தடைபடாப்பாந்தள்போலுநவமணிதடந்தேர்தூண்டி. (௪௬)

சிலைவலிபரப்பிவிண்ணோர்சிரம்பொதிரெறியத்திக்கின்
நிலைவலிக்கயங்கணெஞ்சமஞ்சிடநிலத்தைத்தாங்குந்
தலைவலிச்சேடனின்றுதவிப்புறச்சரங்கள்கோடிக்
கொலைவலிகொடுக்கவெய்தானிடிமழைக்கொண்டல்போலும். (௪௭)

தேரொடுதேருமுட்டச்சிலையொடுசிலையுந்தட்டத்
தாரொடுதாருங்கிட்டச்சமைத்திருமதிவல்லோருங்
காரொடுகார்கள்சேர்ந்துகடலொடுகடலைவாரிப்
பாரொடுபாரைத்தூர்க்கும்பான்மையோற்பகழிதூர்த்தே. (௪௮)

தாளினுமார்பின்மீதுந்தலையினுந்தனிப்பொற்குன்றத்
தோளினுங்குருதிவெள்ளஞ்சொரிதரத்துளக்கமின்றி
மீளியொத்திருவர்வில்லும்வளைந்துவிண்பிறைபோனிற்ப
வாளியெத்தனையோவீசிவன்சமராடல்கண்டார். (௪௯)

ஒருவரோடொருவர்செய்யும்பூசலினிடையேயுற்ற
விருவர்தம்படையுஞ்சிந்தியிரிந்தனவிறுதிநாளிற்
பொருபுவியடங்கநுங்கிமேற்கிளர்புணரிபோலு
மருவினவஸ்திரமாரிவானினுமுதிரமாறி. (௫௰)

மந்திரிகளிலே தந்திரனென்றுசொன் மதிப்புக்கேற்ப
வந்தமர்புரிந்தாயெங்கடலைவரும்படையுமாழ்கச்
சிந்தியவுனதுவீரச்சேவகமுழுதுஞ்சிந்திப்
பிந்திமற்றவரைச்செய்தென்பெருவலிபெறுகிற்பேனால். (௫௧)

பாரெனவிரண்டுகோடிபாணம்விட்டவன்பார்சூழ்ந்து
போரெனவந்தவீரர்புயமென்னபுயத்திற்றாங்குந்
தாரெனகவசமென்னத்தலையெனத்துணிசெய்வித்தான்
நேரெனக்காணவந்தோர்க்கிலதெனநினையாவண்ணம். (௫௨)

இருகணைபுயத்திற்கொண்டாங்கெழுதிமற்றவன்றனெற்றிக்
கொருகணைகுதைமட்டேறவோட்டிப்பின்னேழுவாங்கிப்
பருதிவெஞ்சுடர்கள்போலும்பாய்பிறன்பரியைக்கொல்வித்
தருணனேர்பாகன்றன்னையாருயிரழித்தவன்றே. (௫௩)

நன்றுநன்றுனதுவிற்போர்நவமணிநீயேகண்டே
னென்றுதந்திரனுஞ்சீறிவேறொருதேர்மேலேறி
நின்றிமைத்திடமுன்வாளிநிரைநிரைநிரப்பிநின்னைக்
கொன்றுயற்றுனதுமன்னர்கோறலுங்காண்பேனென்றே. (௫௪)

காய்கணைநான்கினாற்கந்துகங்களைக்கொல்வித்தப்பான்
மேயசாரதியையொற்றைக்கணையினாற்றலையைவீட்டி
நாயகன்விற்போராண்மைக்கிவனெனுநலமேற்கொண்ட
தூயதந்திரனுமன்னன்வில்லையுந்துணிசெய்வித்தான். (௫௫)

வில்லிவணிழந்தானென்றுவிழியிமையெழாததேவர்
சொல்லிழந்திடற்குமுன்னந்தொடுசிலைவாங்கிவேறொ
ரல்லிழவாதசேமத்தேர்தெரிந்தேறிவல்லை
மல்லிழவாததிண்டோணவமணிமானமிக்கு. (௫௬)

வடிக்கணையொன்றாற்பூட்டும்வாம்பரிமணித்தேர்தேரின்
கொடிக்குலம்பாகன்றாணிகொடுஞ்சிலையம்புகையி
னொடிக்குமுன்வேறுவேறுநொறுக்கித்தந்திரனுமாய
மிடுக்கினாற்சரமொன்றெய்தானவன்றலையற்றுவீழ்ந்தான். (௫௭

தந்திரன்பட்டான்சூழ்ந்ததானையுந்தலைவர்தாமும்
வெந்திறமழிந்துமாண்டார்வெங்களத்தலகைநாய்பேய்
பந்திகொண்டிரமாந்திப்பாடிடப்பகைமேற்பின்னு
மந்திரித்தலைவனானநவமணிமுனிவுமாறான். (௫௮)

சித்ரகேசரிமேற்றேர்மேற்சிங்கன்மேற்சங்கையின்றிப்
பத்திருநான்குகோடிபாணம்விட்டருகுசூழ்ந்த
வத்தனைபடைகண்மீதுமொன்றினுக்கனந்தமாக
வெத்தனைகோடிகோடியேவினானிமைக்குமுன்னம். (௫௯)

கண்டனரிருவர்கண்ணுங்கனற்பொறிகதுவச்சீற்றங்
கொண்டனர்கூற்றுங்காற்றுங்கூடினின்றடுபோராற்ற
மண்டுதல்போலுஞ்சத்தசம்மணித்தடமுனைத்தேர்தூண்டித்
திண்டிறற்சிங்கன்சித்ரகேசரிசெறுக்கண்வேட்டார். (௬௦)

வாங்கினார்வரிவின்னாணிமாட்டினார்விரலிற்கோதை
தாங்கினார்சிறுநாணோசைதாக்கினார்பாக்கியின்றி
யேங்கினார்புவனத்துள்ளோரிமையவரிரியப்போனார்
நீங்கினார்மூவர்தத்தம்யோகத்தினிலையினின்றே. (௬௧)

கரித்தலையவர்சென்னிதேர்த்தலைகாலிற்றாவும்
பரித்தலைதெரியாவண்ணம்பறித்தலைப்பகழிமுன்னீர்
விரித்தலைப்புவனமெல்லாம்வியத்தலைக்கருதச்சிந்தி
வரித்தலையரவம்போலும்மலைத்தலைவரித்துநின்றார். (௬௨)

பட்டகானுல்லைவெந்தீப்படுதல்போலுடலமெல்லாந்
தொட்டவெம்பகழிபாய்ந்துசுட்டிடக்கெட்டுள்ளாவி
விட்டனர்நெட்டுநெட்டாய்விழுந்தனபிணத்தின்குப்பை
முட்டினபருதித்தேர்க்காறடுத்துவிண்முகடுமுட்ட. (௬௩)

சிங்கனும்பகழியொன்றால்நவமணிசிலையிற்கோத்த
சங்கபத்திரங்கண்முற்றுங்கரிந்துசுக்கடிந்துவான
மெங்கணும்பருவகாலமழையினுமிடைவிடாமற்
புங்கநீர்பொழிந்தானஞ்சிப்புறங்கொடுத்தொதுங்கிப்போனான். (௬௪)

கடகரிதுமிந்தவாவுங்கந்துகந்துமிந்தசெம்பொற்
குடைநிரைதுமிந்தநீண்டகொடிக்குலந்துமிந்தவீரர்
விடுபடைதுமிந்தவன்னார்விரிமணிச்சதங்கைகொஞ்சு
மடியொடுமுடியுமெய்யுந்துமிந்துயிர்துமிந்ததம்மா. (௬௫)

இருசிலையிருவர்செங்கையிரண்டினுமெய்யும்வாளி
பொருபுலிமூன்றுநான்குதிசையினும்பூதமைந்து
மருவியதோற்றமாறொன்றாயினவாறுபோலப்
பெருமைகொண்டடங்காதெண்ணற்றார்ந்தனபீடுதோன்ற. (௬௬)

நின்றிடிற்சாய்க்குஞ்சாய்ந்தோர்தலையினைநிமிர்க்கும்பாரிற்
பொன்றிடிலுய்வுகாட்டுமுய்வெனிற்பொன்றல்காட்டும்
வென்றிடிற்றோல்வியாக்குந்தோல்வியேல்வென்றிகொள்ளு
மன்றவர்விடுக்கும்பாணசாலங்களறிதற்காற்றா. (௬௭)

தலைவரிற்பெருமைவாய்ந்தசமர்த்தனைச்சாமொன்றுமேல
நிலைதளர்ந்தோடச்சாடிநின்றெதிர்பொருதச்செங்கைச்
சிலையெடுத்தவரையெல்லாஞ்சிதைபடச்சேறுசெய்து
கொலைபடுத்தடுபோராற்றுங்களமெலாங்குழம்புசெய்தான். (௬௮)

தாள்குறைந்துடலம்விண்டு தலைநெரிந்தகலம்போழ்ந்து
தோளொடிந்துதிரமாரிசொரியக்கையெடுத்தவேலும்
வாளும்விற்கவணுங்கோலும்வளைமழுமுசலந்தண்டுந்
தூளுந்தூசியுமாய்ப்பூளைகால்பட்டதொலைந்ததொத்த. (௬௯)

அமர்த்தலையாற்றலேற்றுநவமணியகன்றன்வெற்றிச்
சமர்த்தனுஞ்சரமொன்றாலேதன்னிலைதளர்வுற்றேய்ந்தான்
றமர்தலையினுமிக்குள்ளதளாதிபன்றனும்போனான்
கமர்தலையுகுத்தபால்போற்களமெலாங்கழிந்தசேனை. (௭௦)

உடற்பரம்மலைகளாகவுதிரமுங்கடல்களாகப்
படைக்கலங்கான்களாகப்படுகளப்பாரோரண்டத்
திடைப்படுமுலகம்போலுமிருந்தனதெரிந்தவேதன்
றடைப்படாச்சிருட்டியாவர்சமைத்ததென்றையஞ்சார. (௭௧)

பொருஞ்சினக்கடாநல்யானைமீதினிற்போர்வேட்டுற்று
வருஞ்சினமடங்கல்போலும்விரிஞ்சனுமலர்க்கணோக்கிப்
பெருஞ்சிரிப்புளனாய்ச்செங்கைப்பிறங்குவிற்குழைந்துவாங்கி
வருஞ்சிறப்பொடுதேர்தூண்டிச்சிங்கனைமறித்தான்வந்து. (௭௨)

ஆரடாவுனதுநாமம்யாதுகொலெதுநாளிந்தப்
போரடாகற்றாய்நின்போற்போர்புரிவீரரானோர்
வீரடால்விரித்தவெட்சிமிலைந்திடாதேகார்கண்டாய்
நேரடாவென்றேயண்டங்குலுங்கிடவுரைகணோர்ந்தே. (௭௩)

ஒன்றிரண்டவைரெட்டித்தவோரிருநூறுவாளி
மின்றிரண்டனையவானத்துருமினுமதிரவீசிக்
குன்றிரண்டொளித்தபொற்றோடுளைபடக்குருதிக்கொள்ளை
சென்றிரண்டருகும்பாயச்சிலீமுகஞ்சிந்திமேன்மேல் (௭௪)

சிங்கனைச்சூழநின்றசேமத்தேரொழியவந்த
வெங்கயங்குதிரைபொற்றேர்வீரர்களீட்டம்வெங்கான்
செங்கனற்பட்டநீறுஞ்செய்கையிற்சிதைந்துமாயச்
சங்கமொன்றொலித்தான்மூன்றுபுவனமுந்தயங்கமன்னோ. (௭௫)

சங்கத்தினொலியுமன்னான்றனிவினாணொலியும்வீசும்
புங்கத்தினொலியுஞ்செய்யும்போர்த்தொழில்வலியுநோக்கிச்
சிங்கத்தின்செயற்கொள்சிங்கன்சிறுநகைசெய்துமாது
பங்கத்தன்வரைவில்லன்னவில்லொலிபரப்பிச்சொல்வான். (௭௬)

பேர்தெரியாதுநின்றபேதையுன்பேருநின்றன்
காரிகைபேருங்கேட்டேனீசெயுங்கருமங்கேட்டேன்
போர்புரிவலிமையொன்றும்புகுந்தெதிர்வினவிக்கேட்கப்
பார்மிசைவந்தசிங்கமெனப்பெயர்படைத்துளேனே. (௭௭)

வேண்டியவரங்களாற்றிமின்னிடையாளைப்பெற்றே
யாண்டகைதோற்றுநின்றவறிவிலியெவரும்பாரின்
மாண்டுபோவதுவும்மெய்யேயாயினுமகளைவேட்டோ
ரீண்டவரென்பதோராதிறப்பதுதுணிந்தாய்பாவம். (எஅ)

சாகதீவுக்குவேந்தன்றையறன்மணத்தைவேட்டே
யேகமாய்வந்தமன்னர்தங்களிலென்றுதைச்கு
மோகமுற்றலங்கல்வேய்ந்தமுறைமைகண்டுளம்பொறாது
சேகரப்போர்செய்தாற்றாதோடினதிருவிலோனே. (எகூ)

அருமைமகன்மகடன்றாலியறுபடுமெனவோராது
மருமகற்பிழைக்கணேற்றுவந்தமர்க்குதவியானாய்
பெருமையிங்கிதுபோல்யாவர்பெறககிடைத்தவர்களென்றே
வுருமினுமிடித்துச்சொன்னானசுரமழைபோலுய்ப்பான். (அ0)

வல்லைநீயாகின்முன்னேவைத்தகான்மாறிடாது
நில்லுநில்லென்னவாளியைந்தொருநிமையிற்கோத்து
வில்லும்வில்லேவுமேவும்வெம்பரிபாகுந்தேருஞ்
சொல்லுமுன்கொல்லுங்கூற்றமிவையெனத்துணிசெய்வித்தான். (அக)

தனுவலங்காட்டிப்பின்னோர்சரத்தினாற்றரணிதாங்கும்
மனுமுறைவிரிஞ்சன்சென்னிவனைந்தபொன்மகுடநீக்கி
முனுமுடிபறித்திலங்கையரக்கனைமோதல்கொண்ட
வனுமனுக்கரசன்போலுமாவலங்கொட்டியார்த்தான். (அஉ)

வில்லொடுமௌலிநீத்தவிரிஞ்சனும்விளம்பாநின்ற
சொல்லொடுசெய்கைகுன்றச்சோர்ந்துளநாணமிக்கு
மல்லடுதிணிதோட்கேற்றமற்றொருமணித்தேரேறிக்
கொல்லடுபல்லவங்கள்குழுக்களாய்க்கோத்துவிட்டே. (அங)

ஏறியதேரைப்பாகையிவுளியையெடுத்தவில்லை
நூறியங்கவன்றன்மெய்யினூறொடுநூறுவாளி
பீறிநின்றுதிரங்கான்றப்பிலங்கொடுசெலுத்திநெற்றிக்
காறிருபாணமுய்த்துச்சிங்கனையலக்கண்கண்டான். (அச)

மற்றொருதேரிற்சிங்கன்மாறிநின்றடுபோராற்றுங்
கொற்றவர்குனித்துச்சங்கவெற்றியுங்குறித்துப்பாண
முற்றதிவ்வளவென்றில்லாதும்பராருவப்பச்சிந்தி
முற்றும்வெங்கோடைகாலக்கதிரெனமுனிவுகொண்டே. (அரு)

துவசமுந்துரகத்தேருந்துணிபடமெய்யிற்பூட்டுங்
கவசமுங்கழியச்செம்பொற்கவரியுங்குடையும்வீழ்த்தி
யவசமாய்வெந்நிட்டோடவடித்தனலக்கண்வாய்ந்த
திவசமுற்றிடநின்றேங்குமுறைமைபோலுலகுந்தேம்ப. (அசா)

தாதுலாந்தகோதைத்தானையுந்தலைவர்தாமு
மூதைவாய்நெருப்பினீட்டும்பொன்னெனவுருகிச்சாய்ந்த
வேதனைதீர்க்குமவெற்றிவிளைவிக்கப்போர்மேற்சென்ற
மாதுலனோட்டங்கொண்டாற்படைபொரவல்லார்யாரே. (௮௭)

முருங்கினினின்றபுத்திசிகாமணிவதனநோக்கிப்
பெரும்படைகொண்டுவெல்லவந்துளபீடுந்தேசு
மொருங்குளகருமப்பாடுமெரிதரிதும்பர்கட்கேனும்
வருமபுவியவர்கட்கேனும்வழுத்தவுமாட்சிததாமோ. (௮௮)

விற்றொழில்வீரமில்லாவிரிஞ்சனைத்துணையாய்க்கொண்டு
செற்றநாமவெல்லற்குற்றசின்மதியினிமேற்சிந்தை
யுற்றிருந்தாய்தலாமெலனூதியங்கிடக்கநீயும்
பொற்றடநெடுந்தேரீண்டுதூண்டுதிபோர்மேலென்றான். (௮௯)

அரசர்கோன்புகலப்புத்திசிகாமணியரசேயென்ன
வுரைசெய்தாயிவர்கள்வாழ்வுகக்கோங்குபோர்வலிக்குநேரார்
விரைசெறிகமலயோனிவிளம்பவுமாற்றியாவென்றல்
வரைசெய்தோள்விரிஞ்சன்மீதுகுற்றநாம்வகுக்கலாமோ. (௯0)

இற்றதுபோகச்சேடமிருப்பதைமுழுதுஞ்சேர்த்துக்
கொற்றவகினதுமாமன்நவமணிதானையுங்கூட்டி
மற்றொருபுறத்தினிற்கவைத்துநாமடுபோராற்றல்
வெற்றியுமழகுமென்றான்வருபொருள்விநயமோர்வான். (௯௧)

நன்றெனவுந்தான்மாமன்நவமணியிவர்கட்கூவிப்
பொன்றினதொழியப்பொனாறிருந்தபொற்படையைக்கூட்டி
யின்றுநீர்வெருவுறாதெம்விற்றொழிலிருந்துகாண்மி
னென்றுரைபுகன்றான்கேட்டானவிரிஞ்சர்கோனுணமெய்தா. (௯௨)

சொன்முறைநின்றார்புத்திசிகாமணிதுணைத்தேர்தூண்டக்
கன்முறைவயிரத்திண்டோட்கனமந்தவிற்கையில்வாங்கிக்
கொன்முறைவாளிதூற்றிக்கோளரியெனனச்சென்றான்
மன்முறைநெறியிற்கோடாமனுமுறைவந்தவள்ளல். (௯௩)

இருவரும்யானைவேட்டாங்கெழுந்தகோளரிபோற்றெவ்வர்
வெருவுறவெதிரிற்றோன்றுமளவில்வெவ்வரவைக்கண்ட
கருடனிற்களிப்புக்கொண்டார்காவலன்புதல்வரீங்குச
செருவினிச்சரியென்றேந்துஞ்சிலைவளைத்தெதிர்த்துவந்தார். (௯௪)

போர்புவனேந்த்ரனூற்றப்புறப்பட்டானென்றலோடும்
பாரின்மேன்மாண்டமீண்டுற்பவித்தெழும்பரிசுபோலுஞ்
சீர்தரப்பரித்தேர்காலாள்செறிந்தனபம்பைதூரி
பேரிகைடமாரந்தக்கைபெருமழையிடிபோலார்த்த. (௯௫)

வில்லினர்வில்லாரோடுமிடைந்தனர்வீரங்கூசா
மல்லினர்மல்லாரோடுமலைந்தனர்படையில்லாதார்
கல்லினுமரத்தினானுங்கடாவினரிதுக்கேலாதார்
சொல்லினுங்குதித்தலானுந்தோள்புடைகொட்டியார்த்தார். (௯௬)

ஏவியவேவுமேவுநிருமுனைகடித்தொன்றொன்றோ
டோவலில்விசும்பைமுட்டியுகுந்தனபிறங்குசெந்தீ
காவுளபொருப்பினுள்ளகானுளவடங்கப்பற்றிப்
பூவுலகனைத்துந்தீய்த்துநாகர்வாழ்தலமும்புக்க. (௯௭)

இருதிறற்படையுமாலித்திருவிழிக்கனல்கள்சிந்தப்
பொருதிறற்படைகளோட்டிவாட்டினர்புரியும்வேலை
யொருதிறற்படையுமொவ்வாதிப்பெரும்படைக்கென்றும்பர்
வருதிறற்படைகண்மேன்மேல்வழங்கினர்வரங்களோடும். (௯௮)

வேறு.

திக்குநாலினுமிகுக்கும்வல்லிருள்சிதைத்துமேலொளிசெய்தினகர
ரொக்குமென்னுமுருள்பக்கமெங்கணுமுராய்ந்துபொன்கதிர்பரப்பிடத்
தக்கரத்தினமழுத்திமுத்தருகுதந்துபச்சைவயிடூரியந்
தொக்குபொற்குடமிருத்திநற்கொடிகடுன்னுதேர்பரிகடூண்டியே. (௯௯)

கார்முகங்குனிபடக்குழைத்துநெடுநாணினோசையெழுகடலெனப்
போர்முகங்கடொறுநின்றவீரரொருறுக்கிவன்சமர்பொரப்படாப்
பார்முகங்களின்மயங்கிமெய்பதைபதைத்திடச்செறியுயிர்ப்பினோ
டோர்முகம்புகுதவன்றொலித்தவொலியும்பர்நாடுமுலைவித்ததே. (௧௦௦)

தேரினின்றுசிலர்கரியினின்றுசிலர்சிந்தினருயிர்கணந்தியே
பாரினின்றுசிலர்பரியினின்றுசிலர்பட்டுலர்ந்தனர்களிஞ்சிகு
ழூரினுங்குருதிசொரியமாய்ந்தனர்களூண்மையீதகமுணர்ந்தவர்
போரினும்பொருதவேணுமென்றுளநினைக்கவுஞ்செயல்பொருந்துமோ. ()

வில்லொலித்தவொலிபோயடங்குமுன்விரிந்தகாரொலிகார்ந்தசீ
ரெல்வலிச்சுடரடங்குசங்கொலியெழுப்பிஞணவையியைந்தபார்
புல்லியந்தரகிரந்தரம்பரவியண்டகோளவரைபுக்கியே
கொல்புலிக்குலமெனத்தொனித்தபலகோடிகோடியுயிர்குறையவே. (௧௦௨)

கழுகிறக்கைபலநிரைவிரித்துவலிகட்டுகாய்கணைகண்மட்டிலா
தெழுமுகிற்படலமழையெனப்பரவவெய்தவெய்ததிசையெங்கணு
மழிவுபட்டுளதுசேனையங்குருதியாறுபட்டுளதுபாரெலாம்
பழுதுபட்டுளதுபட்டிடாதபொருளுங்குலைந்ததுநிலைபாரவே. (௧௦௩)

விண்ணினும்விசிகம்வெற்பினும்விசிகம்வெய்யகானினுமாத்தினும்
மண்ணினும்விசிகமானதிங்கிவர்செய்வல்லபங்களெனவெண்ணுவோ
ரெண்ணினும்விசிகமெண்ணியேயிவையெதிர்ந்துகாண்கவெனநண்ணு
வோர், கண்ணினும்விசிகமொய்த்துவெங்கனல்கள்கக்கியோடுபுகைகதுவின்.

குதிரையைத்தலைதுமித்துமோதிவருகுஞ்சரங்கள்வதையுண்டுகொம
புதிரமுத்தினொடுபுரளவெட்டிமலையொக்குமோட்டிரதம்படர்ந்தியங்
கெதிர்மலைப்பவர்கண்முடிதகர்த்துதிமிர்வானினுந்திசைகளெட்டினு
மதிர்படத்திருகியுலவுகின்றதிவனேவும்வாளியெனுமாளியே. (௪௦௫)

வாயுவேகிமனவேகிவெங்கணசுவங்கண்மன்னவர்முடித்தலை
தோயுமண்புழுதிபடமிதித்தடிதுவைத்துவாவுதல்கொடொழில்செயு
மேயதேரினுருளும்பிரிந்துநெறியெய்தியொன்னலரையெற்றியே
யாயுமாறரிதெனச்செலுமமதிவலானமைத்தகையமைப்பரோ. (௪௦௬)

திருவிருந்தபுவனேந்திரன்செருவியற்றல்கண்டமரர்யாவரு
மருவிருந்ததமதங்கையான்மலர்களள்ளியாசிபலசொல்லியே
தருவிருந்ததிலையிலையெனப்புகறல்கொண்டுதூற்றினர்கடம்முளம்
பெருவிருந்துணவுதுய்த்துளாரினுமிகுக்குமன்புறுதல்பெற்றரோ. (௪௦௭)

சிங்கமென்பவனையெய்திநின்றுசிறுநகைபுரிந்துமதுதந்தைதா
னெங்குளானவனையன்றியென்சினமுமென்கைவில்லின்முனைவாளியு
முங்கடன்மையினடங்குமோசிறியபிள்ளைகாளுயிரைவீணிலே
யிங்குநீவிரிழவாதுசெல்லுகநும்மாநகர்க்கெனவியம்பினான். (௪௦௮)

நன்றுநன்றுனுரையென்றுகைத்தலைமறைந்துபுன்னகைபுரிந்தவ
னின்றுநின்சிறியபருவநாங்கள்புகல்வோமெனக்கருதியோசொனாய்
வென்றிகொண்டுசெலுவீர்களுங்களுயிர்வீடுவோமிதுவுமெய்மையா
மென்றசோதிடமறிந்துளீர்கெநமதுவாளியென்புரியவல்லமோ. (௪௦௯)

சித்திரம்பலபுதுக்குதேரின்மிசையேறிவந்தபுவனேந்திரன்
வித்தையும்மெனதுசைத்தலத்திலுறுவில்லின்வல்லபமுமொல்லையின்
முத்தலத்தவருமின்றுகாண்கவிதுமுற்றவிப்பனெனமுனிவுகொண்
டத்திரத்தொகைதொடுத்தனன்புவியிலம்புராசிபொழியரியென. (௪௧௦)

புயங்களிற்கணைகளாயிரங்கொடுபொருத்திநெற்றியிலோராயிரம்
வயங்கொளத்திருகியிவுள்சட்குமனவாறுசெய்துமணிரதம்மிசை
யியங்கும்வெள்ளிடைகளின்றிநீடுமுனையாசுகங்கள்பலவேவினான்
சயங்கொளக்கருதிவந்தெதிர்த்தபுவனேந்திரன்சிறிதுதளர்வுற. (௪௧௧)

தொட்டவெங்கணையொரைந்துகொண்டுசமர்துன்னுசிங்கன்விடுகணையொ
கட்டறுத்துதிரவெட்டியொட்டியொருகணைகள்போலக்குகதிர்பெற [ங்
மட்டிலாதன்விடுத்தீவன்கடவுவாவுதேர்ப்பரிகளின்றலை
வெட்டியச்சுநடுவெட்டிமெய்க்கவசம்வெட்டிவிற்குதையும்வெட்டினான். ()

தேரழிந்துபரியோடுமெய்க்கவசமுஞ்சினந்துசிலையுஞ்சிதைந்
தூரழிந்துகிரணங்குலைந்தகதிரோனையொத்தவசமாகியே
போரழிந்துசிதைவானசிங்கன்மறுதேர்புகுந்துசமர்பொருதுமுன்
பாரழிந்ததெனமாடுநின்றரதம்யாவையும்பொடிபடுத்தினான். (௪௧௩)

முப்புவிக்குமொருவர்க்குமென்வலிமுடிந்திடாமலிதுநாள்வரை
யிப்புவிக்குளுயர்வெற்றிபெற்றபுகழியாவுமேயெளிதினின்கையி
லொப்புவிக்குமுறைகண்டவிற்றொழிலின்வல்லைநல்லையினியுன்றலை
தப்புவிக்கும்வகையில்லையென்றுவிசைகொண்டுதண்டமதையேவினான். ( )

மாதிரத்தினொடுபூதரங்கணிலைமாறியந்தரமுமருகுறப்
பூதலத்தின்வலிமிக்குமீதில்வருபொழுதுகண்டுபுவனேந்திர
னேதுவிற்பகழியொன்றினிற்றுணிசெய்தாதிமற்றுமெழுபகழியாற்
பாதகப்பெரியசிங்கனைத்தலைதடிந்துநுண்பொடிபடுத்தினான். (ககரு)

அல்லினுக்குமதிபகலினுக்குமெழிலாதவன்மதனவடிவினான்
வில்லினுக்குமிகுவிசையன்மற்றுளவிதத்தினுக்குமுனைநாளுள
சொல்லினுக்குமுயர்வானவர்க்குமிகுதூய்மைவாய்ந்தபுவனேந்திரன்
புல்லினுக்குநிகராற்றசிங்கனெதிர்பொருதிவென்றதொருபுகழரோ. (ககசா)

சிங்கமன்னதொருசிங்கனைக்கொலைசெய்சிம்புளன்னபுவனேந்திர
னிங்குநின்றமரியற்றுகாலையயலேயெழுந்துபரிதேருட
னெங்கணுந்தடவிநின்றவீரர்முடியாவுமெற்றியொருநொடியினி
லங்குவந்துதமதிறைவனோடுதுணையாகினான்மதிவலாண்மையான். (ககஎ)

இருவரும்புரிவிலாண்மையுஞ்சமரிலெய்திநின்றவர்கடாழ்மையும்
பொருவருந்தமையனுயிரழிந்துபலபொருள்சிதைந்துளதொர்புதுமையு
மருவறுங்குணநிறைந்தமேருநிகர்சித்ரகேசரிமலர்க்கணா [வான்.
லொருவருங்கொளவொணாதுகொண்டமுனிவோடுநோக்கியிவையுரைசெய்

என்கண்முன்னெனதுதமையனைக்கொலைபுரிந்துளோரிவர்கடம்மைநான்
வன்கணானவடிவாளிகொண்டுயிரைவாங்கிவிந்தைநடனஞ்செய
புன்கணாய்நரிகளுடலையுண்டுகளமுழுவதுங்களிபொருந்தவே
பொன்கணாருமலர்தும்பைசூடிதலலாதுமாநகர்புகேனென. (கககூ)

வேறு.

மேருவரையைப்பொருவுதேரையவனுற்றுழிவிரைந்திடநடத்திமிர்கைப்
பாரவரிவிற்கடைகுனித்துநிமிராதெரிபரப்பிநொடியிற்பொடிபடப் [னி
போரொருகணப்பொழுதினுக்குண்முடிவிப்பனிதுபொன்னுலகினிற்புவியி
லாருமறிதற்கரிதெனப்பகழிவானின்மழையாகுமெனவீசினனரோ. (கஉ0)

விண்ணகமிருண்டுசுடரோனொளிமறைந்தமரர்விஞ்சையரியக்கர்முனிவர்
கண்ணகமயங்கிநிலையிற்றளரநற்பருவகாலமழைமாரியெனவே
யெண்ணரியகூர்முனைபொருந்துவிசிகங்கடிசையெங்கணுநெருங்கியினிமே
னண்ணுவதினுக்குமுலகங்களிலையென்றுசிலைநாரிதனிலும்படர்வுற. (கஉக)

அண்டமுகடும்வெடிபடக்கொடுமுடிக்கிரிகள்யாவுமுதிரக்கடல்களும்
மண்டலமுநின்றுசுழலக்கடையுகக்கனன்மருக்குறமருக்கமிலதோர்
சண்டனுடலும்பநடுநின்றலம்வரப்பெரியசர்ப்பதலைவற்சுடிகையும்
விண்டுமணிசிந்திதறமற்றுளபொருட்டொகையுமம்முறைவிளிந்துவிழவே.

சித்திரவரிச்சிலைவளைத்ததிரதத்தவர்செலுத்துவயிரக்கணைகளுந்
தத்துபரிவீரர்களெடுத்துதவுசொட்டைவளைசக்கரமுதற்படைகளும்
மத்தகமதக்கரிநெடுங்கைமுசலங்களுமறித்தொருகரங்கொடிவனே
வித்தினும்வினைத்தனன்முளைத்தனதலைத்தலைமிகுத்தகுருதிப்புனலினே.

தேரர்பொடியச்சகடநீறுபடையானைபரிசிந்துதுகளாகியுதிரப்
பாரவரிவிற்குதையொடிந்துமருமங்கிழிபடத்தலைதுணிந்துசிதறி
வீரர்படவெங்குருதியாறுகடலிற்றிரைமிகுந்தவனியெங்குநிறையப்
போர்முனைபுகுந்தபுவனேந்திரனெடும்படைகள்பொன்றியழிவுற்றனவரோ.

வெங்கரிபுரண்டுதலையற்றனகடும்பரிவிழுந்தனமுறிந்தவிரதஞ்
சங்கொலிபடங்கினதடாரிபடகந்துடிதகர்ந்தனசிலைக்கைவயவர்
செங்குருதிவாய்வழிசொரிந்துயிரடங்கினர்சிதைந்தணிபுதைந்தபலவுங்
கங்கநரிநாய்கழுதுவந்துணவருந்தினகவந்தநிறையுங்களமெலாம். (௧௨௫)

பாருலகெலாம்பகழிபாதலமெலாம்பகழிபாமமணிதாவுதிரைசூழ்
வாருதியெலாம்பகழியாமலையெலாம்பகழிவானவருகந்துகுடிவாழ்
தாருலகெலாம்பகழிமாறயன்விதித்திடுதராதலமெலாம்பகழியாய் [வே.
நேருறநிறைத்தனன்றிங்கொருவரிற்பெருமைநிகழ்த்துமுறையில்லையென

முப்புவனமுங்கடல்களுங்கிரிகளும்பகழிமூடியிருமென்னவமர
ரெப்புவியினிற்புகுதுமென்றஞரமுப்புரமெரித்திடமுனித்துநகைசெ
யப்பணிசடைக்கடவுளிற்பொருதிமேலமரடர்த்தபலவீரர்முடிகள்
குப்புறவிழத்திருகினன்புயலினைச்சினவுகோளரியெனும்முனிவினான். ()

மாதுணையாருகணையாலுடல்வருத்தியவன்மந்திரியையோர்கணையினான்
மோதியமருற்றவர்களைத்தலைநொறுக்கிவழிமூளைதசையென்புகுருதி
பூதலமெலாம்பரவிவான்முகடளாவியபொருப்பினுநிவர்ந்துகுவியக்
காதிமுனிவோடுபுவனேந்திரனையுஞ்சமர்கட்குநெறிகொண்டலசினான். ()

வேறு.

மேலடர்ந்துதம்படையைமாய்தல்செய்துகைவிலொடுமேவிவெஞ்சமம் பொருதியே, காலனும்பயங்கொள்சரநூறுதைந்துமிஞ்சிவருகாளைதிண்புயங் களின்வலி, சாலவுந்தெரிந்துமுனிவோடுசொல்விளைந்துநகைதான்புரிந்து யாவுதல்செயா, பாலனென்றெணும்பரிவினால்வயங்குறைந்ததிதுபாவமென் றயர்ந்துருகியே. (௧௨௯)

சிங்கமென்றநின்றமையனுங்கலங்கவென்றுசுவைதேடுகின்றதென்கை சரிவி, லிங்கிருந்ததுந்தெரிவை யெங்கண்முன்னெதிர்ந்துசமசெய்தவந்த தென்கொலெனவே, வங்கவன்றன்மெய்முழுவதுந்துரந்துநீள்குருதியாறு மண்டிடக்கதிர்செயும், புங்கமைம்பதொன்றுசிலவுந்துதைந்துவாயிதழ்பொரு ந்துசங்கமுந்தொனிசெயா. (௧௩௦)

வானவில்லினுங்கமலமானதங்கையின்குலவுமாசிலங்கணங்கொள்வரிவின்
மீனினங்கலந்தநடனீரைமொண்டெழுந்தகருமேகநின்றதிர்ந்துபொழியும்
மானவம்பினும்பகழிமாரிசிந்தவம்பரமும்மாதிரங்களுங்கிரிகளு
நானிலங்களுங்குலையநாகரும்பயந்துபலநாடிநொந்திடைந்தனரரோ. (௧௩௧)

பாகளாயிரங்கமாகளோடவண்டம்விண்டுவருபானுவுஞ்சுழன்றுதிரியத் [ம்
தேர்களாயிரங்களொருகோடிகொண்டடாந்துபலதேசமன்னரும்படைகளு
போர்களாயிரங்களவிதமாசவும்பகிர்ந்துபொருபூசலும்புரிந்துசிதைவுற்
றூர்களாயிரந்தலைகளோடுமார்பகங்கள்பொடியாகியாசையுமழிதர. (௧௬௨)

சூலம்வாள்கவண்கற்சிலைகோல்குடாரிதண்டுமழுதோமரங்கலப்பைசுரிகை
வேலபடைககலெங்கடிசைநாலுநின்றதிரந்துவிடுவீரரங்கமுந்துரங்கமுங்
தாலமெங்கணுந்தவிடுபோலுதிரந்தெழுந்தபொடிதாவியண்டமும்புதைபட
வாலமுண்டவனறன்றெறும்மாலுநின்றதொத்தமாசெயதானமைசசனென்னு
[மறிஞன். (௧௬௩)

வாவுபாடல்களுகடலையோடவுந்துபாகன்முடிவாடவுந்தடிந்திரதமேன
மேவுடால்குடங்கடவிடாயநொறுங்கவாளியுருமேறினுமதிர்ந்துவிசிராக
கேவலம்படாதுசமராடல்குஞ்சரங்கண்மிசைகேசரந்திரிந்ததெனமெய்ந்
நாவிலங்கிடாதபுவனேந்தரமாங்காககணிறைநாடியங்குநின்றிதுசெய்வான். ()

வேறு.

வைதாலென்னசெய்வினையினெருழில்கொள்வாளிததொகையாயிரமாயிரமா
யெய்தானமனதெயத்தினையாவலிகொண்டிமையோர்களுமிந்திரசாலமிவன்
செய்தானெனவெண்ணுமுனேவிசையனசிறுவன்றனையளறியெதிர்ந்தவெ
லாங், கொய்தானிவனோடமர்யார்புரியக்கூசாதெதிர்நிற்றல்குறித்திடுவார்.

தேருமபொடியாயினவாசிகளின்றிரளும்பொடியாயினவீரர்முடித்
தாரும்பொடியாயினதிண்புயமுந்தனுவுமபொடியாயினசிந்துமதக்
காருமபொடியாயினபோரடுவெங்களமுமபொடியாயினமற்றுமுள
பேருமபொடியாயினகண்டிவைதான்பேசும்படியோபொடிபெற்றவரார். ()

கடலொத்தனசோரிகளங்கதிலாகலமொத்தனமுத்தமணிககவிகை
திடமொத்தனசாமபுகள்கூம்புகணோர்திகழ்வுற்றனநீடுமணிககொடிகள்
படமொத்தனமற்றுளதேற்றியதோரபரமொத்தனசித்தமகிழ்ந்துதிரு
நடமொத்துநடித்தகவந்தமொடுநமனுந்துதிகொண்டுநலம்புகல. (௧௬௭)

கொடியற்றனதேர்கள்கடும்பரிகள்குடலற்றனமத்தகுலக்கரிக
ளடியற்றனகையொடுமெய்துணிவுற்றலமுற்றனசூடியவமபொன்மணி
முடியற்றனமுத்தநெடுங்குடைகண்முறிபட்டனவெண்கவரித்தொகையும
பொடிபட்டனபட்டழியாவுளவோபோர்பட்டநெடுங்களமும்புவியும. ()

வேறு.

ஆயிரங்கோடிசேமத்தேருகைத்தருகுசூழ்ந்த
நாயகரொழியமற்றைநாலவகைப்படையுமாண்டு
போயினதுணார்ந்துநெஞ்சமரவெனப்புழுங்கிச்செய்ய
வாயிதழ்துடிப்பவேர்வுபொடித்திடமலர்க்கண்சேப்ப. (௧௬௯)

கையறைந்துருமினக்கான்காவலர்முகங்கடோறு
நெய்யெரிநெருப்பிற்காந்திநோக்கினனீவிரெல்லா
மெய்தியிங்கென்செய்வித்தீர்மீண்டுநீர்நகருக்கேகிப்
பொய்யிடையவர்கட்கென்னைபுகலுவீர்போரின்வீரம். (௧௬௦)

செங்கனற்பொறிகள்சிந்தச்சித்ரகேசரியுமன்னோர்
தங்களைச்சுழிந்துசண்டைக்குற்றநீர்தனுவினோடு
ரிங்குவந்தவனைசெய்விற்போர்க்கெதிர்பொரமுடியாதானீ
ருங்களைத்துணைக்கொண்டுற்றேற்கென்னலமுறுவதம்மா. (௧௬௧)

ஒருவன்கையெடுத்தவில்லாலொருகணப்பொழுதினுள்ளே
பொருபடையனைத்தும்வெம்போர்க்களத்திடைப்பொன்றுவித்தான்
வருபடையினிமேற்கோடிவரினுங்கொல்விப்பானந்தோ
கருவினிலுயிருமாய்ப்பான்பகையெனக்கண்ணிற்காணில். (௧௬௨)

எத்தனைபேர்களுமிவன்கையின்வின்முன்னின்று
சத்திரம்விடுதற்கஞ்சித்தலைமயக்குற்றோமானோற்
சித்திரைமதிவெங்கோடைத்தினகரனென்னக்காந்துஞ்
சத்துருநமக்குமுன்னோஞ்சுபுதகைமைத்தாமோ. (௧௬௩)

நல்லதிங்கிவனைநானேநீவிர்கண்ணயர்ந்துநோக்கக்
கொல்லுவனென்னப்பொங்கிக்கொழுங்கடைப்புருவநெற்றிப்
புல்லிமேலேறவிற்கால்வளைதாப்புரிநாணேற்றிச்
சொல்லுமுன்சோனைமேகமழையெனச்சொரிந்தான்வாளி. (௧௬௪)

கொலைபடுவயிரவாளியொவ்வொருகோடிகொண்டு
சிலையினிற்கோத்துவாங்கித்தெறித்தனன்றேர்மேற்றூர்மேற்
றலையின்மேலடிவீழ்ந்தென்னத்தனித்தனிதகர்ந்துசோரி
மலைமுடியருவிபோலுஞ்சரிந்தனமருகுதோறும். (௧௬௫)

மத்தகம்பிளந்தயானைவாசிகாலறுந்ததேர்கள்
குத்துக்காலொடிந்தவீரர்குடலொடுதலைகள்சிந்திச்
செத்தனவுள்ளவெல்லாஞ்சிதைந்தனசேரமாண்டு
குத்திரமென்னவெய்போர்க்களமெலாங்குவிந்தகுப்பை. (௧௬௬)

அடுசரநூறுகொண்டுவிரிஞ்சனையலக்கண்செய்து
விடுசரமிரண்டுநூறுனவமணிதன்னைவென்று
படுசரமனந்தம்புத்திசிகாமணியுடலற்பாய்ச்சித்
தொடுசாஞ்சொரிந்துசூழ்ந்தபடையெலாஞ்சூறையிட்டான். (௧௬௭)

இன்னவாபுரியுமெல்லைசேமத்தேரூர்ந்தவீரர்
வன்னியும்வளியுஞ்சேர்ந்தவாறும்போலுடனுய்க்கூடிப்
பொன்னுடைமாக்கள்கைநூலசசமம்போற்பொகுத்துவாளி
சென்னியின்மார்பிற்றோளிற்சென்றிடச்சிந்தியார்த்தார். (௧௬௮)

பொற்புவனேந்த்ரனென்னும்போர்மதக்களிற்றையன்றி
மற்பொருதவர்களெல்லாமயங்கினரனேகர்மாண்டார்
கற்பொருதடந்தோட்சித்ரகேசரிகைவில்வாளி
யற்புதமென்னத்தேவராவலங்கொட்டியார்த்தார். (கசகூ)

நாமென்னவிற்போர்கற்றோநானிலந்தன்னின்மேனாட்
காமனும்புரமும்வேவக்கண்ணகைபரப்பினின்றோ
னிவனன்றிச்சொல்லற்கமைபடானென்றுநெஞ்சுட்
கோமகன்விரிஞ்சனாதியமைச்சரும்வியப்புக்கொண்டார். (கரு0)

முன்னவன்றன்னைக்கொன்றமுனிவினுமிரக்கங்கொண்டே
னுன்னையுஞ்சிறுவனென்றேயாதலாலுனதுவித்தை
தன்னையென்பாலிற்காட்டிவிட்டனையினிமேற்றப்பா
தென்னுடைவாளிவாய்க்குன்றலைக்குறியென்னச்சீறி. (கருக)

கைநொடிப்பளவிற்சித்ரகேசரிகைவிற்றன்னை
யெய்கணையொன்றால்வெட்டிப்பாகனையிவுளித்தேரை
நொய்யெனப்புடைத்துச்சூழ்ந்தநுவலருஞ்சேமத்தேரார்
மெய்யினுஞ்சரங்கண்மேனமேல்வித்தினான்மின்னின்வீசி. (கருஉ)

இற்றிலதென்னும்வேறோர்தேர்தெரிந்தேறிக்கையிற்
கொற்றவில்லொன்றுவாங்கிகொழுங்கடைப்புருவநெற்றி
முற்றிடமுனிந்துசித்ரகேசரிமுனைகொள்வாளி
புற்றராவென்னப்பொங்கிப்புரிவளைமுழக்கிச்சொல்வான். (கருங)

அரசரிற்கடைப்பட்டந்தோவறிவிழந்தெளிமைகொண்டித்
தரைமிசையுன்போலெந்தத்தலத்தினுமவாழ்ந்தோரில்லை
மருவுநட்பிகந்துவேசைமயக்குகந்தெந்தையான்முன்
புரியும்வஞ்சனைக்குணமாண்டபிணமெனப்புதுப்பேர்பூண்டாய். (கருச)

மந்திரியிரக்கமுற்றுமாறினின்றனக்குமாவி
தந்திடமனுடனாகிச்சாம்பிணவதனமோடும்
வந்தமர்க்குற்றாயெல்லாமறந்தனைபோலுமென்னே
சிந்தையிற்களிப்புகொண்டிங்கெனைவதைசெப்புகின்றாய். (கருரு)

உமையொருபாகன்வேதன்மான்முதலும்பரெல்லா
மமையநின்றன்னைக்காத்திங்காரமராற்றினாலுஞ்
சமையுமென்கைவில்லானின்றலைதடிந்தென்முன்மாண்ட
கமைபடாத்துக்கம்மின்னேகளிக்குவன்சரதங்கண்டாய். (கருசு)

உன்னையுங்கொன்றுன்பாலினுறவுபெற்றிருந்தநங்கை
தன்னையுங்கொடுபோய்த்தந்தைக்கருமணஞ்சமைக்கவன்றே
யென்னையுங்கொல்வாயானாலினியுள்ளோர்தம்மைக்கொல்லப்
பின்னையுமதையொன்றுண்டோயிதுமெய்மைபிழைபடாவால். ()

என்றசொற்றவன்றன்மெய்யிலேவிஞனேவால்வேய்ந்த
குன்றெனக்குழுமக்கோடிகோடிமேற்கொண்டுகொண்டு
நின்றுளதேரும்பாரும்நிமிர்ந்துருள்படியவானத்
தென்றெருளிகரப்பக்கண்டாங்கிமையவரிரியல்போக. (கடுஅ)

தோளிரண்டினுமிரண்டுசுடர்முனைப்பகழிபாய்ச்சி
நீள்இரும்புயத்திலாறுநெடுங்கணைநிறுத்திப்பின்னும்
வேளினைவென்றபொற்பின்வீரனவ்வனுதலிற்பட்டம்
வாளியொன்றாலேவெட்டிவலம்புரிமுழக்கஞ்செய்தான். (கடுகூ)

சற்றயர்ந்தவன்றன்விற்போர்தனக்குவப்புற்றவீரன்
கொற்றவிற்கொண்டுபாகன்குதிரைதேர்வரிவிலம்பு
முற்றினுந்தீர்த்தான்சித்ரகேசரிமுழுதுந்தன்கை
வெற்றியென்றெருதேரேறிவில்லொன்றுபிடுக்கின்வாங்கி. (கசo)

வாசவன்முருந்தன்வேதன்வருந்தியுந்தேடிக்காணு
வீசனுற்றந்தவேலிங்கிதனைநின்றலைமேலின்று
வீசுவன்வல்லையாகில்விலக்குகவென்னநெஞ்சாற்
பூசனைபுரிந்துவிட்டான்புற்றடைப்புயங்கம்போல்வான். (கசுக)

எழுந்ததுமழையுங்காற்றுமிடியுமின்னலுமாயெங்கும்
பொழிந்ததுபாம்பும்பேயும்பூதமும்பொலிவித்தின்மேற
மொழிந்தமூவுலகுந்தீர்த்துமாறுமூவுலகென்றுலு
மழிந்துறச்செய்யுமென்னவதிர்ந்தண்டமுகடளாவி. (கசுஉ)

வருதலுமுணர்ந்தபுத்திசிகாமணிமன்னன்பாத
மிருகையாற்பாவியீசனீந்தவேலிதனையின்னே
யொருகையாலொடித்துவிட்டோனுயிரையுமுடிப்பேனென்று
வருதிதந்தருள்கவென்றுன்னலதெனமதித்ததுநேர்ந்தான். (கசுஙு)

அஞ்செழுத்தமையவோதியாதியைம்முகனைப்போலு
நெஞ்செதிர்கொடுத்துநின்றானோர்பொரவந்தவேலு
மஞ்சினவலங்கொண்டேத்தியகன்றனவிமையோர்வாழ்த்தி
விஞ்சையிலிவனேயென்னவிளம்பினார்சொரிந்தார்மென்பூ. (கசுச)

சித்ரகேசரியும்புத்திசிகாமணிக்கஞ்சித்தீர்ந்த
சத்தியின்சத்திநோக்கித்தனிமைகொண்டிவனைநாமு
மெத்திறங்கொண்டுவெல்வதினியெனவெண்ணிப்பின்னும்
புத்தியிற்சலிப்பொன்றின்றிப்பொருவயப்புல்போலார்த்தே. (கசுடு)

வேன்முறிந்தனவென்றுள்கியாவரும்விளம்பாமுன்னந்
தேன்முரிந்தெழுஞ்சொனல்லார்திருக்கெனமுருக்கும்வாளி
வான்மறைந்திருளவிட்டான்வனப்புவனேந்த்ரனென்னுங்
கோனறிந்ததனைமாற்றிக்கூன்பிறைக்கணையொன்றேவி. (கசுசு)

வலவனைத்தடிந்தானேழுவடிச்சரம்பின்னுந்தொட்டுக்
குலமணிவயிரத்தேரினுருக்குலைத்தசுவந்தன்னைத்
தலையறுத்தாறுநான்குசரத்தினான்மார்பிற்பூட்டும்
விலைமணிக்கவசஞ்சிந்திவில்லையுந்துணிசெய்வித்தான். (௧௬௭)

வலவனும்பரியுந்தேருங்கவசமுமலர்க்கைதாங்குஞ்
சிலையுமற்றினிமேலென்னசெய்குவானென்றுசொல்லு
நிலைதலைக்கொண்டசித்ரகேசரிநெஞ்சமஞ்சான்
மலைதலைக்கொண்டுமற்றோர்மலைநிகர்வரிவில்வாங்கி. (௧௬௮)

அற்றதேர்த்தட்டினின்றுமணிபுவனேந்திரன்மெய்யி
லுற்றிடுமயிர்க்காறோறுஞ்சரநுழைத்துதிரப்போர்வை
பெற்றனனென்னச்சொல்லப்பெய்தனனிதற்குமுன்னங்
கற்றனவின்மையின்மையினியெனக்கையோயாதே. (௧௬௯)

பங்குனிமதியம்பூத்தபலாசநீள்வனம்போற்சோரி
யெங்கணுஞ்சொரியமேனியிருங்கடன்முகட்டிற்றோன்றுஞ்
செங்கதிரென்னநின்றதிருப்புவனேந்திரனென்னுஞ்
சிங்கமுமயங்கிநொய்திற்றேறிமேற்சினங்கொண்டார்த்தே. (௧௭௦)

வலக்கையுமிடதுகாலும்வடிக்கணையொன்றால்வாங்கி
யிலக்கமுந்தலைக்கென்றெண்ணியிருஞ்சரமமைக்குமேல்வைக்
கலக்கமில்லாதசித்ரகேசரிகைவாளேந்தி
நிலக்கணிற்குதித்தேயொற்றைக்கால்கொடுமலைபோனின்றே. (௧௭௧)

வீசினான்வீச்சுக்கோரோராயிரந்தலைகள்வீழ
வாசைகண்முழுதுங்குந்திக்குந்திமேலனிலந்தாக்கத்
தேசுறுகறங்குபோலத்திரிந்தெதிர்சூழாநின்ற
மூசுவாகினிகண்முற்றுமுடித்தனன்முடிவிலாமல். (௧௭௨)

உற்றதம்படைகண்முற்றுமுயிர்கவர்கூற்றம்போலுஞ்
செற்றிடக்கண்டுசிந்தைபொறாதுசெந்தழலிற்சீறி
யற்றகையொழியப்பின்னுமறாதகைவாளினோடு
மிற்றுகவரிவில்வாளியொன்றுகொண்டெய்துவீழ்த்தான். (௧௭௩)

மெய்த்துணையமரானான்முன்பிளிர்சிறகிழந்துநீண்ட
மைத்துணைக்குடுமிக்குன்றம்போலுருவயங்கித்தோன்றக்
கைத்துணையிழந்துவெம்போர்க்களமிசையொருகாலோடும்
பொய்த்துணைச்சிறுவனின்றுபோர்விளையாடல்செய்தான். (௧௭௪)

தோற்றான்சிலையுமற்றான்செங்கரமிரண்டுமற்றா
னாற்றகதிரைப்போலுமுலைவுற்றானினிமேலென்ன
போராற்றிடாதுசெய்யப்போதுவானென்னுமேல்வை
காரற்றிடாதவோசைகாட்டிவாய்கரிப்பதானான். (௧௭௫)

பல்லினூற்கரிக்கமாண்டபதாதிகள் யகழ்கோத்து
வில்லினெய்யத்தீர்ந்ததொடையினுமிக்கதென்றான்
மல்லினன் கருமங்கண்டவானவரொழியமற்றோர்
சொல்லினூற்காண்டுமீண்டுஞ்சொலுந்தகைத்துண்டோபாவம். (௪௭௬)

அடாதகொண்டறநீத்துள்ளோரவனியிலெவருமேசப்
படாதுபட்டழிவாரென்னும்பழமறைபொய்த்துறாம
லெடாதொருகாலுந்தீரப்புங்கமொனறெய்தாமுன்னோர்
தடாதபோர்வலியான்சித்ரகேசரிதரைமேற்சாய்ந்தான். (௪௭௭)

கரும்பனைமுண்டம்போலுங்கால்கரமற்றுவீழ்ந்த
பெருமபுயவலியான்றன்னோர்குழவியாப்பிறங்குபூமேற்
பொருங்களமம்மியாய்க்கொண்டிருண்டனன்பொருதும்வீரர்
மருங்கினிற்சாந்துபோலுமறைபட்டுமாய்ந்துவீழ. (௪௭௮)

மண்டுபோர்வலிமைகுன்றான்மானமுஞ்சிறிதுகுன்றான்
கொண்டதோர்முனிவுகுன்றானகொடுமையானறன்னைவிண்ணுடை
டண்டரேயெனினுங்கோறலரிதெனத்தேறாமும்
பண்டுசெய்தவமேவென்றதாமெனப்பரிவுகூர்ந்தான். (௪௭௯)

சாவரிதிவனுக்கென்னுஞ்சங்கையைத்தள்ளியின்னே
பூவரிதாக்கப்போனனூர்புகுத்துவனென்னச்சீறித்
தேவரினுமஞ்சிந்திதணிமலர்ச்செங்கைவிற்கொண்
டாவரியான்றுவிட்டானவன்சிரமற்றுமாண்டான். (௪௮௦)

எத்தனையடுபோராற்றிவலியினுக்கொன்றில்லாச்
சித்ரகேசரியுபட்டான்றேருங்காலெவர்கட்கேனும்
பத்திமெய்த்தவமலாலெவ்வெண்ணமுமபலியாவாமென்
றுத்தமருரைக்கணினறுமெவையும்வந்துறுவதாமோ. (௪௮௧)

வேறு.

சிங்கன்மாண்டதுஞ்சித்திரகேசரி
பங்கமுற்றுயிர்மாண்டதும்பார்த்தனர்
செங்கண்டியெழச்சிந்தைவருந்தியே
யங்கைவிற்குனித்தார்துணைத்தேரரோ. (௪௮௨)

ஆடன்மாபணித்தேர்களோராயிரங்
கோடிவீரர்நெடுஞ்சிலைகோட்டியே
வோடுவொளியுலப்பிலசிந்தினர்
நீடும்வானும்புவியும்நிரம்பவே. (௪௮௩)

நவ்வியொன்றினைநாய்க்குலம்வாய்க்கடைக்
கவ்வியீர்த்துறுங்காட்சிகடுப்பன
வொவ்வொருத்தருமோரொருகோடிகள்
செவ்விமன்னவன்மேற்சரஞ்சிந்தினர். (௪௮௪)

சங்குதாரிதடாரிதவின்முர
செங்கும்விம்மியிரைப்பநெடுங்கையின்
சிங்கசாபமுழங்கத்திசாதிசைப்
புங்கநீர்மழையென்னப்பொழிந்தனர். (கஅரு)

மீளியன்னவிறற்புவனேந்திரன்
றோளின்மேனுதன்மேற்றலைமேற்றுணைத்
தாளின்மேற்புயமேன்முனைதைத்திட
வாளிவீசினர்சோரிவழியவே. (கஅசு)

எய்யும்வில்லினரெத்தனையெத்தனை
வெய்யமாப்படைவீசினர்கூசிடா
தையனும்புன்முறுவல்செய்தங்கையிற்
பெய்யும்வில்வளைத்தான்பிறைபின்னிட. (கஅஎ)

வில்வளைத்ததலாதுவிசிகங்கள்
செல்விதத்தினைச்சென்றுசெறுநரைக்
கொல்விதத்தினைநோக்கிக்குறித்தொரு
சொல்விதத்தினுஞ்சொல்லத்தொலையுமோ. (கஅஅ)

தேர்முகங்களும்பாகருஞ்சிந்தின
கார்முகங்களுங்கைகளுமெய்களும்
போர்முகங்களும்வீழப்புண்ணீர்த்திரை
பார்முகம்பரந்தார்முகம்பற்றின. (கஅகூ)

குஞ்சரம்பலகோடிகுழுக்களாய்
வெஞ்சமம்பொரவஞ்சிவிலங்குமோ
சஞ்சலமறியாதுதருக்குறும்
மஞ்சலம்பரிவர்ந்தெழும்வாளரி. (ககூ0)

சென்றசென்றதிசைதொறும்வாளிகள்
கொன்றுகொன்றுகுவித்தனபோர்த்தொழிற்
கென்றுவந்தவர்முற்றுமிறந்தன
ரன்றுபோர்க்களமும்வெளியாயின. (ககூக)

வந்தமன்னவன்மக்களுமற்றுள
வெந்திறற்படைவீரருமாண்டபி
னந்திவானகமொத்ததடகளஞ்
சிந்துசோரித்திரைகடியங்கவே. (ககூஉ)

இன்றுபோர்புரிந்தாரிவர்நாளையு
நின்றுபோர்புரிவாரெனுநேயநெஞ்
சொன்றுமாசைகொண்டும்பர்களொல்லையி
லன்றுதத்தமுறைவிடமண்மினார். (ககூங)

இற்றைறவெஞ்செருவென்றநம்மேந்தன்மெய்
யுற்றதாபமொழிக்குதுமென்றருளி
செற்றுநல்லந்திமாலைசெறிதரக்
கொற்றவெங்கதிர்மேற்றிசைகூடினான். (ககூச)

ஆருமின்றியகன்றபின்னாண்டுவெம்
போருமின்றிப்புகழ்புவனேந்திரன்
சாருமாப்படைதன்னுடன்சார்தரத்
தேருடன்றிகழ்பாசறைசேர்ந்தனன். (ககூரு)

எட்டின்மூன்றொழிந்தெண்ணருமாகவம்
பட்டொழிந்தபரிபவநோக்கியே
சிட்டரிற்புகழ்புத்திசிகாமணி
நட்டமின்றியெழுப்பவுநாடினான். (ககூசு)

ஒன்னலார்படைநீக்கியுறும்படை
தன்னையெண்ணிநல்விஞ்சைசமைத்தனன்
முன்னையின்படியேமுளைத்தார்தெரிந்
தெந்நிலத்தவரும்வியப்பெய்தவே. (ககூஎ)

உக்கிரவீரனோடோங்குசமர்த்தனுந்
தக்கவீரருநால்வகைத்தானையும்
மிக்கிறந்துளவெம்படையோடுசேர்ந்
தொக்கமல்கியுறவுகொண்டாடினார். (ககூஅ)

மாண்டுமெய்சிதைவாகியவாகினி
மீண்டுவந்தமைகண்டவிரிஞ்சனு
மாண்டமைச்சனுக்காயரசன்கழல்
பூண்டுபூண்டுபொருங்களிப்பெய்தினான். (ககூகூ)

இன்னவாறிவரிங்கிருந்தாரிருண்
மன்னியெங்குமலிந்தகவந்தங்கள்
கன்னியும்பெரும்பூதமுங்காண்கவே
சொன்னநாடகமாடினதுள்ளியே. (உ௦௦)

மண்டுவெம்பிணக்குப்பைகள்வான்றொடும்
விண்டுவென்னவிளங்கினசோரிகள்
கொண்டல்பெய்மழைத்தாரைகொழுவின
வெண்டிசாமுகமும்பனிப்பெய்தவே. (உ௦க)

வேறு.

தனியிராவிருப்பதற்குளஞ்சகித்திடாத்
துனியுழந்தயர்வுறுந்தோகைமாரெலாம்
பனிவிழிப்புனன்முலைமுகட்டிற்பாய்தர
நனிநிசிகுழாங்குழாங்களங்கணண்ணினார். (உ௦உ)

வல்லிருடமதுசெங்கமலவாண்முகம்
புல்லியமதிநிலவகற்றப்புக்கினார்
சில்லரிச்சிலம்பொலிசிலம்பநொந்தவர்
சொல்லொலியாழினுஞ்சுவைதந்தோங்கவே. (உ0௩)

எய்கணையாலுயிரிழந்தநாயகர்
கைகளின்றலைகளின்குறைகள்கண்டவர்
மெய்களைத்துருவுவாருதிரவெள்ளமேற்
கொய்களேபரங்களின்குப்பைநாடியே. (உ0௪)

நாய்தினுங்கரங்களைநாடிப்பற்றியும்
பேய்தினுந்தலைகளைப்பறித்தும்பின்னுள
தூயுடலறிந்ததிற்றொருத்துத்தங்களின்
சேயர்கள்கணவர்களென்றுதேறுவார். (உ0௫)

அனிலங்கொண்டெரியமுன்முடிகளற்றதோர்
பனிவரையின்சிலமெய்கள்பார்த்தவர்
துனியினோடருங்குறிதுலங்கவாய்ந்துள
வனிதையருடன்செலவெண்ணிமாய்வரால். (உ0௬)

இச்சைநீங்காதநங்கணவரீன்றநம்
மெச்சமிங்கிதுவெனவெண்ணியாய்ந்துளம்
பச்சைமாமயிலெனப்பதைப்புமீக்கொளா
மச்சவேல்விழிமுகிழ்த்தாவிமாய்வரே. (உ0௭)

போரினிலாவிபோய்ச்சுவர்க்கம்புக்கிய
வீரர்கடமதுடற்பொறையைமின்னனார்
பாரினிற்றழுவினின்றேங்கப்பார்த்தவ
ரார்வமுற்றினியபுன்முறுவலாற்றுவார். (உ0௮)

மயிலினும்வனப்புவாய்ந்தெழுந்தமங்கையர்
குயிலினுமினியசொற்குழறியேங்கியே
யயிலினுங்கூர்விழியரும்பத்தீயினும்
வெயிலினும்படுநெயினுளம்வெதும்புவார். (உ0௯)

கணவரைப்புதல்வரைக்கருதியன்புசெய்
துணைவரைநண்பரைச்சூழ்ந்தகேளிரைப்
பிணமெனக்கண்டுகண்ணுளம்பெறாததுன்
பணவுறநின்றுநின்றவலமாயினார். (உ௧0)

ஆகவமடிந்ததுமடுங்களமெலாங்
கூகையுநரிகளுங்கவந்தக்கொள்ளையு
மேகமாய்நிறைந்ததுமிளஞ்சொன்மங்கைய
ராகநொந்தழிந்ததும்புகறற்காவதோ. (உ௧௧)

 (உகஉ)

ஆதவன்மேற்றிசையடையுமேல்வையு
மீதெலாங்கூடநின்றெய்தநோக்கியவ்
வேதனையுறுத்தமேல்விரைந்துகாலினுந்
தூதுவரோடினார்தோன்றல்பாலினே.

சித்திரகேசரி சிங்கன் வதைப்படலம் முற்றிற்று.

ஆகப்படலம் ௪0-க்குத் திருவிருத்தம்-உ௫க0.

விசையதரன் சோகப்படலம்.

பொன்வேண்டிப்புவிவேண்டிச்சுதர்கள்வேண்டிப்
பூவுலகிலலையாமற்போற்றுவோர்க்கிங்
கென்வேண்டினும்முதவியாயுளெல்லா (க)
மினியதவத்தருநெறிக்கணியையவாற்றிப்
பின்வேண்டிப்பதமிரண்டுமுதவிமாறாப்
பெரும்பதந்தந்துய்விக்குமெம்மான்றன்னை
முன்வேண்டிமறைதேடக்கூடனாடி
முளைத்தமுக்கட்பரஞ்சுடரைமுன்னிவாழ்வாம்.

வேறு. (உ)

பாரில்வீழ்ந்திருபதம்பணிந்துநின்றெதிர்
காரில்வீழ்ந்துறுமழைகான்றுகண்களி
னீரில்வீழ்ந்துடல்பணித்துயிர்ப்புநீடவே
போரில்வீழ்ந்தனவெலாம்புகறன்மேயினார். (௩)

கூறியகுமுதமூவைந்துகொள்கணக்
கேறியவாயிரங்கோடியிற்றுக
நூறினனுவல்புவனேந்த்ரனொய்யினு
மாறினோடிரண்டுளமுகூர்த்தமாகவே. (௪)

சிங்கனுஞ்சித்ரகேசரியுஞ்செய்சம
ரெங்கனாற்சொலவொணாதெனினுமாற்றலன்
செங்கைவிற்பகழியாற்சிதைவுற்றாருயிர்
பங்கமாயினர்பெரும்பாவம்பாவமே. (௫)

மாண்டனர்படையொடுமக்களீண்டுள
பூண்டருமுலையினார்புக்குநோக்கியே
காண்டருங்களமெலாங்கலந்தவன்பினான்
மீண்டிடாதுடன்மடிந்துயிர்விளிந்தனர்.

அடுசமாமுடிந்தபினவாகணமாபபடை
படுகளததுறநதமைநோககிபபணடுபோ
னடுவறிபவனபுகனுமவிஞசையா
னுடனவாககூடடிபபாசறைறககணுறறனா. (௬)

என றுதூதுவாசொலககேட்டவேந்தலும
நன றுனறெனனடாநீஙகணயெதிா
சென றுநோககாதுபொயசெபபலென றுகை
மினறிகழவாளினுறறலையைவீசினன (௭)

மாநினறவாமுகமமலாககணேகுமு
ஞேடினாபோாககளததுறறவாறெலா
நாடினாதிருமபினாநாமவேலிறைத
தாடலைசூடினாசாறறனமேயினா (௮)

ஐயநினனணைகொணடளிசகுமபாரினி
லுயவருனதுழையுணமையினறியே
வெயயதிலனைகொடுவிளிவதாயினும
பொயயுரையெடடுணைபுகலபபோகுமோ. (௯)

மாணடனாவாகினியோடுமைந்தரு
நீணடவானளவினுநிறைநதுகுனறினுங்
காணடகுஙகளபெலாஙகலநதவெமபிண
மாணடகாயநாஙகடோநதறையறபாலதோ. (௧௦)

கேட்டனனுருமொாலிகேட்டபாநதளின்
நாட்டநீாசொரிதாஙகுநகிமணமிசைக
கோடடமுறறுருயிாகுலையவீழநதனன்
தோட்டளிமுழஙகுதேனசொரஙகறறேன்றலே. (௧௧)

பாாததலைப்பூழிமெயபடியபபினனொரு
வாாததையுமியமபிலனமயககநீடினன
வோததுளமவெதுமபினனமெயநதுவாயினு
லாாததலைபபாவைபோலாறறலாயினன (௧௨)

வேறு

மருவாாபடையைபபொடியாககிமறறவரை
வெருவாவடாததரியவிணணவரைவெநகணடு
வருவாமெனபபுகன்றீாவ்வுரையைமாறுககி
யுருவானதுமொழிததீாமகவீருமககழகோ (௧௩)

பேதைமயலால்வருந்திபபேதுறறறிவழிநது
வேதையடைநதாணமாணிடாககுணறிகுபதாநா
தாதையெனவோதமியேனறனைநீததுத
தீதையடையாதபாலோகமதிறசெனறீரோ. (௧௪)

மாழைவடிக்கண்ணிளஞ்சொன் மானொடிவருடச்
சூழுமணியரங்கிற்றுயில்பஞ்சணைநீத்துப்
பாழில்கவந்தந்துணங்கைப்பறைதுவைப்பப்
பூழிநிலனிற்றுயிலப்போமோபுதல்வீர்காள். (கரு)

கால்கழுவக்கீழ்ப்புதைத்தகல்லன்றோவென்னருமைப்
பாலர்களைச்சூழுமபருவதங்கள்பற்றாதார்
கோல்களிறாற்கொன்றாரோமென்னுங்கொடியமொழி
காலனையேபோலென்னுளத்தைக்கவற்றினவால். (கசு)

பொருந்தாரெனுமசங்கள்பொன்றப்பொருதி
வருந்தாக்கொடுவரிகண்யானுந்திருமகவீ
ரருந்தாநமதானுக்கார்வம்பொருஞ்சமன்பால்
விருந்தாகினவாவென்வீரங்குறைவித்தே. (கஎ)

புவனேந்திரத்தரசைப்புத்திசிகாமணியை
நவமணியைமாதுலனைநாமப்படைசுமந்த
யெவனத்தலைவர்களையின்றுவென்றீரென்றுசொல்லுங்
கவனப்பெரும்புகழைக்காதாரக்கேட்கிலனே. (கஎ)

தோமாருங்கப்பணமுந்தோட்டிமுனையீட்டிகளு
நேமியும்வேலுந்தாங்கிநீவிர்விட்டதவ்வளவுஞ்
சேமங்குறைந்தனவாந்தெவ்வர்சிறுபகழி
நாமம்பெருகினவாமென்னேநம்மாண்மைநன்றால். (கஅ)

இன்னபுலம்பியிவனாற்றும்பேரோசை
பொன்னசருமந்தப்புரமும்புகுந்தலைப்பக்
கன்னிசுபலீலையுங்கேட்டுள்ளங்கவன்றோடி
மன்னனடிவீழ்ந்தழுதாண்மயில்போல்வாள். (க௯)

மண்ணீர்ந்தெழும்பூழிமெய்முற்றினுமறைப்பப்
பெண்ணீர்மைகுன்றாப்பெரும்புகழாள்பேதலிப்போ
டெண்ணீர்வறண்டுற்றுயிர்ப்பெறியாவோவியம்போற்
கண்ணீர்வெள்ளத்துட்கரைந்தாள்கனங்குறைந்தாள். (உ0)

பொய்ம்மலராச்செங்குமுதப்பூமலராம்வாயுடையாள்
கைம்மலராலெற்றியிருகண்மலரானீர்பெருக
மெய்ம்மலராகங்கனலில்வெந்துமெலியக்கருகி
நைம்மலராமென்னவிவையெண்ணிநவில்கிற்பாள். (உக)

நேற்றுப்பிறந்தசிறுபாலர்களைநேரலர்செய்
யேற்றச்சமருக்கெதிர்பொருதவென்றேவி
வேற்றுக்கொடியாள்விடவீரகதாபத்தாற்
றோற்றுக்கனங்குறைந்தாயெல்லே துயர்ப்படுதல். (உஉ)

கோதாகியகாமங்கொண்டாய்தலைமயங்கி
யாதாரமாகியநம்மைந்தர்தமையழித்தாய்
பேதாயறிவிழந்தாயென்பதுபெற்றாயினிமே
லேதாமோவென்பேரரசினிருக்கையுமே. (௨௩)

வீணாகமாற்சலியமேல்விளைத்தாய்நாளுமனங்
கோணாகம்போற்றொழிலுங்கொண்டாய்குறிக்கும்வசை
பூணாகப்பூண்டாய்புகழிற்றாய்போர்மாண்டா
யாணாகநீயிறந்திங்கென்னேபலனடைந்தாய். (௨௪)

ஆரமுலைமாதுமயலால்வருந்தியன்றுசிலை
மாரன்விடுசாயகங்கண்மார்பேற்றமன்னவனே
னேரலர்கள்சாயகமுநீயேற்பதன்றியென்னே
போரறியாப்புத்திரரைப்போயேற்கச்செய்ததுவே. (௨௫)

மைந்தரிறந்தாரெனுஞ்சொல்வாய்மையறிந்துன்னுடனே
வந்தழுதேனீயிறக்கினமாநிலத்திலாரோடே
நொந்தழுவேனிக்கொடுமைநோக்காதென்னாருயிரைச்
சிந்துவதேநன்றென்றுசிந்தித்தெழுந்தாளே. (௨௬)

ஆயங்கள்கைதாங்கியங்கவளுக்கேதமது
வாயங்கஞ்சோர்ந்திருகண்மாரிபொழியச்சிலநி
யாயங்கொடுதேற்றியாயிழையோடேமனைக்கண்
போயங்கிருப்பளவிற்கேட்டான்முதற்புதல்வன். (௨௭)

வெந்தீமெழுகென்னமெய்கரைந்தான்கட்கடைநீர்
சிந்தினன்மூச்செறிந்தான்றேம்பித்தன்றாதையுழை
வந்தானெடுமரம்போன்மண்வீழ்ந்தடியிறைஞ்சி
நொந்தான்பலபிதற்றிநோவாநுவல்கின்றான். (௨௮)

நானிருக்கநீயிருக்கநஞ்சேனைகள்பலவுந்
தானிருக்கச்சூழ்கிளைனோர்தாமிருக்கத்தம்பியரை
யூனிருக்காதாருயிரைவோட்டுசிலையோட்டாரை
வானிருக்கச்செய்யாதிடற்படுதன்மாட்சித்தோ. (௨௯)

வெம்பிவருந்தேல்வருந்தேல்வேந்தாவென்னாருயிராந்
தம்பியரைக்கொல்வித்தோர்தங்களையின்னேநொடியிற்
கும்புதகாக்கரங்கொள்கோதண்டங்கொண்டுவென்றே
தும்பிகுடையும்பசுந்தேன்றும்பையந்தார்சூடுவனால். (௩௦)

மாநகரும்பொன்மாமனையும்புலம்போசை
தானகலநாளையுதையத்திற்றனுவலத்தா
னானிகல்வெல்லாதிங்குறுவேனேனானாளும்
போனகமும்வேண்டேனடைவேன்புதூரகம். (௩௧)

மாதுபங்கனீந்ததுவும்மாலோனளித்ததுவும்
வேதனருளியதுமாயபலவெஞ்சரங்க (௩௨)
ளாதியதாய்வேண்டுபடையாவுங்கொண்டேனமரி
லேதிலர்க்கிங்கஞ்சுவனோவென்றுகுமென்வலமே.

சொல்லானின்னுள்ளத்துயரகலாயிவ்விருள்போ
யெல்லோனுதிக்குமளவிற்பெரியவெங்கரங்கொள் (௩௩)
வில்லாலெதிர்த்தவரைவெல்வேனப்போதுகண்ட
பல்லோராற்கேட்டிங்கடைவாய்பெரும்பயனே.

வேறு.

சொற்றவாசகங்கேட்டலுந்துரந்தரன்பகையன்
றிற்றதாமெனமனங்களித்தினியநன்மகனைப் (௩௪)
பொற்றடந்தவிசிருத்திமாபிறகுறப்புல்லி
முற்றுநோக்கினன்முகமலர்ந்திடினன்னமொழிவான்.

உம்பிமார்களுமொன்னலர்போர்க்குடைந்துயிர்போய்
வெம்பினார்களுமீண்டனவாமெனவிண்டாய் (௩௫)
தம்பிநின்னுரைநம்பினேன்சலனுந்தவிர்த்தேன்
றம்பையந்தொடையுனக்கரிதாகுமோகூடல்.

நானுநீயுமாய்நாளைநம்படையெலாநடத்திக
கோனகர்ப்புறம்வளைத்துநம்மீதமர்குறித்த (௩௬)
தானைமன்னர்கள்சிரங்களைத்தனித்தனிதடிந்து
போனபூவையைமீட்குதல்செயத்தகும்புகழே.

இந்தநன்னிசிநீங்கிநீயெய்துவையென்று
மைந்தனைச்செலப்பணித்தவன்மாதுமேற்காதற் (௩௭)
றந்தசிந்தையோடிருந்தனன்றனதுமாநகரம்
வந்தகேதமுற்றாகுலம்மூழ்கினவருந்தி.

அறத்தினெறிகடந்தறிவிழந்தருணிலைகுன்றிப்
புறத்தினுறுவசையெலாமெய்யணிபூணாய்த் (௩௮)
திறத்தினூறுநின்றாற்றியதோவலான்றனக்கிங்
கிறத்தலென்பதிலாதுநீளாயுளெய்துறுமோ.

தருமன்முன்னெடுத்துரைசெயததன்மையைக்கேளாக்
கருமமாப்பெருங்கேதமுங்கேட்டனனகாதா (௩௯)
னிருபனுக்கினிவெற்றியுநேருமாறெவனென்
றுருமிடித்தெனவாகுலநகரெலாமுற்ற.

கேடுகொண்டவற்சூழ்ந்திடுங்கேளினர்தமக்கும்
பாடுநீக்குதலினறெனுமபான்மையாற்பரிந்து (௪௦)
நீடுநன்னகர்வாயினிறைபுனற்கமலம்
வாடிநின்றதிக்கேதமீக்கூருதன்மானும்.

சங்குபேரிகைசச்சரியாகுளிதாளம்
பொங்குவேயிசைசிரம்பியபொன்னகர்வீதி
யெங்கணுஞ்சிறுகானரிநாய்கழுதிகலித்
தங்கள்ற்பிணங்கரிக்கும்வாயோசையேசார்ந்த. (சக)

மன்னவன்பெருங்கேதங்கொண்மனத்தினுள்வருந்தி
யின்னல்வாருதிமூழ்கினனென்பதோர்ந்திரவி
மன்னும்வாரியுளிருப்பதற்கஞ்சினவாபோற்
சொன்னகீழ்த்திசைதோன்றினன்வெயிற்கதிர்சுலவ. (சஉ)

விசையதரன் சோகப்படலம் முற்றிற்று.

ஆகப்படலம்-சக-க்குத் திருவிருத்தம்-உகஙஉ.

வீரசிங்கன் விசையதரன் வதைப்படலம்.

புன்னகம்பரித்தசடைப்பண்ணவனையிமையவரைப்பாவைபர்தி
தன்னகங்கொளவளித்ததற்பரனைமுப்புரமுன்றழலாய்வேவ
கன்னகந்தவர்கொளுமுக்கண்ணனைமதுரைநகர்கலந்துளானை
யென்னகந்தவறடையாதெந்நாளும்பன்மலர்கொண்டிறைஞ்சிவாழ்வாம். (க)

வேறு.

கதிர்வரக்கடனுற்றுறுகாவலன்வேறோர்
புதியபொன்மணிமண்டபத்தரியணைபுக்குத்
துதியினோர்பலர்சூழ்தரவிருந்துதுன்போட்டி
மதிதெளிந்துதுற்சனனைக்கூயீதுரைவகுப்பான். (உ)

நென்னலேகியநம்பெரும்புதல்வருநிறைந்த
மன்னர்தானையுமாற்றலர்வாளியான்மடிந்த
வின்னநீர்வுறமுதன்மகன்முதலினோரெல்லாஞ்
சொன்னவாகினியுடன்வரநான்பொரத்துணிந்தேன். (ந)

அரசவீதியோடணிநகர்வீதிகண்முற்றும்
முரசம்வாரணமுதுகின்மேற்றாக்கியேமுழக்க
வுரைசெய்வாயெனத்துற்சனனொல்லைவள்ளுவர்க்கூய்
விரைசெய்தாரவன்சொற்படிபுரிந்திடவிதித்தான். (ச)

தந்திவான்பிடர்தூக்கியேதடமணிமுரச
மந்தமாநகர்முழுவதும்வள்ளுவரறைந்தா
ரிந்தவாசகங்கேட்டலுமெழுகடற்றிரண்டு
சிந்துவெண்டிரையோதைகொண்டெழுந்தனசேனை. (ரு)

வேறு.

கிரிமுடித்திரளருவியிற்சொரிகிளர்மதச்சலதிகணிறைத்
தரியதிர்த்துதிர்நிலமிசைப்பொடிதலைபடுத்தணிநிழல்சுழித்
தெரிமுறச்செவிவளிவிழிக்கடையெரிவிரித்துறுமகரிகை
நெரிமருப்புறள்புகர்முகக்கரிநிரைமெங்கணுநிகரில. (௬)

எவனமுற்றழகொளிர்தரச்சுழியிலகுநற்பரிமளமிகுத்
தவனியிற்பொருவினசிரிப்பொலியரியினத்தொகைதிரிதரக்
கவனவிற்படுகுரநடைப்பொடிகடன்மடுப்பனநெடுநடை
பவனமெய்க்கதியடர்படுப்பனபல்நிறத்தனபரிகளே. (௭)

படமணித்தலையுரகருக்கிறைபயமிகுத்துடனெளிதரப்
புடவியிற்றிகிரிகள்செலத்துகள்பொழிவெயிற்கதிர்மறைபடுத்
தடவியிற்பருவதநடைத்தொழிலடைதலிற்குரகதமனைத்
திடுகொடிக்குலமுடிவிரித்துளவிரதமொய்த்தனவிடையிடை. (௮)

மனதழற்படவிடுமுயிர்ப்பொடுவெளியுறுத்தியுள்ளெழுபுகை
யனல்விழிக்கடைபொறியுகுத்தனவணிகரத்தயில்வெயிலினுந்
தனிநகைப்பலின்வெயில்விரிப்பனதழைமுகிற்குலமழையென
வினிமொழிச்சிறுசொலினுமிக்குளநிருதரொத்துளவிறைவரே. (௯)

நிரைமணிக்கதிர்புறம்விரித்தொளிர்நிழல்பரப்பியகுடைகள்வா
னெரிசுடர்க்கதிர்வெயின்மறைப்பனவிருள்விடுப்பனகொடிகள்வெண்
டிரைவரிக்கயலுகள்வனப்பல்திசைகளுக்கணிதுவசமொத்
தரிமணிக்குரலொலிமிகுத்துவிண்ணகலமுற்றினுமிகலுவ. (௧௦)

குடைமிகுத்தனமதியெனப்பலகொடிமிகுத்தனவிடையிடை
யடிமிகுத்தனமதகரித்திரள்வயமிகுத்தனவரசர்பொன்
முடிமிகுத்தனபடைமிகுத்தனமுரிதிரைக்கடல்வாள்படப்
பொடிமிகுத்தனவிவைநெருக்கலினிடிபடப்படுபுடவியே. (௧௧)

தனிநகர்ப்படையுரவினர்ப்படைசமரிலெய்த்தவர்தருபடை
வனநிறைப்படைபொருவிலைப்படைமனவலிக்கொடுபுறமிடா
வினியகப்படையெனவுரைத்துளவறுவகைப்படைகளுமெழுந்
தனில்மொத்தெரிமுழுதுமொதிடியயரமொய்த்தனவவணரோ. (௧௨)

துடியரற்றினவயிரொலித்தனசுரிவளைக்குழல்சகடைக
ளிடியிடித்தனகுறடுடற்றினவெதிரிசைத்தனபரலைவயிற்
கிடுகுகொட்டினகிளையிமிழ்த்தனகிணைதுவைத்தனபணைகுழீஇ
படிவெடித்தனமுடிதெரித்தனபனகனுக்கினபணிகளே. (௧௩)

விருதர்கைப்படைபுடைநெருக்கலின்விரிகனற்பொறிதிசைதிசை
பொருதிறற்கரிமுடிசுடப்பல்பொருள்பொடித்தடர்விபுதரூர்
தருதடக்கவடுகளிடைப்படுதளிர்நனைக்கனிகொடிகரிந்
துருதிடர்த்தவருடல்வெதுப்பினவுலகும்வானவருலகுமே. (௧௪)

இவ்வகைப்படுபடைபுறப்படுமளவினிற்பெரிதிறைவர்ச்
ளவ்வகைப்படைட்யொடுதடக்கொடுமுடிவிரிக்கதிரணியெழச்
செவ்வகைப்படுதவர்முனைக்கணைசெறிமழுக்கொழுகுலிசம்வாள்
வெவ்வகைப்படுவிடநடுக்குவதெனவெடுத்துடன்விரைவினர். (கரு)

வேறு.

வல்லிருட்குடைந்தசோதிவகைமணிக்குவைகளாகி
யல்லினைவீரசிங்கன்றுணைநயந்தடுவான்போலும்
புல்லினமிலைச்சிமெய்யிற்பொன்னணிபலவுமின்னக்
கல்லினுந்திரண்டதிண்டோளங்கதங்கவினச்சேர்த்து. (கசு)

மார்பினிற்கவசம்பூட்டிவைரவாளிடையின்மாட்டி
நேர்படவீரபட்டநெற்றியில்வீக்கிச்செம்பொன்
வார்கழலிறுக்கிவெட்சிமாலைவேய்ந்திருள்கால்சீக்குஞ்
சூரியருதயம்போலுஞ்சுடர்க்குழைகுழையிற்றாக்கி. (கஎ)

மழுக்கவண்டிகிரிசூலம்வாள்கதையுலக்கைநாஞ்சில்
கொழுக்கதிர்ட்டிதோட்டிகுடாரம்வேல்குந்தம்பாச
மிழுக்கடையாதமற்றைறழுழுக்கவுமிடையிற்சேர்த்து
விழிக்கடைசிவவாவானத்துருமினுமதிர்ச்சிவீங்க. (கஅ)

காத்தவர்வாங்கியாவமுதுகினிற்கட்டிமுன்முப்
புரத்தவர்மடியவாற்றும்புன்னகைப்புனிதன்போலும்
வரத்தவர்முனிவர்தேவர்மனுக்கண்மற்றனவாயுள்ள
தாத்தவாஞ்சத்திண்டேரேறினன்சங்கமார்ப்ப. (ககூ)

சதமகன்மீதுமுன்னந்தசமுகன்மகன்போர்க்குற்ற
விதமிவனெவன்கொலென்னவிண்ணவர்பண்ணையஞ்சக்
கதமிகுந்தெழுந்தான்காலக்கூற்றினும்வெம்மைகாட்டி
முதன்மகன்வீரர்க்குள்ளுமுதன்மகனனமுன்னோன். (உ0)

புனைமணியிடைக்கச்சார்த்துப்பொலிகழனரலவீக்கி
முனைபடுமயில்வாளேந்திமுழையரிக்குருளையென்ன
விசயமும்வெங்கொடாதவீரமும்விடையுங்கொண்ட
தனைநிகர்பொலம்பொற்றேராயிரங்கோடிசார. (உக)

விற்சனங்கோடிகோடிவெம்பரிகோடிகோடி
மற்சனங்கோடிகோடிமதமலைகோடிகோடி
தற்சனனுடனுய்க்கொண்டுதுணைவருங்கிளைஞரோடு
முற்செலநடந்தான்மேவந்தன்முதன்மகனோடுங்கூடி. (உஉ)

தருமனைத்தவிரவந்தமாநகர்தன்னிலுள்ள
பொருவயப்பரியுந்தேரும்பூட்கையும்பொருதிவெல்லு
நிருதரில்வீருதர்தாமுநிகரமிவ்வளவென்றில்லாத்
தருதிறற்கழற்கால்வீரர்கூட்டமுஞ்சமரைவேட்ட. (உங)

தும்பிவெம்பரித்தேர்காலாட்சுதன் புதற்றானைவெள்ளம்
வெம்பரவென்னவெட்சிமிலைந்துவெண்டிரைநீர்சிந்து
மிம்பருமிடம்பெறாவென் றனந்தனுமுலைவுற்றேங்கா
வம்பருநடுங்கச்சூழ்கொண்டெழுந்தமையுணர்ந்தான்வேந்தன். (உச)

மும்மையுமொருமையானமுதல்வனையம்மைக்கான
செம்மைகொண்முறையி னற்பூசைசெய்துநான்மறைகள்சொன்ன
விம்மையின்றானமீந்தங்கேற்றனவேற்றோர்க்கெல்லாந்
சும்மையாயத்திரட்டிமேன்மேற்சொரிந்தனன்சோனைதோற்க (உரு)

வேறு.

மைவரைக்கணுயிரங்கதிரிடியொடுமருவி
வையகத்தொருமுகத்துதித்தனவொளிமலியச்
செய்மறைக்கணோர்மகத்தழலமைத்ததுஞ்சேர்த்தே
யைமுகத்தவனளித்தபொற்கவசமுமணிந்தான். (உசு)

வரைவளைத்தனபாந்தளின்வாண்மருங்கிலகு
மரைவளைத்தவிர்பொன்மணிக்கச்சிறுகார்த்தே
நரைவளைத்தனமணித்தொகைநரப்புகிம்புரிநே
ருரைவளைத்தனவிலைமணியங்கதமொளிர. (உஎ)

உவணவான்சிறைவிரித்தலிலெழுங்குசேர்த்துலவாச்
சுவணவான்கலக்கொய்சகநிரைநிரைதுலக்கி
யெவணமானதிக்கோசிகமெனமுறுக்கிட்டே
வவணணிந்தனன்பிறையுறழ்பணிப்படமமைத்து. (உஅ)

உருமினும்மழைக்குலத்தினுமொலிகாந்தொலிக்குந்
தருமணித்தொகைநிரைநிரைமருங்கினிற்றலவப்
பொருகழற்புனைந்தரிக்குரல்மணியிற்பொருவும்
மருவுதெண்டிரைச்சிறுமணிச்சதங்கைதாண்மாட்டி. (உகூ)

முட்டியார்த்துமுன்கையினின்முற்றிவுந்தருவை
யட்டிவைத்தனவிரற்கணியணிந்தகேயூரந்தை
கட்டிநீள்புவிமுழுவதுந்தழுவுகட்செவிகொண்
டிட்டகங்கணமணிச்சுடர்குழைந்துமின்றெறிய. (௩௦)

திருப்பயோதரமின்னினுமபொன்னொளிசெய்யப்
பொருப்பிழிந்தனதாரையின்மார்புறல்புரள
வுருப்பமுற்றவெங்கதிர்ச்சுடரோட்டிவெண்ணிலவங்
கிருப்பமாண்டபொற்குண்டலக்குழையழகிலங்க. (௩௧)

அருக்கராயுளயாவருமடையுநாளுகுத்த
பெருக்கிளங்கதிர்தழைந்தனசுடர்மணிபிறங்குந்
திருக்கிளர்ந்தபைம்பொன்மணிமௌலிவானறிசையி
லிருக்கும்வல்லிருளுண்டுநீணாகிருளெடுப்ப. (௩௨)

மட்டில்வான்கவுட்டுளைகளிற்பெருமதம்வழங்கு
மட்டதிகுளவிபங்களின்முகங்களுக்கமையத்
தொட்ட மைத்தபைம்பொன்மணியோடையிற்றுலங்கும்
பட்டநெற்றியிற்கட்டினன்சுடரொளிபரப்ப. (௩௩)

புரயின்மன்னரைப்போர்தொறும்புகுந்துவென்கொண்ட
தருணமங்கவர்தந்ததந்தவத்தினுக்கீசர்
பெரிதளித்ததும்பேதையர் விழியளிபிரியாப்
பரியதும்பையுஞ்சூடினன்பண்ணவர்பதைப்ப. (௩௪)

வாணியுமவண்மகிழ்நனுமவாருண்மாருப்
பேணியள்ளனமுனிவரும்பேசிடத்தொலையா
நாணியாத்தவெஞ்சாபமுநறுந்தமிழ்த்தொடைநேர்
தூணியும்புறந்தூக்கினனுலகெலாந்துளங்க. (௩௫)

தருகதேரெனத்தந்தனன்றபனனுக்கருணன்
பொருவுநேரனச்சாரதிபுவனமுமவிசும்பு
மொருமுகங்கொடுவரினுமுசியிற்சாருகும்
மருமலர்ச்சிறுவிதழெனச்சுமக்குறும்வலிய. (௩௬)

உரவுநீர்க்கட லுண்டுவாயுமிழ்தரும்வடவை
விரவுவெங்கனல்வெம்மைகொண்ட னிலமும்வீயப்
பரவுகாற்கதியிந்திரன்பரிவலமபரித்த
புரவியாயிரமாயிரமுகந்தொறும்பூண்ட. (௩௭)

பாரிற்றாவுறும்பரவையிற்றாவுறும்படர்வான்
காரிற்றாவுறுங்கனலினுந்தாவுறுங்களையா
நேரிற்றாவினின்றடமாடல்செய்நேரார்
போரிற்றாவுறுமென்பதுமிவைகட்குப்புகழோ. (௩௮)

ஆழியோசையையுட்கரந்தட்டமாதிரஞ்சூழ்
சூழிமாலிபமணியுறள்கண்டைகடொகுத்த
பாழிமால்வரைக்குடுமியிற்பருதிமண்டலங்கள்
வாழிவித்தியவழுத்தியகாசினமலிந்த. (௩௯)

இந்திரன்பதியெமன்வருணன்பதியிவையோ
டந்தனீள்பதியுள்ளனபடைக்கலத்தமைதி
தந்தவான்சுமைகிடந்தனதபதியர்நெடுநாட்
சிந்தையார்வமுற்றியற்றியதவத்தொழில்சிறப்ப. ௪௦)

அன்னதேரினைவரன்முறையருச்சினையாற்றி
யின்னதானமென்றின்றியேயிரப்பவர்க்கெல்லாஞ்
சொன்னதானமேனகமுகின்மழையெனச்சொரிய
மன்னவனுவந்தேறினனுலகெலாமறுக. (௪௧)

எறிஞனிவையுணர்ந்துளவிமையவருலகும்
மாறுநின்றுளவையமுமற்றுள்ளபொருளுங் (௪௨)
கூறும்வாயுளம்வரளிமெய்யுயிர்நிலைகுழைந்து
தேறலாநெறியிழந்தனசிதைந்தனசிதறி.

ஆற்றன்மாற்றிலாதுலகெல்லாம்பெருவலியமைத்துக்
கூற்றின்வட்டணைகொண்டநங்குமரரைக்குமைத்த (௪௩)
மாற்றலன்னுயிர்வாங்குதலன்றெனின்மாழ்த
ரேற்றுமீதிரண்டொன்றுசெய்யாதமர்தொலையேன்.

என்றுகண்சிவந்தெரியுயிர்த்தெறிபுகைப்படலம்
நின்றதிக்கினும்பாரினும்விசும்பினுநிறையக் (௪௪)
கன்றிமேலெழுமுனிவனுன்கைவிதிர்த்துதடு
மென்றுதோள்புடைத்தார்த்தனனுருமினம்வெறிப்ப.

வேண்டுதேனினும்விருப்பமுற்றருஞ்சமம்விளைக்க
மாண்டசிந்தையான்வரிவளைவலம்புரிமுழங்கத் (௪௫)
தூண்டுதேரினிற்றேற்றினன்காலனுந்துளங்கப்
பூண்டவிற்சிறுநாணொலிதிசைதொறும்போக்கி.

தேவரோடுமுன்னசுரர்கள்செருச்செயுமுறையே
மூவகைப்படுமுலகமுமின்றொடுமுடிப்பான் (௪௬)
பாவகனிவனிலையினைப்பண்டுகண்டுள்ள
வேவருமெலிவடைந்தனர்பூசைமுன்னெலிபோல்:

உரகாச்சமுமுலகவர்பதைப்புமேலுற்ற
சுரர்களச்சமுந்தொன்முனிவர்மனத்துனியு (௪௭)
மிரவிநாண்மதிகோள்கணின்றேங்குறுமியல்பு
நரகருக்குமங்குளதெனச்சொல்லவுநணுகேம்.

பாரைநுங்கிமேலெழுந்துளபரவைநீர்படுக்குங்
காரைநுங்கிவானெழுந்துளவுருமினங்கலிப்ப (௪௮)
வோருநெஞ்சினருணர்வினுக்கப்புறமுயருஞ்
சாருங்கம்பலையாகவந்துறைதுறைதழுவ.

எழுந்தனனிவனெழுதன்முன்னெழுந்தவாகினியின்
கொழுந்துபேயடுசமர்க்களங்குழீஇயினவம்லை (௪௯)
யழிந்தகேதமின்றெடுப்பதற்கடைந்ததாமென்று
மொழிந்ததொற்றனர்முகத்தினுஞ்செவியினுமூழ்க.

களம்புகுந்தனன்முதன்மகனோடுமக்களமே
விளங்கதிர்க்குழைந்துராய்ப்படுத்தெறிவெயில்காந்து (௫0)
வளங்குறைந்தனமாண்டதன்மக்களைக்கண்டா
னுளந்தளர்ந்துகண்ணீருகுத்துயிர்புறம்புலைய.

சோகமுற்றுளநிருபனைச்சூழ்ந்தவாகினியை
யாகுலத்திடாமுதன் மகனறிந்தவர்த்தேற்றி
மோசரித்தெதிர்முனைபடுமூர்க்கையுண்டாக்கி
யாகவத்தினை மகாவியூகமிட்டணிந்தான். (௫௧)

நெற்றிபோன்மதகயங்களைநீண்டநன்வால்போ
லுற்றவாம்பரிக்குலங்களையுறுவலியுடல்போற்
பொற்றடமணித்தேர்களைப்பொருதிக்காற்பலத்தை
மற்றும்வாய்செவிகண்சிலாம்பெனவும்வகுத்தான். (௫௨)

சூரமிக்குடைத்துற்சனன்றனைத்துணையாக்கிப்
போரணிதலைதந்தையைப்பெலப்படநிறுத்தி
வீரசிங்கனும்விற்குழைத்தமாரும்வெருவப்
போர்வயப்படைதுண்டத்துநின்றனன்புலிபோல். (௫௩)

வேறு.

இவ்வகையணிந்தவனிகங்களொடுபோர்பொருதவெண்ணியவணிற்குமளவி
லவ்வகையுணர்ந்துழையர்வந்துபுகல்வாய்மொழியறிந்துபுவனேந்திரநிருபன்
செவ்வகைபராவுநியமங்கடவராதபடிசெய்கடனமுடித்திரவலர்க்
கெவ்வகையினும்மனதுவப்புறவெறுக்கைபணியாவுமழையென்னவுதவி. ()

செங்கனகமௌலியுதையங்கிளருபானுநிகர்சென்னியில்வனைந்துகுழையிற்
பைங்கனககுண்டலமிலங்குமதியம்பரவுபானிலவெறிப்பநுதலிற்
றிங்கள்பலதாரகையினங்கணடுவிற்பொலிவதென்றுதிகழ்பட்டமணியா
வங்கதமவிர்ந்தொளிர்தும்புகவசத்தினொளியாரவடமிட்டனனரோ. (௫௫)

வச்சிரமணிக்கடகமிட்டுபுடையிற்றொடர்மலர்த்தருவினைக்கொடிக்கண்மே
னச்சுறவளைத்தனையமுன்கையணிகோதையொடுநன்கைவிரல்கட்குமுறையி
ட், டிச்செருவிலக்குமொருகாலெனமணிக்கழலிலங்குகழலிற்கல்செயக்
கச்சிடையிறுக்கிமுனைவாளினொடுநீளொளிகவின்பரவுவெட்சிபுனையா. (௫௬)

தேவுநிறைபொற்சிமையமால்சிலைநிகர்த்தசிலைசீர்காமிலங்கவுரகர்
நாவுநிறைவற்பகழியாவமுதுகிற்புரளநாளொளிவிளக்குகதிரிற்
பூவுநிறைதற்ககல்மானவுருளைப்பெரியபூவிரதமீதுபடராப்
பாவுநிறைதற்புகழிஞனுமதனுக்கதிகபான்மைகொளமைச்சனுடனே. (௫௭)

முடியழகெறிக்கவிருகுழையழகெறிக்கநுதன்முழுதழகெறிக்கமலர்நே
ரடியழகெறிக்கமணியிதழழகெறிக்கவிழியருளழகெறிக்கநடுவின்
றுடியழகெறிக்கவிரிபுயமழகெறிக்கமொழிசொலுமழகெறிக்கவிவனே
படியழகினுக்குமுயர்மதனழகினுக்குமொருபடியழகுமிச்சமெனவே. (௫௮)

மகரிகைதரித்துமதியுறழ்கவர்மறுப்பிலகுமதசலதிமொய்த்துவரிநீர்
நிகர்திரைபரப்பஞ்சிருவிழியழலுகுப்பவணிநிழலொடுசுழித்துநிரையார்
புகர்முகவரற்பருமனடிபொருதடக்கையிருபுறமுறமணித்தசெவிகால் [ல். ()
புகர்திசையனுக்கவ்ருகரிநிகரமெய்த்தொகைசொல்பரிசெவிர்படித்ததுளவா

தேரினமெழுந்தபரியார்கலிமுதிர்ந்தகொடிசேணளவிகந்தகவிகைச்
சீரணியெழுந்தமதிநேரெனவிரிந்தவருதீரர்மெய்யுகந்தவணிகள்
காரிருள்விழுங்குசுதிரோணிலும்விளங்கவல்காலனுமடங்குபடைகள்
பேரணிநடந்தவிதமாரணியிடைதொகைபொருந்துறவிருந்துமொழிவார். ()

வேறு.

சதாகதிக்கிருமடங்குநேர்மெய்வலிசார்ந்த
பதாதியங்கடலுடன்வரவடுகளம்படராக்
கதாயுதன்றனக்கிளையவில்விசயனைக்கடுக்கு
முதாரமிக்கவன்மாதுலன்றனைவிழித்துரைப்பான். (௬௧)

மன்னன்மாண்டவர்க்கின்னுமப்படிவந்துநேரில்
வின்னநீக்குதலரிதவர்தங்களைவிலக்கிப்
பின்னுமற்றுளபடையொடுபெருஞ்சமர்தணப்புற்
றின்னனீங்கியென்விற்றொழில்காண்மின்களென்றான். (௬௨)

ஆண்டகைத்திருவருணினைந்தராசனுமன்னன்
மாண்டுளோர்களைவிலக்கியம்முறைநிற்பமனத்துண்
மூண்டதஞ்சினங்கிளம்பவாளரவெனமுனிவுற்
றூண்டுவெஞ்சிலைகுனித்துநாணெறிந்துநின்றார்த்தே. (௬௩)

தன்னின்மிக்குளதடம்புயச்சமர்த்தனைநோக்கா
முன்னர்நின்றுளார்யாவரிங்கிவர்தமைமொழிமி
னென்னவங்கவற்றொழுதுனக்கெதிரினிற்கலுழன்
றன்னுகேதனன்முதன்மகனெனச்சொன்னான். (௬௪)

நடுவண்வெண்குடைநிழற்றிடநறும்பயோததியிற்
படுதிரைக்கவரிகளிருபாலினும்பணிப்ப
வடுபுலிப்புயவலியினனின்னுயிரகற்றிக்
கடுவிழிக்கினல்கொடுத்துளகருதலனென்றான். (௬௫)

ஆயகாலையிலவனுமங்கிவர்களையறிவான்
மேயதூதரைவினவலுமென்கணங்குவியாத்
தூயமுப்புவனத்துளுந்தன்வலிமேதாலா
நாயகனிவனேபுவனேந்திரகாரான். (௬௬)

மன்னுமாநகர்புகுந்திருளெவரையுமயக்கிக்
கன்னியைக்கவர்ந்துளனமக்கருஞ்சனிகாலன்
பின்னைநின்றுளார்மாமனுதியரெனப்பிரித்துச்
சொன்னவாசகங்கேட்டனன்சுடுமதித்தோன்றல். (௬௭)

இருதிறத்துளபடைகளுமிவர்களுமிகலிப்
பொருதிறற்பெரும்பூசலுக்குமைவுறும்போழ்திற்
றருநிறைச்சுராதியர்முழுவதுந்தவா
தொருமுகப்படக்காண்பதற்கங்கண்வந்துற்றார். (௬௮)

அம்பரமபுகுந்திச்சமர்காண்பதற்கவாவுற்
றும்பர்கோன்முதலடைந்தமைதிருவுளத்துணர்ந்து
நம்பனம்பிகைக்கோதுவானங்கையிப்புவிமேல்
வெம்புபாரதச்சமரினுமொருசமர்விளைவால். (சுகூ)

திருவினோடுபைந்துழவணிமுகுந்தனுந்திகழ்நாப்
பொருவும்வாணியோடருமறைக்கிழவனும்புலவோர்
பரவுமிந்திரன்சசியொடும்படர்ந்தனரிருக்கை
யொருவிவானகமிடம்பெறுதமர்க்களமுவந்தே. (எ0)

அங்குபுக்குளகடவுளர்கூட்டமோடடைவுற்
றிங்குமீழ்குவோமெழுகவென்றியம்பலுமிறைவி
செங்கைகூப்பிநின்றுவந்தனள்சேவுகைத்தெழுந்தான்
நங்கையோடுதங்குமரர்களிருபுறநண்ண. (எக)

அமரர்புக்குழியமாருக்கிறைவனுமரியுங்
கமலயோனியுமிறைஞ்சினரெதிர்வரக்களியா
விமலன்வானவர்முழுவதும்பரவவீற்றிருந்தான்
சமரபூமியுங்கைலையொத்தணிநலஞ்சார. (எஉ)

வேறு.

இருவருக்குளும்விருதெடுத்தவரிருவிழிக்கடைநெறித்தாப்
பொருதலுற்றனரிவர்களுக்கிணைபுவனமுற்றினுமிலையெனப்
பருவலிக்கரவிரலுதைத்தெழுபகழிவித்தினர்வடவனற்
பெருநெருப்பெனமுதிர்சினப்படைபிறவும்விட்டனருரறியே. (எங)

சிலைவழங்கினவொலிமிகுந்தனதிசைநடந்தனசெவிடுபட்
டலைவுகொண்டனகலகமிஞ்சினவுலகும்வானவருலகுநீ
ணிலைகலங்கினமலைபெருங்கடனிரையழிந்தனபொருளெலாந்
தலைமயங்கினவிருதிறத்துளும்வலிமிகுந்துளதலைவரே. (எச)

வாளிதூவினர்வேல்களேவினர்மாரதாதியர்சமரதர்
மீளிபோல்பவர்யானைதேர்பரிவீடவுஞ்சமராடினர்
தோளினுந்தடமார்பினும்பலதொளைசெயச்சொரிசோரிகள்
நீளினுங்கியெழுந்தவானதிவெள்ளநீடலைசரியவே. (எரு)

முற்குறித்ததிர்பணைதடாரிமுழக்கினர்சமர்முனைதொறும்
விற்குறித்திருவிழியழற்பொறிமிளிரவாளிகள்வீசினர்
கற்குறித்துயர்தோளறுந்திருகையறுந்துளசென்னிபோய்ச்
சொற்குறித்துளநாவினோடுயிர்சோரமெய்துகளாயினர். (எசு)

ஒன்றினொன்றமராடிவெஞ்சரமோடொருத்தர்கரத்தினொன்
மின்றிரண்டொளிர்மழையெனச்சரமதிரவீசவினிடியினிற்
குன்றிடிந்தனதேருடைந்தனகுஞ்சரங்கள்குழுக்களாய்ப்
பொன்றவாசிகண்மண்டுபூழிபுரண்டழிந்ததுபுதுமையே. (எஎ

கரியுருண்டனசிரமுடைந்தனகவுணொரிந்தன்கலினவெம்
பரியுருண்டனகொடியொடிந்தனபடைமுரிந்தனகழுதுநாய்
நரிதிரண்டனதசையயின்றனநனிதுடற்குருதிகள்பெருந்
திரைபுரண்டனவிருதிறத்தினுமடுதொழிற்புரிசெருவினே. (௭௮)

வேறு.

இச்சமர்ப்பெரும்படைபொருமசௌத்தெதிரின்
மச்சயூகமிட்டணிமுனைதாங்கிவான்முடிமேற்
செச்சைசூடியமுதன்மகன்செருத்தொழில்புரிவா
னச்சிவாம்பரித்தடமணித்தேர்செலநடத்தி. (௭௯)

பாரவெஞ்சிலைவளைத்தனன்சுடர்முனைப்பகழி
தேரர்கந்துகம்மதமலைசெருப்புரிகதிர்வாள்
வீரர்கால்கரமேல்சிதைத்தழற்சிகைவிரிந்து
நாரநீள்கடல்சுவற்றிவான்கங்கையைநக்க. (௮௦)

விண்ணினும்பெருந்திசையினும்விரிதிரைக்கடல்சூழ்
மண்ணினும்பினுமற்றுளமுற்றினும்வாளி
யெண்ணினும்மொழியாவகையுருத்துநின்றெய்தான்
கண்ணினுங்குறியாதுபோர்க்களமெலாங்கலந்தே (௮௧)

கூளியுங்கடுங்கூற்றமுநிகர்முனைக்கொடுங்கண்
மீளியும்மிவன்விறற்படுவெஞ்சிலைவிடுக்கும்
வாளியுஞ்சரிதிரிவனமண்டமர்க்களமேற்
றூளியுங்கனற்றூமமுந்திசாதிசைசூழ. (௮௨)

மைவிழுந்தனமதமலைமழைவிழுந்தன்ன
கைவிழுந்தனவிழுந்தனதேர்மலைகடுப்ப
மெய்விழுந்தனபனையினும்விரிகனற்பிழம்பில்
நெய்விழுந்தனசுடுசரம்விழுந்தொறுநிலமேல். (௮௩)

வரைபுரண்டனபுரண்டனமதகரிவாரித்
திரைபுரண்டனபுரண்டனசெழும்பரியுதிரங்
கரைபுரண்டனபுரண்டனகதிர்மணிக்கவிகை
நுரைபுரண்டனபுரண்டனநுனிப்பெருங்கவரி. (௮௪)

வந்தவெம்படைமுழுவதும்வலிகுலைந்துதிரஞ்
சிந்தியோடிடவிரிஞ்சன்மேற்பாகன்மேற்றேர்மே
லைந்துபத்துநூறாயிரம்வாளிகொண்டலசிச்
சிந்தைதேம்புறநவமணிமீதினுந்தெரித்தான். (௮௫)

கண்டகன்சமர்க்கடுமையைக்கடைக்கணித்திருத்து
மண்டுதீயெனவிரிஞ்சனுந்தடஞ்சிலைவாங்கித்
திண்டிறற்றடந்தேரினைமுனைபடத்திருகித்
துண்டவெண்பிறையடுசரமழையெனச்சொரிந்தான். (௮௬)

தெண்டிரைக்கடன் முழுவதுமடுத்துவாள்செருமிக்
கொண்டல்சாய்த்தனபெருமழைக்கொல்லைபோல்வாளி
யண்டரண்டமுமவனியுமரவுவாழுலகுங்
கண்டமற்றுளபொருள்களுநிறைத்தனன்கலங்க. (அஎ)

தேரழிந்தனபரிக்குலஞ்சிதைந்தனசிலைக்கை
வீரர்வீழ்ந்தனவெண்மணிக்கவிகையுங்கொடியுஞ்
சேரநுண்பொடியாயினதிசைதொறுங்கடல்போற்
சோரிபொங்கினகழுதுகளுங்கினதுயன்றி. (அஅ)

தோளுமார்பமுங்கவசமுந்தொடையும்வாண்முடியுந்
தாளுந்தாளிடுகழல்களுந்தனித்தனிசிதறிக்
கோளுநாள்களுங்குவிந்தனகுவிந்தனகளமேன்
மூளைவெண்ணுரைபரப்பினவுதிரநீர்மொய்ப்ப. (அகூ)

கரந்தைசூடியகண்ணுதற்புன்னகைக்கனலா
லிருந்தையானமுப்புரத்தவர்தம்மினுமெதிர்ந்தோர்
வரந்தைகொண்டுயிரற்றுமாண்டுலர்ந்தனரம்மா
சிரந்துணிந்தணியங்கமுமங்கமுஞ்சிதைய. (கூ0)

கூற்றுங்காலனுந்தூதனுமொருநெறிக்கூடித்
தோற்றினாலன்னசுடர்க்கணைமூன்றுவிற்றொடுத்து
மாற்றலன்மகனெற்றியினிறுத்தினன்மயங்கி
யாற்றலேற்றிடக்குறைந்துளஞ்சிறிதுநின்றயர்ந்தான். (கூக)

வீரசிங்கனுந்தெளிந்தெதிர்விரிஞ்சனைவியவாப்
பாரசங்களிற்பாய்புலியுறழ்வனபகழி
நேரசங்கமாய்த்தொடுத்தவனிரைமணித்தேரைப்
போரசங்குறத்தகர்த்துநுண்பொடிபடப்போக்கி. (கூஉ)

பட்டமுமணிக்கவசமும்பருவலிச்சிலையும்
வெட்டிமற்றவன்படையையும்வீற்றுவீற்றாக்கி
மட்டிலாப்புகழ்ச்சிங்கனும்விரிஞ்சர்கோன்மனது
சுட்டிடச்சிலதீமொழிசுடச்சுடச்சொன்னான். (கூங)

மாழையின்வடுக்கண்மகவடைந்தபூமன்ன
வேழையென்னினும்வரன்முறைவரன்வரித்தீவார்
பாழினன்மகட்கதுகெடுத்தாவுழைபழக்கிட்
டாழிவந்தர்களிருவருக்கொருவிலையணங்காய். (கூச)

உனதுமாமகடன்னைவைத்தவ்வசையுணரா
மனதினுட்களிபொருந்தினாய்மானமுமறந்தாய்
கனத்தையெவ்வழிபெறுவதற்குறுதிகைக்கொண்டா
யினதெனத்தெரியாவறிவுடைமையுமிழந்தாய். (கூரு)

இன்றுவில்வளைத்தெனதுகைச்சரங்களாலுன்னைக்
கொன்றதாற்பயனென்னைகொல்லெனமனங்குழைந்தேன்
நன்றுநீங்கவென்றம்பியர்நமன்பதிநண்ண
வென்றவீரனைவென்றிடச்சமைத்தனன்விரதம். (௯௬)

ஆதலாலுனைக்கொன்றிடிலென்சினமடங்காப்
பேதைபோதியென்றுரைத்தனன்விரிஞ்சனும்பிழைத்தோ
மீதல்லாலினிவேறெவைபுரிகுவமென்னாப்
பாதைநேடினானேடினனவமணிபாரத்தான். (௯௭)

வேலின்மன்னவன்வீரமுஞ்சூரமும்விடுத்துக்
காலிமேய்ப்பவர்தம்மினுங்காலினாற்கவடி
கோலினானினியாவராற்பெருஞ்சமர்குறைத்துச்
சாலிநாமங்கொண்டாடுவாரெனமனஞ்சலியா. (௯௮)

தனதுமன்னனையெதிர்புகுந்தோடுதறவிர்த்து
மனதுதேறெனத்தேரினிலேற்றிநின்மதியுங்
கனதையும்பொருவீரமுநொய்யினிற்கழீஇய
வுனதுகாற்கதிகாட்டுதனியாயமோவுரையாய். (௯௯)

தடந்திரைக்கடல்சூழ்புவிதனக்குமோராசா
யுடம்பெடுப்பதிற்பெரிதவர்க்குறுதியும்வலியு
மிடம்படத்துணிந்தியற்றுவதன்றெனிலிறத்தல்
நடந்திடச்செயாதுடற்சுமைசுமப்பதென்னலமே. (௧00)

அரசர்கேவலமுரைப்பதுமன்றியேயரச
புரசையானையிற்கவரிகாலிருபுறம்புரட்ட
வரிசைமாநகர்புகுந்துலாவரும்பொழுதுன்னை
விரைசெய்தார்குழன்மடவியரென்சொலார்வெட்கம். (௧0௧)

துச்சம்வேய்ந்துளதூலமுந்தூலத்திற்றுனிசெ
யச்சமும்பழியலதுயிர்க்கருந்துணையாமோ
கொச்சைவேந்தருஞ்செருவெனிற்குறிக்கொளும்வாகை
யிச்சைதாங்குவரவைமறந்தென்செய்தாயேந்தால். (௧0௨)

இன்னவாபுகன்றரசனைவேறுதேரேற்றித்
தன்னெடும்பரித்தேரொடுந்தானைகளோடும்
பொன்வடிம்புளபுங்கம்வான்புயலெனப்பொழிந்து
கன்னல்வேளனநவமணிபோர்முனைகலந்தான். (௧0௩)

வேறு.

மற்கொண்டெழுஞ்சிங்கனுக்குள்ளதளவீரர்மகிபாலர்மேல்
விற்கொண்டெழும்புங்கநிரைவானகந்தந்தமீன்போலவே
முற்கொண்டெழுந்தங்குபுகவெய்துதொகுமங்கமுகமாறிடப்
பிற்கொண்டெழுங்கொண்டலுந்தாழமழையம்புபெய்தானரோ. (௧0௪)

வாள்கொண்டடர்த்துச்சினந்தேறிமுற்பட்டவயமன்னனைத்
தோள்கண்டமுடல்துண்டுபடவெய்துபலகோடிதுணைவீரரைத்
தாள்கொண்டுறத்தள்ளிமகுடங்குலைத்துத்தளம்பாறிடக்
கோள்கொண்டிடச்சாடினனண்டர்துதிகொண்டுகொண்டாடவே. ()

வில்லுந்துணிந்தேவுமேவுந்துணிந்தூற்றமிடல்வீரர்தம்
பல்லுந்துணிந்தோடவோடாதநாவும்பகிர்ந்தோடிடக்
கொல்லுங்கொடுங்கூற்றினுக்கஞ்சுமுயிரன்னகுலைவெய்தியே
வெல்லுந்திறத்தாண்மையுஞ்சிந்திமெய்ந்நொந்துவெந்தந்ததே. (௧0௬)

தன்சேனைவெந்தந்ததும்பின்னவன்சேனைதடையின்றியே
பொன்சாபகஞ்சிந்தியெதிர்நின்றதுங்கண்டுபுலர்வுகியுரங்
கொன்சாதகங்கொண்டெனுஞ்சிந்தையலமந்தெழுஞ்சிங்கனும்
புன்சாதகம்பாறநேர்நின்றுதுணிவோடுபுகல்வானரோ. (௧0௭)

முன்னாண்மையிற்றக்கநிலைபெற்றசயவீரமுடிமன்னனு
மென்னாண்மையிற்றப்பியுயிர்கொண்டுவெந்நிட்டதெதிர்கண்டுநின்
றன்னாண்மையிற்றேற்றிடத்தேற்றமற்றுத்தவிக்கின்றனன்
பின்னாண்மையென்பெற்றடைந்தாயடாவிங்குபெருமூடனே. (௧0௮)

மன்னானவன்வெங்கொடுத்தோடிடச்செய்தவலியென்னுயின்
நின்னாணிணைக்கிற்றுணிந்திங்குபொருதற்குநேர்வாய்கொலோ
வென்னாநெடுஞ்சித்திரக்கைத்தடஞ்சாபமெதிர்கொண்டுகார்
மின்னாழிமணக்கோடிமுனையாசுகங்கொண்டுமேல்வீசினன். (௧0௯)

சதுரங்கம்விரிசிந்துநடுவிந்தநிகர்நின்றதனிவையமோ
டெதிரங்குமுனைகொண்டுகடைகின்றசினவாலியிவனொடுமனக்
கதிரங்கெழுஞ்சாயலின்சாபங்கோடிகைதூற்றினா
னுதிரங்கள்களமெங்கணும்பொங்கவமராடுமொருசிங்கனே. (௧௧0)

விரிஞ்சாதிபன்றன்னையுங்கொன்றிடாதிங்குவெம்போகவே
பொருஞ்சாயகஞ்சிந்துநானுன்னையுங்கொல்லல்புகழாகுமோ
பெருஞ்சாதகஞ்செய்யுமென்றம்பியர்க்கொன்றபிழைதீரவே
வருஞ்சாதகங்காணுமுறைநின்றதென்கையின்வடிவாளியே. (௧௧௧)

வேறு.

வருவதுதெரிவார்தேர்ச்சிமதியுளார்வந்துந்தேறாப்
பொருவதுபொருளாக்கொண்டபுலனிலிபொருதிநின்னைப்
பருவலித்தோளுந்தாளுந்தலையும்பாழ்படுத்துச்சூழ்ந்த
செருவலிதீர்வனென்னாச்சிலையினாண்டெரித்தசிங்கன். (௧௧௨)

மொழிவனகடந்துவெம்மைமுதிர்வனபெருகநின்று
பொழிவனவிடியுமின்னும்புதுமழைக்குலமுந்தீயு
மழிவனபடைகண்முற்றுமசைவனமாமுமண்ணுங்
கழிவனபுவனமென்னுங்கடுங்கணைதூறுவிட்டே. (௧௧௩)

வலவனைத்தடிந்துபூட்டும்வயக்குரகதங்கள்சிந்திக்
குலமணிக்கொடிஞ்சிப்பொற்றேர்க்குறுந்துகள்படக்கொண்டுதிச்
சிலையினாணறுத்துப்பின்னுஞ்செய்யனமுழுதுஞ்செய்து
கலகம்மேற்கொண்டானந்தோவமணிகலக்கங்கொண்டான். (ககச)

முன்னவனோடுமாறுமானமென்றன்னிவேறு
பின்னையுந்தெரியானாகிப்பிடித்திடவிழிக்குங்கள்வன்
றன்னையொத்தலமந்தங்குதவிப்பதையுணர்ந்தான்சிங்க
னென்னடாபோரவோவல்லாதோடவோவெண்ணினாய். (ககரு)

உற்றதுபகர்தியென்னவூமர்போலுரையொன்றின்றி
மற்றவனிற்றநோக்கிவளெயிறிலங்கநக்குச்
செற்றமுமானந்தானுந்தீர்ந்தனைநினைகோறல்
குற்றநீயாடறகஞ்சலேகனகக்கூறுமேல்லை. (ககசா)

வடவையின்மருகித்தேரும்வரிவில்லுங்கணையுங்கொண்டு
படபடத்தெதிர்த்ததும்மேதுஞ்சமர்த்தனைப்பகழியொன்றாற்
புடவியிற்றுகழ்பட்டோடப்பாசகனுன்பொருதவீரர்
கடகரிபரிதோதூசிமுனையினைத்தூசிகண்டான். (ககஎ)

வந்தனவந்தவெல்லாம்வரவர்வுயிரைவாங்கி
யந்தகனவிருந்துகொள்ளவருங்களியாடல்கொண்டான்
கந்தனைப்போலன்றுவிளங்கினானவன்விற்கல்வி
யெந்தநாளினுந்தேர்ந்தோதற்கிசையுமோவிசையாவம்மா. (ககஅ)

காமனைக்கடிந்தநெற்றிக்கண்ணுதல்கடுப்பச்செம்பொன்
மாமணித்தேரினின்றவனப்புவனேந்த்ரவீரன்
சேமவிற்கொண்டவீரசிங்கனையுவந்துநோக்கிப்
பூமியில்வீரமென்னும்பூணிவனெனப்பூரித்தான். (ககக)

மாமனையவனுக்கானமந்திரிதனைவெங்கண்டு
சேமவில்லோடுநின்றசிங்கனைச்சிங்கந்தன்னைப்
பூமியின்மாய்க்குமெண்காற்புள்ளினிற்புக்குமாய்ப்பேன்
றீமனப்படையொன்றாலேயென்பதோர்சீற்றமானான். (கஉ௦)

ஏறியவெகுளிவெந்தீயிருவிழிக்கடையினின்று
மாறொருவடவையென்னவாகினிக்கடலின்மண்டச்
சீறிநின்றவ்விற்கோட்டித்தெரித்தனன்சிறுநாணோசை
பீறினதிசைகண்முற்றும்பிளந்ததுபிரமனண்டம். (கஉக)

ஊழியினுவரியன்றியுலகினைப்புறத்துச்சூழ்ந்த
வாழியினோதைக்கூற்றுவலம்புரியங்கைவாங்கிப்
பாழிவெந்தடந்தோள்வீரன்பவளவாய்வைத்தலோடு
மேழிருபுவனத்துள்ளுஞ்செவிடுதந்தெழுந்தவோதை. (கஉஉ)

மச்சவியூகஞ்சிந்திமதமலையிரதம்பாய்மா
செச்சைவாள்வயவர்முற்றுஞ்சிதைந்தனசிந்தைதேம்பி
முச்சகமுற்றுமச்சமுற்றனவினிமேலிந்த்ரன்
வச்சிரப்பகழிகோக்கிலென்படாவையமன்றே. (௧௱௩)

எதிர்வருசிங்கன்சிங்ககேதனத்திறைவன்கொண்ட
முதிர்சினக்குறிப்பும்வீரமூர்க்கமுமூரிவின்றொ
ணதிர்தருகலிப்புநிற்குநிலைமையுமடங்கநோக்கிக்
கதிர்நகையரப்பிச்சீற்றக்கனலொடுகளிப்புஞ்சேர. (௧௱௪)

காற்றிடிமழையைமுற்றுங்காந்ததுவயிற்றிற்காலக்
கூற்றினுங்கருமங்கோடிகொண்டதுதிங்கள்வெண்மை
மாற்றருந்தவளச்சோதிவலம்புரிகையின்வாங்கி
யேற்றொலிமுழக்கஞ்செய்தானிவைக்கெவையேற்றஞ்சொல்வாம். ()

ஓடியவிரிஞ்சனோடற்குருதுகுப்புற்றுமண்மேல்
வாடினனமைச்சனன்னமன்னினுன்மற்றுளோர்தங்
கேடினியென்னையானுங்கிளத்துவனமரர்செங்கண்
மூடினரென்றபோதுசேடனுமொழியப்போமோ. (௧௱௬)

இருவருஞ்சரிதான்வீரமிவர்கடம்மனத்தினுள்ள
கருமமும்விநயப்பாடுங்கைத்தொழில்வலியுங்காணற்
கருமையேயெனனவைந்துதருவையும்வெறுமையாக்கி
மருமலர்கொள்ளைகொண்டுசொரிந்தனர்வானோரெல்லாம். (௧௱௭)

இன்னதோரமைதிகொண்டாங்கிருவருஞ்சமர்நின்றேற்று
ரன்னதோரமைதியுள்ளத்தாகுலமகற்றித்தத்த
மன்னவர்க்குதவிகொண்டுவாகினிமுழுதுஞ்சூழ்ந்த
பின்னினிநடந்ததன்மைதெரிந்தவாபேசுகிற்பாம். (௧௱௮)

வேறு.

இருவருஞ்சமர்பொருதினரெதிரெதிரிவர்களின்சிலையுமிழ்தருசுடுசர
வருடமிஞ்சினகடல்புவிதிசைநிலமருகியஞ்சினசுரர்முனிவரர்முத
லொருவருந்தலைநிமிர்கிலர்மனதயருறவருந்தினரொளிநிறைகதிருடல்
பொருபெருஞ்சுடரவிதரவிருள்கரைபொலிவமைநததுபுகலவுமுளதரோ. ()

கரதலங்களில்வளைபடுசிலைவிடுகணைகளின்குலமுமிழ்தருவெரிபொறி
சிரதலஞ்சிகைகருகினநிமிரபுகைதிபிரமுஞ்சலமழிவனபொருபரி
யிரதமங்குலியளவினுமுருளைகளிடிபடும்படியுரசின்முறைமுறை
தரதலம்பொடிபடமுடுகினர்சமர்சரிசொலும்படிபொருதினர்விருத்ரே. ()

அருவிபம்பியமலைநிகர்மதமலையபரமுந்தறிபடவிடுகடனுதி
பெருகவம்பரமிசைநடமிடுபரிபிரளையம்புரள்திரைமுறிவதுபுரை
பொருவுமரகதமணிமுடியுடைபடுபுழுதிமண்டினசமரிடுகளவெளி
மருவிவந்தெதிரதிரதர்முதலியர்மறலியின்றிசையணுகினர்மலியவே. (௧௱௧௧)

கொடிநொறுங்கின நிலவொளியிமிழ்தருகுடைநொறுங்கின கடகரிவிடுபரி
யடிநொறுங்கின பருமணிரதநிரையணிநொறுங்கினவயவர்களணிமணி [ளை
முடிநொறுங்கின சிலைகணைகொழுமழுமுனைநொறுங்கின பணைகிடுகொலிவ
துடிநொறுங்கின படிகளினிடிபடுதுகளெனொறுங்கின சமரடுகளமரோ. (௧௩௨)

தமரகங்கிடுகொலிவளைபணைகுழல்சகடைதம்புருதவின் மணிமுரசதிர்
பமரமங்குழலிணை மருவினபடைபவுரிதந்தமர்முடுகினரெதிரெதி
ரமரர்ங்கதமுறவசுரரைமுனமடையவென்றிடுபடுகளமதைநிகர்
குமரருங்குமரியர்களுநிறைபுவிகுணலைகொண்டதுகுதுகுலமுழுகவே. ()

சமரமுஞ்சரிபொருதினரிவரடுதநுவினுண்கடையிடிபடவலிகொடு
பமரமிஞ்சியகழுகிறகண்கணைபகைவர்தங்குழுமுழுவதுமுடறலை
சமர்படும்படிவிடுமளவினிலுயிர்கருகியங்கழுளுருகிடநமனுல
கமர்தல்கொண்டனர்பரிசரிரதநிரையழிவுகொண்டடுகளமிசையலையவே. ()

திருகிவெஞ்சமரிடுபடைகொடுவருதிரண்மிகுந்துறுமதிரதர்முதலியர்
கருகிவெஞ்சிலைதொடுகணைமுறிபடுகதியிழந்தனருடல்பிரியுயிர்நிலை
யுருகியந்தகனுலகுறைமகளிர்களொளிநலம்பெறவிவர்தசைகுருதிகள்
பருகியந்தரமுழுதினுமுலவினபறவையின்குலமுறைதருபரிசரோ. (௧௩௫)

துணைவரும்பரிரதமுறுபவருடறுணிபடும்படுகளமிசைகுருதிக
ளணைவரும்புனலெனநுரைகவரிகளலைநெடுங்கரையெறிவனவிடையிடை
யிணைவருங்குலவரைநிகர்மதமலையிழுபடுங்கயலுறழசிகடல்விடு
புணைவருங்கதிருமிழ்குடைபலபலபொருள்விளங்கினபொலிவனபுதுமையே

வேறு.

இருவருமிரண்டுகையிலெடுத்தவில்லிரண்டுகொண்டு
வருபடையிரண்டுபாலுமடிந்திடவாளிதூர்த்துக்
குருதிநீராற்றின்கொள்ளைவெள்ளத்துட்குளித்துநின்றே
பொருவிளையாடல்கண்டார்போர்வயப்புலிபோலம்மா. (௧௩௭)

இன்னவாநின்றுசெங்கையின்னவாசிலைகள்வாங்கி
யின்னவாசரங்கள்விட்டாங்கின்னவாவடுபோராட
லின்னவாவெனத்தேராநின்றிமையவரேக்கங்கொண்டா
லின்னவாவெவர்நாவாற்பின்னறையலாந்தகைமைத்தம்மா. (௧௩௮)

இப்புவிதனிலேயன்னோரிகலிநின்றடுபோராற்று
மப்படைதலினாலன்றேவப்படைவேலையென்றே
செப்பினாருவரிதன்னைசெப்புதற்கருமையாய
முப்புவனத்துமுள்ளமூதறிவுடையோரின்னும். (௧௩௯)

சுடுகணைநூறுவாங்கிச்சொலும்புவனேந்த்ரமன்னன்
கொடுவரியனையசிங்கனுடன்முற்றுங்குளிக்கவெய்தான்
படுதிரையுதிரவெள்ளம்பெளவமேய்ந்துயர்ந்தவானந்
தொடுமலைமுடியின்மேகஞ்சொரிந்தனசொரியமேன்மேல். (௧௪0)

சிங்கனுமதனைச்சற்றுஞ்சிந்தையுட்கருதான்வில்லின்
புங்கநூறைந்துகொண்டுபுகழ்ப்புவனேந்த்ரவீர
னங்கநொந்தலசச்சிந்தியவனுதனடுவின்மூன்று
துங்கவான்சரங்களோட்டித்துளங்கிடத்துள்ளியார்த்தான். (கசக)

நெற்றியிற்குதைமட்டேறிநெடும்புனற்குருதிபொங்க
வுற்றமூவாளியாலுமுணர்ச்சியற்றரிதிற்றேறி
மற்றவன்கையில்வாங்கும்வடிச்சரமொன்றுகொண்டே
செற்றமுற்றெதிர்த்தசிங்கன்றிருநுதறிறக்கவெய்தான். (கசஉ)

அடுசாநுதலிற்கட்டும்பட்டத்துக்காணிகொண்டாங்
கிடுதரந்தரைந்தாற்போலுமிருத்தலுமெய்த்தசிந்தை
நொடியினிற்றேறிநின்றுநுவலுவானடடாநின்கைக்
கடுமையும்விநயப்பாடுங்களறுதற்கருமையந்தோ. (கசங)

உன்னையுங்கொல்வித்துன்பானுரிமைகொண்டிருந்தமாது
தன்னையுமழைத்துவந்ததாலியற்றவளாற்சொல்ல
முன்னையுங்கேட்டேனெம்பிமார்களைமுனைந்துகொன்ற
பின்னையுங்கேட்டேனின்றுங்கண்டனனினதுபெற்றி. (கசச)

ஆயபோர்வல்லைநின்னையடுசமர்தனிலேவென்றுன்
ஞையகிதனையுமெந்தைநன்மணம்புணர்த்தற்கான
மேயநன்முகூர்த்தங்கேட்டுமேவினேனினியானுன்னைக்
காய்கணைக்கிரைகொடாதுமீள்வனோசிங்கன்காண்டி. (கசரு)

எம்பியர்தம்மைக்கொன்றவேழைநின்றலையையின்றெ
னம்பொடுமும்பர்செல்லவனுப்புவனென்றுவாளி
வெம்பரவென்னவாங்கிமின்னெனவிடுத்தான்கோடி
தம்பமற்றுலகமெல்லாந்தலைதடுமாறவன்றே. (கசசு)

ஐந்துநாலைந்துகூறுமையைந்துநாலறுத்துவாளி
சிந்தினன்றுரோணஞ்சங்காரித்தமாவர்த்தஞ்சூழ
வந்துபெய்சோனைமேகமழையெனமாடுநின்ற
தந்திவாம்பரிதேர்காலாடரையின்மேன்மடிந்துசாய. (கசஎ)

இடும்புகள்கற்றதல்லாலெதார்த்தமேகல்லாவுங்கள்
குடும்பமுந்திருவுமின்றுகொள்ளைகொண்டெரிவாயிட்டு
நெடும்பழிதீர்வான்வந்தேனென்முன்னேநின்றிங்கென்னைக்
கடுஞ்சினம்புகன்றாய்கொல்லுங்கரிமுன்கல்லெறிவார்போலும். (கசஅ)

உங்களிலுமதுதந்தையன்றியேயும்பிமாரைப்
பங்கமேபடுத்தற்கெண்ணேனவர்களும்வாளாபட்டா
ரங்கதுபோலநீயும்படுவதற்கமைந்துநின்று
யிங்கெதுநான்சொன்னாலுங்கேட்குமாறெண்ணுவாயோ? (கசகூ)

படுகளம்புக்கபோர்தொப்பாரியார்பயிலுகிற்பா
ரடுவதுநீத்துநின்றோடாவதுபேசியாண்மை
விடுவதுவிழுமமாமோர்வெனச்சொலாவெகுளிவீங்கா
நடுவதுகுறித்துநின்றதிருப்புவனேந்த்ரநாதன். (௧௫௦)

இமையொடுமிமைகொட்டாமுனிருபதுபகழிகொண்டு
சிமயமந்திரத்தையொத்ததேர்பரிபாகுசிந்திச்
சமையும்பொற்கவசம்வீழ்த்தித்தனிநுதற்பட்டம்வெட்டி
யமையும்வில்லறுத்துக்காலாளாக்கினனவனிமீதே. (௧௫௧)

கவசம்போய்ப்பட்டமற்றுக்கைவிலுந்துணிந்துகட்டுந்
துவசம்போய்ப்பரியும்பாகுஞ்சுடர்மணித்தேருந்தூளா
யவசமுற்றெழுந்தானென்றுங்கறியுமொன்றுதேரேறி
நவசரம்பலபெற்றன்னசாபமும்நனிதுவாங்கி. (௧௫௨)

கொக்கரித்தடற்சிம்மேற்றின்குருளையொத்துருத்துநான்கு
பக்கமும்விசும்பும்பாரும்பருதிவெஞ்சுடரையோட்டி
மிக்கிருட்படலமூடமின்னொளிவாளிகோளின்
சுக்கிரனுதையகாலப்புயலெனச்சொரிந்தான்மேன்மேல். (௧௫௩)

அண்டமுந்திசையும்பாருமடைத்தவான்சரக்கூடத்தைக்
கண்டகாம்போசவேந்தன்கைநொடிப்பளவிலெல்லாம்
பண்டைபோல்வெளிசெய்தந்தப்படிசெய்துசிங்கன்மீதுந்
துண்டவெண்பிறைவாயம்புசொரிந்தனனுதிரஞ்சோர. (௧௫௪)

உதிரமுங்கருத்தான்வானத்துருமையும்வெருவல்கொள்வா
னெதிர்படத்திருகிநின்றுங்கெழிற்புவனேந்த்ரன்பொற்றேர்க்
குதிரைகட்காறுநூறுகொடுஞ்சரமுடலிற்பூட்டிக்
கதிவிதந்தளரச்செய்தான்கையிற்சிஞ்சினிக்காலார்ப்ப. (௧௫௫)

கரைபுரண்டெழுந்தவெள்ளக்கடலெனச்சரங்கள்கொண்டு
விரைசெறிமாமனன்றன்மந்திரிமிடைந்ததானை
தரையினினிலைபெறாமற்றனித்தனிமயங்கிச்சாய
வரைமுறைமுழங்குசீயத்துழனியும்வாயாற்செய்தான். (௧௫௬)

வீரரிற்சிறந்தவீரசிங்கனும்வீரங்குன்றா
மாரனேர்திருக்காம்போசவள்ளலைச்சுழிந்துநோக்கிப்
பாரினிலெவராலுமாருயிர்படுக்கும்பாணம்
நேர்விடுக்கின்றேன்வல்லைகாவெனநிகழ்த்தினொய்தில். (௧௫௭)

அயன்படைவாங்கிப்பூசையாவனமுறைமைமுற்றும்
பயன்படமனத்தாலூட்டிவிட்டனன்பருவகாலப்
புயன்மடுத்தூற்றுநீரின்புங்கநீரெங்குஞ்சாயத்து
வியன்படவிபுதருரும்விதிர்ப்புறத்துவனிவிம்ம. (௧௫௮)

சரோருகநாமவாளிசதுர்முகத்தெட்டுத்திக்கும்
விரோசனம்பரப்பிநேரில்விரவலும்விரைவிலந்தச்
சரோசனந்தழுவும்வெய்யசரம்விடுத்தெய்யாநின்றே
னரோசனங்கொள்ளவீழ்த்தானமரராவலந்தார்ப்ப. (௧௫௯)

அச்சரமழித்தானென்னுமவச்ரங்கொண்டசிங்கன்
றச்சரம்மனமேபன்னுட்டவத்தினிற்சமைத்துச்செய்த
முச்சரஞ்சோமசூரியாக்கினிமுதுபேர்கொண்ட
வச்சிரச்சரங்கொண்டெய்தான்மறலியும்மனநின்றஞ்ச. (௧௬0)

மூவகையுலகமுற்றுமொருவகைமுடிப்பானுற்ற
மூவகைமூர்த்திபோலுமுதிர்குணமூன்றுங்காட்டி
மூவகைச்சுடர்செய்வாளிமூன்றுவந்திடக்கண்டந்த
மூவகைச்சரங்கொண்டாறுகூறுறமுறித்துவீழ்த்தான். (௧௬௧)

தனுவலங்கொண்டுமூன்றுசரங்களுந்தவிடாயோட
மனுவலங்கொண்டவிச்சைமன்புயத்தாறுநூறு
பினும்வலங்கொண்டுவிட்டான்பிறைமுகவயிரவாளி
முனும்வலங்கொண்டார்யாவரிவன்வலங்கொண்டார்முற்றும். (௧௬௨)

வீழியின்கனியையன்றிப்பலாசமென்பூவுமேய
பாழிவன்புயங்கண்முற்றும்பசும்புலாற்குருதிபாய
வாழிசூழுலகம்போற்றுமடற்புவனேந்த்ரனெஞ்சஞ்
சூழிமாலிபம்வேற்குற்றுண்டசைதலிற்றுளக்கமுற்றான். (௧௬௩)

நின்றனன்சிலையையூன்றிநெடுமணித்தேரிற்சற்றே
சென்றபின்மயக்கந்தீரச்சிங்கனைவியந்துநோக்கி
நன்றுநன்றுனதுவிற்போர்நானினியுன்னையின்னே
கொன்றுகளத்திலக்ரபூசையுங்கொள்வனென்றே. (௧௬௪)

குகரம்விட்டெழுவெஞ்சீயக்குருளையேறனையவீரர்
நிகரமும்நெடியதேரினிரைவயப்பரியும்பாகுந்
தகரமும்மதவெண்கோட்டுத்தந்தியுஞ்சிந்திச்சேனைப்
பகரமுங்குலையப்பாணம்பரப்பிமேற்பதகன்றன்னை. (௧௬௫)

காருடத்துவசம்வீழ்த்திக்கந்துகஞ்சிந்திப்பாகுந்
தேருடனழியமோதிச்சிஞ்சினியறுந்துவில்லும்
பாருடன்பாகமாகப்பாணமொன்பதுகொண்டெய்து
தாருடன்றலையையொற்றைக்கணையினுற்றடிந்தானன்றே. (௧௬௬)

வீரகேசரியும்வீந்தானென்பதையறிந்தவிண்ணோர்
சூராரிலிவன்நிக்கானென்றுவலங்கொட்டித்துள்ளித்
தாருவின்கனிகாய்மென்பூதளிர்நனைகொள்ளைகொண்டு
நீருடன்சொரிந்துதூசுவீசினார்நேயநேர்ந்தே. (௧௬௭)

ஐம்முகன்றாதிதேவர்தங்களையருளானோக்கிச்
செய்யநங்கருணையாலுற்பவித்தாளசிறுவரின்னோர்
பையுளிற்படாருற்றபோழ்தினும்பண்புதோலா
ரெய்வலிச்சிங்கன்றன்னைக்கொன்றதோவிவர்க்குமேன்மை. (௧௬௮)

காயமேசிறியரேனுங்கருத்தினிற்பெரியரன்றே
நேயமூவுலகும்வெற்றிநிரம்புவர்நெறியினீசர்
மாயமேபுணர்த்தபோதும்வலிநிலைமன்னவற்றே
வாயமேயுணரில்யார்க்குமறமலாலறமற்றுண்டோ. (௧௬௯)

ஆக்குவதெதுவென்றானல்லறத்தினையாக்கவேண்டும்
நீக்குவதெதுவென்றாற்கோபத்தினைநீக்கவேண்டும்
நோக்குவதெதுவென்றான்மெய்ஞ்ஞானமேநோக்கவேண்டுங்
காக்குவதெதுவென்றானல்வாய்மையேகாக்கவேண்டும். (௧௭௦)

கருவகங்காரம்வென்றுகருணையோர்வடிவமான
மருவகன்பிருகுவென்னுமாமுனிதன்னைத்தங்கள்
குருவெனக்கொண்டுவேண்டும்பொருளெலாங்கொள்ளைகொண்டார்
பெருவலியுடையமைந்தரெதுசெயப்பெறார்களம்மா. (௧௭௧)

தந்தையும்மைந்தன்பட்டதன்மையிலிவன்கைக்கொண்ட
மந்திரவில்லாற்பட்டுமாளுவானென்றுதேவர்க்
கெந்தையெம்பெருமான்கூறக்கேட்டனரீசற்போற்றிப்
புந்தியும்புலனுநீரும்பூவும்போற்பொலிந்தார்மன்னோ. (௧௭௨

வேறு.

பட்டனன்முற்புதல்வனெனும்பரிபவந்தன்செவிகளிடைப்பட்டலோடுங்
கெட்டனனென்றழிந்தழியாக்கேதமிகுந்தறிவுகுன்றிக்கிளர்பொற்றேர்மேற்
றொட்டனவிற்கணைசோரத்துணைமலர்க்கண்டுளிசோரச்சோராவாவி
விட்டனவாவெனச்சாய்ந்தான்விசயதரன்படைமுறிந்துவெந்நிட்டோட. ()

களமுழுதுங்கஃபடலங்ககனமுகிற்படலமெனக்கலந்துதத்த
முளமுழுதுங்களிபொருந்துற்றுகுசோரிதசையருந்தியுலவச்சூழ்ந்த
வளமுழுதுங்குறைந்தனவாமலர்விழியாற்றுச்சனனும்வருந்திநோக்கித்
தளமுழுதுந்தனைச்சாரத்தானுந்தன்னிறைவன்றேர்தன்னைச்சார்ந்தான். ()

வண்பட்டமதகரிவெவ்வழற்பட்டகான்புளினர்வைவேற்பட்டுப்
புண்பட்டதெனக்கிடந்தபுரவலனைத்தெளிவுபட்டுப்பொருதச்செய்வான்
றண்பட்டபுனல்விசறித்தனித்தென்றல்வதனமிசைதவழமேன்மே
லெண்பட்டபலவகையுங்கொடுபுரிந்தான்மூர்ச்சைபட்டவிறைவன்றேறி. ()

முற்றுபகைகெடவெலுவைநிசிமுழுதுமிருவேமுமுடித்துப்பேசி
யுற்றனமின்றெமைநீத்துமருவலன்றன்சரம்படவானுற்றாயெயுற்றாய்
மற்றினியான்வென்றாலுமியார்க்கொண்டுபுவிபுரக்கவைத்துவண்மை
பெற்றிடுவெனம்மவெவருதுயிர்சுமந்துதனிநின்றபேதையேனே. (௧௭௬)

ஒருகோடிகுஞ்சரமுமிருகோடிவயப்பரியுமொருகோடின்றி
வருகோடிநராதிபருமணித்தேருமனீகினியின்வனமுஞ்சேரப்
பொருகோடிமகன்கரத்துத்தனுக்கோடிவளையாமுன்பொருதுகொன்றான்
முருகோடியளிசுவைக்குந்தாமத்தேனமுதிழவான்முன்னின்றேனே. (களஎ)

தருமன்சொன்முறைநீதிதலைநின்றதவன்வாய்மைதள்ளியென்ற
னருமைமைந்தர்தமைத்தோற்றுமருங்கடல்வாகினிதோற்றுமாசைதோலாக்
கருமங்கணிரைசூழவினுமொருத்திமுலைநலமேகருத்தைக்கல்லக்
குருமந்தநகைவிலங்கவில்வண்மைகண்டுவெற்றிகொளநின்றேனே. (களஅ)

இன்னபலபலபிதற்றியிருவிழிபுண்செய்தருநீரொழுந்துபாய
மன்னவனுந்திற்சனனுமடிந்துளவாகினிபோகமற்றாங்குள்ள
தன்னுரியசேனையுமெய்தவிப்புற்றுமத்தெறிதண்டயிர்போனின்றே
யின்னலுழுந்துறும்வேலைதன்னகர்க்கணிக்கேதமெய்திற்றாலோ. (களகூ)

முந்துமகன்போர்சாய்ந்தமுறைதருமன்றிருச்செவியின்மூழ்கலோடு
நிந்தனைசெய்திறைவன்முனநீக்கியதன்மனத்துணியுநினையாஞுகிக்
கந்தவகன்பிற்படப்போய்க்களம்புகுந்தானரசனிருகான்மேற்கண்ணீர்
சிந்தவீழ்ந்தானிறந்ததிருமகார்தமக்கழுதான்றெளிவுசூழ்ந்தான். (கஅ0)

அரசர்பலகோடிநின்றுகடையேற்றமுடியேற்றவரசேமுன்னீர்
பரசுபெரும்புவியனைத்தும்பரித்தபறம்புரியபுயப்பாழியோய்நா [கோடாக்
னுரைசெய்பொருளியாவுமுணர்ந்துரைபுரிந்தேன்கோடியெனவொன்றுங்
கரைசெய்பெருங்கடற்சுழியினவ்வெனநின்றலமுழந்துகவலுகின்றாய். ()

சங்கமின்றிமணமியற்றுந்தனிவிழவும்வரம்புதகாக்குலமுந்தாழாக்
கங்கையிலாவளநாடுங்கதிர்விளைவிலாதபுலக்காடுங்கற்பின்
மங்கையிலாமனைவாழ்வும்மகவில்லாநிதிப்பெருக்கும்வண்மைசூழ்ந்த
தங்கிளையில்லாவரசுந்தரணியினன்றெனவுவத்தறகைமைத்தாமோ. (கஅஉ)

கறுவுதல்கொண்டிவரொடுவெங்களம்பொருதலாற்பயனென்கருமந்தேர்ந்து
செறிமலர்ப்பூங்கழல்வேந்தேநானெனுவைகொளப்புரிந்துன்சிறுவரோடு
நெறிமுறைவாகினியுமவராற்றருவன்சமரொழிகநீயின்றென்றான்
வறிதுபுகல்வதுமறந்துமறங்கொடுபுன்னகைசெய்துமன்னன்சொல்வான். ()

நீயுமுனமெடுத்துரைத்தநீதியொன்றுங்கேளாமனேயநெஞ்சில்
வீயுமுறைநெறிநின்றேன்விதிமுடிவும்வினைவலியுமேலேநின்ற
காயுநெடுங்கணைபாயக்காளையரும்படையுமுயிர்சுழிந்தாரியானிங்
கேயும்வகைதேர்ந்தினியிவ்வரசாளவெண்ணுவதுமியற்கைத்தாமோ. (கஅச)

பிறத்தலுளபொழுதேபின்பிரியாதுதலைமீதுபின்னியூழி
னிறத்தலுமுண்டாயபலயோனிகட்குமிதுமுறைமையியற்கையாலோ
வறத்துறைநீங்கியபொழுதுமவனிதலமுழுதுடைத்தொல்லாண்மைவேந்தர்
மறத்துறைநீங்காதவின்மைகொடுநிற்றல்பெரும்புகழின்வண்மைத்தாமால்.

இன்றெனதுபுதல்வரினுமினியபடைத்தொகையினும்வேறெதுவோவெற்கு
நன்றிதருமாங்கவர்பாலுனிரந்துவாழ்வுகொளனன்றேநன்றே
நின்றுசெயத்தருங்கருமநெறியமைச்சநீபுகன்றநியாய்ங்கோடேன்
சென்றுநகர்க்கேகுவையென்றவற்போக்காவாண்மைகொடுதேர்வல்லோனும்

துற்சனனைமுகநோக்கிநீயுமந்தப்புத்திசிகாமணியைச்சூழ்ந்து
விற்சரங்கொண்டடுதியிந்தவிறற்புவனேந்திரனையொருவிநாடிக்குள்ளே
கெற்சனைவெம்புலிவாயினசமெனச்செய்துயர்கீர்த்திகிளரச்செய்வேன்
முற்சனங்கொண்டெழுகவென்றன்மொழிப்படியேமுறிந்தபடைமுழுதுங்
[கூட்டி. (கஅஎ)

துற்பலன்சேர்துற்சனனுந்தாமடைந்தவருதினியின்றுகையுஞ்சூழ
கிற்புறல்கண்டிடத்தேற்றிக்கிளர்மூர்க்கமுண்டாக்கிக்கிரிமாவென்ன
முற்புகுந்தாணியங்கோடிமுகிற்றனிதமெனமுழங்கமுறவல்பூத்து
விற்புருவமொடுகுனித்துக்கெற்புலிபோற்புத்திசிகாமணிவீறிட்டே. (கஅஅ)

தனதுமணித்தடந்தேருந்துற்சனன்பொற்றேருமிருதளமும்பொங்கி
மனதுநெருப்பெழத்திருகித்திரிதூளிகடல்சுவற்றிவானோர்செங்கண்
முனைபுதைப்பப்பெருஞ்சபதமுறைகூறியரிக்குலங்கண்முழங்கல்போலுந்
துனைபவனக்கறங்கெனமாதிரஞ்சுழலப்படைக்கலங்கள்சொரிந்தார்சுற்றி. ()

வேறு.

வில்லிட்டனர்கணையிட்டனர்வேலிட்டனர்கவண்மாக்
கல்லிட்டனர்கதையிட்டனர்கதமிட்டனர்கைசேர்
மல்லிட்டனர்வலியிட்டனர்மாறாமனவயிரச்
சொல்லிட்டனர்சுணைமிக்குளசூரத்தனவீரர். (ககூ௦)

கணையும்பலகதையும்மெறிகவணுங்கொழுமழுவுந்
திணையுந்துகள்படவுந்தினர்செறிமால்வரைமுடியார்
புணையின்வனமிடுவெங்கனல்புரையும்பொறிபுகையு
மிணையின்புகழுயர்விண்ணவர்தருவும்பணையெரிய. (ககூக)

கலிதண்பணைவளைவன்றுடிகழைமத்தளமுழவ
மொலிதண்கடல்சுலவும்புவிமுழுதுஞ்செவிடுறவே
பொலிமன்னவர்படையின்வெயிலிடமன்னவர்பொன்னின்
மலிமின்னணியொளிகண்ணிணைமருண்மண்டினவெறியே. (ககூஉ)

மதமற்றனபுரசைக்கரிவடிவற்றனதேர்கள்
கதமற்றனகுதிரைக்குழுகவினற்றனகவிகை
பதமற்றனகழன்மன்னவர்பனகத்தலையிறைவன்
நிதமற்றனவிமைபொத்தினநிரைசேரமாருமே. (ககூங)

தோல்போயினதோலுந்துகண்மாவாயினதுணைமாக்
கால்போயினகாலாளணிதேருங்கடைதேறு
மேல்போயினமேலானவர்தன்மேலுளவியனும்
மால்போயினமால்விண்ணவர்மனமுந்நனிமருள. (ககூச)

பிதிரஞ்சலதரமஞ்சுறுபிறையம்புகணிறைவா
னுதிரஞ்சலமுறுசஞ்சலமவிர்கொண்டொளிபரவ
வெதிரஞ்சலமுனைகவ்வினபடிநின்றனவிடையி
னுதிரஞ்சலமெனவிஞ்சினவுவரித்தலையொழுக. (௧௯௫)

எய்யும்படைமுறியும்பொழுதெழுவெம்பொறியெரியிற்
கையுந்தலைகுடலும்மிருகாலுங்குருதியுநீண்
மெய்யும்விழுவனநான்மறைவேள்விக்கிடுவிரகும்
நெய்யுந்திகழ்கனலும்மொருகுழிவீழ்வனநிகர்வ. (௧௯௬)

மரணஞ்சிறிதுணராதுகைவலியாமனமெலியா
விரணம்படவமராடினரிருபாலுளவீரர்
கரணம்பொறிபுலனும்பொடிகதுவிக்குடலெரியச்
சரணம்புகுநெறிகண்டிலர்நிலைகெட்டுயிர்தளர்வார். (௧௯௭)

துர்ச்சன்சலதரமாமழைசொரிவாளிகொடெதிர்போ
ரற்சந்திரனெனவெய்தனனறிவோர்புகழறிஞன்
மற்சுந்திரவலிதிண்சிலைவடிவம்பெழுமுனையான்
முற்சுந்தனமழியப்பொருதினன்மற்றதுமுடிய. (௧௯௮)

தேருந்தறிபடவண்சிலைமுறியக்கணைசிதையாக்
காரும்முதிரிடியுஞ்செறிகனலும்பலமுகமாய்
நேரும்படிதிருகித்திரிபவனும்பயனனுநேர்
போரும்பொரவருவானொருகதைகொண்டெதிர்புக்கான். (௧௯௯)

கதைகொண்டுயர்தேரும்பொடிகதுவப்பரிநிரையும்
வதைகொண்டணிவலவன்னுயிர்மடியக்கைபுடைத்தா
னதையஞ்சுபுகலைவண்மையிலதிசுந்தரதிலகன்
புதைவெம்புலியெனவங்கொருகதையிட்டமர்பொருவான். (௨௦௦)

வேறு.

இமையவர்வாங்கிப்பண்டுபயோததிநடுவணிட்ட
சிமையமந்தரமேயன்னகதைவலந்திரித்துவெம்போ
ரமையநின்றடடாநின்போற்றுற்சனுவடர்க்குமாண்மை
சமையுநற்கூற்றுக்கேவர்நிகரெனச்சாற்றலாவேன். (௨௦௧)

நிருபன்மேன்மைந்தர்தம்மேனின்றுளபடைமேல்வெம்போர்
பொருதொழின்மறந்துநீயிங்கெய்துதல்பொருந்தநோக்கி
வருநெறிதுருவாநின்றேன்யான்செய்மாதவமேயின்று
தருமதேவதையுங்கூட்டித்தந்ததுநின்னைத்தானே. (௨௦௨)

பொய்கொலைகளவுகாமங்கட்குடிபூணும்பூணாய்
மெய்புனைந்துள்ளமெய்யைமெய்படவிலங்காநின்ற
வெய்யதுர்ச்சனநின்புன்மைவிரகினாற்கற்பினெம்மோய்
மையரிக்குவளைக்கண்ணிக்கின்னன்முன்வருவித்தாயே. (௨௦௩)

மந்திரிக்கழகுமன்னற்காவனவாய்ப்பகாளூந்
தந்திரம்புரிதல்காலமிடம்வலிமுடியுந்தன்மை
முந்துறத்தெரிதலென்னுமுறைறையைபோய்முறைக்கேடாயுன்
புந்தியிற்சிறுமைகொண்டபுன்கணென்புல்மைத்தம்மா. (உ0ச)

கதையிதுன்றலையையன்றிக்கடவுளர்கூட்டங்கூடி
யிதமுறவிலக்கினுலும்பிழைபடாதெதிர்வாயென்னப்
பதயுகம்பெயர்த்துவீதியாதிபோய்ப்பவனனஞ்சப்
பிதிரமுஞ்சலெங்கொள்ளப்பிறங்கற்றேள்கொட்டியார்த்தான் (உ0ரு)

ஆர்த்துளவமலையண்டகோளமுமதற்கப்பாலுங்
கோத்துளவுமையினுடல்குறுக்கெடுத்தீசனேடுஞ்
சேர்த்துளவமரருள்ளந்திகைத்துளபோர்க்கணின்று
பார்த்துளவெவருநெஞ்சம்பதைத்துயிர்ப்படங்கினுரால். (உ0சு)

அதுகுறித்தெதிரினின்றதுற்சனனம்மநின்றன்
முதுமொழிச்சினமும்வீரமுறைமையும்மொழியவேண்டாம்
மதிதெளிவினற்குணீயேமதிதெளிவினனென்போல்வார்க்
கதுசெயற்கருமையாகாவென்பதுமடுக்குமாலோ. (உ0எ)

வஞ்சனையறியாய்வேடமாறித்தாபதன்போல்வந்து
செஞ்சொலான்மறைமாதுள்ளந்தெருட்டிமோதிரங்கைக்கொண்டு
கஞ்சவாள்விழியினுளைக்கங்குலிற்கரந்துசென்ற
தஞ்சியோவலதுவீரத்தாண்மையோவறிகிலேனல். (உ0அ)

புன்னெறிக்காமத்தாலேபொருந்துநட்பிகந்துமாண்ட
மன்னனுக்குயிருந்தந்துவஞ்சினமுடிப்பானன்றன்
றன்னெடுஞ்சமருக்குற்றநின்பெருந்தகைமையெம்மா
லின்னில்த்தேவர்தம்மாலியம்பலாந்தகைமைத்தம்மா. (உ0கூ)

மாண்டவர்பிழைக்கும்விஞ்சைவலியினைநீயுமாண்டான்
மீண்டெடவெழுப்பவல்லவிரகினுரென்பதோர்ந்தெத
மாண்டகையோடுபேசிநின்னுயிரகற்றற்கிங்கண்
வேண்டியவலிகொண்டிற்றேன்வெகிடாதெதிர்திடயன்றுன். (உகூ0)

திண்டிறற்றடந்தோள்கொட்டிச்செவிடுபட்டண்டமெல்லாம்
விண்டிடநகைத்துவீதியாதிபோய்வெம்போராற்றத்
தண்டொடுசமைந்தான்புத்திசிகாமணிதானுநேர்ந்தான்
கண்டவர்போர்விட்டின்னோர்போர்முனைகாணச்சூழ்ந்தார். (உகக)

வேறு.

இருவருஞ்சமம்பெறவுத்தரித்தனவெதிர்மலைந்துதண்டிறுகப்பிடித்தன்ற[ன
மருவினின்றுசெந்தழல்கக்க மொத்தினர்வலமிடம்புகுஞ்செயன்முற்குறித்த
ரருகினிற்பிரிந்தடிவைத்தடுத்தனரகலவுஞ்செலாதுடன்முட்டியிட்டனர்
கருகுமம்புயலிழியொத்துரைத்தனர்சனதடங்குவடுகணெக்குவிட்டவே. ()

முனைமிகுந் தினின்றெதிர்கொக்கரித்தனர்முகில்வலம்படுத்துயாக்குதித்தன ரினிதுவாந்துதண்டொளிரசசுழற்றின ரிருவிசும்பெறிந்தொருகைப்பிடித்த னர், பனிமுகம்மலர்ந்திலகச்சிரித்தனர் பகரும்வஞ்சினம்பலசொற்றெறித் னர்,நனிதுகண்டகண்டகர்வெட்கியுட்கிடாகமிரண்டுநற்சமர்கற்பதொக்கவே

பகைமுதிர்ந்துவண்கதையொத்துமொத்தொ லிபடுமழைக்குலங்களிறொத் தொலித்தன, வகிலமுங்குழிந்ததுகட்செவித்திரளழல்விடங்கழன் றுடனெட் டுயிர்த்தன, சிகரியந்தடமுடிபொட்டுதிர்த்தன திசைகிலைக்கயமதமுற்றும்வற் றின, விகலியண்டமுமுடைபட்டுமெப்புறத்திசைகொள்கங்கையும்புனல்கெட் டுவிட்டவே. (உகரு)

வியர்வரும்பிமுத்தெனநெற்றியிற்றறவிழிகளுஞ்சிவந்தழல்சுற்றுமுற்றுற பெயர்பொருந்துசொற்களுமுட்கிளம்பிடபிறைவகிர்ந்ததிண்புருவச்சிலைத் துணை, யியல்புடன்செறிந்தகலத்தடித்தன விகலில்வண்ட டங்கிரியொத்த பொற்புயஞ்,செயல்கெடும்பயங்கரமற்றுமுற்றினுஞ்செறியும்வெஞ்சமங்கதை. யிட்டடித்தனர். (உகசு)

இவர்கண் மிஞ்சிவெஞ்சமரிப்படிக்கடர்ந்தெதிர்பொருந்திவண்புயமுத்தரிக்க வும், பவர்கொ ளங்கமொன் றினுமுற்று மிற்றிலர்பரியதண்டுமன்றெறுடிபட் டெடுத்தனர், இவர்தலின் முனிந்துளர்கெட்டுகிற்றிலர்கினைவினும்வலியொரு சற்றுமற்றிலர், கவர்விரற்கரங்கருகிச்சிவத்தலிற்கதைகழித்துமுட்டினர்முட் டியுத்தமே. (உகஎ)

வேறு.

கைகிமிர்த்துநீள்விரல்களைந்தையுங்கவினுறக்குவித்தொளிர்நகங்களை மெய்புதைத்துவெங்குருதிசோர்தாவெய்யதுற்சனன்விலவெலும்புதோ ணைபடப்புடைத்துதவொய்விழிநாசிகால்காந்தூசியுற்றுகத் தொய்படத்துவைத்தலரியாருயிர்தொலையமோதினன்றலைகொணீதியான்.

கட்டிமுட்டியுங்கைகண்முட்டியாற்கண்டகண்டமுமண்டையுந்தகர்ந் திட்டிடச்சினந்தொட்டியொட்டிநெஞ்செய்த்திடாதெதிர்த்துத்தரித்துநேர் கிட்டிகின்றுடன்றட்டிடச்சமர்கெட்டுடற்புறைகெட்டுளாவியும் பட்டிடப்பரிபவம்விலங்கியிப்பாரெலாம்புகழ்பாடியாடின. (உகஅ)

வேறு.

பொரவரிதயவானோர்க்கரும்பகைபூட்டிநின்ற
விவரியனையசீற்றத்திரணியன்றனைவென்று
நரவரிகங்கொண்டோர்த்தாலத்தினும்பலத்ததாகக்
கரவரிற்கொடியனுந்துற்சனனுடல்கழித்தானன்றே. (உகசு)

கற்பினுக்கணியைக்கண்டகண்ணினைக்கருதுநெஞ்சைச்
சொற்பிழைகொண்டுசொன்னவாயினைச்சுரிகையாலவ்
விற்பனன்வீற்றுவீற்றுய்விதிமுறைத்தண்டஞ்செய்தான்
முற்பினுமினிமேலுள்ளகாமுகர்முயலாவண்ணம். (உஉ0)

மலைவளம்பொலிகாம்போசமகிபன்மந்திரியாற்போரின்
சொலைவளம்பெலியமாண்டகொள்கையைக்குறித்துமுன்னீ
ரலைவளம்ப வருழ்பா மசரும்பிறருந்தத்தஞ்
சிலைவளம்பொலியநோக்காதுயிரின்மேற்சிந்தைசெய்தார். (உஉக)

கதையுத்தமுட்டியுத்தங்கைபிணைந்துறுமல்யுத்தம்
பதயுத்தமானநான்குயுத்தமும்பார்த்துநின்ற
முதயுத்தவின்மைவீரர்முழுவதுமினிநாமெந்த
விதயுத்தம்புரிவதென்றுமெலிந்தனர்வீரமாழ்கி. (௨௨௨)

தேர்புனைந்திருந்ததுங்கச்செழுஞ்சுடர்மணிப்பொன்மௌலித்
தார்புனைதிருக்காம்போசத்தலமகிபதியும்விண்ணின்
கார்புனைகரத்தினான்மார்பிறுகுறக்கட்டிமோந்திங்
கார்புனைபவனோர்நீயென்றமைச்சனுக்கன்புசெய்தான். (௨௨௩)

வணக்கமுமுகமனின்சொன்மனத்தினுண்மலியப்பேசு
மிணக்கமுமருதுநிற்பநவமணியிறைஞ்சிநின்விற்
சுணக்குநானினைக்கிற்சொல்லிற்கருதுநெஞ்சுரைவாவென்றும்
மணக்குமென்றுரைத்தான்புத்திசிகாமணிமகிழ்ச்சிகொண்டான். ()

வாகினித்தலைவர்மைந்தர்மந்திரிமுதலாயுள்ளோ
ராகவத்தழிதனோக்கியழிவுகொள்விசையதேசன்
நாகமுநாகத்துற்றவமராருநாகமெட்டுஞ்
சோகமுற்றிடத்தேர்தூண்டுஞ்சூதனுக்கிதனைச்சொல்வான். (௨௨௫)

நம்படைமுழுதுமாண்டதினியொருநானுநீயும்
வெம்படைமுடிப்பானின்றேமறிவையென்வீரமென்கை
யம்படைதொழிலும்வாசிக்கருத்துமென்னமைவுநோக்கி
கும்படைமணிப்பொற்றிண்டேர்தூண்டுதிகோல்கொடென்றான். ()

என்வலியறியாரிந்தச்சிறுவர்களிவன்றீசன்
றன்வலிகொண்டுற்றாலும்வெல்லுதல்சமைப்பேனென்றிங்
குன்வலிநிமிரத்திண்டேருருதிவிரைந்தென்றோதி
மன்வலிக்கமைந்தமேருகிரிநிகர்வரிவில்வாங்கி. (௨௨௭)

பதயுகவிரலிட்டொற்றைக்கரத்தினானுனியைப்பற்றிக்
குதையொடுகுதைகொண்டொற்றிவளைபடவின்னாண்கூட்டிச்
சிதைபடத்திசையும்பாருந்திரிபடத்தேவரூரும்
புதைபடநமனோடொத்துப்பொலிசுதைப்புங்கம்விட்டான். (௨௨௮)

தேரினையறுத்தான்வாவுதேசியையறுத்தான்பூண்ட
தாரினையறுத்தான்வேழத்தலையினையறுத்தான்வீரர்
போரினையறுத்தான்கண்டபொருளெலாமறுத்தானந்தோ
பாரினிலுறுபடாதபதார்த்தமங்கொன்றுமில்லை. (௨௨௯)

மண்ணினுநிற்பான்சூழ்ந்தமாதிரத்தளவுநிற்பான்
விண்ணினுநிற்பான்மையவெளியினுநிற்பான்றெவ்வர்
கண்ணினுநிற்பானோக்கிற்கருத்தினுநிற்பானெண்ணிறி
லெண்ணினுநிற்பானெண்ணற்கேயுமோவிவன்றன்சூரம். (௨௩0)

ஏவுவானேவுஞ்சூழ்ந்தவிருங்கடல்வடவைச்செந்தீ
நாவுநாகங்கணாவுநமனுடைநாவுமன்றி
மேவுநாமெதனைத்தேறிவிள்ளுதுமென்னவிண்ணோர்
கூவுநாவமலையண்டங்குலுங்கிடக்குழுமியார்த்தார். (௨௩௧)

செயவளையுவக்குமாலின்மாயைபோற்செல்லும்வாளி
யெயவளைவரிவிற்சால்கொண்டெறிவளையெரிகான்மோத
வயவளையியக்கள்சிந்தியனீகினியழிந்தமற்றும்
நயவளைமௌலிவேந்தர்நடுங்கிநாவுலர்தல்கொண்டார். (௨௩௨)

விக்கிரமவாளிகொண்டுவிரிஞ்சனைவீட்டிப்பின்னும்
வக்கிரவாளியொன்றானவமணிதன்னைமாய்த்தங்
கக்கினிவாளிகொண்டுசமர்த்தனைப்படையையட்டான்
மிக்கதன்புகழ்கொண்டெல்லாவுலகினுமெழுதும்வீரன். (௨௩௩)

என்படைமுழுதுமாண்டதெணியுவந்திழிவுசொல்லா
துன்படைமுழுதுங்கொன்றேனுனையுமந்திரியுங்கொல்ல
மின்படைதாங்கிநின்றேனாயினும்வீணேகொல்லி
லென்பயனென்றுநெஞ்சத்தெண்ணிநாணிரங்கிற்றேனால். (௨௩௪)

மாதையென்னுழையிற்றந்துவேண்டுவவழங்கப்பெற்றுப்
போதுதல்புரிவையானானின்னுடைப்புகழும்பொற்பும்
மேதகுகுணனுமிந்தமேதினிதனிலெஞ்ஞான்றுந்
தீதடையாவாமென்றின்றெனதுளஞ்சிந்தித்தேனால். (௨௩௫)

புன்னுனிப்புனலேயன்னவென்படைபுனல்கட்கெல்லா
மன்னையிவ்வுலகஞ்சூழுமாழியம்புனலேயானு
மென்னநீநினைதியென்னைவெல்லகில்லாய்நின்சேனை
தன்னைநின்கண்முன்கொன்றதோர்பெருஞ்சான்றுங்கண்டாய். ()

வில்லினான்மழுவாற்சூலம்வேல்கதைவாளாற்றிண்டோண்
மல்லினான்மற்றுமுள்ளவிதத்தினான்மலைந்துநீயுங்
கொல்லுதல்கூடாதென்னையென்பதுமுணர்ந்துகோடி
சொல்லினாலென்னைக்கூற்றுமெனதுவிற்றொழிலுக்கஞ்சும். (௨௩௭)

ஆதலாற்பொருதலின்றேலணங்கினைவிடுத்துன்னூர்க்குப்
போதலிவ்விரண்டிலொன்றுபொருக்கெனப்புகறியென்றாங்
கோதினானதனைக்கேளாவொருங்கமுப்புரமுன்சுட்ட
நாதனின்ஞாலவிந்த்ரனகைத்திவைநவிறலுற்றான். (௨௩௮)

சொற்றதுநன்றுநன்றுசூரமும்வினையப்பாடும்
மற்றெனக்குணர்த்தல்போதும்வாளியொன்றானின்சென்னி
யிற்றுகப்புரிவதன்றியெளிமைகொண்டழிவுபேசக்
கற்றிலனுன்போலென்றேகாளையுண்டாட்டங்கொண்டே· (௨௩௯)

மதியின்வாளியுடுவின்வாளிமழையின்வாளியாதியாய்ப்
பொதியவிழ்ந்ததெனவெழுந்துபோகவங்குபோக்கலுங்
கொதிகொள்சீற்றமுங்குறைந்துகுறையடாதுருறுகின்றன்
விதியினாலலாதெவர்க்கும்வெல்லிடாதவென்றியான். (௨௫௮)

வேறு.

எதிர்புவனேந்திரநகரினேந்தனு
முதிர்சினப்பாந்தளின்முனிவுமூண்டெழா
வதிர்புலன்றேர்ப்புலிக்கொடியையற்றுகக்
கதிர்முனைவண்டினாற்காதிவீழ்த்தினன் (௨௫௯)

தோற்றிடாவீரமேதுலக்கித்தேர்தலை
யேற்றியபதாகையுமிற்றுவீழ்தலும்
கூற்றையும்வட்டணைகொள்ளுங்கூற்றென
மாற்றருந்தடஞ்சிலைவளையவாங்கினன். (௨௬௦)

பொழிந்தனன்வானமும்புவியும்புங்கநீ
ரெழுந்தனசுடர்த்தலமிருண்டுதோற்றின
வழிந்தனனாம்பைநாயகனென்றஞ்சியே
மொழிந்தனர்வானவர்பிறர்கண்முற்றுமே. (௨௬௧)

வாயுநன்மனதுந்தம்வலியைமானுமாப்
பாய்பரிக்காயிரம்பாய்ச்சிமந்திரிக்
காயிரம்பகழிமெய்யழுந்தவெய்தனன்
வாய்வழிகுருதிநீராறுமண்டவே. (௨௬௨)

சுழித்தெழுசோரிகள்சொரியவாம்பரி
விழித்தனமந்திரிமூர்ச்சைமேவினன்
பழித்தலையுறத்தினற்படுக்கும்பண்பென
வொழித்தனவைகளையுன்னுமுன்னமே. (௨௬௩)

மந்திரிகுருதிவாய்வழங்கநோக்கினன்
சிந்தையுள்ளுருகிமெய்தீயினெய்யென
வெந்தனன்வெகுண்டுகண்வெறியினீடவே
யந்தரஞ்சுழலவில்லமையவாங்கினன் (௨௬௪)

நாசியில்விழியினிறைவின்மெய்யினி
லூசியுமிடைபுகாதுருத்துவாளிகள்
வீசினன்விசையதேசத்துவேந்தனுங்
கூசினன்றன்வலிகுலையநின்றரோ. (௨௬௫)

வில்வினைத்தேர்ச்சியிசையூன்றிவெய்யதன்
சொல்விழுந்தங்கமுந்துளங்கநீண்டுள
கல்லெனநின்றனன்கன்னலொன்றிரண்
டொல்லைதீர்ந்தயர்ச்சிதீராமலுற்றரோ. (௨௬௬)

தேரினைப்பிற்படத்திருகிவெங்கொடுத்
தோரிமைப்பொழுதினிலுடன்றுபோர்புரி
வீரர்கட்புலன்களில்வெளிப்படாவகைப்
பார்புகுந்தான்விரகறியும்பாகனே. (உசுஎ)

அண்ணலைத்தேரொடுமரியசாரதி
கண்ணிமைப்பளவினிற்காந்துபோயினான்
மண்மிசையென்றுதன்வலவன்றன்னுளத்
தெண்ணியாங்குரைத்தசொல்லிறைவன்கேட்டனன்.(உசுஅ)

சாரதிதொழில்குறித்தறிஞன்றன்னையு
நேரினிற்புகழ்ந்தவனீயுநந்திருத்
தேரினைச்செலவிடுசெலவிடென்றலும்
பார்மிசைப்பவுஞ்சுறப்படுத்தினானரோ. (உசுகூ)

மன்னவன்மயக்கம்போய்மலர்க்கணோக்கினான்
றன்னையத்தேரொடுந்தனதுசாரதி
நன்னிலம்புகுந்தமைநாடியென்கொலீ
வெங்கொடுத்தனையெனவெகுண்டுசொற்றனன். (உஎ௦)

மாற்றலர்நிலையினைமதித்துவாசியின்
றேற்றமுந்துருவித்தன்றோன்றலானவ
ரேற்றமுங்காலமுமிடனுமெண்ணிய
வாற்றுதல்வலவர்கட்கங்கமாகுமால். (உஎக)

ஓய்ந்தனைவலிமனத்துண்மயக்கினாற்
சாய்ந்தனைதேர்மிசைத்தரியலன்கணை
பாய்ந்துறாதகலுதல்பண்பெனக்குறித்
தேய்ந்துநான்செய்தனனென்னப்போற்றினான். (உஎஉ)

கேட்டலும்வெண்ணிலாக்கிளருமூரலான்
நாட்டம்வெந்தீயுகநாமவிற்கொடு
சேட்டிளங்கதிரெனத்திகழும்பல்லவ
மோட்டினான்கடன்மடுத்துதவுமஞ்சென. (உஎ௩)

வாள்கந்தகப்பணம்வளரிவேன்மழுத்
தாளினுங்கரத்தினுந்தலையினும்படத்
தோள்வலிச்சுமைகொடுதூக்கித்தூக்கியங்
காள்வலிகாணவிட்டெறிதலாற்றினான். (உஎச)

கட்டமைபல்படைக்கலங்கள்சேர்நடுத்
தட்டினிலுள்ளனயாவுந்தன்கையால்
விட்டனன்விடவிடவீரன்வாளியால்
வெட்டிநுண்பொடிபடுத்துதிராவீசினான். (உஎரு)

இந்திரருலகினுமிலங்குசூரியர்
சந்திரருலகினுஞ்சரோருகத்துறை
யந்தணருலகினுமன்றியுஞ்செல
வுந்தாதேரிடம்வலந்திரியவோட்டினார் (உஎ௬)

வரையினுநதியினும்வயங்குகானினும்
விரைமலர்க்காவினும்வெளியினுங்கடற்
கரையினுங்கடலினுங்கலந்துபோர்புரி
தரையினுங்காணலாமிவர்கள்சண்டையே. (உஎஎ)

வயப்படுவீரமும்வனப்பும்வாய்மையுஞ்
செயப்படத்திகழ்ந்தனன்றிருவினாயகன்
நயப்படுசரமெலாநசிப்பத்தன்வலி
பயப்பயவோய்ந்தனன்பாதகனன்றரோ. (உஎஅ)

வேறு.

மோகனக்கணையொன்றெய்தான்மூண்டபோர்தன்னின்மாண்ட
வாகினித்தலைவரோடும்மைந்தரும்பிறவுந்தாக்குச்
சேகரவளைத்தலோடுஞ்செகபதிதனதுதிண்டேர்ப்
பாகனுமமைச்சைநோக்கியிதுவென்னபான்மையென்றான். (உஎகூ)

ஆயவனறிவாற்றேறினையகேள்கொடியோன்வெய்ய
மாயையின்கணையைவிட்டானதுசெயுமாயமீதா
னாயகனானவாளிதொடுவையேனசமுற்று
வீயுமென்றுரைத்தான்கேட்டவீரனும்வியப்புக்கொண்டான். (உஅ0)

எய்தனன்ஞானவாளியெய்தலுமெதிர்ந்தமாயை
வெய்யதன்றன்மைகுன்றிவெய்யவன்கதிர்முன்பட்ட
செய்பனிப்படலம்போலுஞ்சிதைந்ததுசிதைதலோடு
மூய்நெறியிலையென்றோர்ந்தபாதகனுமூக்கமுற்றே. (உஅக)

இந்திரன்வாளிதொட்டானிரும்புவனேந்த்ரவீர
னந்தவாளியினாற்றண்டமாக்கினான்ரியின்வாளி
சிந்தினன்றீயோன்கண்டதிருவினன்வருணவாளி
யுந்திபங்கதனைமாய்த்தானூரன்வலியுடைமைதோன்ற. (உஅஉ)

நிருதியாசுகங்கொண்டெய்தானிருதிநேரனையநீரான்
நிருதியாசுகங்கொண்டையனீக்கினன்குபேரபாணங்
கருதியங்கெய்தான்பொல்லாக்கயவனுமதனைமாய்த்தான்
கருதியப்பாணங்கொண்டேகவின்றருகழற்கால்வீரன். (உஅங)

திருத்துமீசானன்வாளிசிந்தினன்சிந்தைதீயோன்
றிருத்துமீசானன்வாளிகொண்டவைசிதைத்தான்றீரன்
மருத்துவின்வாளிகோடிமாயவல்லவனும்விட்டான்
மருத்துவின்வாளிகோடிதொடுத்தவைமறுத்தான்வள்ளல். (உஅச)

சண்டன்வெம்பகழிகோடிகோடிமேற்சரித்தான்றீயோன்
சண்டன்வெம்பகழிகோடிகோடியாற்றடுத்தான்றூயோன்
பண்டையவசுக்கள்பாணம்பரப்பினன்பதகனய்யன்
பண்டையவசுக்கள்பாணம்பரப்பியங்கதைப்பாழ்செய்தான். (௨௮௫)

கயந்தலைக்காண்டங்கோடிகயவன்கைகடுக்கவெய்தான்
கயந்தலைக்காண்டங்கோடிகைவிடுத்தையன்காத்தா
னயந்தலைவண்டுகோடியசடன்விட்டார்த்தானைய
னயந்தலைவண்டுகோடிபெயர்த்தவையறுத்தானன்றே. (௨௮௬)

வெள்ளெயிற்றரவவாளிவிட்டனன்வெங்கணுகங்
கொள்ளையுற்றணவச்சூழ்ந்துவானமுங்குறுகவந்த
கள்ளனைவியந்துதன்கைக்காருடவாளிவிட்டான்
வள்ளலுமள்ளியுண்டுதீர்த்தனவுகிரால்வாறி. (௨௮௭)

துள்ளுவான்பரிமேற்றேர்மேற்றனதிருதோண்மேன்மொய்த்த
வள்ளறன்பகழிக்காடேயானமற்றவனுக்கங்க
ணுள்ளனவெல்லாமாய்ந்ததுணர்ந்தனன்வலிமற்றோயாக்
கள்ளனுந்தனைக்கைக்கொண்டவன்மிசைகடாவலுற்றான். (௨௮௮)

எய்கணைமுழுதுந்தோற்றானுன்சினந்திவன்மேலெய்யு
மெய்யுறங்கணைகைவாங்கிவிடுக்கின்றான்கடுப்பும்வீயான்
செய்கையுஞ்செயலும்வின்மைவன்மையுஞ்சிறிதுதீரான்
வையமேலிவனையாவர்வெல்லுறும்வலிமற்றென்று (௨௮௯)

அந்தரத்தமரராதிமுனிவரருளாலோக்கித்
தந்துளயாவுமின்றுதீர்ந்தனதரியலான்மே
லெந்தவத்திரம்விட்டாலுமிவனுயிர்க்கீறுசெய்யா
சந்த்ரசேகரன்றன்பாணந்தொடுப்பதுசமைப்பேனென்று. (௨௯௦)

வேதன்மால்பகழிபக்கமேவிடநடுவெண்முக்கண்
நாதன்மெய்ப்பகழிசெல்லநன்கமைத்தணிவிலிட்டாங்
காதரித்தனந்தபூசைமானதவிதியாலாற்றித்
தீதுடையவன்றன்சென்னிசிதைபடக்குறிசெய்தெய்தான். (௨௯௧)

வானமும்புவியுநாகர்வைகுபாதலமுஞ்சூழ்ந்த
வேனையபொருளுஞ்சேரவிறுதியின்முருக்குமுக்கண்
ஞானநாயகன்றன்வாளிஞானநாயகனேயென்ன
மேனிவர்ந்தண்டமெல்லாம்வெவ்வழல்வீசிச்சென்ற. (௨௯௨)

கதறினமேகமெல்லாம்கலங்கினவிண்ணோர்பண்ணை
பதறினவுலகமுற்றும்பசையறவறண்டவாழி
சிதறினபொருள்கள்யாவும்பிறிதெவைசெப்பற்காவேன்
முதிர்சினப்பகைஞன்பட்டுமுடிவதற்கையமுண்டோ. (௨௯௩)

அருவரையனையதிண்டோளிரண்டினுமயன்மால்பாணம்
பொருவினவீசன்பாணம்பொய்புகல்பவன்றன்சென்னி
சொருகினதிருகித்தாளாயுடற்சுமைதூற்றிற்ருலோ
வுருவழிந்தனதேர்வாசிவலவனவ்வெம்மையுற்றே. (௨௬௪)

இறந்தனவென்றுதுள்ளியிமையவர்குழுக்களீண்டி
யறந்தருசிந்தையான்மேலலர்சொரிந்தாவவெல்லா
நிறந்தரவழங்கினோர்கணிமலன்மால்வேதனேனோர்
திறம்படவிவன்றன்சேனையுயிர்பெறக்கருணைசெய்தார். (௨௬௫)

மாண்டவாகினிகண்முற்றும்வானவராருளினலு
மாண்டகையமைச்சனலுமகேளந்தன்னினின்று
மீண்டுயிர்பெறுதலேக்கிவிரற்புவனேந்த்ரவீரன்
பூண்டருங்களிப்பானீண்டபொருப்பெனப்புயம்பூரித்தான். (௨௬௬)

உள்ளமுமுடலும்வாக்குமொருப்படாதெழுந்தவோகை
வெள்ளநீரொடுங்கண்ணீரும்பரவசவெறியும்போர்ப்ப
வள்ளலும்பாடிசேர்ந்தான்வருதினிக்கடலினேடு
கள்ளவிழ்கடுக்கைவேணிக்கடவுளும்பிறரும்போனார். (௨௬௭)

தேவர்கள்சென்றபின்னர்சிலையைநாணிறக்கியம்பு
மாவமிட்டடெல்விதிர்ப்பாங்ககற்றிப்பாசறைநின்றப்பாற்
காவலன்றனைசூழக்காரிகையிருந்தசூழன்
மேவியங்கவளுக்கெல்லாம்விளம்பிவீற்றிருந்தானன்றே. (௨௬அ)

வீரசிங்கன் விசையதரன் வதைப்படலம் முற்றிற்று.

ஆகப்படலம்-௪௨-க்குத் திருவிருத்தம்-௨௬௯0.

---

௪௩ மவிதிப்படலம்.

இறவாதபேறளிப்பானிறந்தாலுந்தாய்வயிற்றிலெய்திமீளப் [ன்
பிறவாதபேறளிப்பான்பிறந்தாலும்பெறுதவெலாம்பெறவேசெய்வா
றுறவாதபேர்க்கரியான்ஞென்மதுரைத்தலத்திருந்தசோதிபாதம்
மறவாதுநாடோறும்வாயாரவோயாமல்வாழ்த்திவாழ்வாம். (க)

வேறு.

நீடியதிசையும்வானுநாயகனிறைத்தவாளி
வீடினருடலைவிட்டுப்போகியவுயிரைவிண்ணிற்
கூடினபோதுஞ்சென்றுபிடிப்பதுகுறித்துப்பின்னே
தேடினசெய்கைபோலத்திரிந்தனசிதைவில்லாமல். (௨)

வேறு.

அம்பொடுமும்பர்புக்கடைந்தமாத்தலைத்
தும்பியின்றலைபொருசூரர்வன்றலை
யிம்பரில்வீழ்வனவிறுதிநாளினிற்
றம்பதம்விலங்குவாலுடுவின்றன்மைபோல். (௩)

சோரிகள்சுழியெறிந்தோடித்தாய்த்திரை
வாரியிற்படிந்தனமலைகள்போன்றன
பேருடல்படைக்கலம்பிறங்குகானெனப்
போர்புரிகளமெலாம்பொலிவுகாட்டின. (௪)

நீடினவுடற்சுமைநிறைந்துவான்முடி
மூடினதலைகளின்மூளையுண்டுவாய்
பாடினசம்புவின்குலங்கள்பாங்கரின்
றாடினதுணங்கைகொண்டலகையீட்டமே. (௫)

மன்னவர்முடிமணிமுடியதாய்வளைந்
தன்னவரணியணியாரமாகவே
தன்னலம்பெறப்புதிதழகுதந்தனள்
பன்னரும்பெரும்புகழ்பரிக்கும்விந்தையே. (௬)

மனத்துளவேதையுமதனவாதையுந்
தனத்துளசோம்பினைத்துடைக்கத்தாங்கலா
ரினத்துளார்தடுக்கவுமெழுந்துவல்லைபோய்க்
கனத்தமெய்களத்தினிற்கரையமாய்ப்பரால். (௭)

வாண்மலர்விழிக்கிடுமைகள்கைகளிற்
காணுறுபேரடையாளங்காணுவர்
பூண்முலையலமரப்புடைத்துவல்லையின்
மாணுயிர்நீக்குவார்மயில்கள்போலுளார். (௮)

வேறு.

புரசைமதக்களிறனையபுரவலரும்பெரும்படையும்புதல்வர்தாமு
மரசனும்பட்டதுகேட்டார்திருநகரும்புறநகருமாற்றுமோசை
திரைசெய்கடலொலிபோலுந்தேவிசுகலீலையிருசெவியின்மூழ்க
வரிசைமருகியரோடுமருகிநெடுங்களம்புகுந்தாண்மயிலையன்னாள். (௯)

வயிறலைத்துக்குழல்சோரமதிவதனமீதினும்பூமலர்க்கையெற்றி
யுயிரகலவரைபோலுந்தரைகிடந்தகொழுநனைக்கண்டுருகிக்கண்ணீர்
புயல்போலும்பொழியமனநிலைகுலையப்பசுங்காவிற்பொருந்திவாழுங்
குயில்போலுங்குரன்மாழ்கிக்குழைந்துகுழைந்தழற்படுமென்கொடி
போற்றீந்தாள். (௧0)

நான்முகற்குமாலவற்குநாரியொருபுறத்தமைத்தநாதனார்க்கும்
வான்முகற்கும்பிறரெவர்க்கும்வலிதோலாதொருகோடிவரமுந்தேசும்
வேன்முகற்குமில்லாதவிழுப்பமடைந்துலகாண்டவிறலோய்நீயிங்
கூன்முகற்குநெடுவாளிமருவலன்கைவிடத்தீராவுயிர்தீர்ந்தாயோ. (௧௧)

அண்டருக்குங்கிடையாதபெருந்திருவும்புயவலியுமழகுநீங்கா
வெண்டருக்குமிடைவீழவண்டிருக்குங்குழலாண்மேலெடுத்தகாத
னுண்டிருக்கும்படிபுரிந்துநாடோறும்பெருங்கலகமுஞற்றும்வீரங்
கொண்டிருக்குமலர்க்காமன்கோதாட்டந்தவிர்ந்தனையோகுளிர்ப்புற்றாயோ.

சொல்லியசீராபாதசூடமுதலொருத்திமுலைத்துணையிணைசை
புல்லியகலாதிருக்குமெனநினைந்தநினைவன்றோபொருனன்றன்கை
வில்லிலியல்பாகியவன்சாத்தொகையுன்னுடன்முற்றும்வீற்றுவீற்றாய்க்
கல்லியநெஞ்சமுங்கீறியாருயிரும்புறம்போடக்கழித்ததின்றே. (க௩)

வருமமறியாவறத்தினாறொழுகிப்பலநீதிமருவாநிற்குங்
கருமமுணர்ந்தயர்காலமிடனறிந்துபேரரசுகாத்துநின்ற
தருமனுவன்றனவெல்லாந்தாளாக்கிநின்னுரையேதலையாய்க்கொண்டு
பொருகளமேற்பொன்றினைபெண்ணன்றிலெனவுனைநீத்துப்புலம்புமாறே.

மாமிசுகலீலையொடுமருகியர்கடத்தமதுமணாளர்க்காங்கே [பிப்
தேமன்முலைத்துணைபுடைத்துச்சிற்றிடைதள்ளாடமண்மேற்சிந்தைதேம்
பூமலர்க்கண்புனல்சோரப்புயலளகமழைவாரப்புண்ணெஞ்சேறக்
காமமெனுங்கடலோட்டச்சுழிவாயினுவாயின்கலங்கினாரால். (க௫)

மகவிறந்துமன்னிறந்துவாகினியெல்லாமிறந்துவசையுமிந்தச்
சகமுழுவதுங்கிடந்ததனிக்கேதஞ்செவிக்கோதச்சகியானாகி
யகமுழந்ததருமனுந்தன்னிலைகுலைந்தான்களம்புகுந்தானரசைக்கண்டான்
சுகமுழுதுந்துனியருந்தச்சுகலீலையொடுபுலம்பித்துயரங்கூர்ந்தான். (க௬)

கூர்ந்தமதிமந்திரியைச்சுசலீலைதிருக்கடைக்கண்கொண்டுநோக்கி
யார்ந்தயர்கூர்ந்தினியாமுமழுவதினாற்பயனென்னையமரின்மாண்ட
வேந்தனுக்குமைந்தர்கட்கும்பாந்தமிகுமீமவிதிவினைகளெல்லா
நேர்ந்துயிரையாங்கள்விடுவோமதற்காம்வகையறிந்துநீசெயென்றாள். (க௭)

சொற்றமொழிப்படிதவருமந்திரியுமவண்மனத்துட்டொகுத்தவெல்லா
முற்றுநொடிப்பளவினிற்கொண்டமைத்தனன்மற்றதுகண்டவுருவின்மிக்
சுற்றுதிரைப்புனல்குடைந்துநீறணிந்தாவனபலவுந்துலங்கவேய்ந்து [கார்
மற்றுமணவாளர்களுக்கீமவிதிக்கடன்களெல்லாம்வழங்கிப்பின்னர். (க௮)

ச[illegible]தனந்தேக்கிற்றுணியாற்சமைத்தபுடந்தனிலேற்றித்தைலமிட்டு
மு[illegible]ந்துமனுவாற்சிறந்தமுதிர்மறைநாவலரமைத்துமுறையாற்றந்த
செந்தழலின்கொள்ளியிட்டார்செறிந்தசுடர்சிகைவானந்தீண்டநோக்கி
யந்தரதுந்துபிமுழங்கவதின்மூழ்கமனம்வலித்தாரணங்குபோல்வார். (க௯)

வன்னியைமூவலம்வந்தாண்டிரப்பவர்க்கெலாங்கனகமாரிபெய்திங்
கின்னமிவரோடுசென்மமெடுத்துமனைவியராகவெங்கட்கீசா
னின்னருணேர்வழியெனச்செந்தழன்மூழ்கியுயிர்பிரிந்தார்நின்றவானோ
ரன்னவர்தங்கற்பினைக்கொண்டாடிவிமானத்தலைகொண்டடைந்தார்தம்மூர்

மற்றவினையவ்வளவுமரசர்கட்குமகாரெனுஞ்சொன்மறையடாருய்ந்தாங்
குற்றவினைத்தருமனும்பன்முனிவரொடெங்குறைதீரவுஞற்றிவெம்போர்
வெற்றிபுரிகோமகனுந்திருப்புவனேந்திரற்காணவிருப்பங்கொண்டே
யுற்றுளதன்வாகினிகள்புறஞ்சூழமற்றவனையுற்றானன்றே. (௨௧)

தருமனும்வாகினியையொருபுடைநிறுத்தித்தனியேகித்தரையைத்தாங்கு
நிருபனுக்கென்வரவுரைமினென்னப்புகலவாயிலுளார்நேர்ந்துசொற்றார்
குரிசிலுந்தன்மந்திரியையெதிர்கொடுபோயழைமினெனக்கூறக்கேளாத்
துரிதமுடனெழுந்துபுத்திசிகாமணியுந்தருமனுழைதுன்னினானால். (௨௨)

ஈமவிதிப்படலம் முற்றிற்று.

ஆகப்படலம்-௪௩-க்குத் திருவிருத்தம்-௨௯௭௨.

தருமன் பட்டாபிஷேகப்படலம்.

கூடலிருந்தான்
பீடுபொருந்த
வேடனைவென்றான்
றாடலைநின்றான். (௧)

வேறு.

மன்னனேவலிற்புத்திசிகாமணி
தன்னையண்மியழைக்கத்தருமனு
மன்னவன்றனையேபுகழ்ந்தன்பொடுஞ்
சொன்னவேத்தவைதுன்னினனன்றரோ. (௨)

எய்திமன்னனெழின்மலர்த்தாளிணைக்
கைகளாற்றொழுதேத்தலுங்காவலன்
பொய்யில்கேள்விப்புலமையினான்றனை
மெய்யின்மெய்யுறப்புல்லிவிளம்புவான். (௩)

நீதிமுற்றுநிறைந்தனைநீமனக்
கோதுதீர்ந்தனைகொற்றவற்கும்பல
சேதிசொற்றனைதேறிநலங்கொளாப்
பாதகன்னழிவாயினன்பாவமே. (௪)

ஊன்றும்வித்துமருதலகுற்பவித்
தான்றவொன்றுபத்தாயிரமாவபோ
லான்றாராதவர்செய்கையினுதியந்
தோன்றுமென்பதுமான்றவர்சொற்களே. (௫)

வெய்யசோதிவிபாகரன்போலொளி
செய்துபூவுலகாண்டுள்ளீரும்
வையமேலெதுகொண்டுள்ளீர்மாண்பலா
லையநீயறியாதுள்வாறரோ. (௬)

அங்கவன்றிருநாட்டுக்கரசினி
யிங்குநின்னையலாதிலையாதலாற்
றுங்கமாமுடிசூடுதிநன்றெனப்
பங்கமில்குணத்தேந்தல்பணித்தனன். (௭)

சொன்னபோதவன்றூய்மலர்த்தாளிணை
சென்னிசூடித்திருக்கரஞ்சேவியா
மன்னநின்மொழிவாய்மைமறுப்பதற்
கென்னையோபொருள்கொண்டிங்கிசைப்பதே. (௮)

மானிலத்தரசாள்வதுமந்திரக்
கினமேயலதின்பம்பயக்குமோ
ஞானவித்தகநாயினுங்கேடுகொள்
நானுனக்கினியாதுநவிற்றுவேன். (௯)

அரசுநின்னரசேயவ்வரசினுக்
குரைசெய்நீதியுரைப்பதுமென்னதே
புரசையானைப்புரவலவென்றுகைப்
பரசினுனுவந்தின்னபகருவான். (௧௦)

ஈனவின்றதுநீசொனியாயமும்
மானமானவெனினுமிவ்வையக
மீனமானவெறிதியைந்தேயொரு
கோனைநீத்திங்கிருப்பதுகூடுமோ. (௧௧)

என்னதாகுகவென்றனையிவ்வர
சுன்னதாகவுந்தளித்தேனினி
முன்னதாகமொழிந்தமுறைப்படி
தன்னதாகத்தனியரசாற்றுதி. (௧௨)

என்றுரைத்தவற்கேற்றனயாவையு
நன்றளித்துநலம்பெறுபொன்முடி
யின்றிவற்கணிவாயென்றியம்பலு
நின்றபுத்திசிகாமணிநேர்ந்தனன். (௧௩)

மன்னர்வேழமுந்தேர்களும்வாசியும்
பின்னுமுன்னுஞ்செலப்பிரியாதுபோய்ச்
சொன்னகோமனைதுன்னிமணிகளாற்
பொன்னினீடியமண்டபம்புக்கனர். (௧௪)

பொன்னுமுத்துமணியும்பொதிந்துபைங்
கன்னல்வாழைகமுகுகலந்துசீர்
நன்னகர்த்தெருவெங்குநலம்பெறச்
சொன்னகாவணந்தோரணஞ்சோடித்தே. (௧௫)

வேதநீர்மைகொள்வேதியரோதநீர்
பூதலத்துளபுண்ணியப்பூம்புன
லாதிமற்றுளதீர்த்தமுமாடல்செய்
தேதநீங்குசடங்குமியற்றியே. (௧௬)

சிங்கவாதனத்தேற்றித்திருமறை
யங்கணர்வாய்மனுவாலமைத்தீந்திடத்
துங்கமாமுடிதன்மனைச்சூட்டினான்
மங்கலஞ்சொலப்புத்திசிகாமணி. (௧௭)

பாரமௌலிபரித்தரியாதனத்
தேர்பொருந்தவிருந்ததருமனுஞ்
சூரியன்னொளிசென்னியிற்சூடிய
மேருமால்வரையென்னவிளங்கினான். (௧௮)

பூவினுள்ளபுராணபுராதனர்
நாவிலாசிநறுமலர்சிந்தினார்
தேவருந்தருமர்மலர்சிந்தினார்
பாவைமாரும்பலாண்டிசைபாடினார். (௧௯)

தீங்குநீங்கியபுத்திசிகாமணிக்
காங்குசெய்வனயாவுமமைத்தனன்
பாங்கினுள்ளவர்கட்கும்படிப்படி
தாங்கொணாதவரிசைசமைத்தனன். (௨௦)

பூத்தபொன்மணிகொண்டுபுதுக்கிய
வேத்துமௌலிமிலைந்ததருமனும்
பாத்திபன்னுழைவந்துபதம்பணிந்
தேத்தினான்றிருநாத்துதியேறவே. (௨௧)

போற்றிநின்றதருமனைப்புன்கணோய்
மாற்றிநல்லுரைவண்மைவளர்த்திநின்
றாற்றுவாய்நெடுநாளிவ்வரசெனச்
சாற்றினானருள்யாவுந்தழைந்துளான். (௨௨)

அன்னவன்றனக்காவனநீதிகள்
சொன்னநற்புவனேந்திரத்தோன்றலு
மின்னறந்தவிருபிறப்பாளுமிங்
கெந்நிலத்தினுளாள்நுவல்வாயென (௨௩)

நேயமோடுகைகூப்பிநிருபனுக்
காயதன்மனுமோதுவனையவென்
றாயுநின்னுழைசார்ந்தமையோர்ந்திடாத்
தீயவேந்துஞ்சினந்தவடன்னையே. (௨௪)

கூவிக்கேட்டுக்குமானுக்காகவோ
பாவியிந்தப்படிமுடித்தாயுனை
யாவிநீக்குவனென்றமைந்தானிடை
மேவியானவன்சீற்றம்விலக்கியே. (௨௫)

மாதைநீமுனியேவிந்தவாறெலாம்
வேதமங்கைவிளைவன்றுநாளையே
தீதிலாதுனக்கேவெளிசெய்குவன்
பூதலத்திலென்றேபுகன்றெனரோ. (௨௬)

வெந்தநெய்யில்வெதும்பியவேந்தனுஞ்
சிந்தையாகுலமுற்றுத்தியங்கியே
யந்தநாளையுமீதறியும்வரைப்
பந்தனஞ்செயச்சொற்றமுறைப்படி. (௨௭)

காவலுக்குளிருந்தனள்கைமையென்
றேவலிற்புகன்றேதன்னுழையுள
வேவலாட்களைநோக்கலுமெய்தியே
பாவையைக்கொணர்ந்தார்நலம்பாறவே. (௨௮)

வந்தகைம்மையுமன்னனைக்காண்டலுஞ்
சிந்தைதேம்பியுணுணஞ்செறிந்துருச்
சந்தமென்மலர்த்தாடன்றலைக்கணிந்
தந்திபட்டபுவியினின்றுளரோ. (௨௯)

நின்றகைம்மையைநேரினிருபனு
நன்றுநோக்கிநகைபுரிந்துன்வலிக்
கென்றுமீறிலவேயென்றியம்பினு
னன்றுபட்டபுண்ணெஞ்சிலயர்த்திலான். (௩௦)

தீதுகொண்டேனைக்கொன்றித்திருநிலம்
பாதிபெற்றனைபாக்கியம்போதுமோ
வேதினும்விருப்பாய்ந்துனக்கீயவிப்
போதழைத்தனன்வேண்டிற்புகன்மினே. (௩௧)

வல்லையுன்னையலாதிந்தமாநிலத்
தில்லைவெங்கொலைசெய்பவரென்பதோர்
சொல்லையேந்தியதோமடந்தோய்நினல்
நல்லையெல்லைசெய்தாய்நலமானதே. (௩௨)

வையமீதுவிலங்கியமந்திரி
யெய்துமாறுதுணிந்தங்கெனைக்கொலை
செய்தநன்பெருஞ்செய்கைமறந்துனக்
குய்தநீர்தலுஞற்றலொழுங்கரோ. (௩௩)

ஆயநன்மையையெண்ணினுமம்மநின்
சேயெனப்புகன்றேனெனக்குந்திருத்
தாயெனச்சொன்னதன்மைதணப்புற
தீயவெங்கொலைசெய்தனைபாவமே. (௩௪)

வேறு.

இன்னவளென்னைச்செய்தகொலையினாலெனக்குநன்மை
துன்னினதெனினுந்தீராச்சூழ்வினையெவர்க்குஞ்சூழ்ந்த
வன்னதுமாறும்வண்ணமகந்தெளிந்தமைந்தகேள்வித்
தன்மநின்கருத்துக்கேற்றதண்டமேசமைத்தியென்றான். (௩௫)

நீதியாணினைந்துசொற்றவிநயத்தினிலைமைதேர்ந்து
பாதகிதன்னையின்றேபடுகளங்கொடுபோய்ச்சென்னி
சேதமிலாதுமாறுகால்கரஞ்சிதைமினென்றே
வேநதினானீர்த்துப்போய்த்தமுழையர்களுஞற்றிமீண்டார். (௩௬)

செய்ததீவினையுஞ்செய்தார்க்கெய்துறுஞ்சகத்திலென்று
மையமேயில்லைமுக்கணீசன்மேலாணையென்றே
துய்யநான்மறைபுகன்றவாய்மைக்கோர்துகளுண்டாமோ
பையுளுற்றுயங்கித்தண்டத்தாலுயிர்பட்டாளன்றே. (௩௭)

தருமனைநகருக்கேகச்சாற்றியாங்கவற்குமிக்க
வரிசைகண்மிதப்பநல்கிவிடுத்தபின்மாமன்றன்னைப்
பொருபடையோடுநும்மூர்புகவெனப்புகன்றான்கேட்டு
மருகனைத்தழுவிப்போற்றியீதுரைவகுப்பதானான். (௩௮)

ஐயவென்புதல்விமேனாளரக்கனாலலக்கணுற்ற
வெய்யதீவினைதீர்த்துன்னைமேவிநன்மாலைவேய்ந்த
செய்கையும்பிறவுங்காணத்தாய்செவிலித்தாயாதி
துய்யமாநகருளாருமருத்திகொடியாஞ்சூழ்ந்தார். (௩௯)

ஈதொருகருமமன்றென்றெண்ணிநீவராதபோதும்
மாதவவடிவோடின்பின்மடநலாள்வருதனன்றோ
வாதலான்முன்னஞ்சொன்னவஞ்சினமகலநீக்கிப்
பேதையைத்தீமுன்வேட்டுப்பெயர்வதேபெருமையென்றாள். (௪௰)

ஆங்கவன்பகரப்புத்திசிகாமணியதுவேநல்ல
பாங்கெனப்புகலக்கேட்டபார்த்திபனதற்குநேர்ந்தான்
தேங்கமழ்தெரியலான்றன்னகாலங்காரஞ்செய்ய
வீங்குநீமுன்செல்கென்னநவமணியெழுந்துசென்றான். (௪௧)

தருமன் பட்டாபிஷேகப்படலம் முற்றிற்று.

ஆகப்படலம்-௪௪-க்குத் திருவிருத்தம்-௨௭௧௩.

௨

விரிஞ்சநகரடைந்த படலம்.

ஒருமுதலாகிக்கவடுமூன்றாகியுலகங்கண்முழுவதுங்கலந்து
வருபலவான்மகோடிகட்கெல்லாமனத்தினும்வாக்கினுமெட்டாத்
துரியமாய்த்துரியாதீதமாய்விபுவாய்த்தொல்லைநான்மறைமுடிவினுஞ்சீர்
பெருமைகொண்மதுரைப்பதியினுமிருந்தபிஞ்ஞகன்பெரும்பதம்பெறுவாம்.

வேறு.

தூதரைவிளித்துத்தாலபுரந்தரன்றனக்குத்தோன்ற
வீதெலாமியம்பியிந்தமுடங்கலையீயென்றீந்தே
மாதுலனன்றுதீர்ந்துமற்றைநாளுதையகாலத்
தாதவனெழுதனோக்கிநகர்செலற்கமைந்தானன்றே. (௨)

இருந்தபாசறைக்கண்விந்தைக்காவனகடன்களெல்லாந்
திருந்துறச்செய்துசேனைமுன்செலத்தேர்மேற்கொண்டு
மருந்தினுமினியதீஞ்சொன்மகளொடுமருகனோடும்
பொருந்திறல்மைச்சனோடுந்தன்னகர்நோக்கிப்போனான். (௩)

முத்தவெண்கவிகையோங்குமும்முரசார்ப்பச்செம்பொற்
சித்திரக்கவரிதுள்ளச்செழுங்கொடிசேணளாவ
சுத்தவெண்சங்கம்விம்மத்தொகுபடைக்கலங்கள்சூழ
மத்தமாமணித்தேர்வாசிவயவர்கண்மருங்குபோத. (௪)

காயெரிசுரங்கானடைகல்வரையருவிபம்பிப்
பாய்நதிபழனஞ்சோலையாதியபரந்தபாரிற்
சேயதெல்லாந்தள்ளித்தனதுநாட்டெல்லைசேர்ந்தா
னயவன்வரவுகேட்டவணிநர்மாக்களெல்லாம். (௫)

மந்திரியேவல்கொண்டுவட்டமாயாறுநூறு
தந்தகாவதஞ்சூழெல்லைத்தடநகர்த்தெருக்களெல்லா
மிந்துவுங்கதிருஞ்சூழ்கொண்டெழுந்துளவுதையம்போலுஞ்
செந்துகிர்மணிபொன்முத்தஞ்செறித்தலங்காரஞ்செய்தார். (௬)

மங்கலவள்ளையோங்குமனையெலாம்வானத்துற்ற
திங்களினிலவுமானும்வெண்சுதைதீற்றித்தீப
மெங்கணுந்துலக்கியிட்டமங்கலமியையவாற்றிச்
சங்கொலிதழைப்பவெண்ணெய்விழாக்களுஞ்சமைத்தாரன்றே. (௭)

விண்ணுடுக்குலமுமுத்தும்வேற்றுமைதோற்றிடாத
வண்ணமாய்க்காவணங்கள்வகுத்துநீண்மறுகுதோறு
மண்ணல்வாண்மனையேபோலுமவரவர்மனைகளெல்லாங்
கண்ணகனுலகுக்கீதோர்கண்ணகமெனச்சூழ்வித்தார். (௮)

கலிங்கமுங்குழையும்பூணுங்கடகமுங்கலவைச்சேறு
நலங்களுநயத்தின்மிக்கநயந்தருமுருவின்மிக்கா
ரிலங்கள்சத்திரங்கடேவாலயமுதலாயெல்லா
மலங்கரித்தழகுசெய்தாரளகைமாநகர்போலம்மா. (௯)

இறையவன்கோவின்முற்றுமிந்திரன்கோவில்போலும்
முறைபடவகுத்துவேறுமருகற்குமொழிநல்லாட்கு
முறையுளொன்றமைத்து வேணகாட்சியுமொருங்குசெய்து
நிறைமதியமைச்சன்வேந்தையெதிர்கொள்வானெறியுநேர்ந்தான். (௧௦)

பூரணகும்பந்தாங்கிப்புரோகிதர்முனிவர்வேத
பாரகர்முதலாயுள்ளோர்பலபெரும்பவுஞ்சுஞ்சூழத்
தோரணவாயினீங்கித்தொடர்ந்தறுகாதநீத்து
நேரெதிர்ந்தரசைப்போற்றிமருகற்கும்வணக்கநேர்ந்தான். (௧௧)

வேறு.

வந்துவந்திருமருங்கினுஞ்சேவடிவணங்கு
மந்தண்மாநகர்ச்சனங்கண்மேலருள்சுரந்தரசன்
முந்துநான்மறையவர்முனிவரர்மொழியாசி
சிந்தையுட்பதித்தவர்பதமலர்முடிசேர்த்தான். (௧௨)

இரண்டுமாக்கடலெழுந்துபார்நடந்ததையேய்ப்ப
முரண்டரும்பலபடைகளுமூரிமாநகர்க்கண்
டிரண்டுவந்துளசனங்களுஞ்சேர்ந்தனசெல்லக்
குரண்டமாடுநீர்த்துறைவனுநகர்வழிக்கொண்டான். (௧௩)

வேந்தன்வெஞ்சமராடியுள்வேடையோடிங்கண்
போந்தவாவுணர்ந்தயர்ச்சியுஞ்சோகமும்போகப்
பாந்தமோடுசென்னெறியெலாம்பார்மகள்பரப்பும்
பூந்தண்காவணநீழலிற்பொலிந்தனபூகம். (௧௪)

உம்பருக்கிடருஞற்றியவொருவனைச்செருவா
யம்பினுக்கிறைசெய்துநம்மிறைவனிங்கடைந்தா
னிம்பரிற்புகழ்பரப்பியென்றெழுந்தெழுந்தெங்குந்
தும்பிபாடினகளிமயிலாடினதுள்ளி. (௧௫)

பிள்ளைமென்மொழிமாதிவணந்துணைபிரிந்து
கொள்ளைவேதனைகொண்டுளாளென்பதுகுறியா
வள்ளைமெல்லியர்வாய்புகன்றுருகுதன்மானுங்
கிள்ளைபேசினபூவைவாய்கிளத்தினவொத்தே. (௧௬)

ஓங்குவெஞ்சமருடற்றிமெய்ப்பசியினுலயங்கி
யீங்குவந்துளார்க்கமுதருத்துதலியல்பென்னுப்
பாங்கிரெங்கணும்பாதவஞ்சினைக்கரம்பரப்பித்
தூங்குதேன்சுவைப்பசுங்கனிசொரிந்தனதுவன்றி. (௧௭)

பசியவட்டிலில்வெண்மணித்தொகைபலபரப்பி
யிசைகொண்மாநகரணங்குகையேந்துமாஞ்சனம்போற்
றிசையெலாந்திரைத்துளியொடுபாசடைசெறிந்து
வசையிலாதமென்வனசநீர்மலிந்தனவாவி. (௧௮)

இன்னபல்வளம்யாவையுமிருகணானோக்கி
மன்னனுந்திருமருகனுந்தனதுமாமகளும்
பின்னுமற்றுளதலைவரும்பெரும்படைக்குழுவுந்
தன்னுடன்வரத்தானுந்தன்னகர்வயிற்சார்ந்தான். (௧௯)

நகரிசார்ந்தவன்னாயகனவமணிகுயின்று
நிகரில்பேரொளிநிரம்பியநீண்மனைபுகுந்தான்
சிகரிமென்முலையரம்பையைக்காண்டலுந்தீர்ந்த
புகரிலாயமுந்தாயரும்புகழ்ந்துபூரித்தார். (௨௦)

தாயைமற்றுளதாயரையாயத்தைத்தழுவி
நேயமுற்றுளவரம்பையுநென்னலிற்பிரிந்த
தூயபாவையும்பூவையுஞ்சுகமுங்கண்டடங்கா
தேயவோகையங்கடல்குழித்தவசமெய்தினளால். (௨௧)

இதற்குமேலிலையவனியிலென்றுபொன்றொகையாற்
புதுக்குமாளிகைவேறுகொண்டீந்திடப்புகுந்தான்
மதிக்குமேலுளமந்திரியுடந்தையாய்மருகன்
கதிக்குவந்தெதிர்புகுந்துளகடவுளைக்கடுப்ப. (௨௨)

அரசனுந்திருமருகனுமரம்பையும்பிறருந்
திருநகர்ப்புகுந்திருந்தபின்சென்றதூதுவர்கள்
விரவுகாலினும்விரைந்துபோய்வீரனைப்பயந்த
புரவலன்சபைபுகுதலுமதற்குமுன்பூபன். (௨௩)

போனமைந்தரையெண்ணிநாப்புலர்ந்துளம்வருந்தி
யானதின்னதென்றாய்தலுக்கமைபடாணாகிக்
கானமும்பலதேயமுநதிருவியேகாண்பான்
மானமந்திரரோடிருந்துசாவுதன்மதித்தான். (௨௪)

பூண்டவன்பினுக்குரியநம்புதல்வர்கள்புகன்ற
வாண்டுபன்னிரண்டடைந்துமூவைந்துநாளான
மீண்டுமொநகர்வந்திலர்வேறுநாமறிதற்
கீண்டுசெய்வினையாதெனவருந்தினேனென்றான். (௨௫)

தெய்வவாக்குநன்னிமித்தமுந்திருமணக்களிப்பு
மெய்திநின்றனமடிக்கடியிக்குறிதப்பா
தையநீங்குதியரந்தையின்றல்லதுநாளை
யுய்தல்காண்பதோர்சோபனநமக்குவந்துறுமால். (௨௬)

என்றுதேற்றலுந்தேறிலனிறைமனம்வருந்திக்
கன்றுகாலையிற்புகுந்துளதூதருங்கான்மேற்
சென்றுபோற்றியேதிருமகன்மணவினைசெப்பி
யன்றுநன்மணமுடங்கலுமீந்தனரன்பாய். (௨௭)

ஆங்குநீட்டியமுடங்கலையவைக்கணோரறிஞன்
வாங்கினனதிவிரைவினிலதின்கணேவரைந்த
பாங்கெலாமுணர்ந்தோதினன்பார்த்திபன்கேளா
வீங்கினன்புயவரைபலவரையுளம்வெள்க. (௨௮)

விரிஞ்சநகரடைந்தபடலம் முற்றிற்று.

ஆகப்படலம்-௪௫-க்குத் திருவிருத்தம். ௨௭௪௧.

தாலபுரந்தரன் விரிஞ்சநகரடைந்த படலம்.

ஆடரவகற்றிச்சூடுபொன்மகுடமணிந்துபொற்கையினிலிருந்த [நீக்கி
வோடொளித்தொருசெங்கோலினைத்தாங்கியுரியவெள்விடைக்கொடி
நாடெலாமீனக்கொடியினைநாட்டிநராதிபர்தனதுதாள்வணங்கக்
கூடலிலிருந்தவொருபெருங்கடவுளிருமலர்ச்சரண்டலைக்கொள்வாம்.()

வேறு.

தனையனும்பெருமந்திரிதனையனும்புரிந்த
வினைநலங்களைக்கேட்டலும்வேத்தவையிருந்தோ
ரனைவருந்தமைமறந்துநின்றாடினர்பாடி
நினைவழிந்தனருவகையாங்கட்குடிநிறைந்தே. (௨)

வந்ததூதுவர்மறுத்திடமறுத்திடவரிசை
தந்தவேந்தனுமம்முறையிரவலர்தமக்குஞ்
சிந்திமற்றுளபூசையும்விழாக்களுஞ்செய்தங்
கந்தணாளரைக்கேட்டனன்செல்லுநாளம்மா. (௩)

இத்தினஞ்சுபதினமிந்தத்தினத்தினுநாளை
யுத்தமத்தினமெனமறையாய்ந்துளாருரைத்தா
ரத்தினங்கழித்தயற்றினங்காலையிலெழுந்தான்
முத்தவெண்குடைமன்னவன்முரசினமுழங்க. (௪)

வேதவேதியர்பண்டிதர்பழையவர்விரகாய்ந்
தோதுமந்திரர்பருணிதர்கருணிகருறவோ
ராதியாயபல்லீட்டமுமனீகினித்தொகையும்
மாதராயமுமோதமொத்திருபுடைவயங்க. (௫)

முந்துதொல்குலக்குரவனும்பிருகுமாமுனியு
மந்தண்மாமுனிக்குலங்களுமமைச்சரினமுதன்மை
மந்திரந்திகழ்சுமந்திராகரனுமற்றவருந்
தந்தம்வாகனந்தனித்தனியூர்ந்துடன்சார. (௬)

தருமமேதருமாபதியுருவெனச்சமைந்த
நிருபன்றேவியுநெறியுரையமைச்சனுக்குரிய
திருமடந்தையுந்தமனியச்சிவிகையிற்செல்லக்
குருமடந்தையுங்கூடினளுயானமேற்கொண்டே. (௭)

கவரிதுள்வரநவமணிக்குடைநிழல்கவிப்ப
நிவரிவானகமுடிக்கொடிகதிர்வெயினீக்க
பவரிலாப்பெரும்புவிமகளிடையினிற்படர்ந்த
வுவரியுங்கடந்தொலித்தனவியங்களினோசை. (௮)

மாதர்பாடலும்வயிரியர்பாடலுமறையோ
ரோதுபாடலுநாதயாழ்முனியுளமுருக்கிப்
பாதலத்துமீதலத்தும்பூதலத்துமிப்பண்ணின்
கீதமேநிறைந்துள்ளவர்செவியெலாங்கிடப்ப. (௯)

எழுந்தமன்னவன்முன்னெழுந்தேகியசேனைக்
கொழுந்துபோய்விரிஞ்சாதிபனகர்வயிற்கூட
செழுந்தண்பூவிரிகானமுநதிகளுந்தீர்ந்தே
மொழிந்தநாள்பலதணந்திடநடந்தனன்முடுகி. (௧0)

ஆறுபத்திருயோசனைகடந்துபோயப்பா
லேறுதேர்முடிமன்னவனெய்தினன்றீந்தேன்
மாறிலாமொழிவிரிஞ்சனுமாநகர்ச்சனமுங்
கூறும்யோசனையிரண்டொன்றுநடந்தெதிர்கொண்டார். (௧௧)

தந்தைவந்துளனாமென்றலுங்கேட்டுளந்தழைக்கு
மைந்தர்சென்றெதிர்தேசிகன்மலரடிவணங்கிச்
சுந்தரத்திருவரசனைத்தாயினைத்தொழுதே
மந்திரிக்கவுன்மகன்றொழவவன்றாள்வைத்தான். (௧௨)

வந்துபோற்றியமைந்தரைமார்புறத்தழுவி
சிந்தைநோயகன்றவ்சமுற்றருகினிற்சேர்ந்த
தந்திரப்பெரும்விரிஞ்சனைமற்றுளசனத்தை
யந்தவேலையிலறிந்துகொண்டார்வமேலடைந்தான். (௧௩)

வணங்கினார்க்கெலாமெதிரெதிர்வணக்கமுமற்றோர்க்
கிணங்குநன்மொழியினிமையுமுறைமுறையீந்தே
மணங்கொடாரவன் விரிஞ்சனோடணிநகர்மன்னிக்
குணங்கொண்மாளிகைபுகுந்துவீற்றிருந்தனன்களித்தே. (௧௪)

தாலபுரந்தரன் விரிஞ்சநகரடைந்தபடலம் முற்றிற்று.

ஆகப்படலம்-௪௬-க்குத் திருவிருத்தம்-௨௭௫௫.

திருக்கல்யாணப்படலம்.

அண்டமுந்தானாய்ப்பிண்டமுந்தானாயண்டமும் பிண்டமுமடங்கா
மண்டுபேரொளியாயெண்டிசாமுகமுமறுவிலாதொருபெருஞ்சுடரா
யண்டருக்கறியாவமலனையடியார்க்கன்பனைச்சோலைகடோறுங்
கொண்டல்கண்ணுறங்குங்கூடனாயகனைக்கூடுவார்கூடுவார்கதியே. (௧)

வேறு.

அரசர்தங்களுக்கோலையுந்தூதருமனுப்பி
விரைசெய்தார்மணமிபற்றுவான்விழவுணர்ந்தருங்கான்
கரவிலாதுமெய்த்தவம்பயில்கௌசிகன்வசிட்டன்
மரிசிரோமசனத்திரிதௌமியன்மச்சன். (௨)

சுகத்துநாரதன்பரத்துவாசன்சுகன்வாம
னகத்தியன்சமதக்கினிகோதமனனந்தன்
நகத்தின்மிக்குகார்ப்புலிமுனிநான்மறைவியாதன்
சகத்தின்மாமுனிக்குலமெலாமன்னகர்சார்ந்தார். (௩)

மாதவக்குலமுனிவரர்வரவறிந்தரசன்
பாதபூசனையருக்கியபாத்தியம்படையா
வாதனத்திருந்தருளவென்றடிபணிந்திரந்தான்
வேதவித்தினராசிசொற்றாண்டுவீற்றிருந்தார். (௪)

அந்தவேலையில்வேலையையகங்கரித்துயர்ந்த
விந்தவெற்பினையங்கையிலடக்கியவிஞ்சைச்
சந்தவெற்பினிலிருந்தருடமிழ்முனித்தலைவன்
முந்துவான்முனிவரர்முகநோக்கியேமொழிவான். (௫)

இவன்கருத்துளகருமமுமினதெனவெண்ணியீங்
கவன்றனக்கினியருளுதன்முறையெனவறவோ
ருவந்துளான்றனையுரைமினென்றுரைத்தலுமுலகிற்
பவந்தராதசொல்விரிஞ்சனும்பணிந்திவைபகர்வான். (௬)

மனதுவந்தருள்வடிகண்மீர்வருவதற்கிங்க
ணென்றுமாதவமிருந்தவாவிருந்தவாவென்னே
தனதுநாயினேனுமதருட்கொண்டுமெய்த்தவத்தா
லின்றென்னச்சொலாவண்ணமோர்பெண்மகவீன்றேன். (௭)

ஏந்துபேரெழிலாள்புவனேந்திரநகராள்
வேந்தன்மாதவவிடலையைக்கண்டுளம்விழைவாற்
காந்தருவநன்மணம்புணர்ந்தாட்கின்றுகடிநாள்
பாந்தமோடுசெய்வதற்குளம்பரிவுகூர்ந்தனனால். (௮)

முன்னமேமணம்புணர்ந்துளமொய்குழன்மகட்குப்
பின்னும்வ்வாரன்பெருமணமுடிப்பதுபிழையா
மென்னவென்னுளமையுற்றதிதுவெளியாக்கிச்
சொன்னமன்றலைமுடிப்பதுங்கடனெனத்தொழுதான். (௯)

கேட்டம்மாதவக்குலங்களில்வியாதனுங்கிருபை
நாட்டமுற்றிதுநவிலுவானராதிபநீயும்
வாட்டநீங்குதிதுதியைமாமணம்புரிவதனாற்
கோட்டமில்லெனக்கூறினதுலகினூற்கோடி. (௧௦)

மருவல்கொண்டுளோன்றன்னையேமறுமணமுடித்தல்
பெருமையன்றெனின்முதன்மணம்பெற்றவள்பினுமோ
ரருமகன்மணம்பெறுவதுமங்கமுமாமோ
குருமுகங்களுஞ்சுருதியும்பிழைபடக்கூறு. (௧௧)

புனத்தின்வள்ளியைப்புணர்ந்துளமுருகனைப்புனத்தி
னினத்துளார்தெரிந்தருங்கடிவியற்றியவியற்கை
மனத்திலெண்ணுதியின்னலுநீங்குதிமகட்குங்
கனத்தமாமணம்புரிகுதியென்றனன்கலையோன். (௧௨)

பாரதந்தெரிந்துரைத்தசெந்நாவினன்பகருங்
காரணஞ்சரிசரியெனமகதயாழ்க்கரத்து
நாரதனெழுந்தாடினன்கோசிகனலமென்
றாரணம்புகன்றான்பிறர்சுவத்தியோதினரால். (௧௩)

மாமன்பேரவைதன்னிலம்மறைபயின்முனிவோர்
தாமடைந்தமைதிருப்புவனேந்திரத்தலைமைக்
கோமகன்மகன்கேட்டுடன்பிறர்வாக்குறுகி
பூமலர்ப்பதம்பணிந்துமாதவர்களைப்போற்றி. (௧௪)

ஆசிபெற்றருகாசனத்திருந்தனனவன்றன்
தேசிகத்திருப்பிருகுவுமினத்துடன்சேர
மாசிலாப்புவனேந்திரன்மலர்முகநோக்கி
யீசனிற்பொலிவசிட்டனுமீதுரையிசைப்பான். (௧௫)

தேவருக்கிடர்விளைத்தருமறைநெறிதிரும்பிப்
பாவகம்புரிதசமுகன்றலைபத்தும்பறித்த
பூவைவண்ணனுநீயுமிங்கல்லதிப்புவிமேல்
யாவரைத்துணையெடுத்துயானறைகுவனம்மா. (௧௬)

விசையனைவிரற்புதல்வரைப்போரினில்வென்ற
விசையும்வீரமுமிவ்வுலகொன்றுமோவிதன்பாற்
றிசையும்வானுமற்றண்டமும்பரந்தனசென்று
நசைமிகுத்தனக்கெவர்பணிவிடைசெயநயவார். (௧௭)

மற்றமாமுனிக்குலங்களுமிவன்புகழ்வாய்மைக்
கொற்றமுமெடுத்துரைத்துநல்லாசியுங்கூறி
முற்றுநன்மணவினைபுரிமுகூர்த்தநாண்மொழிந்தா
ரற்றைநாட்டொடுத்தேழுநாணீத்துப்பின்னம்மா. (௧௮)

வேறு.

மதர்விழித்திருவன்னாட்குமணவணிவதுவையாமென்
றிதரதேயத்துவேந்தர்க்கெழுதியமுடங்கல்கண்டே
யதிர்குரன்மணித்தேர்தூண்டியவாவொடுமதுப்பூவொன்றை
மதுகரமொய்க்குமாறுமாநகர்வந்துமொய்த்தார். (௧௯)

வாவியுநதியுஞ்சென்னல்வயல்களும்வண்டுமாறாப்
பூவிரிபொழிலும்வந்துபுகுந்தனவைம்பத்தைந்து
காவலர்தேயத்துள்ளகடகரிகலினமான்றேர்
பாவையராயந்தாயம்படைப்பெரும்பரவைவெள்ளம். (௨௦)

கலிங்கர்கர்நாடர்சேரர்சோழர்பாண்டியர்காஸ்மீரர்
தெலுங்கர்செஞ்சியர்மராடர்சீனர்சோனகர்பாஞ்சாலர்
புலிங்கர்வங்காளர்கொங்கர்போடர்மாகதர்விராடர்
நலங்கொளிவ்வுலகத்துள்ளநராதிபரெவரும்வந்தார். (௨௧)

மருமலர்க்குழல்வேற்கண்ணாண்மன்றல்காண்பவர்களெல்லாம்
வருகவென்றழைத்தபோலுமாடகேதனங்களாடுந்
திருநகர்தன்னிலெல்லாச்செல்வமுஞ்சிறப்புஞ்சேர
நிருபர்தங்குழாங்களெங்குமிடமறநெருங்கிற்றம்மா. (௨௨)

எண்டலமுழுதுமுள்ளவிறைவரும்படையும்வேறு
கொண்டுளபொருளும்வந்துகுழுமினதோற்றம்பண்டை
யண்டமும்புவியுந்தன்பேருதரமுற்றடங்கநின்ற
வண்டுளாய்ப்பரமனுந்திவனசநேரொத்ததவ்வூர். (௨௩)

அரசர்கணொருக்காலண்டமேலெழுந்தரியதன்மேற்
பொருவினவூழிபோகப்புனன்மதித்தெழுந்துநொய்தில்
விரவுதல்போலும்வெய்யோன்வெம்பரித்தடந்தேரோட்டித்
திரையெறிநறுநீர்மேலைக்கடலிடைச்சென்றுபுக்கான். (௨௪)

வேலையில்வெய்யோன்சென்றுமறைதலும்விரிந்தசெக்கர்
மாலையாம்பொழுதிலாண்டுவந்துளமன்னர்க்கெல்லா
மாலையம்புதிதுவேறுவேறுகொண்டமைவித்தன்ன
சாலையுந்திருத்தியீந்தான்றராதலவிரிஞ்சர்கோமான். (௨௫)

உண்டனருடுத்திப்பூசியணிந்துகண்ணுறக்கமர்ங்குக்
கொண்டனர்பண்டையின்பங்கொண்டுளகுமரனோடு
மொண்டொடிதானுங்கங்குனீங்குழியுற்றுநோக்கி
யெண்டருமனத்துட்காமன்படைபொரத்துயினீத்திட்டார். (௨௬)

கானெலாமுலவுந்தென்றற்கடும்புலியிவர்கண்மெய்யி
னூனெலாஞ்சுவைப்பவங்கமுடைந்துயிர்ப்பயரும்வேலை
மீனெலாமுடலின்புள்ளியாமெனவிளங்கத்தோன்றி
வானெலாமுடலமாகிமதிப்புலிவந்ததம்மா. (௨௭)

மந்தரவரையால் வானோர்மகோததிகடைந்தஞான்று
சிந்தியவமுதத்துள்ளியள்ளியேதிரட்டிவைத்த
சுந்தரமணிப்பொன்முத்தின்குடமெனச்சுதைததும்ப
விந்துமேலெழுந்தவானத்திருங்சடன்முகட்டினின்றே. (௨௮)

காவெலாங்காமன்காளக்கோகிலங்கனிந்தசெந்தேன்
பூவெலாமவன்வின்ஞாணுஞ்சுரும்பினம்போர்ப்பப்பூவா
மேவெலாமாவின்வாங்கியேவுமோரேவம்வைக்கு
மாவமுமிவர்கண்மெய்யேயாகினவணங்கற்கம்மா. (௨௯)

கங்குலும்விடமாய்த்தென்றற்காற்றும்வெங்கூற்றாய்த்தோன்றுந்
திங்களுந்தழலாய்வாட்டச்சிந்தையுள்வருந்தித்தேம்பி
மங்கையுமன்னையெண்ணிமாழ்கினாண்மன்னன்றானு
நங்கையையெண்ணியெண்ணிநாவுலர்ந்துடலனைந்தான். (௩௦)

இருவர்க்கும்பழையவின்பமிடையினிற்றடைப்பட்டந்தோ
வொருவினாலென்செய்வாரீதுணர்விலாதுருவிலான்செய்
பொருசமர்க்கஞ்சிக்கங்குற்போதுபோம்பாதைநோக்கி
யொருவரையொருவர்காணக்கண்படையொழித்துநின்றார். (௩௧)

ஐயனுந்தையருணுமகன்றுளவின்பமெல்லா
மெய்படப்புணர்த்துநாளினாண்மன்றல்விளைவுகாண
வெய்துவேறெய்திலென்னவெண்ணிவந்தெழுந்தான்போலும்
வெய்யவன்கீழைவேலைமுகட்டிடைவிளக்கஞ்செய்தான். (௩௨)

முனிவர்சொல்லேழுநாளுமுற்படக்கழிந்தபின்னற்
றனிமணமியற்றுநாள்வந்தடுத்தலுந்தரணிவேந்த
னினிநகராதிநந்தமூரெலாமணிகவென்றே
யனைவர்க்குமறியயானையேன்முரசறைமினென்றான். (௩௩)

மணமணிமுரசிரைந்தமாநகர்முழங்கக்கேட்டாங்
கணவிண்ணவர்களொடுயளக்கருநிதிக்கோனொடும்
பணமுடியுரகர்நாடு மற்றுளபதியுமிந்தக்
குணமிலையென்றுசெம்பொன்கொண்டுவேய்ந்தழகுசெய்தார். (௩௪)

இலங்களின்சுவர்செம்பொன்னாலிழைத்திடையிடையின்முத்த
நலங்கொளக்குயிற்றிமேன்மேனவமணிவிதானந்தூக்கித்
தலங்களைக்கலவைச்சேறுன்மெழுகிச்சந்தனக்கோலங்க
ளலங்கரித்தெவர்க்குந்தீம்பாலனமுதற்பிறவுமீந்தார். (௩௫)

நேரினிலிமையாவானோர்நிலமிசைவருதற்கான
காரணம்பாருமென்னக்கவின்பெறத்தெருக்களெல்லாந்
தோரணநட்டுச்சோபானங்களுந்துலக்கிச்செம்பொற்
பூரணகுடங்கள்வைத்துத்தீபமும்பொலிவுசெய்தார். (௩௬)

பண்டையகலனுந்தூசுநீத்துளம்பரிவால்வேறு
கொண்டுதத்தமக்கேமன்றற்கூட்டுதல்குறிக்கொண்டாங்கே
விண்டதுபோலுந்தேசுநலந்தரவிளைவுகண்டார்
வண்டடைகுழலினாருமதுகைவாட்கையினாரும். (௩௭)

பன்னிருகாதத்தெல்லைப்பரப்புக்கொண்டுயர்த்திவான
மின்னிருகாதம்வீசவிளங்கொளிபலவுஞ்சூட்டிப்
பொன்னிருமணியுமுத்தும்புனைந்துளமணமாடத்தின்
மன்னிருவோரும்புக்கார்மற்றுளமன்னரோடும். (௩௮)

பாணித்தவிதியாற்சிங்கப்பிடர்மிசைப்பலகைகூட்டி
யாணிப்பொன்றாளக்குப்பையருகுவேய்ந்தழகுமின்னு
மாணிக்கப்பீடமீதுமணவினைக்குரியவெல்லா
மேணிக்கையோடுசூழ்கொண்டிருபிறப்பாளராற்ற. (௩௯)

நவமணிதன்னைக்கூய்நீநந்திருமருகன்றன்னை
யிவணழைத்திடுவாயென்னவேவலிற்றிரம்பானேகிப்
புவியினிற்சிறந்ததாலபுரந்தரன்புதல்வன்றன்னை
யவனடைந்திறைஞ்சிக்கூறவாண்டுவந்தெழுந்தவீரன். (௪௰)

புண்ணியநதிகளெல்லாம்புகுந்துமாதவர்கடந்த
வெண்ணறுந்தீர்த்தம்யாவுங்குடைந்துமெய்யீரம்போக்கிக்
கண்ணொளிமழுங்குஞ்செம்பொற்கோசிகங்கவினவார்த்து
நண்ணுபேர்நாமமிட்டான்றன்குலநாமந்தோன்ற. (௪௧)

ஆரகேயூரஞ்செம்பொனரைவடம்மதாணிகண்டி
நேர்படப்புனைந்துதிண்டோளங்கதநிறையச்சாத்தி
வார்குழலிறுக்கிச்செம்பொன் மணிக்குழைகுழையிற்றூக்கி
மேருமால்வரையினுச்சிக்கதிரெனமகுடம்வேய்ந்து. (௪௨)

மற்றையவணிகளெல்லாம்வரன்முறைமலியக்கொண்டு
கற்றைவெண்கவரிவீசக்கவிகைமேனிழற்றச்சங்கம்
வெற்றிகல்யாணிசூடிமும்முரசியங்கள்விம்மப்
பொற்றடந்தேர்மேற்கொண்டுபுறப்பட்டான்புவனதேவன். (௪௩)

வீதியிற்பவனிசெல்லும்வீரனைக்கண்ணிற்கண்ட
மாதருமாதரங்கமகரநீர்புதிதுகண்டாங்
காதரித்தெதிர்கொண்டேறுமாறுபோல்டைந்துமொய்த்தார்
காதன்முன்செல்லநாணம்பின்செலக்கவறல்கொண்டே. (௪௪)

நாணெலாம்பின்னேயோடநாரியர்மெய்யினாறும்
பூணெலாமுன்னேயோடப்புனைதுகிற்பொலிவுமாழ்கி
யாணெலாம்பெண்ணாய்த்தோற்றவைத்துளவரசன்றன்னைக்
காணலேயன்றியன்னார்மற்றொன்றுங்கண்டிலாரால். (௪௫)

நாரணனன்றுகாமனன்றுநன்றொளிர்செஞ்சூட்டு
வாரணத்துவசனன்றுவானவர்க்கிறைவனன்று
தாரணிதனிலேயிந்தத்தராதலவிரிஞ்சனாற்றுங்
காரணத்தவங்கண்டிங்குவந்தருள்கடவுளென்பார். (௪௬)

இன்னவன்வடிவுகண்டவெழிற்றிருமடந்தையன்ன
கன்னியும்பின்னைவேறுகாசினிதன்னையாளா
மன்னரைநினையாளென்றல்பெருமையோமறனென்றாலுஞ்
சின்னமாய்நினைத்தலன்றிச்சிந்தனைசெய்யாளென்பார். (௪௭)

பொன்மணிக்கவிகைகாணார்புரிவளைத்துழனிகேளா
ரின்னியமுழக்கமோராரிவனையேமுழுதுநோக்கி
மின்னிடைமகளீரெல்லாம்வீதிவாயொருவனாக
மன்னியதென்கொலந்தோதமியனோவள்ளலென்பார். (௪௮)

ஏவினாற்பகையைவென்றிங்கெய்துநின்வடிவுகாண
மேவினநங்கண்மீதுவிழியழல்பட்டுவீய்ந்த
பூவினானிடையில்வந்துபொருதினான்றனையும்வென்றெம்
மாவியுஞ்சாதபோதாண்மைமாசடையாதன்றோ. (௪௯)

கலன்களுந்தூசுநாணுங்கழீஇயநின்வடிவுகாணா
நலன்களிற்பட்டுநையுநங்களைவிலங்கியென்னே
புலன்களும்பொறியுஞ்சோரப்புகுந்துகொண்டேகாநின்றா
யலங்கலின்வீரற்கீதோராண்மையோயறமோவென்பார். (௫௦)

வள்ளலென்றிவனைக்காணவந்ததுபிழையேநந்த
முள்ளமுநாணும்பூணுமுணர்வுமற்றுளவுமீண்டு
கொள்ளைகொண்டகலாநின்றானொருவருங்குறிக்கொணாத
கள்ளனிங்கிவனைவாளாவிடுவதோகருமமென்பார். (௫௧)

என்மனத்திருந்தானிந்தவேந்தலென்றொருத்திக்கோதித்
தன்மனத்தடங்காவோகைததும்பினளவளுமென்னே
புன்மனக்காமங்கொண்டுபுலம்பினயிவனுமென்றன்
நன்மனத்திருந்ததோராநவில்வதுநியாயமாமோ. (௫௨)

மதர்விழித்திருவினல்லார்மயலொடுபுலம்பிநிற்ப
விதரதேயத்துவேந்தரிறைஞ்சவந்தியர்கள்வாழ்த்தப்
புதுமணக்கோலம்வேய்ந்தபொன்னகர்வலமாய்ப்போந்து
வதுவைமண்டபத்துட்புக்கான்மங்கலமுரசமார்ப்ப. (௫௩)

ஆதவனுதயநோக்கியரும்புனற்றடங்கண்மல்குஞ்
சீதமென்னளினப்போதுசேயிதழ்விரித்தாலொப்ப
நீதியான்புகுதலோடுநிறைந்தபேரவைக்கணுள்ள
பூதலவேந்தர்செங்கணிணைமலர்பூத்ததன்றே. (௫௪)

மணிகுடங்கவரிபேரியங்குசம்வயங்குதீப
மணிகிளர்துவசமாடியரியமங்கலங்களெட்டும்
பணியினர்பரித்துநேர்வந்தேந்தப்பல்லாண்டுகூறக்
கணிதநூன்மறையோர்வாழ்த்தக்கடிமணமாடஞ்சார்ந்தான். (௫௫)

தன்பெருங்குருவைப்போற்றித்தாதையைத்தாயைச்சேவித்
தன்புகொண்மாமன்மாமிபதமலரங்கையேத்தி
நன்பெருமுனிவர்துய்யநான்மறையவர்களாசி
யின்புறவணிந்துமன்றற்றவிசிடையிருந்தானேந்தல். (௫௬)

ஆதனத்திருத்தலோடுமாதுலனருகினின்ற
மாதரைவிளித்துவல்லையெனதுமாதவத்தில்வந்த
பூதலத்தரம்பைதன்னைப்புதுமணக்கோலஞ்சூட்டித்
தீதிலாதிங்குகூட்டிவம்மெனச்செப்பிவிட்டான். (௫௭)

பொருக்கெனவெழுந்துசென்றபூவையர்நால்வரோடித்
திருக்கிளரரம்பைபாதஞ்சென்னியிற்சூடியம்மா
மருக்கிளர்வதுவையாற்றமன்னவைதனக்கின்றுன்னை
விருப்பொடுமழைக்கச்சொற்றான்றந்தையாம்விரிஞ்சனென்றார். (௫௮)

கேட்டனண்மகிழ்ந்துபச்சைக்கிளிமொழிமயிலினளும்
வாட்டமுஞ்சடைப்புநீங்கிவாண்முகமதியமொத்தா
ளாட்டினார்கங்கையாதியரும்புனற்கலசநன்னீர்
கூட்டியபனிநீர்சாந்துமான்மதம்புழுகுகோட்டி. (௫௯)

புனைசடையவிழ்த்துள்ளீரமகிற்புகைகொண்டுபோக்கி
வனைதுகிற்காவிநீக்கிமருங்கினிற்பிறங்குஞ்செம்பொன்
றனையிழைநூற்றுச்செய்ததனிப்பசும்பட்டுக்கட்டி
யனையமுந்தானைமேற்கொண்டணிந்தனளழகுமின்ன. (௬௦)

வேறு.

எதிரிலாடியொன்றெடுத்தொருமடவரலேந்தத்
துதிசெய்சேடியர்தோகையையாற்புறஞ்சூழ்ந்து
மதியைமற்றொருமதியினுன் மதித்தணிவதுபோற்
புதியபொன் மணிக்கலன்களாலுடலினைப்புதைப்பார். (சுக)

ம்ாந்தளுண்டுவாயுமிழ்தருபான்மதியேய்ப்பக்
காந்துபன்மணிச்சில்லணியுச்சியிற்கட்டிப்
போந்துபொன்முகமதியநீள்புறங்கிடந்திலங்க
பூந்தண்வார்குழல்வகுப்பெடுத்தருஞ்சடைபுனைந்தார். (சுஉ)

வட்டவாண்மதிநடுவினின்மற்றுமோர்மதிவந்
திட்டதாமெனமுகமதிக்கிடைப்படுநுதலிற்
சுட்டியிட்டனர்சுமாவிருக்காதெனுந்துணிவாற்
கட்டியிட்டவாபோன்றெழிற்பட்டமுங்கட்டி. (சுங)

ஆசைகொண்டுளகாமுகர்மனங்கவர்ந்தலைக்கு
மூசலொத்தவார்குழையினுக்கொளிர்மணிக்கலன்க
ணேசமோடணிந்தவிர்மணிமூருகுமேனிறைத்தார்
மாசிலார்மனமுருகுமாறிதுவெனமதித்தே. (சுச)

கருமையென்பதெனருமையோவிதனலங்கலந்து
பெருமைகொண்டதென்றடிக்கடிபிறர்நலம்பேசற்
கிருமைகொண்டிருவிழியினுக்கெழுதினார்சிந்தை
யொருமைகொண்டவரிருமையுங்கைவிடுத்துருக. (சுரு)

முத்தெனப்பெயர்படைத்தநாமிவண்மணிமுறுவற்
கொத்துறுதலகிருப்பதிலுருவினையொழித்தன்
மெத்தநன்றெனநான்றுயிர்விடுவதைமானும்
நத்தணிந்தனர்நாசியினிலவொளிநால. (சுசு)

பூணின்மிக்கவைநாணவைபுனைவதற்கிடமிக்
காணினம்வயினுளதெனவுரைசெயுங்கவின்போ
லாணிமிக்குபொன்னட்டியல்களநதனிலணிந்தார்
மாணின்மிக்குமேனகையெழிற்கழிவுசெய்மடவார். (சுஎ)

உலப்படுத்திடாத்தராசங்கமிட்டொழித்துப்
பலப்படுத்தியபருமுலையானையைப்பின்னும்
புலப்படுத்திடாப்புரிந்துளபாகரைப்போலும்
நிலைப்படுத்தினர்வடங்களுமாரமுநிறைத்தே. (சுஅ)

காந்தண்மென்மலரிதழ்தொறுங்கனகவண்டினங்கள்
போந்ததாமென்மோதிரம்விரல்களிற்புனைந்து
மாந்தர்கண்கதுவாவகைவச்சிரயாப்புச்
சேர்ந்தபொன்மணிக்கடகமுந்தொடிகளுஞ்செறித்தார். (சுகூ)

விரியுஞ்செங்கதிர்ப்பவளமுந்தாளமும்விரவிப்
புரியுநூலினிற்கோத்துமுன்காத்தினிற்புனைந்தா
ரரிவையின்றிருவழகினுமழகுமேற்சரியச்
சரிவனைந்தனர்புவியெலாஞ்சரிசரியென்ன. (௭0)

கட்டுபூங்கழற்சுமையினுற்கனதனப்புரையால்
வட்டவாளுதன்மடக்கொடிகொடியிடைவருந்தா
திட்டபூணினுங்கவின்மணிச்சுடர்குழைத்தெரியு
மொட்டியாணமுங்கட்டினார்சிட்டர்மெய்யுருக. (௭௧)

கலாபமேகலையிருசிகைபருமநற்காஞ்சி
நிலாவணிப்பணிநிதம்பமேனியைநிரைநிறைத்தார்
பலாசனம்படுமொழியினாள்பதுமமென்பதமேல்
விலாசநூபுரமிலைந்துபொற்சதங்கையுமிட்டார். (௭௨)

அட்டபாலினுந்தேனினுமருங்கனியினுஞ்சீ
ரிட்டவொப்பனைபுரிந்துகண்ணேறிவண்மீது
பட்டிடாவகையொதுங்கிடத்தெய்வதம்பாவித்
திட்டிசுற்றியேவிடுத்தனருலகெலாந்திகைப்ப. (௭௩)

மாலையிற்பொலியாமருவானவர்மேனாள்
வேலையிற்கடையாமருந்தணிமலர்விருக்கச்
சோலையிற்பொருந்தாக்கனிசுவைத்திடாவிரத
மரீலையிற்படாக்கரும்பெனவிளங்கினாளம்பை. (௭௪)

பொன்னின்பாவையும்பூவையும்புதுமடக்கிளியு
மன்னமன்னதன்பாங்கியாங்கையிற்றாங்கி
முன்னும்பின்னும்மொய்த்தேகிடமுத்தவெண்கவிகைச்
சென்னிமேற்றருநிழலொடுசிறுநிலவெறிப்ப. (௭௫)

வேறு.

இருபுறங்கவரிவீசவெழின்மணித்துவசஞ்சூழ
பொருதுகில்விதானநீழல்போர்த்திடப்பொதியவிழ்ந்த
மருமலர்க்குழலினார்கண்மங்கலவள்ளைபாடப்
பெருமழையென்னச்சங்குபேரியின்னியங்களார்ப்ப. (௭௬)

வேறு.

கொத்துமலரும்பனியினீருமிடைகொட்டி
மெத்தையினெடுந்துகிலின்மென்படம்விரித்தே
தத்தைமொழியார்புடைவளைந்திருகைதாங்க
மத்தகமுலைத்திருமடந்தையுநடந்தாள். (௭௭)

இன்னதிருமாதுபுவனேந்திரனலாமற்
பின்னையொருவர்க்குரிமைபேணுதல்செயாளென்
றுன்னுபுமெனப்புகலுசந்துரையினொப்ப
வன்னவள்பதத்தணிசிலம்பொலியலம்ப. (௭௮)

முத்துமணிமாலைமணிமாலைமுலைமாலை
வித்துருமமாலைமுலைமீதொளிவிரிப்பப்
புத்தமுதினும்மினியபுன்னகைவிளங்கச்
சத்திரவிழிக்கடைதழைந்தருடதும்ப. (௭௯)

தண்டலைநறுங்குழலின்மீதுகுடிதங்கும்
வண்டுகள்கலைந்தொலியடிக்கடிவழங்க
வுண்டுமெனவோதுவதலாமலொருநாளுங்
கண்டுபிடியாவிடைகவன்றொசிதல்காட்ட. (௮௦)

மேலையசுரேசர்முழுதும்விழிதன்மேவ
மாலையுருவானதிருமாலையுமயக்குங்
கோலவுருவானதிவடன்னிலைகுறித்தே
ஞாலமிசையாவரெவைநாவினவில்கிற்பார். (௮௧)

இட்டபடமீதினிலெடுத்தவைவருந்தா
தொட்டிநடைபெற்றுவருமோவியநிகர்ப்ப
மட்டவிழ்மலர்க்குழலிமன்றல்புரிமாடங்
கிட்டினளிருந்தவரெலாந்துனிகிடப்ப. (௮௨)

தாதையுறையாசனமடைந்துதலைதாழா
மாதயலொதுங்கிமடமாமயிலினாணிக்
கோதையர்கள்கும்பலொருகொம்பெனவொசிந்தே
பாதமலரைக்குறிகொள்பார்வைகொடுநின்றாள். (௮௩)

நின்றமகண்மீதருணிறைத்துளவிரிஞ்சன்
நன்றுமணவாளனொடுநேற்றவிசிருத்தி
மன்றல்புரிதற்குரியயாவும்வருவித்தே
யன்றுமறையாகமவிதிப்படியமைப்பான். (௮௪)

வேறு.

மருமகன்றிருமலர்க்கரமீதினின்மகடன்
பொருவுமெல்லிதழ்க்காந்தளின்கரமலர்பொருத்திப்
பெருகுதூரியமுழங்கிடப்பேரருள்விரிஞ்சன்
றருமலர்ப்பெருங்கரத்தினாற்றாரைநீர்வார்த்தான். (௮௫)

நாதயாழிசையிசைத்தனர்நாரதரிசையின்
கீதமங்கலம்பாடினர்கிளிமொழிமகளி
ரோதுநென்மணிதூவிநல்லாசிகளுரைத்தார்
வேதவேதியர்விரிமலர்சிந்தினார்விபுதர். (௮௬)

நெய்பசுந்தயிர்பாலறுவகைச்சுவைநிறைத்துச்
செய்யதீங்கனிதேங்கனிபோனகஞ்சேர்த்தே
துய்யபாசனத்தமைத்திடத்தோகையாற்றோன்றல்
கையினாற்றொடப்புரிந்தவரோடுளங்களித்தார். (௮௭)

துடுவைமென்னடுநர்வினானெய்க்குடஞ்சொரிந்து
படுசமுத்தொடுதிரவியமாகுதிபண்ண
யிடுபதார்த்தமுண்டிருவிலாப்புடைத்துடல்வீங்கிச்
சடசடப்பொடுவலஞ்சுழித்தெழுந்தெரிதயங்க. (௮௮)

நெய்முகந்தழல்வேள்வியினாகுதிநிரப்பிச்
செய்யுநான்மறைச்சடங்குநூல்கரைந்தபின்செம்பொன்
றுய்யமங்கலநாணணிதோகைமென்கழுத்தி
லையனுந்திருக்கரத்தினாலணிதரவணிந்தான். (௮௯)

பொரியையங்கையின்வாங்கிமூவலங்கொடுபோற்றி
யெரியினிட்டுணவாற்றிநல்லிறைவனுமயிலும்
புரியுநான்மறைச்சடங்கெலாம்புரிந்தபின்மறையோர்க்
கரியபொன்னிதிமுதலியதானமுமளித்தே. (௯0)

கைகளான்மணிச்சதங்கைநூபுரவொலிகறங்குஞ்
செய்யதாண்மலரம்மியிலேற்றியேதேவிக்
கையமின்றிவானமர்ந்துளவருந்ததியெனுமீன்
றுய்யகற்பினைத்துதித்தெதிர்காட்டினான்றோன்றல். (௯௧)

மலரில்வாசமும்புனலினிற்குளிர்ச்சியுமதியின்
நிலவும்பொன்னினிலொளியுமொப்பாமெனநிறைநீ
ருலகும்வானமும்பிறவுநின்றுவந்தினிதுரைப்பக்
குலமடந்தையுங்குரிசிலுமலர்க்கரங்கோத்தே. (௯௨)

குருவைநான்மறையாளரைக்குரவரைத்தலையாற்
பரவிமற்றுளயாவர்க்குநல்லுரைபகராப்
பொருமணிக்குலக்குவையினாற்புதுமலர்ச்சுமையாற்
றிருமணத்தினுக்காற்றியமணவறைசேர்ந்தான். (௯௩)

சேர்ந்தசெம்மலுமீளவும்பேரவைசேர்ந்து
கூர்ந்தநண்பினோன்றனக்குநன்மணஞ்செயக்குறித்தா
னோர்ந்தமாதுலன்மருமகன்கருத்தினுக்கொத்துச்
சார்ந்தமாமணமியற்றுதற்காவனசமைத்தான். (௯௪)

வேறு.

எத்திசையும்புகழ்ந்தருளுமெழிலமைச்சனவமணியின்
புத்திரியாமேனகையைப்பூபாலர்சூழ்சபையி
லத்தினஞ்சித்திரம்போலுமம்பொன்மணிக்கலன்பூட்டிப்
புத்திசிகாமணிதனக்கும்புதியமணஞ்சூட்டினனால். (௯௫)

வேறு.

மன்றன்முடிந்ததற்பின்மாதவந்தேரும்முனிவர்க்
கன்றுசெயுங்கடன்கள்யாவும்புரிந்ததற்பின்
நின்றமுடிமன்னர்சட்குணீகரமாக்களுக்கு
நன்றுவிருந்தாற்றியாவுநயந்தளித்தே. (௯௬)

சங்கப்பெரும்படையுந்தார்வேந்தரும்பலரு
மங்குதத்தமாநகருக்கேகவழியனுப்பிப்
பங்கமிலாதுள்ளத்தெழுந்தபரிவினொடுஞ்
சங்கையறவீற்றிருந்தான்றன்பேர்மருகனொடும். (௩௭)

திருக்கல்யாணப்படலம் முற்றிற்று.

ஆகப்படலம்-௪௭-க்குத் திருவிருத்தம்-௨௲௱௨.

தன்னகர்சென்றபடலம்.

தேடருநிதியையடங்கொளுமதியைத் திருமணிச்சுடிகையம்படமா
ராடரவணிந்தவங்கனை மங்கைபங்கனையமலனையரும்பாப்
பாடுதலருளியென்பணியேற்கப்பதமலருதவியபரனைக்
கூடலுறையகனைச்சொக்கநாயகனைக்கும்பிடுவாற்கிலைகுறையே. (க)

வேறு.

மும்மதிதணந்தபின்னர்முகின்முலையரம்பையோடுஞ்
செம்மதித்தாதையோடுந்திருநகர்செல்வானெண்ணி
யம்மதிகங்கொண்மாமற்கோதினனவனுங்கேட்டுச்
சம்மதிகொடுத்தான்றன்பேராசையுந்தத்தஞ்செய்தே. (௨)

பார்நிதிகவிகைபீலிபரிகரிபணிபொன்னுடை
தேர்நிரைகவரிகுஞ்சஞ்சேயிழையவர்கள்கூட்ட
மேர்பெறவிருந்தவெல்லாமினிதுவந்தீந்தேதன்னுந்
தார்புனைவிரிஞ்சர்கோமான்மருகனைத்தழுவிச்சொல்வான். (௩)

ஐயநான்வருந்தியீன்றவரம்பையையரசைநிற்குக்
கையினாலுதகம்வார்த்தேனெனக்குளகடன்களெல்லாஞ்
செய்வதுன்கடனேயல்லாதிலையெனச்செப்பிப்பின்னும்
பொய்யிலானேகவென்றுபுகன்றனன்மனம்பூரித்தே. (௪)

ஏகெனச்செல்வுதந்தவேழின்முடிவிரிஞ்சன்றன்னைப்
பாகினுமினியதீஞ்சொன்மாமியைப்பரவிமென்பூங்
கோகிலமனையாளோடுங்கொடிஞ்சியந்தேர்மேற்கொண்டு
சேகரக்கிளையுமற்றைச்சேனையுஞ்சேரச்சென்றான். (௫)

விரிஞ்சநாடகன்றுகானும்விலங்கலுநதியுநீத்துப்
பெருஞ்சுரநிலனுந்தள்ளிப்பெய்மழைமுகில்சூழ்வான
முரிஞ்சுமென்கொம்பர்வாய்ப்புற்றும்பர்பொன்னுலகம்போலுந்
தருஞ்சிறப்புளதோர்சோலைகண்டதிற்சார்ந்தானன்றே. (௬)

தேக்ககிற்கடம்புபுன்னைதென்னைகோங்கிலவுசாதி
யாக்குருந்தரசுசந்துவருக்கைமாதளைவேய்பூகம்
மேக்குயர்ந்துயர்ந்தவைந்தூதருக்குலம்வெட்கித்துக்கப்
பூக்கிளர்ந்தழகுவாய்ந்துநின்றதப்பொங்கரம்மா. (௭)

கிள்ளைகோகிலமென்கூதங்கேக்யங்குராங்குபூவை
கொள்ளைசேர்ந்திரைகொள்சாலமகீருகங்குறைபடாத
கள்ளவிழ்மலர்மென்சோலைக்கண்புகுந்தரியசெவ்வேல்
வள்ளலுமமைச்சுந்தானைமன்னரும்வதிந்தாரன்றே. (௮)

தங்குலத்தரசன்வெம்மைசார்ந்தனனென்பதெண்ணி
யங்கவற்குதவிசெய்வான்போன்றுவானதனினின்றுஞ்
பங்கயஞ்சாம்பச்சேதாம்பன்மலர்ந்தழகுகாட்டச்
செங்கதிர்ச்செல்வன்மேலைத்திரைக்கடல்சென்றுபுக்கான். (௯)

தாமரைசாம்பச்சேதாம்பன்மலர்ந்தழகுதங்கப்
பூமலிதடமுஞ்சோலைப்புறவமும்புறவுஞ்சூழ்ந்து
காமர்வெண்கலைகண்மொய்ப்பக்கங்குலைக்கரைத்துச்சீத
மாமதிவிளக்கஞ்செய்தான்மருமகன்வேடைமாற. (௧௦)

உத்தமக்கலைகொளிந்துதன்குலத்தொருத்தியோடும்
வித்தகனடைந்தானென்னும்வேட்கையின்விளைவுதூண்ட
முத்தினாற்றிருத்திவானமுழுவதுமுடித்துவைத்த
சித்திரப்பந்தல்போலுஞ்செறிந்தனவுடுக்களெல்லாம். (௧௧)

குயில்கிளிபூவைமாருக்குளிர்பொழிலிடங்கடோறும்
பயில்சிறைவண்டுபாடப்பசியமென்கலாபந்தூக்கி
மயிலினநடிப்பமந்தாநிலமலர்வாசஞ்சிந்தக்
கயல்விழிமாதுந்தானுங்களித்தகமோடுவைகா. (௧௨)

முத்தினான்மணியாற்செம்பொனிழையினான்முழுதுஞ்செய்த
சித்திரப்படங்களுற்றித்திருவிளக்கமையவேற்றி
யத்தலத்தமைத்தமஞ்சத்தலந்தொறுமணிவாள்வீரர்
தத்தைமென்மொழியாரோடுந்துயில்கொளுந்தகைமைசார்ந்தார். (௧௩)

உறங்கினவேந்தரீட்டமுறங்கினவமைச்சரீட்ட
முறங்கினவீரரீட்டமுறங்கினமகளிரீட்ட
முறங்கினதந்தியீட்டமுறங்கினவாசியீட்ட
முறங்கினபேரிசங்கமுறங்கினவுள்ளவெல்லாம். (௧௪)

உலகெலாமுறக்கங்கொண்டதுலகினுக்குயிரேயன்ன
தலைவனுந்துயின்றான்மாதுமடியின்மேற்றலைவைத்தந்தத்
திலகவாணுதலினாளுந்துயின்றிலள்சிலைவாளேந்தி
நிலைபெயராதுபுத்திசிகாமணிகாத்துநின்றான். (௧௫)

இருவருந்துயிலாதங்குகண்ணிமையாவண்ண
மொருவருக்கொருவரோயாதுள்ளனகதைகள்பேசி
நிருபனைக்காத்தல்செய்தார்நடுநிசிநேரந்தன்னிற்
பெருவினையொன்றுண்டானததனிலைபேசுகிற்பாம். (௧௬)

கும்மல்கொண்டகன்றுநீண்டுமகிருக்குறைபடாத
வம்மரப்பொதும்பர்நாப்பணயனுறையண்டந்தாவி
யெம்மரத்தொகையுமிந்தமரத்தினுக்கிணையின்றென்னுஞ்
செம்மலர்க்கிளைகள்வாய்ந்ததெய்வவான்விருக்கமொன்று. (௧௭)

முப்புவிதன்னிலான்றமூதறிவுடையோராலுஞ்
செப்புதற்கரியவந்தச்செழுமலர்த்தருவினுச்சிக்
கொப்பினிலண்டரண்டப்பறவைகளிரண்டுகூடி
யெப்பொழுதேனுநீங்காததிற்குடியிருந்துவாழும். (௧௮)

அங்கவைகளுக்குட்பேடைசேவலையன்பானோக்கி
யிங்கிவர்யாவர்யாதுபதியிவணெய்தற்குற்ற
சங்கையெனுள்ளமெல்லாஞ்சங்கைதீர்ந்தெனக்குத்தோன்றப்
பங்கமில்லாதுசொல்வாயென்னவாண்பறவைகூறும். (௧௯)

சிவனயன்மாலேயன்றிச்சிறியவென்னுவாற்றேறி
யிவன்செயலெடுத்துச்சொல்லற்கேயுமோயிவன்றனூரும்
புவனியிலழகுவாய்ந்ததிருப்புவனேந்திரமாகுங்
கவனவெம்பரியான்பேருந்திருப்புவனேந்திரன்காண்டி. (௨௦)

மந்திரியோடுதேசவளங்குறித்திணையிலாத
கந்துகங்களின்மேற்கொண்டுகாசினிமுழுதுநோக்கி
வந்தபோதமைச்சனீங்கமாதிவடன்னைச்சேர்ந்து
நந்துசூழ்தடாகத்துள்ளோர்சுரங்கத்தினண்ணிவாழ்ந்தான். (௨௧)

மாற்றவனொருவனிந்தமன்னனைவதைசெய்தப்பாற்
கோற்றொடிதனைக்கைக்கொண்டான்கோதையும்விநயமாக
வேற்றுடையவனற்பூசையீட்டினுலமைச்சைக்கண்டு
சாற்றிமாண்டவனுக்காவிதந்துமூவருமாய்க்கூடி. (௨௨)

மாமனைச்சேர்த்துச்சோரனுவியையவாங்கிப்பின்னே
பூமலர்க்குழலினாளைப்புதுமணம்புணர்த்திவந்தா
னுமெனப்பெடையுங்கேளாக்கொல்லுலையழல்வாயிட்ட
தீமழுப்படையைக்காதிலோட்டியதென்னத்தேம்பி. (௨௩)

உத்தமியிவளேவேந்தனுயிரினையீறுசெய்த
தத்தினையொழித்துவாழ்விற்றங்கினுளென்றுகண்ணீர்
முத்தெனவுகுத்தபேடைசேவலைமுழுதுநோக்கி
யித்தனையடைந்தார்க்கின்னுமேதமேதேனுமுண்டோ. (௨௪)

எனக்குநீயருள்கவென்னச்சேவலுமிதனைச்சாற்ற
மனக்கிலேசத்தாற்சற்றுமௌனமுற்றறிதிற்றேறி
யுனக்குநானொழிப்பதென்னேயுள்ளவாவுணர்மினென்னக்
கனக்கதிருதையகாலத்திவர்செலுங்கானிலம்மா. (௨௫)

வாவியிலாவிமாண்டதாதைதன்மரணங்கேட்டாங்
காவியுமனமுஞ்செந்தீயர்மெனமேன்மேற்சீற்றம்
மேவியவிடும்பன்மைந்தன்வெஞ்சமராடற்கொல்கிப்
பாவனையினதென்றோராமறுநெறிபடராவண்ணம். (௨௬)

வழியினைமாற்றியொற்றைக்காலினால்வகுத்தபத்தி
யெழில்செய்மண்டபந்தானென்றுநுழைந்திவனேகும்போது
பழிபடவிடிந்துகொல்லுந்தவறினாற்பதிக்கண்மேனா
ளழிவுகொளரக்கன்மைந்தனரவுருவெடுத்துக்கொல்வான். (௨௭)

இரண்டினுமாவிதுஞ்சாதிறையவன்பிழைப்பானாகின்
முரண்டரும்வாழ்நாட்டீர்தலன்றிமுன்னீர்சூழ்ஞாலந்
திரண்டுமேல்வரினும்வீயானென்றுரைசெய்துபின்னும்
மருண்டிடப்பெடையைநோக்கியீதையும்வழுத்துமன்றே. (௨௮)

சொல்லியவிதனைக்கேட்டோர்முற்படவெளியேசொல்லிற்
கல்லுருவாவார்பின்னாற்களறுவார்க்கதுவந்தெய்தா
வல்லையக்கல்லின்மீதுமாநிலமுழுதுநேமி
புல்லிடப்புரக்குஞ்சக்கரவர்த்திக்கோர்புதல்வன்றன்னை. (௨௯)

தந்தையோர்தலையின்பக்கந்தாயிருகாலின்பக்கம்
வந்துநின்றுளநோகாதுவாளினாலொருவெட்டாகச்
சிந்தைநின்றுவப்பவெட்டிப்பலிசெயிற்றீர்ந்துபண்டைச்
சுந்தரவடிவமோடுதுலங்குவார்சூட்சமீதால். (௩௦)

என்றுரைசெய்யக்கேட்டபேடையுமதைநாமெண்ணிக்
கன்றுதல்புரிவேமென்னாக்களறிவீற்றிருப்பவாண்டு
நின்றமந்திரியுங்கற்புநிறைந்தபொன்மயிலுங்கேளா
வொன்றினுக்கொன்றுபேச்சற்றுள்ளழிந்துலைவுசூழ்ந்தார். (௩௧)

நங்கையுமமைச்சுந்துன்புநண்ணினாரினிமேலாவி
பங்கமாகினுமாவார்களிப்பெரும்பாவம்பற்றா
தங்குபோய்த்தீர்ப்பேமென்னாவெண்ணிவந்தடுத்தான்போலுஞ்
செங்கதிர்க்கடவுள்கங்குற்சிதைத்தொளிவிளக்கஞ்செய்தான். (௩௨)

சூரியனுதித்தகாலையீதெலாந்தோன்றாத்தோன்றல்
காரிகைமடியினின்றுங்கண்விழித்தெழுந்தான்மற்றை
வீரருந்தேருமாவும்வேழமுந்துயில்கணீத்த
பேரிகைசங்குகொம்புபெருமழையிடிபோலார்ப்ப. (௩௩)

காலைநித்தியஞ்செய்தானக்கடன்முடித்தமுதமுண்டு
மாலையுங்கலவைச்சேருங்கமழ்தரவணிந்துசேனை
வேலைபோலிருமருங்குமிடைந்தருநெறிக்கொண்டேகச்
சோலையைநீத்துத்தன்மாநகர்வழிதுருவிச்சென்றான். (௩௪)

தன்னகர்சென்றபடலம் முற்றிற்று.

ஆகப்படலம்-௪௮-க்குத் திருவிருத்தம் - ௨௮௮௬.

மீட்சிப்படலம்.

தேடரியநான்மறைகள்தேடவரியானை
வேடனையழித்தநுதல்வித்தகனைமுற்றும்
மாடமலிகூடனகர்வைகியருள்வானை
பாடல்புரிவார்மனதுபுன்செயல்படாதே. (௧)

வேறு.

வருநெறிமீதிலொற்றைக்காலின்மேல்வயங்கிவானம்
பொருவிடவுயர்ந்துநீளம்புகல்வதற்கருமையாகிப்
பெருநிலைவாயிலோடுங்குறுகியவகலம்பெற்றே
யொருவருமறிதற்கொண்ணாதுள்ளமண்டபந்தானொன்று. (௨)

கண்டுளம்வியப்புக்கொண்டான்காவலனிதனாற்கேத
முண்டெனப்புட்கள்சொன்னவுண்மையையுளத்தினாடிக்
கொண்டனனடங்காத்தூக்கங்கொம்பனானமைச்சன்றானு
விண்டிடாதிடரைமாற்றுமாறுமோர்விநயம்விள்வான். (௩)

ஒற்றைக்கான்மீதிலும்பர்வரையினுமுயர்த்திநீளம்
மற்றைக்கால்புகாதவண்ணம்வகுத்தமண்டபந்தானீது
செற்றலர்செய்தசெய்கையென்பதுசிந்தைசெய்தேன்
கொற்றவவஃதின்றேற்பின்னினுமொருகருமங்கோடி. (௪)

தனக்குமேல்வலிமைசாரந்தோரிருப்பினுமிதற்குட்டாழ்ந்து
மனக்குளவலிமைதோற்றுப்போவதற்கானவண்ணங்
கணக்குறும்புடையார்செய்தகபடத்தின்கருமமென்றே
யெனக்குளந்தோற்றினுமிறைவவிங்கிதையுங்கேட்டி. (௫)

எதுநினைந்தெவர்கள்செய்தசெய்கையேயெனினுநிற்கக்
குதிரைகளிரதமோடுஞ்சேனைகூடிச்செல்லுங்
கதியுமிங்கிதானமட்டுங்கண்டிலமறிதலோடும்
புதியமண்டபத்தைத்தாண்டிப்போவதோர்புகழுமுண்டாம். (௬)

ஆதலாலரசேயிந்தவாத்தினையடியேன்வேண்டற்
கீதல்செய்திடுவையென்றானிறையவனிவன்றனெஞ்சின்
போதமேயுணரானேனுமமைச்சுரைதள்ளிப்போத
னீதுமன்றென்றெண்ணிமந்திரிவினைக்கணேர்ந்தான். (௭)

அகமகிழ்ந்தனீகமோடுகுரவருமதனினூடே
புகவமைத்தன்றபின்னரமைச்சனும்புரவிபூண்ட
நகைமணிக்கனகத்திண்டேர்மீதுநாயகனுமாதுந்
தகவொடுமிருப்பச்சேண்மீதோட்டினன்றபன்னஞ்ச. (௮)

மண்ணினின்றமைச்சன்கற்றவிஞ்சையின்வலியினானு
மெண்ணினின்றெடுத்தவீரப்பரிகளினியற்கையாலும்
விண்ணினின்றமராருரும்விமானத்தின்விரைவுந்தட்பக்
கண்ணினிமைக்குமுன்னமண்டபங்கடந்துசென்ற. (௯)

சென்றபொற்றேரும்வீரர்தாமுந்தஞ்சேனைசூழ
வன்றுசெல்லளவிலண்டரண்டமுமதிர்ச்சிவிம்மக்
குன்றின்மேலிடியிடிப்பத்தகர்ந்துளகொள்கைமானு
நின்றமண்டபமுநேரேநெறிந்துபாரிடிந்துவீழ்ந்த. (௪௦)

மண்டபமிடியவேந்தன்மனத்தினுணீங்காவையங்
கொண்டனன்மாதுநெஞ்சிற்குதுகுலிப்படைந்தாடுயோ
னெண்டருபாந்தளாற்கேடெய்துமென்றேக்கமுற்றான்
கண்டமற்றவருந்தீராக்களிப்பினாற்கலிப்புற்றார். (௧௧)

ஆருயிரமைச்சரன்றியரசர்கடமக்குவேறு
பாரினிலிலையென்றெண்ணிப்பரவசம்பலகாற்கொண்ட
தீரனுந்தேவிதானுமந்திரிக்கினிமைசெப்பிச்
சார்பெரும்படைகளோடும்வந்துதன்னகரஞ்சார்வான். (௧௨)

எல்லியும்பகலுமோயாதாறுபத்திரண்டுகாதஞ்
சொல்லியநெறிகளெல்லாந்தோன்றலுமெளிதினீத்துக்
கல்லியகுழிகளெல்லாங்கனிவெடித்தொழுகுதீந்தேன்
புல்லியபொதும்பர்சூழ்ந்தபொன்னகர்ப்புரிசைபுக்கான். (௧௩)

கள்ளெலாமலரேசாலிக்கதிரெலாமணியேவாவி
யுள்ளெலாமீனேபக்கத்தொழுங்கெலாமனமேசூழ்ந்த
புள்ளெலாம்பசுமென்சோலைப்புறவெலாம்புனிற்றுக்கீர
மெள்ளெலாந்தெள்ளிநீண்டவளனெலாமெதிர்தந்தேந்த. (௧௪)

உம்பருக்கொருவன்வைகுமுலகினுக்கிதுவேமேலன்
றிம்பரையன்றியந்தவும்பருமினிமைகூறச்
செம்பதுமங்கொண்மாதுதினங்குடியிருந்துவாழுந்
தம்பதிவந்துபுக்கான்யாவருமுவகைசார. (௧௫)

வேறு.

மன்றலுக்குமுன்னெழுந்தநாண்முதலிதுவரைக்கு
மொன்றுமின்றிநல்குரவடைந்திருந்தமையொழித்தே
யன்றுமாநகர்புதுக்குடியேறினதாமென்
றென்றுமில்லதோர்பெருங்களிப்பெய்தினரெவரும். (௧௬)

தத்தமக்களுக்கருங்கடிதனித்தனிபுரிந்த
தொத்தசிந்தையார்மனைதொறும்விழாக்களுண்டாக்கி
யெத்திசைக்கணுந்தோரணஞ்சித்திரமியற்றி
வித்தகர்க்குமற்றவர்க்குநல்விருந்தயர்வித்தார். (௧௭)

அரசனுந்திருமாளிகைபுகுந்துபினங்க
ணுரைசெய்மந்திரர்வேதியருறவினர்பழையோர்
பரசுநால்வகைப்பரிசனமுதலியபலர்க்கும்
வரிசைநல்கினன்வான்மழைமுகிலெனமகிழ்ந்தே. (௧௮)

சாலைசத்திரந்தடமடங்கூபமுய்யான
மாலையம்மறையவரிலமணிமலர்பொதுளுஞ்
சோலைமற்றுளதொல்லைநல்லறமெலாந்துலக்கி
மாலைமன்மகன்வாழுநாள்வருவினைவகுப்பாம். (௧௧)

மீட்சிப்படலம் முற்றிற்று.

ஆகப்படலம் - ௪௯-க்குத் திருவிருத்தம் - ௨௯௦௫.

கார்க்கோடகன் வதைப்படலம்.

நீருமரவுநிமிர்செஞ்சடையா
னூருமறியாவமலன்றனையே
சாருமடியார்தமையேதமராய்ப்
பாரின்னினையும்பரனைப்பணிவாம். (௧)

வேறு.

தருமலர்த்திருக்காத்திரன்றனதுமாமகற்கு
மருமலர்க்குழன்மருகிக்கும்புதியமாமனையொன்
றருமையாகவேறமைப்பதற்கெண்ணினனறிந்தாங்
குரிமையாயசொற்றபதியருனுற்றினுருவந்தே. (௨)

ஏவல்கொண்டுளகம்மியரிரண்டொருமூன்று
காவதம்பொருநீளமுமகலமுங்காட்டி
மேவுகோபுரஞ்சாளரமேனிலம்விதித்து
மூவகைப்படுமுலகினுமுதன்மையென்றுரைக்க. (௩)

கொள்ளையாடகத்தகடுகொண்டணிசுவர்கொளுவி
விள்ளொணாச்செழும்பவளக்காணிரைநிரைவிரவி
யுள்ளினும்புறவெளியினுநவமணியொளிக
ளெள்ளலாம்படிவரம்பிகந்தமைத்தனரன்றே. (௪)

கோளெலாமொருங்குளதெனவுலகெலாங்குறிக்க
நாளெலாம்புரிதவமெலாம்வெளிப்படநயந்து
தோளெலாம்வலியுருத்திடக்கைவலிதுலக்கி
வாளெலாந்தருமனையிதுவாமெனவகுத்தார். (௫)

அரசனுக்கறிவித்தனரமைச்சரோடரச
னெரிசுடர்ப்புசும்பொன்னினுமணியினுமிழைத்த
புரிசைமாளிகைமுழுவதும்புகுந்துகண்ணோக்கி
யுரைசெயாப்பெருங்களிப்பினுளம்புதைப்புண்டான். (௬)

செய்ததச்சருக்கரியனகடன்முறைதிருத்தி
யெய்துறும்படிபுரிந்தவனினியநாடன்னிற்
றையலோடுதன்மகன்குடிசார்ந்திடச்சமைத்தான்
வையகத்திவரிந்திரன்சசியெனமதிக்க. (௭)

திணிகொண்மாமனைபுகுந்துபின்றேவியுந்தானும்
பணிகொண்மாதருமேவல்செய்வீரரும்பலரு
மணிகொண்மாடநின்றகன்றிடாதனுதினமமைத்து
மணிகொண்மாதர்செய்வாழ்வுகொண்டமர்ந்தனன்மன்னே. (௮)

கானகந்தனிலிருளின்வாயிவருறைகாலை
வானகந்தொடும்பொதும்பரிற்புட்கள்சொல்வாய்மை
தானகம்மறந்தனள்பெரும்போகமேதருக்கி
ஞானகஞ்சுகமந்திரிநினைந்துளநைவான். (௯)

பவர்கொணுப்பகுவாய்ப்பணிவருமெனும்பயத்தாற்
றவறிடாதசொற்சிகாமணிதனிபுகுந்திரவி
லெவர்களும்புணராவகையிறைவனைக்காத்தங்
குவரியாதவனுதிக்குமுன்றன்மனையுறுவான். (௧௦)

ஈதிவன்புரிந்தொழுகுநாளிறைவன்மேற்றணவாக்
காதலாற்கலந்தரியதன்வயிற்றிடைக்கருப்ப
மாதடைந்தொருமைந்தனைப்பயந்தனள்வருந்திப்
பூதலத்தரசினுக்கெலாமங்குரம்போலும். (௧௧)

பிள்ளைமீதினும்பேதைதன்மீதினும்பிரியா
வள்ளலன்புகொண்டுறையுநாண்மந்திரிமகனு
முள்ளமாழ்கியெள்ளளவினுமுறக்கமேயின்றி
நள்ளிராவெலாநயந்துகாத்தகலுவானாளும். (௧௨)

இன்னவாறிவரியலுநாளிதற்குமுனிறைவன்
மின்னவாமிளிர்வாளினால்வீய்ந்துளவரக்கன்
றன்னவாவினுக்குரியகார்க்கோடகன்றனையன்
சொன்னமண்டபமிடிந்தமைகேட்டுளந்துடியா. (௧௩)

ஒருமனிதனந்தாதையையுயிர்க்கொலைபுரிந்த
கருமநன்றுநன்றின்றவனுயிரினைக்கவர்தற்
கருமையோவெனவகங்கரித்தராவுருக்கொண்டே
யிருளின்வாய்நகர்புகுந்துகோமனைவயினெய்தா. (௧௪)

வேறு.

சமையமுங்காலமுமிடனுஞ்சார்வதோ
ரமைவுதனுளங்குறித்தரசன்மாளிகைச்
சிமையமேலொருபுழைதெரிந்துதங்கினான்
கமைதராதழன்றெறிகதங்கொண்மூர்க்கனே. (௧௫)

உரகவெவ்வுருவெடுத்துழலுமூர்க்கனு
மிரவினாடொறுமெய்தியங்குறை
யரசினையிடம்பெறுதற்றநோக்கியே
பரவுவான்றனமர்பதிவுநாடியே. (௧௬)

பழிபடுபொந்தளின்பதகனுவியு
மழிபடுகாலமன்றடைதலான்மத
னெழிலுடையிறைவனுமிரவின்மாதொடும்
விழித்துயிறணப்புறுமயக்கமேயினர். (௧௭)

ஆயதோர்காலமோர்ந்தரவின்மேனிகொ
டேயவாணிருதனுந்திகிரிதாங்கிய
நாயகன்றுயில்வதோரமளிநாடியே
பாயொளிச்சிமையநின்றிறங்கிப்பையவே. (௧௮)

பச்சையும்பவளமும்பதுமராகமு
மிச்சையாற்கலந்தருகிழைத்துநாற்புற
மச்சினிற்கடைந்தகாலமைத்துமென்மணிச்
செச்சைகொள்விதானமேற்சேர்ந்துவல்லையில். (௧௯)

கால்வழிநடையிலான்விதானக்கால்வழி
மேல்வழிநின்றுகீழிறங்கும்வேலைவாய்
கோல்வழிக்குரிசிலைக்காவல்கொண்டுளா
னூல்வழிமதியினோனோக்கினனரோ. (௨௦)

நோக்கினனிடையில்வாளுருவிநொய்தினி
னூக்கமுற்றுடலைவிட்டுயிரைவேரற
வாக்கினன்சோரிசிந்தாமலப்புற
நீக்கினன்றீவினைநீக்குநீதியான். (௨௧)

ஒதுக்கியசோரியிற்சிதறியோர்துளி
புதுக்கொளியிந்திரகோபம்போன்றவான்
விதுக்கிணைமுகத்தினாண்முலையில்வீழ்தலு
மதிக்குடைமந்திரிகண்டுமாழ்கினான். (௨௨)

வடுக்கணாண்முலையின்மேல்வயங்குசோரியை
யெடுக்கவுமஞ்சுவானெடாதுகால்கொடு
நடக்கவுமஞ்சுவானுமநள்ளிருள்
கடக்குமேலெதுசெய்யக்கடவனென்றரோ. (௨௩)

மாதுமிக்குருதியான்மாயுமன்றெனி
னீதியான்புணர்ச்சியினேயமிஞ்சியே
சோதிமென்முலைத்துணைசுவைப்பனுமேனிற்
கேதமேபடுவனீதென்னகேடெனா. (௨௪)

மாதரைவேறொருமைந்தர்கைதொடப்
போதுமோவிதனினும்பூவைகாப்புடை
நீதியான்மனைவியிங்கிவளைநேர்ந்துநான்
கோதுறுகுருதியைத்துடைத்தல்கூடுமோ. (௨௫)

மாதுமென்முலையின்மேன்மன்னவன்கரப்
போதலால்வேறுகைநீண்டப்போகுமோ
பாதகமிதுகண்ணுற்பார்த்துநாமுமிப்
பூதலத்திருத்தலிற்பொன்றனன்றரோ. (௨௬)

துடைத்திடாதகல்வனேற்றேன்றலாருயிர்
மடக்கொடியின்னுயிர்மாயுஞ்செய்வனேற்
கடக்கரும்பெரும்பழிகதுவுமென்னவே
தடுக்கருஞ்சங்கையிற்றளர்ந்துசாம்பினன். (௨௭)

குருதியான்மடிவரென்பதுகுறித்துமேல்
வருபொருளாற்பழிமதித்துமந்திரி
யிருபுறம்பிடித்தெரியெரியுங்கொள்ளியூ
டொருசிறுபிபீலியினுள்ளமாழ்கினன். (௨௮)

இவைநினைந்திரங்குவானிறைவர்தேவிய
ரவனியிலனைவர்க்குமரியதாயெனச்
சிவனுமைதனக்குமுன்னெடுத்துச்செப்பிய
தவமிகுஞ்சுருதியேசரதமாலரோ. (௨௯)

ஆனதாற்பவமிலையணங்குபோல்பவள்
பீனமாமுலையின்மேற்பிறங்குசோரியை
யீனமேயிலாதுதொட்டெடுத்தனன்றெறு
ஞானவான்மனத்தினுட்டுணிந்துநண்ணினன். (௩0)

செங்கையின்சிறுவிரல்கொண்டுசேயிழை
கொங்கைமென்முகட்டிறைகுருதிதன்னையும்
பங்கமில்லாதவன்றுடைத்துப்பையவே
யங்குநின்றகல்வுறுமமையம்பொன்னனாள். (௩௧)

மணிமுலைமீதுதன்மணாளன்செங்கையி
னணிவிரற்படுவதையன்றிவேறொரு
திணிவிரற்படுவதேதென்றுசிந்தையு
ளெணிவிழித்துயில்கழித்தெழுந்துநோக்கினாள் (௩௨)

நோக்கலும்பொய்புகலாதநூல்பயில்
வாக்கினனடந்தமைவழுத்தற்கஞ்சியாங்
கேக்கமுற்றுவிதீர்ந்திறந்தபாந்தளி
னுக்கையைமடநலாட்கறியக்காட்டினன். (௩௩)

வேந்தறியாதுவேறிடத்துவெந்தழற்
பாந்தளின்றுணிகளைப்பதனஞ்செய்தெதிர்
போந்தமந்திரிதனைப்புதல்வன்வாஞ்சைகொண்
டேந்தெழிலரம்பையுமிவையியம்புவாள். (௩௪)

அந்தநாண்மடிந்துளவரசற்காருயிர்
தந்தனைவெஞ்சமர்தனையும்வென்றனை
வந்துறுநெறிமிசையடுக்கண்மாற்றினை
யிந்தநாளினும்பெரிதிடரைநீக்கினை. (௩௫)

உன்னையேபுகல்புகுந்துள்ளவெங்களுக்
கின்னமுமிதனின்மேற்செய்வதேதெனத்
தன்னிருகைகளாற்றழுவியுச்சிமோந் (௩௬)
தன்னைநானீமகனாகுமென்னவே.

முகமொடுமுகத்தினையொட்டிமுத்தமிட்
டகமகிழ்ந்தருகினாளந்தவேலையிற்
சுகமலரமளிவாய்த்துயின்றவேந்தனு
மிகுதுயினீத்துக்கண்விழித்துநோக்கினான். (௩௭)

இருவருமொன்றுபட்டெதிரினின்றதோர்
கருமமுமினமெதனக்கருதுகிற்றிலா
னிருபனுங்கரவினினேர்ந்துகாதல்கொண்
டுருகினார்புணரவுமொருப்பட்டாரரோ. (௩௮)

நன்றுநன்றிதுவரைநமக்குத்தோன்றிடா
தென்றுமிப்புணர்ச்சிகொண்டிருந்துளாரிவ
ரன்றெனிலின்றிஃதாற்றற்குள்ளமு
மொன்றுபட்டுருகிடாதென்பதுண்மையால். (௩௯)

என்பதுகருதினனெழுந்தசீற்றமுந்
தன்பெருமானமுந்தன்னைத்தான்மறைத்
தன்மையும்விழுங்கியங்கவர்கடம்மையுந்
தின்பதுபோலுங்கண்சிவப்புற்றானரோ. (௪௦)

இத்தொழினொடாறுமியற்றிவந்ததோர்
சித்திரநானறியாதுசிந்தையு
ளுத்தமியென்றுனையுவந்துவாழ்ந்தபுன்
புத்தியையெவ்வயிற்புகழ்ந்துகாட்டுகேன். (௪௧)

அரவினோடிருந்ததுமதன்பின்னாலொரு
புரவலன்பாலினிற்புகுந்திருந்ததும்
விரவுமித்தொழிலினாலின்றுமெய்ப்படு
கரவுடைக்கற்பெனக்காட்டிற்றாலரோ. (௪௨)

சொந்தநாயகன்றுயில்சோதித்திச்சிறு
மந்திரிநேயமேமகிழ்ந்தபுன்றொழில்
நிந்தைதங்கியகொடுநீலிநின்னுயிர்
சிந்துதல்காண்பனென்றுருத்துச்சீறினான். (௪௩)

மாதருக்கணிகலன்மடமைவாய்ந்துள
பேதமையென்றுமுன்பேசுநூல்களை
யோதியுமுறவினிலுவந்துநின்றநீ
யேதடாவித்தொழிலியற்றற்கெண்ணினாய். (௪௪)

நாளெலாந்தோழனுமாகிநம்பணி
யாளனுமாகியதருமையல்லநீ
நீளநீள்குழலினாட்குரிமைநேர்மண
வாளனாய்க்கிடைத்ததேயருமைமாட்சியால். (௪௫)

உனக்கவாவுறின்முனமுண்மையாயிவ
டனக்குளசாதகஞ்சார்ந்துவாவியி
லெனக்குயிரளிப்பதற்கேதுகாரண
மனக்கசடகற்றியேவழுத்துகிற்றியால். (௪௬)

உள்ளவாறியம்பிடாதொழித்துநீமனக்
கள்ளமாய்ப்புகன்றிடிற்கையின்வாளினாற்
கொள்ளைகொண்டுன்னுயிர்குடிப்பனென்னா (௪௭)
வள்ளலும்வெகுண்டுரைவழங்கினானரோ.

கொதிகொதித்தாருயிர்குலைந்துமற்றிவர்
மதிமுகநோக்கியேவழுத்தும்வேந்தனுக்
கெதிர்மொழிபிறிதுசற்றின்றிநின்றனர்
மதிவலிவிதியினான்மடங்கியன்றரோ. (௪௮)

பறவைமுன்கூறுசாபத்தையெண்ணியிம்
முறைமையைமொழிந்திடமுற்றுமஞ்சியே
குறைபடுகுற்றமேபுரிந்தகொள்கைபோ
னிறையுநாணொடுநிலங்கிளைத்துநின்றனர். (௪௯)

சொல்லிடிற்கல்லுருத்தோன்றுஞ்சொல்லுதற்
கில்லையேல்வீண்பழியெய்துமீதென்ன
தொல்லையாய்வந்ததென்றமைச்சுந்தோகையும்
வல்லபமிழந்துளமயக்கநீடினார். (௫௦)

நல்லதுநாஞ்செயநவினின்றதோர்
தொல்லறக்கடவுளுந்துணைசெயாதுவிட்
டெல்லையிற்பெரும்பழியியற்றினாலிதைச்
சொல்லுவதாருமையென்றுசோர்ந்தனர். (௫௧)

கன்றியமுகத்தினார்கருத்தழிந்தெதி
ரொன்றினுக்கொன்றுபேசாமலூமர்போ
னின்றனர்முனிந்துளநிருபனுந்தணிந்
தன்றவர்வினைத்திறமாய்தல்கொள்ளுவான். (௫௨)

இன்றிவர்கேட்பதற்கெதிரில்வாய்துறந்
தொன்றுரையாதுநின்றாமராகினார்
வன்றிறற்கரவுசெய்வார்கட்குண்மையு
நன்றியும்பெறுவதென்னாளுமுண்டரோ. (௫௩)

கண்ணினானெதிர்கண்டபோதினு
மண்ணால்பேரவைதனக்கனுப்பியாங்கவ
ரெண்ணமுங்கருமமுமெவர்க்குந்தேற்றிமே
னண்ணுறுதண்டமுநடத்தனன்றரோ. (௫௪)

ஆதலாலரசனுக்கறிவியாதுநா
மேதையுஞ்செயத்தகாதென்பதெண்ணியே
தூதரைவிளித்துநீர்தோன்றல்பாலினிற்
பேதையையமைச்சனைப்பின்புகாவகை. (௫௫)

கொண்டுபோய்நடந்ததோர்கொள்கையாவையும்
விண்டுரைப்பீரெனவிரித்துவிண்டவ
னண்டையிலேகுமென்றனுப்பிவைகினா
னெண்டிசாமுகத்தினுந்தனக்குநேரிலான். (௫௬)

தூதரும்பொருக்கெனத்தொழுதுநின்றதோர்
மாதையுமமைச்சையும்வம்மினென்றுரை
யோதியேவேத்தவையுற்றகாலையி
லாதவன்கீழ்த்திசையுதையமாகினான். (௫௭)

கார்க்கோடகன் வதைப்படலம் முற்றிற்று.

ஆகப்படலம்-௪௯-க்குத் திருவிருத்தம்-௨௯௯௨.

புத்திசிகாமணி இடையூறுற்றபடலம்.

நரிக்குருவிப்பாயவொருவலியமைத்துப்பரியாக்கிநம்புமன்பற் [பொற்
குரிக்குருவிக்கனையமொழியுபதேசித்ததற்பின்னுமொழிசெய்செம்
புரிக்குருவிக்கடிநகரென்றதிசயிக்குந்திருமதுரைபொருந்திவாழுங்
கரிக்குருவிக்கருளியநங்கண்ணுதலையெண்ணுதலேகடமையாமால். (க)

வேறு.

ஆதவனுதித்தலுமரசனாதியர்
நீதிலாநித்தியக்கடன்கள்செய்துபி
னேதொருகருமமுமெண்ணியாற்றுறு
நீதிகொண்மண்டபநிறைந்திருந்தனர். (௨)

கோதையையமைச்சனைக்கொண்டுதோன்றிய
தூதுவாஞ்சிவாய்புதைத்துத்தோன்றல்பொற்
பாதவம்புயமலர்பணிந்துநின்றெதி
ரோதினார்நவறண்டுள்ளமுட்கவே. (௩)

இன்றிரவினிற்புகுந்திவனும்பொற்புடை
மன்றலங்குழலியுமருவியவ்வையி
னின்றமைநெடுந்துயினீத்துநின்மகன்
றன்றிருவிழிகளாலிவர்கடன்மையை. (௪)

கண்டனன்வெகுண்டெளங்கனன்றுவெவ்வுரை
விண்டனன்கேட்கவும்விளம்புகிற்றிலார்
கொண்டுபோய்வேத்தவைகுறுகிக்கோமக
னண்டையிற்கூறுமென்றனுப்பினானரோ. (௫)

சொற்றதுகேட்டலுந்தோன்றலுந்துடிப்
புற்றுளங்குலைந்துயிருசலாடிட
வெற்றுடம்பாகியேமெலிந்துவாடினான்
சற்றுமெய்யசைவில்சித்திரத்தின்றன்மைபோல். (௬)

குலத்தையுங்குணத்தையுங்குடிப்பிறப்புள
நலத்தையுங்கற்பையுநாணையுந்துறந்
தலத்தகப்பதத்தினாள்யார்க்குமெள்ளலாய்ச்
சொலத்தகாப்பழிசெயத்துணிந்ததென்கொலோ. (௭)

ஈசன்மாலயன்முதலெவர்க்குமோர்குறை
பேசுவான்பெரும்பிழைபிழைக்கின்மற்றினி
மோசமென்பதற்கெனமுறைமைவேண்டுமென்
றூசலாடியமனத்துளைந்துசாம்பினான். (௮)

அகக்குறிநோக்குவானலர்ந்தபங்கய
முகக்குறிநோக்குவான்முற்றுமையமே
சகக்குறியுடையவன்சார்ந்துசெந்தழல்
புகக்குறியழிவதோர்வெண்ணெய்போன்றனன். (௯)

என்னவாவிளைந்ததென்றேங்கியாவர்க்கும்
பன்னவாவின்றியேபதைபதைத்துள
மன்னவன்சோர்தலும்வயங்குபேரவை
துன்னினார்நடந்ததோர்சூழ்விலாசியே. (௧௰)

மன்னனைத்தேற்றியேவந்தசூழ்வினை
யின்னதென்றறியுமுன்னிறைவனின்னுளந்
தன்னிலேவருந்துதற்காதென்றோதினார்
பின்னவன்றெளிந்துரைபேசன்மேயினான். (௧௧)

வேறு.

ஆதரவாயுடன்கூடியடவியெலாஞ்சஞ்சரித்துமகன்றமப்பாற்
சாதலூறுமெனதுதிருத்தனயனுக்காருயிரளித்துந்தாழாதேகித்
தீதுபடாதருஞ்சமராஞ்செயித்தும்மறுமணமுடித்துஞ்சேர்ந்தநீவீ [னே.
ரோதுபெருங்கலகம்விளைத்தரும்பழிகொண்டவைபுகுந்ததென்னேயென் ()

உன்னாலோவலது மருமகளாலோவென துயிர்க்கோருயிராமைந்தன்
றன்னாலோவிளைந்துளவிச்சங்கேதமுண்மைமொழிதப்பிவேறு
சொன்னாலோமூவருக்குளெவரெனினும்புடைவாராஞ்சொல்லாநீதி
யென்னாலோசெயத்தகுந்தண்டனைபுரிவேனிறையளவுமிரங்கித்தாழேன். ()

விதிக்குமறியாதபலவிதியனைத்துநான்முகத்தில்வினவித்தேர்ந்து
மதிக்குமுயராசாணும்மாநிலத்துக்கமைச்சாணும்மற்றோர்செல்லுங்
கதிக்குமொருகாலாணும்கருமமிழந்தனையிந்தக்கருமஞ்செய்யிற்
றுதிக்குமோபேருலகமிதன்மேலுங்கொடியவினைசூழவற்றோ. (௧௪)

மாணுனீயுமிந்தவல்லிருளிற்றனியாகமருவிநின்ற
தேனுமோவலதுபுதிதாகநீவிர்செய்தவியற்கைதானோ
காணும்பொழுதெல்லாமில்லாமற்சொல்லரியகாமக்கோட்டி
மீனும்வயல்வளஞ்சூழ்நகர்புகுந்தபின்வந்தவிந்தையென்னே. (௧௫)

கற்றவர்கண்மணியானபுத்திசிகாமணிபயின்றகல்வியெல்லா
மற்றனையோபேரறிவுமகன்றனையோவுனதுகுணமழகுவாய்மை
மற்றுளசற்கருமமெல்லாமறந்தனையோதிறந்திறம்புவழியேபுக்கு [ளே.
குற்றமெல்லாஞ்சுமக்குமொருகொள்கலமொத்தவைபுகுந்தகோட்டியென் ()

தையலையுமுகநோக்கித்தாயேயென்றிருமைந்தன்றனக்குநீயுஞ்
செய்தவுபகாரமெழுசெனனமெடுத்துனக்குரிமைசெய்தபோதும்
வையகமேலிணையாகாதெமதுகுலம்வாழ்விக்கவந்தகற்பின்
றெய்வதமென்றெண்ணியவென்சிந்தனைசிந்திடப்புகுந்தசெய்கையென்னே.

உன்னையேதனதுயிரென்றோம்புமகன்றனையுனதின்னுயிராயெண்ணுங்
கன்னியேயிருவருக்குங்கருத்துவேறுதிப்பரியகலகமான
தென்னகாரணமிந்தமந்திரியுமுங்கண்மிசையென்றுநீங்கா
நன்னயஞ்செய்நண்பினுளாணிவைபுரிதற்கேவரையுண்ணாடித்தேர்வேன். ()

கிருபனும்பற்பலவானநெறிகூறிவற்புறுத்திநேசங்காட்டி
யரிவையையுமமைச்சனையுமயராமற்கேட்டுமனதலுத்தேபின்னும்
வருபொருள்சற்றேனுமிவர்வாய்திறந்துகூறாதவாறுநோக்கிக்
கருமவிளைவினுக்கினியானேதுசெயக்கடவனெனக்கழறுவானால். (௧௯)

ஒருகுலமுமெடாவ்வாதிவ்வுலகமிசையெனப்புகல்வதொன்றேயன்றிக்
குருகுலமுங்கனற்குலமுங்குறைவடைந்துவடுப்பட்டகொள்கையன்றோ
பெருமறுவொன்றில்லாமற்பேசரியநெடுங்கீர்த்திபெற்றேயந்த
விருகுலமுங்கீழ்ப்படமேற்பட்டதெமதிரவிகுலத்தியற்கையம்மா. (௨௦)

இக்குலத்திலுதித்திந்தவுலகாண்டபலகோடியிறைவர்க்குள்ளே
முக்கியமாம்ரகுபதியுமுளரிமலர்த்திருசசனகிமுகத்தைநோக்கித்
திக்கபொருளேதுனக்குத்தாகமென்றான்முனம்போலுந்தவத்தோர்தங்கள்
பக்கமிருவருமேகிவாவெனக்குமனத்தினவாப்பழுத்ததென்றான். (௨௧)

அதுகேட்ட தாசரதியவனியுள்ளார்பொல்லா தவராக்கர் தங்கள்
பதிபோனபாரியையும்பரிந்தழைத்துமீண்டாசுபரித்தானென்று
துதிபோனபழிபுகன்றார்தோகையுமிங்கதற்கிணங்கச்சொற்றாளந்தோ
விதுதீராவசையெனமற்றவளைவனம்போகவிடுத்திருந்தானன்றே. (௨௨)

எங்கண்மனுகுலவழக்கமெள்ளளவும்வடுக்கண்டாலிரக்கமின்றி
மங்கையரேயாகமற்றையாடவரேயாகமுனைவாளால்வீசி
பங்கமுறாதகற்றுதலேபரிந்திவர்கள்புரிந்தகொடும்பழிதானேரே
சங்கையறவெனதுதிருத்தனயனுங்கண்டதற்கெதுநான்சான்றுகேட்பேன்.

மூவருக்குளொருவரைவிட்டொருவரைமுக்கியமென்றுமொழியாவண்ணம்
பாவனையாலெத்தொழிலும்பயின்றுவந்தாரினியெதுவும்பயிலவல்லா
ராவதினாலிவர்களுக்குளடுத்தபழிதடுத்தெவர்களாற்றலாவார்
மேவுமதிடத்தன்புகொளுமமைச்சர்காள்வினவிவிளம்புவீரால். (௨௪)

என்றுரைத்துப்பின்னுமிவர்களுக்காவனபலவுமெடுத்துக்கூறி
மன்றம்விடுத்தெழுந்தரசன்மனக்கவலையோடுதிருமனையிற்புக்கான்
நின்றவரையருகழைத்துநேரிருத்திமுகமனுரைநிகழ்த்திநீவி
ரொன்றுமுரையாதுகற்போல்வாய்திறவாதுமௌனவுற்றீரென்னே. (௨௫)

எழிலடைந்தாய்பலகலையுமெளிதிலடைந்தாயிதன்மேலெட்டுப்பங்கு
வழியடைந்தாய்போர்வீரம்வருபொருளுந்திரிகாலவகையுஞ்செய்யுந் [ன
தொழிலடைந்தாய்ராகாதிதொலைத்துமனதொளிவடைந்தாய்தூயோயென்
பழியடைந்தாயெளியவர்போற்பதைப்படைந்தாயவையடைந்தாய்பாவம்
[பாவம். (௨௬)

புத்திசிகாமணியேயுன்பொற்சரணம்படச்சிதறும்பூழிதோய்ந்த
பித்தருமிங்கிதுநினையார்பெரும்பிசகுநீநினைக்கிற்பின்னையாரை
யுத்தமர்களெனநினைக்கவுளதுனதுகுணம்வலிமையுரிமைவாய்மை
யெத்தலத்திற்பறிகொடுத்தாயாவரிதுபயிற்றிடக்கற்றியற்றல்செய்தாய். ()

உன்னாலேநங்கண்மரபுள்ளகுலக்குரவர்கட்குமுறவினோர்க்குந்
தன்னாலேபெருங்கேடுசார்ந்ததுமற்றதையெடுத்துத்தய்வாயிங்கு
சொன்னாலும்பேசாததொழில்படைத்தாயுனக்கினியார்சொல்வாரையா
முன்னாலேபுரிந்தநலம்பின்னாலேசெய்தபிழைமூடிற்றாலோ. (௨௮)

அரவினால்வருமிடையூறகன்றுபுரவலனோடுமணைந்துபின்னோர்
கரவினான்புரிந்ததுயர்கடந்தவன்றன்குலமுழுதுங்கல்லிமற்றை
யரிவயர்க்குணீயதிகமருந்ததிக்குநேரிணையென்றவனியுள்ளார்
பரிவுசெயப்புகழ்பெருகும்பாக்கியவதியுமக்கிதென்னபாவமந்தோ. (௨௯)

உங்கள்குலந்தனிலுதித்தகற்புடையமடந்தையர்க்குளுனையேமற்றை
மங்கையர்கடெய்வமெனவந்தித்தாருன்றனைநின்மனத்திற்கொள்ளா
தெங்கள்குடிமுழுவதுமின்றீடேறவருந்தியவேலிறைவனுள்ளஞ்
சங்கையறவுள்ளபடிநடந்தவகைவாய்மலர்ந்துதாயேசொல்வாய். (௩0)

அம்மாவுங்களுக்குநினைப்பாதியிலேயிருந்திருக்குமானுன்மாண்ட
பெம்மானுக்குயிருதவிப்பெரியமணமூடித்துமற்றைப்பிழைபாடின்றி
யிம்மாநீணகர்க்குறுதற்கேதுவிலைத்தவறிதுவென்றெண்ணியந்தோ
செம்மானைத்தரித்தபிரானருண்மறந்துநாங்களெதுசெப்புவோமால். (௩௧)

இந்தவிதநெறியறியுமந்திரிமாரைம்பதின்மரினியையாகத்
தொந்தரையிலாதுபணிந்திரந்துபலவாறெடுத்துச்சொல்லித்தத்தஞ்
சிந்தைவருந்தினதுமன்றிவாயுமலுத்தாகும்வகைசெய்வதோரா
தெந்தவிதம்யாவரிதுகண்டுணரவல்லாரென்றேக்கமுற்றார். (௩௨)

மந்திரிகட்குண்முதன்மைமந்திரியுந்தன்மகனைவருந்தியையா
வெந்தவிதத்துகள்சிறிதுமில்லாதவுனதுமதிக்கிதுதானென்றோ
வந்தவிதஞ்சற்றேனும்வாய்திறந்துபுகலாமன்மௌனமான
வந்தரங்கமெனக்கருள்வைதாய்க்கொழித்தசூலுமுண்டோவவனிதன்னில். ()

மாதுநீயும்மருவிநின்றதெனப்பேரரசன்மகன்சொல்வாய்மைக்
கேதுகாரணமுளமையிருளிலந்தப்புறந்தனக்கேதனியாயெய்துஞ்
சூதுனக்குள்யாதுவெளிசொல்லாதபோதுநம்மைச்சூழ்ந்தவிந்தப்
பாதகமெப்படித்தொலையும்படித்துமறியார்மூடம்படைத்தாயப்பா. (௩௪)

தாயரைமற்றரசர்புணர்தாரமதையுடன்பிறந்ததமக்கைதங்கை
யாவரையுமுன்னுதித்தவண்ணன்மனைகுரவர்மனையானபேரை
தீயவருமிதுநினையார்நினைத்தவர்கடலைபுழுத்துத்திரியும்பொல்லா
நாயினுங்கேடாய்வருந்திமாறுதகும்பியிடைநணுகுவாரால். (௩௫)

நானுரைக்குநீதியெல்லாநீயுரைக்கக்கற்றிருந்துநலஞ்சற்றில்லாக்
கானெரிக்குநிலவார்ச்சேகமருகுக்கும்பாலாச்சேகடலிற்கோட்டந்
தானுரைத்தகதையாச்சேதமர்களுக்கும்வசையாச்சேதலத்தைக்காக்கும் [ன்.
கோனுரைக்குந்தண்டனைக்குளாட்படுத்திப்பின்னெவரைக்கொண்டுவாழ்வே

உள்ளதினுற்றீதுவராதுற்றாலுஞ்சற்றுநில்லாதுண்மைவாய்க்குங்
கொள்ளரியபுகழ்படைக்குங்கூறாதபொழுதுலகோர்கூடிநின்று
விள்ளரியவசையுரைப்பாரெனப்பலவுமோயாமல்விளம்பிப்பின்னுந்
தள்ளரியதுயரடைந்தான்வாயடைத்தான்மகன்போலுந்தாதையம்பா. (௩௭)

நன்றுதொட்டமதியுடையோயெத்தனையோபலகோடிநாடித்தேர்ந்து
குன்றுதொட்டமூலையாட்கும்புத்திசிகாமணிதனக்குங்கூறிக்கூறி [னு
மன்றுதொட்டோர்பகன்முழுதுமிருந்தும்வகைதான்றாமல்வருந்திப்பின்
மின்றுதொட்டுநாளடைவிலிவரைவினவித்தெரிதலியல்பாமென்றே. (௩௮)

இருவரையுமிருவர்மனைக்கேகவிடுத்தன்றுமுதலவர்கணித்த
வொருவருக்குப்பின்னொருவரோயாமலூணுறக்கமொன்றுமின்றி
யிரவுபகலாகநடந்தெத்தனையோதத்தமக்குளேன்றமட்டுங்
தரவுபுரியாதுள்ளவகைபுகலக்கரைத்துள்ளங்கரைந்தாரன்றே (௩௯)

எத்தனையோவமைச்சரெல்லாமிருமூன்றுமதியம்வரையெடுத்துச்சொன்ன
தத்தனையுங்கருதாமலண்டரண்டப்புட்கள்சொன்னவரியசாபஞ்
சித்தமிசைவருத்துதல்கொண்டென்மெலிந்துநாவறண்டுதிருடர்போலு
முத்தமர்கணிலைகலங்கியொன்றுமுரையாதுகற்போலுற்றிருந்தார். (௪௦)

அரசவையிற்புகுந்தெவருமரசன்மலரடிபரசியரசேயாங்க
ளுரைசெயவேண்டுவவெல்லாமோராறுமதியம்வரையுரைத்தேயப்பாற்
புரிசெயலிலாதுபுலம்படைந்தனமற்றெவராலுமறியப்போகாப்
பொருசெனனந்தவிர்ந்தேழுசெனனமெடுத்தாலுமிவர்புகலாரென்றார். (௪௧)

அரசனுங்கேட்டகமெலிந்தானருங்கண்ணீர்மழைசொரிந்தானயர்ந்தான்வார்
யுரைசெயவுநினைவழிந்தானுயிர்புறம்பாமெனத்திரிந்தேயூசலாடத் [த்தை
திரைசெறிநீர்ஞாலமிசைதெரிவையர்க்குளாடவர்க்குளிவர்போற்றீங்கு
புரிசெயல்கொண்டவர்களுண்டோவம்மம்மவிதுவென்னபுதுமையென்றான்

மந்திரிகள்கைவிடுத்தார்கலைகளிறுற்றெறிக்குமொருவகையோயில்லை
யெந்தைபிரான்றிருவருளுமிதற்கன்றுபுறம்போனதெளியேனுற்று
முந்துதவக்குறைவோமற்றிவர்கள்புரிபவச்செயலோமூண்டதிந்தத் [னும்.
தொந்தரையெவ்வாறுகண்டுதொலைவிப்பேனெனத்தளர்ந்ததோன்றல்பின்.

செம்மலைநற்றிருநிகரும்மருமகளைமந்திரியின்சிறுவன்றன்னை
நம்முழையிற்றருகவென்றானடிபரவிமுன்னின்றோர்நால்வரோடி
வம்மின்களரசனுரைபணியென்றார்தலையேந்திவல்லையாண்டோ
ரிம்மென்னுமுனம்புகுந்தார்பேரவைக்கணரசனைக்கண்டிறைஞ்சிநின்றார். ()

நின்றதொருமூவருக்குளிருவரையுமுகநோக்கிநிருபன்றானு
மின்றுமக்குண்டாந்ததுசற்றின்னதெனவறியாமலெளியேன்வாட
னன்றுகொலோவாய்திறந்துநவின்றிடாதுறைவதுவுநியாயந்தானோ
சென்றமனநோகிவரவிலையோவிளையாட்டுச்செய்கின்றீரோ. (௪௫)

உலகமெல்லாமொருங்கழியவுறுங்காலையுற்பாதமாகவும்ப
ரிலகியதாரகையினுக்குளென்றுமிலாவாலுடுவெந்தெழுந்தாற்போலுங்
கலகவிழிமடந்தையர்கண்மயக்கமெனும்பேசரியகாமக்கோட்டி
விலகறியார்புலம்படைந்துவிலங்கமுடியாநிரையமேவுவாரால். (௪௬)

கள்ளேனுங்களவேனுங்கவரேனும்பொய்யேனுங்கருதிநெஞ்சங்
கொள்ளாமற்பேரறிவுகொண்டவரையென்றுளுங்குறித்துநீங்கா
நள்ளாருநட்பாவார்நாமநெடுநீர்ஞாலநயந்துபேசி
யுள்ளாருமென்பதுநீயுணர்ந்துபிறர்தமக்குரைத்தவுண்மையன்றே. (௪௭)

மறையவரேயுலகமிசைவருந்தெய்வமவர்புகலுமறையேமோட்ச
மிறையவரிங்கவையுணர்வுற்றிறைமாட்சிபுரிவதுவேயினியசெங்கோன்
முறைநழுவிலகாதேவன்முயல்வதுவேயமைச்சியல்புமுழுதுங்கண்டாய்
நிறையுமதிவிழித்திழிவின்குறைவுபடுவதற்கென்னநீர்மைத்தம்மா. (௪௮)

மங்கையின்மேனியாசைவைத்தாலுநின்மீதுமங்கையாசை
தங்கினாலும்முனமேதரியலனாலுயிர்பிரிந்துசவமாயுற்ற
வங்கவனைமீண்டெழுப்பியருஞ்சமரந்தனைமுடித்திங்கடையவேண்டா
மிங்கதனாலுங்களுக்குளிதுநடவாதெனப்புகல்வாரெவருமந்தோ. (௪௯)

அரசர்குருமுன்னவர்களாதியைந்துதந்தையென்றுமவர்கடங்கள்
விரைசெறிமென்குழலியர்கடாயரொன்றுஞ்சொலுஞ்சுருதிவினவித்தேர்ந்து
பெருமையடைந்தமையாலோசெயும்பிழையுமதற்கிணங்கப்பெரிதாய்நீயும்
புரியநினைந்தனையோபின்னெதுநினைந்துநானெடுத்துப்புகல்வேனம்மா. ()

தடங்கடலேநெடுங்கழியேதருக்குலமேபொருப்பினமேதரையேவைகு
மடங்கலிலாதூர்வனமேயடுவிலங்கேகனன்றெரியுமழலேவெய்ய
கொடுஞ்சுரமேயாதியதாயஃறிணையொத்தொருமொழியுங்கூறுதானீர்
படுங்கருமங்கருதுகிலீர்பண்டைவிதிவினைவிளைந்தாற்பகர்வதென்னே. ()

நீயதிகநட்பாகிநமதுமகனுக்குதவிநேர்ந்ததாலுஞ்
சேயெனவேயுன்னையிதுநாள்வரைக்குநானினைந்தசெய்கையாலும்
பேயகலாப்பெருங்கானம்பிரியாமற்போய்வந்தபெற்றியாலுந்
தாயெனைச்சற்றெண்ணுமற்புரிந்தபிழையிதுவரைக்குஞ்சகித்தேனப்பா. ()

அகம்வருந்திமூவிரண்டுமதியம்வரைகேட்டதிலுமாகுமார்க்கம்
புகலவிலையிவர்வாயாற்சுருதியுத்தியனுபவமும்பொருந்தவில்லை
மகனுரைத்தமொழிமாற்றியெவரேனுங்கரிபுகலவரவுமில்லை
தகவுடையதெய்வபலஞ்சற்றுமில்லையிதற்கினிநான்சமைப்பதென்னே. ()

மந்திரிகண்முகநோக்கிமற்றவர்கடமைநோக்கிவசையைநோக்கிச்
சிந்தைமெழுகெனக்கரைந்துநெடுங்கணீர்மழையெனவேசிந்தவேந்த
னொந்தொருவாய்மையும்புகலநோக்கமிலானெனினுமனுநூலினீதி
நந்துமெனவமைச்சரொடும்வினவுற்றானங்கவர்கணவில்வதானார். (௫௪)

நீதிசற்றுமில்லாதுநீதியுணர்பவன்புரிந்தநியந்தானெனந்தச்
சாதியர்களுஞ்சமைக்காரதலினாலிவனுயிரைத்தரிப்பதல்லாற்
சேதிமறுத்துரைப்பதற்கேதெனப்புகன்றாரிறைவனடிசெங்கைகூப்பி
மாதிவளைமணிக்குழையுமுலைமூக்குந்துமிப்பதுவேமார்க்கமென்றார். (௫௫)

கேட்டமணிமுடியரசன்கிறுகிறுத்தானுடன்மெலிந்தான்கிளர்ந்ததாரை
நாட்டமிரண்டினுமொழுகநாவுலர்ந்தானகம்புலர்ந்தானடுங்கிமேன்மேற்
கோட்டமுற்றான்மனந்தெளிவுகொண்டுகொலைபுரிவாரைக்கூவிநீவிர்
வாட்டலையாலமைச்சர்சொன்னவாய்மைபுரிவீரெனவும்வழுத்திவிட்டான்.

புத்திசிகாமணி இடையூறுற்றபடலம் முற்றிற்று.

ஆகப்படலம்-௫௦-க்குத் திருவிருத்தம்-௩௦௮௮.

புத்திசிகாமணிகல்லுருவானபடலம்.

புள்ளேறுமாலயனும்புரந்தரனும்வானவரும்போற்றவொற்றை
வெள்ளேறின்பிடரேறிப்பாவெளியெலாம்விரவிவிளையாட்டேறுங்
கள்ளேறுநறுங்கணியார்சடையானைக்கடையானகாமற்காய்ந்த
தெள்ளேறுந்திருக்கூடலுடையானைமறவாதென்சிந்தைமாதோ. (௧)

வேறு.

சொற்றமொழிதலையேந்திக்கொலைபுரிவார்வெகுண்டிவர்கடுணுக்கமெய்தப்
பற்றியிருகரங்களையும்புறம்பிணித்தன்னெடும்பாசம்பற்றியீர்த்து
வெற்றிவடிவாளேந்திவேத்தவைவிட்டணிநகாவீதிதோறுஞ்
சுற்றிவரக்கண்டளவினகரினுளார்புலம்படைந்துதொழுதுசொல்வார். (௨)

வேறு.

மானேவிரும்பும்விழியதியோமுகங்கமலம்வாயோமலர்ந்தமலரின்
றேனேகரும்புமொழிகளமோவிளங்கமுகுதிருவோவிளைந்தவுருவம்
வானேசுரும்புகுழன்மினலோமருங்குலிருமலையோமடந்தைமுலைக
ளேனேபெரும்பழியுளானுள்விளைந்தவிளைவேதென்றுநின்றுமருள்வார். (௩)

வெண்முத்தரும்புநகைபிறைபெற்றநெற்றியிருவில்லைத்தமைத்தபுருவங்
கண்முத்தநளினமிருகைபத்துவிரல்களிறுகான்மற்றிளஞ்சினைவரால்
பண்ணுத்தருயிலினிசைபயில்சித்திரவன்னநடைபகர்பத்மனிக்குநிகராம்
பெண்ணுத்தமிக்கிதெனவெண்ணத்தகாததுயர்பெருமாறெனப்புகலுவார்.

அரவாலிடைந்துபுருடரினல்வரும்பெரியவனுபோக்ராகமனுகா
தொருவாவியின்கணிவளுறைநாளடைந்தரசனுரகந்தனைச்சிதைவுசெய்
திருவோர்களுந்தனிமையுடன்வாழ்வுகந்துபுகுமிடையூறகன்றுமகிழ்வாய்
வருகாலமன்றிநகர்புகவெய்துகேதமெனவகையோவெனக்கதறுவார். (௫)

கருவாய்புகுந்துலகிலுருவாய்நடந்தருள்செய்கடவுட்பதத்தைமறவா
தொருபோதினும்முறவுபிரியாதுகலைமுழுதுமுறவோதியறிவுசிதரா
திருவோர்களுங்கரவுபுரியாதின்னளின்வரையெதுவும்பயின்றுமனது
வெருவாதுறைந்தனர்களிதியாவர்செய்தகொடுவினையோவெனக்கலுழுவார்.

திருமாமுடிப்பெரியவரசைப்பணிந்துவிடைசெயலேயெழுந்தசுவமேற்
றருமாவனத்திலுறவகலாதுசுற்றியொருதவறேதுமற்றதிலர்கள்
வருமாறிலித்திருவைவிதியாரிழைத்தசெயல்வகையாலழைத்தணுகலாற்
பெருமாவினைக்கணுயிரறவேயமைத்ததிதுபெரிதேதமென்றுகரைவார். ()

பொல்லாதநீலிகொடுவினைகாரியென்றுமொருபுருடர்க்குளூற்றுநிலையாய்
நில்லாதலைந்துபுகுமிடமெங்கணுங்கொலைகணேரப்புரிந்துபினுநம்
வல்லாளனுக்குமுயிரறவேபடக்கருதுமாதோசிமுண்டையிவளைக்
கொல்லாமல்விடுவித்தவகையேதுநீதிபுரிகாமாவெனப்புகலுவார். (௮

போனான்வனத்தினகர்புகுநாள்வரைக்குமொருபொருளேதுமற்றுமருளே
யானானடைந்துமதுதீராதுபின்னுமிவனாலேயடைந்ததிதுவென்
றேனோகொலக்கருதிமானாளினுக்குமிடரெய்தக்கொணர்ந்ததிவர்கள்
கோனானவற்குமுறைதானோவறத்தினெறிகொடிதோவெனப்பகருவார். (௯)

தாலத்தினிற்றனையன்மீதுற்றகாதன்மிகுதயையானடந்தநெறியின்
மூலத்தினைக்கருதிமுடிவிக்கமுடியாதுமுடிமன்னன்விட்டதெனினுஞ்
சீலத்தினிற்பெரியமதிமிக்கமுதியவர்கள்சிந்தித்திடாததிவர்கள்
காலத்தினைத்தவிரவருதற்கெனப்புகறல்கடனோவெனக்கழறுவார். (௧௦)

வேறு.

இன்னணம்புலம்பிநகருள்ளாரெவருமெதிரெதிரேங்கிவீழ்ந்தழுது
மன்னனைவைதும்மகன்றனைப்பழித்தும்மந்திரிமார்களைநிந்தை
பண்ணியுமிந்தப்பதிதனக்கவதிபடைத்ததென்றுகுலம்பரித்தே
யன்னவர்தமைப்பின்விலகிடாதேகியடுகளமடைந்தனரன்றே. (௧௧)

அடுகளம்புகுதுமளவினிலுடன்சென்றடைந்துளகடிநகர்மாக்கள்
கடலெனப்பரவியரற்றுபேரோதைகண்டுகேட்டமைச்சனுங்கலங்கி
விடுமுயிரெனக்காய்க்கரைந்துளம்வருந்திமெலிவதுங்கடனலவென்றே
படுதுயராற்றியிவன்றுயர்நீங்காதுள்ளமும்பதைபதைத்தாய்வான். (௧௨)

மங்கையைப்பங்கமாக்கிநம்முயிரைவாங்குதற்குரைத்தனனரச
னிங்கிவர்கொணர்ந்தாரிவரெவரெனினுமினித்தருகாரிறையளவுஞ்
சங்கைதீராதபழியினோடுயிர்போய்ச்சாவதிலுள்ளவைசாற்றிப்
பொங்கர்வாய்ப்புட்கள்புகலும்வாய்மையினாற்கல்லுருப்பொருந்துதல்புகழே.

அரசனுங்கவலைநீங்குவான்பிதாக்களாகியவமைச்சருமின்பம்
பரசுவார்நட்புமறந்திடான்புதல்வன்பழிக்கிலக்காகியிங்குற்ற
புரிகுழலவட்குமிழிவிலையொன்றேபுண்ணியமெத்தனைதேறி
யுரைசெய்வேனெனதுபழவினைவலியாலுணர்வுதீர்ந்தொடுங்கினனம்மா. (௧௪)

கட்டியகயிறும்முனைபடுவாளுங்கைப்பிடித்தெதிரினிற்றலையை
வெட்டிடத்துடிக்கும்வீரரைவிளித்துவீரர்காளென்னுரைவிலங்கா
தட்டியிலேகிவேத்தவைகுறுகியரசனையழைமின்களெனவே
யொட்டியபணிசெய்யுழையர்கள்கேட்டாங்கொல்லையிலோடினாருவந்தே. ()

கொலைசெயக்கொண்டுபோனவர்மீண்டுகுறுகியதென்னெனக்குறித்து
நிலைதடுமாறும்வேந்தனைப்பரசிநேரினினின்றுவாய்புதைத்துத்
தலைவகேளிதுநாள்வரையினும்பலருஞ்சாற்றிடவாய்திறவாத
கலைமகனின்னையழைத்திடச்சொற்றானதிசயங்காண்டியென்றுரைத்தார். ()

கொற்றவாள்வீரர்தனதுபொற்சரணங்குளிர்மலர்க்கரங்களாலிறைஞ்சிச்
சொற்றவாகேட்டதோன்றலுமுள்ளத்துள்ளெழுமுவகைமேற்றுளும்பப்
பொற்றடம்புயம்பூரித்தனன்புளகப்போர்வையும்வேர்வையும்போர்ப்ப
மற்றவனரியாதனம்விடுத்தெழுந்தான்மதியெதிருவாக்கடன்மான. (௧௭)

மகனொடுமறையோர்புரோகிதர்கணிதர்மரபுளோர்மந்திரக்கிழவர்
புகலுநான்கங்கம்பரவிடநடந்துபொருக்கெனச்சுடுகளம்புகுந்தா
னிகலறுகுணங்கொளமைச்சனுமாதுமிறையவன்வரவறிந்தெதிர்போய்த்
தகவொடுபணிந்தார்பகல்வருமதியந்தனைநிகர்த்தழுங்குதன்மையினார். (௧௮)

தீரனுமமைச்சன்புதல்வனையிரண்டுதிருமலர்க்கரத்தினாலெடுத்து
மார்புறத்தழுவிமுதுகுதைவந்துமழைக்கணீர்மஞ்சனமாட்டி [தான்
யார்வமோடையாவென்னையிங்கழைத்தற்கேதுவெனருண்மினென்றுரைத்
சோர்வினோடரசன்பதமலர்மீண்டுந்தொழுதிவைசொற்றனன்றுணிந்தே.

ஐயகேள்நன்மைநான்செயப்பண்டையருவினைவலியினாற்றீமை
யெய்தினாலெவரைச்சலிப்பதற்காகுமெழிற்புவனேந்திரனோடும்
வெய்யகான்மேவிச்சிலபகலொருவிவிலங்கினேனதுமுதற்றனியாய்
நெய்யழல்நிகர்துன்பகஞ்சுடவருந்திநெறியெலாந்துருவிநேடினனால். (௨௦)

கடைசியில்விசையதான்பதிபுகுந்துகைகமையாற்புலனறிந்தரிவை
யுடனெழுந்தவிர்பூம்வாவியுட்புகுந்தாருயிர்துறந்துணங்கியகவளக்
கடகரியனையான்றன்னைமீண்டெழுப்பிக்கருதலனருஞ்சமர்கடந்து
தடமுலைமாதைமறுமணமுடித்துச்சாருநாள்வரும்வழிதன்னில். (௨௧)

இரவிபோயிரவுவருதலும்வலாரியிருக்கையின்றருக்குலமனைய
சரளமென்சோலையொன்றுகண்டதிலேதானையுநீமுதற்பிறரும்
விரவுபோனகமுண்டணிதுயில்பொருந்தும்வேலைவாய்விழிதுயிலாம
லரிவையுநானுமிறைவனைக்காப்புற்றமர்ந்தனநள்ளிரவதனில். (௨௨)

அம்மரப்பொதும்பர்நடுவணீண்டுயர்ந்தவாலமாமரத்தினுச்சியின்மேற்
செம்மலரயன்வாழுலகினும்வாழுந்தெய்வமென்புட்களோரிரண்டு
தம்மனமுவந்தாங்கொன்றினுக்கொன்றுதனிச்சிறைமூக்கினானீவி
விம்மியகாதற்றழையினாலுருகிப்பேடையுஞ்சேவலவினவும். (௨௩)

கரிபரிசிவிகைதேர்குடைகவரிகளாசிகேதனமுதற்பிறவோ
டரசர்களிங்குபுகுந்தனரிதிலோரரசிளங்குமரனும்புதிய
தெரிவையுமிவர்கட்குரிமைசெய்நட்பின்றீரனுமொருபுடையாக
விரவினர்வரவேதிவர்செயன்முழுதும்விளம்பெனச்சேவலும்விளம்பும். (௨௪)

திருப்புவனேந்திரநகரிவரரசன்சிறுவனுமந்திரிசேயும்
விருப்பினாற்றேசவளங்குறித்ததிலேவிளைவுறுவினையெலாங்கடந்து
பொருப்பிளமுலையாளொடும்பதிக்கேகப்புகுந்தனரென்றலும்பேடை
யுருக்கமுற்றிவர்கட்கின்னமுமுறுகணுறுமெனிலுரையெனச்சொற்ற. (௨௫)

சேவலுமிவர்கள்புலரியிலெழுந்துசெல்வழிமீதுமண்டபமொன்
றுவதினாற்கேடரசர்கோன்மதலைக்கணுகுறுமதுகடந்தப்பாற்
போவதுண்டெனினுநகர்வயிற்புகுந்தாற்புனனிறைவாவியின்முன்னம்
மேவுவாளரக்கன்புதல்வனும்பாந்தள்வேடமுற்றிவனுயிர்வீய்க்கும். (௨௬)

இரண்டையுங்கடந்தாலிறுதிநாளன்றியிடையினிலிவன்றனைக்கொல்லத்
திரண்டுவெங்கூற்றம்வரினுமாகாதுதிருவொடும்பொருந்துவானிதனை
மருண்டிடாதெடுத்துத்தெரிந்தவருலகில்வழுத்திஞலவர்கடம்வடிவ
முருண்டகல்லாவாரெனவுரைத்ததுவென்றுரைத்தனன்கல்வடிவுற்ருன். ()

சொல்லுறுபொருள்கண்முடிவதோராளவிற்றூயமந்திரிதிருமகனுங்
கல்லுருவானதன்மையைக்கண்டுகாவலன்முதலியபலருஞ்
செல்வனுலிழைத்ததீமையிற்றிறம்புஞ்சிந்தையிலெண்மடங்கதிக
மெல்லையிலாததுன்புழந்தந்தக்கல்லுருமிவரெனவேய்ந்தார். (௨௮)

சிரங்களைமோதிமுகங்களைப்புடைத்துச்சிந்தையுமங்கமும்வருந்திக்
கரங்களைக்குலைத்துவயிறலைத்திரண்டுகண்களுமழைப்புனல்வார
விரங்கிநுண்டுளிபடப்புடவியில்வீழ்ந்தெவர்களுந்தனித்தனியேங்கி
யுரங்கொடுவாய்விட்டழுதனர்வாரியோசையினுகுலித்தொருங்கே. (௨௯)

ஐயநீபுரிந்தநன்மையைக்கருதாதறிவுபோயொருசிறுமதியாற்
செய்வகைதிறம்பிப்பெரும்பழிசுமந்தேன்சிலையினும்வலியசிந்தையினே
னுய்வழியுளவோதெய்வமேயினிநானுனையிழந்தாசினையோம்பி
வையகத்திருக்கநீதியோவென்னவாய்திறந்தழுதனன்மன்னன். (௩௦)

சற்றுநீபுரிந்தநன்மையுஞ்சாபத்தன்மையுந்தனிமையுற்றறியா [கே
துற்றவென்மகன்சொல்வாய்மையைமுழுதுமுறுதியாய்க்கடைப்பிடித்துனக்
குற்றமும்புரிந்தேனிற்றுவெற்றுடம்பாய்க்குன்றினேன்மனநிலைகுலைந்தேன்
மற்றினியெந்தவண்ணநானுன்னைமறந்துயிர்வாழ்குவனந்தோ. (௩௧)

வாவியிற்பிரிவுற்றலைந்துநீவந்தவகைநினைந்தழுவனோமாற்று
ராவியைப்பிரிக்கமீண்டுநீயுதவுமருணினைந்தழுவனோநகர்க்கு
மேவுநாணெறிக்கண்மண்டபங்கடந்தவிதநினைந்தழுவனோவின்று
பாவியேன்புரிந்ததீதுநினைந்தழுவேனினைந்திடிலிதுபெரும்பாவம். (௩௨)

கற்பினிற்றிறம்பாமங்கைமேற்சங்கைகருதியமனந்தெளியாது
சொற்பிழையாற்றியுனக்குமித்துன்புசூழ்ந்தனன்றூய்மதியிலிநா
னுற்பவித்திதுநாள்வரையினுமுனைநீத்துயர்புகழெதுபெயரடைந்தே
னற்பினுக்கவதியிதுகொலோவென்னவரசர்கோன்றிருமகனழுதான். (௩௩)

எந்தையேநீசெய்வினைத்திறமறியாதெளியபுன்மதியினுனுங்கள்
முந்தையோர்முறைநீத்தழிந்தனையெனவேமுழுவதுமுறைமுறைகூறி
நிந்தையேபுகன்றேமதுகடந்தரியநெடும்புகழ்படைத்தனையென்று
மந்திரிமார்கடனித்தனிபுலம்பிவாட்டமுமகிழ்ச்சியுமடைந்தார். (௩௪)

அரசனுமழுதான்றிருமகனழுதானமைச்சர்கண்முழுவதுமழுதார்
தெரிவையாழுதாராடவரழுதார்திரைக்கடலுடுத்தபாரகத்தில்
விரவியவில்விகுபறவையூர்வனங்கள்விருக்கமேமுதலியவெல்லாங்
கரையழிந்தழுதவிதுதெரிந்தவரிற்கண்பனித்தழாதபேரிலையால். (௩௫)

விற்பனன்சிலையாயுற்றதுமிவர்கண்மெலிந்துமெய்கரைவதுங்கருதாள்
பொற்புறுமயிலினாளிருவிழிகள்புனலுகுத்துருகிவாய்புலர்ந்து
தற்புகழ்நீக்கியுலகவர்நிந்தைசாற்றுதற்கெனதுநன்னலனுங்
கற்புமின்றகலநிபம்வருவதற்கோர்காரணம்யாதெனக்கவன்றாள். (௩௬)

இன்னணம்புலம்பியாகுலித்திரங்குமிவர்களிற்றிருமுடியரசன்
றன்னுளந்தெளிவுற்றமைச்சனுஞ்சிலையாய்ச்சமைந்ததுபுள்ளுரைசாப
மென்னினுமிரவிற்றனியனாயந்தப்புறந்தனக்கெய்தியேயிந்தக்
கன்னியைமருவிநின்றதற்கென்னகாரணங்கழறினான்கண்டீர். (௩௭)

இங்கிவன்சிலையாயுற்றவாவெண்ணியிரங்குமென்சிந்தையிலிதுவோர்
சங்கையுமுளைத்துவருத்தினதிந்தத்தையலைவினவினாலிவளும்
பங்கமுற்றிதுபோன்முடிந்திடிலென்னபண்ணலாமென்றுபற்பலவா
றங்கவன்புலம்பியாவியோய்வதுகண்டரம்பையுமாகுலம்விடுத்தே. (௩௮)

ஐயநீவருந்தேலிதுவெலாமெளியேனாற்றியபவச்செயல்விளைவா
லெய்தியதல்லால்வேறிலையந்தவிரவினிலிறைவனைக்காத்து
மைவிழிதுயிலாதமைச்சனோடிருந்தேன்மந்திரிபுகன்றமைவழுத்துந்
தெய்வமென்புட்கள்கிருபையுற்றாங்குசெப்பியபொருளுமொன்றுளவால். ()

உற்றவிச்சிலைமேலெற்றுநீருவரியுலகெலாமோம்புறுஞ்செங்கோற்
கொற்றவெண்குடைக்குளாளுமோரரசன்குமரனையீன்றெடுத்தவர்கண்
முற்றிலும்வருந்தாதரும்பலிபுரியின்முன்னையவடிவம்வந்தெய்தும்
மற்றிதுவெளியேபகருவார்க்கந்தச்சாபமும்வாராதெனப்புகன்ற. (௪௰)

அரசகேளானுமமைச்சனுமனதிலவாவொடும்புணர்ச்சியேபுரியக்
கரவினின்மருவிநின்றதுமுனதுகான்முளைகண்டுகைப்பிடியாய்
வரவிடுத்ததுவும்புள்ளுரைப்படியேவாளராவந்ததுநோக்கி
விரைவினிற்றுணித்தானிரத்தமோர்துள்ளிவீழ்ந்ததுசிந்தியென்முலைமேல்

சோரியாலெனக்குமிறைவநின்மகற்குந்தூயநல்லுயிர்நிலைதிரிந்தே
பாரினிற்கேடுவருமெனும்பயத்தாற்பங்கயச்செழுங்கரவிரலா
னேரினிற்றுடைத்துவிலகுறுமளவினெடுந்துயினீத்துக்கண்விழித்தேன்
காரணம்புகறற்கஞ்சியேமடிந்தகட்செவித்துணியினைக்காட்டி. (௪௨)

பதனமேபடுத்திநின்றபோதிவன்மேற்பதிந்தபோன்பினாலெழுந்து
வதனமேன்முத்தமிட்டுடல்புல்லிமகனெனமுகமனும்வழுத்தி
யெதிரினிற்பளவிற்றுயிலுணர்ந்தெழுந்தவேந்தலுநடந்தவைதோன்றா
திதுபறையடித்தான்றலைவிதிவசமென்றிருந்தனந்தோடம்வேறிலையால். ()

என்றலுங்கேட்டபொன்றிருமுடியானிருகணுமழைப்புனல்வார
நின்றுநெக்குருகித்தழுதழுத்துள்ளநிறைந்தெழுபரவசனாகி
நன்றறியாதுவீண்பழிபுகுந்தோநங்கைநின்பொருட்டினாலெல்லா
மின்றுதாய்வயிற்றின்மீளவுற்பவித்தோமென்குலதெய்வநீயென்றான். (௪௪

நல்லதுவின்றவிற்செய்வினைநாடிநவிலுதுமெனத்திருவரசன்
சொல்லுமுன்றனதுமகன்புவனேந்த்ரன்றெழுதுநின்றையகேளிவனுக்
கெல்லையில்லாததுன்பிழைத்ததனாலிதுபிழைதீரவின்றடைந்த
கல்லுருவதன்மேலென்னையேநீவிர்களப்பலியூட்டுமினென்றான். (௪௫)

என்னையேபலிசெய்திடுவிரேலிவனுமிடைவிடாநட்பினிற்கலந்து
முன்னையேபுரிந்தவுதவியுமின்றுமுடிந்ததோர்பெரும்பழிதானும் [ன்
மின்னையேயனையாட்கிழைத்ததும்விலங்கிவிபுதர்வாழ்பெரும்பதமடைவே
பின்னையேயிதன்மேற்பெரும்புகழ்பெறுமாறிலையெனப்பேசினன்பெம்மான்

நன்றுநன்றிதுவேநியாயமென்றெவருநவில்பொழுதரசனுமுள்ளங்
கன்றினானெனினும்விளைந்ததோர்கருமங்கருதியேநாமினிவேறே
யின்றெதுசெயினும்விலகிடாதிதுவேயியல்பெனப்புரிவதற்கமைந்தான்
மன்றலங்குழலியிதுவெனக்கொடுமைவந்தவாயிடையிலென்றேங்கி. (௪௭)

வியர்த்தனனுடலம்வெதும்பினடதும்பிவிழிகளின்மழைப்புனலொழுக
வயர்த்தனளிதற்கோமருவலனூரிலருந்தவமும்மதியிருந்தே [றே
பெயர்த்திவண்கொணர்ந்தேன்மங்கலமிழந்தபெண்களும்பெரும்பிணமென்
செயிர்த்திடாச்சுருதியான்றவர்வாய்மைதிறம்பிடவிவர்சொன்னதென்னே.()

அரசநீமுதலிவ்வமைச்சர்களேனோருந்திறக்கணவனைப்பலியே
புரிசெயன்மதித்தீர்நன்றுநன்றுலகிற்பூவையர்மங்கலமிழந்து
வரிசைகெ:ண்மனைவாழ்வெதுநலமடைவார்மாதவம்பழுக்குமோமற்று
முறைசெய்ஞ்சுபமங்கலங்களுக்கவரேயொதுக்கியகுப்பையென்றுணர்மின். ()

தெய்வமும்பெற்றதந்தையுந்தாயுந்திருவளர்செல்வமும்பிறவும்
மைவிழித்துவர்வாய்மகளிர்கட்கென்றுமணாளரையன்றிவேறிலையென்
றையநான்மறையுமான்றவர்மொழியுமறிந்துளீரதுமறந்தேனோ
னைவகைபுகன்றீரெதுசொலக்கடவேனென்னினுநவில்வதுகேண்மோ. ()

சக்கரவர்த்திநின்றிருத்தனையன்றனக்குமென்றனக்குமேயுதித்த
மிக்கதோர்குழவிதனைப்பலிபுரியில்விளைந்துளபெரும்பழிநீங்கி
யிக்கணத்திவனுமெய்துவான்முக்கணீசனற்றிருவருளாலே
மக்களும்பெருவேந்தீதிலவென்றாண்மாதருக்கணிகலமனையாள். (௫௧)

ஓதியமாதுவாய்மொழிகேளாவுளநினைந்தரசனுமிதுவோர்
பாதைதானெவர்க்குந்தீதிலையிந்தப்பாவையும்புதல்வனுமிருந்தால்
பூதலம்புரக்கத்தனையரெத்தனையோபுராந்தகனருளினாற்பெறுவா
ராதலாலிதுவேயுறுதியென்றரசனாற்றுதற்கமைந்தனனன்றே. (௫௨)

வாட்டமில்லாதுசிறுவனையெடுத்துவம்மினென்றிறைவனும்புகலக்
கேட்டெழுந்தோடிச்செவிலியர்கையாற்கிளர்திருமஞ்சனமாட்டிப்
பூட்டினாருடலம்புதைதரக்கலன்கள்புதுமலர்க்குலமெலாஞ்சுமையாய்ச்
சூட்டினார்கொணர்ந்தார்விளைந்துளகருமந்தொலைவதுகருதியேசுருக்கில். ()

புத்திசிகாமணி கல்லுருவானபடலம் முற்றிற்று.

ஆகப்படலம் - ௫௧-க்குத் திருவிருத்தம். ௩௦௭௧.

புத்திசிகாமணிகல்லுருக்கழிந்தபடலம்.

மாடுகொண்டுபறைச்சியுடன்கலந்தேயந்தவன்பறைச்சிசிற்றிடைச்சிவடி வங்கொள்ள, வாடுகொண்டுகறிதின்றுபசியாற்றுமலவனியெலாம்பலியேற்க வயனார்சென்னி, யோடுகொண்டுதிரிந்தவசையுரைசெயாமலொருமதிரைப்ப திநாப்பணெனாளிருஞ்செம்பொன்,வீடுகொண்டுமுடிகொண்டுசெங்கோல்கொ ண்டுவீற்றிருந்தவொருவனையேவிரும்பிவாழ்வாம். (க)

வேறு.

மைந்தனைவாங்கியரம்பையுமுலைப்பால்வழங்கினாளீசனைவணங்கி
யெந்தையேயெளியேனிந்தைபோய்மற்றோரின்பமேகொளவெனத்தனது
சிந்தையுணினைந்துபூசனைபுரிந்துசிலையின்மேலன்புறக்கிடத்தி
மந்திரவாளாற்றுணித்தரும்பலியும்வகுத்தனர்மதிமுகமலர்ந்தே. (உ)

தலைப்புறந்தாதைகாற்புறமாதாதமதுளம்வருத்தமேயின்றிச்
சிலைப்புறநின்றேயுச்சிமேலந்தச்சிறுவனைக்கிடத்திநீள்வாளாற்
கொலைப்புறமறந்துபுரிதலும்பழையகோலமாய்ச்சிலமேவிளைந்து
கலைப்புலமறிந்தமந்திரியெழுந்தானுலகெலாங்கண்டதிசயிக்க. (ங)

எழுதலுமெழுந்தேயாடினார்பாடியெதிரெதிர்முறைமுறைதுதித்துத்
தொழுதனர்முகமன்சொல்லினர்கண்ணீர்துளும்பினர்பரவசமாகி
முழுவதுமுவகைதழைந்தனரரசன்முளரியின்றிருமுகமலர்ந்தே
பழுதருமமைச்சன்புதல்வனைப்புல்லிப்பகர்ந்தனன்பலவுபசாரம். (ச)

இழிவிலாதவனுந்தன்சிலைவடிவுக்கிவர்சிறுகுழவியைச்செய்த
பழிநினைந்தங்கங்குலைகுலைந்துள்ளம்பதைபதைத்துயிர்த்துநின்றேங்கி
விழிபுனல்சொரியவழுதுவாய்குழறிமேதினிதன்னிலீதென்ன
வழிவுசெய்துற்றீர்புகல்பெரும்பாவமம்மகோவம்மகோவென்றான். (ரு)

ஆவல்கொண்டரசன்மைந்தனைநோக்கியையகோமணிமுடிபுனைந்து
பூவுலகாளும்பதமுனக்கிருக்கப்புன்றொழினாயினேன்பொருட்டாற்
சாவடைந்தனையேயென்றுமுத்தனையதடங்கணீர்நெடுங்கடல்குழிப்பக்
கோவெனவாய்விட்டாற்றினான்கருணைக்கோருருவாகியகொண்டல். (சு)

மற்றவன்றெளிவுற்றிப்புழிதீரும்வண்ணமுனாடிநின்றரிதிற்
சுற்றிலுமெழினிவளைந்ததினுள்ளேதோமிலாப்புனல்கூடந்தங்க
முற்றிலுநீறுபூசிநல்லீசன்முளரியந்திருப்பதந்துதித்துக்
கற்றமந்திரத்தாலெழுப்பினான்பலருங்கண்டதிசயமடைந்தனரால். (எ)

அற்றதுண்டிரண்டுமொன்றுபட்டங்கமன்றொருவளர்ச்சிமேற்கொண்டு
மற்றுயிர்பொருந்திக்கண்விழித்துள்ளமலர்ந்துவாய்மணிநகையரும்ப
முற்றிலும்வடிவேலெடுத்தபன்னிருகைமுருகனைப்போன்றதுகண்டு
பெற்றவளெடுத்துமுகத்தொடுமோந்துபெருமுலையூட்டியேமகிழ்ந்தாள். ( )

மலையெனவந்தபெரும்பழிமுழுதும்வான்சுடர்கண்டமெல்லிமம்போ
லலைகடற்புவியில்விலகிமேற்கடைந்தவருந்திறன்யணியொளிமானு
மிலகினரிவர்தாம்புரிதவமகிமையீறிலாப்பெருந்தவமுடைய
மலையமாதவனும்புகலுமாதவனும்வழுத்துதற்காவதோமண்மேல். (௯

இறந்தவர்மீண்டுபிறந்திடப்புரியுமியம்புதற்கரியதூய்விஞ்சைத்
திறந்தெரிந்தவனுமிச்செயலியற்றிச்சிறுமையிற்சிக்கியதெவனென்
றறந்தருமதியோரையுறவெய்துமளவினிலறிஞருக்கறிஞன்
சிறந்தவர்கமலப்பதமலர்தனதுசென்னியிற்புனைந்திவைசொல்வான். (௧௦)

மாண்டவர்க்கொருகாலன்றிமற்றிந்தமந்திரம்பலித்திடாதரசன்
மூண்டதீவினையின்முன்முடிந்தெழுந்தமுறைமையாற்பின்னதுபுரிய
வேண்டிடாதியற்றும்விரகிலனிதனைவிளைத்தனனென்றனன்கேட்ட
நீண்டநன்மதியோராகமகிழ்ந்தையநீங்கினான்புமேனிரம்பி. (௧௧)

மந்திரிமகனும்மன்னவன்மகனுமாண்டுயிர்வந்தவாகினைந்து
சிந்தையின்புற்றவிறைமுதற்பலருந்திருநகர்செலுஞ்செலவினராய்த்
தந்தியிற்பரியிற்சிவிகையிற்றேரிற்றனித்தனியூர்ந்துபல்லியங்கள்
சிந்துவிலார்ப்பச்சாமரமிரட்டச்செழுமணிக்குடைநிழல்செய்ய. (௧௨)

பூசுராசிமாதர்பல்லாண்டுபுலவர்செம்பனுவன்மேன்முழங்கப்
பேசுநான்கங்கம்பரசிடவுலகம்பெருமைசேர்ந்தார்வமுட்பெருக
வாசறப்புதுக்குந்திருமனைபுகுந்தேவைந்தருநீழலிலமர்ந்த
வாசவன்போலுமரசனுமகனும்மகிழ்ந்துவீற்றிருந்தனரன்றே. (௧௩)

புத்திசிகாமணி கல்லுருக்கழிந்த படலம் முற்றிற்று.

ஆகப்படலம் - ௫௨-க்குத் திருவிருத்தம்-௩௦௮௪.

புவனேந்திரன் முடிசூடுபடலம்.

செய்யானைப்பொய்க்குதவிசெய்யானைத்தேவருக்குந்தேவனானை
மெய்யானையுமைக்களித்தமெய்யானைமணிமிடற்றில்விளங்குநஞ்ச
மையானையெனக்கருணின்மையானையடியர்பவமாற்றிவைக்குங்
கையானைமதுரையிருக்கையானைக்கையாமற்கருதிவாழ்வாம். (௧)

வேறு.

மலைநிகர்புயத்தான்றனதுமாமகற்குமாநிலமுழுவதும்புரக்குந் [னே
தலைமைகொண்மகுடம்புனையுநாள்மறையோர்தங்களால்வரையறுத்துட
தொலைகொண்மாவரசர்தமக்கெலாமறியத்தூதரும்முடங்கலும்போக்கி
நிலைபெறநகரைவலங்கரித்தழகுநிறைத்திடநிகழ்த்தினனன்றே. (௨)

ாற்றவேன்மன்னனேவலின்படியேகோநகரத்துளமாக்க
ற்றிடுந்தத்தங்குமரர்கட்கரசாங்குஞற்றுதலொத்துளக்களிப்பான்
ழற்றுமேனிலமுமரமியத்தலமுமுடுக்குநாற்சந்தியுந்தெருவுந்
தற்றிசெய்குன்றும்மன்றுமம்பலமுந்தேவுறைகோயிலுந்திருத்தி. (௩)

தாரணங்கட்டிவாழைகணட்டுத்தூபமுந்தீபமுமமைத்துப்
பூரணகுடங்கள்வைத்துவான்வெளியைப்பூவினுற்பந்தர்கள்வேய்ந்து
நாரணர்பிரமரிமையவர்முனிவர்நாரதாதியர்முதற்பிறரும்
நேரணவழகுகூட்டினார்வேறுநகரெலாமிதற்கிணைநேரா. (௪)

தெங்கணர்துளுவர்வந்தியர்புலிந்தர்தெஞ்சியர்பப்பரர்சீனர்
கொங்கணர்கொல்லர்சாளுவரீழர்கூச்சரர்கேகயர்மராடர்
சிங்களர்மகதர்குருதர்பாஞ்சாலர்சேதியர்திரிகத்தர்கௌர
ரங்கரரவந்தியாந்திரர்குருகர்யவணரொட்டியர்கருநாடார். (௫)

கோசியர்சோழர்பாண்டியர்சேரர்கோசலர்கொச்சியர்குடகர்
காசியர்காஸ்மீரரர்நிடதத்தர்கௌடர்பூரியர்மலையாளர்
பேசியதேசர்முழுவதும்வந்தார்பேசுதற்கரியகாம்போசம்
வாசவன்பதியுந்தனபதிபதியும்மாலவன்பதியும்போல்வயங்க. (௬)

சிந்துகாவேரிசரஸ்வதியமுனைநருமதைகங்கைமாதீர்த்தந்
தந்தியம்பிடர்மேல்வந்துளகுடங்கடனித்தனிநகர்வலஞ்செய்து
சுந்தரமறையோராட்டுமஞ்சனநீர்தோய்ந்துதோய்ந்தீர்ம்புனலுலர்த்தி
யந்திவானகமொத்தவிருநுண்டுசார்த்தணிபலவணிதரவணிந்தே. (௭)

சித்திரக்கவிகைநிழற்றிடக்கவரிதிரையெனப்புரளநாற்புறனும்
வித்தகர்வாழ்த்துமாதர்பல்லாண்டுவேதியராசியின்னியங்கண்
மத்தளஞ்சங்குபேரிகைகோசைவயிரியர்கீதயாழ்நாத
மெத்திசைமுகத்தும்வளைத்தகார்காலத்தெழுமழையொலியெனமுழங்க.(௮)

வாணர்கள்பாடமடந்தையராடவந்தியர்கட்டியம்போட
சேணவர்களிகூர்ந்தலர்மழைபொழியசிவனயன்மாலருள்வழங்க
வேணநன்னலங்கொண்டவிர்பசுங்கனகம்வேய்ந்துளசிங்கவாதனமேல்
பூணணியரம்பையொடுபுவனேந்த்ரன்புலோமிசைமணாளனொத்திருப்ப. (௯)

மனுமுதலினாள்வழிவழிவந்தமணிதிகழ்மௌலியைப்பிருகு
முனிவனர்ச்சனைசெய்தரசினுக்குரியமுதன்மைவேளாளன்வேணுடன்
றனையழைத்துதவவாங்கியங்கவனுந்தடக்கையாற்புவனேந்திரன்றன்
செனிமிசைபுனைந்துபதமலர்பணிந்தான்றிசைமுழுவதும்பணிசெய்ய. (௧௦)

அரசினுக்குரியவினியசெங்கோலுமரசனுலுதவிமற்றங்கம்
சிடப்புத்திசிகாமணிதனையும்பரிவுகொளமைச்சினிலிருத்தி
ரைசெய்நீளாழிசூழ்புவிமுழுதுந்திகிரிகொண்டுருட்டெனமகிழ்வுற்
றைசெய்ப்பாதுகாத்துவீற்றிருந்தானுகந்தொறுமுகந்தொறூமோங்க (௧௧)

வானமேபொழியவிளைவுமேலோங்கவையகமுழுவதுந்தரும
தானமேவிளங்கநலந்தருதெய்வதானமுஞ்சைவமுந்தழைக
மோனமாமுனிவோர்வேள்வியுமறிஞர்கேள்வியும்முறைமுறைவளர
யீனமேயின்றிமுகவையம்பதியாளிலறவர்யோன்றிருந்தனனென்றும். (௧.

வேண்டினர்விருப்பாய்ந்துதவுகற்பகம்போன்மேதினிதுதித்திடச்சிறந்த
பாண்டியனுட்டுக்கதிபதிசேதுபதிமுகவைப்பதிபுரக்குங்
காண்டகுமுத்துராமலிங்கேந்த்ரகர்த்தனையொத்துலகிறைஞ்ச
வாண்டகைபெருக்கியரசுவீற்றிருந்தானணிபுவனேந்திரனம்மா. (௧௩

மோனமாமறையுமுனிவருமறியாமுதல்வனேபோற்றிமும்முதலா
யானவாபோற்றிவருபெரும்பூதமாகியபௌதிகங்களுக்கோர்
தானமாய்விளங்குமாதியேபோற்றிசதாசிவசம்புவேபோற்றி
ஞானமாய்மதுரைப்பதியுரைசொக்கனுதனின்பதமலர்போற்றி. (௧௪)

வாழிநான்மறைகள்வாழியந்தணர்கள்வாழிநல்லறம்புகழ்முனிவோர்
வாழிவாழ்வேந்தர்வாழிநூலறிஞர்வாழிமன்னுயிர்களும்புவியும்
வாழியிக்காதைபடிப்பவர்கேட்போர்வாழிகாம்போஜமாநாடும்
வாழிபொன்மௌலிபுனைந்துளபுவனேந்திரன்புகழ்வாழிவாழியவே. (௧௫)

புவனேந்திரன் முடிசூடுபடலம் முற்றிற்று.

ஆகப்படலம் ௫௩-க்குத் திருவிருத்தம்-௩௦௧௧.

புவனேந்திரகாவியம்

முற்றிற்று